

# நெஞ்சுக்கு நீதி

இரண்டாம் பாகம்

கலைஞர் மு. கருணாநிதி

# நெஞ்சுக்கு நீதி

இரண்டாம் பாகம்

கலைஞர் மு. கருணாநிதி

திருமகள் நிலையம்
55. வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை-600017.

| | |
|---|---|
| முதற் பதிப்பு | ஜூன் 1987 |
| இரண்டாம் பதிப்பு | ஏப்ரல் 1994 |
| மூன்றாம் பதிப்பு | செப்டம்பர் 1997 |
| நான்காம் பதிப்பு | செப்டம்பர் 1998 |
| ஐந்தாம் பதிப்பு | மார்ச் 2000 |
| ஆறாம் பதிப்பு | அக்டோபர் 2002 |
| உரிமை | தமிழ்க்கனி பதிப்பகம் |

| | |
|---|---|
| பக்கங்கள் | 586 டிம்மிசைஸ் |
| பேப்பர் | 70 ஜி. எஸ். எம். ஜே. கே. மேப்லித்தோ |

**விலை ரூ. 230/-**

**திருமகள் நிலையம்**

சென்னை 600 017

தொலைபேசி எண் 4342899, 4327696

பேக்ஸ் எண் 91-44-4341559

---

உதயம் ஆப்செட் பிரிண்டர்ஸ்

7, மேற்கு கூவம் ஆறு சாலை,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

தொலைபேசி எண் : 852 0906, 853 4808

# நெஞ்சுக்கு நீதி

# என்னுரை

மனிதன், நூறாண்டுகளுக்கு மேலும் வாழ்வது என்பது அதிசயச் செய்திகளில் ஒன்று. தொண்ணூறு ஆண்டுகளைக் கடந்து வாழ்பவர்களே மிகச் சிலர்தான். இந்த அடிப்படையில் பார்த்தால், ஐம்பது வயதைத் தாண்டிய நான், வாழ்க்கையில் முக்கால் பகுதிக்கு மேல் முடித்துவிட்ட நிலையில் என் கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து ''நெஞ்சுக்கு நீதி'' என்ற தலைப்பில் இந்தப் பெருநூலின் முதற் பாகத்தைத் ''தினமணி கதிர்'' இதழில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாம் பாகத்தை ''குங்குமம்'' இதழில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாம் பாகத்தை எழுதி முடிக்கும்போது அறுபது வயதைக் கடந்து; இந்த நூல்களுக்கான முன்னுரையை எனது அறுபத்தி இரண்டாவது அகவையின்பொழுது எழுதுகிறேன்.

இந்த அறுபத்து இரண்டு ஆண்டுகளில் — மிகப் பெரும் பகுதி — பொது வாழ்வுக்கே செலவாகியிருக்கிறது என்பது, என் இதயத்துக்கு ஆறுதலைத்தர வல்லதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் சிறப்பாகத் தமிழுக்கும், தமிழின மக்களுக்கும் பொதுவாக மக்கட் பணிக்கே பெரிதும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை.

நடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு, ''ஏ, அப்பா! இவ்வளவு தூரம் நடந்து விட்டோமா? இனிமேல் நடக்க முடியாது'' என்று அயர்ந்து போவதற்குப் பதிலாக — ''பரவாயில்லை! இவ்வளவு தூரம் நடந்துவிட்டோம். இன்னும் சிறிது தூரம்தானே!'' என்ற புதிய விறுவிறுப்பைப் பெற்றாக வேண்டும்.

அந்த விறுவிறுப்பைப் பெறத்தான் என் வாழ்க்கையை நான் திரும்பிப் பார்த்துக் கொள்கிறேன்.

வாழ்க்கையை ஒரு போராட்டம் என வர்ணிப்போர் உளர்! எனக்கோ; போராட்டமே வாழ்க்கையாகிவிட்டது.

போர் வீரனுக்கு மகிழ்ச்சியே கிடையாதா? ஏன் கிடையாது? கொட்டும் குளிரில், பனிப் பாறைகளில் ஊர்ந்து சென்று பகையைத் தாக்கும்போது சூடாக ஒரு கோப்பைத் தேநீர், அவனும் அருந்துவது உண்டு. அதுவே அவனுக்குப் பெரிய இன்பம்.

மீனைச் சுவைத்துச் சாப்பிடும்பொழுது, அதன் முள் நாவிலே குத்தி விடுவதுண்டு, அதனால் சிறிது ரத்தமும் கசிவதுண்டு. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மீன் துண்டுகளைச் சுவைப்போரைப் பார்த்திருக்கிறோம்.

சில பேருக்கு மீனின் முள், தொண்டையிலே அடைத்துக் கொண்டு, அவஸ்தைப்படுவதும் உண்டு.

என் வாழ்வு, இதில் இரண்டாவது வகை.

''உன்னை ஒருவன் இழித்துப் பேசினான்'' என்று தன் நண்பனிடம் ஒரு நண்பன் கூறினான். அதைக் கேட்ட அந்த நண்பன் வியப்புற்று, ''அப்படியா! இருக்காதே! என்னை அவன் இழித்துப் பேசியிருக்கமாட்டானே! நான் அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லையே! பிறகு எப்படி அவன் என்னை ஏசியிருக்க முடியும்?'' என்று கேட்டான்.

இந்த உரையாடல் துணுக்கில் இந்த உலகத்தின் படமே தெரிகிறதல்லவா? இத்தகைய உலகில்தான் நமது வாழ்க்கைப் பந்து உருளுகிறது.

அந்தப் பந்தை நாம்தான் உதைத்து விளையாட வேண்டும். யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலாயிருந்தால், அவர்கள் நம்மையும் சேர்த்து உதைப்பார்கள்.

கல்லிலும், முள்ளிலும், கட்டாந்தரையிலும் அடித்து ''அவுட்'' (Out) ஆகாமல் பந்து, (Goal) கோலுக்குள் நுழைந்திட வேண்டும். (Goal) கோல் இல்லாமல் பந்தாடுவதில் மட்டும் திறமையைக் காட்டிப் பயனில்லை. வெற்றி தோல்விகள் இயற்கைதான் எனினும் விடா முயற்சியும் கொள்கை உறுதியும் ஓயா உழைப்பும் தேவை.

'ஓய்வெடுத்துக் கொள்க!' என்று சில மாற்றுக் கட்சி நண்பர்கள் கேலியாகக் கூறினர். ''ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்'' என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும் என்று பதில் சொன்னேன்.

அந்த உணர்வுகளின் தொகுப்புத்தான் இந்த நூல். இது முழுமையானதல்ல. இன்னும் நிறைய இருக்கிறது, எழுத! மூன்றாம் பகுதியாக, அது வெளிவரக்கூடும்.

முதல் பகுதியைத் தொடர்ந்து எழுதத் தூண்டியவர் என் நண்பர் சாவி. ஆர்வமுடன் தினமணி கதிரில் வெளியிட்டவரும் அவரே! அவருக்கு என் நன்றி!

தொடர்ந்து எழுதுவதற்குத் துணையாக, அவ்வப்போது நான் கேட்ட அரசியல் குறிப்புகளைத் தந்து உதவிய, தி.மு.க. தலைமை நிலைய நண்பர் சண்முகம், தம்பி சண்முகநாதன் ஆகியோர் மறக்க முடியாதவர்கள்.

*இதன் முதற்பதிப்பை, 'தினமணிக் கதிர்' நிறுவனத்தார் வெளியிட்டனர். முதல் பாகத்தின் இரண்டாம் பதிப்பையும், இரண்டாம் பாகத்தின் முதல் பதிப்பையும் ''திருமகள் நிலையம்'' நண்பர் திரு.இராமநாதன் அவர்கள் வெளியிடுவதற்கு முன்வந்தமைக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது அரிய முயற்சிக்கு என் நன்றி!*

★ பெற்றெடுத்த தாய் தந்தை

★ அறிவூட்டிய பெரியார்

★ ஆளாக்கிய அண்ணா

ஆகியோருக்கு இது காணிக்கை.

*சென்னை* *அன்புள்ள,*

*1987* **மு.கருணாநிதி**




பெருந்தலைவர் காமராஜருடன்




ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத்துடன் முரசொலி மாறன் எம்.பி.யும் உடன் உள்ளார்



ஜெகஜீவன்ராமுடன்




காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவுடன்



1969 பிப்ரவரி 10-ஆம் நாள் முதலமைச்சராகப் பதவியேற்ற போது



தொழுநோய் இரவலர் மறுவாழ்வு இல்லத் திறப்புவிழா!




இந்தியாவிலேயே முதன் முதலாக மாநில முதலமைச்சர் விடுதலைத் திருநாளில் கொடியேற்றும் உரிமையைப் பெற்று, சென்னை கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றிய போது.





ஆதரவற்ற அனாதை குழந்தைகளுக்காக கருணை இல்லங்களை துவக்கி வைத்தபோது




பகுத்தறிவுத் தந்தை பெரியாருக்குச் சென்னையில் சிலை எடுத்த போது...



பாராண்ட ராஜராஜ சோழனுக்குத் தஞ்சையில் சிலை எடுத்த பொழுது உடன் அமைச்சர் மன்னை, அமைச்சர் கண்ணப்பன் ஆகியோர் உள்ளனர்.



வள்ளுவர் கோட்டம் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்த போது




மனிதனை மனிதன் வைத்து இழுக்கும் கொடுமை நீங்க கைரிக்ஷா இழுத்துப் பிழைப்பவர்களுக்கு இலவச சைக்கிள் ரிக்ஷாவை வழங்கிய போது...



இலவச கண்சிகிச்சை முகாம்களில் இலவச மூக்கு கண்ணாடி வழங்கிய போது...



விதவைப் பெண்டிர் மறுமணம் செய்து கொள்ள உதவி



விழியிழந்தோர் சங்கத்தலைவரான கண்ணொளியிழந்த ஆசீர். நல்லதம்பி தலைமையில் தொழுநோய் மறுவாழ்வு சங்கத்தின் பொதுச்செயலாளர் கவிஞர் முகமது அலி வெளியிட்டார். நெஞ்சுக்கு நீதி (முதல் பாகம்) நூலின் பிரதியை பெற்றுக் கொண்டவர் கால் ஊனமுற்ற செல்வி சாந்தகுமாரி.

# நெஞ்சுக்கு நீதி

# 1

## முதல் பாகம் வெளியிட்ட கதை

"நெஞ்சுக்கு நீதி" என் வாழ்க்கை வரலாறு எனக் கூறப்பட்டாலும் எனக்கென்று ஒரு தனி வாழ்க்கை கிடையாது. ஒரு இலட்சியத்தை மையமாகக் கொண்டு சுழலும் இயக்கத்தின் வரலாற்றில் நான் ஒரு பகுதி.

எனக்குத் தாய், தந்தை, மனைவிகள், பிள்ளைகள், சகோதரிகள் என்றிருந்தாலும் அவர்களில் சிலர் என்னை விட்டுப் பிரிந்தாலும் அல்லது என்னுடன் வாழந்தாலும் நான் குடும்பம் என்று கருதுவதும் என்னையும் ஒரு அங்கமாகப் பிணைத்துக் கொண்டிருப்பதும் இந்த இயக்கம் ஒன்றைத்தானே தவிர வேறில்லை!

அதனால்தான் "நெஞ்சுக்கு நீதி" முதல் பாகம் எழுநூற்று ஐம்பது பக்கங்கள் கொண்ட நூலை வெளியிட்ட விழா நிகழ்ச்சியின் பொழுது டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறிய வார்த்தைகள் இன்னமும் என் நெஞ்சத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன.



''இது கலைஞருடைய வரலாறு என்பதை விட முப்பத்தைந்து ஆண்டு காலத் தமிழக அரசியல் வரலாற்றையே அவர் தெளிவாக நமக்குத் தந்திருக்கிறார். வரலாறு எழுதுவதற்கும் தகுதி வேண்டும். திறமை வேண்டும். மக்களுடைய இதயத்தில் குடியேறியவர்கள் யாரோ, அவர்கள் எழுதுகிற வாழ்க்கை வரலாற்றைத்தான் மக்கள் படிக்க விரும்புகிறார்கள். ''நெஞ்சுக்கு நீதி'' நூலில் அவருடைய வரலாறு என்பது மிகவும் குறைவு! இயக்கத்தோடு நெருங்கிச் சேர்ந்து வளர்ந்ததாலே இயக்கத்தின் வரலாறுதான் அவருடைய வரலாறே தவிர அவருக்கென்று தனித்த வரலாறு இல்லை.''

நாவலர் அவர்கள் இடம் மாறினாலும் அவர் கூறிய அந்தக் கருத்து என் இதயத்தைவிட்டு மாறவில்லை.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பேராசிரியர் அன்பழகன் அவர்கள், ''கலைஞர் அவர்கள் தன்னுடைய வரலாறு என்று எண்ணிக் கொண்டு எழுதினாலும் அது இந்த நாட்டின் வரலாறாக, மொழியின் வரலாறாக இருக்கிறது. அவருடைய வரலாறு ஒரு தனி வரலாறாக இருக்க முடியாத நிலை பெற்று, ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டு காலமாகிறது'' எனக் குறிப்பிட்டதையும் மறந்துவிடாத என்னைச் சுமந்து கொண்டுதான் காலத்தேர் ஓடிக்கொண்டிருக்கிறது.

1975-ஆம் ஆண்டு ''நெஞ்சுக்கு நீதி''யின் முதல் பாகம் வெளியிடப்பட்டது. என்னுடைய ஐம்பதாவது வயது நிறைவுற்ற கட்டத்தில்தான் அந்த வெளியீட்டு விழா நடைபெற்றது.!

நாற்பத்து ஐந்தாவது வயதில் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளான நான்; அந்தப் பொறுப்பேற்ற செய்தியுடன் முதல் பாகத்திற்கு ''முற்றிற்று'' என்ற முத்திரையைக் குத்தியிருந்தேன். அதற்குப் பிறகு பதினைந்து ஆண்டு காலம் உருண்டோடியிருக்கிறது.

இதோ இன்னும் பதினைந்து நாட்களில் ஜூன் மூன்றாம் நாள் (1983) அறுபதாம் அகவையில் அடியெடுத்து வைக்கிறேன்.

இனி நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் என்னைப் பொறுத்தவரையில் கல்லறையை நோக்கித்தான் என்றாலும், நான் ஒவ்வொரு அங்குலம் நகரும்போதும் இந்தச் சமுதாயம் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி விடுவதற்கான உழைப்பையே வழங்குவதற்கு உறுதிபூண்டிருக்கிறேன். துளி வியர்வை சிந்திடினும்

அது காய்ந்து, கிடக்கும் இன எழுச்சியைத் துளிர்த்திடச் செய்வதற்காகவே பயன்பட வேண்டுமென எண்ணுகிறவன் நான் என்பதால் என் கண்ணீர், செந்நீர், உயிர்மூச்சு, என்புதோல் போர்த்த இந்த உடம்பு அனைத்துமே இந்த இயக்கத்தின் உயர்வுக்கே அர்ப்பணிக்கப்படட்டும்!

''நெஞ்சுக்கு நீதி'' முதல் பாகத்தை வெளியிட்ட நிகழ்ச்சியே கூட, இன்றைக்கும் நினைத்துப் பார்த்தால் என்னை நெகிழ வைக்கக்கூடியது. அந்த நூலின் முதல் பாகம் ''தினமணி கதிர்'' நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. நெஞ்சுக்கு நீதியைத் தொடர்ந்து எழுதி முடிக்க என்னைத் தூண்டியவர் கதிரின் ஆசிரியராகப் பணியாற்றிய அன்பு நண்பர் ஆற்றல்மிகு எழுத்தாளர் ''சாவி'' அவர்களாவார்.

சென்னைக் கலைவாணர் அரங்கில் 1975 ஜனவரி 12-ஆம் நாள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் முக்கிய பொறுப்பேற்றிருந்தவரும், தினமணி கதிர் நிறுவனத்தில் தொடர்புடையவருமான நண்பர் இராமகிருஷ்ணன் அவர்கள் அந்த முதல் பாகத்தை வெளியிடக் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களை அழைத்திருந்தார். குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்திருந்தார். தமிழக ஆளுநர் கே.கே.ஷாவும், விழாவுக்கு தலைமையேற்க இசைவு வழங்கியிருந்தார். விழாவுக்கான நாட்கள் நெருங்கிடவே அழைப்பிதழ்களைக் ''கதிர்'' நிறுவனத்தார் அச்சியற்றி அனைவருக்கும் அனுப்பி வைத்தனர்.

''என் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது தொடர்ந்து இருபத்து நான்கு மணி நேரம் நீடித்ததில்லை'' என்று நான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதுண்டு! அப்படி மகிழ்ச்சியைத் தீப்பந்தம் கொண்டு சுட்டுக் கருக்குபவர்கள் தொலைவில் இருக்கும் எதிரிகளாகவும் இருக்கலாம்; அவர்கள் அதனைச் செய்யத் தாமதமானால் அருகிலிருக்கும் அன்புக்குரியோர் கூட அந்தக் காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருப்பர்!

''நெஞ்சுக்கு நீதி'' நூலை வெளியிட வரக்கூடாதென்று இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களுக்குத் தமிழ்நாட்டிலிருந்து ''நல்லவர்கள்'' சிலர் கடிதங்கள் எழுதி, தந்திகள் அனுப்பி, நேரிலும் சென்று முறையிட்டுக் கொண்டனர். அந்த நல்லவர்கள் வேறு யாருமல்ல; சில தேசியப் பிரமுகர்கள்தான்!

கடைசி நேரத்தில் வர இயலாமை குறித்துக் குடியரசுத் தலைவர் செய்தி அனுப்பி விட்டார். ''தினமணிக் கதிர்'' நிறுவனத்தார் திகைத்தனர். நண்பர் சாவி அவர்கள் குமுறினார். நானோ எழுத்தாளன் மட்டுமல்ல; முதல்வர் பதவியென்ற முள் முடியையும் சூட்டிக் கொண்டிருப்பவன் அப்போது!

விழாவுக்கு வர மறுத்துவிட்ட குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்கள்; அந்தப் பதவிக்குப் போட்டியிடும் பொழுது என் வீடு தேடி வந்து கட்சியின் வாக்குகளைக் கேட்டவர்தான்! என்ன செய்வது; எப்படியோ தடுக்கப்பட்டு விட்டார்!

நான் யாரையும் நொந்து கொள்ளவில்லை. என்னையே தான் நொந்து கொண்டேன்! கதிர் நிறுவனத்தார் என்னிடம் அப்படி ஒரு யோசனையைக் கூறியபொழுதே நான் மறுத்திருக்க வேண்டும்! பதவிச் சிம்மாசனத்தில் வீற்றிருப்போர் வந்து வாழ்த்துவது பராட்டுவது என்பது ஒரு சம்பிரதாயமே தவிர, பாசமும், நேசமும் கொண்டு நம்முடனே இருப்போர் மனந்திறந்து கூறும் ஒரு சொல்லுக்கு முன்னால் அந்தச் சம்பிரதாயம் சம்மட்டியடி விழுந்த செங்கல்லாய் நொறுங்கிப் போகும் என்பதை என் நெஞ்சம் ஒரு கணம் மறந்து விட்டதால் வந்த வினை!

நூல் வெளியீட்டு விழா நாள் தள்ளிப் போடப்பட்டது! எப்படியும் ஒரு நாள் நடத்தியே தீரவேண்டுமெனத் ''தினமணிக் கதிர்'' பதிப்பகத்தார் என்னைத் துளைத்து எடுத்தனர். அவர்களது பிடிவாதத்தை வென்றிட என்னால் முடியவில்லை. வேறு வழியில்லாமல் ஒரு நிபந்தனையோடு அந்த விழாவுக்கு ஒப்புதல் அளித்தேன். அந்த நிபந்தனையைப் பதிப்பகத்தினர் ஏற்றுக் கொண்டனர். என் நிபந்தனையை ஏற்று அவ்வாறே அழைப்பிதழ் அச்சியற்றப்பட்டது.

1975 ஏப்ரல் 30-ஆம் நாள் நிகழ்ச்சி! விழாவுக்குத் தலைவர், கண்ணொளியற்றவரும் தமிழக விழியிழந்தோர் சங்கத் தலைவருமான நண்பர் ஆசிர். நல்லதம்பி! நூலை வெளியிடுபவர் தொழுநோய் மறுவாழ்வு சங்கத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் முகமது அலி! அவரும் அந்த நோயினால் தாக்குண்டவர்தான்! நூலின் முதல் பிரதியைப் பெறுபவர் செல்வி சாந்தகுமாரி! கால் ஊனமுற்ற சகோதரி! மற்றும் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், இனிய நண்பர் அப்துல் சமது, குன்றக்குடி அடிகளார், தமிழறிஞர்

கி.இராமலிங்கனார், காங்கிரஸ் தியாகி டி.செங்கல்வராயன், கதிர் ஆசிரியர் சாவி, திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜ் ஆகியோர் பாராட்டுரை! இராமகிருஷ்ணன் வரவேற்புரை!

''பார்வையற்ற சமுதாயத்தை மேன்மைப்படுத்தி, கை தூக்கிவிடும் தலைமை இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. பார்வையிழந்த 'மக்களுக்கு விழியாகவும் வழியாகவும் உள்ள ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைப் பார்வையற்ற மக்களின் சார்பாகவும் நல்வாழ்த்துக் கூறிப் பாராட்டிப் போற்றுகிறேன்.''

— தலைமை வகித்த ஆசிர் நல்லதம்பியின் உரையில் ஒரு சிறு பகுதி இது!

''கலைஞர், விளக்காக இருக்கிறார். நாங்கள் ஒளியாக இருக்க ஆசைப்படவில்லை; திரியாகவே இருக்க விரும்புகிறோம்; ஏனென்றால் ஒளி, எண்ணெய் இருக்கும் வரையில்தான் இருக்கும்! ஆனால் திரியோ, எண்ணெய் இல்லாத போதும் இருக்கும்! அதைப் போல கலைஞர் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் அவருக்குத் துணையாக இருப்போம்!''

— நூலை வெளியிட்ட தொழுநோய் மறுவாழ்வு சங்கத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் முகமது அலியின் உறுதிமொழி இது!

கால் ஊனமுள்ள சகோதரி சாந்தகுமாரி சக்கர நாற்காலியிலேயே மேடைக்கு வந்து, நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு — ''நெஞ்சுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ளும் பாக்கியம் இந்தப் பஞ்சைக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சி'' என்று உருக்கமுடன் கூறினார்.

அழைப்பிதழில் ஆசிர் நல்லதம்பி, முகமது அலி, சாந்தகுமாரி ஆகியோரின் பெயர்கள் — அவர்களுக்கு முக்கிய நிகழ்ச்சிகள் தரப்பட்டு வெளிவந்தது கண்டு வெகுண்டவர்கள், விழாக்கோலம் கண்டு கண்கள் சிவக்கச் சினந்தனர். குடியரசுத் தலைவரையும், ஆளுநரையும், முதலமைச்சர் பொறுப்பில் இருந்த நான் இழிவுபடுத்திவிட்டதாகப் பேசினர் எழுதுகோலால் குத்தினர்!

ஊனமுற்றோரும் தொழுநோய் இரவலரும் விழியிழந்தோரும் இருக்குமிடமே எனக்கு வழிபடும் ஆலயங்கள் என அறிவித்து அவர்கள் நலனுக்காகத் திட்டங்கள் பலவற்றை உருவாக்கிய நான் அந்த ஆலயத்துத் தெய்வங்களையே விழாவுக்கு அழைக்கச் செய்தது எப்படித் தவறான செயலாகும்! மனிதர்களைவிடத் தெய்வங்கள் உயர்ந்தோர் என்கின்றனர்!

மனிதர்கள் வர மறுத்துவிட்ட பிறகு தெய்வங்களைத் தலைமை தாங்கவும், நூலை வெளியிடவும், முதல் பிரதியைப் பெறவும் அழைத்தது நியாயம்தானே?

1975-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இந்த நூல் வெளியீட்டு விழாவில் மட்டுமல்ல; 1969-ல் முதல்வர் பொறுப்பை ஏற்றிடும் வேளையிலேயே வேதனைகளும், சோதனைகளும்தான்!

அண்ணாவை இழந்து விட்ட கண்ணீர் வெள்ளத்தில் மிதந்தவாறு தானே கையில் ஆட்சிக் கோலைப் பிடிப்பதற்குத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நான் தள்ளப்பட்டேன்.

''நெஞ்சுக்கு நீதி'' முதல் பாகத்தை முடித்தபோது இறுதி அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறேன்:

''வெகுவேகமாகப் பல நிலையங்களில் நிற்காமலே ஓடி வந்த விரைவுப் புகைவண்டி கூட இடையில் ஒரு சந்திப்பில் களைப்பாற்றிக் கொள்ள நீரோ, நிலக்கரியோ, டீசலோ ஏற்றிக் கொள்ளச் சிறுபொழுது நின்று புறப்படுவது உண்டு! அப்படித்தான் கொஞ்சம் இடைவேளை எனக்கும் தேவைப்படுகிறது! சிறிது இளைப்பாறிய பின்னர் ''நெஞ்சுக்கு நீதி''யின் நீடித்த பயணம் இரண்டாம் பாகமாகத் தொடர்ந்து நடைபெறும் என்பதை உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

ஒன்றை மட்டும் இங்கே நான் தெளிவாகப் பதிய வைப்பது என் கடமையாகும். நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் அண்ணா அவர்களின் நினைவே எனக்கு ஊன்றுகோலாய்த் துணைபுரிகிறது. அவருடைய இதயத்தை இரவலாகப் பெற்றுக் கொண்ட உணர்வோடுதான் நான் ஒவ்வொரு கணமும் நடைபோடுகிறேன்.

அப்போது நான் குறிப்பிட்டுள்ளபடி இனியிருப்பது நீடித்த பயணமோ, குறுகிய காலப் பயணமோ எனக்குத் தெரியாது! அதுபற்றிய கவலையுமில்லை!

நடை தள்ளாடலாம் தடைபடலாம் முடிவுற்றுப்போய் விடலாம் ஆனால் நான் பெற்றுள்ள அந்த உணர்வுகளுக்குத் தள்ளாட்டமில்லை! முடிவே இல்லை! இல்லவே இல்லை!




# 2

## மூன்று கடிதங்கள்

இயக்கத் தலைவர்கள், முன்னோடிகள், தொண்டர்கள், மாற்றுக்கட்சி தோழமைக் கட்சியில் உள்ள முன்னணியினர் எனக்கு எழுதும் கடிதங்களை நான் திரும்பத் திரும்பப் படித்து அவற்றில் முக்கியமானவற்றையும் கட்சிச் சார்பற்ற பெரியவர்கள் எழுதும் மடல்களையும் பல ஆண்டு காலமாகவே பத்திரமாகப் பாதுகாக்கும் பழக்கம் உண்டு!

பாசத்தை வெளிப்படுத்தும் கடிதங்களும் உண்டு! நேசத்தைப் பெருக்கும் கடிதங்களும் உண்டு! அறிவுரை பொழியும் கடிதங்களும் உண்டு! பதவியோ அல்லது உதவியோ நாடும் கடிதங்களும் உண்டு! அந்தக் கடிதங்களிலேயே நான் கண்போல் காத்துவரும் மூன்று கடிதங்களைக் குறிப்பிடுவதின் வாயிலாக மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பால் கொண்டிருந்த நெருக்கத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் அந்தக் கடிதங்கள் கழக வரலாற்றின் கட்டங்களை எப்படி உணர்த்துகின்றன என்பதே மிக முக்கியமாகும்.


அண்ணா விட்டுச் சென்ற மிகப்பெரும் பொறுப்பை என் தோளில் சுமந்து கொண்டபோது அந்தக் கடந்த கால நினைவுகள் வராமல் போகுமா?

தி.மு.கழகம் பிறந்தது 1949-ஆம் ஆண்டு! அண்ணா மறைந்ததோ 1969-ஆம் ஆண்டு!

கழகம் தோன்றிய மூன்றாம் ஆண்டு, 1952-ல் சென்னையில் கழகத்தின் மாநிலப் பொது மாநாடு எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றதல்லவா; அப்போது கழகத்தின் வலிவென்ன வசதிகள்

என்ன? கழகம் பல தலைவர்களின் ஓயாத உழைப்பாலும், தொண்டர்களின் தூங்காத செயல்திறனாலும் நாள்தோறும் வளர்ந்து வளர்ந்து தியாக சரித்திரங்களைப் படைத்த போது அந்த உன்னத சரித்திரத்தில் ஒரு எழுத்தாகக்கூட இடம்பெறாதவர்கள், இடம் பெறத் தயங்கியவர்கள் கழகம் நல்ல வலிவும் பொலிவும் பெற்றபோது இடம் தேடிகளாக மாறிய வேடிக்கைகளையெல்லாம் பார்த்து ரசித்தவர் பலர்! அந்த ரசனையை நான் மட்டும் அனுபவிக்காமல் இருந்திருக்க முடியுமா?

இதோ 1952-ஆம் ஆண்டு சென்னை மாநில மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து அண்ணா எனக்கு எழுதியுள்ள கடிதம்!



அண்ணாவின் முன்னேற்றத்திலும், உடல்நலத்திலும், கழக வளர்ச்சியிலும் அக்கறையுள்ள தேவராஜ் முதலியார் அவர்கள் மூலம் மாநாட்டு வேலைகளுக்காக ஒரு பழைய கார் வாங்குவதற்கு ஏ, அப்பா எவ்வளவு பாடு! அதற்காக ஒரு கடிதம்! இன்று மாநாடுகளுக்கோ, கூட்டங்களுக்கோ சென்றால் சாரைசாரையாகக் கார்கள் ஊர்ந்து வருகின்றன. ஆனால் அன்று?

உண்டியல் எடுத்துச் சேர்த்த பணம் ஒரு நூறு இருநூறு என்று எண்ணும் பொழுதே ஒரு இன்பம்! அதில் ஆயிரம் என்பது

அப்போது எவ்வளவு பெருந்தொகையாக இருந்திருக்கிறது! அதனால்தானே; ''தம்பி உன்னிடமிருக்கும் ஆயிர ரூபாயையும் தேவராஜனிடம் கொடுத்து மோட்டார் காரை விரைவில் வாங்க ஏற்பாடு செய்'' என்று அண்ணன் அன்றைக்கு எனக்கு மடல் அனுப்புகிறார்.


அந்தப் பணிகள் மட்டுமா இயக்கத்தின் பல்வேறு பணிகளை அவர் என்னிடம் ஒப்படைத்துவிட்டு அவற்றை நான் நிறைவேற்றிட அவ்வப்போது வழங்கிய ஊக்கம் கொஞ்சமா?


1957-ஆம் ஆண்டு காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் தியாகி டாக்டர் சீனிவாசன் அவர்களை எதிர்த்து நின்று பல்லாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணா வெற்றி பெற்றார். ஆனால் அதே காஞ்சித் தொகுதியில் 1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஒரு பஸ் முதலாளியான காங்கிரஸ்காரரிடம் அண்ணா போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.

அண்ணாவின் ஆற்றல், அவரது பேச்சு, எழுத்து, அறிவுத்திறன், தமிழ் மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கு கடல் கடந்து வாழும் தமிழர்களிடமும் அவருக்கிருந்த புகழ்ஒளி, அவற்றில் ஒரு கடுகளவுகூட இல்லாத ஒருவரிடம் அவர் தோற்க நேரிட்டபோது தமிழ் இனமே அழுதது!

வெற்றி பெற்றுச் சட்டமன்றத்துக்கு வந்த அந்தக் காங்கிரஸ் பஸ் முதலாளி 1962 முதல் 1967 வரையில் ஒருநாள் கூட அவையில் பேசவில்லை என்பதுதான் குறிப்பிடத்தக்கது!

அதற்கு முன்பு ஐந்தாண்டு காலம் சட்டமன்றத்தில் அண்ணா ஆற்றிய உரைகள் ஏழைகளின் இதயத்தைப் பிரதிபலிப்பவைகளாகவும் தமிழ் உணர்வின் பெருங்கடல்களாகவும் அரசியல் மறைகளாக்வும் ஜனநாயக உரிமை முழக்கங்களாகவும் இனஎழுச்சி முரசங்களாகவும் அமைந்திருந்தன என்பதை நினைக்கும்போது அந்த அரசியல் வித்தகரை, இலக்கிய பேரறிவாளரை, உலகின் எல்லாப் பகுதிகளிலும் சிதறிக் கிடக்கிற தமிழ் சாதி மக்களின் நம்பிக்கை நட்சத்திரத்தை காஞ்சிபுரம் தொகுதி வாக்காளர்கள் எப்படித்தான் தோற்கடித்தனரோ என வியப்படைவதும் வேதனைப்படுவதும் இயற்கையேயன்றோ!


தம்பி,



''மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' என்று அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார் என்றாலும் காஞ்சியில் அவருக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பை அவ்வாறு ஏற்றுக் கொள்வதற்கில்லை. பணபலத்தின் வெற்றியாகத்தான் அந்த வெற்றி காங்கிரசுக்கு அமைந்தது.

அந்தத் தேர்தல் முடிவையொட்டி, அண்ணா அவர்கள் சென்னைக் கடற்கரையில் ஆற்றிய பேருரை குறித்தும் கழகத்தினர் வற்புறுத்தலுக்கு இணங்க அண்ணா, ராஜ்யசபை உறுப்பினராகப் பொறுப்பேற்றதையும் முதல் பாகத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

மாநிலங்களவை உறுப்பினராக டெல்லிக்குச் சென்ற அண்ணா அவர்களின் மனம், தமிழகத்தின் மீதும் தமிழகத்தின் கலங்கரை விளக்கமாம் கழத்தின் மீதும்தான் சுழன்றுகொண்டிருந்தது. ராஜ்யசபைக்குள் நுழைந்து ''பதவி உறுதிமொழி'' எடுத்துக் கொண்டவுடன் அண்ணா எனக்கு ஒரு கடிதம் எழுதினார். என் மன வலிமை குன்றிடும் போதெல்லாம் நான் மாமருந்துகளாகப் பயன்படுத்தி உரம் பெறுவதற்குத் துணை நிற்பவைகளில் அந்தக் கடிதமும் ஒன்று!


ராஜ்யசபையில் சி.சுப்பிரமணியம், அழகேசன் மற்றும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் அவரிடம் காட்டிய அன்பினை எவ்வளவு இதயப்பூரிப்போடு அவர் வெளியிடுகிறார் என்பதற்கு இந்தக் கடிதம் ஒரு சான்று!


அது மட்டுமல்ல; நெடுந்தொலைவில் இருந்தபோதிலும் கழகப் பணிகளைக் கவனிக்கும் பொறுப்பில் இடையுறாது நான் ஈடுபடுவேன் என்ற ஆழ்ந்த நம்பிக்கையும் அண்ணாவிடம் உண்டு என்பதையும் இந்தக் கடிதம் கோடிட்டுக் காட்டுகிறது!

என்னைக் குறித்து அண்ணா அவர்கள் எத்தனையோ முறை எழுதியிருக்கிறார் பாராட்டிப் பேசியிருக்கிறார் அவர் என் விரலில் அணிவித்த வெற்றிக் கணையாழிகூட அப்படியே தானிருக்கிறது! இருப்பினும் இவற்றையெல்லாம்விட அவர் உளம் திறந்து எனக்கு எழுதிய கடிதங்களும் அந்தக் கடிதங்களில் ஒளிவிடும் அவரது கையெழுத்துக்களும் படிக்கப் படிக்க பார்க்கப் பார்க்க எனது பயணத்திற்குக் குறுக்கே எத்தனை இடையூறுகள் வரினும், எவ்வளவு பழிகள் சுமத்தப்படினும் அனைத்தையும் ஊதித் தள்ளிவிட்டு எனக்கு ஊக்கம் தரும் உயிர்ச்சத்துக்களாக அல்லவா உள்ளன!

டெல்லியிலிருந்து அவர் எனக்கு எழுதிய மடலில் ராஜ்ய சபையில் எந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார் என்பதைக்கூடக் குறிப்பிட மறக்கவில்லை. இரண்டாவது வரிசையில் முதல் இடம்! திருவண்ணாமலை தர்மலிங்கம் டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்போது! அவர் அண்ணா அவர்களை எவ்வளவு அக்கறையுடன் கவனித்துக் கொண்டார் என்ற செய்தியை அண்ணா உளம் சிலிர்க்க எழுதியுள்ளதைக் காணும்போது தர்மலிங்கத்திற்கு மெய் சிலிர்ப்பது இயற்கைதானே!

அண்ணாவின் தலைமையையும் அவர் கூறும் கருத்துக்களையும் என்ன காரணத்தினாலோ ஏற்றுக் கொள்ளாத பத்திரிகையாளர்கள், தரவேண்டிய முக்கியத்துவத்தை அவருக்குத் தரவில்லை என்ற உண்மையை எவ்வளவு நாசுக்காக இந்தக் கடிதத்தில் அண்ணா வெளிப்படுத்தியிருக்கிறார்!


20/6/62.
தம்பி,



அவர் இருந்து செய்ய வேண்டிய அளவு காரியங்களை நானிருந்து ஆற்றிடுவேன் என்று நம்பிக்கை நாதம் எழுப்பும் அவரது கடிதம்-ஆம்; அந்த மணிக்கரம் தீட்டிய வார்த்தைகள் எனக்கு என் தெய்வமாம் அண்ணா அளித்த வரமல்லவா? அந்த வரம் பெற்றேன்! புதிய உரம் பெற்றேன்! அவர் கரம் பற்றி நடந்திட்ட எனக்கு அவர் கடைசியாக எழுதிய கடிதமும் ஒன்றுண்டு!

தமிழக முதல்வர் பொறுப்பை ஏற்ற அண்ணா அவர்கள், இரண்டு ஆண்டுகள் முற்றுப் பெறுவதற்குள்ளாகவே புற்றுநோயால் தாக்குண்டதையும், அமெரிக்க நாட்டிற்கு சிகிச்சைக்குச் சென்றதையும், தமிழகம் திரும்பிய சில நாட்களுக்கெல்லாம் இயற்கை எய்தியதையும் முன்பே விபரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

நியூயார்க் மெமோரியல் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிவுற்ற சில நாட்களுக்கெல்லாம் நோயின் கொடுமையான மரணப் பிடியிலிருந்து தப்பிவிட்டோம் என்ற மகிழ்ச்சி அவருக்கு ஏற்பட்டது. தாயகம் திரும்பி, தனது தொண்டினைத் தொடரலாம் என்ற உற்சாகத்துடன் அவர் இருந்திருக்கிறார். உடல் மிகவும் மெலிந்துள்ளார் என்றனர் அமெரிக்காவில் அவரைப் பார்த்துவிட்டு வந்தவர்கள். புற்றுநோயின் சேட்டைகள் எத்தகையவை என்பதை அண்ணா பல மருத்துவ ஆராய்ச்சி நூல்களைப் படித்து அறிந்து வைத்திருந்தார்!

அவரது வீட்டிலேயே வயதில் இளமையான ஒரு அம்மையாருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு புற்றுநோய் பற்றியதால் அவர் இறந்துவிட்டார். அது முதல் புற்றுநோய் குறித்த மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பதில் அண்ணாவுக்கு ஒரு ஆர்வம் ஏற்பட்டது. அந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து தடுத்து நிறுத்தி மக்களைக் காப்பாற்ற வேண்டும்

அதற்கான ஆராய்ச்சி நிலையங்கள், மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட வேண்டுமென அவர் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பார்.

அப்போதெல்லாம் அந்தப் பொல்லாத நோய் அவரையே பீடித்துக் கொள்ளும் என்று யாருக்கும் தெரியாது. அவரது மறைவுக்குப் பிறகு அவரது எண்ணத்தை நிறைவேற்றிடத்தான் அண்ணா மறைந்த அடுத்த மாதமே காஞ்சிக்கு அருகாமையில் அண்ணா நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனையை அரசின் சார்பில் உருவாக்கிட முயற்சிகளை மேற்கொண்டோம்.

நியூயார்க்கிலிருந்து திரும்பி வந்து எங்களையும் தமிழ் இனத்தையும் வழிநடத்திச் செல்வார் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அண்ணாவும் அந்த நம்பிக்கையில்தான் மெமோரியல் மருத்துவமனையிலிருந்து அமெரிக்காவில் இந்தியத் தூதுவராக இருந்த திரு.ஜி.பார்த்தசாரதி அவர்களின் இல்லத்திற்குச் சென்று சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டார். அங்கிருந்து அவர் எனக்கு எழுதிய கடிதம்தான் கடைசிக் கடிதமாயிற்று!

அதனைக் கடைசிக் கடிதம் என நினைத்து அவரும் எழுதவில்லை! அதைப் படித்தபோது நானும் அப்படி எண்ணிடவில்லை! அதனால்தான் அந்தக் கடிதத்தில் சென்னையில் இருந்து அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ''மறவன் மடல்'' வார இதழ் முதற்கொண்டு, அவருக்கு சிகிச்சையளித்த டாக்டர் மில்லர் அவர்கள் நம்பிக்கையுடன் சொன்னவற்றையும், தான் உட்கொள்ளும் உணவு, உடலின் எடை, அறுவை சிகிச்சை பற்றிய விவரம், எனது வீட்டார் நலம், அமைச்சர்கள், கழகத்தினர் குறித்த நலம், அன்பில் தர்மலிங்கம் நடத்திய விழா பற்றி நான் எழுதியிருந்ததற்கான உணர்ச்சிமிகு பதில், சென்னை மாநகராட்சித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்று எனக்கு விடுத்த தாக்கீது வரையில் அத்தனையும் இடம்பெற்றன!

நண்பர்கள் ராஜாராமும், இரா.செழியனும் கண்ணை இமை காப்பதுபோல காத்துவருகிறார்கள் தன்னை; என எழுதிய அண்ணா அவர்கள், தனது நோய் நீங்கிய பிறகு முன்பு போல் கடினமாக உழைக்க முடியுமா எனக்கேட்டு, அந்தக் கவலை தன்னை வாட்டியபடி இருக்கிறது என்றும் குமுறியிருக்கிறார்கள்!

நோய் நீங்கும் உயிர் பிழைத்து இன்னும் பல ஆண்டு வாழ்வோம் அப்படி வாழும்போது முன்பு போலக் கடினமாக உழைக்க முடியுமா என்றுதான் கவலையாக இருக்கிறது!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இந்த நினைவு அண்ணாவுக்கு! ஆனால் அதற்குப் பிறகு மூன்று திங்களேதான் அவர் வாழ்ந்தார்! கடினமாக இனிமேல் உழைக்க முடியுமா என்று கவலைப்பட்டவர், அந்தக் கவலை இனி தனக்கில்லையென்று எம்மீது சுமத்திவிட்டுச் சென்றுவிட்டார்!

''எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'' என அவரது கல்லறையில் செதுக்கி வைத்துவிட்டு, இனி எனக்கு உறக்கமில்லையென எண்ணியவாறு உழைப்பதற்குப் புறப்பட்டேன்!

# 3

## அதிர்ச்சியூட்டும் செய்தி

"அன்புள்ள திருமதி அண்ணாதுரை அவர்களுக்கு, நான் உங்களையும் திரு. அண்ணாதுரை அவர்களையும் நியூயார்க்கில் சந்தித்தபோது அவருக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றிருந்தது. அதுகுறித்து நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தோம். அவர் விரைவில் குணமடைந்து விடுவார் என்று நான் உண்மையாகவே நம்பினேன். அவருடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு அவருக்கு சிகிச்சை நடைபெற்ற அந்த இறுதி நாட்களில் எனது சிந்தனைகள் யாவும் உங்களிடமே இருந்தன. உங்களுடைய கவலையில் நாங்களும் பங்கு கொண்டோம். அவர் கடுமையாக நோயுற்றிருந்தபோதிலும் அவர் உயிர்நீத்த செய்தி எனக்கு அதிர்ச்சியை அளித்தது. ஆனால் உங்களுடைய துக்கம் அளவிடற்பாலது என்பதை நானறிவேன். உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ராணி அண்ணியார் அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதித் தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டது மட்டுமல்ல; பிப்ரவரி 8-ஆம் நாளன்று சென்னைக்கு வந்தபோது அண்ணாவின் நுங்கம்பாக்கம் இல்லத்திற்குச் சென்று அண்ணியாருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினார்.

அன்று மாலை ஆளுநர் உஜ்ஜல்சிங் அவர்கள் தலைமையில் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இரங்கற் பொதுக்



கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி, தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், ஆந்திர முதல்வர் பிரமானந்த ரெட்டி, டாக்டர் ஏ. லெட்சுமணசாமி முதலியார், ராஜா முத்தையா செட்டியார், ஏ.எஸ்.கே. அய்யங்கார், பி. இராமமூர்த்தி, சென்னை மேயர் வேலூர் நாராயணன், மூக்கையா தேவர், மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் தினேஷ்சிங், சி. சுப்பிரமணியம், ஷெரீப் சுந்தர்லால் நகாதா, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., மற்றும் நான், நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டு கண்ணீர்த் துளிகளால் எழுதப்பட்ட இரங்கல் தீர்மானத்தை மக்கட் பெருங் கடலின் பெருமூச்சுக்கிடையே நிறைவேற்றினோம்.

அண்ணாவின் மறைவுச் செய்தி கேட்டதும் தலைவர்கள் எப்படித் துடித்தனர்-தமிழகம் எப்படித் தவித்தது என்பதை எழுதிக் காட்ட வார்த்தைகளைத் தேடுகிறேன்; கிடைக்கவில்லை!

"நடுநிசிக்குப்பிறகு அண்ணாவின் மறைவுச் செய்தி கேட்டு நான் விழித்தேன். எனது துயரம் வார்த்தைகளில் அடங்காது" என அறிக்கை விடுத்தார் ராஜாஜி!

எத்தனையோ பிரச்சினைகளில் அண்ணாவுக்கும் ராஜாஜிக்கும் கருத்து மோதுதல்கள் கடுமையாக ஏற்பட்டதுண்டு! 1937-[illegible] ஆம் ஆண்டுகளில் சென்னை ராஜதானியை ஆளுகிற பிரதமர் பொறுப்பை ஏற்றிருந்த ராஜாஜி அவர்கள் இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப்பாடமாக ஆக்கியபோது இந்தி எதிர்ப்புத் தளபதியாகப் பெரியாரால் நியமிக்கப்பட்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றவர் அண்ணா!

1952-ல் ராஜாஜி ஆட்சி கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுத்து, ராஜாஜி வீட்டு வாசலிலேயே மறியல் களம் அமைத்தவர் அண்ணா! தி. மு. கழகத்தை மூட்டைப் பூச்சி என வர்ணித்து அதை நசுக்கி விடுவேன் என்று கர்ச்சித்தவர் ராஜாஜி! அவரது அரசியல் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல் ராஜாஜியை "குல்லுகபட்டர்" என்று குறிப்பிட்டவர் அண்ணா!

இந்தக் கடந்தகால நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்து 1967-ல் அதே ராஜாஜியும், அண்ணாவும், பி. ராமமூர்த்தியும், காயிதேமில்லத்தும், மூக்கையாதேவரும், ம பொ. சி. யும் காங்கிரசை எதிர்த்து ஒரே அணியில் நின்றனர்.

அந்தக் கூட்டணி கண்டு அஞ்சாத காமராஜர் அவர்கள் "நான் படுத்துக் கொண்டே ஜெயிப்பேன்" என்றார்! அது கேட்ட ராஜாஜி அவர்கள்; "காமராஜர் படுப்பது நிச்சயம். ஜெயிப்பது நிச்சயமில்லை" என்றார்! அப்படியே தான் பொதுத் தேர்தல் முடிவு அமைந்தது.

*1967-ல் ஆட்சி மாற்றத்தையே* செய்து காட்டிய அண்ணா அவர்களின் மறைவுச் செய்தியால் காமராஜர் சோக வடிவ மானார்! அங்கேதான் மனித குலப் பண்பாடு மணியோசையென முழங்குகிறது!

"அண்ணாவின் மறைவு, தமிழகத்திற்குப் பேரிழப்பாகும். முதலமைச்சராக அவர் ஆற்றி வந்த தொண்டினை, குறுகிய இரண்டாண்டு காலத்திற்குள்ளாக இழக்க நேர்ந்தது துரதிர்ஷ்டவசமானது."

இரங்கற் செய்தியில் காமராஜர் அவர்கள் இவ்வாறு குறிப் பிட்டிருந்தார்.

"எது நடக்கக்கூடாதோ அது நடந்துவிட்டது. எதிர்காலம் இருளடைந்து காணப்படுகிறது. நாலு கோடி தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்" என்று வெள்ளியிழைத்தாடி வழியே விழிநீர் வழிந்திட துயரச் செய்தி விடுத்த பெரியார் அவர் கள்; மறுநாள் பிப்ரவரி நாலாம் தேதி வானொலியில் உரை யாற்றிய போது, "அண்ணா மறைந்துவிட்டார்! 'அண்ணா வாழ்க!' என்பதற்கிணங்க இனி நடைபெறும் ஆட்சியில் எவ்வித மாறுதலும் இல்லாமல் அவரது கொள்கை வளர்ந்து வரும். ஆட்சியாளர்கள்; தாங்கள் தமிழர்கள், தமிழர்களுக்காக, தமிழர் களாக ஆட்சி செய்கிறோம் என்கிற உணர்ச்சியோடு, மற்ற இனத்தார் காட்டும் இன உணர்ச்சியைத் தங்களுக்கும் வழி காட்டியாக வைத்துக்கொண்டு அதன்படி நடந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். தமிழக மக்கள் அண்ணாவிடம் காட்டிய அன்பு போலவே இன்றைய நமது அமைச்சர்கள் எல்லோரிட மும் அன்பு காட்டிடும் அளவுக்கு பரிவாய் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்ற விதத்தில் நம்பிக் கையையும் அறிவுரையையும் வெளியிட்டார்.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் உடலைக் காண அலைகடலெனத் திரண்ட கூட்டம் கட்டுக்கடங்காமல் கொந்தளித்தது. மண்டபமே இடிந்து விழுந்து விடுமோ என்ற அச்சம் அனைவருக்கும்

ஏற்பட்டது. முதலில் உடலை மண்டபத்தின் வெளி முகப்பில் வைக்காமல் உள்ளேயுள்ள கூடத்தில் வைத்தது பெருந் தவறாகப் போயிற்று. கூட்ட நெரிசலில் நான்கைந்து பேர் உயிர் இழந்தனர்.

மண்டபத்தைச் சுற்றி அரசினர் தோட்டம் முழுமையும் நிரம்பி வழிந்த கூட்டத்தினர், அண்ணாவின் உடலை மண்டபத்தின் உச்சிக்குக் கொண்டுவந்து காட்டுங்கள் என்று அழுகுரலுடன் முழங்கினர். அதற்குள் மண்டபத்தின் உட்பகுதி "சீலிங்" உடைந்து நொறுங்கி எங்கள் மீது கற்கள் விழத் தொடங்கின. மண்டபத்திற்குள்ளே அண்ணாவின் உடலைச் சுற்றி நின்று அந்த உடலுக்குச் சேதம் வந்துவிடாமல் பாதுகாக்கப் போலீசாருடனும், தொண்டர்களுடனும், நான், சத்தியவாணிமுத்து, ப.உ. சண்முகம், ஈரோடு சின்னச்சாமி, துரை முருகன் ஆகியோர் இருந்தோம்.

போலீஸ் ஐ.ஜி. மகாதேவன், மற்ற அதிகாரிகளுடன் அந்த மண்டபத்திற்குள்ளே மக்கள் வெள்ளம் கரை புரண்டு வந்துவிடாமல் தடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவரிடம் கதறிக்கொண்டே சொன்னேன் "எப்படியாவது அண்ணாவின் உடலைப் பாதுகாத்திடுங்கள்" என்று!

அதற்குள் அடைபட்டிருந்த கதவுகளை மதயானைகள் முட்டித் திறந்தது போல வெளியிலிருந்த கூட்டம் திறந்து விட்டது. முருகேசன் என்ற ஒருவர்! வாட்டசாட்டமான உருவம்! லுங்கி கட்டியிருந்தார் - பனியன் போட்டிருந்தார் அண்ணா உடலருகே வந்து "அய்யோ அண்ணா!" என்று அலறினார். அப்படியே விழுந்தார். விழுந்தவரை நாங்கள் தூக்கினோம். உயிர் போய்விட்டது. அந்தப் பாசமுள்ள கழகக் கண்மணியின் சவத்தை எங்கே கொண்டு செல்ல முடியும்? அந்தக் கூட்டத்தில் எப்படி வெளியே கொண்டு போக முடியும்? தலைவன் செத்ததற்கு செத்த அந்தத் தங்கத்தை அந்த மண்டபத்தின் ஒரு மூலையிலே கிடத்தினோம்.

அண்ணாவின் உடலை நானும், ப. உ. சண்முகமும், ஈரோடு சின்னச்சாமியும், சத்தியவாணிமுத்துவும், துரை முருகனும் ஓரிரு போலீஸ் அதிகாரிகளும் தொண்டர்களும் சுமந்துகொண்டு ராஜாஜி மண்டபத்தின் உச்சி மாடிக்கு எடுத்துச் சென்றோம். எங்கள் கரங்களிலும், எங்கள் தோள்களிலும் எங்கள் அண்ணனின் உடலைச் சாய்த்துப் பிடித்து கொளுத்துகின்ற வெயிலில் எதிரில் கூடியிருந்த மக்கள் சமுத்திரத்திற்குக் காட்டினோம்.

அதன்பிறகு மண்டபம் இழுத்துப் பூட்டப்பட்டது. போலீசார் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று! அழுது அழுது நீர் வற்றிப் போயிருந்த கண்களில் அந்தப் புகை தாக்கவே கூட்டம் சற்றுப் பின்வாங்கியது.

அதற்கடுத்து மண்டபத்தின் வெளி முகப்பில் அண்ணாவின் திரு உருவைக் காட்சிக்கு வைத்திட்டோம்! அவரது முகதரிசனத்தைக் கடைசியாகக் கண்டிடத் துடித்து புகைவண்டிகளில் இடமின்மையால் அவற்றின் கூரைகளில் பயணம் செய்தனர் பல லட்சக்கணக்கானோர்! மதுரையிலிருந்து சென்னை வந்த ஜனதா விரைவு வண்டியில் மேலே அமர்ந்து வந்தவர்கள் நாற்பது பேர், வண்டி கொள்ளிடம் பாலத்தைக் கடக்கும்போது பாலத்தின் மேலேயுள்ள இரும்பு உத்திரங்களில் மோதுண்டுச் சிதறி மாண்டனர்.

பிப்ரவரி மூன்றும் நாள் மறைந்த அண்ணாவின் உடல் அடக்கம் மறுநாள் நடைபெற்றது. தலைநகரமெங்கணும் மனிதர் தலைகளே எனுமளவுக்கு வரலாறு காணாத கூட்டத்தினிடையே அண்ணாவின் உருவத்தைச் சுமந்த பீரங்கி வண்டி நகர்ந்தது. மத்திய அமைச்சர் சவான் அவர்களும் கேரள முதல்வர் நம்பூதிரிபாட் அவர்களும் அந்த இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். சென்னைக் கடற்கரையில் அமைக்கப்பட்ட கல்லறைக்குள் அண்ணாவைத் தாங்கியிருந்த சந்தனப் பேழை வைக்கப்பட்டது. அண்ணா! அண்ணா! அண்ணா! என்ற பேரொலிக்கு முன்னால் வங்கக்கடல் அடங்கிப் போயிற்று!

"அண்ணா துயில்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அமைதிக்கும் அழகிற்கும் பெயர் பெற்ற இடம். ஒரு பக்கம் நீண்ட மணற் பரப்பும் கடலும் இருக்கிறது. இன்னொரு பக்கம் 'உழைப்பின் வெற்றி" சிலையும், அதற்கப்பால் கம்பீரமான பல்கலைக்கழகக் கட்டிடமும் இருக்கின்றன. அருகாமையில் தமிழ்க் கவிஞர் கம்பரின் சிலை இருக்கிறது. தன் வாழ்நாள் முழுவதும் கல்வியின் குறிக்கோள் வெற்றிக்காகவும், சாதாரணத் தொழிலாளியின் நல்வாழ்வுக்காகவும் பாடுபட்ட அவர் ஓய்வு பெறுவதற்குப் பல்கலைக்கழகமும் அந்த இரு சிலைகளும் அந்த இடத்தைத் தகுதிவாய்ந்த இடமாக்குகின்றன."

அண்ணாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தைக் குறித்து பம்பாயிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில

தினசரியான "டைம்ஸ் ஆப் இந்தியா" மேற்கண்டவாறு எழுதியிருந்தது.

பிப்ரவரி 8-ஆம் நாள் இரங்கற் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அடுத்த நாள் திருப்பதியில் நடந்த ஒரு திருமண விழாவில் பங்கேற்கச் சென்று விட்டார்.

அண்ணா மறைந்த அடுத்த சில நிமிடங்களில் சம்பிர தாயப்படி நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் ஒரு தற்காலிக அமைச்சரவை கவர்னர் மாளிகையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டது. நாதழுதழுக்க- இதயம் சுக்குநூறாக - கண்களில் மழைகொட்ட - நாவலரும் மற்ற அமைச்சர்களான நாங்களும் பதவிப் பிரமாண உறுதிமொழி களைப் படித்துச் சம்பிரதாயத்தை நிறைவேற்றிவிட்டு இறுதி ஊர்வலத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க முற்பட்டோம்!

அண்ணாவின் சுற்றத்தார் அவரது உடலைக் காஞ்சீபுரத் திற்கே எடுத்துச் சென்று எரியூட்ட வேண்டுமென்று வாதிட்டனர். "அண்ணா, வீட்டுத் தலைவரல்ல; நாட்டுக்குத் தலைவர்! எனவே சென்னையில் அடக்கம் செய்து நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்" என்று நானும் அரங்கண்ணலும், பரிமளம் முதலியவர்களிடம் உறுதியாகச் சொன்னபிறகு அவர்கள் எங்கள் கருத்துக்கு இணங்கினார்கள்.

"டைம்ஸ் ஆப் இந்தியா" போன்ற ஆங்கில ஏடுகள் சிறப்பித்துக் கூறுகிற அளவுக்கு கடற்கரையின் வெண்மணற் படுக்கையில் அன்னத்தின் தூவியன்ன நுரை பொங்கும் அலைகள் தாலாட்டிட செந்தமிழ்த் தாயின் மூத்த மகன் துயில் கொள்ளத் தொடங்கினார்.

உயர்ந்த மேடையொன்றில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கியின் முன்னால் போய் நின்றேன். அண்ணாவின் பொன்மொழியாம் அந்த மூன்று சொற்களை மட்டும் உரக்கச் சொன்னேன்.

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு! அந்தச் சொற்கள் பரந்து கிடந்த கடற் பெருக்கின் மீது பரவி, அந்தக் கடலையே வெற்றிகொள்ளத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் எதிரொலித்தன!

பிப்ரவரி ஒன்பதாம் நாள் காலையில் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்ந்

தெடுக்கப்படுவார் என்ற அறிவிப்பைத் தற்காலிக முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்தார்கள். கழகத்தின் முன்னணித் தலைவர்களையெல்லாம் கலந்துகொண்டுதான் நாவலர் அவர்கள் அந்தத் தேதியை அறிவித்தார். அந்த நாள் அறிவிக்கப்பட்ட போதும் சரி, அதன் பிறகு இரண்டு நாட்கள் கழிந்தபோதும் சரி, அண்ணாவுக்குப் பிறகு முதல்வராக வரவேண்டியவர் நாவலர்தான் என்ற எண்ணமே என் இதயத்தில் மேலோங்கியிருந்தது. அவரேதான் முதலமைச்சராக வரவேண்டுமென்ற கருத்தை நான் மற்றவர்களிடமும் சொல்லிக்கொண்டிருந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து அண்ணாவின் தம்பிகளாக பெரியாரின் மாணவர்களாக வெளிவந்த நாவலர் நெடுஞ்செழியன். பேராசிரியர் அன்பழகன், கணியூர் மதியழகன், கடலூர் இளம்வழுதி ஆகியோரிடம் எனக்கு இளமைப் பருவத்திலேயே நெருங்கிய பழக்கம் உண்டு! அவர்களும் என்னிடம் மிகுந்த அன்பு கொண்டு பழகியவர்கள்!

இளந்தாடியுடன் அரிமா முழக்கமிட்டுப் பகுத்தறிவுக் கொள்கைகளை மேடைதோறும் பரப்பி மூட நம்பிக்கைகளைச் சாடும் நெடுஞ்செழியன் அவர்களை நான் மனதார நேசித்தது துண்டு- நேசம், கடந்தகாலக் கதையல்ல! இதை எழுதுகிற காலத்திலும் அதற்கு மோசம் வந்துவிடவில்லை.

அவரும் நானும் இணைந்து நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பேசியதுண்டு! கல்லடிகள், கத்தி, கட்டாரி வீச்சுக்களை அந்தக் கூட்டங்களில் சந்தித்ததுண்டு! அவர் கோவை ஜி. டி. நாயுடு அவர்கள் விடுதியிலும் நான் அருகே சிங்காநல்லூரில் தங்கிக் கொண்டு ஜூபிடர் நிறுவனத்திலும் பணியாற்றியபோது இருவரும் சேர்ந்து அந்த மாவட்டத்தில் இயக்கப் பிரச்சாரத்திற்குச் செல்லாத கிராமங்களே கிடையாது! இயக்கப் பிணைப்பும், இதயப் பிணைப்பும் எங்களை உற்ற நண்பர்களாக்கியிருந்தது. அந்த நட்பு வளர்ந்தது.

கட்சியில் நாவலருக்கு எதிராக நண்பர் சம்பத் போன்றவர்கள் அணிகளை உருவாக்கியபோது, நான் மிக உறுதியாக நாவலர் பக்கமே இருந்து சம்பத் போன்றவர்களின் பகையைத் தேடிக்கொண்டதும் உண்டு! நாவலருக்கு எதிரான அந்த அணி பிறகு எனக்கு எதிரான அணியாகவே உருவெடுத்து, அதன் அடுத்த கட்டமாக அண்ணாவுக்கு எதிரான அணியாகவே மாற்றம் பெற்றதும் கழக வரலாற்றில் முக்கிய கட்டங்களாகும். அந்த நேரங்களில் எல்லாம் நானும், நாவலர் நெடுஞ்செழியன்

அவர்களும், கழகத்தின் மற்ற முன்னோடிகளுடன் இணைந்து கட்சிக்குச் சிறு ஊனமும் வராமல் பாதுகாத்திருக்கிறோம்.

இவ்வாறு எல்லா வகைகளிலும் என் அன்புக்குரியவரான அவரே முதலமைச்சராக வரவேண்டும் - அவர்தான் வருவார் என்று நான் எதிர்பார்த்ததிலே தவறில்லை. ஆனால் சட்டமன்ற கழக உறுப்பினர்களில் ஓரிருவர் தவிர மற்ற அனைவரும்–அவ்வாறே பாராளுமன்றக் கழக உறுப்பினர்களில் மிகப் பெரும்பாலோரும் வேறுவிதமாக எண்ணமிட்டுக்கொண்டு பெரும் பெரும் குழுக்களாக என்னை வந்து சந்திக்கத் தொடங்கினர். அவர்களுடைய கருத்து எனக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இல்லை! அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது!





# 4

## ஒரு கெட்ட வார்த்தை!

பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பில் இருந்தபோது (1938) அமெரிக்காவின் குறிப்பிடத்தக்க பத்திரிகை களில் ஒன்றான ''எஸ்கொயர்'' ஒரு கேலிச் சித்திரம் வெளி யிட்டது.

நடைபாதையில் ஒரு சிறுவன் ''ரூஸ்வெல்ட்'' என்று எழுதிக்கொண்டிருக்கிறான். அதைப் பார்த்த அவனது அண்ணன், தன் தாயாரிடம், ''அம்மா! இதோ பார், தம்பி-ஒரு கெட்ட வார்த்தையை எழுதுகிறான்'' என்று கூச்சலிடுகிறான். இதுதான் அந்தக் கேலிச் சித்திரம்.

''எஸ்கொயர்'' ஏட்டில் அதனைக் கண்ட ரூஸ்வெல்ட் ஆத்திரப்படவில்லை. பத்திரிகைகளின் நியாயமான உரிமையைப் பறிக்கும் தண்டனைக்குரிய பயங்கரச் சட்டங்கள் எதையும் கொண்டு வரவில்லை. அந்தக் கேலிச் சித்திரத்தை ரசித்தார். அது மட்டுமல்ல: அதற்குக் கண்ணாடியும், சட்டமும் அமைக்கச் செய்து வெள்ளை மாளிகையில் அவரது படுக்கையறைக் கதவில் மாட்டி வைக்கச் சொன்னாராம்.

இங்கேயும் சில பத்திரிகை அதிபர்கள், ஆதிக்கபுரியினர் ஆலை அரசர்கள், பெரும் பண்ணைக்காரர்கள், சீமான்கள், கோமான்கள் ஒரு கெட்ட வார்த்தையைக் கண்டுபிடித்து வைத் திருந்தார்கள்! அவர்களது பார்வையில் கெட்ட வார்த்தையாகப் பட்ட அந்தப் பெயர்தான் கருணாநிதி என்பது!

அதிர்ச்சி தரும் செய்தியென்று குறிப்பிட்டேனல்லவா அதுதான் என்னையே முதலமைச்சராக்க வேண்டுமென்று கழகத்தினர் முடிவெடுத்துக் கொண்டு என்னிடம் வந்த தாகும்.

தமிழகத்தில் சோஷலிஸ்ட் கட்சியின் தூண்களில் ஒரு வராக இருந்தவரும், பின்னர் கழகத்தில் இணைந்து மொடக்குரிச்சி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக விளங்கியவருமான ஈரோடு சின்னச்சாமி அவர்கள் தலைமையில் ஒரு பெருங்குழு என்னை வளைத்துக்கொண்டது. பல்வேறு மாவட்டக் கழகச் செயலாளர்களின் தலைமையில் அந்தந்த மாவட்டங்களின் சட்ட மன்ற உறுப்பினர்கள் என் இல்லத்திலேவந்து சூழ்ந்து கொண்டார்கள். அமைச்சர்களில் மதியழகன், சத்தியவாணி முத்து, ஏ. கோவிந்தசாமி, சாதிக்பாட்சா ஆகியோர் முதலமைச்சர் பொறுப்பை நான்தான் ஏற்க வேண்டுமென்று வலியுறுத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர்களும் — குறிப்பாக நாஞ்சில் கி. மனோகரன் (நாஞ்சிலார்) மற்றும் கோவைசெழியன் ஆகியோரும் என்னை விட்டு அகலாமல் என்னருகில் இருந்து கொண்டே கட்சியைக் காத்திட இந்தப் பொறுப்பை சுமந்தே தீரவேண்டுமென்று வாதிட்டனர், வற்புறுத்தினர்.

நாவலர்தான் முதலமைச்சர் எனக் கருதிக்கொண்டிருந்த எனக்கு அந்தப் புதிய திருப்பம், மிகப்பெரும் சோதனையாக அமைந்தது. என் வீட்டாரிடமும், குறிப்பாக என் மருமகன் முரசொலி மாறனிடமும் விளக்கமளித்து அவர்களை விட்டே என்னை ஒப்புக்கொள்ள வைக்கலாமென்று திட்டம் தீட்டினர். பெரும்பாலோரின் கருத்தை நிறைவேற்றாமல் பொறுப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது என்று புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். என்னை அணுகி, இணங்கிடச்செய்ய முயற்சித்தார். மாறனும், வீட்டாரும் மறுத்தது மட்டுமல்ல; நாவலரே முதல்வராக வரவேண்டு மென அவர்களிடம் எடுத்துரைத்தனர். "அவரைச் சிக்கலில் வைக் காதீர்கள்! அவரை முதல்வராக ஆக்குவதை வீட்டில் யாரும் விரும்பவில்லை" என்று எனக்காக என் வீட்டில் உள்ளோர் அனைவரும் வக்காலத்து வாங்கினர்.

"யார் முதல்வராக வரவேண்டுமென்று பெரும்பாலோ ருடன் கலந்து பேசியபோது, கலைஞர்தான் வரவேண்டுமென்று அனைவரும் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நானும், நீங்கள் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினேன். இத்தனைக்குப் பிறகும் அவர் சம்மதிக்கவில்லை. மாறனை அனுப்பி வைத்தார். கலைஞருக்கு முதலமைச்சர் பதவி

வேண்டாம். அவரைத் தொல்லைப்படுத்தாதீர்கள் என்று மாறன் எங்களிடம் சொன்னார். இது கட்சிக்காக, மக்களுக்காக என்று நாங்கள் சொன்னோம்."

1-4-69 சென்னை ஆயிரம்விளக்கில் கே. ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் புதிய அமைச்சரவைக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியதுதான் மேற் கண்ட வாசகம்!

முதல்வர் பதவியைத் தவிர்த்திட இறுதிவரையில் நான் வாதாடினேன் என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் குறிப் பிடுகிறேன். என்னைச் சுற்றி முற்றுகையிட்டவாறு கழகத்தின் முன்னோடிகளும், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர் களும் இருந்த போதுதான் அடையாறு வீரமணி அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்த பெரியார் அவர்கள் என்னை உடனடி யாகச் சந்திக்க வேண்டுமென்று அழைத்தார்கள். பெரியார், என்னை அவர் அமர்ந்திருந்த கட்டிலிலேயே அமர வைத்துக் கொண்டு நீண்ட நேரம் என்னுடன் விவாதித்தார். அவர் எடுத்து வைத்த வாதங்களின் முன்னால் என் பிடிவாதம் சக்தியிழந்து போயிற்று என்று கூறவேண்டும்.

நிலைமையை நாவலரிடம் எடுத்துச் சொல்வதற்காக நான், என். வி. நடராசன், ப. உ. சண்முகம், ஏ. கோவிந்தசாமி ஆகியோர் அவர் இல்லத்திற்குச் சென்றோம். கட்சியில் பெரும் பாலோர் உணர்வுகளையும், சட்டமன்ற உறுப்பினர் கருத்துக்களை யும் விவரமாகக் கூறினோம். "இருந்தால் முதல்வராக இருப்பேன்; இல்லையேல் எந்தஅமைச்சர் பொறுப்பையும் ஏற்கமாட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறினார். துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டினேன். மறுத்துவிட்டார்! "நீங்கள் அமைச்சராகவும் அவை முன்னவராகவும் இருங்கள். சட்டப்பேரவையில் அமரும் போதுகூட நான், உங்களுக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் உட்காருகிறேன்" எனக் கூறினேன்; அதற்கும் நாவலர் ஒப்பவில்லை.

வேறு வழியின்றி; என்னை வற்புறுத்திய நண்பர்களிடம்- என்னை விட்டுவிடுமாறு எவ்வளவோ கேட்டுக் கொண்டேன்.

இரண்டு ஆண்டுக்காலம் அமைச்சர் பொறுப்பில் இருந்த நாவலர் அவர்கள், கட்சியின் அடிமட்டத் தொண்டர்களிட மிருந்து நீண்ட தொலைவு சென்று விட்டார். கல்வித் துறை, தொழில் துறை, அறநிலையத் துறை, மின்சாரத் துறை போன்ற

பெரும் இலாக்காக்களை நிர்வகிக்க வேண்டியிருந்ததால் எதிலும் முழுமையாக அக்கறை காட்ட முடியாத நிலைமை - அண்ணா தலைமையில் அமைச்சராகப் பொறுப்பேற்று பதவி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வந்தபோதே கோட்டும் சூட்டும் அணிந்து கொண்டு நாவலர் வந்ததையே கட்சித் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த உடையையே சாதாரண நாட்களிலும் அவர் அணியத் தொடங்கியதை அண்ணாவேகூட ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் ஒரு நாள் சட்டப் பேரவையிலேயே இடித்துக் காட்டி விட்டார். எனவே, பதவி வந்ததும் எளிமை ஒதுங்கிப்போய் ஒரு வித்தியாசமான புதுமை தலைகாட்டியதை விரும்பாத கழகத்தினர், அவர் முதல்வர் பொறுப்பு ஏற்பதை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தக் குறைபாடுகள் அனைத்தும் திருத்தப்படக்கூடியவை என்று நான் அளித்த விளக்கங்கள் பயனற்றுப் போயின.

9–2–69 அன்று சட்டமன்ற தி.மு.க. கட்சி அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றக் கட்சித் தலைவர் எனப்படும் முதலமைச்சர் பொறுப்புக்கான தேர்தலுக்குத் தலைமையேற்குமாறு அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களை து.ப. அழகமுத்து முன் மொழிந்து கவிஞர் வேழவேந்தன் வழிமொழிந்தார். வேட்பாளர் பெயர்களை முன்மொழியுமாறு கூட்டத் தலைவர் அறிவிக்கவே எனது பெயரை அமைச்சர் மதியழகன் முன்மொழிந்திட, அமைச்சர் சத்தியவாணி முத்து வழிமொழிந்திட்டார். அடுத்து நாவலர் பெயரை சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜே. இராமசாமியும், வி.டி. அண்ணாமலையும் முன் மொழிந்து வழிமொழிந்தனர். உடனே நாவலர் எழுந்து, முதலமைச்சர் பொறுப்புக்கான போட்டியிலிருந்து, தான் விலகிக்கொள்வதாக அறிவித்தார் "முள் முடி" என் தலையில் சூட்டப்பட்டது!

அந்த முடியுடன் அண்ணா சதுக்கத்திற்குச் சென்றேன். கல்லறையை என் கண்ணீரால் குளிப்பாட்டினேன். அங்கிருந்து புறப்பட்டு அண்ணியார் அவர்களின் காலில் விழுந்து வணங்கி வாழ்த்துப் பெற்றேன்.

திருப்பதிக்கு திரு. சஞ்சீவ ரெட்டியார் வீட்டுத் திருமணத்துக்குச் சென்றிருந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்குச் செய்தி கிடைத்தது.

"கருணாநிதியா? மத்திய அரசோடு ஒத்துழைப்பாரா? தகராறு செய்யக் கூடியவர் எனக் கேள்விப்பட்டேனே!"

என்று பிரதமர் அங்கேயிருந்த தலைவர்களிடம் ஐயப் பாட்டுடன் கேட்டதாகத் திருப்பதியிலிருந்து வந்த நெல்லிக் குப்பம் நண்பர் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

அடுத்து சில மாதங்களுக்குப் பிறகு, சென்னையில் ராஜாஜி மண்டபத்திலும், சட்டப்பேரவையிலும் அண்ணாவின் திருவுருவப் படங்களைத் திறந்து வைக்க பிரதமர் வருகை தந்தார்கள். அப் போது அந்த விழா மேடையில் நான்; "என்னைப்பற்றிப் பிரதமர் அச்சவுணர்வோ அல்லது ஐயப்பாடோ கொண்டதாகக் கேள்வி யுற்றேன்! மத்திய அரசுடன் தகராறு செய்வது என்பது எங்கள் நோக்கமல்ல! ஆனால் ஒன்றை நான் தெளிவாகச் சொல்லுவேன்; உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப் போம்" எனப் பேசினேன்.

1969 பிப்ரவரி 10ஆம் நாள் எனது தலைமையில் புதிய அமைச்சரவை பதவி உறுதி மொழி எடுத்துக்கொண்டது.

அதற்கு முன்பு பத்திரிகையாளர்கள் என்னைச் சந்தித்து சரமாரியான கேள்விகளைக் கேட்டனர். கட்சியில் பெரும் பிளவு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு அவர்களது கேள்விகளில் தொக்கி நின்றது.

"மீண்டும் இன்று நாவலர் நெடுஞ்செழியனைச் சந்தித்தீர் களா?"

"இப்போதுகூட அவரைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். முக்கால் மணி நேரம் அவருடன் பேசினேன்!"

"அவரது மனம் மாறலாமா?"

"மாறும் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன்."

"நேற்றுக்கூட அவர் சில காரணங்களைக் கூறியுள்ளாரே; அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?"

"நான் அவரிடம் நிரம்ப மதிப்பு உடையவன். ஆகவே அவர் கூறும் காரணங்களைப் பற்றி நான் எந்த விமர்சனமும் செய்ய விரும்பவில்லை."

"அமைச்சரவை பதவி ஏற்பு எப்படியிருக்கும்?"

"ஆடம்பரமின்றி எளிமையாக இருக்கும். ஆளுநர் மாளிகையிலேயே சிக்கனமாக நடைபெறும். பதவியேற்பு விழாவிற்காவது வருமாறு நாவலரை அழைத்தேன். அதையும் அவர் மறுத்து விட்டார்!"

—இவ்வாறு பத்திரிகையாளர் கூட்டம் நடந்து முடிந்தது. புதிய அமைச்சரவையில், என்னையும் சேர்த்து ஏழு பேர் இடம் பெற்றோம். மதி, ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து. மாதவன், சாதிக்பாட்சா, மா. முத்துசாமி-இது அமைச்சரவையின் முதல் பட்டியல்! பதவியேற்பு முடிந்ததும் தலைமைச் செயலகத்திற்கு அனைவரும் சென்றோம்.

முதலமைச்சர் அறைக்குள் நுழையும்போது தணலை மிதிப்பது போல் கால்கள் நடுங்கின! அண்ணா அமர்ந்திருந்த நாற்காலியைக் கண்டதும் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. எனக்காகக் கொண்டு வரப்பட்ட மாலைகளையெல்லாம் நான் அணிந்து கொள்ளாமல் அவற்றை வாங்கி அண்ணா அமர்ந்திருந்த நாற்காலிக்குச் சூட்டினேன். கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை முறை எங்களையெல்லாம் அந்த அறைக்கு அழைத்து அண்ணா கலந்துரையாடியிருப்பார் என்பதை நினைத்தபோது நெஞ்சம்-செங்கல் சூளையாயிற்று.

தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளையும் பொதுமக்களையும் சந்தித்து விட்டு, அங்கிருந்தே பெரியாரின் வாழ்த்தைப் பெறப் புறப்பட்டோம். வீரமணி அவர்களின் இல்லத்தில் தங்கியிருநத பெரியார், அந்தத் தள்ளாத வயதிலும் முக்கி முனகிக் கொண்டே வாஞ்சை பெருகிட எழுந்து நின்று வரவேற்று வாழ்த்தியதோடு, "என் ஒத்துழைப்பு உங்களுக்கு எப்போதும் உண்டு. நான் நேற்று நாகப்பட்டினம் போயிருந்தேன். அங்கெல்லாம் மக்கள் நீங்கள் தேர்வு பெற்றதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கின்றனர். அனைவரது ஆதரவும் உங்களுக்கு உண்டு" என்றார்.

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களிடம் எனக்கு எப்போதுமே ஒரு தனி மரியாதையும் அன்பும் உண்டு. இந்தியாவின் பொது மொழி எதுவாக இருக்கலாம் என்று அரசியல் நிர்ணய சபையில் ஆரம்ப கால விவாதம் நடைபெற்ற போது இந்தியப்பொது மொழியாக இருக்கக்கூடிய முழுத் தகுதியும் பெற்ற மொழி தமிழ் மொழிதான் என்று குரல் கொடுத்த அந்தக் குணக்குன்றின் உணர்ச்சியை மறக்க முடியுமா? அவரது வாழ்த்தினைப் பெற்றபிறகு ராஜாஜி அவர்களிடம் வாழ்த்து! நான் அந்த மூதறிஞருக்கு அணிவித்த மாலையை அவர் என் கழுத்தில் அணிவித்து என்னைக் கட்டித் தழுவி வாழ்த்து வழங்கினார்.

கவர்னர் மாளிகையில் வந்து தங்கியிருந்த துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்துவிட்டு திருமலைப்பிள்ளை சாலைக்கு வந்தோம். அங்கேதான் பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்த இல்லம். அவரைச் சந்தித்து வாழ்த்து பெற்றபோது, "இயன்ற அளவுக்கு எனது ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும். நன்றாக நடத்தி வாருங்கள்" என்று அவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

பெரியவர் பக்தவத்சலம் அவர்களையும் சந்தித்து அளவளாவி அவரது வாழ்த்துக்களையும் பெற்றோம்.

கருணாநிதி என்ற சொல் ஒரு கெட்ட வார்த்தையென்று ஒரு சில பகுதிகளில் இருந்து குரல் எழும்பினாலும்கூட மூதறிஞர் ராஜாஜியைப் போன்றவர்கள், அவர்களிடமிருந்து தனித்து நின்று கழக அமைச்சரவையை வரவேற்று வாழ்த்தியதை மறக்க இயலாது.

ராஜாஜி அவர்கள் 15 – 2 – 69 "சுயராஜ்யா" இதழில் பின் வருமாறு எழுதினார்

"அண்ணாவுக்கு அடுத்தபடியாகக் கட்சித் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. மு. கருணாநிதிக்கு எனது அன்பான நல்வாழ்த்துகள் தன்மீது சார்ந்துள்ள பொறுப்புகளைப் பொறுத்து அவர் எல்லா வெற்றிகளையும் பெறுவாராக. நேர்மையான நீதியான - திறமையான நிர்வாகமே அவரது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அதுவும் அவரது கட்சியின் வலிவை உயர்த்தும்."

குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த தலைவி திடீரெனக் காலமாகிவிடவே, அவளது மகள் – சிற்றாடை கூடக் கட்டத் தெரியாத சிறுமி – அடுக்களை வேலையிலிருந்து வீட்டாருக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செய்ய முற்படும்போது குற்றங் குறைகள் இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தமாட்டார் அன்றோ? அந்த நம்பிக்கையில்தான், தாயற்ற அந்தச் சிறுமியைப்போல் நான் பெரும் பளுவைச் சுமக்கலானேன்.

புகழ்மிக்க ஆங்கில ஏடுகள் சிலவற்றில் எழுதப்பட்ட தலையங்கங்களும், கட்டுரைகளும் என் பொறுப்பை எனக்கு உணர்த்தி, நான் ஆற்றவேண்டிய கடமைகளையும் நினைவூட்டத் தவறவில்லை.

"மெயில்" ஆங்கில இதழில் பி. ராமசாமி அவர்களின் கட்டுரை வருமாறு.

"டெல்லி வட்டாரத்தில் திரு. கருணாநிதி, ஒரு தீவிரவாதி யென்று கருதப்படுகிறார். மொழி விவகாரம் போன்ற பிரச்சனைக்குரிய விஷயங்களில், கட்சியிலே இருக்கிற தீவிரவாதிகளின் முன்னோடியாக அவர் விளங்குகிறார். இடதுசாரிக் கருத்துடைய வர்களான டெல்லியில் உள்ள அரசியல்வாதிகள், கருணாநிதியின் தேர்வை முழு மனதுடன வரவேற்றிருப்பது ஒரு சுவையான விஷயம்."

"இந்துஸ்தான் டைம்ஸ்" ஆங்கில ஏடு, பின்வருமாறு எழுதியது:

"அண்ணாவின் வாரிசாகக் கருணாநிதி தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது மொழிப் பிரச்சினையில் மறு பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தை மத்திய அரசுக்கு ஏற்படுத்தும் என்று விஷயம் தெரிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தித் தொடர்பு மொழி விஷயத்தில் விட்டுக்கொடுககாமல் எதிர்க்கும் கருணாநிதி, மத்திய அரசின் மொழிக்கொள்கை குறித்து மிகவும் வெளிப்படை யாக, சமரசப் போக்கிற்குச் சிறிதும் இடம் வைக்காத விமர்சக ராக இருந்து வருகிறார் என்பது டெல்லி வட்டாரத்தில் உணரப் பட்டிருக்கிறது."

"அமிர்தபசார் பத்திரிகா" எனும் இதழில் இப்படியொரு கருத்து வெளியிடப்பட்டது. அது, வருமாறு:

"திரு. கருணாநிதி, கட்சியிலே இருக்கிற இளம் தீவிரவாதி களின் அபிமானத்துக்குரிய ஆற்றல் வீரராக விளங்குகிறார். அவர் அண்ணாவின் வாரிசாக ஆகியிருப்பதனால் இந்தி பேசாத மக்களுக்கு அதிக பலனைத் தருகிற மொழிக் கொள்கையை மத்திய அரசாங்கம் விரைவில் மாற்றித் தீரவேண்டிய அவசியம் ஏற்படலாம்."

"ஸ்டேட்ஸ்மேன்" இந்த ஆங்கில இதழில எழுதப்பட்ட கருத்து பின்வருமாறு:

"திரு. கருணாநிதியை சட்டசபைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்ததின் மூலம், தி. மு. கழகம் - ஒரு பலசாலிக்குப் பின்னால் தனது பேதங்களை விட்டொழித்து ஒன்று சேர்ந்து நிற்க வேண்டுமென்பதில் உள்ள அக்கறையைக் காட்டிக் கொண் டிருக்கிறது. திரு. கருணாநிதி, கண்டிப்புக்கும் கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதற்கும் பெயர் பெற்றவர். ஒரு மகத்தான தலைவரை

இழந்து நிற்கும் இந்த மிகச்சோதனையான நேரத்தில், அக்கட்சிக்கு இத்தகைய தலைவர் தேவையானதே என்று டெல்லி வட்டாரத்தில் உணரப்படுகிறது."

மதிப்பு மிகுந்த அந்த ஏடுகள் சூட்டிய புகழாரத்தைக் கண்டு, என்னை நான் மறந்துவிடாமல் அடிப்படை உண்மையொன்றைத் தெளிவாகப் புரிந்துக்கொண்டேன். மொழிப் பிரச்சினை, மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு காண ஆட்சியில் அமர்ந்துவிட்டால் மட்டும் போதாது—ஆட்சியையே இழக்க நேரிடினும் கூட கொண்ட குறிக்கோள்களை நிறைவேற்றிடக் கழகத்தை மேலும் வலுப்படுத்தி வளர்த்திட வேண்டுமென்பதுதான் அந்த ஏடுகள்மூலம் நான் புரிந்துகொண்ட உணர்வாகும்.

அந்த உணர்வின் காரணமாக என்னுடைய பெயர் ஒரு சிலருக்கு "கெட்டவார்த்தை"யாகக்கூட ஆகிவிடலாம். அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத இரு பெரும் தலைவர்களின் கரம் பிடித்து அவர்கள் ஊட்டிய உணர்வினால் வளர்ந்த எனக்கு மட்டும் அதனால் சோர்வு ஏற்பட்டு விடுமா என்ன!



# 5

## சங்கம் சரணம் கச்சாமி!

அரசியல் மேதைகளில் ஒருவரான கே. சந்தானம் அவர்கள் 4-2-69 "இந்து" பத்திரிகையில் ஒரு நீண்ட கட்டுரை எழுதினார். "The Task Before D. M. K. Leaders" என்ற தலைப்பிட்ட அந்தக் கட்டுரையில் தி. மு. க. தலைவர்களின் முன்னேயுள்ள பணி என்ன என்பதை அவர் குறிப்பிட்டிருந்தார். கட்டுரையின் சில பகுதிகளை இப்போது காண்போம்.

"முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் மறைவு, துரதிருஷ்டவசமான ஒன்றாகும். விவேகமும் செயல் நுட்பமும் நிறைந்த தலைவர்கள் நாட்டிலே மிகவும் குறைவாக இருக்கும்போது திரு. அண்ணாதுரையைப் போன்ற திறமையுள்ள ஒருவரின் மறைவு ஒரு பெரிய தேசிய இழப்பாகும் அவருடைய திறமைக்கும் அரசியல் ஆற்றலுக்கும் ஆழ்ந்த அறிவுக்கும் உணர்ச்சி வயப்படாத தன்மைக்கும் பொருத்தமான புகழுரைகளை நாடு முழுவதுமுள்ள தலைவர்கள் செலுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டின் அரசியல் எதிர்காலத்தை சம்பந்தப் படுத்தக் கூடிய பிரச்சினையை உள்ளடக்கிய பெரிய சூழ்நிலை அவருடைய மறைவின் விளைவால் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் உள்ள தி. மு. க. கட்சியும் வெளியிலே உள்ள அதன் அமைப்பும், பண்டித நேரு அவர்களின் மறைவுக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியும் காங்கிரஸ் அமைப்பும் இருந்த நிலையை ஒத்து இருக்கிறது

காங்கிரசுடன் ஒப்பிடும்போது தி. மு. கழகம், புதியதொரு அமைப்பான போதிலும் அண்ணாதுரை அவர்களின் கட்சிச் செல்வாக்கு, நேரு அவர்களின் செல்வாக்கிற்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல. 1967 பொதுத் தேர்தலுக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னால் 1964-ஆம் ஆண்டு நேரு மறைந்தார் என்பதை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும். அவருடைய சக தோழர்கள், அவருக்குப் பின் யார் என்பதிலும் அமைச்சரவை யைத் திரும்ப அமைப்பதிலும் உட்பூசல் சச்சரவு எல்லாம் ஏற் படுமென எண்ணினார்கள். இதன் விளைவு 1967 பொதுத் தேர்தலில் ஏற்பட்ட சீர்கேடான முடிவுகளின் மூலம் தெரிந்தது.

எனவே தி. மு. கழகத்தின் தலைவர்கள், தங்களுடைய கட்சியின் எதிர்காலம் முழுமையான ஒற்றுமையிலேதான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால் 1972-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பே கட்சியிலே ஒற்றுமை யற்ற நிலைமையேற்பட்டு அதனைச் சந்திக்கவேண்டிய சங்கடம் ஏற்பட்டுவிடும்.

இப்போதுள்ள முதலும் முக்கியமானதுமான பிரச்சினை முதலமைச்சராக அடுத்து யார் வருவது என்பது பற்றிய தலைமைத் தேர்தலாகும். அதிலே முக்கிய தேவை அடுத்து வருபவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்க வேண்டுமென்பதோடு தேர்தலுக்குப் பிறகு முழுக்கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றவராகவும் கட்சியை நடத்திச் செல்லக் கூடியவராகவும் இருக்கவேண்டும்.

இருதரப்பையும் திருப்தி செய்வதற்காக அரசுத் தலைமைப் பதவியையும் கட்சித் தலைமைப் பதவியையும் பிரிப்பதற்குரிய மோசமான எண்ணம் ஏற்படலாம். இந்த இரட்டை முறை தான் காங்கிரஸ் அமைப்பைப் பலவீனப்படுத்தியது. ஆகையால் அது தி. மு. க. வுக்கு நடைமுறைத் தற்கொலையாக அமையும். சட்டமன்றத்திலும் கட்சியிலும் எதிர்ப்புக்கு இடமற்ற ஒரே யொரு தலைமை அமைவதுதான் மக்களிடையே ஆதரவை அதிகரிக்க இன்றியமையாத ஒன்றாக இருக்கும்.''

மத்திய அரசுப் பொறுப்பில் இருந்து ஆற்றல் வாய்ந்த நிர்வாகி எனப் பெயர் பெற்றவரும்- அரசியல் அரங்கில் புகழ் வாய்ந்தவரும்-''இந்தப் பிரச்சினை குறித்து இவரது கருத்து என்ன?'' என்று அரசியல் வித்தகர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு அறிவாளியாகத் திகழ்ந்தவருமான திரு. கே. சந்தானம் அவர்களின் எச்சரிக்கையின்படி அடுத்த பொதுத் தேர்தலில்

கட்சியில் ஒற்றுமையற்ற நிலைமை ஏற்பட்டு விடவில்லை யென்றாலும் 1972-ஆம் ஆண்டு அந்த நிலைமை வரவே செய்தது! ஆனால் 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 138 என்பது 185 ஆக உயர்ந்து தமிழக வரலாற்றில் ஒரு புதுமையைச் செய்து காட்டியது கழகம்! அவற்றையெல்லாம் பிறகு எழுதுகிறேன்.

கட்சியில் பெரும்பான்மையோரின் கருத்துப்படி நான் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன் என்றாலுங்கூட பெரும்பான்மை பலத்தையே ஒரு சர்வாதிகார வலிவாக ஆக்கிக் கொள்ள நினைத்திடாமல் எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு ஆட்சியையும், கட்சியையும் நடத்திடவே எல்லா வகையிலும் முயற்சி மேற்கொண்டேன்.

ஒதுங்கியிருக்கும் நாவலரை அறவே கட்சியிலிருந்து ஒதுக்கிவிட வேண்டுமென்று எனக்கு நெருங்கியவர்கள் சிலர் யோசனை கூறினார்கள். அவற்றை நான் காதில் போட்டுக் கொள்ளாதது மட்டுமல்ல; அந்தப் போக்கு மிகத் தீதானது என்றும் கண்டித்தேன். நியாயமாகத் தனக்குக் கிடைத்திருக்க வேண்டிய முதல்வர் பொறுப்பு கிடைக்கவில்லையென்ற மனத் தாங்கல் நாவலருக்கு ஏற்படுவது இயல்பே என்று நான் கருதிய தால் அவரைச் சமாதானப்படுத்திக் கழகத்தை வலுக்குறையாமல் நடத்திச் செல்ல வேண்டுமென்றே முனைந்து செயல்பட்டேன்.

அமைச்சரவையின் இரண்டாவது பட்டியல் வெளியிடு வதற்கு முன்பு அவரை இணைத்துக்கொள்ளலாம் என்று நம்பிக் காத்திருந்தேன். ஆனால் அவரைச் சுற்றியிருந்த சிலர் என் முயற்சிக்குத் தடையாக இருந்து வெற்றி பெற்றுவிட்டனர்.

பிப்ரவரி 13-ஆம் நாள் அமைச்சரவை இரண்டாவது பட்டியல் வெளியிடப்பட்டு பிப்ரவரி 15-ஆம் நாள் பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்வதாக ஏற்பாடுகள் செய்யப் பட்டன. அதற்குள் நாவலர் அவர்களை அமைச்சரவையில் இடம்பெறச் செய்ய நானும் முயன்றேன்! நண்பர்கள் அன்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி, பொன்மலை பராங்குசம் போன்றவர்களையும் அவரிடம் அனுப்பிப் பேசச் செய்தேன்.

இதற்கிடையில் 11-2-69 "விடுதலை" இதழில் தந்தை பெரியார் அவர்களே கையெழுத்திட்டு ஒரு பெரிய தலையங்கமே எழுதினார். அதில் சில பகுதிகளை மட்டும் குறிப்பிட விரும்பு கிறேன்.

"அண்ணா அவர்கள் மறைந்தவுடன் நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. எதிர்காலம் இருட்டாகியிருக்கிறது" என்று கூறி மனவேதனை அடைந்தேன். என்றாலும், இன்று அண்ணா மறைவு தவிர்க்க முடியாதது என்றும், இருட்டு நிலை நீங்கி வெளிச்சம் ஏற்பட்டு வருகிறது என்றும் கருதத்தக்க அளவுக்கு நிலைமை ஏற்பட்டு வருகிறது. அமைதி அடைகிறேன்.

காரணம், அண்ணாவின் மறைவு அண்ணாவின் இரண்டு ஆண்டு ஆட்சிக்கு நம் நாட்டில் எந்த ஆட்சிக்கும் கிடைத்திராத ஒரு மகத்தான பெருமையை அளித்திருக் கிறது என்பதேயாகும். அப்படிப்பட்ட பெருமையான ஆட்சிக்கு அண்ணாவுக்குப் பின் அந்த ஆட்சிபீடத்தில் அமர, கலைஞர் கருணாநிதி அவர்களை ஆட்சிக்குழுவினர் ஏகமன தாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். கலைஞரும் பதவி ஏற்றுக் கொண்டுவிட்டார். அதுமட்டுமல்லாமல் "நான் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடந்துகொள்வேன்" என்று உறுதி கொடுத்தே பதவியில் அமர்ந்திருக்கிறார்.

இதுதான் நான் "இருட்டு வெளிச்சமாகிறது" என்று சொன்னதின் பொருளாகும். கலைஞரின் ஆட்சி மக்களுக்கு அண்ணாவின் ஆட்சி போலவே பாராட்டுதலுக்குரிய ஆட்சி யாகவே நடந்துவரும் என்றே நான் நம்புகிறேன்.

அதனாலேயே தமிழ் மக்கள் அனைவரையும் கலைஞரது ஆட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவு தரவேண்டுமென்று வேண்டிக் கொண்டேன்...வேண்டிக்கொள்கிறேன்...கலைஞர், அண்ணாவை விட யோசனையாளர் ஆனதால் அவர் தமிழர் நலனை-உரிமையை எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்க மாட்டார் என்று எதிர் பார்த்தே தமிழருக்கு உறுதி கூறுகிறேன்.

இந்த நிலையில் நமக்கு ஏற்பட்ட-ஏற்படக்கூடாத கெட்ட வாய்ப்பு என்னவென்றால், நாவலர் அவர்களுடைய ஊடலே யாகும். இந்த ஊடல் முற்றினால் கேடாக-பகையாக முடியுமே என்று கருதித்தான் ஏற்படக் கூடாத காரியம் என்கிறேன்.

மந்திரி பதவி, கலைஞருக்கோ நாவலருக்கோ சொந்த மான பதவிகள் அல்ல. அது தமிழர் சொத்தாகும். நாவலரும் கலைஞரும் டிரஸ்டிகளே. இதை இருவரும் உணர வேண்டு மென்று வேண்டிக்கொள்கிறேன். இதில் உரிமையோ மானமோ பார்க்கக்கூடாது என்பதுதான் என் எண்ணம். பொதுநலத்தில் உரிமையோ மானமோ பார்ப்பது தத்துவப்படி சுயநலமாகும்.

இராஜாஜி அவர்கள் ஒரு காலத்தில் என்னை மந்திரிசபை அமைப்பை ஏற்றுக்கொண்டு, நான் இஷ்டப்பட்டால் தனக்கும் ஒரு மந்திரி பதவி கொடு, என்பதாகக் கேட்டார். அதில் உரிமையையோ மானத்தையோ கருதவில்லை. தன் இனத்துக்கு அதனால் கூடியதைச் செய்யலாம் என்பதுதான் அதன் தத்துவமாகும்.

நாவலர் கலைஞரைவிட மூத்தவர்; இணங்கிப் போக வேண்டிய பிரச்சினை ஏற்படுமானால் அது நாவலருக்குத்தான் கடமையாகும். நாவலர், தனது நிலைக்கு ஆயிரம் சமாதானம் சொன்னாலும், பதவி கிடைக்காததால்தான் ஊடல் கொண்டார் என்று பெரிதும் மக்கள் கருதுவார்கள். இதனால் நான் ஏதோ ஒரு சார்பாய்ப் பேசுவதாக சிலர் கருதலாம். நான் எந்த சார்பாகவும் பேசவில்லை. தமிழர் சார்பாக, பரிதாபத்திற்குரிய தமிழர் நல சார்பாகப் பேசுகிறேன்.

இரு சார்பிலும் தூண்டிவிடுபவர்கள் இருப்பார்கள். அதற்கு ஆளாகாமல் தாங்களே ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு, ஊடல் முறிக்க முந்தியவர்கள் யார் என்று மக்களுக்குத் தெரியாத அளவுக்கு இணங்கி ஒன்றுபட வேண்டிக் கொள்கிறேன்.

ஏனெனில் அதுதான் உண்மைக் காதலுக்கு அறிகுறியாகும். கடைசியாகக் குறிப்பிடுவதற்குக் கலைஞரும் நாவலரும் மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். ஏனெனில் ஊடல் முறியாமைக்குக் காரணம் யார் எதைச் சொன்னாலும் மக்கள் உண்மையை அறிந்து கொள்வார்கள் என்று கூறி முடிக்கிறேன்."

பெரியாரின் வயதென்ன - அறிவென்ன – ஆற்றல் என்ன- அவரிடம் முறையே செயலாளராகவும் குடியரசுத் துணை ஆசிரியராகவும் ஒரு காலத்தில் பணிபுரிந்த நாவலரையும் என்னையும் எவ்வளவு மதித்து, எத்துணைப் பணிவுடன் வேண்டுகோள் விடுத்து விடுதலையில் எழுதினார் என்றால்; ஏன்? எதற்காக? அவரும் அறிஞர் அண்ணாவும் கட்டிக்காத்த இந்த இயக்கத்தின் அடிப்படை உணர்வுகள் ஒற்றுமையின்மையால் சிதைந்து விடக் கூடாது என்பதற்காகத்தானே தவிர வேறில்லை.

பெரியார் குறிப்பிட்டதுபோல நாவலரின் ஊடல் தீரவில்லை. அமைச்சரவை இரண்டாவது பட்டியல் வெளியிடப்பட்டு

பிப்ரவரி 15-ஆம் நாள் ஆளுநர் மாளிகையில் பதவியேற்பும் நடைபெற்றது. அமைச்சர்களுக்குரிய இலாக்காக்களும் அறி விக்கப்பட்டன.

பொது நிர்வாகம், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, சட்டமன்றம், செய்தித்துறை ஆகியவை முதலமைச்சர் பொறுப் பில்!

**அமைச்சர் மதி** -நிதித்துறை, வருவாய்த்துறை, விற்பனை வரித்துறை!

**அமைச்சர் கோவிந்தசாமி** விவசாயம், உணவு, மீன் வளம், காட்டிலாக்கா!

**அமைச்சர் சத்தியவாணிமுத்து** - சுகாதாரம், அரிசன நலத் துறை, சுற்றுலா, அரசு அச்சகத்துறை!

**அமைச்சர்** மாதவன் - தொழில், சட்டம்!

**அமைச்சர்** சாதிக்பாட்சா - பொதுப்பணித்துறை!

**அமைச்சர்** ப. உ. சண்முகம் - தொழிலாளர் நலம்!

**அமைச்சர் ஆதித்தனார்** - கூட்டுறவு, போக்குவரத்துத் துறை!

**அமைச்சர்** முத்துசாமி - உள்ளாட்சித்துறை!

**அமைச்சர் கே. வி.** சுப்பையா - அறநிலையத்துறை, வீட்டு வசதித்துறை!

**அமைச்சர்** ஓ. பி. ராமன் - மின்சாரத் துறை!

பிப்ரவரி 21 -ஆம் நாள் சட்டசபை கூடும் என்ற அறிவிப் பும் வெளியிடப்பட்டு விட்டது. மாற்றார் சிலர் எதிர்பார்த்தது போலக் கட்சியில் பெரும்பிளவு - அல்லது பகையுணர்ச்சி தோன்றாவிடினும்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சலசலப்புகள் தென்பட்டன. அவை பெரிய அளவில் உருக் கொள்ளாவிடினும் கூட, அதுகூடக் கட்சிக்கும் ஆட்சிக்கும் தீமை விளைவிக்குமென்று அஞ்சிய பெரியார் அவர்கள் மீண்டும் "விடுதலை" இதழில் 14-3-69-லும், 15-3-69-லும் இரண்டு தலையங்கங்களைத் தனது கையெழுத்திட்டு எழுதினார்.

"கட்சித் தலைவரின் முதற்கடமை கட்சியின் கவுரவத் தைக் காப்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் கட்சி சாதாரண கட்சியானாலும், நான் உபதலைவரை

நீக்கினேன். காரியதரிசியை நீக்கினேன். அதனால் எனக்கோ என் கட்சிக்கோ ஒரு கெடுதியும் ஏற்பட்டு விடவில்லை.

பொதுமக்களுக்கு ஒன்று மட்டும் சொல்வேன். தி. மு. கழகத்திற்கு உழுதுபயிரிட்டவர் அண்ணாதான். அதற்கு நீர்ப் பாய்ச்சி நல்ல விளைச்சலை உண்டாக்கியவர் கலைஞர்தான். நாளைக்குக் கலைஞர் இல்லாவிட்டால் பதவிக்கு ஏராளமான மெம்பர்கள் கிடைக்கலாமே ஒழிய, கட்சியைக் கட்டிக்காக்க-கட்சி அங்கத்தினர்களில் ஒரு பத்துபேர் ஆதரவை அடைய-அங்கத்தினர் யாரும் இல்லை என்பதுதான் என் கருத்து.

எனவே, இன்று தி. மு. க. கட்சிக்கு வேண்டியது கட்டுப் பாடு, ஒழுங்குமுறை நடவடிக்கைதான்.

தி. மு. க. வினால் மக்களுக்கு ஆகவேண்டிய காரியம் ஏராளமாக இருப்பதால் இதை நானாக-என் சொந்த முறையில் கடமையை முன்னிட்டு எழுதுகிறேன்."

இவ்வாறு 14-ந் தேதி எழுதிய பெரியார், 15-ந் தேதி விடுதலையில் மேலும் சிறிய கவலையுடன் பின்வருமாறு தனது பேனாவை ஓட்டியிருந்தார். அது வருமாறு:

"திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடர் கழகத் தைப் போலவே சமுதாயத் துறையில், அதன் அடிப்படைக் கொள்கையில், வெற்றிப் பாதையில் செல்லுகிறது என்று சொல்லத்தக்க வண்ணம் இருந்து வருகிறது.

ஆகவே திராவிடர் கழகமோ, திராவிட முன்னேற்றக் கழகமோ தனது இலட்சியத்தை-கொள்கையை சிறிதும் குற்றம் குறையின்றி வெற்றி வழியில் பின்பற்றி தொண்டாற்றி வருகிறது.

இதை உலகிற்கு ஒரு புதுமை என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகில், குறிப்பாக இந்தியாவில் சமுதாயத்துறையில் இதுபோலத் தொண்டாற்றிய ஸ்தாபனம் இதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்றே சொல்லலாம்.

நல்ல ஸ்தாபனங்களுக்கு அறிகுறி என்னவென்றால்,

1. முதலாவது தலைவனுக்குக் கீழ்ப்படிதல்;
2. கொள்கைகளுக்குக் கீழ்ப்படிதல்;
3. ஸ்தாபனத்தை கவுரவப்படுத்துதல்;

எந்த உதாரணமாகக் காட்டி இதைச் சொல்லுகிறேன் என்றால் பவுத்த ஸ்தாபன முறையை அனுசரித்து சொல்லுகிறேன்.

1. "புத்தம் சரணங் கச்சாமி"
2. "தம்மம் சரணங் கச்சாமி"
3. "சங்கம் சரணங் கச்சாமி."

பொருள் :

புத்தனுக்கு (தலைவனுக்கு) வணக்கம்.

தம்மம் – கொள்கைக்கு வணக்கம்.

சங்கம் – ஸ்தாபனத்துக்கு வணக்கம்.

இம்மூன்றும் முறைப்படி இல்லாதவர் யாராய் இருந்தாலும் அவர் பவுத்தர் அல்ல. அதாவது ஸ்தாபனத்திற்குக் கட்டுப்பட்டவரல்ல என்பதுதான் பொருள்.

அந்த நிலை ஏற்பட்டால் தமிழன் கதி என்ன ஆகும்? பழிவாங்கும் படலம் தானே? வேறு யார் பதவிக்கு வந்தாலும் ஆட்சி கைப்பற்றப்பட்டாலும் நடைபெறும்.

ஆகவே இன்று தி. மு. க. வில் தலைவரை மதிக்காதவர்கள், நாளை தங்கள் மதிப்பையே இழந்துகொள்ளும் செயலில் ஈடுபட்டவராவார்கள் என்பதை நினைப்பூட்டவே இதை எழுதுகிறேன்."

இவ்வாறு பெரியார் எழுதியதற்கு மறுநாள் பிப்ரவரி 16 தமிழகமெங்கும் அண்ணா நினைவுநாள் கடைப்பிடிக்கப்பட்டது. நானும் அமைச்சர்களும், கழக முன்னோடிகளும், நிர்வாகிகளும் செயல் வீரர்களும் அமைதி ஊர்வலமாக அண்ணா சதுக்கத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்தோம்.

கழகப் பொதுச் செயலாளரான நாவலர் அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளாமல் திருவல்லிக்கேணி தொகுதி சார்பாகத் தனியாக ஒரு அமைதி ஊர்வலம் நடத்தினார்.

ஊடல் தீரவில்லை! ஆனாலும் உணர்வுகள் ஒடுங்கிப்போய் விடவில்லை! அன்று மாலை தியாகராய நகரில் சென்னை மாவட்டச் செயலாளர் நீல நாராயணன் தலைமையில் நடைபெற்ற அண்ணா நினைவு நாள் கூட்டத்தில் நான் பேசினேன். அந்தப் பேச்சின் சில பகுதிகளை இப்போது நினைவு படுத்துகிறேன்.

"அண்ணன் இருந்து அரசோச்சிய இடத்தில் நான் அமர்ந்திருக்கிறேன். அமர்த்தப்பட்டிருக்கிறேன். கைப்பெட்டியில் பல்லாயிரக்கணக்கான ரூபாயை எடுத்துக்கொண்டு ரயில் பயணத்திற்குப் போகிறவன், கைப்பெட்டியைத் தொலைத்து விட்டு அழுது கொண்டிருக்கிறான்.

பின்னர் ஊர்ப் போய்ச் சேர்கிற அளவுக்காவது ஒரு பத்து ரூபாய் நோட்டு தனது சட்டைப் பையில் இருப்பது கண்டு அதை எடுத்து டிக்கட் வாங்கிக்கொண்டு ஊர் போய்ச் சேருகிறான்.

பல்லாயிரக்கணக்கான ரூபாயுள்ள பெட்டியாக- கருவூலமாக இருந்த அண்ணாவை நாம் இழந்தோம். பயணத்திற்குப் பயன்படுகிற பத்து ரூபாய் நோட்டாக மதித்து என்னைப் பயன் படுத்தியிருக்கிறீர்கள்."

தியாகராய நகரில் நான் பேசிய அதே நாளில் தி வல்லிக் கேணியில் அண்ணா நினைவு நாள் கூட்டத்தில் பொதுச் செயலாளரான நாவலர் பேசினார்! சென்னையில் இரு வேறிடங்களில் கூட்டங்கள்! பேசப்பட்ட சொற்கள்; பிளவு மனப் பான்மையை வளர்க்கவில்லையென்றாலுங்கூட - ஒரே நாளில் முதலமைச்சர் ஒரு கூட்டத்தில் - பொதுச் செயலாளர் மற்றொரு கூட்டத்தில் என்பது - சென்னை நகரில் மட்டுமல்ல; தமிழக முழுவதற்கும் வியப்பு கலந்த வேதனையைத்தான் தந்தது.

ஆனாலும் நாவலர் அவர்கள் மிகுந்த பொறுப்புடன் எச்சரிக்கையாகவும், எதிரிகளுக்கு இடம் தந்துவிடாமலும் அந்தக் கூட்டத்தில் பேசினார். அவரது பேச்சின் முக்கிய பகுதிகளாவன:

"நான் 1944-ஆம் ஆண்டில் கழகத்தில் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து இதுவரை எதற்கும் இடையூறாக இருந்தவன் அல்ல. கட்டுப்பாட்டை ஒரு போதும் மீறியவன் அல்ல.

ஆனால் அண்ணா அவர்கள் மறைந்த பின்னர் ஒரு நிலைமை மாற்றம் வரும், சூழ்நிலை வரும் என்று தெரிந்தவுடனேயே அந்த முயற்சிக்கு இடையூறாக இல்லாமல் மாறுபட்ட எண்ணத்திற்கு இடம் தராமல் ஒதுங்கிக்கொண்டேன்.

சகஜமான நிலையில்தான் தி. மு. க. சட்டமன்றத் தலைவர் தேர்தலும் நடைபெற்றது.

எனக்கோ, கலைஞர் கருணாநிதிக்கோ எள்ளளவும் ஒரு சிறிய கருத்து வேறுபாடும் இல்லை. இன்றைக்கும் இல்லை.

என்னுடைய முழு மதிப்பிற்குரிய தன்மையில்தான் கலைஞர் அவர்கள் இருந்து வருகிறார்கள்.

தி. மு. க. சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தல் நடந்த போது, நாம் அறிஞர் அண்ணாவை இழந்து அழுத கண்ணீரைத் துடைக்க முடியாமல் இருந்தோம்.

அப்போது கலைஞர் கருணாநிதியைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற யோசனை வந்தபோது அவர் வருவதானால் ஏகமனதாக வரட்டும் என்று கூறினேன்.

நான் அமைச்சரவையில் அங்கம் வகிக்க முடியாத சில சங்கடங்களின் சூழ்நிலை ஏற்பட்டது.

அதற்குரிய காரணங்களை நான் உள்ளத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர பத்திரிகைகளுக்கோ பொது மக்களுக்கோ தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை; வேண்டு மானால் நாங்களே பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று தான் நினைத்தேன்.

67-ல் அமைச்சரவை அமைக்கப்படும்போது பலர் அமைச்சரவையில் இடம் கேட்டார்கள் அப்போது நான் அண்ணாவிடம் நான் அமைச்சரவைக்கு வெளியே இருக்கிறேன், என்னை விட்டு விடுங்கள், மற்றவர்களுக்குக் கூட நெடுஞ்செழியனுக்கே தரவில்லை என்று கூறிச் சமாதானப்படுத்த லாம் என்றேன்.

கலைஞர் கருணாநிதியும் அவ்விதமே என்னையும் விட்டு விடுங்கள் என்று கூறினார். இதை அண்ணா அவர்கள் தி. மு. க. சட்டமன்றக் கட்சிக் கூட்டத்திலேயே கூறியிருக்கிறார்.

அண்ணா அவர்கள் மறைந்தவுடனே ஒரு போட்டி என்றால் சரியில்லை; ஐந்து பேர்தான் ஆதரிக்கிறார்கள் என்றாலும் அந்தப் பிளவு வளர்ந்து கட்சியில் சரிவு ஏற்படக்கூடாது. அண்ணாவுக்குப் பிறகு கட்சியை மேலும் வளர்க்க நம்மால் முடியாவிட்டாலும் - அவர் வளர்த்திருந்த அளவுக்காவது வைத்திருக்க வேண்டும் என்ற காரணத்தால் நான் ஒதுங்கிக் கொண்டேன்.

நமக்கிருக்கும் கடமை எல்லாம் - அண்ணா அவர்கள் அமைத்த அரசைத் தொடர்ந்து கட்டிக்காப்பதுதான்!

கலைஞர் கருணாநிதியிடம் எனக்குத் தனிப்பட்ட முறையில் மதிப்பு உண்டு.

கலைஞர் அவர்களின் அறிவையும், ஆற்றலையும், உழைப்பையும் நான் குறைத்து மதிப்பிடுபவன் அல்ல.

கட்சிக்காக கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர் கலைஞர்.

எனக்குப் பேச - எழுதத்தான் தெரியும்.

ஆனால் கலைஞர் அவர்களுக்குக் கதை எழுதத் தெரியும் - நாடகம் எழுதத் தெரியும் - கவிதை எழுதத் தெரியும் - நடிப்பாற்றலும் உள்ளவர்.

ஒருமுறை கலைஞர் பிறந்த நாள் விழாவில், நான் கட்டுரை எழுதினேன்.

அறிவு - ஆற்றலில் - எழுத்து - பேச்சு - நடிப்பு - சினிமா - நாடகம் போன்ற துறைகளில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அடுத்தபடியாகக் கலைஞர்தான் என்று எழுதினேன்.

கலைஞர் கூட என்ன இப்படி எழுதி விட்டீர்களே என்று கேட்டார்.

ஆகவே அவருக்கும் எனக்கும் எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு யாரும் எதையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

எதிர்க்கட்சிக்காரர்கள் என்னைப் பற்றி எழுதுகிறார்கள் என்றால் கட்சியின் மீதுள்ள நல்ல எண்ணத்திலா எழுதுகிறார்கள்? ஏதாவது பிளவு, சரிவு ஏற்படாதா என்று நினைத்து எழுதுகிறார்கள். அந்தப் பத்திரிகைகளைக்கூட நண்பர்கள் வாங்கக் கூடாது.

கலைஞர் கருணாநிதிக்கும் எனக்கும் நெருக்கம் அதிகம். வேறு சிலரைக் கண்டால் கூட நான் ஒதுங்குவேன். 25 ஆண்டுகளாக நானும் அவரும் ஒருமனதாகவே இருந்து வருகிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு இரண்டு ரூபாய் அனுப்பி என்னைப் பேச அழைத்தவரே கலைஞர் கருணாநிதிதான்.

நாமும் வெளியூர் சென்று பேசப் போகிறோம் என்று பெருமையுடன் ரயிலில் ஏறி நான் புறப்பட்டதே கலைஞர்

கருணாநிதியால்தான். அத்தகையவருடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு இன்றும் மாறவில்லை.

கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கும் போது நான் போட்டி வேண்டாம் என்று ஒதுங்கினேன். அமைச்சரவையில் சேர்வது என்பது அவரவரின் தனிப்பட்ட விருப்பம்.

இப்போதுள்ள அமைச்சரவையில் தனக்கு நம்பிக்கை யானவர்களைச் சேர்த்துக்கொள்வது இப்போதுள்ள முதலமைச் சரின் உரிமை. அதுபோல் அமைச்சரவையில் சேராமல் இருப்ப தும் எனது உரிமை. ஆகவே இது எந்த வகையிலும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவது ஆகாது.

ஆகவே கழகத் தோழர்கள் எந்த வித பூசலுக்கும், பிளவுக்கும் இடம் கொடுக்காமல் "அண்ணா அமைத்த தி. மு. க அரசைக் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்போடும் இயங்கிட வேண்டும்."

நாவலரின் இந்தப் பேச்சுக்குப் பிறகும், ஏதாவது வெடிக்கும் என்றே மிகுந்த ஆவலுடன் சிலர் கட்சியின் ஒவ்வொரு அசைவையும் மிக உன்னிப்போடு கவனித்துக் கொண்டிருந்தனர்.



# 6

## மாலையும் கயிறும்!

பரந்து விரிந்த வானில் நட்சத்திரங்கள் மின்னுவதைப் போல் அந்தப் பந்தலில் மின்விளக்குகள் என வர்ணித்துக் கூறும் போது பந்தலே, பரந்த வானமாகிவிடாது! வான்வில்லைப் போல வளைந்த புருவங் கொண்ட வனிதாமணி என்கிறபோது, அந்தப் புருவங்கள் வானவில்லாகவே மாறி விட மாட்டா!

சில பெரிய தலைவர்கள், சிறந்த மனிதர்களின் வாழ்வில் தொடர்புடைய நிகழ்ச்சிகளைப்போல் என் வாழ்விலும் சில நிகழ்ச்சிகள் ஒப்பிடத்தக்க அளவுக்கு இருப்பதாக நான் குறிப்பிட நேர்ந்தால் என்னையும் நான் அவர்களின் அளவுக்கு ஆணவத்தோடு உயர்த்திக்கொள்வதாக யாரும் எண்ணிட வேண்டாம்! நிகழ்ச்சிகள் அல்லது செய்திகளின் ஒற்றுமைக்காக மட்டுமே அவற்றை எழுதுகிறேன் என்பதை அடக்கத்துடன் அறிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் சீமான்களும், பூமான்களும் கூடுகிற சில ஆடம்பரமான உல்லாச இடங்களில், நான் பதவியேற்றது பற்றிய விமர்சனங்கள் வெளிவந்ததாக என் செவிகளுக்குச் செய்தி எட்டியது. வெளிநாட்டுப் பிரபுக்களைப்போல பெருத்த உருவமும், அணிமணிகளும் பூண்ட தமிழ்நாட்டுத் தொழில் அதிபர் ஒருவர் இரவுநேர விருந்து மண்டபமொன்றில் என்னைப் பற்றி எரிச்சலோடு கூச்சலிட்டபோது "அண்ணாதுரை இரண்டு வருஷம்தான் ஆள முடிந்தது! அதைபபோலக் கருணாநிதியின் ஆயுளும் இரண்டு வருஷத்துக்குள் முடிந்துவிடும்!" என்று "வாழ்த்து" பொழிந்ததாக மறுநாள் காலையில் எனக்குத் தகவல் வந்தது!

ஆனால் நிலைமை, வேறு விதமாக இருந்தது. என்னை வாழ்த்தியவரின் வாழ்வுதான், அதன்பிறகு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் முடிந்துவிட்டது.

அதனால் எனக்கு ஏதோ அருளோ அல்லது சக்தியோ இருப்பதாக யாரும் தவறாகக் கருதித் தடுமாறத் தேவையில்லை. அத்தகைய மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறியும் கூடாரத்தி லிருந்து பயிற்சி பெற்று ஆட்சிப்பொறுப்புக்கு வந்தவன் நான் என்பதை மறந்துவிடவில்லை. இந்த நிகழ்ச்சியைக்கூடக் குறிப் பிடுவதற்குக் காரணம்; மாளிகைவாசக் கனவான்களின் உள்ளத் தில் - ஆட்சிப் பொறுப்புக்கு நான் வந்தது எத்துணை ஆத்திரத்தை எழுப்பியிருந்தது என்பதற்காகத்தான்!

இங்கிலாந்தின் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜ் முதலில் நிதி அமைச்சராகப் பதவிப் பொறுப்புக்கு வந்தபோது, சர்கான் பிரபு என்ற ஆங்கிலேயச் சீமான், லாயிட் ஜார்ஜ் ஒரு சாதா ரணக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குத்திக்காட்டும் வகையில். உலகத்தில் நற்செயல்களும், நல்ல திட்டங்களும் சீமான்களாகப் பிறந்தவர்களால்தான் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன!'' என்று குறிப்பிட்டார் எனக் கேள்விப்பட்டதும் லாயிட் ஜார்ஜ், பின்வருமாறு அதற்குப் பதில் அளித்தார் என ஒரு செய்தி உண்டு.

''சர்கான் பிரபுவுக்கு அவர் வீட்டிலேயே மாட்டப்பட்டிருக் கும் ஏசு கிறிஸ்துவின் படம் கண்ணுக்குத் தெரிவதில்லை போலும்! கலேலியா கடற்கரையில் சாதாரணக் குடியிற் பிறந்த சாமான்யர்களான பனிரெண்டு மீனவர்களால் தான் கிறிஸ்துவ மதம் உலகெங்கும் பரவியது என்பதைவிட பனிரெண்டு பிரபுக் களால் அது பரப்பப்பட்டது என்று இருக்குமானால் சர்கான் பிரபு அதிக மகிழ்ச்சியில் குதித்திருக்கக் கூடும்! ஆனால் பாவம்; வரலாறு அவர் விரும்புவதுபோல அமையவில்லை.!"

ஓய்வு மல் உழைத்து, உயிருக்கு அஞ்சாமல் கடமையாற், தியாகங்கள் பல செய்து, தன்னலம் மறந்து, அடக்கு முறைகளைப் புன்னகையுடன் ஏற்ற காரணத்தால் எத்தனையோ சாமான்ய குடும்பத்தினர் மக்களின் இதயச் சிம்மாசனத்திலே இடம் பெற்ற துண்டு.

பணம், பகட்டு, ஆடம்பரம், அதிகார வலிவு, இவைகள் பக்கபலமாக அமைந்துவிட்ட காரணத்தினாலேயே மக்களின் தலையிலேறி உட்காரக்கூடிய வாய்ப்புப்பெற்ற எத்தர்களும் உண்டு. அந்த எத்தர்களை இனிய நண்பர்களாக ஆக்கிக்

கொள்ளும் பரந்த இதயம் படைத்த பணக்காரப் பிரபுக்கள், இடதுசாரி சக்திகளாக வளருகிற எந்தவொரு மனிதனையும் அழித்து ஒழிப்பதற்குத் தங்கள் கையில் கிடைத்த ஆயுதங்களை யெல்லாம் பயன்படுத்தியே தீருவர்!

இங்கிலாந்தின் ஜனநாயகத்தில் இடம் கிடைத்தபிறகும் லாயிட் ஜார்ஜ் போன்ற ஆற்றலாளர்களையே சர்கான் பிரபுக்களைப் போன்றவர்களின் ஏசல்கணைகள் மோதிப் பார்த்தன என்றால், மிகச் சாதாரணக் குடும்பத்தில் - குடிப்பெருமையோ குலப்பெருமையோ இல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்த என்னைச், சீமான்களின் முகாம் ஏற்றுக் கொள்ளுமா? புறக்கணிக்கத்தானே செய்யும்! ஆனால் ஒன்று - அந்தப் புறக்கணிப்புத்தான் எனக்கு இயற்கையாகக் கிடைத்த பெருமையென்று நான் கருதி மகிழ்ச்சி கொண்டேன்.

வரலாற்றில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சுதந்திரம் பெற்ற இந்தியத் திருநாட்டில், தமிழகம்; சென்னை மாகாணமாக இருந்தபோதும் சரி - சென்னை மாநிலமாக ஆனபிறகும் சரி - அண்ணா அவர்களால் தமிழ்நாடாகப் பெயர் பெற்ற இந்த மாநிலத்தில் முதன் முதலாக நாற்பத்தி ஐந்து வயதுடைய ஒருவர் ஆட்சித் தலைமைப்யேற்றது நான்தான் என்று சொல்லப்பட்ட போதும், அதனை எண்ணிப் பார்த்த போதும் ஒருவகையான அச்சம் என்னை ஆட்கொள்ளத்தான் செய்தது!

நான் பதவியேற்ற பிப்ரவரி பத்தாம் நாள் பாகிஸ்தான் சிறையில் இருந்து பூட்டோ விடுதலை செய்யப்பட்டார். பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான், பூட்டோவை 1968-ல் கைது செய்து லாகூர் சிறையில் அடைத்திருந்தார். அயூப்கான் 1958-ஆம் ஆண்டு ராணுவப் புரட்சியை நடத்தியதின் மூலம் பாகிஸ்தானின் ஜனாதிபதி மிர்சாவை வீழ்த்திவிட்டு ஆட்சியைக் கைப் பற்றியவர்.

அந்த ராணுவ தளபதி, பிறகு தன்னைத்தானே ஜனாதிபதி யாக நியமித்துக்கொண்டு 1964-ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றி பெற்றவர். பத்தாண்டு காலம் எதிர்ப்பே இல்லாத ஆட்சியை நடத்திய அயூப்கானை எதிர்த்த பூட்டோ சிறையில் அடைபட்டதையொட்டி பாகிஸ்தானில் பெருங் கிளர்ச்சி மூண்டது. அந்தக் கிளர்ச்சியில் மாணவர்கள் பெரும்

பங்கு கொண்டனர். தன்னை விடுதலை செய்யாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று பூட்டோ அறிவித்தார்.

கிளர்ச்சி, எரிதழலாக உருவெடுத்திடவே - வேறு வழியின்றி அயூப்கான் பூட்டோவை விடுதலை செய்ததோடு அவசர நிலைப் பிரகடனத்தையும் ரத்து செய்தார். பாகிஸ்தான் கலவரங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அதனை வெளிப்படையாகவே அறிவித்துவிட்டு ராணுவ தளபதி யாகியாகானிடம் ஆட்சியை ஒப்படைத்துப் பதவியிலிருந்து விலகினார் அயூப்கான்!

பூட்டோ சிறையில் அடைபட்டதற்கே பொங்கும் எரிமலையானது பாகிஸ்தான்! பிறகு அதே பூட்டோ பாகிஸ்தானையே கட்டியாளும் தகுதியும் பெற்று அதன்பின்னர் நடைபெற்ற புரட்சியில் கைது செய்யப்பட்டு அதிபர் ஜியாவின் ஆட்சியில் தூக்கிலும் தொங்கவிடப்பட்டுத் துடித்துச் செத்தபோது பாகிஸ்தான் மக்கள் தங்கள் துடிப்பைக் காட்டிக்கொள்ள முடியாமலே அடங்கிக் கிடந்தனர்! இதுதான் அரசியல் வரலாற்றின் விசித்திரமான அத்தியாயங்கள்! தடுத்து நிறுத்த இயலாத புயல் காற்று மண்டிலங்கள்!

அரசியல் - பொது வாழ்வு - போராட்டம் என்றெல்லாம் ஈடுபட்டு விட்டால் எதற்கும் தயாராகத்தான் இருக்கவேண்டும் என்பதை ஆண்டாண்டு காலமாகச் சரித்திரம் எழுதிக் காட்டிக் கொண்டுதானே இருக்கிறது.

கழுத்தை அலங்கரிக்க மாலைகள் மட்டும் விழாது கழுத்தை இறுக்கிடும் கயிறும் விழும்! இரண்டையும் ஒன்று போலக் கருதுகிறவன்தான் உண்மையான தலைவனாகவோ - உண்மையான உலகத் • தளபதியாகவோ தொண்டனாகவோ இருக்க முடியும். இந்த உண்மையை இளம் பருவத்திலேயே நெஞ்சில் பதிய வைத்துக்கொண்டு அரசியலில் அடியெடுத்து வைத்துவிட்ட எனக்கு "முதலமைச்சர்" என்ற கிரீடம் ஒருபோதும் ஆணவத்தை ஏற்படுத்தியதில்லை.

தமிழ் மக்களுக்குப் பணியாற்ற நான் தலையில் சுமந்திருக்கும் கிரீடத்தை வேண்டுமானால் யாராவது பறித்துக்கொள்ள முடியும்; ஆனால் என் கையில் இருக்கும் போர்வாளை எவராலும் பறித்திட முடியாது என்ற உறுதியுடன் கோட்டைப் படிகளில் ஏறினேன், கோலோச்சிட!

அண்ணாவை இழந்து அழுது அழுது தமிழ் மக்களின் கண்ணீர் வற்றிவிட்டதைப் போலவே - வானத்து முகிற்கூட்டமும் வடிப்பதற்குக் கண்ணீரின்றிப் புலம்பியதால் வறட்சி துயர் தமிழகத்தைக் கப்பிக்கொண்டது.

"மந்திரிசபை விஸ்தரிப்பு பற்றித் தயக்கம் காட்டிக்கொண்டிருக்காமல் விரைவாக முடிவெடுத்த முதலமைச்சர் கருணாநிதியைப் பாராட்டுகிறேன். விரைவான முடிவுகளை எடுக்கக் கூடியவர் எனக் கருதப்படுகிறவர் தற்போதைய முதலமைச்சர். மந்திரிசபை விஸ்தரிப்புக்கு அவர் எடுத்துக்கொண்ட காலம் அதை உறுதிப்படுத்துகிறது. இனி அரசாங்கம் எடுக்கப்போகும் முடிவுகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக அமையுமென்று நம்புகிறேன்."

இவ்வாறு முன்னால் முதல்வர் பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் ஒரு அறிக்கையில் தெரிவித்திருந்தார். பிப்ரவரி 15-ஆம் நாளுக்குள் அமைச்சரவை அமைப்பு முழுமை பெற்றுவிட்டதும், பிப்ரவரி 17 - ஆம் நாள் அதிகாரிகளும், அமைச்சர்களும் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டி, வறட்சித் துயர் தணிப்புக் காரியங்களை உடனடியாகத் தொடங்கிட ஒரு கோடியே ஐம்பத்தி ஏழு லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டது. பிப்ரவரி 21 - ஆம் நாள் சட்டமன்றம் கூட்டப்பெற்றது. முதல் நாள் அண்ணா மறைவு குறித்து இரங்கல் தீர்மானத்துடன் மறுநாளைக்கு மன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. மறுநாள் பிப்ரவரி 22-ல் புலவர் கோவிந்தன் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சங்க இலக்கியங்களையும், தமிழக வரலாற்றையும் ஆய்வு செய்து நூல்கள் பலவற்றை வெளியிட்டவரும், இயக்கத்தில் இரண்டறக் கலந்து தமிழகப் பண்பாட்டினையும், தமிழ் உணர்வினையும் பரப்பிடத் தொடர்ந்து பணியாற்றுகிறவருமான ஒரு புலவர் பெருமகன் சட்டப்பேரவையின் தலைவராக அமர்ந்தது தனிச் சிறப்புக்குரிய ஒன்றாக அமைந்தது.

முதல் சட்டமன்றத் தொடர் கூட்டத்திலேயே தமிழக வறட்சி நிலை குறித்து விவாதிக்கப்பட்டு, மத்திய அரசின் உதவியை வலியுறுத்தி அரசின் சார்பிலேயே தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளித்த நான் "இருந்த போது கொடுத்தோம், அது எமது கடமை; இல்லாத போது கேட்கிறோம். இது எமது உரிமை!" என்று குறிப்பிட்டேன். போர்க்கால

நடவடிக்கை போல வறட்சிப் பணிகள் முடுக்கிவிடப்பட்ட விபரங்கள் பேரவை, மேலவைகளில் அறிவிக்கப்பட்டன.

அமெரிக்காவிலும், தமிழகத்திலும் அண்ணாவுக்கு அளிக்கப் பட்ட சிகிச்சைக்கான செலவினங்களை அரசாங்கம் ஏற்பது தவறில்லை என்ற வாதத்தை அண்ணா ஏற்றுக் கொள்ளவில்லை. கழகச் சார்பில் நிதி வசூலித்து அதனை அரசுக்குச் செலுத்திவிட வேண்டுமென்று அண்ணா அப்போதே எனக்குக் கட்டளை யிட்டிருந்தார். அதனை நிறைவேற்றும் வகையில் தலைமைக் கழகச் சார்பில் அரசுக்குச் செலுத்தப்பட்ட தொகை குறித்த கணக்கு விபரங்களைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கருத்திருமன் அவர்கள் கேட்டார்கள்.

"அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தமிழக அரசு செலவு செய்த சிகிச்சைக்கான தொகையை தி. மு. க. தலைமை நிலையம் கட்டிய வகையில் முதலாவதாக 12-9-68 அன்று ரூபாய் 38, 770-ம் 21 காசும் திரும்பச் செலுத்தப்பட்டது. இரண்டாவ தாக 26-12-68 அன்று ரூபாய் 94,752-ம்74 காசும் திரும்பச்செலுத்தப் பட்டது. ஆக மொத்தம் ஒரு லட்சத்து முப்பத்தி மூன்றுயிரத்து ஐநூற்றி ஐம்பத்திரண்டு ரூபாயும் தொண்ணூற்றி ஐந்து காசு களும், தி. மு. க. சார்பில் திரும்பச் செலுத்தப்பட்டுள்ளது."

என்ற விளக்கத்தை அவையில் நான் அளித்தேன்!

1977-ல் தமிழ் நாட்டில் அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வைத்துக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் சொந்த வீட்டில் குடியிருந்து கொண்டே மாத வாடகையாக இரண்டாயிர ரூபாயை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்டு-அதுவும் கடந்துவிட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் தேதியிட்டு மொத்த வாடகை பெற்றுக் கொண்ட அவலத்தை அரங்கேற்றிய காட்சியைக் காணும்போது, அண்ணா அவர்கள் தனது சிகிச்சைத் தொகையைக் கூட அரசுக்குத் தந்துவிட முன்வந்ததையும், அதற்குக் கழகச் சார்பில் நிதி திரட்டிப் பணத்தைத் திருப்பித் தந்ததையும் நினைத்துப் பெருமூச்சு விடாமல் இருக்க முடியுமா?

சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிவுற்றபோது, பழம் பெரும் விடுதலை வீரரும்-தியாகியும்-சட்டமன்ற உறுப்பினருமான கோமதி சங்கர தீட்சதர் அவர்களுக்கு எண்பது வயது நிறைவை யொட்டி அரசின் சார்பில் பாராட்டு விழா ஒன்று ராஜாஜி மண்ட பத்தில் நடத்தப்பட்டது.

மேலவைத் தலைவராக இருந்த திருவாளர் மாணிக்கவேலு நாயக்கர் தலைமையில் அந்த விழாவில் தீட்சதர் அவர்களுக்கு நான் பொன்னாடை போர்த்திப் பாராட்டினேன். அனைத்துக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் வாழ்த்திப் பேசினர். ஆஷ் துரையைக் கொல்வது யார் என்று சீட்டுக் குலுக்கிப் போட்ட போது அந்தச் சீட்டில் கோமதி சங்கர தீட்சதர் பெயரும் இருந்ததாம்! ஆனால் குலுக்கலில் வாஞ்சிநாதன் பெயர் எடுக்கப்பட்டதால் அந்தச் செயலுக்கு அவர் சென்றிட நேரிட்டது! சீட்டு மாறி எடுக்கப்பட்டிருந்தால் வாஞ்சிக்குப் பதிலாக கோமதி சங்கரர் பெயரே வரலாற்றில் இடம் பெற்றிருக்கும். அத்தகைய உறுதியும் திடமும் கொண்ட அந்தத் தியாக வாலிபரை அந்தத் திடகாத்திரத் தேகத்துடன் நான் காண நேரிடாவிட்டாலும் எண்பது வயதிலும் எஃகு உள்ளம் படைத்த முதுபெரும் வீரராக அவரைக் கண்டு பூரித்தேன்! வாழ்த்தினேன்! வணங்கினேன்! பிறகொருமுறை அவரது சொந்த ஊருக்கே கூட சென்று மரியாதை செலுத்தி வந்தேன்.

தீட்சதர் பாராட்டு விழாவுக்குப் பிறகு, வறட்சித்துயர் துடைக்க எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென விவாதிக்க அமைச்சரவை கூடிற்று. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைச் சென்னையில் கூட்டி வறட்சி நிலை குறித்து கருத்தறியப்பட்டது.

"பாதகங்களையும் சாதகங்களாக்கிக் கொள்ளப் பணி தொடர்வோம்!" என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பிரகடனம் செய்தேன். நீர்வற்றிப் போயிருக்கும் நேரம்தான் ஏரிகளின் கரைகளை உயர்த்தவும், தூர்வாரி ஆழப்படுத்தவும் ஏற்ற நேரம்-அந்தப் பணியைச் செம்மையாகச் செய்து முடித்துவிட்டால் பின்னர் மழை பொழியும்போது ஏரிகளின் கொள் அளவு அதிகமாகும் என்பன போன்ற பல கருத்துக்களை எடுத்துரைத்தேன்.

துயர் தணிப்புப் பணிகளுக்காக மேலும் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. வறட்சி நிலைமைகளை விவரித்து உடனடி உணவு தானியமும், நிதி உதவியும் கோர நிதியமைச்சர் மதியழகன் அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்களும் டெல்லிக்கு விரைந்தனர். மத்திய அரசு, அவர்களது கோரிக்கையை ஏற்று உடனடியாக இருபதாயிரம் டன் அரிசியை வழங்க முன் வந்தது.

இதற்கிடையே 9-3-69 அன்று புதுவை மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி. மு. கழகம் 15 இடங்களையும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி 3 இடங்களையும், சுயேச்சைகள் 2 இடங்களையும், காங்கிரஸ் 10 இடங்களையும் பெற்று-தி. மு. க.-கம்யூனிஸ்டு கட்சிகளின் கூட்டணி அரசு உருவாயிற்று! காங்கிரசின் வலிமை வாய்ந்த தலைவரான வெங்கடசுப்பா ரெட்டியாரை கழக வேட்பாளர் டி. ராமச்சந்திரன் தோற்கடித்தது பெரும் சாதனையாகப் புகழப்பட்டது!

காலையில் ஒரு முதல்வர்-மாலையில் ஒரு முதல்வர்-என்று நிலையற்ற ஆட்சிகளைக் கண்டு களைத்துப் போயிருந்த புதுவை மாநிலத்தில் முதல் முதலாக ஒரு நிலையான ஆட்சியைத் தந்த பெருமை தி. மு. க.-கம்யூனிஸ்டு கூட்டணி அரசுக்கே உண்டு! அந்த வெற்றிக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீகும் துணை நின்றது! கழகத்தைச் சேர்ந்த நண்பர் பரூக் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றார். நண்பர்கள் இராமசாமி, டி. ராமச்சந்திரன், ஆறுமுகம் ஆகியோர் கழக அமைச்சர்களானார்கள். நண்பர் சுப்பையா அவர்கள் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் அமைச்சரானார். 1967-ல் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றம், 1969-ல் புதுவையிலும் ஏற்பட்டது.




# 7

## வெண்மணி வேதனை

ஒரு பேரிழப்புக்குப் பிறகு, சோகத்தைச் சுமந்து கொண்டு-மக்கள் அளித்த பொறுப்பினை நிறைவேற்ற அடியெடுத்து வைத்த தொடக்கத்திலேயே- முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே-காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியினர் கடுமையான விமர்சனங்களில் இறங்கிக் கழக அரசைச் சாடினர்.

*1969* பிப்ரவரி *21*-ஆம் நாள் சட்டமன்றம் கூட்டப்பட்ட போது என் தலைமையில் உருவான புதிய அமைச்சரவைக்கு ஒரு மாத வயதுகூட நிறையவில்லை. இருந்த போதிலும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் உறுப்பினர் ஜெயராஜ் என்பவர் அரசின் மீது ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். கீழ் வெண்மணி நிகழ்ச்சிக் குறித்த கண்டனத் தீர்மானம் அது!

கீழ்வெண்மணி நிகழ்ச்சி, ஒரு சமுதாயக் கேடு! ஆதிக்க வெறியர்களின் கோரபற்களுக்கும், கூரிய நகங்களுக்கும் கிடைத்த தீனி! நிலப்பிரபுத்துவத்திற்கும், விவசாயத் தொழிலாளி வர்க்கத்திற்கும் ஏற்பட்ட மோதுதலில் மூண்ட நெருப்பில் *1968*-ஆம் ஆண்டு *42* உயிர்கள் கருகிச் செத்துச் சாம்பலாயின!

அத்தனையும் ஆதி திராவிட விவசாயத் தொழிலாளர் வீட்டு உயிர்கள்! பெண்கள் 25 பேர்! பிஞ்சுகள் 14 பேர்! ஆண்கள் 3 பேர்!

நிலப்பிரபுக்களின் ஆதரவாளரான பக்கிரிசாமி என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து காவல்துறை, வழக்கு மன்றமெனச் சென்றிருக்க வேண்டிய நிலப்பிரபுக்கள் சிலர், அதற்கு மாறாகச் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு-காட்டுமிராண்டிகள்கூடச் செய்திடக் கூசும் காரியத்தைச் செய்தனர்.

கத்தி, கட்டாரி, வேல்கம்புகளுடன் கீழ்வெண்மணி ஆதி திராவிடர் காலனிக்குள் படையெடுத்தனர். பயந்தோடிய பலர் ஒரு வீட்டுக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டனர். இரக்கமற்றோர் எல்லா வீடுகளுக்கும் தீ வைக்கவே, ஓடி ஒளிந்திருந்தோர்க்கு அடைக்கலம் தந்த அந்தக் குடிசையும் நெருப்புக்கு இரையானது.

1968 டிசம்பர் 25-ஆம் நாள் தமிழக வரலாற்றில் ஒரு பெருங் களங்கத்தை ஏற்படுத்திய அந்த அநாகரீக-அராஜகச் செயல் கேட்டு, அண்ணா துடித்துப் போனார், உணவு அருந்தவே மறுத்து விட்டார். உறக்கமே கொள்ளவில்லை. உடல்நிலை வேறு கெட்டிருந்த சமயம். உடனடியாக என்னைக் கீழ் வெண்மணிக்குச் சென்று நிலைமையை அறிந்து வரக் கட்டளை யிட்டார்.

நான், அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து, மாதவன் ஆகியோர் தஞ்சை மாவட்டத்தில் நாகைக்கு அருகேயுள்ள கீழ்வெண்மணிக்கு விரைந்தோம். விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தின் பக்கம் எப்போதுமே குரல் கொடுக்கும் மன்னை நாராயணசாமி அவர்களும் கம்யூனிஸ்டு கட்சியின் தஞ்சை மாவட்டத் தலைவர்களும் எங்களுடன் அந்தக் கிராமத்திற்கு வந்தனர்.

எரிந்துபோன காலனியைக் கண்டு கண்ணீர் சிந்தினேன் நாற்பத்து இரண்டு உயிர்களைப் பலி கொண்ட அந்த இடத்தைப் பார்த்துக் கதறினேன். தாய்க்குலத்தினரையும் தளிர்களையும் உழைக்கும் கூட்டத்தையும் இப்படி உயிரோடு வைத்துக் கொளுத்திச் சாம்பல் மேடாக்க எப்படித்தான் அந்த நாச காரர்கள் துணிந்தார்களோ என்று அந்த வட்டாரமே புலம்பி அழுதது. அந்தக் கொடுஞ் செயலர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் கோபாலகிருஷ்ண நாயுடு என்பவர்! தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர்!

சட்டப்படி நடவடிக்கைகளைப் பாரபட்சமின்றி எடுத்திடு மாறு காவல்துறையினருக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள்

உத்திரவிட்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி அவர்கள் சென்னைக்கு வந்து அண்ணாவைச் சந்தித்தார். கீழ்வெண்மணி நிகழ்ச்சியால் அதிர்ச்சி அடைந்திருந்த இருவரும் தழுதழுத்த குரலில் பேசிக் கொண்டபோது நான் அங்கிருந்தேன் கண்கள் குளமாகிட!

கீழ்வெண்மணி குறித்து அண்ணாவின் ஆட்சியை மறை முகமாகக் குற்றம் சாட்டி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தாரகேசுவரி சின்கா, நாடாளுமன்றத்தில் பேசியபோது குறுக்கிட்டு திரு. பி.ராமமூர்த்தி அவர்கள் கூறிய கருத்துக்கள் முக்கியமானவைகளாகும்.

"திருமதி தாரகேசுவரி சின்கா, தஞ்சையில் கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆம்! அங்கு ஒரு கொடுமையான சம்பவம் நடந்தது உண்மை. அது நடந்த போது நாங்கள் எர்ணாகுளத்தில் இருந்தோம். அதுபற்றி வானொலியில் செய்தி கேட்டோம். இந்தச் சம்பவம்பற்றி கேள்விப்பட்ட அந்த நிமிடமே தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணா கண்ணீர் விட்டார். மறு நிமிடமே அந்த சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்தார். அதற்குப் பொறுப்பானவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கபபடுமென்று அறிக்கை விட்டார். அவர் உடல் நலமற்று இருந்ததால், அமைச்சர்களை உடனே வெண்மணிக்கு அனுப்பி நிலைமைகளை அறிந்துவரச் செய்தார். வெண்மணி நிகழ்ச்சிபற்றிக் கேள்விப்பட்டு நான் சென்னை சென்றவுடன் அங்கே அண்ணாவின் செய்தி காத் திருந்தது. "உடனே வருக!" என்பதே அந்தச் செய்தி! நான் சென்று சேர்ந்தவுடன் அதிகாலையிலேயே அவரைப் பார்ப்பதற் காக நான் எழுப்பப்பட்டேன். அந்தப் பிரச்சினையில் என்ன செய்வது என்று பேசினோம்.

சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதென்றும், போலீஸ் அதிகாரிகளை மாற்றி, வழக்கு நடத்தும் பொறுப்பை வேறு புதிய அதிகாரிகளிடம் விடுவ தென்றும் முடிவு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளிலும் காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் வெண்மணி நிகழ்ச்சிக் காகக் கண்ணீர் விடாத கட்சி! அந்தச் சம்பவத்தைக் கண்டிக்க அவர்கள் முன் வரவில்லை."

இவ்வளவு தெளிவாக ராமமூர்த்தி அவர்களே அண்ணா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைக் குறிப்பிட்டிருந்துங் கூட, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு கூடிய சட்டமன்றக்

கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் கழக அரசின் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு இறுதியாக நான் பதில் அளித்த போது; "காங்கிரஸ் உறுப்பினர் அருமை நண்பர் ஜெயராஜ் அவர்கள், கீழ்வெண்மணியில் தீ வைத்துக் கொளுத்திக் கொல்லப்பட்ட பெண்டிர், ஆடவர், குழந்தைகள் அத்தனை பேருக்குமாகக் கண்ணீர் வடித்துத் தனது ஆழ்ந்த சோகத்தைத் தெரிவித்துக் கொண்டார். அதே நேரத்தில் அப்படித் தீ வைத்துக் கொளுத்திய கொடும்பாவிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவர் கூறவில்லை. ஆக அவர்களுடைய கண்டனம் அந்த அளவோடு நின்று விட்டது" என்று குறிப்பிட்டேன்.

அண்ணா இருந்தபோதே அந்தச் சம்பவத்தையொட்டி எடுக்கப்பட்ட சட்டபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து வழக்கு நடைபெற்றது-தண்டிக்கப்பட்டவர்கள் மேல்முறையீட்டுக்குச் சென்றார்கள். அந்த வழக்கில் முதல் எதிரியாக இருந்த கோபாலகிருஷ்ண நாயுடு என்ற நிலப்பிரபு, வெண்மணி நிகழ்ச்சி நடைபெற்ற பல ஆண்டுகளுக்குப் பிறகு கொலையுண்டார் என்பதிலிருந்து வெண்மணியின் வெங்கொடுமைக்கு எப்படி பதில் கூறப்பட்டது என்பதையும் புரிந்து கொள்ளலாம்

புதியஅமைச்சரவை அமைந்ததும் கூடிய சட்டமன்றத்தில் ஆளுநர் உரையும், நிதிநிலை அறிக்கையும் இடம் பெற்றன நிதிநிலை அறிக்கையில் முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்களின் இலவசக் கல்வித் திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்கிற ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி )வரையில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வியென ஆக்கியிருந்தார் காமராஜர்! அதனைத் தொடர்ந்து 1969 நிதிநிலை அறிக்கையில் எல்லா மாணவர்களுக்கும் புகுமுக வகுப்பு (தற்போது ப்ளஸ் 2) வரையில் இலவசக் கல்வி என அறிவித்தோம். ஏற்கனவே ஓரிரு இடங்களில் பள்ளிகளில் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கப்பட்டிருந்தாலும் கூட காமராஜர் ஆட்சியிலேதான் அந்த மதிய உணவு வழங்குதலை மாநிலந் தழுவிய ஒரு திட்டமாகவே ஆக்கி ஏழை எளிய குழந்தைகளுக்குக் கல்வியில் ஊக்கமளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கழக ஆட்சியிலும் அந்தத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது. புதிய அமைச்சரவையின் நிதிநிலை அறிக்கை வரியில்லாத வகையிலே அமைந்திருந்ததைத் தமிழ்நாட்டு மக்கள் வரவேற்றனர்.

ஆளுநர் உரையிலும் சரி, நிதிநிலை அறிக்கையிலும் சரி, சட்டப்பேரவையில் உரையாற்றிய காங்கிரஸ் உறுப்பினர்கள் காரசாரமாகவே கழக அரசைக் கண்டித்தனர். புதியவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்களே, கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிதானம் அவர்களிடம் அப்போது இல்லை நாங்கள் புதியவர்களாக இருந்தாலும் 1967 முதல் ஆட்சி நடக்கிறதேயெனக் கூறி இரண்டாண்டு காலமும் கொடுங்கோல் ஆட்சி நடந்ததாகவே அவர்கள் பேசினர். இராமலிங்கம் என்ற காங்கிரஸ் உறுப்பினர் ; என்னை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்ததையே ஏகடியம் செய்தார்.

"மறைந்த முதலமைச்சருக்காக அனுதாபம் அனுஷ்டிக்கப் பட்ட ஏழு நாட்கள் முடிவதற்கு முன்பே, ஆறும் நாளே-கண்ணீர் வற்றுவதற்கு முன்பு-புதிய முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்" என்று அவர் அவையில் பேசினார்.

அதற்கு நான்;"பண்டித நேரு மறைந்தபோது பனிரெண்டு நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் நேரு மறைந்த மூன்றாம் நாளே லால்பகதூர் சாஸ்திரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் காங்கிரஸ் இயக்கத்தினர் மறந்து விடக்கூடாது" என்று அடக்கத்துடன் பதில் அளித்தேன்.

முதல்வர் அண்ணா மறைந்த அடுத்த விநாடியே தற்காலிக முதல்வராக நாவலர் பதவியேற்றது கட்டாயத்துக்குரிய ஒரு முறை என்கிற போது - மாநில மக்களை வழி நடத்த ஒரு உறுதியான அமைச்சரவை உடனடியாக அமைவதைக் கேலி செய்ய சிலர் முனைந்தது ; எதிர்ப்பு-எரிச்சல் இவற்றின் காரணமே தவிர வேறல்ல!

சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது நெய்வேலியில் இருந்து ஒரு செய்தி வந்தது. அங்கு ஒரு விழாவில் திருமுருக-கிருபானந்தவாரியார் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றிய போது அண்ணாவின் மறைவு குறித்துக் கிண்டலாக பேசியதாகவும் அதனால் மக்கள் கொதித்தெழுந்து அமளி ஏற்பட்டதாகவும் தகவல் கிடைத்தது.

அது குறித்துச் சட்டமன்றத்தில் காங்கிரசார் கேள்விகளை எழுப்பினர். அப்போது காங்கிரஸ் தரப்பில் சட்டமன்றக் கொறடாவாக இருந்தவர் விநாயகம் அவர்கள்! (இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர் கழகத்தில் இணைந்துவிட்டார்) ஆர்ப்பாட்டமான உரையும், ஆணித்தரமான

வாதமும், ஆஜானுபாகுவான வடிவமும் தான் திரு. விநாயகம் அவர்கள் என்றால் அதை யாரும் மறுக்கவொண்ணார்!

அண்ணாவைப் பார்த்து அவையிலேயே அவர் ஒரு முறை "your days are numbered" (உமது நாட்கள் எண்ணப் படுகின்றன) என்று ஆட்சியைக் குறிப்பிட்டுக் கோபமாகச் சொன்னபோது அண்ணா அவர்கள் அமைதியாக எழுந்து "My steps are measured" (எனது அடிகள் அளந்து வைக்கப் படுகின்றன) எனக் கூறியதும் மறக்கக் கூடியவை அல்ல! இருவருமே நல்ல நண்பர்கள்; இருவரையும் காலம் அதிக இடைவெளி விடாமலே பறித்துக் கொண்டு போய்விட்டது.

அந்த நண்பர் விநாயகம் தான் நெய்வேலியில் கிருபானந்த வாரியார் நிகழ்ச்சியில் உருவான கலவரங் குறித்து ஆத்திரமாகப் பேசினார்.

"ஆண்டவனை நம்பாதவர்கள் அமெரிக்காவுக்குப் போனாலும் டாக்டர் மில்லரே வந்தாலும் இப்படித்தான் முடிவு ஏற்படும்" என்று வாரியார் பேசியதையொட்டியே குழப்பம் விளைந்தது என்ற விவரத்தை நான் அவையில் சொன்னேன்.

அப்படி பேசியது தவறு என்று வாரியார் அவர்களே நெய்வேலியில் வருத்தம் தெரிவித்துக்கொண்டதையும், அவரைத் தக்க போலீஸ் பாதுகாப்புடன் ஊருக்கு அனுப்பிய தையும் அவையில் விளக்கினேன். நெய்வேலி நிகழ்ச்சியைக் கழக அரசின் மீது காழ்ப்புக்கொண்டோர் பயன்படுத்திக் கொள்வது, தனக்கே நல்லதல்ல எனப்புரிந்துகொண்ட கிருபானந்தவாரியாரும் ஓர் அறிக்கையை ஏடுகள் மூலம் வெளி யிட்டார்.

"நெய்வேலி நிகழ்ச்சிகளுக்கும் அரசியலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இதை சில அரசியல் கட்சிகள் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்துவதை நான் விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்ப தாகவும் நல்ல பாதுகாப்பு கொடுக்கப்படுமென்றும் சட்டமன்றத் தில் அறிவித்துவிட்டபடியால் இதை முடிந்துபோன பிரச்சினை யாகக் கருத வேண்டுகிறேன்" என்பதுதான் வாரியாரின் அறிக்கையாகும்!

ஒரு தலைவருடைய மரணம் - அல்லது நோய்நொடிகள் - இவற்றைக் கேலிக்குரியதாக்க ஆக்கி "அரசியல் விகடம்" செய்வதை அந்தத் தலைவரின்பால் உள்ளத்தைப் பறிகொடுத்து

அவரைப் பின்பற்றுகின்ற மக்கள் பொறுத்துக் கொள்ளமுடியாமல் கொதிப்படைவார்கள் என்பதை நான் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டினாலுங்கூட, அத்தகைய போக்கினை எதிர்க்க வன்முறையில் இறங்குவதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொண்டேன்.

இந்தக் கால கட்டத்தில்தான் ஆந்திர மாநிலத்தில் ''தெலுங்கானா'' போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. தெலுங்கானா மக்களின் நலன்கள் கவனிக்கப்படுமென்றும் ஆனால் அதற்காக ஆந்திராவிலிருந்து தெலுங்கானா மாநிலமெனத் தனியாகப் பிரிக்க முடியாதென்றும் பிரதமர் இந்திராகாந்தி திட்டவட்டமாகத் தெரிவித்த காரணத்தால் போராட்டம் தீவிரமடைந்தது.

ஐதராபாத் அருகே பலக்னுமா என்ற நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ரயிலுக்குப் போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். கோதாவரிப் பாலம் அருகே ரயில்களைக் கவிழ்க்க செய்யப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றன. செகந்தராபாத் - காசிப்பேட்டை ரயில் பாதையில் ஒரு பாலத்திற்கு பலத்தசேதம் விளைவிக்கப்பட்டது. அரசு அலுவலகங்கள், அங்கிருந்த ரிக்கார்டுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஐந்தே நாட்களில் கிளர்ச்சியையொட்டி சுமார் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

தெலுங்கானா கிளர்ச்சி குறித்துப்பேச பிரதமர் இந்திராகாந்தி நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துக் கலந்து பேசினார். சுதந்திரக் கட்சி சார்பில் கலந்துகொண்டவர்கள் அந்தக் கூட்டத்தில், தெலுங்கானா பிரிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினர்.

கழகச் சார்பில் கலந்துகொண்ட பேராசிரியர் அவர்கள் "ஒரே மொழி பேசும் மக்கள் என்கிற அடிப்படையில் ஆந்திராவின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும். இதில் தவறினால் மற்ற மாநிலங்களிலும் தனி மாநிலக் கோரிக்கை தோன்றும்'' எனக் குறிப்பிட்டார்.



# 8

## உறவுகள்—உரிமைகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழக மெனும் அறிவுக் கடலில் முத்துக் குளித்துத் தேர்ந்தெடுத்த முத்துக்களில் அன்பழகனும் ஒருவர் என்று அண்ணா அவர்களால் வாழ்த்திப் புகழப்பட்டவர் பேராசிரியர் அவர்கள்! முதல்வர் பொறுப்பை நான் ஏற்ற நேரத்தில் நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் குழுவின் தலைவராக இருந்த அவர், தமிழகத்தில் நடைபெற்ற சட்ட மன்றக் கட்சித் தலைவர் (முதலமைச்சர்) தேர்தலில் எந்தக் கருத்தும் கூறாமல் சற்று ஒதுங்கியே இருந்தார்.

அண்ணாவை இழந்த சோகத்தில் திக்குத் தெரியாமல் நின்ற கழகத்தை வழி நடத்திச் செல்ல யார் இருக்கிறார்கள் என்ற கேள்விக்குறி அவரை மௌனமாக்கிவிட்டது என்றே கூறலாம். எந்தப் பிரச்சினையிலும் வெட்டு ஒன்று துண்டு இரண்டெனக் கண்டிப்பாகக் கருத்துக்களைக் கூறக் கூடியவர் இந்தப் பிரச்சினையில் தலையிடுவதால் புதிய சிக்கல்கள் தோன்றக்கூடுமென்றும் அதனால் தற்சமயம் ஒதுங்கியிருப்பதே கழகம் எடுத்திடும் முடிவுக்கு ஒத்துழைப்பு தருவதாகப் பொருள் என்றும் அவரைச் சந்தித்த நண்பர்களிடம் மனம் விட்டுச் சொன்னார்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எனக்கு சென்னை நேப்பியர் பூங்காவில் 1969 மார்ச் 9-ஆம் நாள் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் நான் சென்று கலந்துகொள்வதற்கு முன்பாகவே கூட்டத்திற்குத் தலைமை வகித்திருந்த பேராசிரியர் அவர்கள் உரையாற்றி முடித்துவிட்டார். அன்று அவர்

ஆற்றிய உரையினை வைத்துக் கழகத்திற்குள் கலகம் விளை விக்கலாமா என்று மாற்றார் சிலர் திட்டமிடத் தொடங்கினர்.

பேராசிரியர் நெஞ்சில் பட்டதைச் சொல்லக்கூடியவரே தவிர, பிளவு எனும் நஞ்சைக் கழகத்தில் கலந்திடக் கனவிலும் முனையாதவர்; என்னிடம் மிகைபடச் சொன்னவர்களை அமைதிப் படுத்தினேன்.

இதனை நான் எழுதும்போது இந்தக் கழகத்திற்கு நான் தலைவர்! பேராசிரியர் பொதுச் செயலாளர்! நாங்களிருவரும் பிரியாதவர்கள்! பிரிக்கப்பட முடியாதவர்கள்! தலைவர் என்பதும் ஏற்றுள்ள பொறுப்புக்களை சுட்டிக்காட்டப் பயன் படும் சொற்களே தவிர, எங்களுக்குள் எந்தவித ஏற்றத் தாழ்வும் இருப்பதாக நான் என்றுமே எண்ணியதில்லை.

"இடுக்கண்" களையும் நட்பின் இலக்கணமாக - இதய உணர்வுகளால் ஒன்றிக் கலந்துவிட்ட ஓர் உடன்பிறப்பாக - இந்தத் தமிழினம் காக்க உற்ற படைக்கலனாகத் திகழுகிற அவருக்கு ஏற்பட்ட ஐயப்பாட்டை நீக்குவது எனக்கு மிகப் பெரும் கடமையாயிற்று!

கழகத் தலைமையேற்று தலைவராக இருந்து வழிநடத்தும் தகுதியை நான் முற்றிலுமாகப் பெற்றிருக்கிறேனா என்பதுதான் பேராசிரியருக்கு அப்போது ஏற்பட்ட ஐயப்பாடு! அதைத்தான் நேப்பியர் பார்க் பாராட்டுக் கூட்டத்தில் அவர் சுட்டிக்காட்டி யிருக்கிறார். அவர் பேசியதற்கும், மற்றும் சிலர் என்னை எல்லையற்றுப் பாராட்டியதற்கும் பதில் அளிக்கவேண்டிய அவசியத்திற்கு ஆளானேன்.

"முதலமைச்சர் முதலமைச்சர் என்று என்னைப்பற்றிக் கூறிப் பலர் வாழ்த்தினார்கள். ஆனால் நானோ "முதல்" இழந்த அமைச்சனாக - என்னை உருவாக்கிவிட்ட முதலினை இழந்த அமைச்சனாக உங்கள் முன்னால் நிற்கிறேன்.

முதலமைச்சராக இருக்கிறோம் என்ற நினைப்பே எனக் கில்லை. நாலரைக் கோடித் தமிழ் மக்களும் காலால் இடும் கட்டளையைத் தலையால் ஏற்று முடிக்க காத்திருக்கும் தொண்டருக்குத் தொண்டன் நான் என்ற நினைப்பில்தான் இருக்கிறேன். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துள்ள பேராசிரியர் அவர்கள், "கருணாநிதியைத் தலைவராக அல்ல; தளபதியாக மட்டுமே ஏற்றுக் கொள்வேன்" என்று கூறினாலே போதுமானது. தளபதியைத் "தளர் - பதி" ஆக்கிவிடாத

அளவுக்கு அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதித்தனார் அவர்கள் என்னை "இரண்டாவது அண்ணா" என்று அழைத்தமைக்கே நான் அவரிடம் கோபித்துக் கொண்டேன். அண்ணாவைப்போல் இன்னொருவர் உருவாக முடியாது என்றும் ஆதித்தனாரிடம் சொன்னேன். தாய்ப்பால் அருந்தி வளர்ந்த குழந்தை, திடீரென தாயை இழந்துவிட்டால் புட்டிப்பால் தான் அருந்த வேண்டி வரும். அண்ணா அவர்கள் தாய்ப்பால் என்றால் என்னைப் புட்டிப்பால் அளவுக்காவது ஏற்றுக் கொண்டு உடனிருந்து உதவுங்கள்."

இப்படி அந்தக் கூட்டத்தில் நான் பேசியபோதிலும், பேராசிரியரைப் போலவே சிலர் கொண்டிருந்த ஐயப்பாட்டை நீக்குவதற்கும், தோளில் சுமத்தப்பட்ட பொறுப்பைத் தாங்கக் கூடியவன்தான் என்று நிலைநாட்டுவதற்கும் ஓயாத உழைப்பை நல்கிட வேண்டுமென்பதை உணர்ந்திருந்தேன்.

"நீ படிக்கிற அழகைப் பார்த்தால் பரீட்சையில் முதல் மாணவனாக அல்ல; கடைசி மாணவனாகத் தேர்வு பெறுவது கூடக் கஷ்டம்தான்!" என்று தம்பியைப் பார்த்துத் தமையன் சொல்வது அந்தத் தம்பிக்கு ஒரு போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தவேண்டும் என்ற சகோதர பாசத்தாலும் இருப்பது உண்டல்லவா? அந்தப் பாச உணர்ச்சியோடுதான் அன்றைக்குப் பேராசிரியர் பேசினார் என்பது பிற்காலத்தில் அவரது நடவடிக்கைகளின் வாயிலாகத் தெளிவாயிற்று.

மனத் தூய்மையுடன் இடித்துரைப்பதால், நன்மை விளையும்! மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு இனிப்பு ஒழுகப் பேசுவதால் அதனை நம்புவோர்க்குத் தீமையே சூழும்! இடித்துரைத்த பேராசிரியர், எனக்கும் கழகத்திற்கும் தாங்கொணாத இடர்கள் வந்துற்றபோது தனது கொள்கை உறுதியையும், நட்பின் ஆழத்தையும் செயல் மூலம் வெளிப்படுத்தினார்.

இனிப்புரை வழங்கிய பலரோ இயக்கத்திற்கு இடர் வந்துற்றபோது, படர் கொடியானார், எதிர் வீட்டுக் கொம்பில்! பதவியும், பவிஷுமே அவர்களை ஆட்கொண்டன! அவற்றைத் துச்சமெனக் கருதி கால்தூசு எனக் கூறி கழகம் காத்திட எனக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்கும் பேராசிரியர் அவர்கள் இன்று என்னைத் தலைவனாக ஏற்றுக்கொள்கிற அளவுக்கு நான் உழைத்திருக்கிறேன் என்பதைத் திரும்பிப் பார்த்து ஆனந்தப் பெருமூச்சு விடுகிறேன்.

அண்ணாவின் மறைவினால் மேலவையில் ஏற்பட்டிருந்த காலி இடத்திற்கு அண்ணாவின் துணைவியார் ராணி அண்ணியார் அவர்களை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் சார்பில் தேர்ந்தெடுத்து மேலவையில் அமரவைத்தோம். மேலவையில் ஆளுநர் உரையின்மீது நடந்த விவாதத்தில் முதன்முதலாக நான் பதில் அளித்தது பற்றி ''மெயில்'' ஆங்கில ஏடு 2-3-69 அன்று எழுதியிருந்தது வருமாறு:

''தமிழக மேலவையில் ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்கு, திரு. கருணாநிதி தந்த பதிலுரை பாராட்டுக்குரிய தன்னடக்கத்தோடு அமைந்திருந்தது. மத்திய மாநிலத் தொடர்பு பற்றிய விஷயத்தில் விவரமானதொரு அறிவிப்பை வெளியிட மேலவையைத் தக்கதொரு விவாத மன்றமாக அவர் தேர்ந்தெடுத்துள்ளார்.

மத்திய ஆட்சிக்குத் தமது ஒத்துழைப்பை நல்கும் அதே வேளை அந்த ஒத்துழைப்பானது ஒரு சார்பிலிருந்து மட்டும் கிடைக்கக்கூடிய ஒத்துழைப்பாக இருக்க முடியாது என்றும், அது இரு சார்பிலும் ஒருவருக்கொருவர் அளிக்கக்கூடிய ஒத்துழைப்பாகவே அமைய முடியும் என்றும் அவர் அழுத்தம் திருத்தமாக உறுதியாகக் கூறியுள்ளார்.

இது, ஒரு முதலமைச்சர், ராஜ தந்திரத்தோடு—அதே நேரம் உறுதியான தன்மை படைத்தவராகவும் இருக்கமுடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. தமிழகத்திற்கு ஒரு லட்சம் டன் அரிசி உடனடியாக வழங்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தி யுள்ளார். இவையெல்லாம் மத்திய அரசின் உறவு நிலையில் திரு. அண்ணாதுரை அவர்கள் கையாண்ட உத்திகளை நினைவு படுத்துகின்றன.

இதனையடுத்து சென்னை இராயபுரத்தில் மீன்பிடித் துறைமுக அமைப்புக்கான தொடக்க விழா நிகழ்ச்சி என்னுடைய தலைமையில் மத்திய அமைச்சர் பாபு ஜெகஜீவன் ராம் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது.

9-3-69-ல் நடைபெற்ற அந்த விழாவில் பேசிய ஜெக ஜீவன்ராம் அவர்கள், ''தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சரை நான் பாராட்டுகிறேன். வலிமையும் தகுதியும் உடைய ஒருவரது கரங்களில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. திரு அண்ணாவின் நம்பிக்கைக்கு உகந்த தோழர்களில் ஒருவராக விளங்கியவர் கருணாநிதி. அவரது தலைமையில் தமிழ்நாட்டு

மக்கள் அமைதியான சுகவாழ்வைப் பெறுவார்கள் என்றும், நாட்டின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் பாதுகாப்பும் வலிவடையும் என்றும் நம்புகிறேன்.

மத்திய அரசில் உள்ள என் போன்றோரின் ஒத்துழைப்பு எல்லா வகையிலும் அவருக்கு இருந்து வரும் என்று உறுதியாகத் தெரிவிக்கிறேன்'' என்று உற்சாகம் கரைபுரளக் குறிப்பிட்டார்.

அன்று பாபு ஜெகஜீவன்ராம் பேசியது வெறும் சம்பிரதாயப் பேச்சல்ல! எத்தனையோ அரசியல் கொந்தளிப்புகளுக்கிடையிலேயும் அவருக்கும் எனக்குமுள்ள தொடர்பு என் முனையளவு கூடத் தேய்ந்து போனது கிடையாது! பெரியார், அண்ணா, திராவிடர் இயக்கம், அந்த இயக்கத்தைக் கட்டிக் காக்கும் வழித்தோன்றல்கள் என்றைக்குமே அவரது நெஞ்சில் நீங்காத இடம் பெற்றிருப்பதை நானறிவேன்.

டெல்லிக்கு நான் செல்லும்போது ஒன்றிரண்டு தடவை தவிர மற்ற நேரங்களில் எல்லாம் அவரைப் பார்த்து உரையாடாமல் திரும்பியதில்லை. அவரும் சென்னைக்கு வரும்போதெல்லாம், என்னைச் சந்தித்து உரையாடிவிட்டே திரும்புவார். பதவிகளில் இருந்த நேரங்களிலும் சரி, இல்லாத நேரங்களிலும் சரி - அந்த நட்புணர்வு நைந்து போனதில்லை.

தாழ்ந்தப்பட்ட சமூகத்திலிருந்து என் மகன் அழகிரிக்குப் பெண்கொண்டு திருமணம் 1972-ல் நடைபெற்றபோது, தாங்கொணாத மகிழ்ச்சியுடன் அந்தக் கலப்புத் திருமண விழாவுக்கு வந்திருந்து தனது குடும்பத்தில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சிபோலவே கலந்து கொண்டார். தமிழ்நாட்டின் சமுதாய முன்னேற்றத்திற்குத் திராவிட இயக்கம் பெருங் கடமை ஆற்றி வருகிறது என்பதிலே அவருக்கு ஒரு தனி உவகையும் பெருமையும் உண்டு.

1969 மார்ச் முதல் வாரத்தில் மேற்கு வங்கத்து அரசியல் நிலைகுறித்து அறிந்துகொள்ள வேண்டியதும், அதில் கழகம் எடுத்த நிலையும் முக்கியமானதாகும். மேற்கு வங்கத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய முன்னணி அமைச்சரவை கலைக்கப்பட்டு, அதன் தொடர்பாக நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியது. மீண்டும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி செல்வாக்குள்ள ஐக்கிய

முன்னணியே வென்றது. அஜாய் முகர்ஜி முதல்வராகவும், ஜோதிபாசு துணை முதல்வராகவும் பொறுப்பேற்றனர். தேர்தலுக்குப் பிறகு மார்ச் ஆறும் நாளன்று கவர்னர் உரையின் போதுதான் மேற்கு வங்கத்தில் பெரும் பிரச்சினையொன்று எழுந்தது.

"கவர்னர் உரை" என்று இருந்தாலும் ஆளுங் கட்சியின் கொள்கை, கோட்பாடுகள், திட்டங்கள், கருத்துக்களையே கவர்னர் படிப்பது வழக்கம். ஆனால் மேற்கு வங்க கவர்னர், தனது உரையில் அச்சியற்றப்பட்டிருந்த சில வாசகங்களைப் படிக்க மறுத்தார்.

"கடந்த ஒன்றரை ஆண்டுக்காலம், இந்த மாநில மக்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த கால கட்டத்தில் ஜனநாயகக் கொள்கை கடும் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. எந்தவகையான அரசியல் சட்ட பூர்வமான நிலையும் அற்ற முறையில் இந்த அவையின் அனுமதியின்றி 1967, நவம்பர் 21 அன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கம் தூக்கி எறியப்பட்டதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்! பின்னர் தகாத அவசரத்துடன் கட்சி மாறிகளின் சிறுபான்மையினர் அரசு, மற்றொரு சிறுபான்மைக் கட்சியின் ஆதரவுடன் கடுமையான மக்கள் எதிர்ப்புக்கிடையே தான்தோன்றித்தனமாக பதவியில் அமர்த்தப்பட்டதையும் நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்."

இந்தப் பகுதியைத்தான் ஆளுநர் தர்மவீரா அவர்கள் படிக்க மறுத்து, படிக்காமலே விட்டுவிட்டார்! பாவம்; அவரது செயலையும் மத்திய அரசின் போக்கையும் குறைகூறிக் கண்டிக்கும் அந்த வாசகங்களை அவரால் எப்படிப் படிக்க முடியும்!

கவர்னர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கவர்னர் சில பகுதிகளை விட்டுவிட்டுப் படித்தமைக்காக கண்டனம் தெரிவிக்கிறது" என்ற திருத்தத்தையும் அவையில் அரசின் சார்பில் நிறைவேற்றினார்கள்.

கவர்னர் அப்படிச் செய்தது தவறு எனக் கூறி ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்கள் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டார்.

மேற்கு வங்கத்தில் எழுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பிரச்சினை குறித்துத் திராவிட முன்னேற்றக் கழகம் தனது கருத்தை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தது.

மேற்கு வங்க கவர்னர் அவையில் உரை நிகழ்த்துகையில் சில பகுதிகளைப் படிக்காமல் விட்டுவிட்டது குறித்து, நாடாளு மன்றத்தில் 10-3-69 அன்று தென்னெட்டி விசுவநாதம் கொணர்ந்த தீர்மானத்தின் மீது பேசுகையில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள். ''மத்திய அரசோடு கருத்து மாறுபடக் காங்கிரசல்லாத அரசுகளுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஏதோ ஒற்றர்களை வைத்திருப்பது போல கவர்னர்களை வைத்திருப்பது ஆட்சேபிக்கத்தக்கதாகும். தாம் மட்டுமே தேச பக்தர்கள் என்றும், அரசியல் சட்டத்தைக் காப்பது தமக்குமட்டுமேயுள்ள கடன் என்றும் கவர்னர்கள் கருதக் கூடாது.

1967 தேர்தலுக்குப் பின், புதிய சக்திகள் உதயமானபின், மேலும் சிக்கல்கள் உருவாக்கப்பட்டு விட்டன. தான் எப்படி யெப்படியோ இருப்பதாக காங்கிரஸ் சொல்கிறது. அதேமுறை யில், காங்கிரஸ் செயல்பட்டிருந்தால் அது மேற்கு வங்கத்தில் வேறுவகையாகச் செயல்பட்டிருக்கவேண்டும். அங்கே, காங்கிரசல்லாத அரசைக் கவிழ்க்கவேண்டும் என்பதே, அதன் உண்மையான அணுகுமுறையாக இருந்தது. அதுதான் மொத்தச் சிக்கலுக்கும் காரணம்'' என்று கூறினார்.






# 9

## முதல் குரலும் - முதல் பிளவும்

முதலமைச்சராகப் பொறுப்பேற்று பிரதமரையும் மத்திய அமைச்சர்களையும் டெல்லியில் சந்தித்துப் பேசுவதற்காக முதல் தடவை சென்ற போதே தொழில் அமைச்சர் மாதவன் அவர்களைத்தான் நான் என்னுடன் அழைத்துச் சென்றேன். நல்ல நண்பர்களில் ஒருவராகவும் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராகவும் நான் அவரை ஏற்று அவருடன் நெருக்கமாகவே பழகி வந்தேன்.

கட்சியில் இருந்த மூத்த தலைவர்கள், மூத்த அமைச்சர்கள் சிலருக்குக்கூட நான் இப்படி ஓரிரு அமைச்சர்களுடன் நெருக்கமாக இருப்பது வெறுப்புக்குரிய விஷயமாக இருந்தது என்பதை நான் அறிந்திருந்தும் அதைப் பொருட்படுத்தாமலே இருந்து விட்டேன்.

அந்த அலட்சியப் போக்கினால் பிறகு நான் எவ்வாறெல்லாம் அல்லற்பட நேர்ந்தது என்பதை எண்ணிடும் போதுதான் என் தவறு என் நெஞ்சைக் குடைந்தது. அந்த அதிர்ச்சி நிகழ்ச்சிகளையெல்லாம் இந்த இரண்டாம் பாகத்தில் அவ்வப்போது உரிய அத்தியாயங்களில் நான் எழுத இருக்கிறேன் என்பதற்குப் பீடிகைதான் இது!

நானும் மாதவனும் 17-3-69 காலை 11-30 மணி அளவில் விமான மூலம் டெல்லி போய்ச் சேர்ந்தோம். விமான நிலையத்தில் நாடாளுமன்ற தி. மு. க. குழுத்தலைவர் பேராசிரியர், துணைத் தலைவர் நாஞ்சிலார், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், டெல்லியில் உள்ள தமிழ்க் குடும்பங்களைச் சார்ந்தோர்

அனைவரும் வந்திருந்து மகிழ்ச்சி குலுங்க வரவேற்றார்கள். விமான நிலையத்திலிருந்து டெல்லியில் உள்ள தமிழ்நாடு மாளிகை வரையில் முத்தமிழ் மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருபதுக்கு மேற்பட்டோர் மோட்டார் சைக்கிளில் அணிவகுத்து, நான் மறுத்தும் கேட்காமல் ஊர்வலமாகவே அழைத்துச் சென்றனர்.

டெல்லியில் பல்வேறு மாநில அரசுகளுக்கு தனி மாளிகைகள் இருப்பதுபோலவே தமிழ்நாட்டிற்கும் ஒரு மாளிகை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டிருந்தது. பின்னர் அந்த மாளிகை இடம் போதாத நிலையில் இருப்பதை உணர்ந்து கழக ஆட்சியில் அதையொட்டினாற்போல பெரிய கட்டிடம் ஒன்று எழுப்பப்பட்டு, வாயிற்புறத்து முகப்பில் வள்ளுவர் சிலையும், உள்ளே அண்ணா சிலையும் திறந்து வைக்கப்பட்டது.

நாங்கள் சென்று தங்கியது பழைய தமிழ்நாடு மாளிகை என்றாலும் கூட அங்கிருந்த அலுவலர்கள் அனைவரும் மிக்க பூரிப்புடன் எங்களை வரவேற்று உபசரித்தனர். அன்று அவர்களும், அதிகாரிகள் சிலரும் எடுத்துக் கூறிய கோரிக்கையின் அடிப்படையில்தான் தமிழ்நாடு மாளிகை, பெரிய அளவில் எழில் வடிவத்துடன் எழுப்புவதற்கான கருத்தினை நான் தெரிவித்தேன். அந்த விரிவாக்கக் கட்டிடத்தில் திராவிடக் கலாச்சாரச் சாயலும், தமிழ்நாட்டு சிற்பக் கலை அழகும் மிளிர்ந்திடவேண்டுமென்றும் கூறினேன். ஐந்தாறு ஆண்டுகளில் அந்த ஆசை நிறைவேறியதின் சாட்சியமாகத்தான் டெல்லிப் பட்டிணத்தில் தமிழ்நாடு மாளிகை, இன்று காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

டெல்லியில் பிரதமரைச் சந்தித்து நாற்பது நிமிடங்கள் உரையாடினேன். உற்சாகமூட்டுமளவுக்கு அவர்கள் தந்த வரவேற்பு அமைந்தது. மத்திய அரசின் ஒத்துழைப்பு மாநில அரசுக்குத் தாராளமாக இருக்குமென்று பிரதமர் உறுதியளித்தார். தமிழ்நாட்டின் வறட்சி நிலவரங் குறித்து ஆய்வு செய்திட வெகு விரைவில் மத்திய அரசின் அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பி வைப்பதாகவும், விரைவில் ஏப்ரல் திங்களுக்குள்ளாக வறட்சிப் பகுதிகளைக் காணத் தமிழகம் வருவதாகவும் கூறினார்.

பிரதமருடனும் மத்திய அமைச்சர்கள் சிலருடனும் நான் பேச்சுவார்த்தைகள் நடத்தி தமிழ்நாட்டின் உடனடித் தேவைகளை வலியுறுத்தியபோது என்னுடன் அமைச்சர் மாதவனும், நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் நாஞ்சிலாரும், ஜி. விசுவநாதன் எம். பி. யும் இருந்தனர்.

வெளி விவகாரத் துறை அமைச்சர் தினேஷ் சிங், மத்திய உள்துறை அமைச்சர் சவான், விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் கரன்சிங், தொழில் அமைச்சர் பக்ருதீன் அலி அகமது, வெளிநாட்டு வாணிபத் துறை அமைச்சர் பகத் ஆகியோரைச் சந்தித்து தமிழக வளர்ச்சிக்கான திட்டங்களை விவாதித்தேன்.

மத்திய உணவு அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் என்னைக் கண்டவுடன் கட்டித் தழுவி வரவேற்று மாநிலப் பிரச்சினைகளைக் கவனமுடன் கேட்டறிந்ததுடன், உடனடியாக பத்தாயிரம் டன் அரிசி தமிழ்நாட்டிற்கு முதல் தவணையாக அனுப்புவதற்கு ஆணை பிறப்பிப்பதாக அறிவித்தார். மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளைத் தமிழகத்தில் ஆரம்பித்திடவும் ஒப்புதல் அளித்தார்.

மத்திய அரசில் பிரதமரையும், மற்ற மத்திய அமைச்சர்களையும் சந்தித்ததற்கு நேர்மாருக இருந்தது துணைப் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயுடன் எங்களது சந்திப்பு!

அவரைச் சந்திக்க குறித்த நேரத்தில் செல்லவேண்டுமென்றுதான் நானும் மாதவனும் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறனும் தமிழ்நாடு மாளிகையிலிருந்து காரில் புறப்பட்டுச் சென்ருேம். ஆனல் எதிர்பாராத விதமாக வழியில் போக்குவரத்து இடைஞ்சலினுல் ஒரு ஐந்து நிமிடம் தாமதமாக மொரார்ஜியின் இல்லத்திற்குச் சென்ருேம்.

எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடித்திட எங்களை மொரார்ஜிதேசாய் வரவேற்றது ஒரு மாநில அரசை மத்திய அரசில் உள்ளவர்கள் சிலர் எவ்வாறு மதிக்கிருர்கள் என்பதற்குச் சான்ருக விளங்கியது. வகுப்புக்குச் சற்றுத் தாமதமாக வந்து விட்ட மாணவனை ஆசிரியர் வெறித்துப் பார்த்துக் கடுமொழி கூறுவதுண்டல்லவா; அவ்வாறே அன்றைக்குத் தேசாய் நடந்து கொண்டார்.

"உங்களுக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது? எனக்கு வேறு வேலை இல்லையா?" என்று கேட்டுக்கொண்டே உட்காரச் சொன்னுர்.

முள்ளின் மீது அமர்வதுபோல அவர் எதிரேயுள்ள நாற்காலியில் அமர்ந்தேன். தமிழ்நாட்டு வறட்சி நிலையை எடுத்துக் கூறி ஐந்து கோடி ரூபாய் முதல் தவணையாக உதவிட வேண்டுமென்று அவரிடம் கேட்டேன்.

நாங்கள் டெல்லிக்குப் பயணமாக சென்னை விமான நிலையம் சென்றிருந்த போதே, இந்திய கம்யூனிஸ்டு கட்சித்

தலைவர் எம். கல்யாணசுந்தரனார் அவர்கள் சென்னை விமான நிலையத்திற்கு அவசரமாக வந்து எங்களைச் சந்தித்து முதல் தவணையாக ஐந்து கோடி ரூபாய்க்குக் குறையாமல் கேளுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றிருந்தார்.

''ஐந்து கோடி" என்று நாங்கள் கேட்டதும் தேசாயின் முகம் சிவந்தது. "என் தோட்டத்தில் பணம் காய்க்கும் மரம் இல்லை'' என்று அவரிடமிருந்து பதில் வந்தது. "பணம் காய்க்கிற மரமே இல்லையே - இல்லாதது எப்படி உங்கள் தோட்டத்தில் இருக்கும்?" என்று நானும் உடனடியாக அவருக்குப் பதில் கூறி விட்டு, சில விநாடிகளில் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டோம்.

ஒரு நாட்டின் துணைப் பிரதமர் பொறுப்பையும், நிதி அமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருந்த ஒருவர், ஒரு மாநிலத்தின் முதலமைச்சரிடம் நடந்துகொண்ட முறை எங்களுக்கு ஆச்சரிய மாக இருந்தது. மத்திய அரசில் பதவி வகிப்போர் "ஆண்டான்" நிலையிலும், மாநில அரசுகளில் பதவி வகிப்போர் "அடிமைகள்" நிலையிலும் இருப்பது என்ற அந்தத் தோற்றமே தகர்க்கப்பட வேண்டுமென்பதுதான் கழகத்தின் கருத்து. அந்தக் கருத்துக்குச் சொந்தக்காரர்களாகிய நாங்கள் அன்றைக்குத் தேசாய் அவர் களிடம் பெற்ற அனுபவத்தால் மேலும் எங்கள் கருத்துக்கு வலு வூட்டிக் கொண்டோம்.

அன்றைய சந்திப்பில் மொரார்ஜி அவர்கள் அப்படிக் கண்டிப்பாக நடந்து கொண்ட போதிலும், அன்றிரவு எனக்கு நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் சார்பில் அளிக்கப்பட்ட விருந்துக்கு வந்திருந்து, என்னிடம் மிகக் கனிவுடன் பேசிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த விருந்தில் உள்துறை அமைச்சர் சவான், பாதுகாப்பு அமைச்சர் சுவரண்சிங் அவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி, டாக்டர் திரிகுணசென் முதலி யோரும் கலந்து கொண்டனர்.

டெல்லித் தமிழ்நாடு மாளிகையில் நிருபர்களின் மாநா டொன்றில் பலதரப்பட்ட கேள்விகளுக்கு நான் பதில் அளித் தேன். அவற்றில் முக்கியமானது மத்திய மாநில உறவுகளைப் பற்றியதாகும். மாநில சுயாட்சிக் கொள்கைக்கு ஆக்கபூர்வ மான முயற்சிகளைத் தமிழ்நாட்டில் கழக ஆட்சி தொடங்கிடும் என்ற கருத்தை முதன் முதலில் அந்த நிருபர்களின் கூட்டத்தில் தான் வெளியிட்டேன்.

"மத்திய மாநில உறவு குறித்து விவாதிக்க பிரதமர், மாநில முதலமைச்சர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும்" என்று காமராஜர் அவர்கள் அப்போது அறிவித்திருந்த கருத்து பற்றி நிருபர்கள் என்னிடம் அபிப்பிராயம் கேட்டார்கள்.

"அதைப்பற்றி காமராஜர் அவர்கள்தான் விளக்க வேண்டும். அப்படியொரு கருத்தை வெளியிட்டதற்கான காரணத்தை அவரிடம்தான் கேட்க வேண்டும். இதுபற்றித் தி.மு. கழகத் தரப்பில் தூண்டுதல் எதுவும் கிடையாது. காமராஜர் இப்போது மத்திய அரசின் ஆளுங் கட்சித் தலைவர்களில் ஒருவர். அவரது அறிவிப்பு குறித்து மத்திய அரசின் மற்ற தலைவர்களின் கருத்தை அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம்"

என்று விடையளித்தேன். "மாநில சுயாட்சி, மாநில அதிகாரங்கள் போன்ற பிரச்சினைகளை எழுப்புவது மூலம் பிரிவினைக் கோரிக்கையை மீண்டும் கிளப்பிடக் கழகம் முயற்சி செய்கிறது என்று சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறாரே!" என்று நிருபர்கள் கேட்டதற்கு நான் காமராஜர் அவர்களே மத்திய மாநில உறவுகள் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்" என்று தெளிவுபடுத்தியிருப்பதைச் சுட்டிக் காட்டினேன்.

மத்திய மாநில அரசுகளுக்கிடையே புதிய உறவு முறைகளை வகுத்திட மாநில அரசுகள் - குறிப்பாக காங்கிரசல்லாத மாநில அரசுகள் ஒன்று சேர்ந்து விவாதிக்க வேண்டுமென்று மேற்கு வங்க முதலமைச்சர் அஜாய் முகர்ஜி கூறியிருந்த கருத்தையும் நிருபர்கள் கூட்டத்தில் நான் வரவேற்றேன்.

"மாநில அரசுகளுக்கு மத்திய அரசு, அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் நல்லுறவு வளர அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியம். மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுத்தால், மத்திய அரசின் சுமை குறையும். மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் கிடைக்க அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். எந்தெந்த அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தரலாமென்று ஆலோசித்துப் பரிந்துரைக்கும் அறிக்கை தந்திட கல்வி நிபுணர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், சட்ட நிபுணர்கள் கொண்ட குழு ஒன்றை அமைப்பதென்று தமிழகத்தில் கழக அரசு முடிவு செய்துள்ளது. அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தும் போது இந்திய ஒருமைப்பாடும் ஒற்றுமையும் பலமாக இருக்க

வேண்டுமென்பதையும் கருத்தில் கொண்டுதான் சொல்கிறோம். அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்கு அளிப்பதால் ஒற்றுமை பாதிக்கப்பட்டு விடாது. நட்பு முறையிலேயே இந்தப் பிரச்சினை தீர்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன்".

டெல்லி நிருபர்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்ட இந்தக் கருத்துத்தான் ராஜமன்னார் குழுவாக அரும்பி, மாநில சுயாட்சித் தீர்மானமாகச் சட்டப் பேரவையில் மலர்ந்தது என்பதை நினைவூட்டுகிறேன்.

அதே கூட்டத்தில் மொழிப் பிரச்சினை குறித்தும் கேள்விகள் எழுந்தன. இந்தித் திணிப்பைத் தி. மு. கழகம் எதிர்க்கிறது என்பதை உறுதியாக அறிவித்தேன்.

தமிழ்நாட்டுத் தேவைகளை மத்திய அரசில் உள்ளவர்களிடம் எடுத்துரைத்து உதவிகளைப் பெறச் சென்ற நேரத்தில்—நிருபர்கள் மாநாட்டில் கழகத்தின் மொழி, அரசியல் ஆகிய கொள்கைகளை அழுத்தம் திருத்தமாகக் கூறியதால் விளைவுகள் விபரீதமாகுமோ எனச் சிலர் அஞ்சினர். அரசியல் தெளிவு படைத்தவர்கள் அனைவரும், கழகத்தின் குழப்பமற்ற உறுதியான கொள்கைப் பிடிப்பைப் பாராட்டவே செய்தனர்.

நான் டெல்லி சென்றிருந்தபோது, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே கீறல்கள் விழுந்து--பிளவுகள் தோன்றத் தொடங்கியிருந்தன. கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பூபேஷ் குப்தா அவர்கள் மொரார்ஜி தேசாய் மீது ராஜ்ய சபையில் ஒரு குற்றச் சாட்டைக் கூறினார். அதைத் தொடர்ந்து பேசிய காங்கிரஸ் கட்சி ராஜ்ய சபா உறுப்பினர் சந்திரசேகர் அவர்கள் பின்வருமாறு மொரார்ஜி தேசாயின் மீது குற்றச் சாட்டுகளை அடுக்கினார்.

"கடந்த ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட்டுக்குப் பின் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் சில சலுகைகளை அறிவித்தார். அதனால் பிர்லாவின் அலுமினியக் கம்பெனிக்கு ஒன்றேகால் கோடி ரூபாய்க்கு மேல் ஆதாயம் கிடைத்தது. இது தற்செயலாக நடந்தது அல்ல. தேசாயின் மருமகளும், இரு மைனர் குழந்தைகளும் பம்பாய் ஜெனரல் கம்பெனியில் பங்குதாரர்களாய் இருக்கின்றனர் என்பதும், இந்தக் கம்பெனியின் பங்குகளை பிர்லாவின் வேறு இரு கம்பெனிகள் இயக்கி வருகின்றன என்பதும் பூபேஷ் குப்தா கூறியுள்ள புகாராகும். அந்தப் புகாருக்கு மொரார்ஜி தேசாய் பதில் அளிக்கத் தவறி விட்டார். மொரார்ஜி தேசாய் தனது சொந்தக் கணக்கிலிருந்து ஐம்பத்தாறாயிர ரூபாயும், தனது

கல்வி அறக்கட்டளையிலிருந்து எண்பத்தாறுயிர ரூபாயும் பிர்லாக் கம்பெனி ஒன்றின் ஏஜன்சி நிறுவனமான "பம்பாய் இண்டஸ்டிரியல் அண்ட் கெமிக்கல் கம்பெனி"க்குத் தந்துள்ளார். பிர்லாவின் இந்தியன் அலுமினியக் கம்பெனி அமெரிக்க நிறுவனம் ஒன்றிடமிருந்து முப்பது கோடி டாலர் பெற முதலில் ஒரு கமிட்டி அனுமதி தந்தது. பின்னர் கம்பெனி விவகார அமைச்சு ஆட்சேபணை கிளப்பியதும் அந்தஅனுமதி நிராகரிக்கப் பட்டது. இதுதான் துணைப் பிரதமராகவும், நிதியமைச்சராகவும் உள்ள ஒருவர் இயங்கவேண்டிய முறையா?"

இவ்வாறு தனது சொந்தக் கருத்து என்ற முறையில் காங்கிரசின் இளந் துருக்கியர் குழுவில் ஒருவர் என வர்ணிக்கப் பட்ட சந்திரசேகர் அவர்கள் ராஜ்ய சபையில் மொரார்ஜி தேசாய் அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டை உறுதிப்படுத்திப் பேசியதோடு, மேலும் உரையாற்றும்போது பின்வரும் கருத்தையும் வற்புறுத்தினர். அந்தக் கருத்தின் கடுமையையும் இதோ காணலாம்:

"கடந்த வாரம் இந்த அவையில் (ராஜ்ய சபா) பேசிய மொரார்ஜி தேசாய் அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது "மதிப்புக்குரியவனல்ல" என்ற சொல்லைப் பயன்படுத்தினர் அதை நான் தீவிரமாக மறுக்கிறேன். என்னுடைய நடத்தையையும், துணைப் பிரதமர் மொரார்ஜியின் நடத்தையையும் ஆராய்ந்து நிறுத்துப் பார்த்து நான் மதிப்புக்குரியவனல்லவா; அல்லது அந்த இழி சொல் நான் குறிப்பிடும் அந்த மனிதருக்குப் பொருந்துகிறதா என்பதைக் கண்டறிய ஒரு கூட்டுக் குழுவை நியமிக்க வேண்டும். அந்தக் குழுவில் லோக் சபா ராஜ்ய சபா உறுப்பினர்கள் இடம் பெறவேண்டும்."

இவ்வாறு சந்திரசேகர் பேசியதற்கு அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தன்னுடைய பதவியில் இருந்து விலகிவிட வேண்டி வரும் என்று தேசாய், பிரதமர் இந்திரா அம்மையாரிடமும் மற்றத் தலைவர்களிடமும் கூறினர்.

இதற்கிடையே மத்திய அமைச்சரவை கூடியது. குற்றச் சாட்டுக்குத் தொடர்புடைய பிர்லா நிறுவனங்களின் மீது எவ்வித விசாரணையும் நடத்தத் தேவையில்லை என்று முடிவு செய்தது. அந்தக் காலகட்டத்தில் பரிதாபாத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் இளந் துருக்கியர்களில் ஒருவரான மோகன் தாரியாவும், மற்றொருவரான சந்திரசேகரும் மத்திய அரசையும், மொரார்ஜி தேசாயின் போக்கையும் கண்டித்தனர்.

மொரார்ஜியைக் குறை கூறிய மோகன் தாரியாவைப் பார்த்து "நீர் என் முதலாளி அல்ல!" என்று ஆத்திரமாகக் கூறினர் தேசாய்! உடனே சந்திரசேகர் துடித்தெழுந்து, "இங்கே எல்லோரும் சமமானவர்கள்! உறுப்பினர்களின் கருத்துக்களை வெளியிடக் கட்சிக்குள்ளே தடை விதிப்பதும் ஆத்திரப்பட்டு அடக்குவதும் கூடாது" என்று ஆவேசமாகப் பதில் சொன்னர்.

மொரார்ஜி மீது குற்றம் சாட்டிய மோகன் தாரியா, சந்திரசேகர் இருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மைசூர் மாநில காங்கிரஸ் தலைவர் நாகப்பா ஆல்வா என்பவர் வலியுறுத்தினர். அவரது கருத்தைக் காமராஜர் அவர்களும், ராம்சுபாக் சிங், சி. பி. குப்தா, வீரேந்திர பட்டீல் ஆகியோரும் ஆதரித்து சந்திரசேகர், மோகன் தாரியா இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினர். சி. சுப்பிரமணியம் அவர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதை எதிர்த்தார்.

இறுதியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனல் அப்படி யாரும் தன்னிடம் தெரிவிக்கவில்லை என்று சந்திரசேகர் பத்திரிகையாளர்களிடம் கூறினர்.

"சந்திரசேகர் பேசுவதற்கெல்லாம் நான் ஏன் பதில் கூற வேண்டும்? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அவரிடம் இந்திரா காந்தி தெரிவித்தாரா இல்லையா என்று நான் ஏன் சந்தேகப்படவேண்டும்? கட்சியின் குறிப்புப் புத்தகத்தில் அந்தக் கண்டனம் எழுதப்பட்டுவிட்டது. என்னுடைய மதிப்பைக் குறைக்க சிலர் சுமத்தும் ஊழல் புகார் பயமுறுத்தல்களுக்காக நான் பயந்து பதவியை ராஜினமா செய்யமாட்டேன்".

என்று முழங்கினர் மொரார்ஜி! இந்த நிகழ்ச்சிகள் காங்கிரஸ் கட்சியின் மிகப்பெரும் பிளவுக்குத் தொடக்கமாக அமைந்தன. அந்தத் "துவஜாரோகண" அறிகுறிகள், நான் முதல்வர் பொறுப்பேற்று முதல் முறையாக டெல்லிக்குச் சென்றபோதுதான் தெரிய ஆரம்பித்தன!



# 10

## வண்டிப் பெரியார் நிகழ்ச்சி

அடக்குமுறைகள், சிறைச்சாலைகளை மட்டுமல்ல; எனது பொது வாழ்க்கையில் எத்தனையோவிதமான அராஜகங்களுக்கு ஈடுகொடுத்தும் விபத்துக்களைக் கடந்தும் தொடர்ந்து தொண்டாற்றிக் கொண்டிருக்கிறேன். அதில்தான் எனக்கு நிறைவான இன்பமுங் கூட!

பச்சிளங் குழந்தையாகத் திருக்குவளை கிராமத்து வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோதே கள்வர்கள் நுழைந்து வீட்டில் இருந்த எல்லாப் பொருள்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போயினர். அப்போது நான் தற்செயலாக விழித்துக்கொண்டு அழுதிருந்தால்கூடத் திருடர்கள் என் நெஞ்சாங்குழியில் மிதித்துக் கொன்றுவிட்டுப் போயிருப்பார்கள். அப்பொழுதே அழுது தொலைத்திருக்கக் கூடாதா?" என்று இப்பொழுதுகூட சில நேரங்களில் நினைத்துப் பெருமூச்சு விடுவதுண்டு!

இளம் பள்ளிப் பிள்ளையாகத் திருக்குவளைத் தெருத் திண்ணையில் பாடப்புத்தகம் படித்துக்கொண்டிருந்தபொழுது ஒரு கனமான கல் என் தலைக்குக் குறிபார்த்து வீசப்பட்டது. ஒரு நூலிழையில் என் தலை உடைந்து சிதறாமல் எப்படியோ அப்போதும் பிழைத்துக் கொண்டேன்.

சிறுவனாக இருந்தபோது என் தாயாருடன் ஒரு திருமணத்திற்கு வண்டியொன்றில் சென்றேன். கச்சனம் என்ற ஊருக்கு அருகே ஒரு பள்ளத்தில் அந்த வண்டி தலைகீழாகக் குடை சாய்ந்தது. அம்மா என்னை இறுக அணைத்துக் கொண்டார்கள்.

அம்மாவுக்குத்தான் சிறு சிறு காயங்கள். அப்போதும் தப்பித்துக் கொண்டேன்.

திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது, பிற்பகல் பள்ளிக்குச் செல்ல வெயிலை மறைக்கக் குடை பிடித்துக்கொண்டு போனபோது கோயில் காளை மிரண்டுபோய் என்னைத் துரத்திப் பாய்ந்து ஒரு பெரிய கல்லில் மோதிவிட்டுச் சென்றது. குடை தான் அதன் கொம்புகளால் கிழிந்ததே தவிர என் குடல் கிழிய வில்லை. அப்போதும் பிழைத்துக் கொண்டேன்.

திருவாரூரில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில் மாண வனாக இருந்து கொண்டே நீதிக்கட்சி வேட்பாளர்களுக்குத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தேன் - பணியாற்றினேன் என்பதற் காகத் தோல்வி கண்டவர்கள் வெறி உணர்ச்சியுடன் என் கால் கைகளைத் துண்டாடிவிட முயன்றபோது நண்பர்கள் தந்த முன் எச்சரிக்கையின் காரணமாகக் கடைசி விநாடியில் அந்தக் கொலை வெறியர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டேன்.

திராவிடர் இயக்கக் கொள்கை விளக்க நாடகங்களை திருவாரூர், நாகை, விழுப்புரம் போன்ற இடங்களில் நடத்திவிட்டு புதுவையில் கெப்ளே தியேட்டரில் தொடர்ந்து ஒரு மாதம் நடத்தி இயக்க உணர்ச்சியை உருவாக்கியதற்காகவும், புதுவை யில் திராவிடர் கழக மாநாட்டை நடத்துவதில் முனைப்பாக இருந்தமைக்காகவும் புரட்சிக் கவிஞருடனும், காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களுடனும் சென்ற என்னையும் அவர்களை யும் எதிரிகள் தாக்கினர்.

நாங்கள் சிதறியோடிய நிலையில் என்னை அடித்துப்போட்ட வர்கள் நான் இறந்துவிட்டதாகவே கருதிச் சென்று விட்டனர். நீண்ட நேரத்திற்குப் பிறகு மூச்சை தெளிந்து எழுந்து பெரியார் கரங்களால் காயங்களுக்கு மருந்து தடவப்பட்டது. அந்தக் கொலைச் சதியிலும் தம்பித்துக் கொண்டேன்.

விழுப்புரத்திற்கு அருகாமையில் நானும், உடுமலை நாராயணக் கவிராயரின் மாணவர் செல்லமுத்தும் சென்ற கார், வண்டியொன்றில் மோதி - அந்தப் பயங்கர விபத்திலும் சொற்ப காயங்களுடன் தப்பித்துப் பிழைத்தேன்.

முகவை மாவட்டத்தில் திருப்பத்தூருக்கருகில் நான், அன்பில், பராங்குசம், பண்ணை முத்துகிருஷ்ணன், தென்னன் ஆகியோர் சென்ற கார், மிகப் பயங்கரமான விபத்துக்கு உள்ளாகி - சாலையிலிருந்து உருண்டு சென்று பயணியர் விடுதி

வாசற் கதவை நொறுக்கிவிட்டுக் கவிழ்ந்து கிடந்தது. அப்போது தான் ஒரு கண்ணில் மட்டும் அடிபட்டு உயிர் பிழைத்தேன்.

ஒருமுறை கோவையிலிருந்து புஞ்சைப்புளியம்பட்டிக் கூட்டத்திற்குச் செல்லும்போது காங்க்ரீட்டால் ஆன மின்சாரக் கம்பங்களை ஏற்றிச் சென்ற வண்டியொன்று எங்கள் காரின் முன் பகுதியில் மோதி - காரின் முகப்பு நொறுங்கிப் போயிற்று! முன் இருக்கையில் அமர்ந்திருந்த எனக்கும் என்னுடன் இருந்த கோவை மாவட்டக் கழக முன்னோடிகளுக்கும் ஆபத்து ஏது மின்றித் தப்பிப் பிழைத்தோம்.

அன்பில் கிராமத்துக்கருகே கூட்டமொன்றை முடித்து விட்டுக் கொள்ளிடம் ஆற்றில் இறங்கிக் குறுக்கே வரும்போது-திடீரென வெள்ளம் கரைபுரளத் தொடங்கியது! மேலே மழை கொட்டுகிறது! நான், மாறன், அன்பில், பராங்குசம், குளித்தலை முத்துக்கிருஷ்ணன், பண்ணை முத்துகிருஷ்ணன், கோவிலடி ரத்தினம் - அந்தக் கழுத்தளவு வெள்ளத்தில் நள்ளிரவில் எப்படித்தான் உயிர் பிழைத்தோம் என்பதை இன்னமும் வியப்புடன்தான் எண்ணிட இயலுகிறது!

கல்லக்குடி தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்தபோது, திடீரெனப் புகை கக்கியவாறு பெரும் கூச்சலுடன் ரயிலின் சக்கரங்கள் என் கழுத்துக்கு அருகாமை வரையில் வந்து பய முறுத்தின! நான், முல்லை சக்தி, கஸ்தூரிராஜ், குமாரவேல், குழந்தைவேல்-கல்லக்குடிப் போராட்டத்திற்குப் பிறகு என்னைத் தவிர மற்ற நான்கு நண்பர்களும் ஒருவர்பின் ஒருவராக சில ஆண்டுகளில் இறந்து விட்டார்கள் அதிலும் நான் ஒருவன்தான் வயது அறுபதைத்தாண்டி விட்டேன்" எனக் கூறிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

1965-ல் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறைச்சாலைக்குச் சென்னையிலிருந்து நானூறு மைல் தொலைவு போலீஸ் லாரியில் கொண்டு சென்ற போது மதுரைக்கருகே நெஞ்சுவலியால் துவண்டு விழுந்தபோதும் – தொடர்ந்து பாளைச் சிறையில் தனிமையில் வதைக்கப்பட்டபோதும் - அந்த மனச்சுமைகூட என்னை மரண வாயிலுக்கு அழைத்துச் செல்லாமல் உயிர் பிழைத்து உலவலானேன்!

1967 பொதுத்தேர்தலின்போது சைதாப்பேட்டைத் தொகுதி வேட்பாளர் என்கின்ற முறையில் நானும், காஞ்சி மணி மொழியார், வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை இராச கோபால் ஆகியோரும் கோட்டூர்புரம் சென்றபோது அந்த நள்ளிரவில் எங்கள் காரை மடக்கி நாலாப்புறமும் பயங்கர

ஆயுதங்களுடன் தாக்கிய பொழுது நான் மட்டும் எதிரிகளால் குறி பார்க்கப்பட்டு இரவு முழுதும் சாரங்கன் என்ற குடிசைவாழ் தோழனின் பாதுகாப்பில் இருந்து உயிர் பிழைத்தேன்.

பொதுப்பணி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது தஞ்சைக் கவியரங்கத்திற்காகக் காரில் சென்ற நேரத்தில் திண்டி வனத்திற்கருகே நடைபெற்ற விபத்து சாதாரணமானதா? கார், கோழிமுட்டையின் ஓடுபோல் சிதறிவிட்டது! மதுரை முத்து, பொன்னிவளவன், கருணானந்தம் ஆகியோர் காயமின்றித் தப்பினர். பாண்டி என்ற காரோட்டிய நண்பரின் கால் முறிந்தது! ஏற்கனவே திருப்பத்தூர் விபத்தில் அடிபட்டிருந்த அதே கண்ணில் மீண்டும் அடி! மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதி! அந்தப் பெரும் விபத்திலும் பிழைத்துக் கொண்டேன்

இவற்றையெல்லாம் முதல் பாகத்தில் குறிப்பிட்டிருக் கிறேன் என்றாலும்; இன்னும் விடுபட்டிருப்பவை ஏராளம்!

கேரள-தமிழக எல்லையில் வண்டிப் பெரியார் எனும் ஒரு ஊர்! கேரளப் பகுதி! கம்பம் பள்ளத்தாக்கைத் தாண்டிச் செல்லவேண்டும்! 1961 ஜனவரி நாலாம் தேதி - குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான் வெற்றி பெற்றிருந்த காலம்! வண்டி பெரியாரில் ஒரு சிறப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்! நான் சென்னையிலிருந்து திருச்சி சென்று மதுரை வழியாக வண்டிப் பெரியார் போவதாகத் திட்டம்! மன்னை, அன்பில் என்னுடன் வந்தனர்! மாயூரம் காந்தி என்று ஒரு நண்பர்! என் வாழ்விலும், தாழ்விலும், என்றென்றும் என்னிடம் உயிரை வைத்திருந்த தோழர்! அண்மையில்தான் காலமானார்! அவரும் அப்போது எங்களுடன் வண்டிப் பெரியாருக்கு வந்தார்!

இலட்சிய நடிகர் என்று என்னால் அன்புடன் அழைக்கப் பட்ட எஸ். எஸ். இராஜேந்திரனும், மறைந்த மாவீரன் ராஜாங்க மும் எங்களுடன் வந்தனர். மதுரை மாவட்டமானாலும் அல்லது அதனைக் கடந்து எங்கு சென்றாலும் என்னுடன் இணைந்து பயணம் செய்யக்கூடிய மதுரை முத்துவும் என் காரிலே வந்தார் மாலை ஏழு மணிக்கு ஒரு மண்டபத்தில் வண்டிப் பெரியாரில் கூட்டம் தொடங்கியது.

ஏதோ கலவரத்தை எதிர்பார்ப்பதைப் போலக் கேரளப் போலீசார் சூழ்ந்திருந்தனர். சில்வர்ஸ்டர் என்ற நண்பர் முதலில் எங்களை வரவேற்றுப் பேசினார். விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த

பேச்சு! மலையாள மொழியில் கர்ச்சித்தார்! அந்தக் கர்ச்சனையினூடே கேரளத்துப் போலீஸ் அமைச்சர் சாக்கோ என்பவரைக் கடுமையாகத் தாக்கிப் பேசிவிட்டார்! அவ்வளவுதான்; அடுத்த விநாடியே பாதுகாப்புக்கு இருந்த அனைத்துப் போலீசாரும் வெளியேறிவிட்டனர்! ஒரே கூச்சல்! மேடையை நோக்கிப் பாய்ச்சல்! மின் விளக்குகளின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன!

இருளில் திசை தெரியாமல் தடுமாறினோம்! நாற்காலிகள் பறக்கும் ஒலி கேட்கிறது! என்னை; அன்பில், மன்னை, மதுரை முத்து, மாயூரம் காந்தி ஆகியோர் சூழ்ந்துகொண்டு வெளியே கொண்டு வந்தனர். நண்பர்கள் எஸ். எஸ். ஆர்., ராஜாங்கம் இருவரும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. வெளியே வந்த எங்களைக் கலவரக் கும்பல் வளைத்துக்கொண்டு வெறிக் கூச்சல் போட்டது! அந்தக் கும்பலிலேயே நல்ல குணம் படைத்த ஓரிருவர் இருந்தனர்! அவர்கள் எங்களை, எங்களது காரிலே ஏற்றி "தமிழ்நாட்டுக்குத் திரும்பிப் போங்கள்!" என்று கூறினர்.

எங்கள் கார் அங்கிருந்து புறப்பட்டு சிறிது தொலைவு சென்றதும் - ராஜாங்கம், ராஜேந்திரன் இருவரும் வரவில்லையே; அவர்களை விட்டுவிட்டு நாம் மாத்திரம் எப்படிச் செல்வது என்று மீண்டும் காரை வண்டிப் பெரியாருக்குத் திருப்பச் சொன்னோம்.

"போனவர்கள் ஏன் திரும்பி வந்தீர்கள்?" என்று கலவரக்காரர்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு காரைவிட்டு இறக்கினர்கள்! போலீசார் "ஏன்" என்றே கேட்கவில்லை! மன்னை; அன்பில், மதுரை முத்து, மாயூரம் காந்தி உடலால் மட்டுமல்ல! உள்ளத்தாலும் உறுதி படைத்தவர்கள்! இருந்தாலும் ஐநூறு கலகக்காரர்களிடம் என்ன செய்ய முடியும்? ஏதாவது முரட்டுத்னமாக அவர்கள் பேசியிருந்தால்கூட அந்த இடத்தில் சில தலைகள் உருண்டிருக்கும்! ரத்த வெள்ளம் பெருகியிருக்கும்!

எஸ். எஸ் ஆர்., ராஜாங்கம் இருவரையும் காணவில்லையே என்ற கவலை! பரபரப்பு! அத்துடன் என்னை அந்தச் சாலையில் இங்குமங்குமாக இழுத்துக் கொண்டு கலகக்காரர்கள் நடக்கிறார்கள்!

இரவு எட்டு அல்லது ஒன்பது மணியிலிருந்து இரவு இரண்டு மணி வரையில் நான் அந்த நீண்ட சாலையில் இங்குமங்கும் இழுத்துச் செல்லப்படுகிறேன். என்னைப் பாதுகாக்க

அன்பிலும், மதுரை முத்துவும், மன்னையும், மாயூரம் காந்தியும் என்னருகே வந்து கொண்டேயிருக்கிறார்கள்! அவர்கள் கண்களில் நெருப்பு! அதே சமயம் நீர்த்திவலைகள்! கலகக்காரர்கள் என்னிருக்கரங்களையும் பற்றி இழுத்தவாறு இங்குமங்கும் ஓய்வின்றி அலைக்கழித்து நடந்து கொண்டேயிருக்கிறார்கள்!

எங்களுக்கு நடைபெறும் அந்தத் "தண்டனை பவனி" வண்டிப் பெரியார் போலீஸ் ஸ்டேஷன் வழியாகவும் அடிக்கடி போகிறது, வருகிறது! போலீசார் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் நண்பர் மதுரை முத்துவுக்குப் பொறுக்க முடியவில்லை! போலீஸ் ஸ்டேஷன் அருகே என்னைக் கலகக்காரர்கள் இழுத்துக் கொண்டு போனபோது, முத்து; அந்தப் போலீஸ்காரர்களைப் பார்த்து "அடப்பாவிகளே! இந்தக் கொடுமையை வேடிக்கை பார்க்கிறீர்களே! நியாயந்தானா?" என்று கதறியே விட்டார்.

அன்பில், ஒரு குச்சியை எடுத்து வீசியே பத்து பேரை வீழ்த்துவார்! மன்னையும் சிலம்பம் தெரிந்தவர்; அப்போது மலை போல் உடல் படைத்தவர்! மாயூரம் காந்தியோ மதயானைக்கு ஒப்பானவர்! மதுரை முத்து உடலெங்கும் விழுப்புண் பெற்றவர்! அந்த நால்வரும் அங்கு சற்று நிதானம் காட்டிய காரணத்தால் தான் அந்த இடம் கொலைக்களம் ஆகாமல் இருந்தது! முத்துவின் முறையீட்டைப் போலீசார் காதில் போட்டுக் கொள்ளாமலே கேலியாகச் சிரித்தனர்!

கலகக்காரக் கூட்டம், அடிக்கடி மதுக்கடைகளுக்குள் நுழைந்து வயிற்றை நிரப்பிக் கொண்டு போதையில் தள்ளாடத் தொடங்கியது.

திடீரென்று "ஆ! அய்யோ!" என்ற அலறல்! "கொலை! கொலை!" என்ற கூச்சல்! போதை தலைக்கேறி கலகக்காரர்களே ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டனர்! வெட்டிக் கொண்டனர்! அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாங்கள் ஐவரும் காரில் ஏறிப் பறந்து விட்டோம்!

நண்பர்கள் எஸ். எஸ். ஆரும், ராஜாங்கமும் கலவர ஆரம்பத்திலேயே மலையில் குறுக்கு வழியாகக் கூடலூர் பக்கம்

போய் விட்டார்கள் என்ற செய்தி எங்களுக்குக் கிடைத்த காரணத்தால், விடியற்காலை அளவில் கூடலூர் போய்ச் சேர்ந்து அவர்களையும் சந்தித்து ஆறுதல் அடைந்தோம்.

இப்படி ஒரு காட்டுமிராண்டித்தனமான கலவரத்திலிருந்து அன்றைக்குத் தப்பித்த நான் அதனைப் போன்றதொரு மாபெரும் விபத்திலே சிக்கிக் கொள்ள நேர்ந்தது முதலமைச்சர் பொறுப்பையேற்ற சில நாட்களுக்குள்ளாக!






# 11

## ஆப்பக்கூடல் ஆபத்து

ஆப்பக்கூடல் ஆபத்து என்றே, அதற்குப் பெயரிட்டு அழைக்கலாம்; அவ்வளவு பெரிய விபத்து ஒன்று ஏப்ரல் முதல் வாரத்தில் கோவை மாவட்டத்தில் ஏற்பட்டு அதில் நானும் அமைச்சர்கள் சிலரும் சிக்கிக் கொண்டோம்.

புதிய அமைச்சரவை பொறுப்பேற்றவுடன் மக்கள் தேவைக்கான காரியங்கள் வேகமாக நடைபெற ஆரம்பித்தன. பிற்படுத்தப்பட்டோர் நலன்களைக் கவனிக்கும் பணியும் ஆதி திராவிடர் நலன்களைக் கவனிக்கும் துறையுடன் இணைக்கப் பட்டிருந்ததால், இரு பிரிவினர் நலன்களும் செம்மையாகக் கவனிக்கப்படவில்லையென்றும் எனவே இரண்டு துறைகளையும் தனித்தனியே பிரிக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே காங்கிரஸ் உறுப்பினராக இருந்த திருமதி அனந்தநாயகி போன்றவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருந் தார்கள். அதைக் காங்கிரஸ் ஆட்சியில் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அந்த எண்ணம் என் மனத்திலும் நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

1-4-69 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் நலம் பேண ஆதி திராவிடர் (அரிசன) துறை இருப்பதைப் போல பிற்படுத்தப்பட்ட மக்கள் நலன்களைக் காத்திட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஒன்று தனியாக உருவாக்குவதென்று முடிவெடுக்கப்பட்டது.

அந்தத் துறைக்கெனத் தனியாக ஒரு அமைச்சரை நியமிப்பது என்றும் அப்படி நியமிக்கப்படும் வரையில் அந்தத்

துறை முதலமைச்சரின் பொறுப்பிலே இருப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வறட்சி நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டது மட்டுமின்றி, போதுமான உணவு தானியத்தையும்–தேவையான வறட்சி நிதியையும் மாநில அரசுக்கு மத்திய அரசு உடனடியாகத் தந்து உதவிட வேண்டுமென்று சட்டப்பேரவையில் தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் பேசும் போது காங்கிரஸ் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் "நீங்கள் எப்போதும் உலகில் கிடைக்காத விஷயங்களைத்தானே கேட்பீர்கள்!" என்று கிண்டல் செய்தார். அதற்கு நான்: "அய்யா! நாங்கள் ஒன்றும் பாரிஜாத மலரைக் கேட்கவில்லை! கிடைக்கக்கூடிய தானியத்தையும், நிதியையும்தான் கேட்கிறோம்!" என்று கூறினேன்.

கருத்திருமன், ஒரு எதிர்க்கட்சிக்காரர் என்ற முறையில் கேலியாகவும், காரசாரமாகவும் பேசுவாரே தவிர பொதுவாக நல்ல உள்ளம் படைத்தவர். அவர் அவையில் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த போதுதான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற தகுதியும், அந்தப் பதவிக்குரிய வசதிகளும் வழங்கப்படுமென்று அறிவித்தேன். அதனை அவர் வரவேற்றார் என்றாலுங் கூட, அவர்களது கட்சிக்குள்ளிருந்த பிணக்கின் காரணமாக அந்த வசதிகளை அப்போது ஏற்பதற்கில்லையென்று கூறிவிட்டார்.

ஆனால், மேலவையில் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் காங்கிரஸ் தலைவராக இருந்தபோதிலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், அதற்குரிய வசதிகளையும் ஏற்றுக் கொண்டார். அப்பொழுதுதான் முதன் முதலாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அதற்கு வசதிகள் என்பதும் உருவாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் வறட்சி நிலவரத்தை அனைத்துக் கட்சிகளும் உணர்ந்து செயல்பட்டபோது, காங்கிரஸ் கட்சி மட்டும் தமிழகத்தில் வறட்சி இருப்பதையே ஒப்புக் கொள்ளாதது போல அறிக்கைகளை விட்டுக் கொண்டிருந்தது.

வறட்சிப் பகுதிகளைக் காண்பதற்குப் பிரதமரை நான் அழைத்ததுகூடத் தேவையற்றது என்றும் தமிழ்நாட்டில் பசுமைத் திட்டுக்கள் நிறைய இருக்கின்றன என்றும் அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான் முதலில் குறிப்பிட்டவாறு டெல்லி வட்டாரக் காங்கிரசில் சந்திரசேகர், மோகன் தாரியா ஆகியோர் துவக்கி வைத்த சர்ச்சைகள் விரிவடைந்து காங்கிரஸ் கட்சி, பெரும் பிளவை எதிர்நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அதற்கு மற்ெறாரு எடுத்துக் காட்டாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இருந்து சி. சுப்பிரமணியம் ராஜிநாமா செய்தார். 1969 மார்ச் 8-ஆம் நாள் அந்த ராஜிநாமா, காரியக் கமிட்டிக்குச் சென்றது.

பீகாரில் அப்போதே ஜனதா என்று ஒரு கட்சியிருந்தது. அந்தக் கட்சியுடன் காங்கிரஸ் கூட்டு சேர்ந்ததை சி. சுப்பிர மணியம் எதிர்த்தார். அத்துடன் அந்த ஜனதாக் கட்சியைச் சேர்ந்த "ராம்கார் ராஜா" என்பவரை பீகார் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டதையும் அவர் கண்டித்தார். அதனாலேயே அவர் காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்தார்.

பீகாரில் எடுக்கப்பட்ட முடிவுக்கு திரு. நிஜலிங்கப்பா பொறுப்பேற்றுக்கொண்டபோதிலும், சி. எஸ்., தனது ராஜிநாமாவை திரும்பப் பெறவில்லை. பிறகு பீகார் காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்து ராம்கார் ராஜாவை நீக்கிவிடுவதென காரியக் கமிட்டி முடிவு செய்தது. அதனையொட்டி சி. எஸ். அவர்கள் ராஜிநாமாவை திரும்பப் பெற்றார்.

ஆனால் அந்த மந்திரி சபையில் ராம்கார் ராஜாவின் தம்பியும், ராஜாவின் தாயாரான ராஜமாதா சசாங்க மஞ்சரியும் இடம் பெற்றார்கள் என்பது கவனிக்கத்தக்க விவகாரமாகும்! காங்கிரசில் விரைவில் இருந்த வெடிப்புக்கு மேலும் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின!

காங்கிரஸ் இரண்டாகப் பிரியக் கூடிய அரசியல் நிகழ்ச்சிகள் இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த போதுதான்- அமெரிக்க நாடு விண்வெளியில் மனிதர்களை ஏற்றிச் செல்லும் "அப்போலோ 9" என்ற ராக்கெட்டைப் பறக்கவிட்டது.

1969 மார்ச் 3-ஆம் நாள் விடப்பட்ட அந்த ராக்கெட்டில் மெக்ட்விட், சுவிக்கர்ட், ஸ்காட் என்ற மூன்று வானவெளி வீரர்கள் சென்றார்கள். இதுவரை விடப்பட்ட ராக்கெட்டுகளை விட அது வித்தியாசமானது. விண்ணில் குறிப்பிட்ட தொலைவு சென்றதும் ராக்கெட் இரு பகுதிகளாகப் பிரியும். பிரிந்த இரண்டு பகுதிகளும் தனித்தனியாக சில மணி நேரம் பூமியைச் சுற்றும். பின்னர் இரண்டும் ஒன்று சேரும்.

இந்தச் சோதனையின் மூலம் மனிதன் சந்திரனில் கால் வைத்துவிட்டுத் திரும்பவும் ராக்கெட்டில் வந்து இணைந்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டது. அதன் அடுத்தடுத்த கட்டமாகவே மனிதன் சந்திர மண்டலத்திற்குச் சென்று திரும்பிய சாதனை நிகழ்ந்தது.

அமெரிக்க ராக்கெட் இரண்டாகப் பிரிந்தது. ஆறு மணி நேரத்தில் மீண்டும் ஒன்றாக வந்து இணைந்து பத்திரமாக பூமிக்குத் திரும்பியது. ஆனால் இரண்டாகப் பிரியக்கூடிய சூழ்நிலைக்கு உள்ளான இந்திய தேசீய காங்கிரஸ் ஒன்றாகக்கூடிய வாய்ப்பு பெறாதது மட்டுமல்ல; பிரிந்தவற்றில் ஒரு பகுதி பல்வேறு கட்சிகளாக உடைந்து சிதறிப்போயிற்று.

ஆட்சிப் பொறுப்பில் இந்திராகாந்தி தலைமையில் இருந்த காங்கிரஸ் மட்டுமே அதிகாரச் செல்வாக்கின் காரணமாக தாக்குப் பிடிக்க முடிந்தது. அந்த விபரங்களையெல்லாம் இனி வரும் பகுதிகளில் விரிவாக எழுதலாமென்றிருக்கிறேன்.

கடந்த அத்தியாயத்தில் எனக்கு நேர்ந்த விபத்துகள், சந்தித்த ஆபத்துகள் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருந்தேனல்லவா; அவற்றில் ஒன்றுதான் 1969 ஏப்ரல் ஏழாம் நாளன்று கோவை மாவட்டம் ஆப்பக்கூடலில் நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் அமைத்திருந்த சாலையொன்றைத் திறப்பதற்காக விழாவை பொள்ளாச்சி மகாலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார். நிதி அமைச்சர் மதி அவர்களின் தலைமையில் நான் திறப்பு விழா நிகழ்த்திட அழைக்கப்பட்டிருந்தேன். அமைச்சர்கள் சாதிக் பாட்சா, மா. முத்துசாமி ஆகியோரும் வந்திருந்தனர்.

விழாக்கள் நடத்துவதில் வல்லவர் என்று பெயர் பெற்றவர் மகாலிங்கம்! ஆப்பக்கூடலில் பரந்த மைதானம் எதுவுமில்லாத காரணத்தால் வயல்களை ஒழுங்குபடுத்தி அங்கே மிகப் பிரமாண்டமான கொட்டகை அமைத்திருந்தார். கொட்டகைக்கு நிறுத்தப்பட்டிருந்த தூண்கள், ஏதோ நிரந்தரமாக இருக்கப்போகிற மண்டபத்திற்கு அமைக்கப்பட்டதுபோல அவ்வளவு பருமனாகவும், வலிவு வாய்ந்தவைகளாகவும் இருந்தன.

மூவாயிரம் பேர் தாராளமாக உட்காரக்கூடிய கொட்டகை. அவ்வளவு பேருக்கும் நாற்காலிகள்! கொட்டகையே அப்படியென்றால் மேடையின் அழகைக் கேட்கவும் வேண்டுமா? விழாவுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் வந்திருந்தனர்

பலரது கைகளில் குழந்தைகள் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தன. ஜொலிக்கும் அணிமணிகளைப் பூட்டிக்கொண்டு அமர்ந்திருந்த தாய்மார்களுக்கு அடுத்த வரிசையில் ஆயிரக்கணக்கான ஆண்கள் வீற்றிருந்தனர்.

விழா நடந்த இடம் வயல்வெளி ஆனதால், எங்கள் கார்களைச் சற்றுத் தொலைவில் உள்ள சாலையில் நிறுத்திவிட்டு நடந்தே விழா மேடைக்குச் சென்றோம். வாசலில் யானைகள் அலங்காரமாக நிறுத்தப்பட்டு எங்களை வரவேற்று மாலையணிவித்தன.

"ஏன்; இவ்வளவு ஆடம்பரமான விழா?" என்று நான் நண்பர் மகாலிங்கத்தைக் கேட்டுக்கொண்டே மேடைக்குச் சென்று அமர்ந்தேன். "சர்க்கரை ஆலைக்கு இது முக்கியமான சாலை! அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடத்தான்!" என்று விளக்கமளித்தார். "ஏ, அப்பா! அதற்காக ஆயிரக்கால் மண்டபத்துத் தூண்களைப் போல இப்படி பந்தல் கால்களை நட வேண்டுமா?" என்று கேட்டேன். வயல் மண் களி மண்ணாக இருப்பதால் கெட்டியான மரங்களை நட வேண்டியதாயிற்று" என்றார்.

பிறகு விழா ஆரம்பமாயிற்று. திரு. மகாலிங்கம் தனது வரவேற்புரையை ஆற்றி முடித்தார். விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த மதி அவர்கள் பேசுவதற்கு முன்பே நான் சாலைத் திறப்பு விழாவை நடத்திவிட்டு இறுதியில் பேசுவதாக இருந்தேன். மதி பேசத் தொடங்கிய பொழுது இரவு ஏழு மணி!

சிறு தூறல்கள்! பெருமழையொன்றும் வராது; அப்படியே வந்தாலும் கொட்டகையில் ஒரு துளியும் விழாது என்று மேடையிலிருந்தோர் கூறிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் மெல்லக் காற்று வீசியது. திடீரென அந்தக் காற்று சுழன்று சுழன்று அடிக்கத் தொடங்கியது.

ஏதோ ஒன்று நிகழப்போகிறது என்ற சந்தேகம் என் உள்ளத்தில் பலமாக எழுந்தது. கல் மண்டபம் போல் கட்டப்பட்டிருந்த அந்தக் கொட்டகை அந்தக் காற்றில் மெல்ல அசைந்து கொடுத்தது. கோபுரமொன்று நமக்கு அருகாமையில் இடிந்து விழுவதுபோல இடி முழக்கம். சுழற்காற்று மேலும் வலுப்பெற்று வீசியது. சிறிது நேரத்தில் காற்று நின்றுவிடும் என்ற தைரியத்தில்தான் அனைவரும் உட்கார்ந்திருந்தனர்.

ஆனல் கண்மூடிக் கண் திறப்பதற்குள் அந்தப் பேராபத்து நடந்துவிட்டது! காற்று தனது முழு ஆற்றலையும் கொண்டு

சுழன்றடித்த வேகத்தில் கொட்டகை தடார் என விழுந்தது. அது விழுந்த வேகத்தில் ஒரு ஆயிரம் பேருடைய உயிரை யாவது குடித்திருக்க வேண்டும்! மின்னல் தாக்குதலினாலோ அல்லது எலக்ட்ரிஷியன், மெயின் போர்டை திடீரென வெட்டி விட்டதினாலேயோ மின் இணைப்புக் கம்பிகள் நல்லவேளையாக செயலற்றுப் போய்விட்டன. கொட்டகைக்குள்ளிருந்து ஆண்கள் பெண்கள் அலறல்! குழந்தைகளின் கதறல் ஒலி!

மேடையில் இருந்த எங்களுக்கு என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை. காரணம், எங்கள் மேடை மீதும் கொட்டகை விழுந்து கிடந்தது. சுமார் அரைமணி நேரம் பயங்கரமான சப்தங்கள்தான் கேட்டுக் கொண்டிருந்தன. என்னை ஒருவர் தூக்கிக்கொண்டு, கொட்டகையின் கீற்றுக்களைப் பிரித்துக் கொண்டு அவற்றின் மேல் நடப்பது தெரிந்தது. ஈரோடு சின்னச்சாமிதான் அவர் என்பது அவரது குரலில் இருந்து புரிந்தது. அவருக்கும் வழி தெரியாமல் அந்த இருட்டில் இரு வரும் சேர்ந்து ஒரு குழியில் விழுநதோம்.

"அய்யோ மதி என்ன ஆனார்? சாதிக், முத்துசாமி எங்கே? ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆயிரக்கணக்கில் கொட்ட கைக்குள் சிக்கியிருப்பார்களே! அவர்களுக்கு உதவி செய் யுங்கள்!" என்று தொண்டை வலிக்கக் கத்திக்கொண்டே இருந் தேன்.

அதற்குள் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த கார்களின் வெளிச்சம் விழா நடந்த கொட்டகையின் பக்கம் திருப்பப் பட்டது. கார்களில் இருந்த காரோட்டிகளும், பாதுகாப்புக்கு வந்த காவலர்களும், கழகத்தினரும் மீட்புப்பணியில் ஈடு பட்டனர்! மழையோ கொட்டிக்கொண்டிருக்கிறது! காற்று மட்டும் நின்றுவிட்டது!

நான் உட்பட எல்லோருமே சிறு சிறு காயங்களுடன் தப்பிவிட்டோம்! அவ்வளவு பெரிய விபத்தில் ஒரு சிறு நகை நட்டுகூட யாருக்கும் காணாமற் போகாததும் பெரும் ஆச்சரிய மாக இருந்தது. என்னைக் காரில் கொண்டுபோய்ச் சேர்த்த சிறிது நேரத்திற்கெல்லாம் மற்ற அமைச்சர்களையும் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

அனைவருமே ஆபத்தின்றிப் பிழைத்து விட்டார்கள் என்ற போதிலும் நீண்ட நேரம் பொள்ளாச்சி மகாலிங்கத்தை மட்டும் காணவில்லை. இறுதியாக அவரையும் மேடையில் இருந்த ஒரு மேஜைக்கடியில் கண்டுபிடித்தார்கள். கிழிந்துபோன சட்டை

வேட்டி காற்றில் பறந்துவிடவே ஒரு ஜட்டி மட்டும் இடையில்! இந்த நிலையில் தழுதழுத்த குரலில் என்னிடம் வந்து "இப்படியாகிவிட்டதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார். அவர் மிகவும் மனம் ஒடிந்து போயிருப்பதை உணர்ந்து அவரைத் தேற்றினோம்.

இருந்தாலும் எங்களுக்கிருந்த படபடப்பில் அன்று கோபியிலும், ஈரோடு நகரிலுமிருந்த பொதுக்கூட்டங்களை ரத்து செய்துவிட்டு, உடனடியாகச் சென்னை திரும்பினோம்!

வீட்டிலேயே ஓய்வெடுத்துக் கொண்டு டாக்டர்களின் சிகிச்சையைப் பெற்றேன். சென்னைக்கு வந்திருந்த குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் அந்த விபத்து பற்றிக் கேள்விப்பட்டு உடனடியாக வீட்டுக்கு வந்து விபத்தில் தப்பியது குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.



# 12

## எங்கிருந்தாலும் வாழ்க!

"தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்துக் கொண்டாய்" என்று எனது உறவினர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு "ஆப்பக் கூடல் ஆபத்திலிருந்து காப்பாற்றிய ஆண்டவனே!" என்று நன்றியைப் பக்தி பூர்வமாகப் பொழிய ஆரம்பித்தனர்.

எத்தனையோ விபத்துச் செய்திகளைப் படிக்கிறோம். பார்க்கிறோம். ஒரு ரயில் கவிழ்ந்திருக்கும். சில நூறு பேர்கள் பிழைத்துக்கொள்வார்கள். பல நூறு பேர்கள் நசுங்கியும், மிதியுண்டும், உடல் நொறுங்கியும் பிணமாகியிருப்பார்கள். அப்போதும் தெய்வாதீனமாக அந்தச் சிலர் உயிர் தப்பியதாகச் சொல்லப்படுமே தவிர, பலர் உயிர் இழந்தது குறித்து "தெய்வாதீனம்" வாய் மூடி மௌனியாகவே இருந்து விடும்.

எத்தனை விமான விபத்துக்கள், எத்தனை பேருந்து விபத்துக்கள், எத்தனை புயல் வெள்ளச் சீற்றங்கள், எத்தனை எத்தனை கட்டிடம் இடிந்து விழுந்த விபத்துகள், எத்தனை திரையரங்குகள் தீக்கு இரையான விபத்துக்கள் - இவற்றில் எல்லாம் பலர் மடிந்திட நேரிட்டாலும் கூட, தப்பிப் பிழைத்த ஒரு சிலர் மட்டும் தெய்வாதீனமாக மீட்கப்பட்டனர் என்று கருதுவது - அல்லது கூறுவது - அர்த்தமற்ற ஒரு நம்பிக்கை யாகவே தொடர்ந்து வருகிறது.

அந்த நம்பிக்கைகளில் இருந்து எங்கள் வீட்டில் என் தாயார் உட்பட அனைவரும் விடுபட்டிருந்தாலுங்கூட, எனது பெரிய அக்காள் (அமிர்தத்தின் தாயார்) மட்டும் அழுத்தமான வைதீகப் பற்றுக் கொண்டவர். சகுனம் பார்க்காமல் அடுத்த தெருவுக்கு; ஏன் - அடுத்த வீட்டுக்குக்கூட அடியெடுத்து வைக்கமாட்டார். அவர்களது பிடிவாதமான சனாதனப் போக்கை யும் ஆச்சார அனுஷ்டானங்களையும் நான் ஏற்றுக்கொள்ளா விடினும் எதிர்க் கருத்துக்கள் எதனையும் அக்காளின் மனம் புண்படும்படி நான் கூறுவதில்லை.

தெய்வம் உண்டா? இல்லையா? என்ற சர்ச்சையில்கூட எனக்கென ஒரு தனிக் கருத்து இருந்தாலும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் வாசகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டுவதும் - "உண்மை

யின் பேர் தெய்வம் என்போம், மற்றும் ஓதிடும் தெய்வங்கள் பொய் என்றுரைப்போம்" எனப் பாரதியார் திட்டவட்டமாகக் கூறுவதும் – இந்தச் சமுதாய மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுமே யானால், சாதிகளின் பெயராலும் கடவுள்களின் பெயராலும் நடைபெறும் சண்டை சச்சரவுகள் எனும் நச்சரவங்கள் நலிந்து மெலிந்து ஒழிந்திட வழியேற்படும்.

ஒரு சக்தி இல்லாமல் உலகில் காரியங்கள் நடைபெறு கின்றனவா? ஆத்திகர் தரப்பிலிருந்து எழுப்பப்படும் இந்தக் கேள்விக்கு ஒரே பதில்: "ஆமாம்! சக்தியின் சுழற்சியால்தான், சகலமும் நடைபெறுகிறது" என்பதுதான்! இதில் ஏற்படுகிற கருத்து மாறுபாடு ஒன்றே ஒன்றுதான்!

இந்த உலகம் எனப்படும் பூமி மட்டுமல்ல; விண்வெளி யில் இந்தப் பூமியைப் போலவும், இதைவிடப் பலமடங்கு பெரியதாகவும் எத்தனையோ கோளங்கள் இன்னமும் எண்ணிக்கைக்கு அடங்காமல் பரவிக்கிடக்கின்றன! வானத்து மின்மினிகள் என வர்ணிக்கப்படுகிற நட்சத்திரங்கள், பூமியிலி ருந்து கோடிக்கணக்கான மைல்கள் தொலைவில் பூமியை விடப் பல மடங்கு; அளவில் பெரிதாய் விளங்குகின்றன! சந்திரமண்டலத்திற்கு மனிதன் சென்று திரும்பிய வெற்றிக் கொடியை விஞ்ஞான யுகம் தூக்கிப்பிடித்துள்ள காலம் இது! இந்த விஞ்ஞானச் சாதனங்கள் இல்லாத காலத்திலேயே விண்வெளிக் கிரகங்களின் இயக்கத்தைக் கண்டறிந்து, கணித்துச் சொன்ன மேதைகளாக நமது முதாதையர் பலர் திகழ்ந்திருக்கிறார்கள்.

கோள்கள் சுழல்கின்றன! சூரியனின் ஒளி பூமியில் பாய்ந்து பகல் பொழுதைத் தருகிறது! அப்போது பூமியின் இன்னொரு பகுதி இரவில் குளித்துக்கொண்டிருக்கிறது! நிலவு, தேய்கிறது - வளர்கிறது; அது போன்ற தோற்றத்தைக் காட்டு கிறது! அணுவை எத்தனையோ லட்சத்தில் ஒன்றாகப் பிளந்தால் இருக்கக்கூடிய அளவான கிருமிகளின் உருவத்திலேயிருந்து, யானைகள் வரையிலான பெரிய உருவங்கள் இந்தப் புவியில் தோன்றுகின்றன. இவற்றுக்கிடையேதான் மனிதனும் தோன்றி னான். எல்லா உயிரினங்களுக்கும் உண்பதற்கு வாயும், கொள்வ தற்கு வயிறும், செரித்தது போக எஞ்சியதைக் கழிப்பதற்கு வகையும் அந்தந்த உயிரினங்களுக்கு ஏற்றவாறு அமைந்து உள்ளன. உடலுறவு காரணமாக ஒரு சிறு துளியில் ஐந்து அல்லது ஆறடி மனிதனின் அங்கமெல்லாம் அடங்கியிருக்கிற

விந்தையைக் காணுகிறோம். வாயில்லாப் பிராணிகள் யாரும் சொல்லித் தராமலே "செக்ஸ்" விவகாரங்களைக் கற்றுக்கொண்டு, பிள்ளைப் பேறுகளைக் கூடத் தங்களுக்குத் தாங்களே கவனித்துக் கொள்கின்றன!

இயற்கை, செழிப்பையும் வழங்கிச் சிரிக்கிறது! சீற்றமும் கொண்டு சீரழிக்கிறது! மாநதிகள், மரமடர் காடுகள், அழகுமிழ் நீர்வீழ்ச்சிகள், அருவிகள்-இப்படி எத்தனை எத்தனையோ?

இத்தனைக்கும் ஒரு சக்திதான் காரணம்! ஆனால் அந்தச் சக்தி; ஒரு பெண் உருவாகவோ அல்லது ஆண் உருவாகவோ அல்லது இரண்டும் இணைந்த உருவாகவோ ஓரிடத்தில் அமர்ந்து, சிந்தித்து, கற்பனைகள் செய்து இவற்றையெல்லாம் உருவாக்கி-அப்படி உருவாக்கியதைத் தானே அழித்து-அல்லது, தான் உருவாக்கிய உயிர்களிலேயே நல்லவைகளாக ஒரு பகுதியையும் தீயவைகளாக ஒரு பிரிவையும் அமைத்து-செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா என்கிற கேள்வி கிளம்பும் போதுதான்-வாதமே வளர்கிறது!

பூமியுட்பட விண்வெளியில் கோள்களின் இயக்கங்களுக்கும், அந்தந்தக் கோள்களில் உள்ள மாறுபாடுகளுக்கும்-உருவமற்ற இயக்கும் சக்தியொன்று காரணமாகத் திகழ்கிறது! அந்தச் சக்தி, பூமியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரையில் ஆகர்ஷண சக்தியாக இயங்குகிறது! பூமியையும் தன்னைத் தானே சுற்றவைத்து சூரியனையும் சுற்றி வருமாறு செய்துகொண்டிருக்கிறது! எல்லையற்ற அண்டவெளியில் நிகழ்கின்ற அற்புத மாற்றங்கள் அனைத்துக்கும் அந்தச் சக்தியே அடிப்படை! அந்தச் சக்தி, படைக்கப்பட்டதல்ல! கோடி-கோடி-கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்பு என்றெல்லாம் வரையறுத்துக் கூறமுடியாத காலந்தொட்டு அந்தச் சக்தி இயங்குகிறது. அந்தச் சக்தியின் காரணமாக யுக யுகாந்திரமாக ஏற்படும் பரிணாம வளர்ச்சி (Evolution)யின் பல்வேறு கட்டங்கள்தான்; நாம் வாழுகிற பூமியில் மட்டுமல்லாமல் விண்வெளியிலேயே எண்ணற்ற மாறுபாடுகளாகும்!

பூமியென்ற கோளே இல்லாமல் இருந்த ஒரு காலமும் உண்டு! சூரிய கிரகத்தில் உடைந்த ஒரு பகுதி நெருப்புக் கோளாக விண்வெளியில் சுழன்று-கணக்கிலா நூற்றாண்டுகளுக்குப் பிறகு குளிர்ந்து, நிலப்பகுதி நீர்ப்பகுதிகளெனப் பிரிந்து, இன்னமும் நெருப்பைக் கருக்கொண்டிருக்கிற பகுதி

களோடு இயங்குகிற இந்தப் பூமியின் அந்தந்தப் பகுதியின் சூழல்களுக்கேற்ப உயிரினங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. பூமியைப் போலவும், இதைவிடப் பெரிதாகவும் அல்லது சிறிதாகவும் உள்ள கோள்களில் இங்குள்ளதைப்போல் உயிர் இனங்களோ, தாவர வர்க்கங்களோ இல்லையென்பதே இது வரையில் கண்டறிந்துள்ள விஞ்ஞான ரீதியான முடிவாகும்.

எனவே நான் குறிப்பிடும் சக்தி என்பது; உயிர் இயக்கம், நினைப்பாற்றல், செயலாக்கம், இவையனைத்தும் பெற்ற ஒரு வடிவமாக இருந்து பூமியை மட்டும் படைத்து அதில் உயிர் இனங்களையும், நீரையும், நெருப்பையும் படைத்தது என்று கூற முடியாதல்லவா?

அப்படிக் கூறினால்; பூமியைப் போன்ற பல கிரகங்களில் அந்தக் காரியத்தை அந்தச் சக்தி ஏன் செய்யவில்லை என்ற கேள்வி எழுவது இயல்பல்லவா? இதிலிருந்து சக்தி என்பதற்குக் காணக்கூடிய பொருள் "கடவுள்" என்பது அல்ல! வலிமை என்பதும் அல்ல! சக்தியுள்ளவரையில் எதிரியிடம் போராடினான் என்கிறோம்-அப்போது சக்தி என்ற சொல் வலிமை (Energy)யைக் குறிக்கிறது.

விண்வெளி இயக்கம், புவியின் இயக்கம், உயிரினப் பெருக்கம், தீ, காற்று, நீர், இத்தகு வியப்புறும் செயல்களைக் கண்டு; ஏதோ ஒரு சக்தியிருக்கிறது என்கிறபோது அந்தச் சக்தி (Power) ஒருவிதமான இயங்கும் தன்மையையே குறிக்கிறது.

அது வணங்கத்தக்கதா? வரம் அருளக்கூடியதா? ஆபத்தில் கூவி அழைக்கும்போது ஓடிவந்து அபயம் அளிக்கக்கூடியதா? இந்த வினாக்களுக்கு விளக்கம் கிடைக்கும்போதுதான் வாதப் பிரதிவாதங்கள் முற்றுகின்றன.

ஆத்திக நாத்திகச் சொற்போர் நடைபெறுகிறது. மனித இருதயத்தின் பலவீனமான தன்மை, அந்தச் சக்திக்குக் 'கடவுள்' என்ற பெயரைச் சூட்டித் தன்னைச் சுற்றியுள்ள அபாயங்களில் இருந்து காத்துக்கொள்ள விரும்புகிறது. பரீட்சையில் தேற வேண்டும் எனத் துடிக்கிற மாணவர்கள் முதல் பதவி உயர்வு தேடுகிறவர்கள் வரையில் கடவுள் என்பவர், தங்கள் வேண்டுகோளையேற்று அதற்குப் பிரதி உபகாரமாகக் காணிக்கைகளைப் பெற்றுக் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய ஒருவர் என்றே கருதிக் கொண்டிருக்கின்றனர்.

நெஞ்சுறுதி வாய்ந்தவர்களோ தன்னம்பிக்கையுடன் அறிவையும், ஆற்றலையும், உழைப்பையும் பயன்படுத்திச் செயல்படு

கின்றனர். நினைத்த காரியங்கள் நடவாதபோது பக்தர்களின் நிந்தனைக்கும் ஆளாகிறார்.

புதிய படம் திரையிடப்படும் போது ஒரு மாதத்திற்கு மழையே வரக்கூடாது என எண்ணுகிற தயாரிப்பாளரும், மழை பொழிந்தால் தான் வேளாண்மை நடக்குமெனக் கவலைப்படும் விவசாயியும் தங்கள் எண்ணம் ஈடேறக் கடவுளைத்தான் வேண்டுகிறார்கள். தமிழ்நாடு. மழையின்றிக் காயும்போது குஜராத்தில் வெள்ளத்தால் பெரும் சேதம் எனச் செய்தி வருவதில்லையா?

நான் குறிப்பிடும் "சக்தி" என்பது கடவுளானால், அதற்கு அறிவுரை கூறவும் - ஆணையிடவுமான வாய்ப்புகள் நிறைய உண்டு! அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி மனித குலத்தில் தீமைகள் விளையாமலும், தீயவர்கள் தோன்றாமலும் தடுத்திட முடியும். அப்படி எதுவும் நடைபெறாததில் இருந்து இயற்கை யாகவே இயங்கும் ஒரு சக்தியைக் கடவுள் தன்மையுடையதாகக் கற்பனை செய்து நன்மை தீமைகள், நல்லவை கெட்டவை அனைத்துக்கும் பொறுப்பாக்குவது பொருத்தமற்றது என்றாலுங் கூட ஏதோ ஒரு நம்பிக்கையைக் கொழுகொம்பாகப் பிடித்துக் கொள்ள முனைகிற மனிதவர்க்கத்தில் கடவுள் என்ற நம்பிக்கை வேரூன்றி விட்டது!

இந்த விவாதங்களில் நேரத்தை வீணாக்க வேண்டா மென்றுதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் "உண்டென்பார் சிலர், இல்லையென்பார் சிலர் எனக்கில்லை கடவுள் கவலை!" எனத் தெளிவாகப் பாடிவைத்தார்.

ஆப்பக்கூடல் விபத்தில் மின்சாரக் கம்பிகளில் பாய்ந்த மின்சாரம் மட்டும் துண்டிக்கப்படாமல் இருந்திருந்து நாங்கள் அந்த இடத்திலேயே சவங்களாகக் கருகியிருந்தால்; "எல்லாம் கடவுள் செயல்!" என்றுதான் பலர் கூறியிருப்பார்கள்.

எங்களைப் பிடிக்காத கூட்டத்தினர் "ஆண்டவன் தண்டித்துவிட்டான்" என்று கூறியிருப்பர். எங்கள் பால் அன்பு கொண்ட உற்றார் உறவினர், நண்பர்கள், பொதுமக்களோ "தெய்வாதீனமாகத் தப்பிவிட்டீர்கள்!" என்று ஆனந்தப் பெரு மூச்சு விட்டனர்.

ஒரு டாக்டர் தருகிற மருந்தை விட, அவர் சிகிச்சை அளித்தால் குணமாகிவிடும் என்று நோயாளிக்கு ஏற்படுகிற நம்பிக்கையே பாதியளவு நோயைப் போக்கி விடுகிறது.

அப்படிக் கடவுள் நம்பிக்கையின் மூலம் மன ஆறுதலைப் பெறுகிற மக்களின் பால் தலையிட்டு நாத்திகக் கருத்தைத் திணிக்க வேண்டுமென்பதில்லை. அதேபோல ஆத்திகக் கருத்துடையவர் களும் நாத்திக எண்ணம் படைத்தவர்களை; வெறுத்து ஒதுக்கப் பட வேண்டிய கூட்டம் என்று புழுதி வாரித் தூற்ற வேண்டிய தில்லை. பண்டித ஜவகர்லால் நேரு அவர்களும், பகத் சிங்கும் தங்களை நாத்திகர்கள் என்றே பிரகடனப் படுத்திக் கொண்டனர். மார்க்சிய வர்க்கப் பார்வையில் நாத்திகக் கொள்கைதான் வலிமையுடன் எடுத்துக் காட்டப்படுகிறது.

கடவுள் நம்பிக்கை-கடவுள் மறுப்பு ஆகிய இந்த விவாதம் நடத்திக்கொண்டிருப்பதைவிட, ஆற்றவேண்டிய வேறு பணிகள் நிரம்ப இருக்கின்றன. கடவுள் மறுப்பாளர்கள், நம்பிக்கையாளர் களின்மீது காழ்ப்புக் காட்டத் தேவையில்லை. அதேபோல கடவுள் நம்பிக்கையாளர்களும் அந்த நம்பிக்கையை முதலீடாகக் கொண்டு மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி பிழைப்புக்கோர் வழியைத் தேடுதல் தீது! அவர்களிடம் மக்கள் ஏமாறுவது அதனினும் தீது!

பெரியார் அவர்கள் ஊருக்கு ஊர் பிள்ளையார் பொம்மை களைச் செய்து நடுத்தெருவில் உடைக்கச் சொன்னபோது, திராவிடர் கழகத்தின் அந்தத் திட்டம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனராம் அண்ணா அவர்களிடத்தில் நிருபர்கள் கேட்டபோது "நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன், பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டேன்" என்று கூறியதின் மூலம் கடவுள் பிரச்சினையில் கழகத்தின் கருத்தைத் தெளிவு படுத்தினார்.


இதை நான் எழுதுகிறபோது நண்பர் எம்.ஜி.ஆர். அவர் களை முதலமைச்சராகக் கொண்ட அகில இந்திய அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுகிறது. முதல்வர் எம்.ஜி.ஆர்., வேறு ஒரு மாநிலத்தில் உள்ள மூகாம்பிகை அம்மன் கோயிலுக்கு அடிக்கடி போய் வருகிறார்.

அப்படிச் சென்று அம்மனைத் தரிசிப்பதும், பூஜிப்பதும் தனது உரிமை என வெளிப்படையாக வாதிடுகிறார். ஆனால் 1953-ஆம் ஆண்டு என்ன நடைபெற்றது? தி. மு. கழகத்தில் இருந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் திருப்பதிக்குச் சென்று வணங்கினார் என்று பத்திரிகையில் செய்தி வந்ததும் அவருக்கு எதிரான அணியைப் பின்னிருந்து முடுக்கிவிட்டவர்களில் முக்கிய மானவராக இருந்தவர் இதே எம்.ஜி.ஆர். அவர்கள்தான்!

சிவாஜி கணேசன் என்பதற்குப் பதிலாகத் திருப்பதி கணேசன் என்று அழைக்குமளவுக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் வலுவூட்டப்பட்டது. அதன் தொடர்பாக சிவாஜி கழகத்தை விட்டே வெளியேற நேர்ந்தது. அப்போதும் அவர் மிகுந்த அடக்கத்துடன் "என்னால் அவர்களைப் பின்பற்ற முடியவில்லை. அதனால் ஒதுங்கிக் கொள்கிறேன்" என்றுதான் அறிக்கை விடுத்து வெளியேறினார்.

அவர் வெளியேறியதற்குக் காரணமாக இருந்தவர்கள், அதற்கென விறுவிறுப்புடன் செயல் புரிந்தவர்கள், இன்று எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் உள்ள கட்சியில் பலர் இருக்கிறார்கள். பாவம்; அவர்களால் மூகாம்பிகை கோயிலுக்கு எம்.ஜி.ஆர். அவர்களே அடிக்கடி சென்று பிரார்த்தனை செய்து திரும்புவது குறித்து வாய் திறக்க முடிவதில்லை.

சிவாஜி, கழகத்தைவிட்டு வெளியேறுவதற்காக நடை பெற்ற சூழ்ச்சிகளும் - அதற்காக அவர்மீது சுமத்தப்பட்ட பழி களும் ஏராளம்! எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைச் சொல்லவும் விரும்புகிறேன். அவர் வெளியேறி சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் நடைபெற்ற "கட்டபொம்மன்" நாடகத்திற்குத் தலைமை வகித்த அண்ணா அவர்கள், கட்டபொம்மனாக நடித்த சிவாஜியின் நடிப்பாற்றலை வெகுவாகப் பாராட்டியதோடு "தம்பி கணேசா! நீ எங்கிருந்தாலும் வாழ்க!" என வாழ்த்தியது சிவாஜியின் கலையுலக வரலாற்றில் வைர வரிகளாகும்.



# 13

## இயக்கத்தில் சிவாஜி

"நான் பிறந்த வீடும் புகுந்த வீடும் ஒன்று சேர்ந்தது கண்டு என் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்குகிறது". இப்படிச் சொன்னவர் நடிகர் திலகம் சிவாஜிகணேசன். சொன்ன இடம் சென்னைக் கடற்கரைக் கூட்டம். சொன்ன ஆண்டு 1979 அண்ணா பிறந்தநாள் விழாவுக்கு; ஆம் - தி. மு. கழககத்தின் சார்பில் கொண்டாடப்பட்ட விழாவுக்கு திருமதி இந்திரா காந்தி வந்திருந்தார்.

திடீரென்று 1979-ஆம் ஆண்டுக்கு வந்துவிட்டேனே யென்று யாரும் வியப்படையத் தேவையில்லை. இப்போதுநான் 1950-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே சில நிகழ்ச்சிகளை நிழலாட விடப் போகிறேன். சிவாஜி அப்படிச் சொன்னதை திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு மொழிபெயர்த்துச் சொல்லப் பட்டது. அப்போதுதான் அந்த அம்மையாருக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் திராவிடர் கழகக் காலந்தொட்டு இந்த இயக்கத்திலே இருந்து வளர்ந்தவர் என்ற தகவலே தெரியும்!

பிறந்த வீடான திராவிடர் இயக்கமும், புகுந்த வீடான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உறவு கொண்டதைத்தான் சிவாஜி அப்படி சுவைபடச் சொன்னார் என்பதுணர்ந்த லட்சோப லட்சம் மக்கள் அடங்கிய அந்தக் கூட்டம் ஆர வாரம் செய்து கையொலி முழங்கியது.

திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ல் தொடங்கப்படு வதற்கு முன்பே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டவர் சிவாஜி! மராட்டிய மாவீரன் சிவாஜி ஒரு மாபெரும் ராஜ்யத்தைத் தனது வாள் முனையால் உருவாக்கினான் என்றாலும்கூட மன்னனாக மகுடம் புனைய அவனது குலம் இடம் தரவில்லையென்று பழமைவாதிகளும் அவர்கட்குப் பாதுகாவலரான காக பட்டரும் தடுத்துரைத்து நின்ற வரலாற்றை அண்ணா அவர்கள் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திர மோகன்" என்ற ஒப்பற்ற நாட மாகத் தீட்டியிருந்தார்.

அந்த நாடகத்தில் அண்ணா அவர்களே காகபட்டர் வேடம் தாங்கி நடித்தார். காவியுடை, கமண்டலம் இவற்றுடன் அண்ணா காகபட்டராகத் தோன்றிப் பேசியதையும், நடித்ததையும் பாராட்டிப் புகழாத நடிகர்களே இல்லை! அந்த நாடகத்தில் சிவாஜியாக "எம். ஜி. ராம்சந்தர்" நடிப்பார் என்று அண்ணாவின் "திராவிட நாடு" பத்திரிகையில் விளம்பரங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன.

அப்போது நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் "ராம்சந்தர்" என்ற பெயரில்தான் திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஆனால் திடீரென அவர் அண்ணாவின் நாடகத்தில் நடிக்க இயலாது எனத் தெரிவித்து விட்டார். அதில் நடிப்பதால் அவரது கலைத்துறை முன்னேற்றத்திற்குத் தடை ஏற்படுமெனச் சிலர் அவரை அச்சுறுத்தி விட்டார்கள். அதனால் அவர் நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்களின் மூலமாகத் தனது முடிவை அண்ணாவுக்குத் தெரிவித்து விட்டார்.

அண்ணா எழுதிய நாடக உரையாடல்களைப் பல இடங்களில் மாற்றி அமைக்க வேண்டுமென்று டி. வி. என். அவர்களிடம் எம். ஜி. ஆர். தெரிவித்ததாகவும், அதைக் கேட்டு அண்ணா வியப்படைந்ததாகவும், எம். ஜி. ஆர். இஷ்டத்துக்கு வசனங்களை மாற்ற அண்ணா ஒப்புக் கொள்ளாததைக் காரணம் காட்டி எம். ஜி. ஆர். அந்தநாடகத்தில் நடிக்க மறுத்து விட்டதாகவும் டி. வி. என். அவர்களே பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்.

நாடக மேடையில் புகழ் பெற்று விளங்கியவரும் திராவிடர் கழக ஈடுபாடுடையவருமான நண்பர் வி. சி. கணேசனை "சிவாஜி" வேடம் தாங்குமாறு அண்ணா அழைத்தார். அண்ணாவின் அழைப்பையேற்று சிவாஜி வேடத்தில், கணேசன் நடித்தார். அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்கிய பெரியார் அவர்கள் வி. சி. கணேசனை சிவாஜி கணேசன் என்று அன்பொழுக அழைத்துத் தட்டிக்கொடுத்தார். அன்று முதல் வி. சி. கணேசன் சிவாஜிகணேசன் ஆனார்.

"சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற அந்தப் புரட்சிகரமான வரலாற்று நாடகம் தமிழகத்தில் பல இடங்களில் நடைபெற்றது. திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 1949-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்ட அண்ணா அவர்களின் கலைத்துறை அணியில் சிவாஜியும் வீறுநடை போட்டார்.

கலைவாணர் என். எஸ். கே. அவர்கள்; திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள் அனைத்திலும் தனது வில்லுப் பாட்டு நிகழ்ச்சியைத் தொடக்க நிகழ்ச்சியாகக் கொண்டு கழகக் கொள்கை பரப்பிடும் பணிபுரிந்தார். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி, இலட்சிய நடிகர் இராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயண சாமி ஆகியோர் திராவிடர் கழகத்திலும் பின்னர் தி.மு. கழகத் திலும் கொள்கை பரப்பும் கலை முரசுகளாகத் திகழ்ந்தார்கள்.

1953-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில்தான் நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1952-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகத்தின் சார்பில் நிதி திரட்டி அந்தப் பணத்தைக் கொண்டு கைத்தறி வேட்டி, சேலைகள் வாங்கி ஏழை, எளியோர்க்கு வழங்குவதெனவும், இருபத்து ஐயாயிரம் ரூபாய் நிதி திரட்டுவதென்றும் அந்தப் பணிக்கு என்னைத் தலைவனாக இருக்குமாறும் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது.

நிதி திரட்டும் முயற்சிக்குப் பல இடங்களில் நான் எழுதிய "தூக்கு மேடை" நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் பாண்டியன் என்னும் பள்ளி மாணவன் வேடத்தில் நானும், அபிநயசுந்தரர் என்னும் வேடத்தில் சிவாஜியும், பரமார்த்திகர் வேடத்தில் நண்பர் சி. வி. எம். அண்ணாமலையும் மற்றும் கழக முன்னணியினரும் நடித்தோம். மகாலிங்கம் என்ற இளைஞர் (திருமலை - மகாலிங்கம் எனப்படும் இயக்குநர் களில் ஒருவர்) நடிப்பாற்றல் மிக்கவர். அவர்தான் கதாநாயகி வேடத்தில் நடித்தார். ஆடவர்கள் "ஸ்த்ரீ பார்ட்" போட்டு நடிக்கும் கால கட்டம் 1952 வரையிலே கூட நீடித்தது எனலாம்!

பழங்கால நாடக உலகில் எஸ். ஜி. கிட்டப்பா வள்ளியாக வும், கே. பி. சுந்தராம்பாள் வேலன், வேடன், விருத்தனாகவும் நடித்ததாக நிகழ்ச்சிகள் உண்டு! சக்தி நாடக சபை என்ற பெயரால் சக்தி. கிருஷ்ணசாமி அவர்கள் நடத்திய நிறுவனத் தில் வி. சி. கணேசன், "நூர்ஜஹான்" வேடம் தாங்கிச் சபை யோரை மயக்கத்தில் ஆழ்த்துவாராம்.

அழகுக் கிளி நூர்ஜஹானாகவும் நடிக்கத் தெரியும்- ஆத்திகப்புலி அபிநயசுந்தரக் கிழவனாகவும் நடிக்கத் தெரியு

மென அறைகூவல் விடுத்த அந்த நடிகர் திலகம், கழக நிதிக் காக நடைபெற்ற எந்தவொரு நாடகத்திற்கும் தனக்கென ஊதியம் எதுவும் பெற்றதுமில்லை, கேட்டதுமில்லை. நான் கொடுத்ததுமில்லை.

கோயில்பட்டி வள்ளிமுத்து என்பவர் நெல்லை மாவட்டத் தில் சங்கரன் கோயிலில் எங்களின் நாடகத்தை நடத்தி நிதி யளிப்பதாகக் கூறி வசூலான நாலாயிர ரூபாய் பணத்துடன் காணாமலே போய் விட்டார். நான், சிவாஜி, சி. வி. எம் அண்ணாமலை, அரங்கண்ணல், காஞ்சி சம்பந்தன், காஞ்சி கிருஷ்ணமூர்த்தி, எம். என். கிருஷ்ணன், நம்பிராஜன், டி. என் கிருஷ்ணன், மற்றும் நாடகத்தில் பங்கேற்ற கழகத்தினர் பட்டினி கிடந்தது மாத்திரமல்ல; ரயிலில் திரும்பி வருவதற்கு வழிச் செலவு பணமும் இல்லாமல் திண்டாடித் தெருவில் நின்றோம்.

எங்கள் நிலையைக் கண்ட தூத்துக்குடி கே. வி. கே. சாமி யும் தங்கப்பழமும் எங்களின் வழிச் செலவுக்காக தூத்துக்குடி யில் அவசரமாக ஒரே நாள் விளம்பரத்தில் ஒரு நாடகத்தை நடத்தி அதில் கிடைத்த மிச்சப் பணத்தில் என்னையும் சிவாஜி யையும் மற்றவர்களையும் வழி அனுப்பி வைத்தார்கள்.

அப்போதுதான் "பராசக்தி" படத்தில் நடிக்க சிவாஜிக்கு வாய்ப்பு கிடைத்தது. பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்கள் "பராசக்தி" திரைக்கதை வசனம் எழுதும் பொறுப்பை நான் ஏற்க வேண்டுமென்று வலியுறுத்தினர். இயக்குநர்கள் கிருஷ்ணன்-பஞ்சு இருவரும் ஒருவராக இருந்து என்னிடம் அன்பு காட்டு கிறவர்கள். அவர்களும் என்னை வலியுறுத்தினர். முதலில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமிதான் நடிப்பதாக இருந்தது. அவருக்கு வேறு படங்கள் இருந்த காரணத்தால் 'பராசக்தி"யில் "குணசேகரன்" வேடத்தில் நடிக்க சிவாஜியை ஒப்பந்தம் செய்தார்கள்.

அந்தப் படம் ஏ. வி. எம்-நேஷனல் பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பு! சிவாஜி இரண்டொரு காட்சிகளில் நடித்ததைப் போட்டுப் பார்த்து விட்டு, ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அதிருப்தி தெரிவித்து நடிகரை மாற்ற வேண்டுமென்று கண்டிப் பாகச் சொல்லிவிட்டார். நேஷனல் பெருமாள் அவர்களும், நானும், இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவும் - ஏ. வி. மெய்யப்ப செட்டியார் கருத்தை ஏற்கவில்லை. "ஒரு அற்புதமான நடிகரை அவசரப்பட்டு இழந்து விடக் கூடாது!" என்று திட்டவட்டமாகக் கூறினோம்!

தொடர்ந்து 'பராசக்தி' படப்பிடிப்பு நடந்தது! எனக்கும் சிவாஜிக்கும் இருந்த நட்பு, யாராலும் விலக்க முடியாத பாச மாக உருவெடுத்தது! அந்தப் பாசம் எப்படிப்பட்டது என்பதை 1963-ஆம் ஆண்டு என் தாய் அஞ்சுகம் அம்மையார் மறைந்த போது வெளியிடப்பட்ட ஒரு மலரில் சிவாஜியே வெளிப் படுத்தியிருக்கிறார்.

"சிறு வயது முதல் எங்களுக்குள் நெருக்கமான பழக்கம் உண்டு. இதற்கு எத்தனையோ காரணம். கலையோ, அன்போ, கொள்கையோ, குணமோ, எதுவோ எங்களை உயிராக இணைத்து வைத்திருந்தது. நாளடைவில் அது வளர்ந்து வலுப் பெற்றது! அவர்! அது யார்? வாய் நிறைய "மூனா கானா" -நான் இனிமையோடு அழைக்கும் அவர்தான்.

அந்தக் காலங்களில் இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் அஞ்சுகம் அம்மையார் அநேக நாட்கள் ஒன்றாகவே உணவு படைப்பது உண்டு. அப்போதெல்லாம் அவர்கள் பரிமாறுவதில் கொஞ்சம் பாரபட்சமாக நடந்து கொண்டதை நான் கவனிப் பதும் உண்டு. நல்ல பண்டங்களை ஒருவருக்கு அதிகமாகவும் ஒருவருக்குக் குறைவாகவும் போடுவார்கள்.

"இப்படிச் செய்யலாமா? இது நீதியா?" என்று நான் கேட்பேன்.

"நீ செல்லப்பிள்ளை - உனக்கு அதிகம்தான்" என்பார்கள் அந்தத் தாய்.

அந்தச் செல்லத்தை மறந்து விட்டுப் போய்விட்டார்கள். நான் என்றும் அந்த அன்புச் செல்லத்தை மறக்க முடியாது. எனக்கு அஞ்சுகம் அம்மையாரும் ஒரு தாய்!"

இது அந்த மலரில் சிவாஜி எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி. படப்பிடிப்பு வேலைகளில் சிவாஜி ஈடுபட்டதால் சில நேரங்களில் அண்ணா எழுதிய "சந்திரமோகன்" நாடகத்தில் சிவாஜி வேடத்தை நண்பர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் ஏற்று நடித்தார்

அதில் சிவாஜிக்கு வருத்தமில்லை யென்றாலும் கணேசனைப் போல சம்பத்தால் நடிக்க முடியவில்லை யென்று பலரும் விமரிசனம் செய்த காரணத்தால் ஏதோ ஒரு இனம் தெரியாத வெறுப்பு சிவாஜி கணேசன் மீது சம்பத்துக்கு

ஏற்பட்டது. அதன் காரணமாக சிவாஜியைக் குறித்து அண்ணாவிடம் சமயம் நேரும்போதெல்லாம் கலக விதை ஊன்றப்பட்டது.

ஒருமுறை "சந்திரமோகன்" நாடகம் சென்னையில் தியாகராய கல்லூரி கலை அரங்கில் நடைபெறுவதாக இருந்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு சிவாஜி கணேசன் அண்ணாவுடன் அந்த நாடகத்தில் நடிப்பதாக ஏற்பாடாயிற்று!

சிவாஜி வேடத்திற்கான வசனங்கள் அடங்கிய பாடப் புத்தகம் கணேசன் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. நாடகம் நடக்க இரண்டு மூன்று நாட்கள் இருந்தபோது ஒரு நாள் அண்ணா, நான், சம்பத், சிவாஜி கணேசன் ஆகியோர் சென்னை "சைனீஸ் ரெஸ்டாரண்ட்" டுக்குச் சென்று மதிய உணவு சாப்பிட்டோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, சிவாஜி அண்ணாவைப் பார்த்து, "அண்ணா! இப்போதெல்லாம் வயது ஆக ஆக நாடக வசனங்களை மனப்பாடம் செய்வது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது! சிவாஜி பாத்திர வசனங்களை இரவு பகலாக உருப்போடுகிறேன்!" என்று கூறினார்.

அண்ணாவும் ஏதோ வேடிக்கையாகச் சொன்னார்! சிரித்துக் கொண்டே உரையாடியவாறு சாப்பிட்டு முடித்தோம். பிறகு சிவாஜி எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

அண்ணா, நான், சம்பத்து மூவரும் காரில் போய்க்கொண்டிருக்கிறோம். அப்போது சம்பத்து அண்ணாவிடம், "இந்த கணேசனுக்கு அதற்குள் எவ்வளவு ஆணவம் வந்துவிட்டது. உங்கள் வசனங்களை மனப்பாடம் செய்வது கஷ்டமாயிருக்கிறது என்று உங்களிடமே சொல்கிறான்!" என்று அண்ணா மனத்தில் விஷ விதையைத் தெளித்தார்.

அப்போது அண்ணா அதை மறுத்து, "இல்லை சம்பத்! வயது ஆக ஆக மனப்பாடம் செய்வது கஷ்டமாக இருக்கிறது என்றுதான் கணேசன் சொன்னது! அதைத் தவறாக எடுத்து கொள்ளக் கூடாது!" எனப் பதில் அளித்தார்.

இப்படிக் காரில் நடந்ததை; இதோ இப்போது நான் எழுதுகிற வரையில் சிவாஜியிடம் கூறியதில்லை! ஆனால் சிவாஜியைப்போல் என்னிடம் நெருங்கிப் பழகிய நண்பர்களிடம் மட்டும் இதைக் கூறி வருத்தப்பட்டிருக்கிறேன்.

'பராசக்தி' படம் வெளி வந்தவுடன் அதை எரிச்சலுடன் விமரிசித்துக் கண்டனம் எழுதிய "தினமணிக் கதிர்" ஏட்டில் "பரப்பிரம்மம்" என்ற தலைப்பில் அந்தப் படத்தை ஏகடியம் செய்து கார்ட்டூனும் வெளியிட்டார்கள்.

உடனே நான் "பரப்பிரம்மம்" என்ற தலைப்பிலேயே ஒரு நாடகம் எழுதி நாடு முழுதும் நடத்த ஏற்பாடு செய்தேன். அதில் நானும், நடிகர் திலகம் சிவாஜியும், கழக நண்பர்களும் நடித்தோம். அந்த நாடகத்தில் "சேரன் செங்குட்டுவன்" வேடத்தில் சிவாஜி நடித்தது இன்னமும் என் கண்முன்னால் நிற்கும் காட்சியாகும்!

கல்லக்குடி போராட்ட நிதி திரட்டுவதற்கும் அந்த நாடகத்தைப் பயன்படுத்தினோம். இவ்வாறு கல்லக்குடி போராட்டம் 1953-ஆம் ஆண்டு நடைபெற்று நான் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்று சிறைபுகும் வரையில் சிவாஜி கணேசன், கழகத்தின் வளர்ச்சிக்காகத் தனது கலைப் பணியை ஆற்றி வந்தார்!

அதற்கிடையே இருபத்து ஏழாயிரம் ரூபாய் புயல் நிதி திரட்டப்பட்டு அதற்குக் கைத்தறி ஆடைகள் வாங்கி வழங்குகிற விழா சென்னையில் நடைபெற்றபோது, அந்த நிகழ்ச்சிக்கு சிவாஜி கணேசன் அழைக்கப்படவில்லை. அவர் வெளியூரில் இருந்தபோது அவருக்குத் தெரியாமலே அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. நிதி திரட்டும் பணியில் என்னுடன் பெரும் பங்கேற்றிருந்த சிவாஜி அந்த நிகழ்ச்சிக்கு வரவேண்டு மென்பதில் நான் கண்ணுங்கருத்துமாக இருந்தேன் என்றாலும் சிவாஜியை வராமல் செய்ய வேண்டுமென்பதில் அக்கறை காட்டியவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். அவர்கள், யார் என்ற விபரங்களுக்குள் எல்லாம் விரிவாக நுழைய விரும்ப வில்லை.

கல்லக்குடி போராட்டத்தில் ஈடுபட்டு திருச்சி சிறையில் இருந்த என்னை வந்து சிவாஜி, பார்த்து விட்டுப் போனார்.

என்னையும் அவரையும் சிறைச்சாலை ஆறுமாத காலம் பிரித்து விட்டதைப் பயன்படுத்திக்கொண்டு கழகத்திற்கு உள்ளே இருந்த சிலரும், கழகத்திற்கு வெளியே இருந்த சிலரும் தங்கள் முயற்சிகளை முடுக்கி விட்டு - அவரைக் கழகத்திலிருந்து பிரித்து விட்டார்கள்!

அவர் கழகத்திலிருந்து வெளியேற "திருப்பதிக்குச் சென்று சாமிகும்பிட்டார்" என்பதே பெரும் குற்றச்சாட்டாக அப்போது

வெடித்தது! அந்தக் குற்றச்சாட்டுக்கு அன்றைக்கு கனம் ஏற்றிப் பேசியவர்கள்; கொள்கைப்பற்றால் கூட அல்ல; சிவாஜியின் மீதிருந்த பொறாமையால் அவரை வெளியேற்ற வெகுண்டெழுந்தனர்!

கட்சியிலிருந்துதான் வெளியேறினாரே தவிர, அண்ணாவின் அன்பு உள்ளத்திலிருந்து அவர் வெளியேறவில்லை! எங்களின் பாசம் மிகுந்த நட்பு, அந்த வெளியேற்றத்தால் வெட்டப்படவில்லை! அது தொடர்ந்தது - தொடர்ந்து கொண்டேயிருக்கிறது!



# 14

## தியாக தீபங்கள்

அந்த வீரன் பதின்மூன்று ஆண்டுகள் சிறையில் வாடினான். சிறைச்சாலைகளை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையெனக் கருதி சிரித்த முகத்துடன் அடக்குமுறைகளை ஏற்றுக்கொள்ளும் இலட்சியக் காளைகளிலே ஒருவன் அவன். தன்னை விற்றுக் கொள்ளும் மனிதர்கள் தற்காலிக சுகபோகங்களில் திளைத்துத் தங்கள் ஆயுளுடன் அழிந்து விடுகிறார்கள். எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் என்று, கொண்ட குறிக்கோளுக்காக மரணப் பரிசை மலர்ச் செண்டாக ஏந்துகிறவர்கள் உலகம் உள்ளவரையில் வாழக்கூடியவர்கள்.

அந்தத் தியாக சீலர்களின் பட்டியலிலேதான் ரானடே இணைக்கப்பட்டிருந்தான். போர்ச்சுகீசியர் ஆதிக்கத்திலிருந்து கோவாவை மீட்பதற்காகப் போரிட்டுத் தலைமறைவு இயக்கத்தில் ஈடுபட்டு போர்ச்சுகீசிய இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டவன் அவன். அந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு ஏற்ப, பதின்மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையை அவன் போர்ச்சுகல் நாட்டில் அனுபவிக்க நேர்ந்தது

அந்த மாவீரனுக்கு விடுதலை கிடைக்க முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்று ரோமாபுரியில் போப்பாண்டவரைச் சந்தித்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அவன் விடுதலை பெற்று வரும்போது அண்ணா இல்லை. 1969 மார்ச் 23-ஆம் நாள் மோகன் ரானடே என்னும் அந்த வீரன் செய்தியாளர்களைச் சந்தித்தபோது நன்றி மறவாமல் அண்ணாவை நினைவு கூர்ந்தான்.

''போர்த்துகீசியச் சிறைகளில் வாடும் இந்தியர்களின் விடுதலைக்கான குழு, அண்ணா அவர்களிடம் அவர் வெளி நாட்டுப் பயணம் சென்றபோது, அவரிடம் எனது விடுதலைக்கு முயற்சி செய்திடுமாறு கேட்டது அண்ணா அவர்களும் புனித போப்பிடம் அந்தக் கோரிக்கையை சமர்ப்பித்து போர்த்துகீசிய அரசுக்குப் பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார். அதனை ஏற்றுக்கொண்ட போப் அவர்கள் நான் விடுதலை அடைவதற்கு வழி வகுத்தார்"

என்று மோகன் ரானடே கூறியபோது, அண்ணா அவர்களின் மனிதாபிமான உணர்வும், இன்னலை இன்முகத்துடன் ஏற்றிடும் இலட்சியவாதிகளிடம் கொண்டிருந்த அன்பும் உலகின் முன்னே ஒளிவிட்டுப் பிரகாசித்தது. 1970-ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, முதன் முதலில் ரோமாபுரியில் இறங்கி வாடிகன் சிட்டியில் உள்ள போப்பாண்டவரைச் சந்திக்கத்தான் சென்றேன்.

அண்ணாவின் ஆசையை நிறைவேற்றிக் கொடுத்து கோவா விடுதலை வீரன் ரானடேயை விடுதலை செய்ய முயற்சிகளை எடுத்துக் கொண்ட அந்தப் பெருமகனுருக்கு நன்றி தெரிவிக்க வேண்டாமா? அதற்காகவே ரோமில் இருந்து வாடிகன் சிட்டி பயணத்தை மேற்கொண்டேன். மெத்த அன்புடனும், பரிவுடனும் வரவேற்ற அவரிடம்; அண்ணா அவர்கள் அவரைச் சந்தித்ததையும் கோவா விடுதலை வீரர்களைச் சிறைமீட்கத் துணை புரியுமாறு கேட்டுக்கொண்டதையும் நினைவுபடுத்தி, அதற்காக நன்றியினைத் தெரிவித்தபோது-அவர் மகிழ்ந்தார் எனினும்; அண்ணாவின் அன்பு உள்ளத்தை நினைந்து அந்த உத்தமத் தலைவனின் மறைவுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்தார்.

1969-ல் மோகன் ரானடே ஏடுகளுக்கு அளித்த செய்தியை நான் நினைவுபடுத்தி எழுதும்போது, இதோ 1983 ஜூலை இறுதி வாரத்தில் இலங்கைத் தீவில் கொழும்புச் சிறைச்சாலையில் மாண்டு மடிந்த தமிழ் வீரர்களை எண்ணிக்கொண்டு அழுகிறேன். இருபத்தைந்து ஆண்டுக் காலமாக உரிமைகள் பறிக்கப்பட்டு சீரழிக்கப்படும் இனத்தின் விடுதலைக்காகவும் சிங்களவர்களிடம் இனி சேர்ந்து வாழமுடியாது என்று தீர்மானித்துப் போராட்டம் நடத்தியதற்காகவும், கொடுங்குற்றம் சாட்டப்பட்ட தங்கதுரை, குட்டிமணி, ஜகன், மற்றும் ஐம்பது விடுதலை வீரர்கள் அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

சிறையில் அதிகாரிகள் அவர்களுக்கு இழைத்த கொடுமைகள் கொஞ்சமல்ல! தணலில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடித்திருக்கிறார்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் உடலில் சூடு போட்டிருக்கிறார்கள். ஆண்குறியில் மிளகாய்ப் பொடியைத் தூவியிருக்கிறார்கள். ஒருவரின் மலத்துவாரத்தில் நீண்ட குச்சியை நுழைத்து அதே குச்சியை இன்னொருவரின்

வாயில் சொருகிச் சுவைக்கச் செய்திருக்கிறார்கள். இன்னும் எழுத வொண்ணாக் கொடுமைகள் அந்தச் சிங்க இளைஞர்களுக்குச் சிங்கள அதிகாரிகளால் இழைக்கப்பட்டன!

தண்டனை இறுதியாக்கப்படாமல் நீதிமன்ற விசாரணை முடிவுறாத நிலையில் சிறைக்கோட்டத்தில் தனித்தனியாக அடைக்கப்பட்டிருந்த கொட்டடிக்குள் இருந்த அந்தத் தமிழ்க் குலக்கொழுந்துகளை சிங்களக் கழுகுக் கூட்டம் திடீரெனத் தாக்கியது. அந்த வெறியர்களுக்குத் துணையாக சிறை அதிகாரிகளும் செயல்பட்டிருக்கின்றனர். தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் உட்பட ஏறத்தாழ ஐம்பது வீரர்களையும்—அவர்கள் நிராயுத பாணிகளாக இருந்த நிலையில் வெட்டி வீழ்த்தியும், சுட்டுக் கொன்றும் தசைகளைக் கழித்து வீசி எறிந்தும் தூள் தூளாக ஆக்கியிருக்கிறார்கள். குட்டிமணியைக் கொல்வதற்கு முன்பு அவனது வீரத்திருவிழிகளைத் தோண்டி எடுத்துக் காலில் போட்டு மிதித்து வெறியாட்டம் நடத்திவிட்டு அதன் பிறகே அவன் உயிரைப் போக்கியிருக்கின்றனர்.

எந்த விழிகள் தெரியுமா? குட்டிமணியை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை நடத்தியபோது அவன் சொன்னான்; "என்னை மரண தண்டனை அளித்துக் கொன்று விடுங்கள்! ஆனால் ஒரு வேண்டுகோள்! நான் இறந்தவுடன் என் விழிகளை எடுத்து, விழியற்ற தமிழ் இளைஞர் யாருக்காவது பொருத்துங்கள்! எதிர் காலத்தில் சுதந்திரம் பெறப்போகும் தமிழ் ஈழத்தை, அந்த இளைஞனின் கண்களின் வழியாக நான் பார்த்துக் களிக்கிறேன்."

இப்படி முழக்கமிட்டவனின் முடிவுதான் இப்படி ஆகி விட்டது! கொழும்பு சிறைச்சாலையில் நடைபெற்ற இந்தக் கொலை வெறி நிகழ்ச்சிகள் உண்மையல்ல என்று செய்தி வரக் கூடாதா—என்று உலகெங்கும் உள்ள தமிழ் இனம் கண்ணீருடன் கதறிக் கொண்டிருக்கிறது! இலங்கைத் தமிழ் இனத்தின் விடுதலைப் போர் எப்படி உச்சகட்டத்திற்கு வந்தது? 1958-ஆம் ஆண்டு இலங்கையில் தமிழனுக்குக் கொடுமை இழைக்கப்பட்ட காலத்திலிருந்து இங்கே தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈழத் தமிழனுக்காக எந்த வகையில் எல்லாம் ஆதரவுக் கரம் நீட்டியிருக்கிறது? இவற்றையெல்லாம் பின்னர் எழுத வேண்டியிருப்பதால் இப்போது வரிசைப்படுத்தி விபரங்களை அளித்திடவில்லை.

மோகன் ரானடே 1969-ல் விடுதலையான செய்தியைக் குறிப்பிட வேண்டியிருந்ததால் போப்பாண்டவர் சந்திப்பு பற்றிக்

கூற நேரிட்டது. ஒரு விடுதலை வீரனைப்பற்றி எண்ணிய பொழுது ஈழத் தமிழ் விடுதலை வீரர்களிடம் தானாகவே இதயம் சென்று விட்டது. எனவே நெஞ்சத்தை அங்கிருந்து மீட்டுக்கொண்டு வந்து 1969 ஏப்ரல் 18–ஆம்நாளில் இருந்து விட்ட இடம் தொட்டுத் தொடருகிறேன்.

டெல்லியில் முதலமைச்சர்கள் கலந்து கொள்ளும் என். டி. சி. எனப்படும் தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திற்கு அன்றுதான் சென்றேன். முதல்வரானபிறகு கலந்து கொள்ளும் முதல் தேசீய வளர்ச்சிக் குழுக்கூட்டம் அது! என்னுடன் நிதி யமைச்சர் மதியழகன் அவர்களும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் நான் தமிழில்தான் பேசினேன். கருத்துக்களை ஆங்கிலத்தில் தொகுத்தெழுதிப் படிக்கலாம் என்றாலும் கூட நான் அந்த முதற் கூட்டத்தில் தமிழில் பேசினேன். அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

மத்திய மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும், அந்த முயற்சியின் முதற்கட்டமாக முதலமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று மத்திய மாநில உறவுகளைப் பற்றி விவாதித்திட வேண்டுமென்றும் தமிழக அரசின் சார்பில் நான் கருத்து அறிவித்தேன்.

அந்தக் கூட்டம் பற்றி செய்தி வெளியிட்ட யு. என். ஐ நிறுவனம், "இந்தக் கூட்டத்திலேயே மத்திய மாநில அரசுகளின் உறவு பற்றி யோசனை கூறியது தமிழக முதல்வர் ஒருவர்தான்" என்று குறிப்பிட்டிருந்தது.

நான் அன்று ஆற்றிய உரையில், தொழில் முன்னேற்றத் துக்குச் சம வாய்ப்பு கிடைக்கவேண்டுமென்றும், பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் மத்திய மாநில உறவு வளரும் என்றும், வங்கிகள் தேசீய மயமாக்கப்பட வேண்டுமென்றும், பொதுத் துறை, தனியார் துறையை விட அதிக முதலீடு கொண்டிருக்க வேண்டுமென்றும், இன்றைய தேவை, ஏழைகளைச் சுற்றியுள்ள இருள் நீக்கும் திட்டங்களே என்றும் விரிவாக எடுத்துரைத்தேன்.

வங்கிகள் தேசீயமயமாக்கப்பட வேண்டும் என்று அன்றைய கூட்டத்தில் முதல் குரல் கொடுத்தது நான்தான்! அதை எதிர்த்துக் காரசாரமாகப் பேசியது துணைப்பிரதமர் மொரார்ஜி தேசாய்தான்!

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், அந்தக் கூட்டத்திற்குத் தலைமையேற்றிருந்த போதிலும் அவர்கள் சார்பாகக் கருத்துக்

கூறிய மொரார்ஜி தேசாய், வங்கிகளை தேசீயமயமாக்குவது சாத்தியமற்றது என்று கூறினர். "வங்கிகளைத் தேசீயமயமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் சொர்க்கத்தையே இங்கே கொண்டு வந்துவிடலாம் என நினைப்பது தவறு" என்று கேலி பேசினர் அவர்!

அந்தக் கூட்டத்தையொட்டி நடைபெற்ற முதலமைச்சர்கள் மட்டுமே கொண்ட மற்றொரு கூட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றித் தமிழக அரசின் சார்பில் நான் எடுத்து வைத்த எண்ணத்தில் சில துளிகள்:-

"நமது முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெருத்த மாறுதல் எதையும் விளைவிக்கவில்லை. இந்த நிலையில் மிகக் குறுகலான கட்டுத்திட்டங்களுக்குள் நமது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குரிய சில ஆக்கப்பணிகளை நிறைவேற்ற அத்தகைய ஆக்கப்பணிகளால் பலன் அடையக்கூடிய மக்களிடமிருந்து நன்கொடை திரட்ட வேண்டுமென அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் தெரிவித்துள்ள கருத்தை என்னால் ஒப்புக்கொள்ள இயலாது! தற்சமயம், மாநில அரசு செய்யும் அலுவல்களையே மத்திய அரசு மறுபடியும் மேற்கொள்ளும் நிலை இருந்து வருகிறது. மாநிலங்களிலும், மத்தியிலும் ஒரே அலுவல் இரண்டு தடவைகள் நடைபெறுகின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் பற்றாக்குறை குறித்து, தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசுக்கு சில புள்ளி விவரங்களை அளிக்கிறது. ஆனால் மத்திய அரசு, அந்தப் புள்ளி விவரங்களை நம்பாமல் தனது அதிகாரிகளை அனுப்பி புள்ளி விவரங்களைச் சேகரிக்குமாறு உத்திரவிடுகிறது. இது மத்திய அரசு, மாநில அரசுகளிடம் முற்றிலும் நம்பிக்கை இல்லாமல் நடந்து கொள்வதையே குறிக்கிறது."

டெல்லியில் தேசீய வளர்ச்சி மன்றத்தில் நான் பேசியது பற்றி 20-4-69 தேதியிட்ட 'இந்து' ஏடு பின்வருமாறு குறிப்பிட்டது.

"உண்மையான மக்களின் திட்டமாகும் வகையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மறுவரைவு செய்யப்பட வேண்டுமென்று தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் தேசீய வளர்ச்சி மன்றத்தில் வலியுறுத்தினர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை மறுவரைவு செய்ய வேண்டுமென்ற தமிழக முதல்

வரின் கோரிக்கையை கேரள, மேற்கு வங்க மாநில முதலமைச்சர்கள் ஆதரித்தனர். இந்தக் கோரிக்கை, இதர மாநிலங்களின் முதலமைச்சர்களாலும் ஆதரிக்கப்பட்டது.''

தேசீய வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்குச் சென்றிருந்ததையொட்டி, டெல்லி கரோல்பாக்கில் தமிழர்களால் நான்கு லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டிருந்த பள்ளியை அப்போதைய திட்டக்குழு உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்ராமன் தலைமையில் நான் திறந்து வைத்தேன். நிதியமைச்சர் மதியழகன், அறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்தார்.

அந்த விழாவில் பேசிய திரு. ஆர். வி. அவர்கள் ''கட்டிடத்தை என் நண்பர் கருணாநிதி அவர்கள் திறந்து வைக்கிறார்கள். அவர் தமிழ்ப் பற்றும், பண்பும் உடையவராவார். அவர், அரசியலில் இலக்கியத்தை இணைத்து இரண்டிலும் புகழ் பெற்றவர். அரசியல்வாதிகளும், கலைஞர்களும் மதிக்கத்தக்க அளவுக்கு உள்ளவர். நல்ல நேசமனப்பான்மை கொண்டவர். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நண்பர்களோடு பழகுவதில் இனிய சுபாவமுடையவர். நான் தமிழ்நாடு அமைச்சராய் இருந்த காலத்தில் அவர் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து ஒவ்வொரு வாதத்துக்கும் எதிர்வாதம் செய்வதில் வல்லவராய்த் திகழ்ந்தார்" என்று கூறினார்.

# 15

## பெருந்தகையாளர்கள்

**1964**-ஆம் ஆண்டுக்குப் பிறகு நகராட்சி மன்றத் தேர்தல்கள் தமிழகத்தில் நடத்தப்படவில்லை. நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் அந்தத் தேர்தல்களை நடத்த முடிவு செய்யப்பட்டது.

1969 ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாளும் 29-ம் நாளும் நகர் மன்றத் தேர்தல்களை நடத்தத் தேதிகள் குறிக்கப்பட்டன. அப்போதிருந்த நகர் மன்றங்களின் மொத்த எண்ணிக்கை 84.

அவற்றில் திருவண்ணாமலை, வாணியம்பாடி, கோவை. திருப்பூர், திண்டுக்கல், தேனி, திருச்சி, மாயவரம், நாகப்பட்டினம், அருப்புக்கோட்டை, குளச்சல் ஆகிய 11 நகர் மன்றங்களில் வார்டுகள் பிரிக்கப்பட்டது குறித்து நீதிமன்றத்தில் விசாரணை முடிவடையாமல் இருந்ததால் எஞ்சியிருந்த 73 நகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. ஏறத்தாழ இருபத்து ஐந்து லட்சம் வாக்காளர்களைக் கொண்ட 73 நகராட்சிகளிலும் போட்டி மிகக் கடுமையாக இருந்தது.

1967-ல் காங்கிரஸ் கட்சிக்குத் தமிழ்நாட்டில் பெருந் தோல்வி ஏற்பட்டு அதன்பிறகு நடைபெறும் நகராட்சித் தேர்தல்கள் என்பதால். காங்கிரஸ் கட்சி, தனது தோல்வியைச் சரிக்கட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு மிகத் தீவிரமாகப் பணியாற்றியது. நகரங்களில் உள்ள காங்கிரஸ் பெருந்தனத் காரர்கள் பணத்தை வாரியிறைத்து எப்படியும் நகராட்சித் தலைவர்களாக வந்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தனர்,

எப்படியும் வெற்றி பெற்றே தீரவேண்டுமென்று வெறியேறிய நிலையில் கழகக் கூட்டணித் தொண்டர்களைக் காங்கிரசார் பல இடங்களில் தாக்கினர். தூத்துக்குடியில் காங்கிரஸ்காரர்களால் நாராயணன் என்ற கழகத் தொண்டர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

தென் பாண்டி மண்டிலத்தில் கழகத்திற்காக ரத்தம் சிந்திய தொண்டர்களையும், உயிர் விட்ட தியாகிகளையும் அதிகமாகக் கொண்ட நகரம் தூத்துக்குடி! அங்கேதான் மாவீரன் கே. வி. கே. சாமியும், தாளமுத்துவும், எதிரிகளால்

படுகொலைக்கு ஆளானார்கள். அந்த வீரம் செறிந்த நகரத்தில் நாராயணனைப் பலிகொடுத்த போது, அனைத்துக் கட்சியினரும் கண்ணீர் வடித்தனர்.

நாராயணனுக்காக நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் மாவட்டச் செயலாளர் இரத்தினவேல் பாண்டியன் அவர்களும், சட்டப் பேரவைத் துணைச் சபாநாயகராக இருந்த எட்மண்ட் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் முருகானந்தம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

தூத்துக்குடியைப் போலவே கிருஷ்ணகிரியிலும் கழகக் கூட்டணித் தோழர்களுக்கும் காங்கிரசாருக்கும் கடும் மோதல் ஏற்பட்டு, அதில் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த தோழர் ஒருவர் கொல்லப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நண்பர் கமலநாதனும் அந்தத் தாக்குதலில்காயமுற்றார். கொலையுண்ட முஸ்லீம் லீக் தொண்டரின் இறுதி ஊர்வலத்தில், காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களும், அப்துல்சமத் அவர்களும், தர்மபுரி மாவட்டச் செயலாளர் முருகேசன் ஆகியோரும் கலந்து கொண்டு இரங்கல் தெரிவித்தனர்.

இத்தனைக்கும் பிறகு வெளிவந்த நகராட்சித் தேர்தல் முடிவுகள், கழகத்திற்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் சாதகமாகவே அமைந்தன, குறிப்பாக; நகராட்சித் தேர்தலுக்கு சில திங்களுக்கு முன் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் கோட்டையான நாகர்கோயிலில் தி. மு. கழகம் பெரும் வெற்றி பெற்றது. மொத்தம் 36 வார்டுகள் உள்ள அந்த நகரில் 21 இடங்கள் கழகத்திற்கு! காங்கிரசுக்கு 12இடங்கள் மட்டுமே கிடைத்தன!

மொத்தம் 73 நகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில், 47 இடங்களில் கழகத்தினரும், முஸ்லீம் லீக்கைச் சார்ந்தோர் இருவரும், சுதந்திரக் கட்சி சார்பில் ஒருவருமாகக் கூட்டணியினர் 50 நகரங்களில் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அந்த வெற்றியைக் குறிப்பிடும் வகையில் 14-5-69 அன்று ஐம்பது நகராட்சித் தலைவர்களுக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்ததோடு, அண்ணா சதுக்கத்திற்கு ஊர்வலமாகச் சென்று, அண்ணாவின் கல்லறைமீது 50 மலர்ச்செண்டுகளை வைத்து மரியாதை செலுத்தினேன்.

நகராட்சித் தேர்தல் முடிவுகளைப் பற்றிக் குறிப்பிட்டு "இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு, இவ்வாறு எழுதியது!

"காமராஜர், சி. சுப்பிரமணியம் போன்ற காங்கிரஸ் தலைவர்கள், தி. மு. க. ஆட்சியை எதிர்த்து உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று நகர்ப்புற வாக்காளர்களைக் கேட்டனர். அரசின் மீதுள்ள நம்பிக்கையைப் புதுப்பிக்குமாறு தி. மு. க. தலைவர்களும் மக்களைக் கோரினர். ஆனால் மக்கள் அளித்த தீர்ப்பு, காங்கிரசுக்கு மற்றொரு அதிர்ச்சி வைத்தியமாக வந்து வாய்த்துள்ளது. அண்ணா மறைவுக்குப் பின் தி. மு. க. சிதைந்து விடும் என்று சிலர் கூறிய ஜோதிடம் பொய்த்து விட்டதையே இந்தத் தேர்தல் முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றனர்."

எக்ஸ்பிரஸ் தவிர, வேறு சில ஆங்கில ஏடுகள் என்ன எழுதின என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

"கடந்த இரண்டு ஆண்டுக் கால அளவில் தி. மு. க. தனது நிலையில் அதிக வளர்ச்சியை அடைந்து விட்டது என்பதையே தமிழக நகராட்சித் தேர்தல் முடிவுகள் தீர்க்கமாக மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

இதுவரை தமிழகத்தில் 40 நகராட்சிகளைக் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பலத்தோடு நிர்வாகம் செய்து வந்தது. இப்போது காங்கிரசுக்குத் தனிப் பெரும்பான்மை கிடைத்திருப்பது ஆறு நகராட்சிகளில் மட்டுமே! இதுவரை எட்டு நகராட்சிகளில் மட்டுமே பெரும்பான்மை பெற்றிருந்த தி. மு. கழகம் இப்போது தனது தோழமைக் கட்சிகளுடன் ஐம்பது நகராட்சிகளில் பெரும் பான்மை பெற்றுள்ளது.

திசை திரும்பிய காலக் காற்று, தெளிவாகவே வீசுகிறது. தி. மு. கழகத்திற்கு ஆளும் திறமையில்லையென்று காங்கிரசார் இடைவிடாது செய்து வந்த பிரச்சாரத்தை மக்கள் மதிக்கவில்லை என்பது தெளிவாகிவிட்டது."

(29-4-69 மெயில் தலையங்கம்)

"தமிழ்நாட்டில் நடைபெற்ற நகராட்சித் தேர்தல்கள் முடிவு குறித்துத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி, திருப்தி தெரிவித்துள்ளார். அந்த மகிழ்ச்சியையும் திருப்தியையும் பெறுவதற்கு அவர் எல்லா வகையிலும், நியாயமாகத் தகுதியானவரேயாகும்."

(ஸ்டேட்மென்-30-4-69)

"தமிழகத்தில் அண்மையில் நடந்தேறிய நகராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து தி. மு. கழகம், மன நிறைவு கொள்ள

எல்லா நியாயமும் உண்டு. அரசியலில் தி. மு. கழகத்தின் மீட்புத் தன்மைக்கு நகராட்சித் தேர்தல் முடிவுகள் ஒரு அளவு கோலாகும். காங்கிரஸ் கட்சி, அது இழந்த இடத்தைப் பிடிப்பதற்கு இன்னும் வெகு நீண்ட காலத்துக்கு வெகு கடினமாக உழைத்தாகவேண்டும்."

(இந்துஸ்தான் டைம்ஸ்-1-5-69)

நகராட்சித் தேர்தல்களில் தொடர்ந்து பிரச்சாரப் பணியில் ஈடுபட்ட காரணத்தால் என் உடல் நலம் சிறிது கெட்டு, சில நாட்கள் ஓய்வெடுக்க வேண்டியவனானேன். உடல் நலிவு ஏற்படுவதும் அதைப் பொருட்படுத்தாமல் ஊர் சுற்றி அலைவதும் அப்படி ஊர் சுற்றி மக்களைச் சந்திப்பதாலேயே உடல் நிலை சீராவதும் எனக்கு வாடிக்கைதான்!

பெரியார் அவர்களின் பள்ளியில் சரியாகப் பயிற்சி பெற்றவர்கள் அப்படித்தான் தங்கள் உடல்நலத்தைப் பற்றிக் கணக்கிட்டு வைத்திருப்பார்கள். சென்னையில் எனது பிறந்த நாள் விழாவொன்றினை அண்ணாவைக் கொண்டு கழக நண்பர்கள் நடத்தினார்கள். அப்போது அதில் நான் கலந்துகொள்ளாமல் மன்னார்குடிக்குச் சென்று நண்பர் மன்னை வீட்டில் தங்கிவிட்டேன்.

சென்னை விழாவில் பேசிய அண்ணா அவர்கள் "தம்பி கருணாநிதி பேசும்போது வியர்வை கொட்டும்-உடல்நிலை பாதிக்கப்பட்டு வாயில் மருந்து சொட்டும்-இது அவனது பொது வாழ்க்கை" என்று குறிப்பிட்டதைத்தான் எனக்கு நலிவு ஏற்படும் போதெல்லாம் நினைத்துக் கொள்வேன்.

1969 மே திங்களில் இந்தியாவைப் பொறுத்தும், தமிழகத்தைப் பொறுத்தும் பெரும் துயரத்தை அளிக்கக்கூடிய இருவரின் மரணங்கள் ஏற்பட்டன.

இந்தியத் துணைக் கண்டத்து அரசியலிலேயே ஒரு நூல் இழையில் பெரும் திருப்பத்தை விளைவித்த மிகப் பெரிய மாறுதல் ஏற்படுவதற்குக் காரணமானதாக இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் அவர்களின் மறைவு அமைந்து விட்டது என்றே கூறலாம்.

மே திங்கள் மூன்றும் நாளன்று இருதய நோயின் காரணமாகத் திடீரென்று ஜாகிர் உசேன் காலமானார். கல்வித் துறையில் பெருங் கவனம் செலுத்திய பெருமகனார் அவர்! சாந்தமும், அன்பும், எளிமையும் கொண்ட கற்றறி மேதையாகத் திகழ்ந்தவர். புகழ்பெற்ற ஜாமியாமிலியா பல்கலைக்கழகத்தின் துணை

வேந்தராக இருந்து திறம்பட நடத்தி அறிவொளி பாய்ச்சிட அயராது உழைத்தவர். நாடும் ஏடும் நன்குணர்ந்த நற்குண சீலர். அவருடன் நீண்ட நேரம் தனித்து உரையாடக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது உண்டு!

அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்ற சில திங்கள்கள் கழித்து, மதுரைப் பல்கலைக்கழகத் தொடக்க விழாவுக்கு, குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் அவர்களை அழைத்திருந்தார். (இப்போது மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகமென வழங்குவது.)

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அந்தப் பல்கலைக்கழகத் திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்றிருந்தன. தமிழறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அதன் துணைவேந்த ராகப் பொறுப்பேற்று அடித்தளம் அமைத்துக்கொண்டிருந்தார். முதலமைச்சர் அண்ணா அவர்களின் தலைமையில் குடியரசுத் தலைவர் அவர்கள் அடிக்கல் நாட்டு விழா நடத்த ஏற்பாடு.

குடியரசுத் தலைவர் சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கினார். முதலமைச்சர் அண்ணாவும், மற்ற அமைச்சர்களும் வரவேற்றோம். மதுரைக்குப் புறப்படும் விமானத்தில் திரு. ஜாகிர் உசேன் அவர்கள் ஏறிக்கொண்டார். திட்டமிட்டபடி முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும்தான் அவருடன் விமானத்தில் செல்லவேண்டும்.

ஆனால், அண்ணா அவர்கள் திடீரென என்னையும் விமானத் தில் ஏறிக்கொள்ளுமாறு பணித்தார். மாற்று உடைகள்கூட எதுவுமின்றி நானும் அண்ணாவின் சொற்படி விமானத்தில் ஏறிக் கொண்டேன்.

குடியரசுத் தலைவரின் விமானம் சிறப்பான தனி வசதிகள் கொண்டது. அண்ணா, நான், நாவலர் மூவரும் அவரிடம் சில நிமிஷங்கள் பேசிக்கொண்டிருந்துவிட்டு விமானத்தின் வேறு பகுதியில் உட்காரச் சென்றோம். அப்போது அவர், "பொதுப்பணி அமைச்சர் என்னோடு சிறிது நேரம் அமரட்டும்" என்றார். நானும் அவருக்கெதிரே உட்கார்ந்தேன்.

கட்டிடக்கலை குறித்தும் பாசன விரிவாக்கம் குறித்தும் பொறியியல் துறை குறித்தும் அவர் என்னிடம் விவாதித்துத் தொகுத்துச் சொன்ன கருத்துக்கள், பொதுப்பணித் துறைப் பொறுப்பை ஏற்றிருந்த எனக்கு மிகவும் பயன்பட்டன.

ஜாமியா மிலியா பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணி யாற்றி, அந்தப் பல்கலைக்கழகத்திலேயே துணை வேந்தராகவும் பொறுப்பேற்ற அவர், ஒரு சிறந்த காந்தீயவாதியாகவும் விளங்கினார்.

அவர் மறைவை யொட்டி வானொலியில் உரையாற்றிய போது, "அடக்கத்தின் எடுத்துக்காட்டு- அன்பின் திருவுருவம், அமைதியின் வடிவம்-மறைந்த பெரியவர்! மறைந்தவருக்கு- விரிந்து பரந்த அறிவும்-நிறைந்த நாட்டுப்பற்றும் உண்டு. காந்தீயத் தத்துவத்தின் வழி நின்று கடமை ஆற்றிய கர்ம வீரர். கோபுரத்துக் கலசம் வீழ்ந்தது போல், குளிர் மலர்ச் சோலையில் குயிலின் கீதம் நின்றது போல் திடுக்கிடும் செய்தி நம்மைத் திகைப்பிலாழ்த்திவிட்டது.

இந்து முஸ்லீம் ஒற்றுமையின் சின்னமாக விளங்கியவரை நாடு இழந்துவிட்டது. இன்று காலையில் தான் நாகாலந்து மக்க ளுடன் அவர் எடுத்துக்கொண்ட புகைப் படம் ஏடுகளில் வெளி வரக் கண்டோம். நாளை ஏடுகள் அவரது உயிரற்ற உடலை யல்லவா படம் பிடித்துப் பிரசுரிக்கும்! பிறப்புக்கும் இறப்புக்குமி டையே மனிதன் ஆற்ற வேண்டிய கடமையை உணர்ந்து செய லாற்றிய செம்மல் பிரிந்துவிட்டார். ஆனால் தமது அன்பு வழி யால் நம் உள்ளமெல்லாம் நிறைந்து விட்டார்..." என்று நான் குறிப்பிட்டேன்.

அவரது இறுதிப் பயணத்தின் போது தமிழக அரசின் சார்பில் நிதியமைச்சர் மதியழகன் கலந்து கொண்டு மலர் வளையம் வைத்தார். நாடாளுமன்றத் தி. மு. க. சார்பில் குழுத் தலைவர் பேராசிரியர் மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

ஒரு குடியரசுத் தலைவரின் மறைவுக்கும் அடுத்த குடியரசுத் தலைவரின் வெற்றிக்குமிடையே இந்திய அரசியலில் எழுந்த மாற் றங்கள் வியப்புக்குரியவை.

அதற்கிடையே தமிழக அமைச்சரவையில் ஒரு மாபெரும் இழப்பு ஏற்பட்டது,

குடியரசுத் தலைவரின் மறைவுச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த போதே, தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள், தலைமைச் செயலகத்தி லேயே இரத்த வாந்தியெடுத்து மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, அவர் அருகாமை

யிலேயே இருந்து கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அதனால்தான், நான் டெல்லிக்குச் செல்ல இயலாமல் மதி அவர்களை அனுப்பிவைக்க நேரிட்டது.

மறைந்த மேதை குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் அவர்களை நினைக்கும்போது, அவர் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் (3-1-68) ஆற்றிய தொடக்க உரையை மறக்க இயலாது:

"நம்முடைய மொழிகளிடையே தமிழ் மாண்புமிக்கதொரு இடத்தை வகிக்கிறது.

நம்முடைய நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால், தமிழ் ஓர் அனைத்து நாட்டு மொழியாகவே இருக்கிறது.

தமிழ்நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும், கலாசார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ்நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரைகடல்களையும் அந்தக் கடல்களுக்கு அப்பால் உள்ள நிலங்களையும் அது கண்டது.

தமிழர்கள் அரேபியா, எகிப்து, ரோமாபுரி ஆகியவற்றுடன் வர்த்தகம் நடத்தினார்கள். வளமைமிக்க வர்த்தகச் சங்கங்களின் பெயர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருந்தன.

மதிப்பரிய வர்த்தகப் பண்டங்களுடன் கப்பல்கள் தங்கிய பல்லவர்களின் மாமல்லபுர துறைமுகத்தைப் பற்றிய வர்ணனை ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டிற்கும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே செழிப்பான வர்த்தகம் நடைபெற்றது பற்றி சுமத்ரா வில் கண்டெடுக்கப்பட்ட 11-வது நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது.

தமிழ் மன்னர்களின் கடற்படை இந்துமகா சமுத்திரத்தை ஆண்டு வந்தது. புகழ்மிக்க கடற்படையைப் பெற்றிருந்த ராஜேந்திர சோழன், சீனப் பேரரசுடன் ராஜீய வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தான்.

மேல் திசை நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்வதற்காக, பல நூற்றாண்டுகளுக்கு முன் பாண்டிய மன்னன்

ஒருவன், அகஸ்தஸ் என்னும் ரோமாபுரி பேரரசருக்கு தூதுவர் ஒருவரை அனுப்பியிருக்கிறான்.

ஆனால், அதே சமயத்தில் கற்புத் தெய்வத்திற்கு ஒரு கோவில் கட்டுவதற்காக சேரமன்னன் ஒருவன் இமய மலையிலிருந்து கல் கொணர்ந்து, கங்கையில் நீராட்டி அத் தெய்வத்திற்குச் சிலை அமைத்த வரலாற்றையும் நாம் அறிவோம்.

தமிழ் மொழி பண்பாட்டைப் பற்றி இங்கு குழுமியுள்ள பேரறிஞர்களை விட அதிகமாக நான் கூற முடியாது.

எல்லோருக்கும் தெரிந்தவற்றை நாம் மீண்டும் கூறினால் அது ஒரு மாபெரும் மரபிற்குச் செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பழமையான இலக்கிய அளவு எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது.

செழித்த, பண்பட்ட இந்த இலக்கியம் பல நூற்றாண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. உலக அறிவின் புனிதக் களஞ்சியமாக விளங்குகிறது குறள். வால்மீகியின் கதையை அடிப்படையாகக் கொண்ட கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியமாகும். உலகில் மிகவும் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புக்களில் ஒன்றாக இது திகழ்கிறது.

அதேபோன்று தற்கால இலக்கியமும் செழிப்புற்று விளங்குகிறது. கவிஞர்கள் கதாசிரியர்களின் பட்டியலில் சுப்பிரமணிய பாரதியார் பெயர் குறிப்பிடத்தக்கது. நமது நாட்டு விடுதலைப் போராட்ட கவியான அவர் புதியதொரு சுதந்திர சகாப்தத்தை முன்னரே அறிவிக்கக் கூடிய தீர்க்கதரிசனத்தைப் பெற்றிருந்தார்.

தமிழ் மரபு பழமையானது மட்டுமின்றி பரந்த உணர்வையும் பெற்றிருந்தது. தமிழ் மரபு எல்லா வகைகளிலும் சிறப்புற்று இருப்பதால் அதில் எந்த அம்சம் அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம். வடமொழிக்கு பாணினி செய்துள்ளதைப் போன்று, தமிழுக்கும் தொல்காப்பிய ஆசிரியர் திடமான விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிறார்.

ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர்கள் ஒரு தனித் திறனைப் பெற்றிருக்கிறார்கள். சுகாதார அமைப்புகளைப்பற்றி நாம் இங்கு குறிப்பிடவில்லை. உயர் கல்விக்கான பல பள்ளி

களும், ஸ்தாபனங்களும் இங்கு இருந்தன என்று தமிழ்நாட்டில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுகள் மூலம் நாம் அறிகிறோம்."

ஜாகிர் உசேன் அவர்களின் இந்த உரை, தமிழின் சிறப்பை தமிழரின் வரலாற்றுப் பெருமையை மீண்டும் ஒரு முறை உலகிற்குப் பறைசாற்றுவதாக அமைந்தது.

அண்ணாவின் தலைமையில் நடைபெற்ற அந்த "உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்கவிழா" வில் வரவேற்புரையாற்றிய வர், தியாகச்சுடர் காமராஜர் அவர்கள்! முன்னாள் முதலமைச்சர் என்பதற்காக அல்ல; தமிழகத்துத் தலைவர்களில் ஒருவர் என்ற பெரும் மரியாதையுடன் அண்ணா அவர்களே நேரில் சென்று அந்த விழாவில் காமராஜர் அவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட பெருந்தன்மையை எப்படித்தான் போற்று வது!



# 16

## நாடறிந்த உண்மை

மே மூன்றாம் நாள் பிற்பகல் மயக்கமுற்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வேளாண்மைத் துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுக்கு பிரபல டாக்டர்கள் மிகத்தீவிர சிகிச்சைகளை அளித்தனர். கல்லீரலில் ஏற்பட்ட கோளாறு காரணமாக உணவுக் குழலில் ரத்தக்கசிவு ஏற்படு வதைக் கண்டு உடனடியாக அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. இப்படி அவருக்கு உணவுக் குழலில் ரத்தம் கசியக் கூடிய நோய் ஏற்கனவே ஒருமுறை வந்திருக்கிறது. நாகர்கோயில் நாடாளு மன்ற இடைத் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்றபோது இதே போல் ரத்தவாந்தி எடுத்து மயங்கி விழுந்து விட்டார். ஒரு மாத கால சிகிச்சைக்குப்பிறகு உடல் நலம் பெற்றார். ஆனால் இந்த முறை அவரை உயிர் பிழைக்க வைக்கச் செய்த முயற்சிகள் இறுதியில் பயனற்றுப் போய் விட்டன.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு மயக்கம் தெளிந்து ஓரளவு பேச முடிந்தது அவரால்! நானும் மற்ற அமைச்சர்களும் எங்களது பல்வேறு நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்துவிட்டு மருத்துவ மனையிலேயே தங்கி, கோவிந்தசாமி அவர்களைக் கவனித்துக் கொண்டோம்.

1952–ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் அவருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அப்போது நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொள்ளவில்லை. இந்திய அரசியல் சட்டம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையான பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் அந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் முதல் பொதுத் தேர்தலில் கழகம் கலந்து கொள்வ தில்லையென்று முடிவெடுத்த போதிலும் கழக ஆதரவு பெற்ற சுயேச்சையாளர்கள் சிலரையும், உழைப்பாளர் கட்சி, காமன் வீல் கட்சி ஆகிய கட்சிகளையும் வெற்றி பெறச் செய்யப் பணியாற்றியது என்ற விபரங்களை ஏற்கனவே குறிப்பிட்டிருக் கிறேன்.

திரு. கோவிந்தசாமி அவர்கள் அந்தத் தேர்தலில் உழைப் பாளர் கட்சியின் சார்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள

விக்ரவாண்டி தொகுதியில் போட்டியிட்டார். அண்ணு அவர்களும் நானும் கழகச் சார்பில் தமிழக முழுவதும் பல்வேறு தொகுதிகளுக்குச் சென்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டோம்! முதன் முதலில் பெரிய அளவில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொள்வது 1952–ஆம் ஆண்டுதான்! அதனுல் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை முறையாக வகுத்துக் கொள்ள இயலவில்லை.

சனிக்கிழமையன்று மாயூரத்தில் (மயிலாடுதுறை) பேசிவிட்டு, கொள்ளிடம் என்ற ஊருக்கருகே பேசிவிட்டு, விடியற்காலை அங்கிருந்து புறப்பட்டுக் காரிலேயே சிவகாசி (ராமனுதபுரம் மாவட்டம்) சென்று, அங்கே ஆறுமுகசாமி நாடாருக்காக நாலைந்து கூட்டங்கள் பேசிவிட்டு, ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளை முடித்து அங்கிருந்து புறப்பட்டு திங்கட்கிழமை மாயூரத்துக்கு அருகில் சீர்காழியில் இராமநாத முதலியாருக்காகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். இதற்குள் காரோட்டி மயக்கமுற்றுத் தஞ்சாவூருடன் திரும்பிவிடவே நண்பர் கரந்தை சண்முகவடிவேல் என் காரை ஓட்ட வேண்டி நேர்ந்தது. இப்படிப்பட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சியிலேதான் கோவிந்தசாமி அவர்களுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்ய விக்ரவாண்டி போய்ச் சேர்ந்தேன்.

அப்பொழுதுதான் "வேக்சால்" கார் ஒன்று புதிதாக வாங்கியிருந்தேன். விக்ரவாண்டி தொகுதியில் இரவு முழுதும் கரடுமுரடானதும் பாறைகள் மோதக்கூடியதுமான பாதைகளில் பயணம். பல இடங்களில் கூட்டம். பொழுது விடிந்தும்கூட கூட்டம் முடியவில்லை. இறுதியாக அவர் என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு "நான் வெற்றி பெற்றுவிட்டேன். போய் வாருங்கள், நன்றி" எனக்கூறி வழியனுப்பி வைத்தார். அந்தத் தேர்தலில் பெருமிதமான வெற்றியும் பெற்ருர். ஆனுல் அவர் இணைந்திருந்த உழைப்பாளர் கட்சிக்கு அமைச்சர் பதவியில் ஆசை வந்து விடவே அதன் தலைவர் ராமசாமிப் படையாச்சி அவர்களும், அவருடன் வெற்றி பெற்ற அந்தக் கட்சியினரும் ராஜாஜி அவர்களின் முயற்சியால் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டனர்.

பதவிக்காகக் "கட்சி தாவல்" என்பது தமிழ்நாட்டில் 1952-ல் ஆரம்பமாயிற்று. ஆனுல் திரு. கோவிந்தசாமி அவர்கள் கழகம் செய்த நன்றி மறக்காமல்-காங்கிரசில் சேர மறுத்து, விட்டார். அதன் காரணமாக அண்ணு அவர்கள் உள்ளத்திலும்

என்னைப் போன்றோர் உள்ளத்திலும் அவருக்குத் தனி இடம் கிடைத்தது என்றே கூறலாம்.

1953–ல் மும்முனைப் போராட்டம் நடைபெற்று அண்ணா அவர்களும், கழக முன்னணியினர் அனைவரும் சிறைகளில் அடைக்கப்பட்ட போது-வெளியே இருந்து கழக நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொறுப்பு கோவிந்தசாமி அவர்களுக்கு அண்ணா அவர்களால் வழங்கப்பட்டது.

மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்ட கழகத் தலைவர்களும், செயல்வீரர்களும் பல்வேறு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். அத்தனை சிறைச்சாலைகளுக்கும் அவர் சென்று கழகத்தினரைச் சந்தித்து உற்சாகம் ஊட்டியதோடு சிறையில் இருந்த தலைவர்களுடன் கலந்துரையாடி, மேற்கொண்டு ஆற்றிட வேண்டிய கழகப் பணிகளுக்கான கருத்துரைகளையும் பெற்றுச் செயலாற்றினார். அந்தப் போராட்டத்தையொட்டித் தூத்துக்குடிக் கழகத்தினர் மீது பொய்யாகப் புனையப்பட்ட சதி வழக்கை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டுமென்றும் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்றும் 1953 நவம்பர் முதல் வாரத்தில் "தூத்துக்குடி வாரம்" எனக்குறிப்பிட்டு, பொதுக் கூட்டங்கள் நடத்த மக்களின் கையெழுத்துக்களைப் பெற்று முதலமைச்சருக்கு அனுப்புகிற பணியை கழக அமைப்புக்களை மேற்கொள்ளச் செய்து அதற்காக அரும்பாடுபட்டவர் ஏ. கோவிந்தசாமி அவர்கள்.

அவரை "எம். எல். ஏ. கோவிந்தசாமி" என்றும், "ஏ.ஜி" என்றும் கழகத்தினர் அன்போடு அழைக்கத் தலைப்பட்டனர்.

சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரம் பிரிந்து தனி மாநிலமாக அமைந்தபோது தி. மு. கழகத்தின் சார்பில் ஆந்திர மாநிலத் தலைமைச் செயலாளருக்கு அண்ணாவின் விருப்பப்படி ஏ. ஜி. அவர்கள் கையெழுத்திட்டு வாழ்த்தொன்றை அனுப்பி வைத்தார். 1953 செப்டம்பர் முப்பதாம் நாள் அனுப்பப்பட்ட அந்த வாழ்த்தில்; "திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாகிய நாங்கள், இன்று பிறக்கும் ஆந்திர மாநிலத்தை மனமாரப் பாராட்டுகிறோம். ஆந்திர நாட்டுப் பற்றுடையோருக்கும், உரிமைப் போராட்ட வீரர்களுக்கும், அனைவரிலும் சிறப்பாக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த பொட்டி சீராமுலுக்கும் மரியாதை செலுத்துகிறோம். இன்பமும், செல்வச் சிறப்பும் உடையதாக புதிய ஆந்திரம் இருக்க விழைகிறோம்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

கழக ஆதரவு பெற்ற உழைப்பாளர் கட்சி வேட்பாளராக 1952-ல் போட்டியிட்டு வென்றவர், உழைப்பாளர் கட்சி காங்கிரசில் கரைந்து விட்டபோது, அதை ஏற்றுக் கொள்ளாமல் கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகப் பொறுப்பாளர் பதவியையும் பெற்று 1957-ல் நடைபெற்ற தேர்தலில் வளவனூர் தொகுதியில் கழக வேட்பாளராகவே போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1962-ல் வெற்றி வாய்ப்பை இழந்த அவர் 1967-ல் வெற்றி பெற்று அண்ணா தலைமையிலான அமைச்சரவையில் ஒரு அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

இடைக்காலத்தில் அண்ணா அவர்களை எதிர்த்து ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கட்சிக்குள்ளேயே கலகம் விளைவித்த காலகட்டத்தில் என்ன காரணத்தாலோ ஏ. ஜி அவர்கள் சம்பத் கோஷ்டியினர் விரித்த வலையில் விழுந்து விட்டார். 1960-1961-ஆம் ஆண்டுகளில் சம்பத் கோஷ்டியினர் அண்ணா மீது வீண் பழிகளைச் சுமத்தி விட்டுக் கட்சியை விட்டுப் பிரிந்து தமிழ் தேசியக் கட்சியென்ற புதுக் கட்சியைத் தொடங்கிய போது அந்த நிலையை ஏற்றுக் கொள்ள முடியாதென அறவே மறுத்து விட்டார் ஏ. ஜி.

இருந்தபோதிலும் இடையில் அந்தச் சில ஆண்டுகள், அவர் சம்பத்துக்கு ஆதரவாக இருந்த நிலையை நானும் கழக முன்னணியினர் பலரும் விரும்பவில்லை. அதன் காரணமாக எனது ஆருயிர் நண்பர் கடலூர் இளம்வழுதி அவர்கள் ஏ. ஜி. அவர்களுடன் கடுமையான பகையே கொண்டிருந்தார். கடலூர் வட்டாரத்தில் இளம்வழுதி கழகத்தின் காவல் அரணாகத் திகழ்ந்த காலம் அது. தனது அறிவால் ஆற்றலால் அயராத உழைப்பால் எண்ணற்ற இளைஞர்களைக் கழகத்தில் இணைத்த இளம்வழுதியும்-இளமை தொட்டு வீறு கொண்ட கழக வீரனாக நடை பயின்று மக்கள் மனத்தில் நல்லதோர் இடம் பெற்ற நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியும் சிற்சில விஷயங் களில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் என்றாலும், ஏ. ஜி. அவர்கள் சம்பத்தின் பக்கம் சற்று சாய்கிறார் என்பதிலே ஒரே அணியில் இருந்து அவரை எதிர்த்தார்கள். அதன் காரணமாக இளம்வழுதி-ஏ. ஜி. இருவரின் மனக் கசப்பும், பகையும் வளர்ந்து கொண்டேயிருந்தது.

சம்பத், கழகத்தைவிட்டு வெளியேறிய பிறகு, ஏ. ஜி அவர்கள் அண்ணாவின் தலைமையில் உறுதியாக நின்றுவிட்ட தைச் சுட்டிக்காட்டி, இளம்வழுதியைச் சமாதானப்படுத்த நான்

எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. நான் இளம்வழுதியின் சார்பாக இருக்கிறேனே என்றுகூட ஏ. ஜி. அவர்களுக்குச் சந்தேகம்.

அண்ணா தலைமையில் அமைந்த ஆட்சியில் ஏ. ஜி. அவர்கள் அமைச்சரான பிறகும்கூட அவருக்கும் இளம்வழுதிக்கு மிடையே இருந்த பகையுணர்வு மறையவில்லை. அண்ணா மறைவுக்குப் பிறகு என் தலைமையில் அமைந்த அமைச்சரவையிலும் ஏ. ஜி. தொடர்ந்து நீடித்தார். அப்போதும் இளம்வழுதி-ஏ. ஜி. பகை தீர்ந்தபாடில்லை!

அந்தச் சூழ்நிலையிலேதான் ஏ. ஜி. அவர்கள் சென்னைப் பொது மருத்துவமனையில் மரணத்தோடு போராடிக்கொண்டிருந் தார். அவர் மறைவதற்கு முதல் நாள் என்னையும், அமைச்சர் களையும், மற்றும் கழகத் தலைவர்களையும் அருகே அழைத்து உணர்ச்சி பொங்கக் கூறிய வாசகங்கள் இன்னமும் என் காது களில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. அழுத்தம் திருத்த மாகப் பேசினார். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன் படுத்தினார்.

''கலைஞர் அவர்களே! இனி நான் பிழைக்கமாட்டேன்: உங்களுக்கும் எனக்கும் 1960-ஆம் ஆண்டில் சம்பத் விஷய மாக எத்தனையோ கருத்து வேறுபாடுகள். சம்பத்து, அண்ணா வுக்கே துரோகம் நினைக்கிறார் என்று தெரிந்ததும் நான் உங்கள் நிலையை ஆதரித்தேன். நீங்களும் என்னை ஏற்றுக் கொண்டீர்கள். பழைய கசப்புக்களையெல்லாம் மறந்து நீங்கள் எங்கள் குடும் பத்திற்குச் செய்திருக்கிற உதவிக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை. என்னோடு விரோதமாக இருந்தாலும் இளம்வழுதி தான் எனக்கு உண்மையான நண்பர்! அதனால் எனது வேண்டுகோள் ஒன்றைத் தயவுசெய்து கேளுங்கள். நான் இறந்துவிட்டால் அந்த இடத்தில் அமைச்சராக யாரை நியமித்தாலும் நியமியுங்கள்; ஏன்; என் நண்பர் இளம்வழுதி யையேகூட நியமியுங்கள்! காரணம், அவர் கட்சிக்குத் துரோகம் செய்யமாட்டார்! என் வகுப்பார் ஒருவரை மந்திரியாக்க வேண்டுமே என்பதற்காகத் தயவுசெய்து பண்ருட்டி ராமச்சந்தி ரனை மட்டும் நியமித்து விடாதீர்கள். அது கட்சிக்குப் பெரிய துரோகமாகிவிடும். அந்தக் கெடுதியை வலிய வரவழைத்துக் கொள்ளாதீர்கள். என் வார்த்தையை நான் இறந்தபிறகு தட்டி விடாதீர்கள்.''

இதைக் கூறிக்கொண்டே அவர் அழுதார். சுற்றி நின்ற நாங்களும் கண்ணீர் வடித்தோம். 18-5-69 பிற்பகல் மூன்றரை மணி அளவில் ஏ. ஜி. மறைந்து விட்டார்.

ஏ. ஜி. அவர்களின் குடும்பத்திற்கு நிதி திரட்டித் தருகின்ற முயற்சி உடனடியாகத் தொடங்கப்படுமென நான் அறிவித்து, அவ்வாறே ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகை நிதியாக அவரது குடும்பத்திற்கு வழங்கப்பட்டது.

அவர் இறுதி மூச்சு விடுவதற்கு முன்பு தெரிவித்தவாறு அவரது மகள்களின் திருமணத்தையும் கழகமே முன்னின்று நடத்தி வைத்தது.

அவர் விரும்பியதையெல்லாம் அவரது குடும்பத்தைப் பொறுத்தவரையில் என்னாலியன்ற வரையில் செய்து முடித்தேன். ஆனால் அவர் மரணப்படுக்கையில் என்னை எச்சரித்து ஒன்றைச் சொன்னாரே; அதை மட்டும் நான் அலட்சியப்படுத்தி விட்டேன்! என்ன இருந்தாலும் அனுபவபூர்வமாக உணர்ந்து அவர் சொன்ன கருத்தை நான் ஏற்காமல் போனதின் விளைவைப் பிறகு புரிந்துகொண்டேன். ஆனால் ஒன்று; ஏ. ஜி. அவர்கள் குறிப்பிட்ட அந்த நண்பரை அமைச்சரவையில் நான் அமர்த்தியதால் மட்டுமல்ல; அவரையொத்த வேறு சில நண்பர்களையும் அமைச்சரவையில் இடம் பெறச் செய்து சோதனையான காலத்தில் எவ்வளவு வேதனைக்கு ஆளானேன் என்பதெல்லாம் நாடறிந்த உண்மைகள் அல்லவா?



# 17

## பரம்பிக்குளம் ஆளியாறு இறுதி ஒப்பந்தம்

தமிழக ஆட்சியில் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாக பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பாதுகாத்துத் தீரவேண்டிய பெரும் பொறுப்பு கழக ஆட்சிக்கு ஏற்பட்டது. பத்துக்கு மேற்பட்ட மிகப் பெரிய பஞ்சாலைகள் மூடப்பட்டு, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழக்கக்கூடிய சூழ்நிலை முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டுவிட்டது. அந்தத் தொழிலாளர்களின் துயர் துடைக்க நான் எடுத்துக்கொண்ட முயற்சியின் முதல்கட்டமாக "தமிழக நெசவாலை தொழிற் கழகம்" உருவாக்கப்பட்டது. அது குறித்து நான் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டேன்

"மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தும் நோக்கத்துடன் தமிழக நெசவாலை தொழிற் கழகம் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்படும். மாநில கைத்தறி நெறியாளராக இருந்த சி. ராமச்சந்திரன் இந்த கார்பரேஷனின் தனி அதிகாரியாக இருப்பார். மூடப்பட்ட மில்களை அரசாங்கம் ஏற்று நடத்துவது பற்றி ஆராய்வதற்காக ஏற்கனவே சில நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகள் அரசுக்கு விரைவில் கிடைக்கவிருக்கின்றன. மில் தொழில் நிறுவனம் அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து தமிழக அரசுடனும், மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மூடப்பட்ட பஞ்சாலைகளை ஏற்று நடத்துவது பற்றி முடிவு செய்யும்."

இவ்வாறு அறிவித்த நான் உடனடியாக டெல்லிக்குச் சென்று அந்த நிறுவனத்தை அமைப்பது பற்றி மத்திய அமைச்சர்களுடன் பேச்சு நடத்தினேன். அந்த நிறுவனத்திற்கு மத்திய அரசு 51 சதவிகித பங்குகளைத் தருவதோடு மாநில அரசு தர வேண்டிய 49 சதவிகித பங்குத் தொகையை மத்திய அரசு கடனாகத் தரவேண்டுமென்றும் வலியுறுத்தினேன்.

இந்த நிறுவனத்திற்காக தமிழக அரசின் 69-70-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. 1965-ம் ஆண்டில் இருந்தே தமிழகத்தில் பஞ்சாலைகள்

தொடர்ந்து மூடப்பட்டு வந்துள்ளன. இதுபற்றி ஆராய பல குழுக்கள் அமைக்கப்பட்டன என்றாலும் அந்த ஆலைகளைத் திறப்பதற்கு ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது கழக ஆட்சியில் தான் முதல் தடவையாக நடைபெற்றது.

பொருளாதார நிபுணர் பி. எஸ். லோகநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் கருத்துக்களை ஏற்று அண்ணா தலைமை யிலே இருந்த அமைச்சரவை செயல்படத் தொடங்கியது என்றாலும் வர்த்தக வங்கிகள் கடன் கொடுப்பதற்கான உத்தர வாதத்தை அரசாங்கம் வழங்கிய போதிலும் அந்தக் கடன்களை வாங்கி பணிகளைத் தொடங்கிய ஆறு ஆலைகள் தொடர்ந்து நல்ல முறையில் இயங்க முடியவில்லை.

மத்திய அரசின் உற்பத்தி வரி, பஞ்சு விலை உயர்வு, நூல் தேக்கம் ஆகியவை அதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன. அது குறித்து மத்திய அரசிடம் மாநில அரசின் சார்பாக நான் எடுத்துக் கூறி அதன் விளைவாக சில சலுகை களை அளிக்க மத்திய அரசும் முன்வந்தது. ஆனாலும் அது போதாது என்றும் மேலும் சலுகைகள் தந்தால்தான் ஆலைகள் இயங்கும் என்றும் மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத் தியது. அதற்கிடையிலேதான் எல்லா சங்கடங்களையும் சமாளித்து எப்படியாவது மூடப்பட்ட ஆலைகளை இயங்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழக நெசவாலை தொழிற் கழகம் 1969-இல் அமைக்கப்பட்டது.

முதற்கட்டமாக அந்த நிறுவனம் கம்போடியா, ரங்க விலாஸ், கிருஷ்ணவேணி, கஸ்தூரி; ஓம் பராசக்தி ஆகிய ஐந்து ஆலைகளை ஏற்று நடத்த தீர்மானித்தது. நிறுவனத்தின் பரிந் துரையை மாநில அரசு அங்கீகரித்து அந்த முடிவை 19-5-69. இல் வெளியிட்டது.

ஏற்கனவே மத்திய அரசை வலியுறுத்தியவாறு மூடப் பட்ட பஞ்சாலைகளை ஏற்று நடத்துவதால் உண்டாகக்கூடிய செலவில் மத்திய பஞ்சாலை கார்பரேஷன் 51 சதவிகிதமும், மாநில பஞ்சாலை கார்பரேஷன் 49 சதவிகிதமும் ஏற்றுக் கொண்டன.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள ஏனைய பஞ்சாலைகளுக்கு மற்றொரு முக்கியமான சலுகையை அரசின் சார்பில் வெளியிட்டேன். அதாவது தமிழ்நாடு பஞ்சாலை கள் அனைத்தும் மின்சாரக் கட்டணத்தின் மீது செலுத்தி வந்த

நாற்பது சதவிகித உபரி வரியை (சர்-சார்ஜ்) முப்பது சதவிகித மாகக் குறைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையே மூடப்பட்டிருந்த ஆலைகளைத் திறக்கக் கோரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை 27-5-69-இல் தமிழகம் முழுவதும் மத்திய அரசை வலியுறுத்தி ரெயில் நிறுத்தப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது. அது குறித்து நான் வெளியிட்ட வேண்டுகோள் அறிக்கையில் "கோவையில் மூடப்பட்டுள்ள ஆலைகளைத் திறப்பதற்கு மத்திய அரசு இதுவரை உதவி செய்யாததால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய அரசுக்கு தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ள 27-ஆம் தேதியன்று ரெயில்களை நிறுத்துவது என்று முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு கோவையில் முதலில் ஐந்து ஆலைகளை திறப்பதற்கு முடிவெடுத்து அதற்கான விவரம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாநில பஞ்சாலை கார்ப்ப ரேஷனுக்கு 51 சதவிகிதம் மத்திய அரசு உதவி அளித்திட வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. அந்த உதவி விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தமிழக அரசு தனது பங்கான 49சதவிகிதத்தைத்தந்திட முன்வந்து ஆலைகளைத் திறக்கும் முயற்சி யில் ஈடுபட்டிருக்கிறது. இதற்கிடையே கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்தும் ரெயில் நிறுத்தப் போராட்டம் தேவைதானு என்பதை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆலைகளைத் திறப்பதில் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசுக்கு உதவியாக குறிப்பிட்ட 27-ம் தேதி அன்று கூட்டங்கள் நடத்தி மத்திய அரசின் உதவியை விரைவுபடுத்தும் வகையில் தீர்மானங் களை நிறைவேற்றுவது மத்திய அரசுக்கு வேண்டுகோளாக அமையும் என்பதால் ரெயில் நிறுத்தப் போராட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என குறிப்பிட்டிருந்தேன்.

அந்த அறிக்கையைத் தொடர்ந்து செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தார்கள். "கம்யூனிஸ்டுகள் நடத்தும் ரெயில் நிறுத்தப் போராட்டத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காக ரெயிலை நிறுத்திப் போராட்டம நடத்துவது தவறில்லையா?" எனச் செய்தி யாளர்கள் என்னைக் கேட்டார்கள். அதற்கு நான் அளித்த பதிலில் "போராட்டம் நடத்துவது தவறு என்று கூறமுடியாது. மத்திய சர்க்காரின் மெத்தனத்தைக் கண்டித்துத்தான் கம்யூனிஸ்டுகள் அடையாளப் போராட்டம் நடத்துகிருர்கள். இன்று சென்னையில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்

ஏ. எஸ். கே. போன்றவர்களை அழைத்து ரெயில் நிறுத்தப் போராட்டம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறேன். அவர்கள் அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதாக உறுதி கூறியிருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எல்லாவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும்'' என்று கூறினேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தபடி சென்னை மாநகரிலும் தமிழ்நாட்டின் மற்ற நகரங்களிலும் நடைபெற்ற ரெயில் நிறுத்தப் போராட்டத்தில் 150 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களையெல்லாம் அன்று இரவே விடுதலை செய்யும்படி உத்தரவிடப்பட்டது. சென்னையிலே ஏ. எஸ். கே. அவர்களும், மதுரையிலே கே. டி. கே. தங்கமணி அவர்களும், கோவையிலே பாலதண்டாயுதம் அவர்களும் அந்தப் போராட்டத்திலே கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள்.

மாநில உரிமைகளுக்காக மத்திய அரசை வலியுறுத்துகின்ற ஒரு போராட்டத்தில் ஈடுபடுபவர்களிடம் கழக அரசு எத்தகைய அணுகு முறையைக் கையாண்டது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்ட நான்காவது மாதத்திலேயே ஒரு இடைத்தேர்தலையும் சந்திக்க நேரிட்டது. 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பெருந்துறை தொகுதியிலிருந்து கூட்டணியின் சார்பாக சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் வெற்றி பெற்றிருந்தார். அவர் திடீரென்று காலமானதால் 1969-ஆம் ஆண்டு மே மாதம் 30-ந் தேதியன்று இடைத் தேர்தல் நடைபெற்றது.

அந்தத் தொகுதி கூட்டணி கட்சிக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தொகுதி என்ற அடிப்படையில் அந்த இடைத்தேர்தலிலும் அந்தக் கட்சிக்கே விட்டுக்கொடுக்கப்பட்டு, பாலசுப்ரமணியம் அவர்களின் சகோதரர் சண்முகசுந்தரம், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் கே. பி. முத்துசாமி போட்டியிட்டார்.

காங்கிரஸ்காரர்கள் அந்த இடைத்தேர்தலில், கழக அரசு முழுமைப்படுத்திய பரம்பிக்குளம் ஒப்பந்தத்தைக் குறைகூறி அதனையே தேர்தல் பிரச்சாரமாகச் செய்தார்கள்.

பெருந்துறை தொகுதியில் உள்ள காஞ்சிகோயில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நான் பேசும்போது –"கேரளத்துடன் ஏற்பட்ட நதி நீர் ஒப்பந்தம் தமிழ் நாட்டிற்கு துரோகம் விளைவிப்பதாகும் என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். ஐம்பது கோடி ரூபாய் செலவுசெய்து அந்தத் திட்டத்தைப் பயனில்லாமல் ஊறப்போட்ட காங்கிரசார் செய்தது துரோகமில்லையா? இந்த ஒப்பந்தம் துரோகம் என்றால் அதற்கு நடுநிலையாக இருந்த டெல்லி மந்திரி கே. எல். ராவ் அவர்களை வைத்து வாதிட நான் தயார். ஒப்பந்தம் தவறு என்று கே. எல். ராவ் கூறினால் முதலமைச்சர் பதவியைநான் ராஜினாமா செய்யத் தயார்" என்று அறைகூவல் விடுத்தேன்.

பெருந்துறை கூட்டத்தில் நான் பேசும்போது, "பரம்பிக்குளம் ஆளியாறு அணைத் திட்டம் ஐம்பது கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு பயனற்ற நிலையில் இருந்தது. தமிழகத்தின் சார்பில் நானும், கேரள அரசின் சார்பில் நம்பூதிரிபாத் அவர்களும் கே. எல். ராவ் முன்னிலையில் பேசி சமரசம் செய்து கொண்டோம். பயனுள்ள நல்ல திட்டம் என்று ராவ் பாராட்டினார். அவர் மட்டுமல்ல, நாடு முழுமையும் பாராட்டியது. ஆனால் காங்கிரஸ்காரர்கள் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ஏக்கருக்கு துரோகம் எனக் கூச்சல் போடுகிறார்கள். பார்க்குமிடமெல்லாம் துரோகம், துரோகம் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். கே. எல். ராவ் இந்தத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறாரே. அவரென்ன கழகத்துக்காரரா? கம்யூனிஸ்ட்காரரா? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தானே? காங்கிரஸ் கட்சியை எதிர்த்து எல்லாக் கட்சிகளும் கூட்டு சேர்ந்திருப்பதே காங்கிரசுக்கு உள்ள பலத்தைக் காட்டவில்லையா என்று காங்கிரஸ் தலைவர் கேட்கிறார். வீட்டுக்குள் விஷப் பாம்பு நுழைந்துவிட்டால் ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி தடியால் அடிக்கிறார்கள் என்றால் எனக் கல்லவோ பலம் வந்துவிட்டது என்று பாம்பு சொன்னால் அது எப்படி வேடிக்கையானதோ அது போன்றுதான் அந்தக் காங்கிரஸ் தலைவரின் பேச்சும் வேடிக்கையாக இருக்கிறது" என்று உரையாற்றினேன்.

மே 30-ஆம் தேதி தேர்தல் நடைபெற்று, 31-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. கழக ஆதரவுடன் கூட்டணி

வேட்பாளர் சண்முகசுந்தரம் 7,579 வாக்குகள் அதிகமாகப் பெற்று காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்தார். 67–ஆம் ஆண்டு தேர்தலில் 3,130 வாக்குகள் வித்தியாசத்தில்தான் அந்தத் தொகுதியில் கூட்டணி வேட்பாளர் வெற்றி பெற்றிருந்தார்.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் குறித்து கேரள அரசோடு கழக அரசு செய்துகொண்ட ஒப்பந்தம் தவறு என்று இடைத்தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்தார்களே, காங்கிரசார், அது குறித்து சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசிற்கும் இடையே நதி நீர் பங்கீடு குறித்து ஆராய்ந்து தீர்வுகாண இரு மாநிலங்களின் மாநாடு 10-5-69 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றது, இதில் தமிழக அரசின் சார்பாக நான், நிதியமைச்சராக இருந்த மதியழகன், பொதுப்பணி அமைச்சராக இருந்த சாதிக் ஆகியோரும், கேரள அரசின் சார்பில் முதலமைச்சராக இருந்த நம்பூதிரிபாத், பாசனத்துறை அமைச்சராக இருந்த பி.ஆர். குருப், மின்துறை அமைச்சராக இருந்த எம். என். கோவிந்தன் ஆகியோரும் கலந்து கொண்டோம். மாநாட்டிற்கு மத்திய பாசன மின்விசைத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் தலைமை வகித்தார்.

மாநாட்டின் முடிவில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம், பவானி திட்டம், பம்பார் படுகை. கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி திட்டம், கபினி ஆறு ஆகியவற்றின் தண்ணீரைப் பங்கீடு செய்து கொள்வது பற்றி ஒரு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் நானும், கேரள அரசின் சார்பில் ஈ. எம். எஸ். அவர்களும், மத்திய அரசின் அமைச்சர் கே. எல். ராவ் ஆகியோரும் கையெழுத்திட்டோம்.

ஒப்பந்தம் பற்றி செய்தியாளர்கள் என்னிடம் கேட்ட போது, “ஏறத்தாழ அறுபது கோடியிலிருந்து எழுபது கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தால் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கரா நிலம் பாசன வசதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் தொடங்கப்பட்ட வேலைக்கு ஐம்பது கோடிக்கு நெருக்கமாக செலவழித்திருந்தும் கூட தமிழக அரசுக்கும் கேரள அரசுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் நிறைவு பெறாததால் ஒரு லட்சம் ஏக்கரா அளவே பயனடைய முடிந்தது. நீராறு பிரச்சினை தீராத பிரச்சினையாக இருந்தது. இப்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி மேலும்

ஒரு லட்சம் ஏக்கரா பரம்பிக்குளம் ஆளியாறு பகுதியில் பாசன வசதி பெறும்; ஆனைமலையாறு மூலம் கிடைக்கும் நீரால் வறண்ட பகுதிகளில் சுமார் இருபதாயிரம் ஏக்கர் சாகுபடியாகும். கோவை நகருக்கு சிறுவாணி மூலம் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த ஒப்பந்தம் பயன்படுகிறது. மின்சார உற்பத்தியும் இந்த ஒப்பந்தம் மூலம் அதிகரிக்கும். பல ஆண்டுகளாகப் பேசப்பட்ட பிரச்சினைக்கு வெற்றிகரமான முடிவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னின்று நடத்திய மத்திய அமைச்சர் ராவ் அவர்கட்கும் தமிழக, கேரள அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பிற்கும், கேரள முதல்வர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நல்ல எண்ணத்துடன் திரு. சி. சுப்பிரமணியம் முயற்சியால் தொடங்கப்பட்ட திட்டம் எங்களால் பூரணத்துவம் பெற்றதில் தனி மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேச்சுவார்த்தையைத் தொடங்கி வைத்தார் அண்ணா; அதை நாங்கள் முடித்து வைத்ததில் ஒரு உணர்ச்சிமயமான பூரிப்பு ஏற்படுகிறது" என்று கூறினேன்.

பரம்பிக்குளம் ஆளியாறு நதி நீர்ப் பங்கீடு ஒப்பந்தம் குறித்து என்னையும், கேரள முதல்வரையும் பாராட்டிய மத்திய அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள், "மாநிலங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதில் இவர்கள் இந்தியாவுக்கே வழி காட்டுகிறார்கள்" என்று கூறினார்.

சென்னையில் 11-5-69 அன்று தமிழரசுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் இந்த ஒப்பந்தம் பற்றி "புராணத்திலே பகீரதன் தவம் செய்து ஆகாய கங்கையை பூமிக்குக் கொண்டு வந்தான் என்று கதையுண்டு. ஆளியாறு தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வரத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கேரள அரசோடு ஒப்பந்தம் செய்திருப்பது, நமது முதல்வரின் செயல் திறமைக்குச் சிறந்த சான்று. தமிழகத்திலும் கேரளத்திலும் காங்கிரசே அரசுக் கட்டிலில் இருந்த காலத்திலும் இந்த ஒப்பந்தம் சாத்தியமாகவில்லை. மாறாக இரண்டு மாநிலங்

களிலும் காங்கிரஸ் அல்லாத ஆட்சி நடைபெறுவதால் இப்பொழுது சாத்தியமானது. இதனால் கோவை நகர் குடிநீர்ப் பிரச்சினை தீரும். இந்த ஒப்பந்தம் தமிழகம், கேரளம் ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் நீதி வழங்கும் வகையில் அமைந் துள்ளது. இதன் கர்த்தாக்களான தமிழக முதல்வரையும், கேரள முதல்வரையும் பாராட்டவேண்டும்" என்று கூறினர். அந்த ஒப்பந்தத்தை திரு. சி. சுப்பிரமணியம் அவர்களே வரவேற்றுப் பாராட்டிய செய்தி 14-5-69 "தினமணி" இதழில் வெளியானது.



# 18

## இங்கும் அங்கும்

"நீண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்று சொன்னாலும் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள் என்று கூறினாலும் இரண்டையும் சமமாகக் கருதி ஏற்றுக்கொள்பவன்தான் என் தம்பி கருணாநிதி" என்று எனது 45:வது பிறந்த நாளின் போது– அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் பேசியதை நினைத்துக் கொண்டே கண்கள் பனிக்க எனது 46-வது பிறந்தநாள் எளிமையாகக் கொண்டாடப்பட்ட போது அதில் கலந்து கொண்டேன்.

பிறந்தநாளையொட்டி என்னைப் பேட்டி கண்ட பி. டி. ஐ நிறுவனத்தினர் "1967 முதல் இந்த இரண்டு ஆண்டுகால ஆட்சி நிர்வாகத்தில் எதைப்பற்றி நீங்கள் பெருமையாகக் கருதுகி றீர்கள்?" என்று கேட்டார்கள்.

"சாதாரண மக்களின் அன்றாடத் தேவையான இன்றி யமையா உணவுப் பொருள்களின் விலை குறைத்திட வழி வகுக்கப்பட்டுள்ளதே, அதைத்தான்" என்று பதிலளித்தேன்.

"இந்த இரண்டு ஆண்டுகளில் தாங்கள் மகிழ்ச்சி கொள்ள முடியாத நிகழ்ச்சி எது?"

"எதிர்க் கட்சியினர் தங்களது இருபதாண்டு கால ஆளுங் கட்சி அனுபவத்தை எதிரொலிக்காதது."

"தமிழக மக்களுக்கு தங்களின் பிறந்த நாள் பரிசாக எதை அளிக்கிறீர்கள்?"

"என்னையே தமிழ் மக்களுக்காகத்தான் அளித்திருக் கிறேன்" என்று அவர்கள் கேட்ட மற்ற கேள்விகளுக்கும் பதிலளித்தேன்.

பிறந்த நாளையொட்டி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் "தமிழ்நாட்டின் சுறுசுறுப்பான முதலமைச்சர் பிறந்த தினத்தையொட்டி அவருக்கு எனது நல்வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

"அன்பும் பண்பும் நிறைந்த அருமை கலைஞர் அவர்களது 46-ஆம் ஆண்டு தோற்றத்தை மன மகிழ்ச்சியோடு வரவேற்

கிறேன். மற்றும் இனத்திற்கு, நாட்டிற்கு, சமுதாயத்திற்கு பல அரிய நலன்களும் வளர்ச்சிகளும் ஏற்பட ஒரு நல்வாய்ப்பு என்று உறுதி கொண்டு மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்" என்று தந்தை பெரியார் என்னை வாழ்த்தினர்.

கட்சி சார்பற்ற முறையில் விழாக் குழு ஒன்று உருவாக்கப் பட்டு நடத்தப்பட்ட பிறந்த நாள் விழா கூட்டத்தில் என் பெயரால் ஒரு அறக்கட்டளை நிறுவ வேண்டுமென்று முதற் கட்டமாக ஐம்பதாயிரம் ரூபாயும், அடுத்த கட்டமாக இருபத்தைந்து ஆயிரம் ரூபாயும் தரப்பட்டது.

அதைப் பெற்றுக்கொண்ட நான் "அறக்கட்டளை என் பெயரால் நிறுவப்பட வேண்டுமென்று நண்பர்கள் ஆவலைத் தெரிவித்துள்ளனர். இந்தத் தொகையை வங்கியில் வைப்பு நிதி யாகப் போட்டு, அதனால் வரும் வட்டிப் பணத்தைக் கொண்டு தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு பரிசு அளிக்கலாம் என்ற எண்ணத்தைத் தெரிவிக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் பள்ளி இறுதி வகுப்பில் தேர்வில் தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் எடுக்கும் ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த ஒரு மாணவனுக்கும், மாணவிக்கும் இருநூறு ரூபாய்க்குக் குறையாத அளவில் பரிசு வழங்கப்பட வேண்டும்.

நண்பர்கள் கூறியதுபோல் அமையவிருக்கும் அறக் கட்டளைக்கு என் பெயர் தேவையில்லை. என்னை ஆளாக்கி வளர்த்து விட்ட அண்ணனின் பெயரால் "அண்ணா அறக் கட்டளை" என்றே வழங்கப்பட வேண்டும். மேலும் வரும் செப்டம்பரில் அண்ணா அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழா வருகிறது. அவர் உயிரோடு இருந்திருந்தால் மணிவிழா எடுத்து மகிழ்ச்சியோடு கொண்டாடியிருக்க வேண்டிய விழா. ஆனால் அவர் இல்லை. அவர் நினைவோடு நாம் இருக்கிறோம் என்பதற்கேற்ப வருகிற அண்ணாவின் பிறந்த நாளின்போது அறுபது ஊர்களில் அண்ணாவின் வெண்கலச் சிலை நிறுவப்படும்; அதற்கான முயற்சிகளை தி. மு. கழக தலைமைக் கழகம் மேற்கொள்ளும்" என்று அறிவித்தேன்.

நிகழ்ச்சியில் கேரள கல்வி அமைச்சர் முகமது கோயா நாவலர் நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., என். வி. என்., எம். கல்யாண சுந்தரம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோவிந்தராஜன், ஷெரீப் சுந்தர்லால் நகாதா, காங்கிரஸ் கட்சியின் சார்பில் டாக்டர் விஜயலட்சுமி,

சோவியத் கான்சல் ஜெனரல் காவரின், அமெரிக்க கான்சல் ஜெனரல் தாமஸ் ரெக்னகல், நியூயார்க் தமிழர் ரகுநாதன், சுதந்திராகட்சியின் சார்பில் எஸ். எஸ். மாரிசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சோவியத் கான்சல் ஜெனரல் காவரின் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"கடந்த நான்கு மாதங்களாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்று நிர்வகித்து வரும் திரு. கருணாநிதி மக்களிடத்தில் நிறைந்த செல்வாக்கைப் பெற்றிருக்கிறார். சோவியத் நாட்டிலிருந்து வந்த பல்வேறு தூதுக் குழுக்களை அவர் வரவேற்று அளவளாவி யிருக்கிறார். அத்துடன் இந்திய சோவியத் நல்லுறவை வளர்க் கும் பல நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்று நம்மிரு நாடுகளுக்கு மிடையே நிலவுகிற நல்லுறவை உறுதிப்படுத்தவும் வளர்க்கவும் உதவியிருக்கிறார். இந்திய சோவியத் நல்லுறவை வளர்ப் பதில் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையைக் கடைப்பிடித் தாரோ அதே கொள்கையை திரு. கருணாநிதி கடைப்பிடித்து வருகிறார்."

அவரைத் தொடர்ந்து பேசிய அமெரிக்க கான்சல் தாமஸ் ரெக்னகல் "முதலமைச்சர் திரு. கருணாநிதி மக்களிடத்தில் எத்தனை மிகுந்த மதிப்பைப் பெற்றுத் திகழுகிறார் என்பதற்கு இங்கே நடைபெறும் விழா ஒரு எடுத்துக்காட்டாகும். மக்களது அன்பிற்குப் பாத்திரமான அவரை நான் மனதார வாழ்த்து கிறேன்" என்று கூறி வாழ்த்தினார்.

நியூயார்க் நகரில் வாழும் தமிழ் இளைஞர் ரகுநாதன் அந்த நிகழ்ச்சியில் உரையாற்றும்போது பின்வருமாறு குறிப் பிட்டார்:

"அண்ணா இங்கில்லாத நாட்களில் அண்ணாவின் பிறந்த நாளை விழாவாக இங்கு கொண்டாடி அந்த விழாவின் பேச்சுக் களைப் பதிவு செய்து அந்த நாடாக்களை கலைஞர் அவர்கள் அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்திருந்தார். அண்ணா அவர்கள் அவற்றைக் கேட்டு மகிழ்ந்தார். பின் அவற்றை நியூயார்க் வாழ் தமிழர்களாகிய எங்களுக்கு அளித்துவிட்டு வந்தார். அண்ணாவின் கடைசிநேரத்தில் உங்களைக் காட்டிலும் அமெரிக்காவில் இருந்த நாங்கள் துடித்தோம். நீங்கள் அண்ணாவைப் பார்த்துக் கொண்டே துடித்தீர்கள்; நாங்கள் அவரைப் பார்க்காமலே துடித்தோம்.

அதையடுத்து எங்களை மற்றொரு கவலை பிடித்துக் கொண்டது. அவருக்குப் பிறகு தமிழ்நாட்டின் தலைமை என்னவாகுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். இந்த நாட்டிலிருந்து அமெரிக்கா வருகிற விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள், அரசு அதிகாரிகள் அனைவரிடமும் நாங்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றம் அண்ணாவிற்குப் பிறகு எப்படி இருக்கிறது என்று கேட்போம். அதற்கு அவர்கள், அந்தக் கவலையை விடுங்கள்; கலைஞரது தலைமையில் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்று எல்லோரும் ஒரே குரலாகச் சொல்வதைக் கேட்டு நாங்கள் மகிழ்வோம்."

கேரள மாநிலத்து அரசியலில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டு எல்லா சார்பு மக்களின் இதயத்திலும் பதிந்துவிட்ட பெயர்களில் ஒன்று முகமது கோய . அவர் அப்போது கேரளத்து கல்வி அமைச்சராக இருந்தார். என் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் ஆற்றிய உரையும் குறிப்பிடத்தக்கது. அது வருமாறு:

"திரு. கருணாநிதி ஒரு கலைஞர், ஒரு இலக்கியவாதி, ஒரு கவிஞர். அவரை அரசாங்க தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் பதவி என்ற சிறைச்சாலையில் அடைத்திருக்கிறீர்கள். கருணாநிதியைப் போன்ற ஒரு கலைஞருக்கு இது எத்தனை சங்கடமானது தெரியுமா?

"பைல்" களுக்கிடையிலேயும் அரசாங்க அலுவல்களில் சிகப்புநாடா முறைகளுக்கிடையிலேயும் பல ஆண்டு காலம் கழித்தால் அவருக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு அறுந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். கலைஞர் முதலமைச்சராக ஆனது தமிழக அரசுக்கு லாபம்; ஆனால் தமிழக இலக்கிய உலகிற்கு நஷ்டம். ஏழை மக்கள்; கட்டியிருக்கிற ஆடைக்கும் மாற்று ஆடையின்றி அவதிப்படுகிற குடிசை வாழ் மக்களுக்கெல்லாம் நான் ஒன்றைச் சொல்வேன்.

உங்களுக்கென்று ஒருவர் அரசோச்சுகின்ற இடத்திற்கு வந்திருக்கிறார். அண்ணாவின் வலக்கரமாக விளங்கிய அவர் இன்று அண்ணாவின் இடத்தில் இருக்கிறார் என்ற திருப்தியோடு இருங்கள். கலைஞருக்கு என்று ஒரு தனி பாணி உண்டு. இலக்கியத்திலும் அவர் அப்படித்தான். எந்த ஒரு எழுத்துப் பாணியையும் பின்பற்றாமல் தனக்கென ஒரு தனி பாணியை வகுத்துக் காட்டியவர் அவர். எதற்காக அவரைப் பாராட்டுவது என்று தெரியாமல் திகைக்கிறேன்.

மாரிசாமி குறிப்பிட்டதைப் போல - குண நலன்களைக் கொண்ட கலைஞரைப் பாராட்டுவதா? எழுத்தாற்றல் மிக்க இலக்கிய திறமையாளரைப் பாராட்டுவதா? எனக்கு விளங்க வில்லை. எங்கே எத்தனை நன்மைகள் தெரிந்தாலும் அத்தனை யிலும் கருணாநிதி இருக்கிறார் என்று பொருள்.

அண்ணா மறைந்தபோது மற்றொரு அண்ணா கிடைப்பாரா என்று தவங்கிடந்த நமக்கு கலைஞர் கிடைத்திருக்கிறார். பல ஆண்டுகளாக பலமுறை காங்கிரஸ் மந்திரிகள் பயணம் மேற் கொண்டு சந்தித்துப் பேசியும் தீராமலிருந்த ஆற்று நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டவர் கலைஞர்தான்.

காலையில் கேரளம் வந்தவர் மாலையில் பேச்சை வெற்றிகர மாக முடித்துக்கொண்டு திரும்பினார். இரு மாநிலங்களுக்கிடையில் நீண்டநாள் தீராதிருந்த சிக்கலைத் தீர்த்து வைத்துத் திரும்பிய கலைஞர் கருணாநிதியை வரவேற்று பாராட்டியிருக்கவேண்டிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் அதற்கு மாறாக தங்கக் கட்டிக் குள்ளே புழுவைத் தேடுகிறார்கள். தமிழ்நாட்டில் சிறுபான்மை சமூகத்தினரான முஸ்லீம்களை அரவணைத்துச் செல்கிற கலைஞரது பாங்கு பாராட்டுக்குரியது."

பிறந்த நாள் நிகழ்ச்சியை நண்பர்கள் நீலநாராயணன், வேலூர் நாராயணன் ஆகியோர் முன் நின்று நண்பர் நாகிரெட்டி போன்றவர்களுடைய ஒத்துழைப்போடும், சுந்தர்லால் நகாதா போன்றவர்களுடைய ஒத்துழைப்போடும் நடத்தினார்கள்.

அன்று நான் அறிவித்ததற் கொப்ப "அண்ணா அறக் கட்டளை" 15 - 10 - 69-ல் தொடங்கப்பட்டது. நான் விரும்பிய வாறே ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அதிகமான மதிப்பெண்கள் பெற்ற இரண்டு மாணவர்களுக்கு இருநூறு ரூபாய் வீதம் தருவதென்று முடிவெடுக்கப்பட்டது. 1973-ஆம் ஆண்டுவரையில் இருநூறு ரூபாய் வீதத்தில் தரப்பட்ட அந்தத் தொகை 1973-க்குப் பிறகு முன்னூறு ரூபாய் வீதம் உயர்த்தப்பட்டது.

அந்த அண்ணா அறக்கட்டளையின் மூலமாக 1970-ஆம் ஆண்டு 38 மாணவர்களுக்கு 7, 600 ரூபாயும், 71-ஆம் ஆண்டு 40 மாணவர்களுக்கு 8, 000 ரூபாயும் எனத் தொடங்கி 82-ஆம் ஆண்டு 53 மாணவர்களுக்கு 15, 900 ரூபாய் என்ற அளவிற்கு தரப்பட்டுள்ளது. இதைத் தவிர ஏழை மாணவர்களுக்குப் பள்ளிக் கட்டணம் கட்டுவதற்காக ஆண்டுதோறும் தரப்பட்ட வகையில்

82-83-ஆம் ஆண்டு முடிய சுமார் 13, 000 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. ஆக, அந்த அறக்கட்டளையின் மொத்தத் தொகைக்குக் கிடைத்த வட்டியின் மூலமாக இதுவரை மாணவர்களுக்கென சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

முன்னால் மேயர் நண்பர் சா. கணேசன் அவர்களுடைய முயற்சியால் 1972-இல் என் பெயரால் ஒரு அறக்கட்டளை தொடங்கப்பட்டு, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஏழை மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ஐம்பது ரூபாய் முதல் நூறு ரூபாய் வரை உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வட்டியாக வருகின்ற சுமார் ஐம்பதாயிரம் ரூபாயைக் கொண்டு ஏழை மாணவர்களுக்கு காசோலையாகவே இந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

என் பிறந்த நாள் விழா எதுவாயினும் அந்த நிகழ்ச்சிகளில் அளிக்கப்படுகிற தொகை ஏழைகளுக்காகவே செலவிடப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டு பிறந்த நாள் விழாவிலும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு கண்ணொளி வழங்கும் திட்டம் பிச்சைக்கார மறுவாழ்வுத் திட்டம், மாடுகளைப் போல் மனிதர்கள் இழுத்த கைரிக்ஷாக்களை ஒழித்துவிட்டு இலவசமாக அவற்றிற்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கிய திட்டம், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், அனாதைச் சிறுவர் களுக்கு கருணை இல்லங்கள் நடத்தி கல்விப் பயிற்சியும், உணவும் உறையுளும் அளிக்கும் திட்டம் போன்ற எல்லாச் செயல்களுமே ஏழை எளியோரை முன்வைத்து நிறைவேற்றப் பட்ட திட்டங்களாகும்.

என் பிறந்தநாள் நிகழ்ச்சிக்கு அடுத்த இரண்டு நாட் களுக்குப் பிறகு ஜூன் திங்கள் 5-ஆம் நாள் சென்னையில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் செயற் குழு கூடியது. அந்தச் செயற் குழுவில் காமராஜர் அவர்களின் குழுவிற்கும், சுப்பிரமணியம் அவர்களின் குழுவிற்கும் மனத்திற்குள் இருந்த வெறுப்பு வெளிப் படையாக வெடிக்கத் தொடங்கிற்று.

அந்தச் செயற்குழு கூட்டப்பட்டதின் முக்கிய காரணமே பொள்ளாச்சி மகாலிங்கம் விவகாரம் பற்றி விவாதிப்பதற்காகத் தான். அந்த விவகாரம் என்னவென்றால் திரு. காமராஜர் அவர் கள் ஒரு கூட்டத்தில் அப்போது பேசும்போது; பொள்ளாச்சி மகாலிங்கம் நடத்திய விழா ஒன்றில் தி. மு. கழக அமைச்சர் களுக்கு மது வகையறுக்கள் பரிமாறப்பட்டன எனக் குறிப் பிட்டார்.

உடனே அமைச்சர்கள் சார்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டு அதன் பின்னர் காமராஜர் அதற்குப் பதில் எதுவும் கூருமலே இருந்துவிட்டார். எந்த அமைச்சருக்கு அப்படி வழங்கப்பட்டது என்று சொன்னுல் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று அப்போதே குறிப்பிட்டேன்.

அதற்கும் திரு. காமராஜர் அவர்கள் பதில் அளிக்கவில்லை. மகாலிங்கம் அவர்களும் காமராஜர் மீது வழக்கு ஒன்றைத் தொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினுர். இந்த விவகாரம் குறித்து பேசுவதற்காகத்தான் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூடியது.

விவாதம் முற்றி குழப்பம் அதிகரித்தது. மகாலிங்கத்தின் மீது நடவடிக்கை எடுத்து அவரைக் கட்சியை விட்டு அறவே நீக்க வேண்டுமென்று காமராஜரின் ஆதரவாளர்கள் குறிப்பிட்டார்கள். அறவே நீக்க வேண்டாம், இரண்டு வருடத்திற்கு கட்சியை விட்டு அவரைத் தள்ளி வைக்கலாம் என்று காமராஜர் அவர்கள் கூறினுர்.

குழப்பமான சூழ்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அப்போதிருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு துண்டு அறிக்கையை அந்தச் செயற்குழுக் கூட்டத்தில் விநியோகம் செய்தார். அந்த அறிக்கையில் கண்டிருந்த வாசகங்கள் ஆவன :

"பொதுத் தேர்தல் முடிந்தவுடன் எனக்கு பெரும் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. உள்நாட்டிலோ, வெளி நாட்டிலோ நான் பெரிய பதவியில் அமர்ந்திருக்க முடியும். ஆனுல் அனைத்தையும் வேண்டாமென்று உதறிவிட்டு தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியை வளர்க்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

தமிழ்நாடு காங்கிரசில் காமராஜர் குழு ஒன்று இருப்பது எனக்குத் தெரியும். அவருக்கு எதிரான குழு ஒன்று இருப்பதும் எனக்குத் தெரியும். அந்த இரு குழுக்களிலும் சேராமல் நடு நிலையில் இருந்து பணியாற்ற நான் விரும்பினேன்.

காங்கிரஸ் வளரவேண்டும் என்பதற்கான நல்ல எண்ணத் தோடு பாடுபட்டேன். நான் தலைமைப் பொறுப்பை ஏற்றது முதல் காமராஜரைக் கலந்தே ஒவ்வொரு காரியத்தையும் செய்து வருகிறேன். ஆனுல் அவருடைய நண்பர்கள் என் மீது குற்றம் சொல்லிக்கொண்டே வருகிருர்கள். 3-ஆம் தேதி நவசக்தி

இதழில் என்னைப்பற்றி குற்றஞ்சாட்டி தலையங்கம் வெளிவந்துள்ளது. இதெல்லாம் காமராஜர் அறியாமல் நடந்தது என்றோ அவர் சொல்லாமல் எழுதினார்கள் என்றோ என்னால் நம்ப முடியவில்லை. இந்த நிலைமை நீடிக்குமானால் நான் தொடர்ந்து பொறுப்பில் இருக்க விரும்பவில்லை.'' இவ்வாறு அந்தத் துண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அது குறித்து காமராஜர் தனது கருத்தைத் தெரிவித்த போது இவைகளை எல்லாம் சி. சுப்பிரமணியம் வாய் மூலம் கூறியிருக்கலாம். எழுத்தில் எழுதி விநியோகித்தது பற்றி வருந்துகிறேன் எனக் குறிப்பிட்டார்.

5-6-69 ''மெயில்'' இதழில் சி. சுப்பிரமணியம் அவர்கள் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

''தமிழ்நாட்டு காங்கிரசுக்குள் இருக்கிற குழு மனப்பான்மையைச் சரி செய்வதில் நான் ஓரளவு வெற்றி பெற்றேன். ஆனால் ஒரு சிறிய கூட்டம் வேண்டுமென்றே தொடர்ந்து உண்மைகளைத் திரித்துக் கூறி வருகிறது. தென்னிந்திய காங்கிரஸ் தலைமையிலிருந்து காமராஜர் கீழே தள்ளப்படாமல் பார்த்துக் கொள்வதுதான் தங்கள் நோக்கம் என்று அந்தச் சிறு கூட்டம் கூறுகிறது.

மேடையிலும், பத்திரிகைகளிலும் அந்தச் சிறு கூட்டம் இத்தகைய பிரச்சாரம் செய்துவருவதின் காரணமாக இரு குழுக்களின் சந்தேகப் பார்வைக்கு நான் இலக்காகியுள்ளேன் காமராஜருக்கும் எனக்கும் இடையே இருப்பதாகக் கூறும் பிளவு பற்றிய விஷமத்தனமான பிரச்சாரத்தை நான் முதலிலேயே வெளிப்படையாக மறுத்தேன்.

ஆனால் துரதிருஷ்டவசமாக காமராஜர் இப்படிப்பட்ட வதந்திகளை மறுக்க முன்வரவில்லை. இத்தகைய குழு மனப்பான்மையைக் களைந்தெறியா விட்டால் எந்த நிறுவனமும் செம்மையாகச் செயல்பட முடியாது.

சில காங்கிரஸ் ஆதரவு பத்திரிகைகள் மறைந்த முதலமைச்சர் அண்ணாதுரையைப் பற்றியும், இப்போதைய முதலமைச்சர் கருணாநிதியைப் பற்றியும் மிகக் கீழ்த்தரமாக எழுதுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளன. காங்கிரஸ் கட்சிக்கு உதவியாக இருப்பதற்குப் பதிலாக இளைஞர் காங்கிரஸ் ன்பது தமிழ்நாடு காங்கிரசுக்குப் போட்டியான முறையிலேயே

செயல்பட்டு வருகிறது. கிளர்ச்சி ஒன்றுதான் சரியான வழி என்று கருதும் ஒரு கோஷ்டி காங்கிரசில் இருக்கிறது.

இந்தப் போக்கை நான் ஏற்க இயலாது. ஜனநாயகத்தில் கிளர்ச்சி என்பது கடைசி ஆயுதமாகத்தான் கையாளப்பட வேண்டும். அதுவும் போதிய அளவு சிந்தித்தபின்தான் கிளர்ச்சியில் இறங்க வேண்டும். இளைஞர் காங்கிரஸ் என்பது ஒரு தனி மனிதருக்கு தான் விசுவாசமாக இருப்பது போலவும், காங்கிரஸ் கட்சிக்கு அது விசுவாசமாக இருக்கத் தேவையில்லை என்பது போலவும் செயல்படுகிறது. இத்தகைய போக்கிற்கு காமராஜரின் அங்கீகாரமும் இருக்கிறது என்பது போல அவர்கள் செயல்படுகிறார்கள்.

இத்தகைய மறுப்புக்கிடமான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த நான் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாயின. இத்தகைய போக்கைக் கண்டிக்க காமராஜர் முன்வராததுதான் இதற்கு முக்கியமான காரணம் ஆகும்.”

-இவ்வாறு உருவெடுத்த இந்த கோஷ்டிப் பூசல் தமிழ்நாடு அளவிலே மாத்திரமல்லாமல் அகில இந்திய அளவில் விரிவடைந்த கட்டம் இப்போதுதான் தொடங்கியது.



# 19

## பொதுச் செயலாளர் தேர்தல்

**1969**-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டு தேர்தல்கள் முறையே இந்தியாவின் ஆளுங் கட்சியான காங்கிரசுக்குள் ஒரு மாற்றத்தையும், தமிழ்நாட்டில் ஆளுங்கட்சியான தி. மு. க. கழகத்தில் ஒரு மாற்றத்தையும் எற்படுத்தின என்று சொன்னால் அது மிகையாகாது.

காங்கிரசில் ஏற்பட்ட மாற்றம் அந்தக் கட்சி இரு கூறுகப் பிரிந்தது. தி.மு.கழகத்தில் ஏற்பட்ட மாற்றம் ஏற்கனவே வலுவாக இருந்த இயக்கத்தை மேலும் வலுவாக்கும் வகையில் அமைந்தது. ஆனால் இந்த இரண்டு மாற்றங்களுக்கிடையே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளமானவை; வரலாற்றுக் குறிப்பில் இடம்பெற வேண்டியவை.

தி. மு. கழகத்தில் நடைபெற்றது கட்சியின் நிர்வாகத் தேர்தல். காங்கிரசார் இடையே நடைபெற்றது இந்தியக் குடியரசுத் தலைவர் யார் என்கின்ற போட்டி!

கழகப் பொதுச் செயலாளராக இருந்த அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு அடுத்து பொதுச் செயலாளர் யார் என்பது தி. மு. கழகத்தில் எழுந்த கேள்வி!

குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் மறைந்தபிறகு, அடுத்த குடியரசுத் தலைவர் யார் என்பது காங்கிரசில் எழுந்த கேள்வி!

இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை காண முற்பட்ட போது ஏற்பட்ட விளைவுதான் கழகத்தில் ஒற்றுமையும், காங்கிரசில் பிளவும்!

கழகத்தில் முறையாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தலும், அதனையொட்டி மாவட்டக் கழக நிர்வாகிகள் தேர்தலும், அதனையொட்டி செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்தலும் முடிவுற்று-புதிய பொதுக் குழு உறுப்பினர்கள் கழகத்தின் பொதுச் செயலாளரையும், பொருளாளரையும் மற்றும் குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கவேண்டும். இது கழகம் தொடங்கியது முதல் தொய்வில்லாமல் நடைபெற்று வருகிற ஜனநாயக முறையாகும்.

நான் இதை எழுதுகிற இந்த நேரத்திலேகூட பல பெரிய அரசியல் கட்சிகளில் பல ஆண்டுக் காலமாக கட்சி அமைப்பு

களின் தேர்தல்களே நடைபெருமல் எல்லா மட்டத்து நிர்வாகி களையும் நியமனம் செய்கிற முறையே இருந்து வருகிறது.

ஆனால் தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு வேதனை, சோதனைகளுக்கிடையிலேயும், கட்சியின் கட்டுக் கோப்பு குலையாமல் இருக்க ஜனநாயக ரீதியான அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெறத் தவறுவதில்லை. அந்த வகையில் கிளை அமைப்புகளின் தேர்தல்களிலிருந்து பொதுக்குழு உறுப்பினர் கள் வரையிலான தேர்தல்கள் நடைபெற்று முடிந்து, பொதுச் செயலாளர் தேர்தலுக்காகக் காத்திருந்த சமயம் யார் பொதுச் செயலாளராக வருவது என்ற பிரச்சினை பெரிதாகக் கிளம்பியது.

ஜூலை 26-ஆம் நாள் பழைய செயற்குழு, பொதுக்குழு கூட்டப் பெற்று நன்றி தெரிவிக்கப்பட்ட பிறகு, புதிய பொதுக் குழு 27-ந் தேதி கூடி பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிப்பு வெளியிடப் பட்டது.

ஆனால் ஏப்ரல் மாதத்திலேயே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அவரே பொதுச் செயலாளர் பொறுப்பிற்குப் போட்டி யிடப்போவதாக அறிவித்தார். தான் அமைச்சராக இல்லாமல் இருப்பதால், முழுக்க முழுக்க கட்சிப் பணிக்கே தன்னை ஈடு படுத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவதற்கு பொதுச் செயலாளர் பதவியை விரும்புவதாக அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார்

கழகத்தில் பெரும்பான்மையோர் ஆட்சிப் பொறுப்பின் தலைவராக ஒருவரும், கட்சிப் பொறுப்பின் பொதுச் செயலாளராக ஒருவரும் இயங்குவதால் ஒருமித்த கருத்து உருவாகாமல் கட்சி யின் பணிகளும், ஆட்சியின் கடமைகளும் குலைந்துவிட நேரிடும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

நான் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுவது என்றும், பொருளாளர் பதவிக்கு நண்பர் எம். ஜி. ஆர். போட்டி யிடுவது என்றும் கருத்துக்கள் பரவியபோது நண்பர் எம். ஜி. ஆர். அவர்களை நிருபர்கள் பேட்டி கண்டனர்.

கழகத்தின் பொருளாளராக எம். ஜி. ஆர். தான் வருவார் என்பதை நான் அதற்கு முன்பு சில கூட்டங்களில் சூசகமாக வெளியிட்டிருந்தேன். அதை வைத்துக்கொண்டு எம். ஜி. ஆர். அவர்களிடம் நிருபர்கள் கேள்விகளைக் கேட்டார்கள். அதற்கு

எம். ஜி. ஆர். அளித்த பதிலில், "தி. மு. கழகத்தில் உள்ள 99 சதவிகிதம் பேர்கள் கலைஞர் அவர்கள்தான் பொதுச் செயலாள ராக வரவேண்டுமென்று விரும்புகிருர்கள். எனவே அவரைத் தேர்தலில் நிற்கவேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். இனிமேல் அந்தப் போட்டியிலிருந்து விலகுவது என்பதுகூட கலைஞர் கையில் இல்லை. தனக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் தன்னுடைய கருத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று நாவலர் சொல்வது அவர்களைக் கட்டாயப்படுத்துவ தாகத்தான் ஆகும். கட்சியின் தலைமை ஒருவரிடமும், ஆட்சி யின் தலைமை இன்னொருவரிடமும் இருந்ததால்தான் காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் சீர்குலைந்தது. அந்த நிலை தி. மு. கழகத் திற்கு வரக்கூடாது என்ற எண்ணத்தில்தான் இரண்டு பதவி களையும் ஒருவரே வகிக்கவேண்டுமென்று நான் கூறுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

நிருபர்கள் எம். ஜி. ஆரைப் பார்த்து, நெடுஞ்செழியன் கருணாநிதி இருவரின் போட்டியைத் தவிர்க்க நீங்கள் சமரச முயற்சி எதுவும் மேற்கொள்வீர்களா? எனக் கேட்டனர்.

அதற்கு எம். ஜி. ஆர். "ஒரு பிரச்சினையில் முடிவு ஏற்படாத தற்கு முன்னுல்தான் மத்தியஸ்தம் பேசுவார்கள், இந்தப் பிரச்சினை யைப் பொறுத்தவரையில் ஒரு முடிவு ஏற்பட்டு, இரண்டுபேருமே தேர்தல் களத்தில் குதித்துவிட்டார்கள். இதில் சமரச முயற்சிக்கு எதுவும் இடம் இல்லை" என்று கூறினுர்.

பொதுச்செயலாளர் தேர்தல் குறித்து தந்தை பெரியார் விடுத்த அறிக்கையில் "தி. மு. கழகத்தில் பொதுச்செயலாளர் பதவிதான், கட்சியின் தலைமைப் பதவி. இந்தப் பதவிக்கு கருணாநிதி போட்டியிடப் போவதாக அறிவித்துவிட்டார். ஆகவே அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். கட்சியின் தலைமைப் பதவியும், ஆட்சியின் தலைமைப் பதவியும் ஒருவர் கையில் இருந்தால்தான் எவ்விதத் தொல்லையும் இல்லாமல் எடுத்த காரியங்கள் நடக்கும். நேரு இந்தியாவின் பிரதமராக இருந்தபோது கட்சியைத் தனது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந் தார். பொதுச்செயலாளர் பதவிக்கு நெடுஞ்செழியனும் போட்டி யிடப் போவதாக அறிவித்திருக்கிருர். கட்சித் தலைமைப் பதவி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். போட்டியிருந் தால் அது கட்சிக்குப் பலவீனம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கட்டத்தில் நாவலர் அவர்கள் ஒரு அறிக்கை விடுத்தார். அது வருமாறு:

"மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் கழகப் பொதுச்செயலாளர் தேர்தலில் என்னை எதிர்த்துப் போட்டி போடப்போகிறார் என்ற செய்தியினைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அவரே என்னை எதிர்த்துப் போட்டி போட முன்வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. முதலமைச்சர் போட்டியிலிருந்தும் அமைச்சரவையிலிருந்தும் ஒதுங்கி நிற்கும் நான் பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று என் நண்பர்கள் வலியுறுத்தினர். போட்டி ஏற்படாத சூழ்நிலை உருவானால் நல்லது என்பதற்காகத்தான் முன்கூட்டியே என் விருப்பத்தை நான் வெளியிட்டேன். அந்தப் பதவியை ஏற்றுப் பணிபுரிவதற்கான வாய்ப்பும் ஓய்வும் எனக்கு இப்போது இருப்பதால் நான் அந்தப் பதவிக்கு நிற்கலாம் என்று விரும்பினேன்.

பொதுச் செயலாளர் பதவியை ஏற்க நான் முன்வந்துள்ளதை நன்கு தெரிந்துள்ள கலைஞர் போட்டியின்றி பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட கூறியது எனக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. இப்போது அவரே எனக்குப் போட்டியாக எதிரே வந்து நிற்பது எனக்கு பெரிய வருத்தத்தை அளிக்கிறது. நான் என் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டிய காரணம் எதுவும் இப்போது என்னைப் பொறுத்து ஏற்பட்டிருப்பதாக நான் எண்ணவில்லை."

நாவலரின் அந்த அறிக்கைக்குப் பதிலளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத கடமை எனக்கு ஏற்பட்டது. எனவே நான் விடுத்த விளக்க அறிக்கை பின்வருமாறு:

"பொதுச்செயலாளர் தேர்தல் பற்றி நாவலர் அவர்கள் ஏடுகளில் விடுத்துள்ள அறிக்கையைப் பார்த்தேன். கழகத்தில் ஒவ்வொரு முறையும் பொதுச்செயலாளர் தேர்தல் நடைபெறுகிற நேரத்தில், கழகத் தலைமையின் முன்னணியினர் கலந்தாலோசித்து யார் பொதுச்செயலாளராக வருவது என்று முடிவு செய்வதோ ஏகமனதாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதோ இதுவரையில் முறையாக இருந்து வந்துள்ளது. ஏற்கனவே ஒரு முறை பொதுச் செயலாளராக நாவலர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் முன்கூட்டியே கழகத் தலைமை கலந்தாலோசித்து போட்டியில்லாமல் அவரைத் தேர்ந்தெடுத்தோம். அடுத்து நடைபெற்ற பொதுச் செயலாளர் தேர்தலில் அண்ணா அவர்கள் தேர்ந்

தெடுக்கப்பட்ட போதும் பொதுச் செயலாளர் பதவிக்கு யார் நிற்கிறார்கள் என்பதை யாரும் முன்கூட்டியே அறிவித்தது கிடையாது.

ஆனால் இந்தத் தடவை நாவலர் அவர்கள் இதுவரையில் பத்துதடவைகளுக்குக் குறையாமல் பத்திரிகை நிருபர்களிடத்தில் அவர் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடப் போவதை அவரே அறிவித்துள்ளாரே தவிர என்னிடமோ அல்லது ஏனைய தலைமைக் கழகத்தின் நண்பர்களிடமோ இது வரையில் கலந்தாலோசித்தது கிடையாது.

முதலமைச்சர் தேர்தலில் பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் என்னைப் பொறுப்பேற்கும்படி வலியுறுத்திய போது நான் நிலைமையை நாவலரிடத்தில் விளக்கி அவரை என் அமைச்சரவையில் இடம் பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அவரோ முதல் இடம், இரண்டாவது இடம் என்பதைப் பற்றியெல்லாம் கூறி அறிக்கை விட்டு என் மனம் புண்படும்படி நடந்து கொண்டார். பொதுச் செயலாளராக நீங்களே வாருங்கள்; முதலமைச்சர் பொறுப்பிற்குப் பெரும் பான்மையோர் விருப்பப்படி என்னை நீங்களே முன்மொழி யுங்கள் என்று நான் மன்றாடிக் கேட்டபோதும் அவர் மனம் இளகவில்லை.

அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டு கழகத்தைக் காப்பாற்றுங்கள், என் அமைச்சரவையில் இடம் பெறுங்கள் அல்லது பொதுச் செயலாளராகப் பதவி ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நான் அவரை வேண்டியதும் அப்போது வீணாயிற்று.

தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எனக்கும், நாவலருக்கும் நெருங்கிய நண்பரான சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் வந்து நாவலரைப் பொதுச் செயலாளராக ஏற்றுக்கொண்டால் உதவி முதலமைச்சராக அமைச்சரவையில் இடம் பெறத் தயாராக இருக்கிறார் என்று கூறினார். எனக்கு அது திகைப்பாகவும் வியப்பாகவும் இருந்தது.

ஏனென்றால் "அமைச்சராக இருந்துகொண்டு கட்சி காரியங் களைக் கவனிக்க முடியாது" என்று நாவலர் அவர்கள் அண்மை யில் தான் அறிக்கை வெளியிட்டிருந்தார். என்னிடம் பேசிய சட்டமன்ற உறுப்பினரிடம் நான் அதை எடுத்து கூறியதோடு நாவலர் அவர்கள் என் அமைச்சரவையில் இடம் பெறுவதை இரு கையேந்தி வரவேற்கிறேன்! என்று சொல்லி அனுப்பினேன்.

ஆனால் நாவலர் அவர்கள் பொதுச்செயலாளர் பதவி, அமைச்சர் பதவி இரண்டும் வேண்டுமென்று வலியுறுத்தியதாக அறியலானேன்.

முதலமைச்சர் தேர்தலில் என்னை முன்மொழிய மறுத்து, போட்டி ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி, அதற்குப் பிறகு போட்டியிலிருந்து விலகி ஒரு கசப்பான நிலையை கழகத்தில் உருவாக்கியது போலல்லாமல், இந்த முறை என்னுடைய வேண்டுகோளை நாவலர் ஏற்றுக்கொண்டு பொதுச் செயலாளர் தேர்தல் போட்டியிலிருந்து விலகிக்கொண்டு அமைச்சரவையில் இடம்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில ஆண்டுக் காலமாக கழக வேலைகளில் பெரும் பகுதியை நான்தான் ஏற்றுக்கொண்டிருந்தேன் என்பதை நாவலர் அறிவார்; நாடும் அறியும். அண்ணா அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களைப் படித்த நண்பர்கள் அறிவார்கள்.

இதனையே நான் நாவலருக்கு என்னுடைய இறுதி வேண்டு கோளாக வைக்கிறேன். மாறிமாறி இருவரும் அறிக்கைகள் விடுத்து கொண்டிருக்க நான் விரும்பவில்லை.''

கழகத்தில் ஒரு குழுவினர் நாவலர் பொதுச் செயலாள ராகவும் வரக்கூடாது, அமைச்சராகவும் இடம்பெறக் கூடாது என்ற நிலையில் திட்டவட்டமாகவும், உறுதியாகவும் இருந்தனர். ஆனால் அந்த நிலையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆரம்ப காலத்திலிருந்து கழகத்தைக் கட்டி வளர்த்தவர்களில் நாவலரும் ஒருவர் என்ற காரணத்தால் அவரைத் தனிமைப்படுத்திவிட்டு கட்சியை நடத்துவது என்பது என் மனசாட்சிக்கு இடம் தராத ஒன்று என்பதை அந்தக் குழுவினரிடம் நான் வலியுறுத்திச் சொன்னேன்.

இதற்கிடையே ஒவ்வொரு மாவட்ட வாரியாக ஆங்காங்கு பொதுக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடை பெற்று ஒவ்வொரு கூட்டத்திலும் மிகப் பெரும்பான்மையோர் கழகப் பொதுச் செயலாளராக நானே வரவேண்டும் என்று முடிவெடுத்து பத்திரிகைகளில் அறிக்கை விடுத்துக் கொண்டிருந்தார்கள் இந்த நிலை நீடிப்பதால் கட்சியில் எள் முனை அளவு பிளவு கூட ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கவலை கொண்டிருந்த நான் பொதுக்குழுக் கூட்டத்திற்கு முதல் நாள் 25-7-69 அன்று இரவு கழகத்தின் முக்கிய தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசினேன்.

அவர்களில் பெரும்பாலோர் நாவலர் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள்.

ஆனல் என்னுடைய எண்ணத்தை ஏற்றுக்கொண்டு நண்பர்கள் மதுரை முத்து, மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், திருவண்ணுமலை தர்மலிங்கம், தூத்துக்குடி சிவசாமி ஆகியோர் ஒரு சமரசத் திட்டத்தை உருவாக்கினர்கள்.

அந்த சமரசத் திட்டத்தின்படி கழகச் சட்ட திட்டத்தில் ஒரு மாற்றம் செய்வது என்று தீர்மானிக்கப் பட்டது. அதுகுறித்து நாவலரின் கருத்தை அறிய அவர்களை நான் அனுப்பி வைத்தேன்.

கழக சட்டதிட்டத்தில் பொதுச்செயலாளருக்கு என்று அவர் ஆற்றவேண்டிய பணிகள், பொறுப்புகள் குறித்து தொடர்பாகப் பல பிரிவுகளும், தனித் தனியாகப் பல பிரிவுகளும் இருக்கின்றன. அவைகளை அப்படியே வைத்துக்கொண்டு-அவைத் தலைவர் என்பதை தலைவர் என்று மாற்றிக்கொண்டு, பொதுச் செயலாளர் நிறைவேற்றவேண்டிய பணிகளுக்கு-தலைவரைக் கலந்து பேசி இருவரும் சேர்ந்து முடிவு மேற்கொண்ட பிறகுதான் அவற்றை நிறைவேற்றவேண்டும் என்ற கருத்தில் சில பொறுப்புக்களைத் தலைவர் பதவிக்கு அளித்து-இவ்வண்ணம் 26-7-69-இல் நடைபெறும் பழைய பொதுக்குழுவில் சட்டதிட்ட திருத்தத்தைக் கொண்டுவருவது என்றும், அதன்படி 27-7-69-இல் நடைபெறும் தலைமைக்கழகத் தேர்தலில் தலைவர் பதவிக்கு என்னையும் பொதுச்செயலாளர் பதவிக்கு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையும் தேர்ந்தெடுப்பது என்பதும்தான் அந்த சமரசத் திட்டம்.

முதலில் அறிவிக்கப்பட்டவாறு 26-7-69 காலை பழைய செயற்குழு, பொதுக்குழு சென்னை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் கூடியது. கூட்டம் தொடங்குவதற்கு முன்பு நானும், நாவலரும் அந்தக் கட்டிடத்திலேயே ஒரு இடத்தில் தனியாகச் சந்தித்துப் பேசினேம். பத்து நிமிட நேரம் நாங்கள் தனியாகச் சந்தித்துப் பேசியவுடன் இருவர் மனதிலும் இருந்த கருத்து வேறுபாடுகள் கதிர்பட்ட பனிபோல விலகின. சமரசத் திட்டத்தை இருவரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டோம் என்று தெரிவித்ததும் நாங்கள் இருந்த அறைக்குள் ஓடிவந்து அன்பிலும், மன்னையும் மதுரை முத்துவும் மற்றும் கழக முன்னணியினரும் எங்கள் இருவரையும் கட்டித் தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

சமரசத் திட்டத்தின்படி உருவான சட்டதிட்ட திருத்தத்தை பொதுக்குழு ஏற்றுக்கொண்டது. அந்தத் திருத்தத்தின்படி கழகத் தலைவர் தேர்தலும், பொதுச் செயலாளர் தேர்தலும், பொருளாளர் தேர்தலும், குழுக்கள் தேர்தல்களும் நடைபெற்றன.

தலைவராக நானும், பொதுச் செயலாளராக நாவலரும், பொருளாளராக எம்.ஜி.ஆர். அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டோம். புதிய பொதுக்குழு உறுப்பினர்கள் 326 பேர்களில் 320 பேர்கள் வந்திருந்து இந்தத் தேர்தல் நடைபெற்றது.

நானும் நாவலரும் நிருபர்களைச் சந்தித்தபோது —"இரு தரப்பினருக்கும் மன நிறைவு அளிக்கத் தக்க வகையில் முடிவு ஏற்பட்டுள்ளது. இது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்" என்று நாவலர் தெரிவித்தார். நான் நிருபர்களிடத்தில் "உடன்பாடு ஏற்பட உதவிய மதுரை முத்து, அன்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி, இரா. தர்மலிங்கம், எம். எஸ். சிவசாமி ஆகியோருக்கு இருவரும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்" என்று கூறினேன்.

இந்த முடிவு தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் அண்ணா கலையரங்கில் திராவிடர் கழக மாநாட்டில் கலந்து கொண்டிருந்த பெரியார் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர் சொன்ன கருத்து வருமாறு:

"தி. மு. கழகத்திற்கு இதுவரை தலைவர் பதவி இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது புதிதாக தலைவர் பதவி ஏற்பட்டுள்ளது. அதன் தலைவராக கலைஞர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்தப் பொதுச் செயலாளர் தேர்தலில் தி. மு. கழகம் உடைந்து விடுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் தேர்தல் நல்ல முறையில் நடந்திருக்கிறது. இதனால் என் கவலை தீர்ந்துவிட்டது. இப்போதுள்ள நிலையில் தி. மு. கழக ஆட்சியைத் தமிழர்கள் ஆதரித்தே ஆகவேண்டும். இதைத் தவிர தமிழர்களுக்கு நன்மை செய்யும் ஆட்சி இனி ஏற்பட்டுவிடாது."


பெரியார் அவர்களைப்போலவே தமிழகத்தின் பெருமக்கள் பலரும் கழகத்தின் பெரும்பான்மையான தொண்டர்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

அடுத்த ஒரு சில நாட்களில் கல்வி, சுகாதார அமைச்சராக எனது அமைச்சரவையில் நாவலர் அவர்கள் இடம் பெற்றார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியானது. அவர் அமைச்சரவையில்

இடம் பெற்றபோது, கழகத்தினுடைய மூத்த தலைவர்களில் ஒருவரான "என்.வி.என்." என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட என். வி. நடராசன் அவர்கள் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சராகவும், கவிஞர் வேழவேந்தன் அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்கள்.

அண்ணா அவர்களுடைய அமைச்சரவையிலேயே என்.வி. என். அவர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் கழகத்தினரிடத்திலே பலமாக வேரூன்றியிருந்தது. அதனை நிறைவேற்றும் வகையிலும் என். வி. என். அவர்களுக்கு என்னுடைய அன்பினையும், மரியாதையையும் காட்டவேண்டும் என்ற வகையிலும் அவரை எனது அமைச்சரவையில் இணைத்துக் கொண்டேன்.

இவ்வாறு கழகப் பொதுச்செயலாளர் தேர்தலையொட்டி கழகத்தில் நல்லதோர் ஒற்றுமை அரும்பியது. ஆனால் குடியரசுத் தலைவர் தேர்தலையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகள் காங்கிரசை எப்படி பிளவுபடுத்தியது என்பதை அடுத்துக் காண்போம்.



# 20

## பிரதமரின் தோல்வி!

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் மறைந்தபோது துணை ஜனாதிபதியாக இருந்த வி. வி. கிரி அவர்கள், தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்றார் எனினும் ஆறு மாத காலத்திற்குள் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய விதிமுறைகளின்படி ஜனாதிபதித் தேர்தலுக்கான தொடக்கப் பணிகள் ஆரம்பமாகி விட்டன.

காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்து அதிலே ஒரு பிரிவு, பல்வேறு கட்சிகளாகச் சிதறிவிடக் காரணமாக அமைந்தது இந்த ஜனாதிபதித் தேர்தல்தான்! புகைந்து கொண்டிருந்த கருத்து வேறுபாடுகள் – குமுறலாக வெளிப்பட்டன!

மே மாதம் (1969) ஜாகீர் உசேன் மறைந்த முதல் வாரத்திலேயே சோஷலிஸ்டு கட்சியின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் ஜெயபிரகாஷ் நாராயண் அவர்களைக் குடியரசுத் தலைவராக்க வேண்டும் என்று கூறப்பட்டது. நாடாளுமன்றக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சேத் கோவிந்த தாஸ்; பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் குடியரசுத் தலைவராக வரவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார். 1967–ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் ஜாகீர் உசேனை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த உச்ச நீதிமன்ற பழைய நீதிபதி சுப்பாராவ் அவர்களையே மீண்டும் போட்டியிடச் செய்யலாம் என்று சுதந்திராக் கட்சி சார்பிலே அறிவிக்கப்பட்டது.

11-5-69 அன்று நிருபர்கள் கேள்விக்குப் பதில் அளித்த போது "தேர்தலில் போட்டியிடுவது குறித்து நான் இப்போது எதுவும் சொல்வதற்கில்லை!" எனப் பதில் கூறிய ஜெயப்பிரகாஷ் அவர்கள் 16–5–69 அன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

அடுத்து வருகிற குடியரசுத் தலைவர், பிரதமர் இந்திரா காந்தியுடன் ஒத்துப் போகிறவராக இருக்கக் கூடாது என்பதிலே காங்கிரசில் இருந்த மூத்த தலைவர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்கள். ஆனால் அதனை மனத்தில் முடிவைத்துக் கொண்டு அதற்குரிய வேலைகளில் முழு மூச்சாக ஈடுபட்டனர்.

அதன் முதற் கட்டமாக "கிரிக்கு வயதாகிவிட்டதால் ஜனாதிபதிப் பொறுப்பை அவரால் தாங்க முடியாது" என்று காங்கிரசின் மூத்த தலைவர் வட்டாரத்திலே பேச்சுக் கிளம்பிற்று.

மே 13-ஆம் நாளன்று கிரி அவர்கள் விடுத்த செய்தி யொன்றில் "ஜனாதிபதி மரணம் அடைந்ததும் துணை ஜனாதிபதியையே ஜனாதிபதியாக்கும் பழக்கம் இதுவரை இருந்து வந்திருக்கிறது. அதையே இப்போதும் பின்பற்றவேண்டும். அந்த வழக்கப்படி காங்கிரஸ் சார்பில் என்னை வேட்பாளனாக நிறுத்தாவிட்டால் நான் துணை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி விடுவேன்" என்று குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு பாபு ஜெகஜீவன்ராம் அவர்களது பெயர் பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருந்தபோது மே திங்கள் 18-ஆம் நாளன்று ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர், அந்தப் பதவிக்குப் போட்டியிடத் போவதில்லை என்று அறிவித்துவிட்டார்.

இதற்கிடையே தமிழ்நாட்டுக்கு வருகை தந்த பஞ்சாப் முதலமைச்சர் குர்நாம் சிங் அவர்கள் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கோவை நகரில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவராக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் பாரபட்சமின்றிச் செயல்பட முடியும். ஜனாதிபதி தேர்தல் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி அவர்களுடன் நான் பேச்சு நடத்தத் திட்டமிட்டிருக் கிறேன்."

அவர் கூறியவாறு என்னையும் சந்தித்துப் பேசினார். அந்தச் சந்திப்புக்குப் பிறகு எனக்கும் பஞ்சாப் முதல்வர் குர்நாம் சிங் அவர்களுக்கும் தூய்மையானதும் பாசம் நிறைந்ததுமான ஒரு நட்பு, பூத்துக் குலுங்கத் தொடங்கியது. குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற வி. வி. கிரி அவர்கள் அவரது வெற்றிக்கு மூல காரணமாக விளங்கியவர்கள் கருணாநிதியும், குர்நாம் சிங்கும்தான் என்று பலமுறை நன்றியுணர்வு பொங்கிடக் கூறியிருக்கிறார்.

"யார் ஜனாதிபதி?" என்ற வினாக்குறிக்கும் - "கிரிதான் ஜனாதிபதி" என்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட விடைக்கும் இடையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை எனது விமர்சனத்திற்

குறியதாக்குவதை விட தேதிவாரியாக வந்த செய்திகளைத் தொகுத்துத் தந்தாலே - அவற்றைப் படிப்பவர்கள்; யார் யார் எப்படிப்பட்ட மாற்று நிலைகளை மேற்கொண்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள இயலும்.

அந்த ஆண்டு மே மாத இறுதியில் ராஜாஜி அவர்கள், "சுயராஜ்யா" பத்திரிகையில், "ஓய்வு பெறும் இராணுவத் தளபதி குமார மங்கலம் அவர்களை ஜனாதிபதியாக்கலாம்" என்று எழுதினார்.

ஜூன் 6-ந்தேதி வெளிவந்த ஏடுகளின் செய்தியின்படி; "எல்லாக் கட்சிகளும் கருத்து ஒற்றுமையுடன் ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க முடியும்" என்று பிரதமர் இந்திராகாந்தி நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

ஜூன் முதன் வாரத்தில் "சுயராஜ்யா" இதழில் ராஜாஜி அவர்களின் கட்டுரை, பின்வருமாறு கருத்தை வழங்கியது.

"வி. வி. கிரி அவர்கள், நற்குணங்களும் திறமையும் நிரம்பியவர். 1937-ல் சென்னை மாகாணத்தில் நான் பிரதமராக இருந்தபோது அவர் தொழிலாளர் நல அமைச்சராக இருந்திருக்கிறார். அப்போது முதலே அவர் சிறந்த உறுதியான காங்கிரஸ்காரராக இருந்து வருபவர். தொடர்ந்தும் அப்படியே இருப்பார். அதனால்தான் அவர் ஜனாதிபதி ஆவதை நான் விரும்பவில்லை. ஏனெனில் இன்றைய சூழ்நிலையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் ராஷ்டிரபதியாகக் கூடாது. அரசியல் கட்சிச் சார்பற்றவரையே அப்பதவியில் அமர்த்த வேண்டும். பிரதமரும் அதையே விரும்புவார் என்று கருதுகிறேன். ஆளும் கட்சிக்கு ஆமாம் போடுவதைத் தமது கடமையாகக் கருதாமல் பிரச்சினைகள் தோன்றும் போது சுயமாகச் சிந்தித்து துணிவாக அதைக் கூறுபவரையே ஜனாதிபதியாக ஆக்க வேண்டும்."

இதற்குப் பிறகு 19-6-69 ஏடுகளில் வெளிவந்த செய்தி குறிப்பிடத்தக்கது.

"'ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளரைப் பொறுக்குவது சம்பந்தமாக பிரதம மந்திரி இந்திராவின் ஆதரவாளர்களுக்கும், சிண்டிகேட் உறுப்பினர்களுக்குமிடையே மோதுதல்; தவிர்க்க முடியாதது எனத் தோன்றுகிறது. எதிர்க்கட்சிகள் இதுவரையில் திட்டவட்டமான முடிவு எதற்கும் வரவில்லை. வேட்பாளரைப் பொறுக்குவதில் சங்கடம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் இதில் பிரதமருக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவருக்குமிடையே கருத்து

வேறுபாடு நிலவுவதுதான்! புதிய ஜனாதிபதி பதவிக்கு யாரை வேட்பாளராக நிறுத்தலாம் என்பது குறித்துப் பிரதமர் இந்திரா காந்தி, இன்று காலையில் தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியுடன் தொடர்பு கொண்டு பேசியதாகத் தெரிகிறது. அது குறித்து தொலைபேசியில் விபரம் அறியக் கேட்டபோது கருணாநிதி அவர்கள் கருத்து எதுவும் இப்போது பத்திரிகைகளுக்குக் கூற இயலாது என மறுத்துவிட்டார்.''

இதனையடுத்து வந்த செய்தியில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் பிரதமரைச் சந்தித்துப் பேசினார் என்றும் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒரு வேட்பாளராகக் கருதப்படும் சபாநாயகர் சஞ்சீவ ரெட்டி அவர்களும் பிரதமருடன் பேசினார் என்றும் குறிப்பிடப்பட்டது 23-6-69 வெளிவந்த ஏடுகளில்!

ஜுலை 10, 11, 12 ஆகிய தேதிகளில் பெங்களூரில் அகில இந்திய காங்கிரசின் முக்கிய தலைவர்கள் கூடியபோதுதான்; சூல் கொண்டிருந்த பூசலெனும் புயல், கரை நோக்கிக் கிளம்பிற்று எனக் கூறலாம்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்கவும் கட்சியின் பல்வேறு பணிகளை ஆராய்ந்திடவும் என்ற பெயரால் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மன்றக் குழுவும், காரியக் கமிட்டியும் பெங்களூரில் கூட்டப்பெற்றன.

அங்கு நடைபெற்ற ஆட்சிமன்றக் குழு (மத்திய பார்லிமெண்டரி போர்டு) கூட்டத்தைப் பற்றி ஜுலை 13-ந் தேதி ஏடுகளில் செய்திகள் பரபரப்பாக வெளியிடப்பட்டன.

''குழுக் கூட்டத்திற்கு காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா தலைமை தாங்கினார். மேலிடக் குழு உறுப்பினர்களான பிரதமர் இந்திராகாந்தி, துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய், சவான், காமராஜர், பட்டீல், ஜெகஜீவன்ராம், பக்ருதீன் அலி அகமது ஆகியோர் கலந்து கொண்டார்கள். உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராமை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்த வேண்டுமென பிரதமர் இந்திராகாந்தி கூறினார்.

சபாநாயகர் சஞ்சீவ ரெட்டியை நிறுத்தவேண்டுமென மற்றொரு கருத்தும் குழுவில் கூறப்பட்டது. ஒருமனதாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் போனதால் ஓட்டெடுப்பு நடைபெற்றது. சஞ்சீவ ரெட்டியை வேட்பாளராக நிறுத்தவேண்டுமென; மொரார்ஜிதேசாய், சவான், காமராஜர், பட்டீல் ஆகிய நால்வரும் வாக்களித்தனர்.

பிரதமர் இந்திரா காந்தியும் பக்ருதீன் அலி அகமது ஆகிய இருவர் மட்டுமே ஜெகஜீவன்ராமை வேட்பாளராக நிறுத்த வேண்டுமென வாக்களித்தனர். சஞ்சீவ ரெட்டிக்கு இரண்டு ஓட்டுக்கள் அதிகம் கிடைத்ததால் அவரையே ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளராக நிறுத்த முடிவு செய்யப்பட்டது,

இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் வாக்கெடுப்பு நடந்து பிரதம மந்திரிக்குத் தோல்வி ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும். அந்தக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த நிஜலிங்கப்பாவின் ஆதரவும் சஞ்சீவரெட்டிக்கே என்பது வெளிப்படையான உண்மை. ஆகவே ஜனாதிபதி வேட்பாளர் சஞ்சீவரெட்டி என்பதை காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா அதிகாரபூர்வமாக அறிவிக்கும் உரிமையைப் பெற்றார். அந்த உரிமையை உடனே பயன்படுத்தி சஞ்சீவ ரெட்டியின் பெயரையும் அவர் அறிவித்தார்."


இந்தச் செய்தி வந்த மறுநாளே "தற்காலிக ஜனாதிபதி" யாக இருந்த வி. வி. கிரி அவர்கள் ஒரு அறிக்கை விடுத்தார். 14-7-69 அந்த அறிக்கையைத் தாங்கி ஏடுகள் வெளிவந்தன.

அந்த அறிக்கையில் "காங்கிரஸ் மேலிடம் எடுத்துள்ள இந்த முடிவு, நாட்டுக்கோ அல்லது காங்கிரஸ் கட்சிக்கோ நியாயமானது அல்ல! ஜனாதிபதிப் பதவி கட்சிகளுக்கு அப்பாற்பட்டு கண்ணியம் மிக்கதாகக் கருதப்பட வேண்டும். ஆனால் இப்போது நடந்துள்ள நிகழ்ச்சியால் அந்த உயர்ந்த பதவியின் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது. எனக்கு நாடும், மனச்சாட்சியும்தான் முக்கியமானவை. அதன் அடிப்படையில் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துவிட்டேன். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் உண்மைக்காகப் போராடுகிறவனே நல்ல வீரன் என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார். அந்த உணர்ச்சியின் அடிப்படையில்தான் நான் போட்டியிடுகிறேன்" என்று கிரி அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தார்.

"கிரியின் அறிவிப்பு எனக்கு அதிர்ச்சியளிக்கிறது. பழம் பெரும் காங்கிரஸ்காரரான கிரி, காங்கிரசின் அதிகாரபூர்வ வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடும் செய்தியை நம்பவே முடியவில்லை. எனினும் அவர் காங்கிரஸ் வேட்பாளரல்ல! அதனால் காங்கிரஸ்காரர்கள் அவரை ஆதரிக்க மாட்டார்கள்" என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா கூறினார்.

கிரியின் போட்டியைப் பற்றிக் கருத்துக் கூற, துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் மறுத்துவிட்ட போதிலும் "போட்டியை சமாளித்தே ஆகவேண்டும்" என்று உறுதியாகத் தெரிவித்தார்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பெங்களூரில் இருந்து டெல்லிக்குப் புறப்பட்டபோது நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கிரி அவர்கள் போட்டியிடுவது பற்றிக் கேட்டார்கள். "இந்தச் செய்தி கேட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன் என்று அம்மையார் அவர்கள் பதில் கூறினார்கள்.



# 21

## ஆச்சரியம் காத்திருந்தது!

ஜனாதிபதி தேர்தலில் வி. வி. கிரி போட்டியிடப் போகிற செய்தி கேட்டு ஆச்சரியம் அடைந்தேன் என்று நிருபர்களிடம் கூறிய பிரதமர் இந்திரா காந்தி பொதுவாக ஜனாதிபதி தேர்தல் குறித்து அகில இந்திய காங்கிரஸ் கட்சி எடுத்த முடிவை வர வேற்க இயலாத சூழ்நிலையில் இருந்தார் என்பதையும் அந்தப் பேட்டியின் மூலம் சூசகமாக அறிவித்தார்.

ஜனாதிபதி பதவிக்கு காங்கிரஸ் சார்பில் சஞ்சீவ ரெட்டி போட்டியிடுவதைத் தான் எதிர்க்கவில்லை என்றும், ஆனால் வேட்பாளராக நிற்க விரும்பாத ஜெகஜீவன்ராம் பெயரை தான் முன்மொழிந்ததாகவும், அதை காங்கிரஸ் கட்சியிலே உள்ள மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார். மேலிடக் கூட்டத்தில் பெங்களூரில் வி. வி. கிரி பெயரைத்தான் முதலில் தெரிவித்தேன் என்றும், அதை மற்றவர்கள் ஏற்காததால் அடுத்து ஜெகஜீவன்ராம் பெயரைக் கூறினேன் என்றும் பிரதமர் சொன்னார். சஞ்சீவரெட்டி வெற்றி பெறுவதற்காக முழு மனதோடு முயற்சி செய்வீர்களா என்று நிருபர்கள் கேட்டபோது இந்திரா காந்தி அவர்கள் பதில் அளிக்காமல் மௌனமாக இருந்துவிட்டார். அவரை ஆதரித்து வாக்களிக்கும்படி வேண்டு கோள் விடுப்பீர்களா என்று கேட்டதற்கு அதுபற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை என்றும் கூறிவிட்டார்.

இப்படிப்பட்ட ஒரு சிக்கலான சூழ்நிலை குடியரசுத் தலைவர் தேர்தல் குறித்து எழுந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பு மிக முக்கியமானதாக ஆயிற்று. நாடாளுமன்றத் திலும், சட்டமன்றத்திலும் கழக உறுப்பினர்கள் அளிக்கின்ற வாக்குகளைப் பொறுத்தே அந்தத் தேர்தலுடைய வெற்றி தோல்வி நிர்ணயிக்கக் கூடிய நிலைமை அப்போதிருந்தது என்பதை அனைவரும் அறிவார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருந்த என்னை நிருபர்கள் சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் சார்பில் ஜெகஜீவன்ராம் நிறுத்தப்படவில்லையே, அதுபற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் அந்த முடிவு பெரும் ஏமாற்றமளிப்பதாக இருக்கிறது என்றும்

ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதி ஆவதையே காந்தியடிகளே கூட விரும்பினார் என்றும் அவருடைய நூற்றாண்டு விழா நடக்கிற நேரத்தில் ஜெகஜீவன்ராம் ஜனாதிபதியாக ஆக்கப்பட்டிருந்தால் அது காந்தியடிகளின் ஆசையை நிறைவேற்றுவதாக இருந்திருக்கும் என்றும் பதிலளித்தேன்.

நடைபெறவிருக்கும் தேர்தலில் தி. மு. கழகத்தின் நிலை என்ன என்று கேட்கப்பட்டபோது கழகப் பொதுக்குழு, செயற்குழு கூடி அதுபற்றி முடிவெடுக்கும் என்றும் கூறினேன்.

ஜூலை 15-ஆம் நாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பூபேஷ் குப்தா என்னைச் சந்தித்துப் பேசினார். அவரிடம் முக்கியமாக ஜனாதிபதி தேர்தல் குறித்து விரிவாகப் பேசினேன். பிரதமர் இந்திரா காந்தி வங்கிகளைத் தேசியமயமாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள், மன்னர் மானியங்களை நிறுத்துவதற்கு மேற்கொண்ட தீவிரம் ஆகியவற்றை எண்ணிப் பார்த்து தொடர்ந்து முற்போக்குக் கொள்கைகள் நடைமுறைக்கு வரும் என்ற நம்பிக்கையோடு இந்திரா காந்தியின் அரசுக்கு தி. மு. கழகமும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு அளித்துக் கொண்டிருந்த அந்தக் காலக் கட்டத்தில் இந்த குடியரசுத் தலைவர் தேர்தல் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது பற்றி முடிவு செய்ய எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் அனைவரும் ஒன்றுகூடி சென்னையிலோ, டெல்லியிலோ அல்லது வசதிப்பட்ட வேறு ஒரு இடத்திலோ ஜனாதிபதி தேர்தல் குறித்து விவாதித்து ஒரு ஏகோபித்த முடிவை எடுக்க வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன்.

நான் கூறிய அந்த யோசனையை — வரவேற்கத்தக்க யோசனை—என்று பாராளுமன்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் துவிவேதி அவர்கள் பாராட்டி அறிக்கை விடுத்தார்.

ஜூலை 16-ஆம் நாள் திடீரென்று மொரார்ஜி தேசாயிடமிருந்து நிதி இலாகா பொறுப்பை இந்திரா காந்தி எடுத்துக் கொண்டு "நிதி இலாகா பொறுப்பிலிருந்து நீங்கள் விடுவிக்கப்பட்டு விட்டீர்கள்; ஆனால் தொடர்ந்து உதவி பிரதமராக இருந்து வரலாம்" என்று அவருக்குக் கடிதம் எழுதினார். நிதித் துறை பொறுப்புக்களை இந்திரா காந்தியே எடுத்துக்கொண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மொரார்ஜி தேசாய் தன்னுடைய அமைச்சர் பதவியை ராஜினுமா செய்தார். அப்போது அவர் விடுத்த அறிக்கையில் "இந்த மாற்றம் குறித்து பிரதமர் முன் கூட்டி என்னுடன் எந்தவித ஆலோசனையும் நடத்தவில்லை. நிதித்துறை இல்லாமல் துணைப்பிரதமராக நீடிக்கும்படி பிரதமர் இந்திரா என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார். என்னிடமிருந்து நிதித்துறையை எடுத்துக் கொண்டது அவருக்கு என் மீது நம்பிக்கை இல்லை என்பதையே காட்டுகிறது. இந்த நிலையில் துணைப் பிரதமராக நான் எப்படி நீடிக்க முடியும்? இது சுய மரியாதை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும்" என்று திட்டவட்ட மாகத் தெரிவித்து விட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நான் எழுதிய கடிதங்கள் கிடைத்து அவர்களும் அப்படி ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள சம்மதம் தெரிவித்து அந்தக் கூட்டம் டெல்லியிலே நடை பெறுமேயானுல் அனைவருக்கும் வசதியாக இருக்கும் என்று எழுதியிருந்தார்கள். அந்தக் கலந்துரையாடல் மிகவும் பயனுள்ள தாக இருக்கும் என்று பஞ்சாப் முதலமைச்சர் குர்நாம் சிங் அவர்கள் பத்திரிகையாளர்களிடத்தில் தெரிவித்து எனது கருத் தினை வரவேற்றிருந்தார்.

ஜுலை 17-ஆம் தேதி காலையில் மூதறிஞர் ராஜாஜி அவர் களைச் சந்தித்து அந்தத் தேர்தல் குறித்து நான் பேசினேன் நாங்கள் இருவரும் நடத்திய அந்தப் பேச்சுவார்த்தையில் யாரும் எந்த வேட்பாளர்களுடைய பெயரையும் குறிப்பிட்டு விவாதிக்க வில்லை. பொதுவான சூழ்நிலை பற்றி மட்டுமே விவாதித்தோம். அதைத் தொடர்ந்து ஜுலை 18-ஆம் தேதி சுதந்திரா கட்சியைச் சேர்ந்த தலைவர் மசானி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் நாத்பாய் ஆகியோர் என்னைச் சந்தித்துப் பேசினுர்கள்.

எல்லா தலைவர்களையும் தனித்தனியே கலந்து பேசி ஒருமித்த முடிவிற்கு வழி காண்பதற்கு, என்னை டெல்லிக்கு வருமாறு மசானியும் நாத்பாயும் அழைத்தார்கள். அதேபோல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தியும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் துவிவேதியும் என்னை டெல்லிக்கு வருமாறு வலியுறுத்தி தந்தி அனுப்பினுர்கள். அதனை யொட்டி ஜுலை 20-ஆம் தேதி கழகத்தின் செயற்குழுவும், பாராளுமன்ற கழக நிர்வாகிகளும் அவசரமாகக் கலந்து பேசி அதில் உருவான கருத்துக்களுடன் டெல்லியில் எல்லா கட்சித் தலைவர்களிடமும் விவாதித்திட மறுநாள் காலை நான் டெல்லி சென்றேன்.

இதற்கிடையே ஜூலை 18-ந் தேதி அன்று இந்திரா காந்தியும் மொரார்ஜியும் சந்தித்துப் பேசினர்கள். அந்தச் சந்திப்பின் விளைவாக எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. பிறகு டெல்லியில் நிஜலிங்கப்பா அவர்களின் வீட்டில் மொரார்ஜி, காமராஜர், நிஜலிங்கப்பா மூவரும் ஆலோசனை நடத்தினர்கள். அதன்பிறகு அன்று இரவு 8 மணி அளவில் இந்திரா காந்தியை நிஜலிங்கப்பா சந்தித்தார். நிதி இலாகாவை மீண்டும் தேசாயிடம் கொடுத்துவிடும்படி நிஜலிங்கப்பா கேட்டுக்கொண்டார் என்றும் அதைத் திட்டவட்டமாக மறுத்த இந்திரா காந்தி அவர்கள் வங்கிகளை தேசியமயமாக்கவேண்டும் என்ற அடிப்படையில் தயாரிக்கப் பட்ட பெங்களூர் மாநாட்டுப் பொருளாதாரக் கொள்கை பற்றிய தீர்மானத்தைச் செயல்படுத்துவதென்ருல் நிதி இலாகா பிரதமரிடம் இருக்க வேண்டியது அவசியம் என்று இந்திரா கூறியதாகவும், எனவே சமரசப் பேச்சு முறிந்துவிட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன.

அதே நாளில் பெங்களூர் வந்திருந்த சஞ்சீவ ரெட்டி அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்தபோது "ஜனுதிபதி தேர்தலில் நான் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டால் கட்சிக் கண்ணேட்டம் இல்லாமல் மக்களுக்கு தொண்டு செய்வேன்" என்று கூறினர். "வேட்புமனுவை எப்போது தாக்கல் செய்வீர்கள்" என்று கேட்டதற்கு "மனுவை நான் தாக்கல் செய்ய மாட்டேன். எனது மனுவை பிரதமரே தாக்கல் செய்வார். எனக்கு ஆதரவு கொடுக்க பிரதமர் இந்திரா காந்தி முன்வந்தது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்ருர்.

இது நிருபர்களை மாத்திரமல்ல; நாட்டு மக்களையும் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது.

ஜூலை 19-ந் தேதி டெல்லியில் மத்திய அமைச்சரவை அவசரமாகக் கூடி வங்கிகளைத் தேசியமயமாக்குவது பற்றி ஆலோசனை நடத்தியது. பொது மக்கள் போட்ட டெபாசிட் தொகை ஐம்பது கோடிக்கு மேல் உள்ள பதினுன்கு பெரிய வங்கிகளை அரசு ஏற்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குரிய அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்த அவசரச் சட்டத்தில் தற்காலிக ஜனுதிபதியாக இருந்த வி.வி. கிரி கையெழுத்திட்டார்.

நான் முதலமைச்சரானவுடன் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு (என். டி. சி) கூட்டத்தில் வங்கிகளை தேசியமயமாக்க வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினேன். அது வடநாட்டு ஆங்கில ஏடுகளிலும், தமிழகத்து ஏடுகளிலும் அப்போது பெரிய அளவில் முக்கியத்துவம் தரப்பட்டு பிரசுரிக்கப்பட்டது. எனது கருத்தை தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் உதவிப் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் மறுத்துப் பேசியது குறிப்பிடத்தக்கது.

அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அப்போது மௌனமாக இருந்தார்கள் என்றாலும் சில மாதங்களுக்குப் பிறகு அவருடைய தலைமையில் கூடிய அமைச்சரவையில் வங்கிகளை தேசியமயமாக்கும் முற்போக்குக் கருத்து அவசரச் சட்டமாக வெளியிடப்பட முடிவெடுக்கப் பட்டது. எனவே அந்த அவசரச் சட்டத்தை நான் வரவேற்று இது போன்று முற்போக்குக் கொள்கைகள் மத்திய அரசால் நிறைவேற்றப்படும் பொழுது அதன் வெற்றிக்கு தமிழக அரசும், தி. மு. கழகமும் என்றென்றும் துணை நிற்கும் என்று அறிக்கை விடுத்தேன்.

ஜூலை 19-ஆம் நாள் மக்கள் அவைத் தலைவராக இருந்த சஞ்சீவரெட்டி அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது அவைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். அன்றைக்கே உதவி ஜனாதிபதி பதவியை வி. வி. கிரி அவர்களும் ராஜினாமா செய்தார்.

அதே நாளில் டெல்லியில் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தை பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் துவிவேதி கூட்டினார். அதில் கிராந்திதளக் கட்சியைச் சேர்ந்த சரண்சிங், ஜனசங்கத்தைச் சேர்ந்த வாஜ்பாய், சுதந்திரா கட்சியைச் சேர்ந்த மசானி, சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ், அகாலி தளத்தைச் சேர்ந்த பகத்சிங் ஆகியோர் கலந்து கொண்டார்கள் என்றும், தேர்தலில் வேட்பாளராக சி. டி. தேஷ்முக் அவர்களை நிறுத்தலாம் என்று சுதந்திரா, கிரந்தி தளக் கட்சித் தலைவர்கள் கூறினார்கள் என்றும் தமிழ்நாடு முதலமைச்சராகிய என்னை ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்தலாம் என்று அந்தக் கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டது என்றும், ஆயினும் யாருடைய பெயரும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை என்றும் ஜூலை 22-ஆம் தேதி நான் டெல்லி வந்த பிறகு

என்னுடன் கலந்து பேசி முடிவு செய்யலாம் என்று தீர்மானிக்கப் பட்டது என்றும் ஏடுகளில் செய்திகள் வெளிவந்தன.

ஜூலை 21-ஆம் நாள் நண்பர்கள் கந்தப்பன், ராஜாராம் ஆகியோருடனும், முரசொலி மாறனுடனும் நான் டெல்லியை அடைந்தேன். அன்று மாலை டெல்லியில் உள்ள தமிழ்நாடு மாளிகையில் திரு. மசானி, திரு. தண்டேகர், திரு. ஏ. கே. கோபாலன், திரு. பி. ராமமூர்த்தி ஆகியோர் என்னைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர்கள்.

அதற்குப் பிறகு நிருபர்கள் என்னிடம் வந்து கேட்டபோது தேஷ்முக்கை நிறுத்த வேண்டுமென்று சுதந்திரா கட்சி கூறுகிறது என்பதையும், வி. வி. கிரியை ஆதரிக்கலாம் என்று கம்யூனிஸ்ட் கட்சி கருத்து அறிவித்திருப்பதையும் இது குறித்து முடிவு செய்ய இன்னும் இரண்டொரு நாட்களாகும் என்பதையும் நான் நிருபர் களுக்கு விளக்கினேன்.

''உங்கள் பெயரும் ஜனாதிபதி தேர்தலுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதே'' என்று நிருபர்கள் கேட்டபோது நான் அவர்களிடம் ''அப்படி ஒரு எண்ணம் எனக்கு அரும்பவே இல்லை'' என திட்டவட்டமாக மறுத்தேன்.

அதற்குப் பிறகு 21, 22 ஆகிய இரண்டு நாட்களிலும் பூபேஷ் குப்தா, வாஜ்பாய், கோரே, துவிவேதி, நாத்பாய், மதுலிமாயி, ஜார்ஜ் பெர்னாண்டஸ், மேற்கு வங்க முதலமைச்சர் அஜாய் முகர்ஜி, துணை முதல்வர் ஜோதிபாசு, பஞ்சாப் முதலமைச்சர் குர்நாம் சிங், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத், வி. கே. கிருஷ்ணமேனன் ஆகியோர் என்னைச் சந்தித்துத் தேர்தல் பற்றிக் கலந்துரையாடினர்கள்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் என்னிடம் உரையாடிய நாத்பாய் போன்ற தலைவர்கள் என்னையே குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுமாறு வற்புறுத்தினர்கள். நான் அவர்களிடம் ''தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்களோடு நெருங்கியிருந்து ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் இருக் கின்றன'' எனக் கூறி அவர்களுடைய விருப்பத்தை நிராகரித் தேன்.

''ஜனாதிபதி தேர்தலில் ஏகமனதாக ஒருவரைத் தேர்ந் தெடுக்க ஏதாவது ஒரு வழி உங்களுக்குத் தோன்றுகிறதா?'' என்று நிருபர்கள் என்னைக் கேட்டபோது, ''ஜெயப்பிரகாஷ்

நாராயணன் அவர்களை நிறுத்தினால் அவர் பொதுவான வேட்பாளராக இருக்கக் கூடும்'' என்று நான் பதிலளித்தேன்.

ஜூலை 22-ந் தேதி வரையில் எதிர்க் கட்சியின் சார்பில் யாரை ஆதரிப்பது என்று தெளிவான முடிவு எதுவும் தெரிவிக்கப் படவில்லை. அதற்கு முன்பே ஜூலை 21-இல் சஞ்சீவரெட்டி சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. அவரை காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா முன்மொழிந்து, குஜராத் முதலமைச்சர் ஹிதேந்திர தேசாய் வழிமொழிந்திருந்தார். சஞ்சீவரெட்டிக்காக தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது மனுவில் மத்திய அமைச்சர் சவான் முன்மொழிந்து, காங்கிரஸ் பொதுச் செயலாளர் வெங்கடசுப்பையா வழிமொழிந்திருந்தார்.

வி. வி. கிரி அவர்களும் அன்றைக்கே வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். அவரது மனுக்களை எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சாட்டர்ஜி, ஜகத் நாராயணன், யஷ்பால் சிங், காயர் அலிகான் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

சஞ்சீவ ரெட்டியை பிரதமர் இந்திரா காந்தி ஆதரிக்கவில்லை என்றும் அவர் அதற்கெதிராகச் செயல்படுகிறார் என்றும் டெல்லி வட்டாரத்தில் பரவலாகப் பேசப்பட்டது. இந்தியத் திருநாடு முழுவதும் அதே கருத்துதான் ஆங்காங்கு எதிரொலித்துக் கொண்டிருந்தது. பெங்களூரில் காங்கிரஸ் ஆட்சி மன்றக் குழு எடுத்த முடிவு இந்திரா காந்திக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதை அவர் பல நேரங்களில் பத்திரிகையாளர்களிடத்தில் பேசியதின் மூலம் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

இந்த நிலையில் இந்திய மக்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அதுதான் ஜூலை 22-ம் நாள் அன்று சஞ்சீவரெட்டியின் வேட்பு மனுவை பிரதமர் இந்திரா முன்மொழிந்து பாதுகாப்பு அமைச்சர் சுவரன்சிங் வழிமொழிந்து தாக்கல் செய்த செய்தியாகும்.

# 22

## வீழ்ச்சி தடுக்கப்பட்டது!

இரண்டு நாள் டெல்லியில் பல்வேறு கட்சித் தலைவர்களுடனும், சில மாநில முதலமைச்சர்களுடனும் கலந்துரையாடியதில் எடுத்த முடிவை நான் டெல்லியில் வெளியிடாமல் சென்னைக்கு வந்தபிறகு வெளியிடுவது என்ற ஏற்பாட்டுடன் டெல்லியிலிருந்து திரும்பினேன். சென்னையில் பத்திரிகையாளர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டபோது ஜூலை 24-ஆம் நாள் வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் என்றும் அதற்குப் பிறகுதான் டெல்லியில் கழகமும், மற்றக் கட்சிகளும் வேட்பாளர் குறித்து எடுத்த முடிவை அறிவிக்க முடியும் என்றும் நான் தெரிவித்தேன்.

நான் சென்னைக்கு வந்தவுடன் திடீரென்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் நான் சற்றும் எதிர்பாராத வகையில் என் வீட்டிற்கு வந்துவிட்டார். சஞ்சீவ ரெட்டிக்கும், வி. வி. கிரிக்கும் காங்கிரஸ் கட்சியின் வாக்குகள் சிதறி விடக்கூடும் என்பதால், சுதந்திரா கட்சியின் ஆதரவு பெற்ற தேஷ்முக் அவர்களை தி.மு கழகம் ஆதரிக்க வேண்டுமென்று ராஜாஜி அவர்கள் என்னிடத்திலே வலியுறுத்தினர்.

அவருடைய ஆலோசனையை நான் கேட்டிருந்தால் தேஷ்முக்கும் வெற்றி பெற்றிருக்க முடியாது; அதே நேரம் வி. வி. கிரியும் தோற்கடிக்கப்பட்டிருப்பார். சஞ்சீவ ரெட்டிக்குத் தான் வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்திருக்கும். எனவே ராஜாஜி அவர்களின் கருத்தை தி. மு. கழகம் ஆதரிக்க இயலவில்லை என்பதை நான் அவரிடமே தெரிவிக்க வேண்டியதாயிற்று!

ஜூலை 26-ஆம் நாள் அன்று தி. மு. கழகத்தின் முடிவை நான் அறிவித்தேன். இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், முஸ்லீம் லீக், அகாலி தளம் ஆகிய கட்சிகளுடன் கலந்து பேசியதற்கேற்ப தி. மு. கழகமும் வி. வி. கிரி அவர்களுக்குக் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆதரவு தரும் என்பதே அந்த அறிவிப்பாகும்.

ஜூலை 30 அன்று பாராளுமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு சஞ்சீவ ரெட்டிக்கு வாக்களிக்குமாறு கடிதம் எழுத வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டது. அந்த யோசனையை ஏற்க இந்திரா காந்தி மறுத்து விட்டார்.

சஞ்சீவ ரெட்டி அவர்களை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வேட்பாளராக முன்மொழிந்திருந்தாலும் கூட, அவரது வெற்றி தனிப்பட்ட முறையில் தன்னைப் பெரிதும் பாதிக்கும் என்று கருதினார். அந்தத் தேர்தல் முடிவு வி. வி. கிரி அவர்களுக்குப் பாதகமாக இருந்தால் காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த தலைவர்களின் கை ஓங்கிவிடும், அதன் காரணமாக இந்திரா காந்தி பதவியிலிருந்து இறங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அரசியல் வட்டாரங்கள் திடமாக நம்பின. அந்தக் காரணத்தினால் பிரதமர் இந்திரா அவர்கள் முரண்பட்ட ஒரு நிலையை மறைமுகமாக எடுக்க நேர்ந்தது.

ஆகஸ்ட் 3-ஆம் தேதி அன்று வேட்பாளர் வி. வி. கிரி அவர்கள் சென்னைக்கு வந்து எனது இல்லத்தில் என்னைச் சந்தித்துப் பேசினார். வெற்றி வாய்ப்பு சூழ்நிலை எவ்வாறு உள்ளது என்பது குறித்து இருவரும் நீண்ட நேரம் விவாதித்தோம். கழகம் தனது ஆதரவை அவருக்குத்தர முன்வந்ததால் அவரது வெற்றி பிரகாசமாக உள்ளது என்று தனது நன்றியை அவர் முன்கூட்டியே அறிவித்தார். அவர் இந்தியா முழுவதும் சென்று பல்வேறு மாநிலங்களில் ஆதரவு திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார்.

ஆகஸ்ட் 6-ஆம் தேதி பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் கூட்டம் மீண்டும் டெல்லியில் கூடியது. அதில் பிரதமர் இந்திரா காந்தி எடுத்துள்ள இரட்டை நிலை குறித்து காரசாரமான விவாதங்கள் எழுந்தன. திருமதி தாரகேஸ்வரி சின்கா என்ற பிரபல காங்கிரஸ் உறுப்பினர் இந்திராகாந்தியிடம் நேரடியாகவே மோதினார். அதன் காரணமாக இரு தரப்பிலும் பெரும் குழப்பம் ஏற்பட்டது. குழப்பம் ஓரளவு அடங்கிய பிறகு அந்தக் கூட்டத்தில் இந்திராகாந்தி பேசும் போது "காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா மீது பாராளுமன்ற காங்கிரஸ் கட்சி முழு நம்பிக்கை வைத்திருக்கிறது; ஜனாதிபதி தேர்தல் பற்றிப் பல கதைகள் கட்டிவிடப்படலாம்; ஆனால் கட்சியின் முடிவுப்படி சஞ்சீவ ரெட்டியையே நான் ஆதரிக்கிறேன். இதை முன்பும் சொல்லியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

மீண்டும் இந்திய அரசியல் வட்டாரத்தில் பிரதமரின் இந்த அறிவிப்பால் ஒரு புதுக் குழப்பம் ஏற்பட்டது. எனவே சஞ்சீவ ரெட்டியை ஆதரித்து அறிக்கை விடும்படி காங்கிரஸ் கட்சியின் பெரும் தலைவர்கள் பிரதமர் இந்திராவைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர் அப்படி அறிக்கை விடுவதற்கு இயலாதென கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் வாக்குகளே காங்கிரஸ் கட்சி வேட்பாளரான சஞ்சீவ ரெட்டிக்கு கிடைக்குமா என்ற சந்தேகம் எழத் தொடங்கியது. காங்கிரஸ் கட்சியின் இளைஞர்கள் குழுவின் தலைவராக விளங்கிய சந்திரசேகர் ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் தனித்து நிற்க வேண்டுமென்றும், சுதந்திரா, ஜனசங்கம் போன்ற கட்சிகளின் ஆதரவைப் பெறுவது தற்கொலைக்கு ஒப்பானது என்றும் காங்கிரஸ் கட்சியின் சோஷலிச கொள்கைகளை இந்தக் கட்சிகள் எதிர்க்கின்றன என்றும் ஒரு கருத்தினை வெளியிட்டார்.

அதற்குக் காரணம் தேஷ்முக் அவர்களுக்கு ஆதரவு தந்த சுதந்திரா, ஜனசங்கம் போன்ற கட்சிகள் முதல் வாக்குகளை தேஷ்முக் அவர்களுக்கும், இரண்டாவது வாக்குகளை சஞ்சீவ ரெட்டி அவர்களுக்கும் அளிப்பதாக முடிவு செய்தது தான். அது மறைமுகமாக சஞ்சீவ ரெட்டியின் வெற்றிக்கு வழிகோலும் என்பது சந்திரசேகர் போன்றவர்களின் கணிப்பாகும்.

இந்தச் சூழ்நிலைகளால் இந்திரா காந்தி அவர்கள் காங்கிரசில் உள்ள தனது கோஷ்டியினருடன் மறைமுகமாக வி. வி. கிரி அவர்களுக்கு ஆதரவு திரட்டுகிறார் என்பது அரசியல் வட்டாரத்தில் வெளிப்படையாகத் தெரிந்த உண்மையாகி விட்டது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களின் ஆதரவாளராகச் செயல்பட்ட திருமதி தாரகேஸ்வரி சின்கா ஒரு பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"பெங்களூரில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடந்து முடிந்தபின் பிரதமர் இந்திரா காந்தி நடந்து கொள்ளும் முறை காங்கிரசுக்கே அழிவு தரக் கூடியது. இப்போது காங்கிரசில் ஏதோ ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது போலத் தோன்றினாலும் இந்திராவிற்கும் காங்கிரசுக்கும் இடையே பிளவு இருந்து கொண்டு தான் இருக்கிறது. பாங்கிகளை தேசியமயமாக்கியதால் ஏழைக்கு நன்மையிருக்கிறது என்றாலும் மொரார்ஜி தேசாயை எதிர்ப்பதற்

காகவே அந்தத் திட்டம் இந்திரா காந்தியால் உள்நோக்கத் தோடு கொண்டு வரப்படுவதாகச் சந்தேகிக்க வேண்டியிருக் கிறது. சஞ்சீவ ரெட்டியை வேட்பாளராக அறிவித்ததால்தான் இந்திரா காந்தி வங்கிகளை தேசியமயமாக்கினர். இந்திராவின் அவசர நடவடிக்கைகள் காங்கிரசுக்குள் பிளவை அதிகரித்து விட்டன. இதனுல் ஆகஸ்டு 16-ந் தேதி ஜனுதிபதி தேர்தல் முடிந்தபின் காங்கிரஸ் கட்சி உடைந்துவிடும்.''

ஆகஸ்ட் 11-ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் உரை நிகழ்த்திய காமராஜர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இந்தியாவைப் பொறுத்தவரை ஜனநாயகத்திற்கு ஆபத்து என்ருல் தேசத்திற்கே ஆபத்து! தேசத்திற்கு ஆபத்து வரும்போது யாராக இருந்தாலும் கண்டிக்காமல் இருக்க முடியாது. பிரதமராகவே இருந்தாலும் கண்டிக்கவேண்டும். வரம்பு மீறிச் செல்கிறவர்களைக் கண்டிக்காமல் விட்டால் காங்கிரஸ் கட்சி அழியும். காங்கிரசுக்கு பலம் இருந்தால் எவ்வளவு சீர்கெட்டிருந்தாலும் இதைத் தவிர்க்க முடியும். காங்கிரசுக்குள் பிளவை உண்டாக்குவது தர்மம் அல்ல. காங்கிரஸ் சார்பில் ஜனுதிபதி தேர்தலில் சஞ்சீவ ரெட்டி போட்டியிடுகிருர். அவரைத் தேர்ந்தெடுக்க பாடுபட வேண்டி யது காங்கிரசார் கடமை. சஞ்சீவ ரெட்டிக்கு ஆதரவாக வாய் திறந்து ஓட்டு கேட்க மாட்டேன் என்று சொல்பவர்கள் காங்கிரஸ்காரர்களா? அப்படிப்பட்டவர்கள் காங்கிரசை விட்டு விலகவேண்டும்."

காமராஜரின் அந்தப் பேச்சிற்குப் பிறகு காங்கிரசுக்குள் ஒரு ''குருக்ஷேத்திரம்'' உருவாகிவிட்டது என்றே சொல்லலாம். இந்திராவின் போக்கில் சந்தேகமுற்ற காங்கிரஸ் தலைவர் நிஜ லிங்கப்பா அவர்கள் ஜனசங்கத் தலைவர்களுடனும், சுதந்திரா கட்சித் தலைவர்களுடனும் சஞ்சீவ ரெட்டிக்கு ஆதரவுகோரி பேச்சு நடத்தினர். அவர்களும் தங்களது இரண்டாவது வாக்கினை சஞ்சீவ ரெட்டிக்கு அளிப்பதாக உறுதி அளித்தனர். இதைப்பற்றி பிரதமரின் ஆதரவாளர்களான ஜெகஜீவன்ராம், பக்ருதீன் அலி அகமது ஆகியோர் நிஜலிங்கப்பாவிற்கு கடிதம் அனுப்பினர்கள்.

''காங்கிரஸ் கொள்கைக்கு எதிரான கொள்கை உடைய சுதந்திரா, ஜனசங்கம் போன்ற கட்சிகளுடன் நீங்கள் பேச்சு நடத்தியது ஏன்? அந்தப் பேச்சு வார்த்தையில் இந்திரா

காந்தியை பதவியை விட்டு நீக்க வேண்டுமென்று அந்தக் கட்சியினர் பகிரங்கமாக உங்களைக் கேட்டுக் கொண்டதாக வதந்தி உலவுகிறது. இதற்கு உடனடியாக நீங்கள் விளக்கம் அளிக்காவிட்டால் ஜனாதிபதி தேர்தலில் ஆபத்தான விளைவு கள் ஏற்படும்'' என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

இதிலிருந்து குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதமர் இந்திரா காந்தியின் குழுவினர் காங்கிரஸ் வேட்பாளர் சஞ்சீவ ரெட்டிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பது மேலும் தெளிவாயிற்று.

பாபு ஜெகஜீவன்ராம் அவர்களும் பக்ருதீன் அலி அகமது அவர்களும் எழுதிய கடிதத்திற்கு பதில் எழுதிய காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா அவர்கள், ஜனாதிபதி தேர்தலில் எல்லா கட்சிகளின் ஆதரவையும் கேட்கலாம் என்று காங்கிரஸ் பார்லி மெண்டரி போர்டு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு ஏற்பவே நான் எல்லா கட்சிகளின் ஆதரவையும் கோரி னேன். சுதந்திரா கட்சியுடனும், ஜனசங்கத்துடனும் நான் பேச்சு நடத்தியதை சந்தேகிக்கிறீர்களே, அரசாங்க விவகாரங் கள் குறித்தும், பாராளுமன்ற விவகாரங்கள் குறித்தும் எதிர்க் கட்சிகளுடன் நீங்கள் பேச்சு நடத்தவில்லையா? என்று கேட்டிருந்தார்.

ஆகஸ்ட் 12–ஆம் தேதி அன்று பிரதமருக்கு நிஜலிங்கப்பா அவர்கள் ஒரு கடிதம் எழுதினார். அதில் "உங்களைக் கவிழ்க்க திட்டமிட்டிருக்கிறோம் என்று சிலர் கிளப்பி விட்டுள்ள புரளியை நம்பாதீர்கள். கருத்து வேற்றுமை இருந்தால் அதை பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வோம். எப்போது வேண்டு மானாலும் உங்களைச் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறேன். நாங்கள் உங்களுக்கு எதிராக இருக்கிறோம் என்று நினைக்கா தீர்கள். அது விஷமக்காரர்களால் வேண்டுமென்றே கிளப்பி விடப்பட்டுள்ள கட்டுக்கதை. பாராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கும் பிரதமராகிய நீங்கள் சஞ்சீவ ரெட்டிக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி காங்கிரஸ் உறுப்பி னர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதவேண்டியது அவசியம். அதைச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்'' என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அதற்கு ஆகஸ்ட் 13–ந்தேதி அன்று பிரதமர் நிஜலிங்கப்பா விற்கு எழுதிய பதில் கடிதத்தில், ஜனாதிபதி தேர்தலில் பாராளு மன்ற காங்கிரஸ் உறுப்பினர்களும் சட்டசபை காங்கிரஸ் உறுப்

பினர்களும் அவரவர்கள் விருப்பம் போல் வாக்களிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்.

காட்டுத் தீ போல பரவிய இந்தச் செய்தி காங்கிரஸ் கூடிய விரைவில் பிளவுபட்டு விடும் என்பதை உறுதிப்படுத்தியது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களின் அவசரக் கூட்டத்தை நிஜலிங்கப்பா கூட்டினர். அந்தக் கூட்டத்தில் மொரார்ஜி தேசாய், காமராஜர், ஆதுல்யாகோஷ், எஸ். கே. பட்டீல் ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள். கூட்டம் முடிந்து வெளியே வந்த எஸ் கே. பட்டீல் நிருபர்களிடம் கூறுகையில் "காங்கிரஸ் கட்சியின் முதுகில் இந்திரா காந்தி குத்திவிட்டார்" என்று குறிப்பிட்டார். இந்திரா காந்தி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு நிஜலிங்கப்பா விளக்கம் கேட்டு ஒரு நோட்டீஸ் அனுப்பினர். அந்த நோட்டீஸ் கிடைத்த சில மணி நேரத்தில் இந்திரா காந்தி அவருடைய இல்லத்தில் நூற்றுக்கு மேற்பட்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி பின்வருமாறு பேசினர்.

"என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்து நிஜலிங்கப்பா நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அதே போன்ற நோட்டீஸ்கள் ஜெகஜீவன்ராம், பக்ருதீன் அலி அகமது, ஏ. பி. சர்மா, ஜெயில்சிங், கமலபதி திரிபாதி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. கட்சி உறுப்பினர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை வேண்டுமென்று கோரியதின் மூலம் கட்சியின் நலன்களுக்கே கேடிழைத்துவிட்டீர்கள். இது கட்டுப் பாட்டை மீறியதாகும் என்று அந்த நோட்டீசில் குறிப்பிட்டிருக் கிறது. என்மீது நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் தலைவருக்கு உரிமை உண்டா என்று நான் சந்தேகப்படுகிறேன். ஒரு பிரதம ரின் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா? அடுத்து என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது.

நாம் தனித்தனி கோஷ்டிகளாக இருக்காமல் மக்களின் கட்சியாக ஒன்றுபட்டு இருக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. காங்கிரஸ் மாநாடுகளில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அந்தத் தீர்மானங்கள் அமுல் நடத்தப்பட்டனவா என்பதைக் கேட்க விரும்புகிறேன். ஜனதிபதி பதவிக்கு வேட் பாளரைத் தேர்ந்தெடுப்பதில் என்னை அவமதித்தார்கள். தினமும் ஜனதிபதியும் பிரதமரும் ஒருவரையொருவர் அனுசரித்து நடக்க

வேண்டிய நிலை உள்ளது. எனவே ஜனாதிபதியாக யார் வர வேண்டும் என்பதில் பிரதமரின் விருப்பத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஆனால் இந்தத் தேர்தலில் யாரை நிறுத்த வேண்டும் என்பதை திடீரென்று முடிவெடுத்தார்கள்.

இந்தியப் பிரதமர் அவருடைய சொந்தக் கட்சியாலேயே கீழே தள்ளப்பட்டார் என்று வெளிநாடுகள் எண்ணும் அளவிற்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் நடந்து கொண்டார்கள். கம்யூனிச நாடுகளில்தான் கட்சி சொல்கிறபடி பிரதமர் நடக்க வேண்டிய நிலை உள்ளது. இந்தியாவில் ஜனநாயக முறைப்படி பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆகவே பிரதமர் பதவிக்கு தனி அந்தஸ்து உண்டு. என் கண்ணியத்தைக் குலைக்கும் விதத்தில் நடந்து கொண்டால் பதிலடி கொடுப்பேன் என்று காங்கிரசின் சிண்டிகேட் தலைவர்களை நான் சமீபத்தில் எச்சரித்தேன்."

இந்தப் பேச்சு வெளியானவுடன், இந்திரா காந்தி செய்யும் பெரிய குற்றத்தை மன்னிக்கவே முடியாது என்று மொரார்ஜி தேசாய் ஆத்திரத்தோடு குறிப்பிட்டார். இந்திரா காந்திக்கு நிஜலிங்கப்பா அனுப்பிய நோட்டீசை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சி. சுப்ரமணியம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் நிஜலிங்கப்பா அதை திட்ட வட்டமாக மறுத்து விட்டார். நான் தலைவராக இருக்கும் வரை ஒட்சிக் கட்டுப்பாட்டைக் காப்பேன் என்று அவர் கூறினார்.

இத்தகைய போர் முழக்கங்களுக்குப் பிறகு குடியரசுத் தலைவர் தேர்தல் ஆகஸ்ட் 16–ஆம் தேதி நடைபெற்றது. அனைத்து நாடுகளும் அந்தத் தேர்தல் முடிவை மிகுந்த ஆவலோடு எதிர் பார்த்தன. ஏனெனில் இந்திரா காந்தி பிரதமராக நீடிப்பாரா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் தேர்தலாக அது அமைந் திருந்தது. ஆகஸ்ட் 20–ஆம் நாள் அன்று வாக்குகள் எண்ணப் பட்டன.

குடியரசுத் தலைவர் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் கள் அளிக்கும் வாக்கிற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக் கும் வாக்கிற்கும் சில மதிப்புகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அந்த மதிப்புகளின்படி வி. வி. கிரி அவர்கள் 4,20,077 மதிப்பு வாக்குகளைப் பெற்றார். சஞ்சீவ ரெட்டி 4,05,427 மதிப்பு வாக்கு களைப் பெற்றார். தேஷ்முக் 1,12,769 மதிப்பு வாக்குகளைப் பெற்றார். 14,500 மதிப்புள்ள வாக்குகள் வித்தியாசத்தில்தான் வி. வி. கிரி அவர்கள் வெற்றி பெற முடிந்தது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமும் கிடைத்த வாக்குகளின் மதிப்பு 35,448. இதில் 20,448 மதிப்புள்ள வாக்குகள் சட்டமன்றத்தின் மூலமும், 15,000 மதிப்புள்ள வாக்குகள் நாடாளுமன்றத்தின் மூலமும் வி. வி. கிரி அவர்களுக்குக் கிடைத்தன. அந்த வாக்குகளைக் கழித்துப் பார்த்தால் வி. வி. கிரி அவர்கள் தோல்வி அடைந்து சஞ்சீவ ரெட்டி அவர்கள்தான் வெற்றி பெற்றிருக்க முடியும்.

கிரி அவர்களின் வெற்றியைத் தொடர்ந்து நான் வெளியிட்ட அறிக்கையில் ''கழகச் செயற்குழுவின் கட்டளையை ஏற்று டெல்லி சென்று எல்லா கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி ஆரம்பத்தில் நான் எடுத்த முயற்சி, அனைத்துக் கட்சியினரும் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறு வெற்றி பெற்றிருக்கிறது. நீண்ட காலமாக தொழிற் சங்க இயக்கங்களிலும் பொது வாழ்விலும் ஈடுபட்டு தொண்டாற்றி வருகிற கிரி அவர்களின் வெற்றிக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

தி. மு. கழகம் இந்தத் தேர்தலில் வேறு நிலையை எடுத்திருந்தால் அது வி. வி. கிரியின் தோல்வியாக மாத்திரம் அமையாமல் பிரதமர் இந்திரா காந்தியின் வீழ்ச்சியாக முடிந்திருக்கும்!



# 23

## பக்தவத்சலனர் பாராட்டு

"நிலா நிலா ஓடி வா!" என்று குழந்தைகளுக்குப் பாடிக்காட்டி மகிழ வைக்கவும், "கோல நிலா வந்திங்கே கொஞ்சுகின்ற இரவில் காதலோடு நாம் களித்திருப்போம்" எனப் பேசி காதலர்கள் குலவிடவும், வானத்தில் வளர்ந்தும் தேய்ந்தும் அழகு காட்டிக் கொண்டிருக்கும் சந்திரன் பரம சிவனின் ஜடாமுடியில் வீற்றிருக்கிறுன் என்று புராணிகர்கள் கூறுவர். அந்தச் சந்திரனையும், சூரியனையும் ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குவதால்—அப்படி விழுங்கப்படும் நேரத்தில் கிரகணம் காணப்படுகிறது என்றும் கதைகள் கட்டியுள்ளனர்.

ஆனல் விஞ்ஞானப் புதுமையில் சந்திரனும் பூமியைப் போல விண்வெளியில் ஒருகிரகமே என்று உறுதிப்படுத்தப் பட்டது மாத்திரமல்ல, அந்தக் கிரகத்திற்கே பயணம் செய்து அதில் காலடி எடுத்து வைத்துவிட்டு மனிதன் திரும்பி வரவும் முடியும் என்ற அற்புதத்தை விளைவித்த ஆண்டு 1969 ஆகும்.

அந்த ஆண்டு ஜுலை மாதம் 16-ஆம் தேதி இரவுதான் அமெரிக்காவிலே உள்ள கென்னடி முனையிலேயிருந்து சந்திரனுக்குச் செல்ல மனிதன் புறப்பட்டான். பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தொலைவு இரண்டரை லட்சம் மைல் களாகும். அங்கே செல்வதற்கு அனுப்பப்பட்ட "அப்பாலோ 11" என்ற ராக்கெட்டில் அமெரிக்க விண்வெளி வீரர்களான ஆம்ஸ்ட்ராங், ஆல்ட்ரின், காலின்ஸ் ஆகிய மூவரும் பயணம் செய்தனர்.

அந்தக் காலக்கட்டத்தில் சோவியத் ரஷ்யாவும் சந்திர னுக்கு ஆள் இல்லாத ராக்கெட் ஒன்றை அனுப்பியது அதுவும் ஜுலை மாதம்தான்! அந்த ராக்கெட்டிற்கு "லூனு" என்று பெயர்! அது சந்திரனில் ஜுலை 21-ஆம் நாள் சென்று இறங்கியது.

16-ஆம் தேதி புறப்பட்ட அமெரிக்காவின் அப்பாலோ 11 பூமிக்கு மேல் 400 மைல் தூரம் சென்று பூமியைச் சுற்றத் தொடங்கி, அதன் பின் வானவெளியில் பறந்து கொண்டே

ஜூலை 19-ஆம் தேதி காலை 8.42 மணிக்கு சந்திரனை நெருங்கியது. அதன்பிறகு இரவு 10.56 மணியிலே இருந்து சந்திரனைச் சுற்றத் தொடங்கியது.

ஜூலை 20, மாலை 6.30 மணிக்கு ஆம்ஸ்ட்ராங், ஆல்ட்ரின் இருவரும் தாய் ராக்கெட்டிலேயிருந்து—அத்துடன் இணைக்கப் பட்ட பூச்சி வடிவ வண்டிக்கு ஊர்ந்து சென்றார்கள். அந்தப் பூச்சி வண்டி சரியான நிலையில் உள்ளதா என்று நன்கு சோதித்துப் பார்த்தார்கள். எல்லாம் சரியாக இருப்பதாகத் தெரிவித்ததின் பேரில் தாய் ராக்கெட்டில் இருந்து பூச்சி வண்டியைப் பிரித்துக்கொண்டு, சந்திரனில் போய் இறங்கும் படி பூமியிலுள்ள வானவெளி நிபுணர்கள் அவர்களுக்கு கட்டளை பிறப்பித்தார்கள்.

இரண்டரை லட்சம் மைல்களுக்கப்பால் உள்ளவர்களிடம் பூமியிலிருந்து விஞ்ஞானிகள் அவ்வாறு ஆணையிட்ட அதிசயத்தை நினைத்தாலே இப்போதும் உடல் சிலிர்க்கிறது. விஞ்ஞானப் புதுமை ஒன்றை உலகத்திற்குத் தருவதற்காகத் தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் சந்திர மண்டலம் சென்ற அந்த வீரர்களை எப்படித்தான் பாராட்டுவது என்று தெரியவில்லை.

பூமியிலிருந்து கிடைத்த உத்தரவின்படி ஆல்ட்ரின் பூச்சி வண்டியில் இயந்திரத்தை இயக்கினார். அன்று இரவு சரியாக 11.17 மணிக்கு தாய் ராக்கெட்டிலேயிருந்து பூச்சி வண்டி பிரிந்து சந்திரனை நோக்கிச் செல்லத் தொடங்கியது. அப்போது தாய் ராக்கெட் சந்திரனை பதிமூன்றாவது தடவையாகச் சுற்றிக் கொண்டிருந்தது. அந்த ராக்கெட்டில் காலின்ஸ் மாத்திரம் இருந்தார் தாய் ராக்கெட்டிலிருந்து பிரிந்த பூச்சி வண்டி இரண்டரை மணிநேரம் பறந்து சென்று இரவு 1.39 மணிக்கு சந்திரனில் போய் இறங்கியது.

அதிலிருந்து ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்ட்ரின்னும் விருந்து சாப்பிட்டுவிட்டு நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டார்கள். அங்கிருந்து அவர்கள் அனுப்பிய செய்தியில் ''சந்திரனிலிருந்து பார்க்கும்போது பூமி வட்டவடிவமாய், பெரிதாய், அழகாய் தெரிவதாக'' அவர்கள் தெரிவித்தார்கள்.

இரவு முழுவதும் பூச்சி வண்டிக்குள்ளே இருந்தவர்கள் ஜூலை 21 காலை 8.26 மணிக்கு முதன்முதலாக சந்திரனின் தரை மீது கால் வைத்தார்கள். முதலில் சந்திரனில் அடி வைத்தவர்

ஆம்ஸ்ட்ராங். அப்போது அவர் "நான் எடுத்து வைப்பது சிறிய அடிதான்; ஆனல் மனிதகுல நன்மைக்காக எடுத்து வைக்கும் மிகப் பெரிய அடியாகும்" என்று கூறினர். அதற்கு இருபது நிமிடம் கழித்து ஆல்ட்ரின் சந்திரனில் கால் எடுத்து வைத்தார்.

அவர்கள் இருவரும் சந்திரனுக்குச் சென்றதைக் குறிக்கும் நினைவுச்சின்னத்தை ஆம்ஸ்ட்ராங் திறந்துவைத்தார். அந்தச் சின்னத்தில் பின்வருமாறு எழுதப்பட்டது.

"1969-இல் பூமி கிரகத்திலிருந்து மனிதர்களாகிய நாங்கள் முதன் முதலாக இங்கே வந்து கால் வைத்தோம். மனித குலத்தின் நன்மைக்காகவே நாங்கள் வந்தோம்" என்று எழுதப் பட்டிருந்தது.

அதில் ஆம்ஸ்ட்ராங், ஆல்ட்ரின், காலின்ஸ், அன்றைய அமெரிக்க அதிபர் நிக்சன் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தார்கள். அமெரிக்கக் கொடி ஒன்றையும் அவர்கள் சந்திரனில் நட்டார்கள்.

டெலிவிஷன் காமிராவைக் கொண்டு சந்திரனின் தோற்றத்தை நன்கு தெரியும்படி படம் பிடித்து பூமிக்கு அனுப்பினர்கள். இருபது பவுண்டு கல், மண் ஆகியவற்றை சந்திர மண்டலத்திலிருந்து சேகரித்துக் கொண்டார்கள். அவர்கள் அங்கே சுமார் மூன்று மணி நேரம் தங்கியிருந்தார்கள். பிறகு இருவரும் பூச்சி வண்டிக்குத் திரும்பி அதன் கதவுகளை மூடி தாழிட்டார்கள்.

பிறகு இரவு 11 மணி அளவில் பூச்சி வண்டியை தாய் ராக்கெட்டை நோக்கி செலுத்தினர்கள். சந்திரனிலிருந்து பூச்சி வண்டி சரிவர கிளம்ப வேண்டுமே என்று பூமியில் இருந்த விஞ்ஞான நிபுணர்கள் கவலையோடு இருந்தார்கள். அந்த வண்டி கிளம்பா விட்டால் வானவெளி வீரர்கள் ஆம்ஸ்ட்ராங், ஆல்ட்ரின் இருவரும் பூமிக்குத் திரும்பியிருக்கவே முடியாது இன்னும் சில மணி நேரம் இருந்து பின் சந்திர மண்டலத்திலேயே பிணமாகி யிருப்பார்கள். அவ்வாறு இல்லாமல் பூச்சி வண்டி சரிவர இயங்கித் தாய் ராக்கெட்டை நோக்கி வரத் தொடங்கியது.

அதுவரையில் சந்திரனைச் சுற்றிக் கொண்டிருந்த தாய் ராக்கெட்டுடன் 22-ஆம் தேதி அதிகாலை 3மணி அளவில் பூச்சி வண்டி வந்து இணைந்து கொண்டது. பிறகு அங்கிருந்து புறப்

பட்ட. தாய் ராக்கெட் பூமியை நோக்கி பறந்து வந்து ஜூலை 24–ஆம் தேதி இரவு 10 மணி அளவில் அமெரிக்காவை அடுத்த பசிபிக் கடலில் உள்ள ஹவாய் தீவிற்கு அருகே குறிப்பிட்ட ஒரு இடத்தில் பத்திரமாக வந்திறங்கியது.

விண்வெளி வீரர்களை மீட்பதற்கு அமெரிக்காவின் போர்க் கப்பல் ஒன்று அங்கு தயாராக நின்று கொண்டிருந்தது. அந்தக் கப்பலுக்கு ஒன்பது மைல் தூரத்தில் இறங்கிய ராக்கெட்டிலிருந்து ஹெலிகாப்டர் விமானத்திலே ஏறி மூன்று வானவெளி வீரர்களும் அந்தக் கப்பலை அடைந்தனர். அவர்களை வரவேற்க அமெரிக்க அதிபர் நிக்சன் அந்தக் கப்பலில் தயாராக இருந்தார்.

திரைப்படங்களில் மட்டுமே காட்டக் கூடியதும், காணக் கூடியதுமான ஒரு கற்பனைக் காட்சியை விஞ்ஞானிகள் தங்களது ஆற்றலின் காரணமாக உண்மையாகவே நடத்திக் காட்டி மனித குலத்தின் அறிவுக்குக் கூர்மையேற்றினர்.

சந்திர மண்டலத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கற்கள் உலகத்தின் பல நாடுகளுக்கும் பார்வைக்காக அனுப்பி வைக்கப் பட்டன. அவற்றில் ஒரு கல்துண்டை தமிழ் நாட்டிற்கும் அனுப்பி வைத்தனர். அந்தக்கல் சென்னையில் தலைமைச் செயலகத்தில் வைக்கப்பட்டு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், செய்தியாளர்களும் மற்றும் பலரும் காண்ப பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்தக் கல்லைப் பார்க்கும் பொழுது நம் தெருவில் காணக் கூடிய ஒரு சாதாரண கல்தானே என எண்ணிடத் தோன்றினாலும் அந்தக் கல்லைக் கொண்டு வந்ததின் மூலம் பூமியைப் போன்றே சந்திரனும் ஒரு கிரகம் என்பதும் சந்திரனைப் போன்ற பல கிரகங்கள் விண்வெளியில் இருக்கின்றன என்பதும் அதுவரையில் ஆராய்ச்சிக் கட்டுரைகளாக இருந்த நிலை மாறி இப்போது அனுபவ ரீதியான உண்மைகளாகி விட்டன.

அதே ஜூலை மாதத்தில் சென்னையில் நடைபெற்ற ஒரு கலை நிகழ்ச்சி குறித்தும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஆந்திர மாநிலத்தில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இழப்புகள் ஏற்பட்டன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நடிகர் என். டி. ராமராவ் தலைமையில் தமிழ் நடிகர்கள், தெலுங்கு நடிகர்கள் இணைந்து பல இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தி

அவற்றின் வாயிலாகக் கிடைத்த ஆறுலட்சம் ரூபாயை 26-ஆம் தேதி அன்று தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் என் தலைமையில் ஒரு பெரிய விழா ஏற்பாடு செய்து ஆந்திர முதலமைச்சர் பிரமானந்த ரெட்டி அவர்களையும் அந்த விழா விற்கு அழைத்து என் மூலம் அவரிடம் வழங்கச் செய்தார்கள்.

அந்த விழாவில் எம். ஜி. ஆர். அவர்களும் கலந்து கொண்டார். அன்று நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் என். டி. ராமராவ் அவர்கள் ராமனாகவும், கிருஷ்ணனாகவும் வேட மணிந்து நடித்தார். அந்த விழாவில் நான் பேசும்போது தமிழ் நாட்டைச் சேர்ந்த நானும் ஆந்திராவைச் சேர்ந்த பிரமானந்த ரெட்டியும், மைசூரைச் சேர்ந்த (கர்நாடகம்) தொழிலமைச்சர் ராஜசேகரமூர்த்தியும், கேரளாவைச் சேர்ந்த எம். ஜி. ஆரும் ஒரே மேடையில் இருப்பதைப் பார்க்கும்போது திராவிட நாடே இந்த மேடையில் இருப்பதைப்போல் தோன்றுகிறது. நான் குறிப் பிடும் திராவிடநாடு "பிரிய வேண்டும்" என்ற திராவிட நாடு அல்ல; "ஒருவருக்கொருவர் பிரியம்வேண்டும் என்றுகோரும் திராவிட நாடு ஆகும்" என்று குறிப்பிட்டேன்.

அந்த ஜூலை மாத இறுதியில் கேரளாவிலிருந்து வெளி வரும் "மலையாள மனோரமா" என்ற பிரபல ஏட்டில் என்னைப் பற்றிச் சில குறிப்புகளை எழுதியிருந்தார்கள்.

"எல்லா அரங்கங்களிலும் தலைவருடைய காலடியைப் பின் தொடர்ந்துவந்த ஒரு தொண்டன் கருணாநிதி. அண்ணா அவர்கள் ஒரு நாடக நடிகராக—நாடக ஆசிரியராக—திரைப்பட கதை வசன எழுத்தாளராக இருந்தாரென்றால், கருணாநிதியும் இந்தத் துறைகளில் தனது தெளிவான முத்திரையைப் பதித்தவர் என்பதை நினைவில் வைக்க வேண்டும். புகழ் வாய்ந்த சொல் லாற்றல் மிக்கவராய் விளங்கியவர் அண்ணா. அந்தத் துறை யிலும் அண்ணாவின் சரியான மாணவராய் கருணாநிதி விளங்கு கிறார். எனவே எல்லா வகையிலும் தலைவரைப் பின் தொடர் கின்ற அருகதை உள்ளவர் கருணாநிதி என்பது தெளிவாகும்.

ஒரேபோக்கில் போய்க்கொண்டிருந்த திரை உலகை அந்தப் போக்கிற்கு எதிராக தன் எழுதுகோல் அசைவால் மாற்றி அமைத்தவர் கலைஞர் கருணாநிதி. அவருடைய பராசக்தி என்ற திரைப்படம் கலையோடு சமூகப் புரட்சியை உருவாக்கியது என்பதையும் நினைவில் வைக்க வேண்டும்.

அண்ணாவின் அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருந்து அவர் செய்த பணி பாராட்டத் தகுந்தது. சூறாவளியைப் போல் உண்டான ஒரு கிளர்ச்சியை வெகுநுட்பமான முறையில் அவர் தீர்த்து வைத்தது அவரது கீர்த்திக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

புகழ்வாய்ந்த ஒரு தலைவருக்குப்பின் வாரிசாக இன்னொருவர் அமைவதென்பது அவ்வளவு எளிதல்ல. ஆனால் கருணாநிதி முதலமைச்சராக வந்தபின் பல செயல்களின் மூலம் அவர் அண்ணாவின் சரியான வாரிசு என்பதை நிரூபித்துக் கொண்டிருக் கிறார்.

முதலமைச்சர்களில் அவர் ஒரு கலைஞர். கலைஞர்களில் அவர் ஒரு முதலமைச்சர். இவ்வாறான கருணாநிதிக்கு வயது 45 ஆகிறது. வளமான தமிழ்நாட்டை முன்னேற்ற அவருக்குத் தேவையான சக்தி பெருகட்டும்."

இவ்வாறு வெளிமாநில ஏடுகளான மலையாள மனோரமா போன்றவைகளில் எழுதப்பட்ட புகழாரங்களை நான் அப்படியே எனக்கு உரியதாக எடுத்துக்கொள்ளாமல், அண்ணாவின் பாதை யில் நான் ஊக்கத்தோடு பணியாற்ற வேண்டும் என்பதற்காக உற்சாகப்படுத்தப்படுகிறேன் என்றுதான் எண்ணிக் கொண்டேன்.

இதேபோன்ற பாராட்டுக்கள் மாற்றுக் கட்சியிலே இருந் வர்களாலும் எனக்கு வழங்கப்பட்டது உண்டு. கட்சி சார்பற்ற பெருமக்களாலும் நான் பெருமைப்படுத்தப்பட்டிருக்கின்றேன். அப்போதும் சரி, எப்போதும் சரி, அந்தச் சிறப்புக்கள் அனைத்துக் கும் உரியவர் என்னை ஆளாக்கிய அண்ணாதான் என்பதிலே எனக்கு ஏற்படும் மனநிறைவு ஒன்றே என்னை வாழவைத்துக் கொண்டிருந்தது; இப்போதும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

எனது 46-வது பிறந்தநாளை விழாவாக நடத்த சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டது. என். வி. என். சோமு, ஜின்னா, துரைமுருகன், ஜீவா கலைமணி, பிச்சைஅரசு, சதாசிவம், கோதண்டராமன் ஆகியோர் முன் நின்று ஏற்பாடு செய்த அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ள மறுத்து விட்டேன்.

பொதுப் பணிக்கோ அல்லது கட்சிக்கோ நிதியளிக்கும் விழாவாக ஏற்பாடு செய்யப்படும் பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் மட்டுமே என்னைப் பொறுத்தவரையில் கலந்துகொள்வது என்று

நான் உறுதியாக இருந்தேன். நான் கலந்துகொள்ள இயலாததற்கான காரணத்தை விளக்கி மாணவ உடன்பிறப்புக்களுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி அனுப்பினேன்.

அந்த விழாவில் முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம், சிலம்புச்செல்வர் ம. பொ. சி., நாவலர் நெடுஞ்செழியன், பல்கலைக்கழக துணைவேந்தர் சுந்தரவடிவேலு, இந்திய யூனியன் முஸ்லீம்லீக் தலைவர்களில் ஒருவரான அப்துஸ் சமத், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களில் ஒருவரான ஏ. எஸ். கே. அய்யங்கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு என். வி. என். சோமு தலைமையேற்றார். அந்த விழாவில் நாவலர் பேசும்போது "கலைஞர் கருணாநிதிக்கு வயது 46 என்றார்கள்; ஆயினும் திராவிடர் கழகத் தொண்டர் கருணாநிதிக்கு வயது 37 என்றும், எழுத்தாளர் கருணாநிதிக்கு வயது 26 என்றும், பேச்சாளர் கருணாநிதிக்கு வயது 25 என்றும், கலைஞர் கருணாநிதிக்கு வயது 23 என்றும், தி. மு. கழக முன்னணி வீரர் கருணாநிதிக்கு வயது 20 தான் என்றும், போராட்ட வீரர் கருணாநிதிக்கு வயது 14 என்றும், கழகப் பொருளாளர் கருணாநிதிக்கு வயது 9 என்றும், அமைச்சர் கருணாநிதிக்கு வயது 2½ என்றும், முதலமைச்சர் கருணாநிதிக்கு வயது ஆறு மாதம் என்றும், கழகத் தலைவர் கருணாநிதிக்கு வயது ஆறு நாள்தான் என்றும் கூறியதோடு இப்படி, பல்வேறு திறமைகள் கொண்ட அவரை அத்தனை பேரும் பாராட்டுகிறீர்கள். அவரைப் பாராட்டுவதை என்னைப் பாராட்டுவதாகத்தான் நான் கருதுகிறேன். எனக்கும் அவருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிஞ்சிற்றும் இல்லை. மாணவ உலகம் கலைஞரைப் பின்பற்றி அவரை அடிப்படையாகக் கொண்டு தங்களுக்கென தனித் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அதே விழாவில் பேசிய சிலம்புச் செல்வர்—"இன்று காலை பத்திரிகையைப் பிரித்ததும் கணபதியா பிள்ளையின் பரிந்துரையை ஏற்று விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயக்கூலி வழங்க வகை செய்யும் வகையில் அவசரச்சட்டம் பிறப்பித்திருப்பதைப் பார்த்தேன். இங்கே மேடையில் கலைஞர் அவர்கள் இருந்தால் கட்டித் தழுவி பாராட்டுக்கள் கூற வேண்டுமென்று தேடித் தேடிப் பார்த்தேன். அவர் இல்லை. சமுதாயத்தின் மேல் தளத்தில் உள்ள சிலருக்காக அல்ல—அடித்தளத்தில் உள்ள பலருக்காக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது கடந்த வாரம் டெல்லியில்; இந்த வாரம் சென்னையில். டெல்லிக்குச் சென்னை

எந்த வகையிலும் சளைத்தது அல்ல என்பதை கலைஞர் இதன் மூலம் நிரூபித்து விட்டார்" என்று பாராட்டினார்.

முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களோ—"கருத்து வேற்றுமைகள் சில பிரச்சினைகளில் இருக்கலாம்; எல்லாவற்றிலும் கருத்து வேற்றுமை இருப்பது கூடாது; இருந்தால் உயர்வடைய முடியாது. தமிழக முதலமைச்சர் கலைஞர்; சிறந்த கலைஞர்; அவர் இன்று முதலமைச்சராக இருக்கிறார். முதலமைச்சராக கலைஞர் இருப்பது சிறப்புடையதாக இருக்கிறது. கலை என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நெருங்கியிருக்க வேண்டிய ஒன்று. 45 வயது முடிந்து கலைஞருக்கு 46 வயது நடந்து கொண்டிருக்கிற நிலையில் அவர் 45 ஆண்டுகள் எப்படி வாழ்ந்து இன்று முதலமைச்சராக ஆகியிருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

பெரியவர்களின் வரலாறுகளை நாம் புறக்கணிக்கக்கூடாது. கலைஞர் அவர்களின் வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் பத்திரிகையில் நெஞ்சுக்கு நீதி என்று தமது வரலாற்றை எழுதி வருகிறார். கொஞ்சம்தான் எழுதியிருக்கிறார். ருசிகரமாக இருக்கிறது. அவரது வரலாற்றைப் படிக்கும்போது அதிலுள்ள கருத்துக்கள் நம்பிக்கை ஏற்படுத்தும் நிலையில் இருக்கிறது. அவர் எப்படியெல்லாம் வாழ்ந்திருக்கிறார் என்பது அதில் தெரிகிறது.

கலைஞர் எவ்வாறு வாழ்க்கையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறார் என்பதும் விளங்குகிறது. கலைஞர் பெரும் அரசியல்வாதியாக இருக்கிறார். கலையைப்பற்றி அரசியல்வாதிகளுக்கு அவசியம் தெரிய வேண்டும்.

கலைஞரின் வாழ்க்கையைக் காணுகிறபோது வாழ்க்கையில் அவர் தனது திறனால், ஆற்றலால், முயற்சியால், புத்திக்கூர்மையால் அவர் இன்று உயரியபதவியை அடைந்திருக்கிறார். முயற்சியோடு காரியங்களில் ஈடுபட்டால், சீரியமுறையில் ஈடுபட்டால், உழைத்தால் முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை நமக்கு ஊட்டுகிறார்.

அவர் முதலமைச்சராக இருப்பதால் மட்டுமல்ல; நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோதே எனது கவனத்தைக் கவர்ந்தவராக இருந்தார். எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோதே அவரது திறன் தெரிந்தது. நான் உள்ளூர பாராட்டியிருக்கிறேன்; ஏன்? வெளிப்படையாகவும் சிலசமயம் பாராட்டியிருக்கிறேன்.

ஆளுங்கட்சியிலே இருந்த எங்களை எப்படி மாட்டி வைக்க வேண்டும் என்ற முறையில் பேசுவார். கடுமையாகத் தாக்கிப் பேசினாலும் அதில் அவரது ஆற்றல் இருக்கக் கண்டேன். இன்று அப்படிப்பட்டவரே முதலமைச்சராக இருக்கக் காண்கிறேன்.

தி. மு. க.வில் வேற்றுமை இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. கருத்து வேற்றுமைகள் கட்சிக்குள் இருந்ததாகக் கருதப்பட்ட நிலையில் கலைஞர் கருணாநிதி அந்தப் பூசலைத் தீர்த்து விட்டார். எப்படி என்றால் அவர் விட்டுக் கொடுத்திருக்கிறார். விட்டுக் கொடுத்திருப்பது அவரது பெருந்தன்மையைக் காட்டு கிறது" என்ற அளவிற்குப் பாராட்டினார்.

இப்படி என்னைப் பாராட்டியவர்கள் இடமாற்றத்தின் காரணமாகவோ அல்லது கருத்து மாற்றங்களின் காரணமாகவோ சில சமயங்களில் என் மீது மறைமுகமாகவோ அல்லது நேரடி யாகவோ தாக்குதல் கணைகளைத் தொடுத்திட்டபோது முன்பு அவர்கள் என்னை வாழ்த்திப் போற்றியதை நினைவுகூர்ந்து அவர் களிடம் தனிப்பட்ட முறையில் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொள்வதிலிருந்து நான் விலகிச் சென்றதே கிடையாது.



# 24

## ஆகஸ்ட் திங்களில்!

"தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு!" இந்தப் பாடல் ஒலிக்காத இடமில்லை. அந்தப் பாடலை இயற்றிய தேசியக் கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் மேலவை உறுப்பினராகவும், அரசவைக் கவிஞராகவும் இடம் பெற்றிருந்தார்.

கழக ஆட்சியின்போது அவர் குடும்பம் சற்று சிரம நிலையில் இருந்தது என்பதையறிந்து நான் அவரது வாழ்நாள் முழுதும் மாதம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய் உதவித் தொகை தமிழக அரசின் சார்பில் அளிக்கப்படும் என்றும் அந்த ஆணை 1967 ஆகஸ்ட் மாதம் முதலே நடைமுறைக்கு வரும் என்றும் அறிவித்தேன்.

அதுகுறித்து நாமக்கல் கவிஞருக்கும் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் எழுதிய நன்றிக்கடிதம் இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக பதிந்திருக்கிறது.

"மெய்யன்பரே,

அன்பு ததும்பும் தங்களுடைய கடிதம் வந்தது. அறிக்கையை தாங்கள் வெளியிட்ட அன்று மாலையிலேயே அது ரேடியோவில் சொல்லப்பட்டதைக் கேட்ட பல நண்பர்கள் என் வீட்டிற்கு ஓடிவந்து தங்களையும் என்னையும் வானளாவப் புகழ்ந்து பாராட்டினார்கள். நான் பூரித்துப் புளகாங்கிதமடைந்தேன். தங்கள் அன்பே அன்பு. பெயரளவில் மட்டுமல்ல; தாங்கள் செயலிலும் கருணையின் நிதியே! தாங்கள் முதலமைச்சரானது முதல் கருணைமிக்க காரியங்களையே செய்திருக்கிறீர்கள். தங்களுடைய ஆட்சிக் காலம் சரித்திரத்தில் பொற்காலமாக விளங்கும். நான் அதைக் கவிதையில் பாடுவேன். தாங்கள் அண்ணா அவர்களின் மேலான குறிக்கோள்களைச் செயலாக்கி வருவதை மனமார வாழ்த்துகிறேன். நீடூழி வாழ்க.

தங்கள் அன்புள்ள,
வெ. ராமலிங்கம்.

இவ்வாறு கடிதம் எழுதிய நாமக்கல்லார் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் என்னிடமும் கழக அரசிடமும் நன்றியுணர்

வோடு விளங்கினர். அவருக்கு உதவிப் பணம் அளிக்க அரசு முன்வந்த செய்தியைக் கண்ட முத்தமிழ் கலாவித்வ ரத்ன அவ்வை டி. கே. சண்முகம் அவர்கள் இதுபோன்ற உதவியை பாரதியாரின் நண்பர், பரலி சு. நெல்லையப்பருக்கும் வழங்கினால் நலமாக இருக்கும் என்று எனக்கு ஒரு மடல் எழுதியிருந்தார். அதனையொட்டி பரலி சு. நெல்லையப்பருக்கு அவரது ஆயுட் காலம் முழுவதும் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் அரசின் சார்பில் வழங்குவதென ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதற்கு பரலி சு. நெல்லையப்பர் எழுதிய கடிதத்தில் ''தமிழகத்தின் தலைமை அமைச்சர் பெருமானுக்கு, வணக்கம். எண்பது வயது கொண்ட எனக்கும், என்னிலும் ஒரு வயது மூத்தவரான நாமக்கல் கவிஞருக்கும் அன்புகூர்ந்து உதவி யளிக்க முன்வந்த தமிழக அரசினர்க்கு எனது மனமார்ந்த நன்றி சிறப்பாக தங்கட்கும் ஏனைய அமைச்சர்கட்கும் எனது பெரு நன்றி. எனது கண்பார்வை சீர்கெட்டிருப்பதாலும், உடல் நலம் இன்மையாலும் நான் நேரில் வந்து என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிக்க இயலவில்லை'' என்று குறிப் பிட்டிருந்தார்.

ஆளுநர் நியமனத்தின் வாயிலாக மேலவை உறுப்பினர் பதவி வகித்து வந்த முன்னாள் முதல்வர் ஓ. பி. ராமசாமி ரெட்டி யார் அவர்கள் தனது உடல்நிலை காரணமாக பதவியிலிருந்து விலகியதால் ஏற்பட்ட காலி இடத்திற்கு யாரை நியமிக்கலாம் என்ற கேள்விக்குறி எழுந்தது.

ஒருநாள் கடற்கரை வெண்மணற்பரப்பில் நானும் அமைச்சர்களும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு நாளும் அமைச்சர்களுடனும், கழக முன்னணித் தலைவர்களுடனும் நீண்ட நேரம் கலந்துரையாடும் இடமாக கடற்கரை இருந்தது. அமைச்சரவையில் எடுக்கப்பட வேண்டிய பல முடிவுகளுக்கு கடற்கரையில் நடைபெறும் விவாதத்திலே முன்னுரை எழுதப்படும்.

அந்தக் கடற்கரை கருத்தரங்கிலேதான் மேலவை உறுப் பினராக யாரை நியமிக்கலாம் என்பது குறித்த எனது எண்ணத்தை அமைச்சர்களிடமும், கழக முன்னணியினரிடமும் வெளியிட்டேன்.

குன்றக்குடி அடிகளாரை மேலவை உறுப்பினராக நியமித் தால் என்ன என்ற கேள்வியை நான் எழுப்பியதும். அங்கிருந்

தோர் அனைவரும் சற்றுநேரம் அமைதியாயினர். அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பு அடங்குவதற்குச் சிறிது நேரமாயிற்று! அடிகளாரா? அந்தப் பதவியை ஏற்றுக் கொள்வாரா? என்றெல்லாம் கேட்டனர்.

தமிழுக்குத் தொண்டு செய்யக் கூடிய ஒருவர் மேலவையிலே வீற்றிருப்பது பல நல்ல அறிவுரைகளை அவரிடமிருந்து இந்த அரசு பெறுவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே அவர் மறுத்தாலும் அவரை எப்படியும் அந்தப் பதவியை ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

எனது கருத்தை அறிந்த அடிகளார் முதலில் சற்றுத் தயங்கினார் என்றாலும் பிறகு ஒப்புதல் அளித்தார். அவரை மேலவை உறுப்பினராக ஆளுநர் நியமித்த அறிவிப்பு வெளி வந்ததும் தமிழ்நாடே ஆச்சரியக் கடலில் மூழ்கியது.

குன்றக்குடி ஆதீனகர்த்தராக இருந்தாலும், ஆத்திகப் பற்று உடையவராக விளங்கினாலும் பெரியாரும், அண்ணாவும் ஆழமாக எடுத்துச் சொன்ன இனமான உணர்வில் அடங்காத ஆர்வம் படைத்தவராக அவர் விளங்கியது ஒன்றே அவர்பால் எனக்குள்ள அன்பைப் பெருக்கியது.

அவரது நியமனம் கேட்டு தர்மபுரம் ஆதீனகர்த்தர் எனக்கு ஒரு பாராட்டு மடல் எழுதியிருந்தார். அதில் "பேசுதல் யார்க்கும் எளிது. ஆனால் அதனைச் செயலில் நிறைவேற்றுவதில் தான் தனித் திறமை வேண்டும். அந்த வழியில் நமது தமிழகம் தங்கள் நல்லாட்சியில் பல முன்னோடித் திட்டங்களை பலரும் பாராட்டும் வகையில் செயல்படுத்தி வருகிறது. நமது தமிழக மடாதிபதி குன்றக்குடி அடிகளார் சட்டமன்ற மேலவையில் இடம்பெற வாய்த்ததை அத்தொடரில் ஒன்றெனப் பலரும் மதிக்கிறார்கள். பொதுமக்கள் பலரும் பாராட்டும் செயலாகவும் உள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார்.

தன்னை மேலவை உறுப்பினராக நியமித்தது குறித்து, குன்றக்குடி அடிகளார் அவர்கள் நன்றி தெரிவித்து எழுதியுள்ள பாராட்டுக் கவிதையினை இங்கே நான் நினைவூட்டுவது என்னைப் பாராட்டினார் என்பதற்காக அல்ல; அவரது தமிழ் உள்ளத்தை தமிழர்கள் உணர்ந்திட வேண்டும் என்பதற்காகத்தான்!

இதோ அந்தக் கவிதை:

தமிழில் தோய்ந்து தண்ணளி பெற்ற
இனிய கலைஞ! நின்றன் கொற்றம்
வழங்கிய சிறப்பில் மலர்ந்தன இவையே!
வாழும் நெறியினை வகுக்கும் வள்ளுவம்
கோல உலகில் குடிநின் றுயர
பருவம் மடிமா னம்பா ராமல்
குடிசெய் கென்றே குரல் கொடுத்தது!
அக்குரல் தனக்கே அரும் இலக் கியமாய்
வாழ்ந்து வேறுபா டின்றி இனநலம்
கருதிக் கங்கு கரையிலா அன்பு
பொழிந்த பேரறிஞர் அண்ணு கண்டோம்.
வாழுதல் கலையென மொழிந்தான் வள்ளுவன்
வள்ளுவன் நெறியும் அண்ணு நெறியும்
வாழும் வகைக்கிரு கால்களாம் என்றே
கொண்ட கொண்டல் கொழிதமிழ்க் கலைஞர்
புதிய புறநா னூற்றைப் படைக்கும்
புரவலர்! புரவலர் புரவல ராக
இருப்பதோ டன்றி இணையில்கா லத்தையும்
வென்று நிற்கும் வியன்மிகு கவிஞராய்
நிரந்தினி துரைக்கும் நீர்மைநா வலராய்
ஏற்றம் மிகுந்த எழுத்தாள ருமாய்
நாடொறும் நாடி நலம்புரி அமைச்சாய்
நெஞ்சில் பழக்கச் செஞ்சால் உழுது
அன்பெனும் வித்திட் டாரத் துய்த்திடும்
அருமைக் கலைஞர் நமைமே லவையில்
இருக்கச் செய்தது என்ன் கருதியோ?
நெடிய நேரம் நினைந்த பின்னும்
புலப்பட வில்லை; புலப்பட வில்லை!
நமது ஆ தீனம் அஃதண் ணுமலை
ஆதீ னம்ஆம் அண்ணு என்ற
முதன்மைச் சொல்லில் மூண்ட காதலோ?
பேசும் மொழியால் பெட்புறு நெறியால்

தமிழ இனத்தைச் சார்ந்தது கருதியோ?
குன்றக் குடியைக் குன்ற விடாமல்
நின்று விளக்கிட நினைத்தோ? இவரை
ஏற்றிப் பார்க்கலாம் என்ற எண்ணமோ?
ஒதுங்கி மடத்தில் உட்கார்ந் தவரை
மன்றில் நிறுத்தி வேடிக்கை பார்க்கவோ?
பிறந்த மொழியைப் பயின்றநாள் தொட்டுத்
தொண்டு நெறியின் சுவைதே றியநீ
நம்மையும் தொண்டு நெறியில் நடாத்தித்
தூண்ட கருதியோ? தொன்மைச் சிறப்பின்
தாரணி புகழும் தஞ்சை மண்ணிடை
ஒருங்கே பிறந்தோம் எனும்பா சத்திலோ?
சென்ற நாட்களில் சிலதுறை யேற்றுத்
தொண்டு செய்ததில் தொடர்ந்த துன்பத்தை
கண்டு களைந்திடுங் கருத்தது தானோ?
தமிழ்மொழித் துறையில் தக்கபே ரறிவ
இல்லை யெனினும் எழிற்றமிழ்ப பற்று
மிக்கோர் என்னும் விரிந்த கருத்திலோ?
இழிசா தியெனக் கிடந்தநம் இனத்தை
ஏற்ற முறச் செய் பெரியார் எம்மிடைக்
கொண்ட பாசம் குறித்து நினைத்ததோ?
ஏதுவென அறியோம்! யாது செய் வதென
விளங்கவு மில்லை! வேண்டுவ தொன்று
இன்றே போல்க, உமது கேண்மை!
தாங்கு புகழார் தரணிக்கு நீசெய்யும்
பணிக்குடன் நிற்கும் வாய்ப்பளித் தமைக்கு
உளமார் நன்றி! உவந்துரை செய்தோம்.
எழுபிறப் பும்யாம் எம்முளம் கொள்வோம்
உழுவலன்புத் திறத்தினை வாழ்த்துவோம்.

—இடையிலே அடிகளாருக்கு எத்தனையோ சங்கடங்கள்! நான் ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகன்ற பிறகு அவரும் நானும் சந்திக்க முடியாத இடர்ப்பாடுகள்! அப்படி சந்தித்தால் அவருக்கே எத்தனையோ தொல்லைகள் விளையும். அதனல்

விளம்பரப்படுத்தப்பட்ட சில நிகழ்ச்சிகளில் கூட என்னுடன் அவரால் கலந்துகொள்ள இயலவில்லை. அதற்காக நானோ என்னைச் சார்ந்தவர்களோ அவர் மீது வருத்தம் கொள்வதில்லை. என்னையும் மீறி ஒரு வேளை வருத்தம் என் நெஞ்சைத் தொடுமே யானால் அதனை விரட்டியடிக்க அடிகளார் அப்பொழுது எழுதிய இந்தக் கவிதையை அடிக்கடி எடுத்து நான் படித்துக் கொள்வது வழக்கம்.

அடிகளார் நியமனத்தையும் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டதையும் பாராட்டுகின்ற வகையில் சென்னையில் ஆகஸ்ட் 27-ஆம் நாள் தர்மபுரம் ஆதீனத்தின் சார்பில் ஒரு விழா நடைபெற்றது. அந்த விழாவில் நானும் கலந்து கொண்டேன்

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்புமிகு கே. வீராசாமி அவர்கள் "நமது முதல்வர் ஒரு சாதுவை சட்டமன்றத்திலே கொண்டு வந்து நிறுத்தியிருக் கிறார். அவர் செய்துள்ளது எங்கும் காணாத போற்றத் தகுந்த ஒரு புதுமை. தமிழ்நாடு அரசு எத்தனையோ விஷயங்களில் வேறு யாரும் செய்யாத பல சாதனைகளைச் செய்திருக்கிறது. சமீபகாலத் தில் அடிகளாரை மேலவை உறுப்பினராக ஆக்கியது அந்தச் ா தனைகளில் ஒன்று" எனக் கூறினார்.

நீதிபதி கைலாசம் அவர்களின் துணைவியார் திருமதி சௌந் தரா கைலாசம் தமிழ்ப்புலமை மிக்கவர். அவர் அந்த விழாவில் பேசும் போது,

"அண்மைக் காலத்தில் நாளேடுகளைப் புரட்டினால் மனதை நெகிழச் செய்யும் நல்ல பல செய்திகள் வந்தபடியே இருக் கின்றன. நாமக்கல் கவிஞரையும், பரலி சு. நெல்லையப்பரையும் பாராட்டி அரசு உதவிட முன்வந்த செய்தியினைப் படித்தபோது என் கண்கள் பனித்தன. வாழ்க என்று என் வாயும் மனமும் வாழ்த்தின. வள்ளியம்மைக்கு மணிமண்டபம் கட்டி நினைவுச் சின்னம் எழுப்பும் செய்தியைப் படித்துப் பரவசமடைந்தேன் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வற்றிக் காயுமுன் மறுபடியும் ஒரு நல்ல செய்தி! துறவியர் பெருமான், மேலவை உறுப்பினராகிறார் என்று வந்தது. உள்ளத்துக்கு மகிழ்ச்சி அளிக்கத்தக்க இப்படி எத்தனையோ செய்திகள்! நமது முதல்வர் ஓங்கி உலகளந்த வாமனனைப்போல அடியெடுத்து வைத்து எங்கே பாரதத்துக்குப் போய்விடுவாரோ? தமிழ்நாட்டில் அவரது கவனம் குறைந்து விடுமோ? என்று எண்ணும்படியான நிகழ்ச்சிகளும் செய்திகளும்

மற்ெருரு புறம்! கம்பனும், திருவள்ளுவனும்தான் தமிழுக்குக் கதி என்பார்கள். அந்தக் 'க'வும், 'தி'யும் அவரது பேரிலேயே முதலும் கடையுமாக அமைந்துள்ளன. தமிழ்த் தாயின் செல்லப் பிள்ளை அவர்'' என்று என்னைப் பாராட்டினர்.

அந்த விழாவில் பேசிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள்,

''கழகம் எந்தச் சமுதாயத்தை ஆளுகிறதோ அந்தச் சமுதாயத்தின் பலதரப்பட்ட இயல்புகளையும் மதித்து நடக்க வேண்டும் என்பதை உணர்ந்து செயல்பட்டு வருகிறது'' எனக் குறிப்பிட்டார்.

அவர் சுட்டிக்காட்டியதைப் போலவே எந்தத் தரப்பிலி ருந்து வரும் எத்தகைய பிரச்சினைகளையும் கழக அரசு தனது அணுகும் முறையின் மூலம் மதித்து நடந்ததற்குப் பல சான்றுகள் உண்டு.

சிலம்புச் செல்வரின் தலைமையிலுள்ள தமிழரசுக் கழகத்தின் சார்பில் அதே ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்டு தமிழகம் முழு வதும் ஒரு நாள் கிளர்ச்சி நடத்துவதென்றும், சென்னையில் தொடர்ந்து நடத்துவது என்றும் முடிவெடுத்து அறிவித்திருந்தார்.

அதையொட்டி ஆகஸ்ட் 18-ஆம் நாள் தமிழக சட்டப் பேரவையில் சுதந்திரா கட்சியைச் சேர்ந்த சீமைச்சாமி அவர் களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏ. கே. சுப்பையா அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தனர்.

அந்தத் தீர்மானத்திற்கு பதிலளித்து நான் பேசும்போது,

''தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் நாளை நடத்தப்போகும் சுயாட்சி கிளர்ச்சியையொட்டி ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவும் தேவையில்லை என்று கருது கிறேன். ஆளுங்கட்சியான தி. மு. கழகம் சுயாட்சிக் கொள்கை யில் ஆழ்ந்த அக்கறையும் தீவிர ஈடுபாடும் கொண்டுள்ளது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்பதை நான் டெல்லி சென்றிருந்த போதும், எனது வேறு பல அறிவிப்புகளிலும் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

அதற்கு முன்னல் பொதுப்படையாக மாநில சுயாட்சி என்று கூறிடாமல் என்னென்ன அதிகாரங்கள் நமக்குத் தேவை

என்று நமக்கு நாமே தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதற்கென ஒரு குழு அமைத்திடல் வேண்டும். அந்தக் குழுவில் இந்தக் கருத்துக்களை ஒத்துக்கொள்கிற அரசியல் கட்சியினர் மட்டுமல்லாமல் அரசியல் சட்ட நுணுக்கங்களைப் புரிந்து வரையறுத்துக் கூறக்கூடிய நிபுணர்களும் இடம்பெறல் வேண்டுமென்று கூறியிருந்தேன்.

அந்த அடிப்படையில் மூவர் குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது. மாநிலங்கள் தன்னாட்சி பெறும்வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை எந்தெந்த வகையில் திருத்தலாம் என்பது குறித்து மூவர் குழுவினர் தெரிவிப்பார்கள். அக் குழுவின் தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பி. வி. ராஜமன்னார் இருப்பார். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஏ. லெட்சுமணசாமி முதலியார், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி பி. சந்திரா ரெட்டி ஆகியோர் அக்குழுவில் இடம் பெறுவர்.

மூவர் குழு அறிக்கை வந்ததும் எல்லா கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு காங்கிரஸ் அல்லாத முதல்வர்களையும், காங்கிரஸ் முதல்வர்களையும் கலந்துகொண்டு அவர்களது நல்லாதரவைத் திரட்டுவோம். பிரச்சாரம் செய்வோம்; வாதாடுவோம்; வாதாடிப் பயனில்லையாயின் போராடுவோம்'' என உறுதியளித்து திரு. ம. பொ. சி. அவர்களுக்குப் போராட்டத்தைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்தேன்.

அதன்பேரில் அவர் சென்னையில் தொடர்ந்து போராட்டம் நடைபெறாது என்று கூறி ஒரு நாள் அடையாளபூர்வமாக மட்டும் நடத்துவதாகச் சொன்னார்.

நான் முதல்வர் பொறுப்பை ஏற்ற பிறகு முதன்முதலாக நடைபெற்ற சுதந்திர தின விழாவில் அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ள வேண்டுமென்று விரும்பினேன். கட்சிகளின் சார்பில் தனித் தனி சுதந்திரதினக் கூட்டங்கள், விழாக்கள் அன்றைய தினம் நடைபெற்றாலும்கூட எல்லாக் கட்சியினரும் ஒருசேர அணிவகுத்து விடுதலை நாளுக்கு விழாவெடுக்கும் நிலைமையினை அரசாங்கத்தின் சார்பில் உருவாக்கும் நோக்கத்துடன் ஆகஸ்ட் 15 சுதந்திர நாள் விழாவினை தலைமைச் செயலக கோட்டை முகப்பில் தமிழக அரசின் சார்பில் மாலை 7 மணி அளவில் கொண்டாடுவது என்றும் அந்தக் கூட்டத்தில் அனைத்துக்கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவதென்றும் முடிவெடுத்து அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

எனது அழைப்பையேற்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருத்திருமன், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., ஏ. கே. சுப்பையா, ஏ. ஆர். மாரிமுத்து, கே. ஆர். நல்லசிவம், ஏ. பாலசுப்ரமணியம், பி. கே. மூக்கையா தேவர், காரைக்குடி சா. கணேசன், எஸ். எஸ். ராமசாமி படையாச்சியார் ஆகிய பல்வேறு கட்சித் தலைவர்களும் அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர்கள்.

''இன்றைக்காவது ஒரு நாள் வெவ்வேறு மேடைகளில் ஒருவரையொருவர் ஏசிப் பேசிக் கொண்டிராமல் ஒரு மேடையில் அனைவரும் சந்தித்து விடுதலை விழா எடுப்போம் என்ற ஆசை யோடுதான் இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளோம். டெல்லிப்பட்டணத்தில் பிரதமர் நிகழ்த்துகின்ற விடுதலை நாள் விழா உரையினை பத்திரிகைகளில் படிக்கிறோம். விழா நிகழ்ச்சி களை படங்களில் பார்க்கிறோம். இனி விடுதலை நாள் விழாவின் போது இந்தியப் பிரதமர் ஆண்டுக்கு ஒரு மாநிலமாக வர வேண்டும். அந்த மாநிலத் தலைநகரங்களில் பிரதமர் கலந்து கொள்கின்ற விடுதலை நாள் விழா நடைபெற வேண்டும்" என்று அந்த விழாவில் எனது கருத்தினை வெளியிட்டேன்.

தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் இப்படி எல்லா கட்சியினரும் கலந்து கொண்டு தலைமைச் செயலக கோட்டை முகப்பில் விழா நடத்துவதற்கு இயலாமல் போயிற்று!

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15-ல் மாநில தலைநகரங்களின் தலைமைச் செயலகத்தில் தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றுவது வழக்கமாக இருந்தது. அந்தக் கொடியேற்றும் உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்கு ஏன் அளிக்கப்படக் கூடாது என்று நான் டெல்லிக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதியதாலும் நேரிலே சென்று வாதாடியதாலும் இனி ஜனவரி 26 குடியரசு தின விழாவில் மட்டும் கவர்னர் கொடி யேற்றுவது என்றும், ஆகஸ்ட் 15 விடுதலை நாள் விழாவில் முதலமைச்சர்களே கொடியேற்றுவதென்றும் தமிழ் நாட்டிற்கு மாத்திரமல்லாமல் எல்லா மாநிலங்களுக்கும் உரிமை வழங்கப் பட்டது.

எங்கே சந்து பொந்து கிடைக்கும், நுழைந்து விடலாம் என்று எதிர்பார்த்திருக்கும் இந்தி தணிக்கைச் சான்றிதழில் தலை நீட்டியது 69 ஆகஸ்ட் மாதத்தில் தான்! ஒரு தமிழ்த் திரைப்படம் தணிக்கை செய்யப்பட்டு, அதற்கு சான்றிதழ் வழங்கிய அதிகாரிகள் அதனை இந்தி மொழியில் படத்தயாரிப்பாள

ரிடத்தில் கொடுத்தார்கள் அந்தத் தகவல் எனக்குக் கிடைத்தவுடன் இந்தியப் பிரதமருக்கு அவசரத் தந்தி ஒன்று அனுப்பினேன்.

"தமிழ்த் திரைப்படங்களுக்கு மத்திய தணிக்கைக் குழு முன்பு தந்தது போல ஆங்கிலத்தில் சான்றிதழ் தராமல் ஆங்கிலத்திலும், இந்தியிலும் சான்றிதழ் தரும் முடிவு கண்டு எனது வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை இருந்து வந்த நடைமுறையை மாற்றியமைப்பது விரும்பத்தக்கதல்ல. இந்த நடவடிக்கை திரைப்பட உலகில் மட்டுமல்லாமல், தமிழக மக்களிடையேயும் மாபெரும் மனக்கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தக்க சமயத்தில் தலையிட்டு தற்போது நடைமுறையில் இருப்பதையே (ஆங்கில சான்றிதழ் தருவதையே) மீண்டும் அமுலாக்கிட விரும்புகிறேன். பிரதமர் உடனடியாக இதில் தலையிட்டு அக்கறை செலுத்தி ஆங்கிலத்தில் மட்டுமே சான்றிதழ் தரும் நடைமுறையினை மேற்கொள்ள உத்தரவிட தமிழக அரசின் சார்பில் உறுதியாக வலியுறுத்துகிறேன்."

எனது தந்தியின் விளைவாக மறுநாளே டெல்லியிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலத்திலேயே சான்றிதழ் வழங்குமாறு, மத்திய பிலிம் தணிக்கை போர்டு தனது பிராந்திய போர்டுகளுக்கு உத்தரவிட்டது.

# 25

## களம் காண்பதிலும் கடமையாற்றுவதிலும்!

எனது வாழ்க்கைக் குறிப்புகளின் தொகுப்பில் ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ந்து நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பொழுது சிலவற்றை முன்னேக்கிச் சென்று நினைவூட்டி விட்டு அதன் தொடர்பான நிகழ்ச்சிகளைப் பின்னேக்கித் திரும்பிப் பார்த்துச் சுட்டிக்காட்ட வேண்டியவனுக இருக்கிறேன்.

இந்தியாவில் 1977-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு மொரார்ஜி தேசாய் அவர்கள் தலைமையில் ஜனதா ஆட்சி உருவாயிற்று. அந்தத் திருப்பம் ஏற்படுவதற் காக அமைந்த காரணங்களை பின்னர் விவரிப்பேன்.

மொரார்ஜி அவர்களின் இரண்டரை ஆண்டு கால ஆட்சி யின் இடையில் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்கும் முயற்சியில் அவர் வேகமாக ஈடுபடலானுர். அப்பொழுது தி. மு. கழகம் ஆட்சியில் இல்லை. தமிழகச் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தது.

"இந்தி எதிர்ப்பு போராட்டம் என்பது எதுவானுலும் அது செத்துவிட்ட குதிரையை எழுப்புவதற்கு சமமாகும். ஒவ்வொரு தேசபக்தனும் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தி கற்றுக் கொள்வதைக் கட்டாயமாக்கும் சட்டம் எதுவுமில்லை என்ருலும் தேசபக்திக்கு இந்தி படிப்பது கட்டாயமானது" என்று மொரார்ஜி தமிழ்நாட்டிற்கே வந்து நிருபர்கள் கூட்டத்தில் பேசினுர் 1938முதல் இந்தி எதிர்ப்பு போர்க்கனலை அணையாமல் காப்பாற்றி வருகின்ற கழகம் அவரது பேச்சுக்கும், செயலுக்கும் எதிர்ப்புக் காட்டத் தொடங்கியது.

திருச்சியில் 1978-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23,24 ஆகிய தேதிகளில் தி. மு. கழகத்தின் சார்பில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு முன்னுள் சட்டப் பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் தலைமை ஏற்ருர். நாடாளு மன்ற உறுப்பினர் வை. கோபால்சாமி மாநாட்டைத் திறந்து வைத்தார்.

மாநாட்டின் இரண்டாம் நாள் மாலை மழை கொட்டிய போதிலும் அந்த மழையில் நனைந்துகொண்டு சேற்றில் நின்று

கொண்டு இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மாநாட்டின் உணர்ச்சிமிக்க உரைகளைக் கேட்டனர். இந்தித் திணிப்பு எதிர்ப்பு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

இந்தி எதிர்ப்பு குறித்து மொரார்ஜி தேசாய் பேசிய கேலிக்கும் கண்டனத்திற்கும் கூட தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். எதிர்ப்பு தெரிவிக்காதது மட்டுமல்ல, "சட்டப்படி இந்தி திணிப்பில்லை என்று பிரதமரே (மொரார்ஜி தேசாய்)கூறிவிட்டார். இந்தித் திணிப்பு இல்லாதபோது, இந்தி எதிர்ப்பும் இல்லை; எனவேதான் மொரார்ஜி இந்தி எதிர்ப்பு செத்த குதிரை என்று சரியாகத்தானே சொல்லியிருக்கிறார்" என்று, அவர் பேசியது சரிதான் என்பதைப் போல வக்காலத்து வாங்கிப் பேசினார்.

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர் அவர்கள் இந்தித் திணிப்பு குறித்து ஒரு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார். அதுபற்றிய தீர்மானம் ஒன்று அரசின் சார்பில் சட்டப்பேரவையிலே விரைவிலே கொண்டுவரப்படும் என்று சொன்னார். ஆனால் அப்படி ஒரு தீர்மானம் அவர் குறிப்பிட்டதைப்போல கொண்டுவரப்படவில்லை என்பது அனைவரும் அறிந்ததாகும்.

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். விவகாரத்தில் இது ஒன்றும் புதிதல்ல. அண்மையிலேகூட இலங்கைப் பிரச்சினையில் தீவிரம் காட்டிய தமிழ்நாட்டுத் தலைவர்களின் போக்கு முட்டாள் தனமானது என்று பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் ஒரு கூட்டத்தில் பேசியதைக் கண்டிப்பதற்குப் பதிலாக அவர் எந்தச் சூழ்நிலையில் பேசினார் என்ற வகையில்தான் அதனை மூடி மறைக்க தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். முற்பட்டார் என்பதை நாடு அறியும்.

இதே பாணியில்தான் அன்றைக்குப் பிரதமர் மொரார்ஜியின் பொறுப்பற்ற பேச்சுக்கு முதலமைச்சர் எம். ஜி. ஆர். ஆமாம் போடக்கூடிய சூழ்நிலையிலே இருந்தார்.

இந்தியை எதிர்ப்பதில் பல போர்க்களங்களைக் கண்ட வரலாற்றுக்குரிய தி. மு. கழகம் திருச்சி மாநாட்டிலே எடுத்த முடிவிற்கிணங்க தமிழகம் முழுவதும் 26-1-1979 அன்று ஒரு நாள் மாபெரும் இந்தித் திணிப்பு எதிர்ப்பு கண்டனப் பேரணிகளை நடத்தியது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அனைவரும்

அன்றையதினம் கறுப்புச் சட்டை அணிந்து ஒவ்வொரு ஊரிலும் பல்லாயிரக்கணக்கில் கழக முன்னோடிகளின் தலைமையில் பேரணி நடத்தி இந்தித் திணிப்புக்குத் தமிழகம் ஒருபோதும் இடம் தராது என்பதை இமயம் முட்ட எடுத்து இயம்பினோம்.

சென்னையில் என்னுடைய தலைமையிலும், கோவையில் பேராசிரியர் தலைமையிலும், திருச்சியில் சாதிக் தலைமையிலும், மதுரையில் துணைப் பொதுச் செயலாளராக இருந்த ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமையிலும் இந்தப் பேரணிகள் நடைபெற்றன.

கழகம் ஆட்சியில் இருந்த போது இந்தித் திணிப்பு எதிர்ப்பை நனைந்து போக விட்டுவிடவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக கடந்த அத்தியாயத்தில் திரைப்பட தணிக்கை சான்றிதழில் இந்தி புகுத்தப்பட்டதை அரசின் சார்பில் நான் எதிர்த்ததையும், மத்திய தணிக்கைக் குழு உடனடியாக திருத்திக் கொண்டதையும் குறிப்பிட்டிருந்தேன்.

அதைப்போல "பிராந்தியச் செய்தி" என்று வானொலியில் சொல்லப்பட்டது "மாநிலச் செய்தி" என்று மாற்றப்பட்டதும், "ஆகாஷ்-வாணி" என்பது "வானொலி" என்று மாறியதும் கழக ஆட்சி எடுத்த முயற்சிகளின் விளைவுகளேயாகும்.

1968-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது தமிழ்நாடு தேசிய மாணவர் பயிற்சிப் படையில் (என். சி. சி.) இந்தி கட்டளைச் சொற்கள் பயன்படுத்தப்படும் வரையில் அந்தப் படையே ரத்து செய்யப்படும் என்று அறிவித்திருந்தார் அல்லவா, அதன்படி என். சி. சி. தமிழகத்தில் செயல்படாமலே இருந்து வந்தது. அதை மீண்டும் செயல்பட வைக்க வேண்டுமென்று மத்திய அமைச்சர்கள் என்னிடம் வற்புறுத்தி வந்தார்கள்.

தமிழ்நாட்டில் என். சி. சி. படை மீண்டும் துவக்கப்பட வேண்டுமென்றால் கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டுமென்று தமிழக அரசின் சார்பாக நான் தெரிவித்தேன். அந்த நிபந்தனையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு விட்டதாக 1969 செப்டம்பர் திங்களில் தமிழகம் வந்த மத்திய அரசின் துணை அமைச்சர் எம். ஆர். கிருஷ்ணா அவர்கள் என்னிடமும் அன்றைய கல்வி அமைச்சர் நாவலரிடமும் தெரிவித்தார்.

இப்படி அடிக்கடி சந்து பொந்துகளில் தலைநீட்டிப் பார்ப்பதும், தமிழர்கள் ஏமாந்து விடவில்லை, விழிப்போடுதான் இருக்

கிளர்கள் என்பதை உணர்ந்து பதுங்கியோடுவதும் இந்தித் திணிப்பின் வரலாறாக இருந்து வருகிறது.

வெளிப்படையாக இல்லாமலும் ஆனால் அதே நேரத்தில் எப்படியும் புகுந்து ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்கிற எண்ணத்தோடு மறைமுகமாகவும் தமிழர்களை இந்தித் திணிப்பின் மூலம் இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கும் முயற்சி இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

இவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற கழகத்தின் உறுதியான நிலைமையை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் முன்னிலையில் நான் திட்டவட்டமாக எடுத்துக் கூறினேன். அப்படிக் கூறிய அந்த நிகழ்ச்சி தமிழகச் சரித்திரத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். எழுச்சியுடன் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். தமிழகமே திரண்டு வந்து நடத்திய நிகழ்ச்சியாகும்.

அந்த நிகழ்ச்சிதான் அறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப் படங்கள் இரண்டை சென்னை ராஜாஜி மண்டபத்தின் முன்னால் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சியாகும்.

சட்டப்பேரவையிலே வைப்பதற்காக ஒரு படத்தையும், ராஜாஜி மண்டபத்திலே வைப்பதற்காக ஒரு படத்தையும் 1969 அக்டோபர் 6-ஆம் தேதி மாலையில் பிரதமர் இந்திரா காந்தி திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சிக்கு நான் தலைமையேற்றிருந்தேன். ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் முன்னிலை வகித்தார். அண்ணா அவர்களால் "கொடுமுடி கோகிலம்" எனப் பாராட்டப்பட்ட திருமதி கே. பி. சுந்தரம்பாள் அம்மையார் அவர்கள், படத் திறப்பு விழா தொடக்கத்தில் நான் எழுதிய அண்ணா வணக்கப் பாடலைப் பாடினார்கள். அண்ணா அவர்களின் திரு உருவப் படங்களை எழுதித் தந்த ஓவியர் மாதவன் அவர்களுக்கும், ஓவியர் ஈஸ்வரன் அவர்களுக்கும் பிரதமர் இந்திரா காந்தி தமிழில் கையெழுத்திட்டு தமிழக அரசின் சார்பில் சான்றிதழ்களை அளித்தார்.

"பதினான்கு வங்கிகளை நாட்டுடைமையாக்கிய பெரும் புகழோடு வந்திருக்கிறீர்கள்; அதற்கு அடையாளமாக தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் பதினான்கு பொருள்களைப் பரிசாகத் தருகிறேன்" என்று கூறி பிரதமரிடம் வழங்கினேன்.

அந்த மேடையில் நான் உரையாற்றும்போது "கடந்த பல மாதங்களுக்கு முன் இதேபோன்ற ஒரு ஆறும் தேதி, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டினுடைய கவர்னர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு இந்த நீண்ட நெடிய படிக் கட்டுகளில் இறங்கி வந்து கீழே ஆயிரக் கணக்கில் நின்று கொண்டிருந்த ஏழையெளிய மக்களுடைய அன்புக் கரங்களை எல்லாம் தழுவி அவர்களுடைய விழிகளிலே சங்கமமாகி இதயங் களோடு கலந்து தமிழகத்தினுடைய நல்வாழ்த்துக்களைப் பெற்றுத் தமிழக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். எட்டு மாதங் களுக்குமுன், நம்மைவிட்டுப் பிரிந்தபோதும் இதே இடத்தில்தான் நமக்கெல்லாம் கடைசியாக தரிசனம் கொடுத்துக் கொண்டிருந் தார்.

அந்த இடத்தில் இன்று அந்தத் தலைமகனுடைய திரு உருவப் படத்தை, நம்மையெல்லாம் 'தம்பீ, தம்பீ' என்று அழைத்து வாழ்த்திய அந்தப் பெருமகனுடைய திரு உருவப் படத்தைத் திறந்து வைப்பதற்காக இந்தியாவின் பிரதமர் வருகை தந்துள்ளமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் வளர்த்த கழகத்தினுடைய ஆட்சி அவரது மறைவிற்குப் பிறகு நிலைக்குமா, நீடிக்குமா என்று இங்கிருக்கின்ற சிலர் மட்டுமல்ல, டெல்லிப் பட்டணத்தில் அமர்ந்திருக்கின்ற பிரதமர் அவர்களே, நீங்கள்கூட சந்தேகப் பட்டிருக்கலாம். ஆனால் எங்கள் அண்ணன் அவ்வளவு சொத்தை சோடை அல்ல. எங்கள் அண்ணன் தனக்குப்பிறகு ஒரு பெரிய பாரம்பரியத்தை உருவாக்கி வைத்திருக்கிறார் என்பதற்குச் சாட்சி தான் நீங்கள் காணுகின்ற இந்த மக்கள் வெள்ளமாகும்.

ஆகவே அண்ணன் உருவாக்கிய கழக ஆட்சி தமிழ்நாட்டி னுடைய பண்பாட்டை, தமிழ்நாட்டினுடைய பாரம்பரியத்தைக் காப்பாற்றுவது மாத்திரமல்லாமல், பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நாங்கள் உங்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதைப் போல மத்திய அரசோடு உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்தில் என்றென்றும் உரிமைக் குரல் கொடுக்கத் தவற மாட்டோம் என்பதையும் உங்கள் முன்னிலையிலேயே நான் எங்கள் அண்ணன் தந்த பெருமிதமான உணர்வோடு சொல்லிக் கொள்கிறேன்" என்று நிலைகுலையா உறுதியுடன் அந்தக் கூட்டத் தில் தெரிவித்துக் கொண்டேன்.

கழகம் என்றால் என்ன என்பதையும் அண்ணாவின் மீது தமிழக மக்களுக்குள்ள அன்பையும் புரிந்து கொள்ள அந்த

விழா அம்மையாருக்கு உதவியது என்றால் அப்பொழுது நான் ஆற்றிய உரையிலேயிருந்து நான் எப்படிப்பட்டவன் என்பதையும் அம்மையார் புரிந்து கொள்ள வழிவகுத்தது என்றே நான் கூறுவேன்.

''இதுகாறும் கண்டிராத அளவில் ஈடற்ற பேரழகோடு கூடிய வரவேற்பை திங்களன்று மாலை பிரதமர் இந்திரா காந்திக்கு ஏற்பாடு செய்ததின் மூலம் திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் பெயரைத் தட்டிச் சென்று விட்டார். காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை நகரில் ஞாயிறு அன்று காமராஜர் அவர்கள் ஏற்பாடு செய்த பிரம்மாண்டமான ஊர்வலத்தையும், திங்கள் அன்று திரு அண்ணாதுரை அவர்களின் திரு உருவப் படங்களைத் திறக்க வந்த இந்திரா காந்திக்கு கருணாநிதி தந்த பேரழகு வாய்ந்த வரவேற்பையும் ஒப்பிட்டுப் பேசுவதில் பொதுமக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

அரசினர் தோட்டம் முழுவதும் எழில் ததும்ப அலங்கரிக்கப்பட்டிருந்தது. பேரொளி பாய்ச்சும் விளக்குகள் - சின்னஞ் சிறு வண்ண மின்விளக்குகள் எங்கணும் பரவி அந்தத் தோட்டத்தை ஒரு தேவலோகமாக மாற்றிவிட்டன. கலை அழகும், கம்பீரமும் நிறைந்த வளைவுகள் எழும்பூர் நிலையத்திலிருந்து அரசினர் தோட்டம்வரையில் வழியெங்கும் அமைக்கப்பட்டிருந்தன. இவை முதலமைச்சரின் ஒப்புயர்வற்ற திறனுக்கும், கலை ஆற்றலுக்கும் சாட்சியங்களாக விளங்கின.

பிரதமரின் வருகையைத் தனிப்பட்ட கட்சிக்கே உரிய விஷயமாக மாற்றிட காங்கிரஸ் எடுத்த முயற்சிகளுக்கு மாறாக அரசினர் தோட்டத்தில் நடந்த விழாவில் பிரதமரைப் பங்கேற்க வைத்ததின் மூலம் அவரது வெற்றிகரமான சுற்றுப் பயணத்தின் உச்சகட்ட நிகழ்ச்சியாக அதை மாற்றி வெற்றியடைந்தார் முதலமைச்சர் கருணாநிதி.

அதுமட்டுமல்லாமல் காங்கிரஸ் அல்லாத முதலமைச்சராக இருக்கும் கருணாநிதி பிரதமரின் முற்போக்கான பொருளாதார நடவடிக்கைகளுக்கு மாநில ஆளும் கட்சியான தி. மு. கழகத்தின் முழுமையான ஆதரவு உண்டு என்பதையும், மத்திய அரசிடமிருந்து அனைத்து உதவிகளுக்குமான உத்திரவாதம் பெறத் தகுதியுடையது மாநில அரசு என்பதையும் பிரதமருக்கு உணர்த்திக் காட்டுவதில் தனது பங்கினைச் செவ்வனே செய்தார்."

இவ்வாறு "மெயில்" ஏட்டில் டி. எஸ். திருமலை என்பவர் ஒரு கட்டுரை தீட்டியிருந்தார்.

"மழையைப் போன்று ரோஜாவின் இதழ்கள் பொழிய மறைந்த அண்ணா அவர்களின் இரண்டு உருவப் படங்களை பிரதமர் இந்திரா காந்தி திறந்து வைத்தார். ராஜாஜி மண்டத்தின் நெடிதுயர்ந்த தூண்களைப் பின்னணியாகக் கொண்ட வெளியில் இந்த மகத்தான பிரகாசம் நிறைந்த விழா நடந்தது.

அகன்ற பாதைகள் ஒரே இரவில் வெற்றிக் களிப்புக் கான வரவேற்பு வளைவுகள் அமைந்த பாதையாக மாற்றப் பட்டிருந்தன. கிரேக்க பாணியில் அமைந்த ராஜாஜி மண்டபத்தின் முன்புறம் ஒரு அற்புதமான காட்சி அமைப்பு போல விளங்கியது: பிரதமர் இந்திரா, கவர்னர், முதல்வர், அமைச்சர்கள், முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் உட்பட முக்கிய பிரமுகர்கள் நீண்ட படிக்கட்டுகளில் உயரத்தே அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்னால் பரந்திருந்த கண்ணுக்கு எட்டிய தூரம்வரை மக்கள் பெரும் கடலைப் போல மொய்த்துக் கிடந்தனர்."

இவ்வாறு பம்பாயிலிருந்து வெளிவரும் "டைம்ஸ் ஆஃப் இந்தியா" ஏடு அந்த நிகழ்ச்சி குறித்துப் பாராட்டியிருந்தது.

"பிரதமர் இந்திராவின் முற்போக்கு பொருளாதாரக் கொள்கைகளை தி. மு. கழக நிர்வாகம் ஏற்கிறது என்பதை பிரதமருக்கு உணர்த்தும் வகையில் கருணாநிதி ஒரு மகத்தான வரவேற்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அண்ணாவின் இலட்சிய வாசகங்களான கடமை–கண்ணியம்-கட்டுப்பாடு என்ற பொன்மொழிகள் வரவேற்பு வளைவுகளில் பொறிக்கப் பட்டிருந்தன. அண்ணாவின் பல சிறப்பு இயல்புகளில் மிகவும் மென்மையாகக் குறிப்பிடத்தக்கது–ஏழைகளின் மீதும் தாழ்ந்து கிடப்பவர்களின் மீதும் அவர் செலுத்திய அன்புதான் என்று பிரதமர் இந்திரா குறிப்பிட்டார்."

இவ்வாறு கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "அமிர்த பஜார் பத்திரிகா" என்கின்ற ஏடு அந்தப் படத் திறப்பு விழா நிகழ்ச்சி குறித்து புகழ்ந்திருந்தது.

அக்டோபர் 6 அண்ணா படத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு முன்பு அக்டோபர் 2–ஆம் நாள் காந்தியடிகள் நூற்றாண்டு

விழாவை தமிழக அரசின் சார்பாக சிறப்பாகக் கொண்டாட முடிவெடுத்து அவ்வாறு நடத்தப்பட்டது. நூற்றாண்டு விழாவினை யொட்டி அரசின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பல திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. பல நினைவுச் சின்னங்கள் உருவாக்கப்பட்டன.

அக்டோபர் முதல் நாள் மாலை காந்தி இல்லம் கண் காட்சி திறப்பு விழாவினை பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நான் நிறைவேற்றி வைத்தேன். அக்டோபர் 2-ஆம் நாள் காலை எட்டு மணி அளவில் கடற்கரை காந்தி சிலை அருகில் நூற்றாண்டு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப் பட்ட அலங்கார வண்டிகளின் பேரணி நடைபெற்றது. அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத் தில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா ஆளுநர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அன்று மாலை சென்னை கடற்கரை சீரணி அரங்கில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் என்னுடைய தலைமையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் மூதறிஞர் ராஜாஜி, கண்ணியத்திற் குரிய காயிதே மில்லத், திரு. சி. சுப்பிரமணியம், திரு. பி. ராம மூர்த்தி, திரு. எம். கல்யாணசுந்தரம், திரு. நல்லசிவம், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., திருமதி. சௌந்திரம் கைலாசம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நாட்டின் மாபெரும் தலைவர்களைக் கழக அரசு பெருமைப் படுத்தத் தவறவில்லை என்பதற்கு இது போல் எண்ணிறந்த நிகழ்ச்சிகள் உண்டு!

# 26

## பஞ்சாப் பயணம்

"தொழில்கள் தழைக்கட்டும், தொழிலாளர் செழிக்கட்டும் என்பதே கழக அரசின் முழக்கமாகும். தொழில் துறையில் அமைதி நிலவச் செய்வதற்குக் கருணாநிதி அரசில் முதலிடம் தரப்படுகிறது. இந்த முயற்சியின் வெற்றி, புள்ளி விவரத்தைப் பார்க்கும் போது தெளிவாகத் தெரியும்.

தொழில் துறையில் அமைதி நிலவினால்தான் புதிய தொழில்கள் துவங்கப்படும் என்பதை உணரும் ஆற்றல் படைத்தவராக அவர் இருந்ததால் மாநிலத்துக்குள்ளும், வெளியிலும் தொடர்பு கொண்டு புதுத் தொழில்களைத் தொடங்குகின்ற முயற்சியில் ஈடுபட்டார்.

தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இப்போதுதான் முதன் முறையாக தொழிலாளர் நலத்திற்கென்று ஒரு தனி அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தீரமுடனும், வருமுன் காக்கும் உணர்வுடனும் அச்சிக்கலைத் தமிழக அரசு தீர்த்தது. தமிழ்நாட்டின் முக்கியமான இரண்டு தொழில்கள் ஜவுளி ஆலைத் தொழிலும், தோட்டத் தொழிலும் ஆகும். அவ்விரு தொழில்களிலும் பெரிய வேலை நிறுத்தமோ நீண்ட கதவடைப்போ ஏற்படாமல் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு உடன்பாடுகள் காணப்பட்டன. தொழில் உறவு முறையில் இது குறிப்பிடத்தக்க சாதனையாகும்."

இவ்வாறு கழக அரசின் தொழில், தொழிலாளர் கொள்கை பற்றிப் பம்பாயிலிருந்து வெளிவரும் "எக்னமிக் டைம்ஸ்" என்ற ஏடு 10-9-69 அன்று ஒரு கட்டுரை தீட்டியது.

தொழில் துறையில் மாத்திரமல்லாமல் சாதாரண, சாமான்ய மக்களின் அன்றாடத் தேவைகள் பிரச்சினையிலும், அத்தியாவசியப் பிரச்சினையிலும் கழக அரசு உரிய முடிவுகளை விரைந்து எடுக்கத் தவறியதில்லை.

1969-ஆம் ஆண்டு ஆகஸ்டு, செபடம்பர் மாதங்களில் தான் சென்னை நகரில் குடிநீருக்கான நெருக்கடி நிலை தோன்றியது. அதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தி

மக்களுக்குத் தேவையான குடிநீரைத் தருவதற்குச் சட்டசபையிலேயே ஒரு அறிக்கையினை வெளியிட்டேன்.

"சென்னை மாநகராட்சி எல்லைக்குள் பன்னிரண்டாயிரம் குழாய்க் கிணறுகள் இருபத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் உடனடியாக அமைப்பதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது" என்பதுதான் அந்த அறிக்கை.

அதற்கேற்ப சென்னை நகரம் முழுவதும் குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் வேலை உடனடியாகத் தொடங்கியது. அது பற்றி "ஆனந்த விகடன்" ஏடு 14-9-69-இல் எழுதிய தலையங்கம் குறிப்பிடத்தக்கது.

"புழலேரியிலும், சோழவரம் ஏரியிலும் நீர் வற்றிப் போய்விட்ட நிலையில், பம்புசெட்டு குழாய்க் கிணறுகளை தஞ்சம் அடைந்து தங்கள் தாகத்தைச் சிறிது தணித்துக் கொண்டனர் சென்னை மக்கள். இருப்பினும் இரண்டு மாதங்களுக்குள் மழை பொழியாமல் நிலைமை இப்படியே நீடித்தால கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு நகரவாசிகளை வெளியேற்ற வேண்டி வரலாம் என்று அதிகாரிகள் அஞ்சினர். கருமேகங்கள் கண்ணில் படாதா என்று மாநகராட்சினர் வேதனையுடன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த போது முதலமைச்சர் கருணாநிதி துணிச்சலோடு செயலில் இறங்கினார்.

நேரத்தை வீணாக்காமல் இரண்டே வாரங்களில் திட்டத்தைச் செயல்படுத்துவது என்று முடிவு செய்தார்கள். மறு நாளிலிருந்து சென்னை நகர் வீதிகளிலும், சேரிகளிலும், சந்து பொந்துகளிலும் குழாய்க்கிணறுகள் அமைக்கும் வேலை அசுரவேகத்தில் நடைபெறத் தொடங்கியது. பத்து நாட்களுக்குள் எங்கு திரும்பினாலும் பம்புகளிலிருந்து தண்ணீர் கொட்டும் காட்சி அனைவரையும் பிரமிக்க வைத்தது."

அந்தக் காலத்தில் யாரையும் எளிதில் புகழ்ந்து எழுதிட அவசரப்படாத ஆனந்தவிகடன் ஏடு கழக அரசின் இந்தச் சாதனையைப் புகழ்ந்து எழுதியது என்பதற்காகவே இதை எடுத்துக் காட்டினேன்.

நான் பொறுப்பேற்றுக் கொண்டபோது அறிவித்ததைப் போல அண்ணா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி தமிழகமெங்கும் அறுபதுக்கு மேற்பட்ட அண்ணாவின் சிலைகள் அந்த ஆண்டு செப்டம்பர் திங்கள்

15-ஆம் நாள் திறந்து வைக்கப்படும் நிகழ்ச்சிகள் தொடங்கின. அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட சீரணித் தொண்டர்களின் உழைப்பைப் பயன்படுத்தி பதினைந்தே நாட்களில் சென்னைக் கடற்கரையில் சீரணி மேடை ஒன்று அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழாவினை நான் நடத்தி வைத்தேன்.

பிறந்த நாள் விழாவையொட்டி அண்ணா அவர்களின் முழு உருவச் சிலை ஒன்று சேலம் நகரில் புதிய குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்களின் தலைமையில் என்னால் திறந்து வைக்கப் பட்டது. அந்த விழாவிற்குக் குடியரசுத் தலைவர் வி வி. கிரி அவர்கள் தனது துணைவியாருடன் வந்திருந்தார். விழா ஏற்பாடு களை நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜாராம், பெரியவர் ஜி. பி. சோமசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் முனைந்து கவனித்தனர். அந்த விழாவில் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் தனது தலைமையுரையில் அண்ணா அவர்களின் அருமை பெருமைகளையும் அறிவாற் றலையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "கருணாநிதி கருணைக்கும் நிதிக்கும் கருவூலமாக விளங்குகிறார். அவரது கருணை வெறும் வார்த்தைகளால் ஆனதல்ல. செயல் வடிவம் கொண்டது. தெற்கேயிருந்து கருணாநிதியும் அவரது தோழர்களும், அதைப் போல் வடக்கேயிருந்து குர்னாம்சிங்கும் அவரது தோழர்களும் நான் இந்தியக் குடியரசுத் தலைவராக வர வேண்டுமென்று முதலில் குரல் கொடுத்தார்கள் என்பதை நன்றியுணர்வோடு என்றைக்கும் நினைத்திடக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று உருக்கத்துடனும் உணர்ச்சி ததும்பவும் வார்த்தைகளைக் கொட்டினார்.

பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் குர்னாம்சிங் அவர்கள் என் பால் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டவர். அஃதேபோல் நானும் அவரிடம் தனி அன்பு செலுத்தியவன். மாநிலங்கள் சுயாட்சி பெறவேண்டும் என்ற கொள்கையில் அவருக்கும் எனக்கும் ஒருமித்த கருத்து இருந்து வந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு மோகன் குமாரமங்கலத்தை யும், பாலதண்டாயுதத்தையும் பலி கொண்ட விமான விபத்து குர்னாம் சிங் அவர்களையும் நம்மிடமிருந்து பறித்துவிட்டது. அவர் பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது அந்த மாநில வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய தலை சிறந்த நிர்வாகி என்று பெயரெடுத்தார்.

இன்றைய பஞ்சாப் பல்வேறு தீர்வு காணப்படாத பிரச்சினைகளின் காரணமாக வன்முறைக் களமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அன்றைய பஞ்சாப் அமைதியின் தொட்டிலாகக் காட்சி அளித்தது.

அந்த நேரத்தில் பஞ்சாப் முதல்வர் குர்னம்சிங் அவர்கள் பஞ்சாப் மாநிலத்தில் பல இடங்களில் சுற்றுப்பயணம் செய்ய எனக்கு அன்பழைப்பு விடுத்தார். முக்கியமாக சண்டிகர் நகரில் நடைபெற்ற குருநானக் அவர்களின் 500-வது பிறந்த நாள் விழாவில் நான் கலந்து கொள்ள வேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டதின் பேரில் நானும், பொதுப்பணி அமைச்சராக இருந்த சாதிக் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முரசொலி மாறன்,வி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் 1969 நவம்பர் 26-ஆம் நாள் டெல்லி சென்று அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு சண்டிகர் நகர் நோக்கிச் சென்றோம்.

சண்டிகருக்கு டெல்லியிலிருந்து இரவு நேரத்தில் கார் பயணம் செய்வது மிக இதமான ஒரு நிகழ்ச்சியாகும். காரில் சென்று கொண்டிருந்த எங்களுக்கு இரவு 11 மணி அளவில் நல்ல பசியெடுத்தபோது சாலையோரத்தில் மினுக் மினுக்கென்று விளக்கு எரிந்துகொண்டிருந்த பழைய மண்டபம் - ஒன்று கண்ணுக்குத் தெரிந்தது. காரை நிறுத்திவிட்டு அருகே சென்றோம்

சீக்கியர் உடையில் சாதுக் கோலம் பூண்டு அந்த மண்டபத்தில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரிடம் சென்று பேச முனைந்தோம். நண்பர் கிருஷ்ணமூர்த்தி தனக்குத் தெரிந்த பஞ்சாப் மொழியில் அவரிடத்தில் இந்தப் பகுதியில் எங்கே உணவு கிடைக்கும் என்று கேட்டார். அந்த சாது எதுவும் பேசவில்லை. ஆனால் தன்னுடைய கையைத் தட்டி யாரையோ ஜாடையாகக் கூப்பிட்டார். அவரது பணியாளர் ஒருவர் ஓடி வந்தார். அவரிடத்தில் விரல் குறிப்பால் ஏதோ உணர்த்தினர்.

சில விநாடிகளில் எங்களுக்கு பசியாறத் தேவையான கோதுமை மாவினல் செய்யப்பட்ட ரொட்டிகள் வழங்கினர். அந்த ரொட்டிகளுக்கு சுவை சேர்க்க உருளைக் கிழங்கு குருமாவும் வைக்கப்பட்டது. அவற்றைச் சாப்பிட்டுவிட்டு அதற்குரிய பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அந்தப் பணியாளரிடம் இரண்டு பத்து ரூபாய்த் தாள்களை நீட்டினோம்.

பணியாளரைப் பார்த்து சாது தலையை ஆட்டினர். பணியாளர் பணத்தை வாங்க மறுத்துவிட்டார். அவருக்கு நன்றி

சொல்லிவிட்டு காரிலே ஏறிப் புறப்பட்டோம். பஞ்சாப்பில் பல இடங்களில் அது போன்ற சிறிய மண்டபங்களும் நடுத்தர மான குருத்துவாரங்களும் அமைந்து அவற்றில் இதுபோன்ற விருந்தோம்பல் நடைபெறுவது வாடிக்கை.

அன்று இரவு சண்டிகரில் உள்ள பஞ்சாப் கவர்னர் மாளி கையில் நாங்கள் தங்கினோம். மறுநாள் அனந்தபூரிலுள்ள குரு கோவிந்ததாஸ் சிங் குருத்துவாராவிற்குச் சென்றோம். அதன் தலைமை மதகுரு, அனந்தபூர் நகரின் முக்கிய பிரமுகர்கள் மலர் மாலைகள் அணிவித்து மகிழ்ச்சியோடு வரவேற்றனர். குருத்துவாரா விற்குள்ளும் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு அங்கிருந்து பக்ரா நங்கல் அணைக்குச் சென்று பார்வையிட்டோம். அங்குள்ள விருந்தினர் மாளிகையில் தங்கினோம். பக்ரா நங்கல் உரத் தொழிற்சாலைக்குச் சென்றோம். அன்று மாலை சண்டிகர் தமிழ்ச் சங்கத் தலைவரும், உறுப்பினர்களும் எங்களைச் சந்தித்து அளவளாவினர்.

இரவு 7 மணி அளவில் குரு நானக் அவர்களின் 500-வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டேன். குருநானக் சங்கீத் தர்பார் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த விழாவிற்கு பஞ்சாப் உயர்நீதி மன்ற நீதிபதி ஹர்பான்சிங் தலைமை வகித்தார். முதலமைச்சர் குர்னம்சிங் வரவேற்புரையாற்றினார். பல்லாயிரக் கணக்கான பஞ்சாப் மக்கள் கலந்துகொண்ட அந்த விழாவில் உரையாற்றிய போது நான் குறிப்பிட்ட சில கருத்துக்களை நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.

"பஞ்சாப்புக்கும் தமிழ்நாட்டிற்கும் எத்தனையோ ஒற்றுமை கள் இருக்கின்றன. எனக்கும் உங்கள் முதலமைச்சர் குர்னம்சிங் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை மட்டும் நான் குறிப் பிடவில்லை சாதி, மத, மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை தமிழ்நாட்டில் வள்ளுவர் வழி நின்று அறிஞர் பெருமக்கள் கூறியிருக்கிறார்கள். பஞ்சாப்பிலும் குருநானக் வழி நின்று அதே கருத்தை முழங்கி வருகிறார்கள்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் முதல் கட்டமாக தமிழ் நாட்டில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். பஞ்சாப் வீரன் பகவத் சிங்கும் தூக்குக் கயிறை முத்தமிட்டான். எங்கள் தமிழ் நாட்டில் வெள்ளையர்களின் கொலை வெறிக்கு ஆளான ஊமைத் துரை, பெரியமருது, சின்ன மருது ஆகியோரையும் சுகதேவ், ராஜ

குரு ஆகியோரையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். உடலெல்லாம் புல்லரிக்கிறது. அந்த வீரர்கள் ரத்தம் சிந்திய மண்ணை வணங்கு கிறேன்.

அன்பையும், மனிதாபிமானத்தையும் கொன்று தின்கிறவன் ஆண்டவனை ஏப்பம்போல் வெளியே விட்டுவிடுகிறான். அன்பை யும் மனிதாபிமானத்தையும் அள்ளி வழங்குகிறவன், ஆண்ட வனையும் தனக்குள் அடக்கி வைத்துக் கொள்கிறான். அவனே ஆண்டவன் ஆகிவிடுகிறான். இப்படி சுலபமாக ஆண்டவனைக வழி இருக்கும்போது அதைப் புறக்கணித்துவிட்டு மனிதர்கள் ஆண்டவனை எங்கேயோ தேடி அலைகிறார்கள்.

ஏழையின் சிரிப்பில்–குழந்தைகளின் மழலையில்–பாட்டாளி யின் வியர்வையில்-பெண்ணின் கற்பில்-ஆடவனின் பண்பில்-விவேகியின் விழியில்–விஞ்ஞானியின் அறிவில்-ஆண்டவன் இருக்கிறான்.

அதை விட்டுவிட்டு குருட்டு மனிதன், இருட்டு அறையில், கறுப்புப் பூனையைத் தேடுவதுபோல் சிலர் கடவுளைத் தேடி அலைகிறார்கள். அவர்களுக்கெல்லாம் கடவுளின் உண்மை விளக்கத்தை அளித்தவர்தான் குருநானக்.

எல்லா மதங்களும் ஒன்றே!
எல்லா மனிதர்களும் ஒன்றே!
உண்மை எல்லாவற்றுக்கும் மேலானது.
ஆனால் அதற்கும் மேலானது ஒன்றுண்டு.
அதுதான் உண்மையின் வழி வாழ்வது.
இதைத்தான் குருநனாக் போதித்தார்.
ஒரே கடவுள்,
சமய சடங்குகள் வீணானவை,
சாதி சமய வேறுபாடு கூடாது.
இந்தக் கொள்கைகளைத்தான் அவர் முழங்கினார்.

ஐநூறு ஆண்டுகளில் இயற்கையில் எவ்வளவோ மாறுதல் கள் ஏற்பட்டாலும், குருநானக் போன்ற பெரியோர்களின் கீர்த்தியிலோ, பெயரிலோ எந்த மாறுதலும் இல்லை.

குருநானக்கின் பெயர் சொல்லிப் பறவைகள் பாடுகின்றன.
அந்தப் பாட்டைக் கேட்டு,
மேகங்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன.

**நானக்கின் கீதம் காற்றிலே மிதக்கிறது.**
**அந்தக் காற்று தமிழ்நாட்டைக் தழுவுகிறது.**
**அந்தத் தழுவலிலே நான் என்னை மறக்கிறேன்"**

இவ்வாறு ஆங்கிலத்தில் அந்த விழாவில் நான் உரையாற்றினேன்"

மறுநாள் பஞ்சாப்பில் உள்ள தொழில் நகரமான லூதியானாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்குள்ள விவசாயப் பல்கலைக் கழகத்தில் நாற்பது இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்ட மனையியல் கல்லூரி கட்டிடம் என்னால் திறந்து வைக்கப் பட்டது.

அந்தப் பல்கலைக்கழகத்தை நான் பார்வையிட்டதன் விளைவுதான் தமிழகத்தில் கோவையில் தொடங்கப்பட்ட வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்று கூறினால் அது மிகையாகாது.

லூதியானா நிகழ்ச்சி முடிவுற்று அமிர்தசரஸ் நகர் நகராட்சி வரவேற்பிற்குப் புறப்பட்டோம். எங்கள் வருகையையொட்டி அமிர்தசரஸ்நகரம் முழுவதும் மலர்ப் பந்தல்களாலும், வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகராட்சிமன்ற விழாவில் ஆயிரக்கணக்கான சீக்கிய பொது மக்கள், மதகுருமார்கள், நகர பிரமுகர்கள் கலந்து கொண்டனர். நகராட்சியின் வரவேற்பிற்கு நன்றி தெரிவித்து பதிலுரை ஆற்றினேன்.

அதன்பிறகு சீக்கிய தலைவர் சாந்த் பதேசிங் அவர்களோடு எங்களுக்கு ஒரு சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது. "பஞ்சாப் பெரியார்" என அழைக்கப்பட்ட மாஸ்டர் தாராசிங் அவர்களுக்கு அடுத்து அந்தப் பெரும் பொறுப்பில் இருந்தவர் சாந்த் பதேசிங் அவர்கள் ஆவார்கள். அவர் இருப்பிடத்திற்கு நாங்கள் சென்றபோது வாயிற்புறத்தில் இருமருங்கிலும் ஆயிரக் கணக்கான சீக்கிய மக்கள் அணிவகுத்து நின்று ஒவ்வொரு வரும் எனக்கு மாலையணிவித்து அந்த மலர்மாலைகளுக்குள்ளேயே என்னை மறைத்துவிட்டனர்.

அந்த இனிய பாசம் பொழியும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டு பதேசிங் அவர்கள் இருந்த இடத்திற்கு நாங்கள் சென்றபோது அந்த முதியவர் ஆவலோடு எழுந்து என்னைக் கட்டித் தழுவி வரவேற்றார். சிறிது நேரம் இருவரும் கருத்துக் களைப் பரிமாறிக்கொண்டோம்.

குருத்துவாரா கமிட்டியின் சார்பில் மிக முக்கியமானவர் களுக்கு மட்டுமே தரப்படும் வாள் ஒன்றை பதேசிங் அவர்கள் எனக்கு பரிசாக அளித்தார். அந்த பரிசளிப்பு நிகழ்ச்சி கண்டு குழுமியிருந்த சீக்கிய இளைஞர்களும், பெரியவர்களும் உணர்ச்சி வயப்பட்டு வாழ்த்து முழக்கங்கள் ஒலித்தனர்.

பின்னர் சீக்கியர்களின் புனித ஆலயமென போற்றப்படும் அமிர்தசரஸ் தங்கக்கோயிலைச் சுற்றிப் பார்த்தோம். அங்கும் எங்களுக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. அன்று இரவு அமிர்தசரஸில் நடைபெற்ற குருநானக் விழா ஒன்றில் கலந்துகொண்டேன். அதையொட்டி குருநானக்கின் வாழ்க்கை வரலாறு பெரியதோர் மைதானத்தில் ஒலி–ஒளி நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய நிகழ்ச்சி அது.

எங்களுடைய பஞ்சாப் பயணம் குறித்து லூதியானாவில் செய்தியாளர்கள் என்னைப் பேட்டி கண்டு பல கேள்விகளைக் கேட்டார்கள். "வருகையின் நோக்கம் என்ன" என்று அவர்கள் கேட்டபோது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பொருட்டு மாநில கட்சிகளுக்கிடையே ஒரு கூட்டமைப்பு ஏற்பட வேண்டு மென்றும் நான் பஞ்சாப்புக்கு வந்திருப்பதை அந்த முயற்சிக் கான முதல்படியாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் கூறினேன்.

மேலும் தொடர்ந்து "தி. மு. கழகம், அகாலி தளம் போன்ற கட்சிகள் அனைத்திந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்க முடியும். மாநில கட்சிகளாக இயங்கி வரும் இவை மக்களிடத்தில் செல்வாக்கைப் பெற்று வளர்ந்து வருகின்றன. அனைத்திந்திய அளவில் இத்தகைய கட்சிகள் தங்களுக்குள் ஒரு உடன்பாடு கொண்டு இயங்க முடியும். எனது பஞ்சாப் வருகையை அந்த முயற்சியின் முதல் கட்டமாகக் கருதலாம்" என்று பதிலளித்தேன்.

மறுநாள் ஜாலியன் வாலாபாக்கிற்குச் சென்றோம். பஞ்சாப் படுகொலையில் உயிர்நீத்த வீரத்தியாகிகளின் நினைவுச் சின்னம் அங்கே இருக்கிறது. அந்த நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினோம். ஜாலியன் வாலாபாக் படுகொலையையொட்டிய இதர வரலாற்றுச் சின்னங்களையும் பார்த்தோம். அந்தப் படுகொலையின்பொழுது துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் பட்ட சுவர்கள் இன்னமும் அந்த வடுக்களைத் தாங்கி நிற்பதைக் கண்டபோது மெய் சிலிர்த்தது.

# 27

## நற்பணியாற்றிய நான்கு குழுக்கள்

காஷ்மீர் என்று நினைத்தவுடன் இயற்கையின் எழில்மிகு புன்னகையும், வான்தொடுமலைகளும், வண்ணப்படகுகளும் சுற்றுப் பயணிகளுக்குக் காட்சி தரக் கூடும். என்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்குக் காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் நினைவே மேலோங்கும். மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி வேண்டுமென்ற குரலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவராக அவர் விளங்கினார். காஷ்மீருக்குத் தனித்த அந்தஸ்து வேண்டுமென்பதற்காக அவர் வாழ்நாளில் பெரும் பகுதியைப் போராட்டத்தில் கழித்தார். போர்ப்புலி யாகத் திகழ்ந்த அவர், பல ஆண்டுக் காலம் கைதியாக இருந்தபோது – அவற்றில் ஓரிரு ஆண்டுகள் தமிழ்நாட்டில் கொடைக்கானலில் வீட்டுக் காவலிலும் வைக்கப்பட்டிருந்தார்.

இறுதியாக இந்திய அரசுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து, காஷ்மீர் மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவர் சம்மதித்தபோது, பொறுப்பு ஏற்பதற்கு முன்பே என்னைச் சந்திக்க வேண்டுமென்று தகவல் கொடுத்தார். நானும் அவரது வருகையை விரும்பியேற்று உடனே பதில் அனுப்பினேன். குறிப்பிட்டபடி 1975 பிப்ரவரி 12-ஆம் நாள் அன்று சென்னைக்கு வந்து என் இல்லத்தில் காலை சிற்றுண்டி அருந்தினார். மாநில சுயாட்சி முழுமையான வெற்றி காணவும், மத்தியில் இருக்கும் அதிகாரக் குவிப்பு, குறைக்கப்படவும் இன்னும் நாம் பல துன்ப துயரங்களை ஏற்று தியாகங்கள் செய்யவேண்டியிருக் கிறது என அவர் உருக்கத்தோடு குறிப்பிட்டது இன்னமும் என் நெஞ்சில் பசுமையாகப் பதிந்தே இருக்கிறது.

''நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு காஷ்மீர் மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்பதால் மாநில சுயாட்சிக் கொள்கையை விட்டு விட்டதாகக் கருத வேண்டாம்'' என்ற உறுதிப்பாட்டை அறிவிப்பதற்காகவே என்னைச் சந்திக்க வந்த தாக அவர் சொன்னபோது அவரது கொள்கைப் பற்று தலை தூக்கி நின்றதை என்னால் உணர முடிந்தது. அவர் ஆட்சிப் பொறுப்பேற்றபோது நான் இங்கு ஆட்சியில் இருந்தேன். அவர் 1982-ஆம் ஆண்டு மறைந்தபோது நான் எதிர்க்கட்சித்

தலைவராகச் சட்டப் பேரவையில் வீற்றிருந்தேன். அவரது மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தில் நான் பேசியபோது "தமிழகத்தில் ஷேக் அப்துல்லா காவலில் வைக்கப்பட்டிருந்த கொடைக்கானல் கோகினூர் மாளிகைக்கு ஷேக் அப்துல்லா நினைவு மாளிகை எனப் பெயரிட வேண்டு" மென வலியுறுத்திக் குறிப்பிட்டேன்.

இன்று அவரது மகன் பரூக் அப்துல்லா காஷ்மீரத்து முதலமைச்சர்! அவர் தந்தையின் வழி நின்று மாநில சுயாட்சிக் காகக் குரல் கொடுக்கிறார். அதற்கென அவரே முன்னின்று காஷ்மீர் - ஸ்ரீநகரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். நான் அந்த மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தேன். திடீரென ஏற்பட்ட உடல் நலிவின் காரணமாக - எனது பயணம் ரத்து செய்யப்பட்டு, கழகத்தின் சார்பில் கழகப் பொருளாளர் சாதிக் அவர்களும், நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத்தலைவர் சி. டி. தண்டபாணி அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். காஷ்மீரில் - ஸ்ரீநகர் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட மத்திய-மாநில உறவு பற்றிய கருத்துக்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட காலமாகச் சொல்லி வருகிறது.

மத்தியிலே கூட்டாட்சியும் மாநிலத்தில் சுயாட்சியும் என்று பொதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாதென்று - மத்தியில் உள்ள அதிகாரங்கள் எவையெவை மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும்; எவையெவை நீக்கப்பட வேண்டும் என்பன போன்ற விரிவான விபரங்களை ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக 1969-ல் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ராஜமன்னார் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்களை யும், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்திரா ரெட்டி அவர்களை யும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழு கழக அரசினால் அமைக்கப்பட்டது. அந்தக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் முரசொலி மாறன், இரா. செழியன் குழுவினர் கருத்துக்களையும் இணைத்து - அதன் பின்னர் அரசின் சார்பில் அமைச்சரவையில் விவாதித்து 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ஆம் நாள் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்திய - மாநில உறவுகள் எப்படி அமைந்திட வேண்டும் என விவாதித்து, மாநில சுயாட்சிக்கான ஆக்கபூர்வமான தீர்மானமொன்றை இந்தியாவிலேயே முதன் முதலாகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றிய சிறப்பு தி. மு. கழக ஆட்சிக்கே உரியது.

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை முன் மொழிந்த போது, "மக்களின் நல்வாழ்வை மையமாகக் கொண்டும், பெற்ற சுதந்திரத்தின் பயனை நாடு அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை நெஞ்சில் பதித்துக்கொண்டும் இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றி வைக்கும் இந்தச் சுடர்விளக்கு ஒளிவிட அரசியல் மேதைகள் தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்று பணி வன்புடன் கோருகிறேன்" என, நான் விடுத்த அந்த வேண்டு கோள் வீண் போகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தான் பெங்களூரிலும், காஷ்மீரிலும் நடைபெற்ற மாநாடுகள் அமைந்தன.

தமிழக சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டுக்கும் - பெங்களூர், காஷ்மீர் நகரங்களில் மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்திடும் மாநாடுகள் நடைபெற்றுள்ள 1983-ஆம் ஆண்டுக்கும் இடையே ஒன்பது ஆண்டுகள் ஓடிவிட்டன என்றாலும்; மத்தியில் அளவுக்குமீறி குவிக்கப்பட்டுள்ள அதிகாரங் கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு மாநிலங்கள் சுயாட்சி பெற்று மத்தியில் உண்மையான கூட்டாட்சி அமைப்பு உருவாக வேண்டுமென்ற முனைப்பான கருத்து பட்டுப் போய் விடவில்லை!

மத்திய அரசு பலமுள்ளதாக இருக்கவேண்டும் என்ற பலவீனமான வாதத்தை வைத்துக் கொண்டே மாநிலங்களின் உரிமைக் குரலை ஒடுக்கிவிட முடியாது! மாநிலங்கள் வலு வுள்ளவைகளாக இருந்தால் மட்டுமே மத்திய அரசும் வலு வுள்ளதாக இருந்திட இயலும்! இதுவரையில் எல்லையற்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு முப்பத்தைந்து ஆண்டு காலத்தில் இந்தச் சுதந்திர இந்தியாவில் மத்தியப் பேரரசு பணக்காரர்களுக்கான சொர்க்கத்தையும், ஏழைகளின் நரகத்தை யும் உலகத்திற்குக் காட்சியாக்கியதைத் தவிர உருப்படியாகச் செய்தது என்ன?

இந்தக் கேள்விக்குக் கிடைத்த பதிலாகத்தான்; மக்களைக் காப்பாற்ற மாநிலங்களுக்கு அதிகாரமும், மண்ணைக் காப்பாற்ற மத்திய அரசுக்கு அதிகாரமும் தேவையான அளவுக்குப் பகிர்ந்திடப்படுமானால், வளமான மாநிலங்களும் வலுவான மத்திய அரசும் உருவாக வழியேற்படும் என்ற கருத்து அரசியல் அரங்கில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது.

ராஜமன்னார் குழுவின் அறிக்கையும், அதன் அடிப்படையில் தமிழக தி. மு. கழக அரசு நிறைவேற்றிய தீர்மான விபரங்களும் தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல் வடிவங் கொண்டு வெளிவந்திருந்தன.

அந்தக் கருத்துக்களை மையமாகக் கொண்டே பெங்களூரில் கர்நாடக முதல்வர் ஹெக்டே (ஜனதா கட்சி) அவர்கள் கூட்டிய தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் (1983-ல்) மத்திய–மாநில உறவுகள் பற்றிய ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

அடுத்து காஷ்மீர் முதல்வர் பரூக் அவர்கள் கூட்டிய மாநாட்டில் ஆந்திர முதல்வர் ராமராவ் அவர்களும், மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அவர்களும், மாநில சுயாட்சிக் கருத்துக்கு ஒத்துவரும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலோர் ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளையும், தி. மு. கழக அரசின் தீர்மானக் கருத்துரைகளையும் வெகுவாகப் பாராட்டினர் என்று; அந்த மாநாட்டிற்குச் சென்றிருந்த கழகப் பிரதிநிதிகள் நண்பர் சாதிக் பாட்சாவும், நண்பர் தண்டபாணியும் என்னிடம் தெரிவித்து மகிழ்ந்தனர்.

1974–ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானம் வந்தபோது எதிர்வரிசையில் அமர்ந்திருந்த அ. தி. மு. க. கட்சி உறுப்பினர்கள் ராஜமன்னார் குழு அறிக்கையை எவ்வளவு கேவலமாக விமர்சித்தனர் என்பது என் நினைவுக்கு வந்தது. மாநில சுயாட்சி தத்துவம் தேவையான ஒன்று என திட்டவட்டமாகத் தெரிவித்த அண்ணா அவர்களின் பெயரால் கட்சியை வைத்துக் கொண்ட அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், "ராஜமன்னார் குழுவின் இந்த அறிக்கை, சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்குத் தகுதியுடைய புத்தகமல்ல-பள்ளி மாணவன்கூடப் பயன்படுத்த இதில் எவ்வித கருத்துமில்லை-இது, குப்பைக் கூடையில் தூக்கி எறியப்பட வேண்டிய அறிக்கை" என்று அவையிலேயே இழித்துரைத்தனர்.

இன்றைக்கு அந்த அறிக்கையில் அரசியல் சட்டத்தின் இன்ன பிரிவைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது எனத் தேடிப் பார்த்துத் தெளிவு பெறுகிற அளவுக்கு அரசியல் மேதைகள் ஆர்வங் காட்டுகிறார்கள் என்கிறபோது, அந்த அரிய பணிக்கு வித்திட்டவன் என்ற முறையில் மகிழ்ச்சியில் திளைப்பது இயற்கைதானே!

*1969*–ல் ராஜமன்னார் குழு மட்டுமல்லாமல் அரசின் சார்பில் வேறு குழுக்களும் வெவ்வேறு பணிகளுக்காக அமைக்கப் பட்டன. தமிழக அரசில் பணியாற்றக்கூடிய ஏழு லட்சத்தை எட்டிப் பிடிக்கும் எண்ணிக்கை கொண்ட அரசு அலுவலர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டது.

இனி ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15-ஆம் நாளன்று தமிழகக் காவல்துறையினருக்கு வீர விருதுகள், பண முடிப்புகள், பதக்கங்கள் அளிக்கப்படு மென்றும் அறிவித்ததோடு இந்தியாவிலேயே முதன் முதலாக "காவல் துறை கமிஷன்" ஒன்றையும் நியமிப்பதாக அறிவித் தேன். அதன்படி, ஓய்வு பெற்ற ஐ. சி. எஸ். அதிகாரியான ஆர். ஏ. கோபால்சாமி அய்யங்கார் தலைமையில் அட்வகேட் ஜெனரல் கோவிந்த சாமிநாதன், துணை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என். கிருஷ்ணசாமி, சிலம்புச்செல்வர் ம. பொ. சி ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு அமைக்கப் பட்டது.

பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களைப் பேணுவதற் காகவும், கடந்த காலத்தில் அவர்கள் பெற்ற வசதி வாய்ப்புகளைப் பரிசீலித்து மேலும் முன்னேற்றமடையச் செய்வதற்காகவும், பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்றும் அரசின் சார்பில் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் தலைவர் ஏ. என். சட்ட நாதன். உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளான சின்னப்பன், ஜமால் உசேன் ஆகியோர்!

அரசு அலுவலர் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந் துரைகளை ஏற்று அரசு எடுத்த முடிவுகளை அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றுப் பாராட்டினர். அகவிலைப்படியை ஊதியத்துடன் இணைக்க வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கையை ஊதியக் குழு ஏற்று, அதனை அரசும் அறிவித்தது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, அலுவலர் ஊதிய உயர்வு

பெற்றனர். அரசு அலுவலர்களின் பல்லாண்டு கால வேண்டு கோளாக இருந்து வந்த ரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று அறிவிப்பு செய்ததை யொட்டி தந்தை பெரியார் தலைமையில் அரசு அலுவலர்கள் எனக்கு ஒரு சிறப்பான பாராட்டு விழாவே நடத்தினர். இந்தியா விலேயே முதன் முதலாக; பணியில் இருக்கும்போது அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால் உடனடியாக அவர்கள் குடும்பத் திற்கு பத்தாயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கும் திட்டமும் அறிவிக்கப்பட்டது.

காவல்துறைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று முதல்நிலைக் காவலர் தகுதியில் ஆயிரம் பேருக்கு முதற் கட்டமாக வேலை தரப்பட்டது. 1967-ல் காவலர்களின் ஊதியம் 129 ரூபாயாக இருந்தது 165 ரூபாயாகவும், தலைமைக் காவலர்களுக்கு 166 ரூபாயிலிருந்து 225 ரூபாயாகவும், சப் - இன்ஸ்பெக்டர்களுக்கு 140 ரூபாயிலிருந்து 300 ரூபாயாகவும், இன்ஸ்பெக்டர்களுக்கு 225 ரூபாயிலிருந்து 425 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. இவை யன்னியில் பெரும்பாலான பரிந்துரைகள் செயல்படுத்தப் பட்டன.

பிற்படுத்தப்பட்டோர் குழுவின் பரிந்துரை அடிப்படை யில்; அவர்களுக்கு அரசுப்பணிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் 25 சதவிகித இட ஒதுக்கீடு இருந்ததை 31 சதவிகிதமாக உயர்த்தி யும் – தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவிகித இட ஒதுக்கீடு இருந்ததை 18 சதவிகிதமாக உயர்த்தியும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. நீண்ட நாட்களாகக் கோரிக்கை எழுப்பி வந்த உருது பேசும் முஸ்லீம்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க் கப்பட்டதும், கொங்கு வேளாளரும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதும் கழக ஆட்சிக் காலத்திலே தான்!

# 28

## இறைவனுக்குப் பிடித்த பணி!

குமாரவேலன், குழந்தைவேலன், கஸ்தூரி ராஜ், முல்லை சத்தி ஆகிய நால்வருடன் நானுட்பட ஐந்து பேர் 1953-ஆம் ஆண்டில் டால்மியாபுரம் புகைவண்டி நிலையத்தின் பெயரை கல்லக்குடி என மாற்ற வேண்டுமென்று களம்சென்று ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற நிகழ்ச்சியை முதல் பாகத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்து ரயிலை நிறுத்தியதற்காகத் திருச்சி சிறையில் ஆறுமாதக்கடுங்காவல் தண்டனையை அனுபவித்த எங்கள் ஐவரில் இப்போது நான் ஒருவன்தான் மிச்சமிருக்கிறேன். இடைப்பட்ட முப்பதாண்டு காலத்தில் மற்ற நால்வரையும் சாவு, தனது வாய்க்குள் போட்டுக்கொண்டு விட்டது.

சிறைக்குள்ளேயே நோய்வாய்ப்பட்ட குமாரவேலன் விடுதலை பெற்ற சில நாட்களில் மறைந்து விட்டார். அவரைத் தொடர்ந்து குழந்தைவேலனும் பிரிந்துவிட்டார் முல்லை சத்தி என்னைக் கொழு கொம்பாக்கிக்கொண்டு என்மீது படர்ந்து நட்பு மணம் பரப்பிய இனிய தோழர்! வடஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடிக் கருகில் உள்ள முல்லைக்கொம்மை என்ற சிற்றூர் அவரது சொந்த ஊர் எனினும் சென்னையில் அச்சகத் தொழிலில் ஈடுபட்டு சென்னையிலேயே தங்கியிருந்தார்.

ஒரு நாள் பிற்பகல் அவர் இல்லத்திலிருந்து தொலைபேசிச் செய்தி வந்தது. வீட்டில் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தவர், வெளியில் புறப்பட்டுப் படிகளில் இறங்கியபொழுது "அம்மா!" என்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தவர் தான்; டாக்டர்கள் வருவதற்குள் உடல் சில்லிட்டு விட்டது. அதைப்போலத்தான் மணப்பாறை கஸ்தூரி ராஜ் - பழனிக்குச் செல்ல வேண்டுமென்று குடும்பத்தார் வலியுறுத்தியிருக்கிருர்கள். ஏற்கனவே அவருக்கு நெஞ்சு வலி! பழனி மலையில் ஏறுகிற மின்விசைச் சாதனத்தில் ஏகக் கூட்டம் – குடும்பத்தாரை அதில் ஏற்றி அனுப்பி விட்டு, அவர் அங்கே காத்திருக்க மனமின்றி, படிகளில் ஏறி மேலே சென்றிருக்கிருர். "அய்யோ, இந்த

உடம்போடு படியேறியா வந்தீர்கள்?" என்று குடும்பத்தார் கேட்கும்போதே - படியில் சோர்ந்து உட்கார்ந்தார். சுருண்டு போனார்.

இந்தச் சோக நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் என் நெஞ்சில் அவ்வப்போது சம்மட்டி அடிகளாகத்தான் விழுந்தன. கல்லக்குடி தண்டவாளத்தில் நாங்கள் தலை வைத்துப்படுத்திருந்த போது வேகமாக விசில் ஊதிக்கொண்டு ரயில் புறப்பட்டதும்- நாங்கள் சற்றும் அசைவின்றி அதனை எதிர்நோக்கியதும் - பின்னர் சிறையில் ஒன்றாக இருந்ததும் - தி. மு. கழகத்தின் தியாக வரலாற்றில் ஒரு ஏடல்லவா? அந்த ஏட்டில் வைரமணிகளாக ஜொலிக்கும் வரிகள் அல்லவா முல்லை சத்தி, கஸ்தூரி ராஜ், குமாரவேலன், குழந்தைவேலன் என்ற பெயர்கள்!

1953-ல் அந்தப் போராட்டம் நடைபெற்ற பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, 1969 இறுதியில் டால்மியாபுரம் ரயில் நிலையத்தின் பெயரை "கல்லக்குடி - பழங்காநத்தம்" என மாற்றுவதற்கான ஒப்புதலை அளித்து மத்திய உள்துறை அமைச்சர் சவான் அவர்கள் எனக்குக் கடிதம் எழுதினார். அந்தச் செய்தியைக் கேட்டு பெரியார் அவர்கள் பெரிதும் மகிழ்ந்து திருச்சியில் இருந்தவாறு எனக்கு வாழ்த்து அனுப்பியிருந்தார்.

ஒன்று நடைபெற்றுவிட்ட பிறகு அது எளிதான காரியமாகத் தோன்றுகிறது. ஆனால் அது நடை பெற எத்தனை முயற்சி - எத்தனை போராட்டம் - எத்தனை இழப்பு - இவற்றையெல்லாம் எண்ணி பார்க்கும்போதுதான் கிடைத்த வெற்றியின் பெருமை தெரிகிறது!

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்று ஒரே வாக்கியத்தில் அண்ணா அவர்கள் கழக ஆட்சியில் சட்டப் பேரவையில் அறிவித்து விட்டார். ஆனால் அப்படியொரு நிலையைப் பக்குவமாக உருவாக்க பெரியார் தலைமையில் அண்ணா உள்ளிட்ட அனைவரும் எத்தனை ஆண்டுக் காலம் எவ்வளவு எதிர்ப்புக்கிடையே பட்டி தொட்டிகளில் எல்லாம் பகைவர்களின் கத்தி கட்டாரிகளுக்கு நடுவில் நின்று பணியாற்றிட வேண்டியிருந்தது!

சென்னை ராஜ்யம் என்ற பெயரை "தமிழ்நாடு" என்று மாற்றி அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியபோது அது ஒரு துளி மையினால் செய்யப்பட்ட சாதாரண காரியமாகத்தான் பலருக்குப் பட்டது! ஆனால், அதற்

காகக் கழகத்தினர் கண்ட களங்கள் எத்தனை - எத்தனை! விருதுநகரில் சங்கரலிங்கனார் என்ற பெரியவர் அந்தக் கோரிக்கைக்காகத் தனது உயிரையே உண்ணு நோன்பின் வாயிலாக விலையாகத் தரவில்லையா?

இனிமேல் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் இருமொழித் திட்டம்தான் - இந்திக்கு இடமில்லை என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் முழங்கியது இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது! ஒரு உத்திரவுதானே; அது என்ன பெரிய காரியம் என்று சில மேதாவிலாசங்கள் அலட்சியமாகப் பேசக்கூடும். ஆனால் அந்த ஒரு உத்திரவுக்காக - 1938 - ஆம் ஆண்டு முதல் இந்தத் தமிழகத்தில் கொட்டப்பட்ட குருதி எவ்வளவு? சிறைச்சாலையில் சித்ரவதைக்காளானோர் எத்தனை பேர்! தீக்குளித்துச் செத்த தியாக மணிவிளக்குகளை மறக்க முடியுமா? அடுக்கப்பட்ட பிணங்கள்; அம்மவோ-அவலம்! அவலம்! முப்பதாண்டு காலத் தொடர் போராட்டம்! 1965-ல் மொழிப் புரட்சி! அதற்குப் பிறகு முகிழ்த்ததல்லவோ இருமொழித் திட்டம் - இந்தித் திணிப்பை விரட்டும் திட்டம்!

எனது ஆட்சிக் காலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் குடியிருந்த மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கும் குடியிருப்பு மனைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதனால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பல லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பலன் பெற்றனர். அந்தச் சட்டத்தை ஆதரித்துத் திருத்துறைப்பூண்டியில் ஒரு விழாவில் பேசிய கம்யூனிஸ்டுக் கட்சிப் பெருந்தலைவர்களில் ஒருவரான மணலி கந்தசாமி அவர்கள்; "இந்தச் சட்டத்தை முதல்வர் கருணாநிதி இன்றைக்கு ஒரு துளி 'இங்க்' செலவில் பிரகடனப் படுத்திவிட்டார். லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் இன்றிரவு தங்களது சொந்த வீட்டில் படுக்கிறோம் என்ற ஆனந்த உணர்வோடு படுப்பார்கள்! இதற்காக விவசாயத் தொழிலாளர் வர்க்கம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சிந்திய ரத்தத்துளிகள் கொஞ்சமல்ல" என்று உணர்ச்சி வசப்பட்டுக் குறிப்பிட்டார்.

அப்படித்தான் மத்திய அமைச்சர் சவான் அவர்கள், ஒரு கடிதமூலம் "கல்லக்குடி" பெயருக்கான ஒப்புதலைத் தந்துவிட்டார். ஆனால், அதற்காக அமைக்கப்பட்ட களம், நடைபெற்ற துப்பாக்கிச் சூடு, விழுந்த பிணங்கள், அன்பில் மீதும், கண்ணதாசன் மீதும் ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு- அந்தத்

தியாக வரலாற்றின் தொடர்ச்சிதான் அந்த வெற்றி என்பதை மறந்துவிட முடியுமா?

களங் கண்ட சரித்திரங்கள், கனவாய்ப் பழங் கதையாய்ப் போய் - தியாகங்களைக் காலில் போட்டு மிதிக்கும் ஒரு இருண்ட காலத்திலே இன்றைக்குத் தமிழ் நாடு இருக்கும்போது இந்தக் குறிப்புகளை எழுதுகிறேன்.

அன்று 1970-ஆம் ஆண்டு கல்லக்குடி பெயர் மாற்றம் கிடைத்தமைக்காகத் தமிழகமே விழாக்கோலம் பூண்டது. பொதுச் செயலாளர் நாவலர் அவர்களின் வேண்டுகோள் அறிக்கைக்கிணங்க மாநில முழுதும் வெற்றி விழாக் கூட்டங்கள் நடைபெற்றன. அன்று சென்னையில் நடைபெற்ற அந்த விழாவில் இன்றைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசியது இதோ:

''அண்ணா இட்ட கட்டளையை ஏற்று அன்று கலைஞர் தண்டவாளத்திலே படுத்தபோது ரயிலில் அடிபட்டு இறந்து விடுவோமே என்றோ, நமக்குப்பிறகு நமது குடும்பம் ஆதரவற்ற நிலையில் தவிக்க நேரிடுமே என்றோ, கிஞ்சித்தும் சிந்தித்துப் பாராமல் ஒரே சிந்தனையுடன் இருந்தார். அவர் உள்ளத்திலிருந்து ஒலித்த குரல் எல்லாம்; தமிழ், தமிழகம், அண்ணா என்பவைதான். கலைஞர் போராட்டத்திற்குப் புறப்பட்டபோது ''சென்று வா'' என்று அண்ணா கூறினார். தனக்குப் பிறகு கலைஞர் வரவேண்டும் என்று அண்ணா விரும்பியதால்தான் ''சென்று வா'' என்று கூறினார்."

சென்னைக்கு அடுத்து பெரியதோர் விழாவை நண்பர் அன்பில் அவர்கள் கல்லக்குடியிலேயே ஏற்பாடு செய்தார். விழாவுக்கு முன்னர் நானும் நண்பர்களும் கல்லக்குடி ரயில் நிலையம் சென்று 1953-ல் போராட்டம் நடைபெற்ற இடங்களையெல்லாம் பார்வையிட்டுப் பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தோம். விழாவில் கலந்துகொண்டு வாழ்த்திய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள், "கல்லக்குடி கொண்டான்" என்ற பட்டயத்தை எனக்கு வழங்கியதோடு விரைவில் ''சுயாட்சி கொண்டான்'' என்ற விருதையும் பெறவேண்டும்-அந்த விருதையும் தனது கையாலேயே கொடுக்கவேண்டும் என்று மிக்கப் பரவசத்தோடு கூறினார். அந்த விழாவினையொட்டி ''கல்லக்குடி பழங்காநத்தம்'' என்ற பெயர் பலகையைத் திறந்து வைத்தேன்.

இன்றைக்கும் அந்த வழியாக ரயிலிலோ, காரிலோ செல்லும் போது - என் தலைமையில் நடைபெற்ற அறப் போராட்ட ஊர்வலம் ரயிலடியில் போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் - நடராசன், கேசவன் என்ற இரு இளைஞர்களின் நெஞ்சாங்குழியில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்து அவர்கள் மாண்டு மடிந்த சம்பவம் - அனைத்துமே என் இதயத் திரையில் நிழலாடத் தொடங்கி விடும்.

கல்லக்குடி வெற்றிச் செய்தி கிட்டிய காலகட்டத்திலே தான் எல்லைக் காந்தி என அழைக்கப்படும் கான் அப்துல் கபார்கான் அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்தார்.

அவரது பொதுப்பணிக்காக இந்தியாவில் நிதி திரட்ட வந்த அவரை சென்னை மாநகராட்சி மன்றச் சார்பாக வர வேற்றோம். ஒரு லட்ச ரூபாய் நிதியும் அவருக்கு வழங்கப் பட்டது.

இந்தியா – பாகிஸ்தான் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு முன், எல்லைக் காந்தி அவர்கள், தமது இயக்கத்தைத் தொண்டர்களின் இயக்கமாக நடத்திக் கொண்டிருந்தார். அவரது இளமைக்கால பொதுப்பணியின் தீவிரத்தைக் கண்ட ஒரு போலீஸ் அதிகாரி, அவரை அடக்கிவைக்குமாறு அவரது தந்தையிடம் கூறி மிரட்டினராம். உடனே தந்தை, கபார்கானை அழைத்து, "நீ மட்டுந்தானு பொதுத்தொண்டாற்ற வேண்டும்? மற்றவர்களுக்கில்லாத அக்கறை உனக்கு ஏன்?" என்று கடிந்து கொண்டாராம். "அருமைத் தந்தையே! நீங்கள் ஏன் தொழுகை நடத்துகிறீர்கள்? மற்றவர்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு அதில் எதற்காக?" என்று கபார்கான் கேட்டாராம். "அது எனது கடமை! விட முடியாத கடமை! முக்கிய கடமை!" என்றாராம் தந்தை! "அதைப்போலவே, நானும் பொதுத் தொண்டை, விடமுடியாத கடமையாகக் கருதுகிறேன்" என்று விடையளித்தாராம் கபார்கான்! அவர்தான் எளிய வாழ்க்கையின் இனிய வடிவாய்த் திகழும் எல்லைக் காந்தியானார்.

அண்ணு காலத்தில் தொடங்கப்பட்டிருந்த, சீரணி போன்ற அமைப்புகளையும், கழக ஆட்சியில் ஏழை எளியோருக்காக நடத்தப்பட்ட சாதனைகளையும், எல்லைக் காந்தி அவர்கள் பாராட்டிப் பேசியதோடு, என்னையும் அழைத்து மகிழ்ச்சியுடன் உறவாடி, "இறைவனுக்குப் பிடித்த பணியைச் செய்து வருகிறீர்கள்" என்று புகழ்ந்துரைத்தார்.

# 29

## அர்ச்சகர் சட்டம்

"அறுவை சிகிச்சை வெற்றி—ஆனால் நோயாளி மரணம்" என்று விடுதலையில் ஒரு தலையங்கம் 1972—ஆம் ஆண்டு எழுதப் பட்டது. தலையங்கம் தீட்டியவர் இன்றைய திராவிடர் கழகத் தின் பொதுச் செயலாளர்-எனது இளவல்-தளபதி வீரமணி அவர்களாவார்கள்.

தந்தை பெரியார் அவர்களின் உள்ளக் குமுறலை அப்படியே படம் பிடித்து வெளியிடப்பட்ட தலையங்கம் அது! எக்காரணம் பற்றி அந்தத் தலையங்கம் தீட்டப்பட்டது என்பதை அறிந்துகொள்ள வேண்டாமா? அறிந்து கொண்டால் தானே இந்த நாட்டில் "சமத்துவம்" என்பது வெறும் உதட்டலங் காரச் சொல்லாக உச்சரிக்கப்படுகிறது என்பதும், அந்த சமத்துவம் நிலைக்கச் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்க முடியாமல் அரசியல் சட்டம் என்பது பொம்மலாட்டக்காரனின் கைப்பதுமையாக இருக்கிறது என்பதும் தெளிவாகப் புரிய முடியும்.

1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பெரியார் அவர்கள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அறிவித்தார்கள்.

ஆலயங்களில் கர்ப்பக் கிரகம் வரையில் சாதிப்பாகு பாடின்றி அனைவரும் சென்று ஆண்டவனைத் தொழுதிட வேண்டுமென்றும், அனைவர்க்கும் சாதி உயர்வு தாழ்வு இன்றி அர்ச்சகராகும் உரிமை வேண்டுமென்றும் வலியுறுத்துகிற அடிப்படையில் அந்தக் கிளர்ச்சி அமையுமென்று பெரியார் போர் முரசு கொட்டினர்.

அப்படியொரு கிளர்ச்சி நடத்தாமலே அவரது எண்ணத்தை நடைமுறைக்குக் கொண்டுவர சட்டம் இயற்றப் படும் என உறுதியளித்து, நான்; தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் அறிக்கை கொடுத்தேன்.

"குறிப்பிட்ட வகுப்பினர்தான் அர்ச்சகராக இருக்க வேண்டுமென்று யாரும் இந்த நூற்றாண்டில் வாதாடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காலம் வேகமாகச் சுழன்று மனிதனுக்கு மனிதன் பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது

என்ற கொள்கை வலுப்பெற்று வரும் இந்நாளில் அப்படிப் பட்ட ஒரு பிற்போக்கு எண்ணத்தை யாரும் முரட்டுப்பிடி யாகப் பிடித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். வள்ளுவர், புத்தர், காந்தியடிகள் போன்றோரைப் போற்றுகிறவர்கள்; ஆண்டவனுக்கு அர்ச்சகராக குறிப்பிட்ட சாதியினர்தான் இருந்திடல் வேண்டுமெனல் அநியாயமாகும். அர்ச்சகர்களுக் கென சில தகுதிகள் இருக்க வேண்டும். போற்றக்கூடிய புனிதத் தன்மைகளை அவர்கள் கடைப்பிடித்தாக வேண்டும். அதற்குரிய பயிற்சிகளை அவர்கள் பெற்றாக வேண்டும். அதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. அப்படிப் பயிற்சி பெறுகிறவர்கள் எந்த வகுப்பினராயிருந்தாலும் அவர்கள் அதில் தேர்வு பெற்று அர்ச்சகராக ஆகலாம். அதற்கு விதி முறைகள் வகுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதே சமயம் பரம்பரை அர்ச்சகர் வீட்டுப் பிள்ளைகள் அர்ச்சகராக விரும்பினால் அவர்களுக்கு முதல் சலுகை அளிப்பது பற்றியும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டு, அதன்படி அர்ச்சகர் பதவிகளைப் பிறப்பினால் கணக்கிடாமல் தகுதியொன்றினால் மட்டுமே கணக்கிடப்படக் கூடிய நாள் வந்து விடுமேயானால் ஆண்டவனைத் தொழுதிட ஆலயம் செல்வோர் சாதி வேறு பாடின்றி கர்ப்பக்கிரகம் வரையில் செல்வதற்கும் தடையில்லை என்பதும் கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டதாக ஆகிவிடும் கர்ப்பக்கிரகத்தில் இருக்கின்ற பொருள்களின் பாதுகாப்புக்காக மட்டுமே அந்த இடம், ஒருவர் பொறுப்பில் விடப்பட வேண்டுமே தவிர, அதற்கு சாதி வர்ணம் பூசப்படக் கூடாது என்பதை இந்த அரசு மட்டுமல்ல; ஆண்டவன் எதிரே அனைவரும் சமம் என்ற கருத்தினை ஒப்புக்கொள்கிற எல்லோரும் ஏற்றுக்கொண்டே தீர்வர்.

ஆகவே, இந்த நல்ல நிலை ஏற்பட - ஆலயங்களில் ஆண்டவன் முன்னே சாதியின் பெயரால் மற்றவர்களுக்கு இழைக்கப்படும் இழிவான அநீதி அகன்றிட, விதி முறைகள் செய்திட அரசு முன்வருகிறது என்ற உறுதிமொழியினை ஏற்று பெரியார் அவர்கள், தான் திட்டமிட்டிருக்கிற கிளர்ச்சியினை நிறுத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

இந்த எனது அறிக்கைக்கும் வேண்டுகோளுக்குமிணங்கப் பெரியார் அவர்கள், தான் நடத்த இருந்த போராட்டத்தைத் தள்ளி வைக்கச் சம்மதித்தார்.

அந்த உறுதிமொழிக்கேற்ப 2-12-70-ல் சட்டப் பேரவையில் "அர்ச்சகர் சட்டம்" கொண்டு வரப்பட்டு நிறைவேறியது. இந்து சமய அறக்கட்டளைத் திருத்த மசோதா என்ற பெயரால் விவாதிக்கப்பட்டு நிறைவேறிய அந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேரவையில் காங்கிரஸ் கட்சித் துணைத்தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், மேலவையில் குன்றக்குடி அடிகளார் அவர்களும் பேசியது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல; அந்தச் சட்ட முன்வடிவின் அறிமுகம் கண்டு ஐயத்திற்கு ஆளாகியிருந்த சிலருக்கு ஐயம் போக்கும் வகையிலும் அமைந்தது எனலாம்.

அர்ச்சகர் தேர்வில் வெற்றி பெறும் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்துப் பெருமகனும் கர்ப்பக் கிரகத்தில் நுழைந்து ஆண்டவனை பூஜை செய்யலாம்-என்ற உரிமையை வழங்கும் அந்தச் சட்டத்தைப் புரட்சிகரமான சட்டம் என சமத்துவம் விரும்பிடும் சான்றோர் அனைவரும் பாராட்டினர்.

ஆலயங்களில் நியமிக்கப்படும் அறங்காவலர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவரையும் நியமிக்க வேண்டுமென்பதை மரபாக மட்டுமே கொண்டிருந்த நிலையை மாற்றி, எந்த ஒரு ஆலயத்து அறங்காவலர் குழுவிலும் நிச்சயம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இடம் பெற்றாக வேண்டுமெனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அர்ச்சகர் சட்டம் கண்டு, சமத்துவம் விரும்பாத சனாதனிகள் வெகுண்டார்கள். பல்லாண்டு காலமாக அனுபவித்து வருகிற ஆதிக்கத்தை அவ்வளவு எளிதில் இழந்திடச் சம்மதிப்பார்களா? அதனால் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். 12 ரிட்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அரசியல் சட்டத்தில் மத சம்பந்தமாக அளிக்கப்பட்டுள்ள உறுதிப்படி அர்ச்சகர்கள் தங்கள் தொழிலை நடத்தும் உரிமையை அந்தச் சட்டத்திருத்தம் தடுக்கிறது எனக்கூறி அந்த அடிப்படையில் "ரிட்" மனுக்கள் அளித்திருந்தனர். அந்த வழக்கில் 1972-ஆம் ஆண்டு மார்ச் 14-ஆம் நாள் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது வகுப்பு வேறுபாடற்ற நடவடிக்கை. அந்த நடிவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட உரிமை உண்டு. மனுதாரர்களால் தவறு என்று கூறப்படும் இந்தச் சட்டம், மத சம்பந்தமான நடவடிக்கைகளிலோ

விவகாரங்களிலோ தலையிடவில்லை. எனவே தமிழ்நாடு அரசு கொண்டுவந்த சட்டத்திருத்தம் செல்லுபடியானதே - என்று தீர்ப்பிலே கூறப்பட்டிருந்தபோதிலும், நடைமுறையில் இனிமேல் செய்யக்கூடிய காரியம் என்ற வகையில் அந்தச் சட்டத்தின்படி காரியங்கள் நடைமுறைக்கு வராத அளவுக்கு முடக்கப்பட்டு விட்டது. அது நடைமுறைக்கு வரவேண்டுமென்றால் அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

இப்படியொரு தீர்ப்பு வந்ததைக் கண்டுதான், "விடுதலை" இதழில் "அறுவை சிகிச்சை வெற்றி-ஆனால் நோயாளி மரணம்!" என்ற தலைப்பில் தலையங்கம் வெளிவந்தது.

எத்தனையோ முறை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியும் மத்திய அமைச்சர்களிடத்தில் விவாதித்தும் கூட அந்த அரசியல் சட்டத் திருத்தப் பணி நடைபெறவே இல்லை.

இது கண்டு கொதிப்படைந்த பெரியார் அவர்கள், 1973-ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9 ஆகிய நாட்களில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் நாடு தழுவிய ஒரு போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஆனால் அந்தப் போராட்டத்தை நடத்தாமலேயே 1973 ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் பெரியார் அவர்கள் மறைந்து விட்டார்கள்.

சென்னை அண்ணா மேம்பாலத்திற்கருகே 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ந் தேதி பெரியார் அவர்களின் சிலை திறப்பு விழா அ.தி.மு.க. சார்பாக நடைபெற்றபோது திராவிடர் கழகத்தின் சார்பில் அந்த விழாவில் கலந்துகொண்ட அன்னை மணியம்மையார் அவர்கள் முதலமைச்சரையும் வைத்துக் கொண்டு பேசும்போது,

"அர்ச்சகர் சட்டம் முடமாக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, அதற்கென அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்கிற ஆவலை உள்ளத்தில் தேக்கி வைத்துக் கொண்டு, அதற்காக ஒரு போராட்டத்தையே நடத்த பெரியார் திட்டமிட்டிருந்தார். அதற்குள் மறைந்து விட்டார். முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பெரியார் மறைந்த நேரத்தில்

ஒன்றைக் குறிப்பிட்டார். பெரியாருடைய ஆசைகளை எல்லாம் எவ்வளவோ நிறைவேற்றினோம்; ஆனால் இந்த அர்ச்சகர் சட்டத்தை எழுந்து நடமாடவைக்க முடியவில்லை. ஆகவே அவருடைய நெஞ்சில் ஒரு முள்ளோடுதான் புதைத்திருக்கிறோம் என்று சொன்னார். முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களே, அரசியல் சட்டத்தைத் திருத்தி, அர்ச்சகர் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வழிவகை செய்யுங்கள்" என்று உருக்கத்துடன் கேட்டுக் கொண்டார்.

மணியம்மையார் அவர்கள் இவ்வாறு அந்த விழாவில் பெரியாரின் கடைசி ஆசையைப்பற்றித் தெரிவித்துப் பேசியதற்கு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அதே விழாவில் பதில் சொன்னார்.

"இங்கே பேசிய மணியம்மையார் எந்தச் சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகராகலாம் என்று பெரியார் விரும்பினார்; அதை கருணாநிதி நிறைவேற்றினார் என்றார். நான் மறுத்துச் சொல்வதற்காக அம்மையார் கோபித்துக் கொள்ளக் கூடாது. கோயில்களையே வேண்டாம் என்ற பெரியார் அர்ச்சகராவது பற்றிப் பேசினாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது" என்றார்.


"பெரியாரின் சிலையைத் திறந்து வைத்துவிட்டு பெரியாரைப் பற்றிப் பேசாமல் இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லியிருக்கிறார்" என்று மணியம்மையார் அவர்கள் அது பற்றி பின்னர் ஒரு அறிக்கைமூலம் தெரிவித்தார்.

கோயில்கள் இருக்கும்வரையில்—அங்கு அர்ச்சனைகள் நடைபெறும் வரையில் அங்கே மனித சமூகத்தின் சமநீதி காக்கப்பட வேண்டுமென்பதுதான் பெரியாரின் கருத்து அதைக்கூடப் புரிந்து கொள்ளாமல் எம். ஜி. ஆர். அப்போது அப்படிக் கூறினார்.

1978-ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சென்னை கடற்கரையில் நான் பேசும் போது மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களையும் அந்த மேடையில் வைத்துக் கொண்டு மத்திய அரசுக்கு விடுத்த வேண்டுகோளில்- "பெரியாருக்கு எத்தனையோ விருப்பங்கள் உண்டு. சாதிபேதமற்ற

சமுதாயம், மூட நம்பிக்கை ஒழிந்த சமுதாயம் இதையெல்லாம் காணவேண்டுமென்று பெரியார் ஆசைப்பட்டார் என்றாலும், அந்த ஆசைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன என்றாலும், இந்த ஆசை ஒன்றை நிறைவேற்ற முடியாமல் பெரியார் மறைந்துவிட்டார். ஆகவே மத்திய அரசுக்கு இந்த நூற்றாண்டு விழாவில் நான் இந்தப் பொதுக்கூட்டத்தின் மூலமாக இங்கே வெள்ளமெனத் திரண்டிருக்கின்ற உங்கள் சார்பாக விடுக்கின்ற வேண்டுகோள், அர்ச்சகர் சட்டம் நடைமுறைக்கு வர அரசியல் சட்டத்தைத் திருத்திக் கொடுங்கள் என்கிற வேண்டுகோள்" என்பதாகும்.

ஆனால் இந்த வேண்டுகோள் இன்றளவும் நிறைவேற்றப் படவில்லை.



# 30

## ஐம்பெரும் முழக்கம்

நாமக்கல் கவிஞர், பரலி சு. நெல்லையப்பர், வீரவாஞ்சியின் உறவினர் ஆகியோர்க்கு அரசின் சார்பில் நிதியுதவி செய்தது போல தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்டத்தில் ஈடுபட்டு காலவரையற்ற உண்ணாநோன்பு மேற்கொண்டு காமராஜர் ஆட்சிக் காலத்திலே உயிர்நீத்த விருதுநகர் தியாகி சங்கரலிங்க நாடார் அவர்களின் துணைவியார் செந்தியம்மாள் அவர்களுக்கு அரசின் சார்பில் மாதந்தோறும் 150 ரூபாய் வழங்கிட ஆணையொன்றும் 1970 பிப்ரவரி திங்களில் பிறப்பித்தேன்.

1970–பிப்ரவரி 3–ஆம் நாள் அண்ணா அவர்களின் முதலாண்டு நினைவு நாள்! அரசின் சார்பில் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து அன்று மாலை சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அண்ணா அஞ்சல் தலை வெளியீட்டு விழா நடைபெற்றது. அந்த விழாவில் இசைமணி சீர்காழி கோவிந்தராசன் அவர்கள் அண்ணா பற்றிப் பாடிய பாடல் விழா மண்டபத்தையே சோகக் கடலில் ஆழ்த்தியது.

அஞ்சல்தலை தயாரிப்பதற்கேற்ற அண்ணாவின் புகைப் படமொன்றை மத்தியில் உள்ளோர் கேட்டபோது, அந்த அஞ்சல் தலையில் தமிழும் இடம்பெற வேண்டுமென்பதற்காக, அந்தப் படத்துடன் "அண்ணாதுரை" என்ற அண்ணாவின் கையெழுத்தையும் இணைத்து ஒட்டி அனுப்பியிருந்தோம். இல்லாவிட்டால் அந்த அஞ்சல் தலையில் தமிழே தலைகாட்டி யிருக்காது. ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் தலைமையில் மத்திய அமைச்சர் ஷெர்சிங் அவர்கள் வெளியிட அஞ்சல் தலையை நான் பெற்றுக் கொண்டேன். அப்போது என் கண்ணீரில் அந்த அஞ்சல் தலை நனைந்தது.

அந்தக் கண்ணீர் அதே பிப்ரவரி திங்கள் திருச்சியில் நடைபெற்ற தி.மு. கழக மாநாட்டில் வெள்ளமாகப் பெருக் கெடுத்தது. அண்ணா இல்லாமல் நடைபெற்ற முதல் தி.மு.க. மாநாடு அதுதான். அந்த மாநாட்டில் பஞ்சாப் முதலமைச்சர்

சூர்ஜித்சிங் அவர்கள் கலந்து கொண்டு மாநில உரிமைகள் நிலை நாட்டப்பட அழுத்தமான கருத்துக்களை எடுத்துரைத்தார்.

அந்த மாநாட்டிலேதான் இறுதியாக நான் உரையாற்றிய போது கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டேன்.

1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்;
2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்.
3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்;
4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்;
5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி-ஆம்; 1970 பிப்ரவரி 22-ஆம் நாள் திருச்சியில் எழுப்பப்பட்ட அந்த ஒலி முழக்கம் தான் இன்றைக்கும் தி. மு. கழகத்தின் இதய கீதமாக இருந்து வருகிறது.

நண்பர் அன்பில் அவர்கள்தான் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர். மாநாட்டுத் தலைவர் அண்ணன் சி. பி. சிற்றரசு. திறப்பாளர் கழகப் பொருளாளராக இருந்த நண்பர் எம். ஜி. ஆர்.

ஒரு மாநில மாநாட்டைப் போல விளங்கிய அந்த மாவட்ட மாநாட்டின் ஊர்வலச் சிறப்பு குறித்து முரசொலியில் தம்பி மாறன் எழுதிய ஒரு சொல்லோவியத்தை இங்கே நினைவூட்டுகிறேன்.

''ஒரு மாநில மாநாட்டை நடத்திவிட்டு மாவட்ட மாநாடு என்று அன்பிலார் பொய் கூறிவிட்டார். திருச்சி மாநாடு பல விதங்களில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது.

அண்ணாவிற்குப் பிறகு கழக வரலாற்றில் திருச்சி ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

பிற்பகல் நான்கு மணிக்கே திருச்சி நகரமே திரண்டு வந்து ஊர்வலப்பாதையில் இருமருங்கிலும் நிறைந்துவிட்டது. ஆம்; திருச்சி நகரமே மக்கள் வெள்ளத்தில் மூழ்கியது!

திருச்சி நண்பர்கள் நல்ல வேலை செய்தார்கள்! பகலில் ஊர்வலம் நடத்தி வெய்யிலின் கொடுமையில் நமது தோழர்களை வாட்டி வதைக்காமல் இரவு நேரத்து ஊர்வலமாகத் திட்டமிட்டு, அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு ரகத்திலும் ஒளி விளக்குகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

சொற்பொழிவு-நாடகம்-கலை நிகழ்ச்சி - பத்திரிகை - சுவரொட்டி ஆகியவற்றை பலமான பிரச்சார ஆயுதங்களாக தி.மு. கழகம் பயன்படுத்தி வருவதுபோல உலகத்தில் எந்த அரசியல் கட்சியும் பயன்படுத்துவதில்லை என்று நமது இயக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும் ஒரு அமெரிக்க மாணவர் என்னிடம் குறிப்பிட்டார்! அந்தப் பட்டியலிலே நாம் ஊர்வலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஊர்வலக் கலையிலே நாம் வல்லவர்களாக இருப்பதால் தான் இந்தியாவிலேயே இதுவரை நடந்ததில்லை என்று கூறத் தகும் அளவிற்கு உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தை நடத்த முடிந்தது. ஊர்வலத்தை நேரில் கண்ட அப்போதைய குடியரசுத் தலைவர் திரு. ஜாகிர் உசேன், டெல்லி குடியரசு நாள் ஊர்வலத்திலே கூட இத்தகைய கலையழகு மிகுந்த பவனியைக் கண்டதில்லை என்றல்லவா நமது அண்ணனிடம் கூறினர்.

நினைவில்லையா உனக்கு நமது பழைய ஊர்வல வரலாறு!

கல்லக்குடி போராட்ட சிறை வாசமேற்று கலைஞர் எழும்பூர் வந்திறங்கிய நேரம் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றது தலைநகரத்துவாசிகளிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தவில்லையா?

விலைவாசி போராட்ட சிறைவாசம் முடித்து நமது அண்ணன் வேலூரிலிருந்து தலைநகரம் வந்த காலை, ஊர்வலத்தில் அண்ணன் வந்த பவனியை அப்போதைய சுதேசமித்திரன் வார ஏடு எப்படி வர்ணித்திருந்தது தெரியுமா?

உலகெங்கும் வெற்றிகளைக் குவித்து ஜூலியஸ் சீசர் ரோம் நகரம் வந்தபோது அவருக்குத் தரப்பட்ட வரவேற்புக்கும், ஐரோப்பிய வெற்றிகளை ஈட்டி பாரீஸ் திரும்பியபோது நெப்போலியனுக்குத் தரப்பட்ட வரவேற்பிற்கும் அல்லவா அந்த ஏடு ஒப்பிட்டிருந்தது.

முதன் முதலில் மதுரை மாநாட்டு ஊர்வலத்தில்தான் பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன. அதைக் கண்டு மகிழ்ந்த அண்ணன் அதை அல்ஜீரிய விடுதலை வீரர்களின் அணி வகுப்பிற்கல்லவா ஒப்பிட்டார்!

திருச்சி ஊர்வலம் அலங்கார ஒளிவிளக்கு ரதங்களால்-கிராமிய கலைநிகழ்ச்சிகளால் சிறப்புப் பெறுகிறது. எத்தனை

விதமான அண்ணனின் திரு உருவங்களை ஏந்தி வந்தார்கள் தெரியுமா? அண்ணன் இருந்திருந்தால், அன்று மதுரை மாநாட்டு ஊர்வலத்தை அல்ஜீரிய அணிவகுப்பிற்கு ஒப்பிட்டவர் இந்த ஊர்வலத்திற்கு என்ன உவமை கூறிடுவார் என்று எண்ணத்தக்க விதத்திலே திருச்சியின் எழுச்சிமிகு ஊர்வலம் அமைந்திருந்தது!''

ஆனால் ஒன்று, அந்த எழிலும் எழுச்சியும் கொண்ட ஊர்வலத்தின் தொடக்கத்தில் நான் ஒரு பெரும் ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்தேன். ஊர்வலத்தில் தலைவர்கள் அமர்வதற்காக அலங்கரிக்கப்பட்ட ரதம், திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்குப் பின்புறமாக இருந்தது. அதில் நாங்கள் அமர்ந்திருந்தோம். ஊர்வலத்தின் முகப்பு கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் தெரியவில்லை.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன்பு அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க என்னை அன்பிலும், பராங்குசமும், எம். எஸ். மணியும், ராபியும் அழைத்துச் சென்றார்கள். சிலையையொட்டி வைக்கப்பட்டிருந்த ஏணிப்படிகளில் ஏறி, சிலையருகே நின்று கொண்டு மிகப்பெரிய மாலையொன்றை அண்ணா சிலையின் கழுத்தில் அணிவித்தேன். ஒரு இமைப் பொழுது நானே என்னைக் கீழே தள்ளிக் கொள்ளும் திடீர் முயற்சியில் ஈடுபடாமல் இருந்திருந்தால் அண்ணாவின் சிலையைக் கட்டித் தழுவியபடி பிணமாக ஆகியிருப்பேன்.

மாநாட்டை முன்னிட்டு அண்ணா சிலைக்கு மின் விளக்கு அலங்காரம் செய்திருந்தார்கள். மிக நுண்ணிய மின் கம்பிகள் அந்தச் சிலை மீதும், பீடத்திலும் சுற்றப்பட்டிருந்திருக்கின்றன. ஈரம் நிறைந்த மாலையை அணிவித்த மாத்திரத்தில் பயங்கரமான ''ஷாக்'' அடித்து என்னை மிக வேகமாக இழுத்திருக்கிறது. ஒருக்கணத்தில் நிலைமையைப் புரிந்து கொண்டதால் மல்லாந்தபடியே அந்தப் பீடத்திலிருந்து கீழே சாய்ந்தேன். ஏதோ ஆபத்து நடந்துவிட்டது என்ற திகிலோடு பராங்குசமும் குளித்தலை முத்துகிருஷ்ணனும் மற்ற நண்பர்களும் என்னை அப்படியே தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள்.

அந்த ஒரு கால் விநாடிக்கும் குறைவான நேரம் – நான் மட்டும் சமாளித்திருக்காவிட்டால் என் ஆருயிர் அண்ணனின் சிலையைக் கட்டிப்பிடித்தவாறே அமைதி அடைந்திருப்பேன்! என்ன செய்வது; அது மட்டும் அன்றைக்கு நடந்திருந்தால்

என் வாழ்க்கையில் எத்தனை நண்பர்கள் எனக்குத் துரோகி யானார்கள் என்ற கசப்பு மிகுந்த கணக்கே என் கவனத்திற்கு வந்திருக்காது – என் நெஞ்சத்தையும் கலக்கியிருக்காது!

பழமைவாதிகள் கூற்றுப்படி சொல்ல வேண்டுமேயானால் பட வேண்டிய வேதனைகள் பல இருக்கும்போது-சுடு சொல் லாளர் விடுக்கணைகளை ஆயிரம் ஆயிரமெனத் தாங்க வேண்டு மென்று தலையில் எழுதியிருக்கும்போது-தமிழன் என்ற உணர்ச்சி யற்ற தக்கை மனிதர்களின் தன்மானமிழந்த செயல்களைக்கண்டு குமுறியழ வேண்டுமென்று விதியிருக்கும்போது - அவ்வளவு சீக்கிரம் போய்விட முடியுமா என்ன?

அதற்கு மாறாக இப்படி நினைத்துப் பார்த்து ஆறுதல் கொள்கிறேன். அன்று மரணத்தின் வாயிலிருந்து மீண்ட காரணத்தினால்தான் என் உடன் பிறப்புக்களின் ஒத்துழைப் புடன் தமிழ்ச் சமுதாயத்திற்கு என்னாலியன்ற தொண்டாற்ற முடிந்தது என்பதுதான் அந்த ஆறுதல். அந்த இதய உணர் வோடு நான் சென்னையில் எனது பிறந்தநாள் விழாப் பொதுக் கூட்டமொன்றில் கூறிய வாசகங்களை என்றைக்குமே மறக்க மாட்டேன்.

தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைக் கடலில் தூக்கி வீசினாலும் -அதில் கட்டுமரமாகத்தான் மிதப்பேன். அதில் ஏறி நீங்கள் சவாரி செய்யலாம்.

தமிழர்களே! தமிழர்களே! என்னை நீங்கள் நெருப்பில் தூக்கிப் போட்டாலும், அதிலே நான் விறகாகத்தான் விழுவேன்- அடுப்பெரித்து நீங்கள் சமைத்துச் சாப்பிடலாம்!

தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைப் பாறையில் மோதினாலும் சிதறு தேங்காயாகத்தான் உடைவேன்; நீங்கள் என்னைப் பொறுக்கியெடுத்து தின்று மகிழலாம்!

இந்த உணர்வின் வடிவமாக ஆகிவிட்ட நான் திருச்சி மாநாட்டில் நிறைவு உரை ஆற்ற எழுந்த போது என்றுமில்லாத அளவுக்கு என் நாடி நரம்புகள் எல்லாம் அதிர்ந்தன. மேடையில் கழக முன்னணியினர் அனைவரும் இருந்தனர். பொருளாளர் எம். ஜி. ஆர் மட்டும் முதல் நாள் மாநாட்டுத் திறப்பு விழா உரையை நிகழ்த்திவிட்டு, அன்று காலையிலேயே விடைபெற்றுக் கொண்டு படப்பிடிப்புக்காக வெளியூர் சென்று விட்டார்.

அண்ணா இல்லாத முதல் மாநாடு என்று குறிப்பிட்டேனே; அந்த மாநாட்டில் நான் ஆற்றிய உரையின் முதல் பகுதியை நினைவூட்டித்தான் ஆகவேண்டும்.

கழகக் கண்மணிகளே!

அருமைத் தாய்மார்களே!

பெரியோர்களே!

"பேரறிஞர் அண்ணா அவர்களே"...

என்று அழைத்துப் பேச்சைத் தொடங்கவேண்டிய நான்- இன்று அந்த அண்ணன் எங்கே? எங்கே? என்று தேடுகிற நிலைமையில் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

"தம்பி வா! தலைமையேற்க வா?" என்று அழைத்து ஆணையிட்டதும், கேட்டு ஓடிவந்த நாவலர் இங்கே அமர்ந்திருக்கிறார். அழைத்து ஆணையிட்ட நீ எங்கே போய்விட்டாய்?

மதியழகனுக்கு எப்போதுமே பிடிவாதக் குணம் அதிகம்; ஆனாலும் தான் நினைத்ததைப் பேசி நம்மைக் கவர்ந்து தன் பக்கம் இழுக்கத் தவறமாட்டார் என்று அடிக்கடி புகழ்வீர்களே, அண்ணா! அந்தப் பிடிவாதக்கார மதியழகன் இங்கே அமர்ந்திருக்கிறார். அவரைப் பிரிந்து எங்கே அண்ணா சென்றுவிட்டீர்கள்?

சிற்றரசு பேசினால் நான் குலுங்கக் குலுங்கச் சிரித்து விடுகிறேனடா தம்பி! என்று சிரிப்பீர்களே அண்ணா, அந்தச் சிற்றரசு இங்கே எங்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தபோது அதை ரசிக்காமல் எங்கே போய்விட்டீர்கள் அண்ணா?

பக்கத்தில் என். வி. என். அமர்ந்து, வெற்றிலை மடித்துத் தர, அதை வாங்கி வெற்றிச் சிரிப்போடு வாய் குழையக் குழையப் போட்டுக் கொள்வீர்களே, அண்ணா! அந்த வெற்றிலை மடித்துத் தர இங்கே என். வி. என். இருக்கிறார். வெற்றிகளைத் தந்த எங்கள் அண்ணனே, நீ எங்கே போய்விட்டாய்?

ஆழமாகச் சிந்திப்பதும்-அமைதியாக இருப்பதும்-ஆணித்தரமாக வாதிடுவதும் அன்பழகனின் இயல்பு எனப் பாராட்டுவீர்களே அண்ணா - அந்தப் பேராசிரியர் இங்குளார்; பெருமைமிகு அண்ணனே! நீ எங்கே போய்விட்டாய்?

"என்ன முத்து? கோபமாக வருகிறாயா? உட்கார்!" என்று புன்னகை தவழச் சொன்னதும், கோபத்தை எல்லாம் மறந்துவிட்

டுக் குளிர்ந்த முகத்தோடு எதிரே அமர்வாரே; அந்த மதுரை முத்து இந்த மாநாட்டிலே இருக்கிறார்; ஆனால் அவரைக் குளிரவைக்கும் அண்ணனே நீ எங்கே போய்விட்டாய்?

"மன்னை, மன்னார்குடிக்கு வர வேண்டாமென்று கருணாநிதி தான் சொல்கிறான், என்மேல் குற்றமில்லையப்பா" என்று குறும்பு செய்வீர்களே, அந்தக் குறும்பைத் தாங்கிக் கொள்கிற மன்னை நாராயணசாமி இங்கே இருக்கிறார். அண்ணனே, எங்கே போய் விட்டாய்?

"அன்பில்! எங்கே கொஞ்சம் கண்ணைக் காட்டு" என்று கண்ணைக் காட்டச் சொல்லி குமிழ்க் கண்களைப் பார்த்து ரசிப்பீர் களே, அந்தக் கண்ணைக் காட்ட நம்முடைய அன்பில் இங்கே இருக்கிறார். அண்ணனே, கண்மூடி நீ எங்கே போய்விட்டாய்?

"சென்று வா தம்பி! வென்று வா தம்பி!" என்று கல்லக்குடி போராட்டத்திற்கு சிதம்பரத்திலே என்னை வழியனுப்பி வைத்தீர் களே, அண்ணா! வென்று வந்திருக்கிறேன்; வென்று வா என்று சொன்ன நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? எங்கே போய் விட்டீர்கள்? என்று கேட்டுத்தான் இந்த மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களே என்று நான் அழைக்கிறேன்.

எனக்கு நம்பிக்கை உண்டு. இங்கேயிருக்கிற எங்களுக் கெல்லாம் நம்பிக்கை உண்டு. அண்ணா நீ இங்கேதானிருக் கிறாய். இந்தப் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறாய். இந்த ஆரவாரத்தைக் காண்கிறாய். இங்கே இருக்கின்ற உன்னு டைய அருமைத் தங்கைகளையெல்லாம் பார்க்கிறாய். தம்பிகளின் பட்டாளங்களைக் காண்கிறாய். மலர் போன்ற மழலைக் குழந்தை களின் இதழ் ஓரத்தில் முத்தமிடுகிற அண்ணனே, நீ எங்கும் போகவில்லை. இங்கேதான் இருக்கிறாய்! இங்கேதான் இருக் கிறாய்! எங்களுடைய நெஞ்சங்களில்தான் இருக்கிறாய் அண்ணனே! இங்கேதான் இருக்கிறாய்!


ஒவ்வொரு மாநாட்டிலும் கழகத்தினுடைய பொருளாளர் என்கிற முறையில் நான் கணக்குகளை எல்லாம் ஒப்படைக்க மாநாட்டு மேடைக்கு வர; எவ்வளவு வசூல் என்று அண்ணா கேட்க - சொல்ல முடியாது, அது "சஸ்பென்ஸ்" - என்று அவரி டத்தில் நான் சொல்ல - 'சும்மா சொல், நான் வெளியே சொல்ல மாட்டேன்' என்று அவர் வேடிக்கைபேச-பக்கத்தில் இருக்கிற ப. உ. சண்முகம் வசூலை அவரிடம் சொல்லிவிட- 'பார்த்தாயா பார்த்தாயா, உன்னுடைய நண்பனே சொல்லிவிட்டான்' என் றெல்லாம் கேலி பேசுவாரே, அந்த அண்ணன் மேடையில்

நின்று பேசுகின்ற அந்த எழில் ஓவியத்தைக் கண்டு கண்டு களித்து வந்த நான் இன்றைய தினம் அந்த இடத்திலே நின்று பேசுவது என்றால் என்னுடைய உடல் எல்லாம் நடுங்குகிறது! என்னுடைய உள்ளமெல்லாம் குமுறுகிறது! என் கண்கள் குளமாகின்றன!

தாயை இழந்த நேரத்திலே – தந்தையை இழந்த நேரத்திலே எனக்கு ஏற்படாத கவலையை நான் கல்லறைக்குச் செல்கிறவரையில் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார் என்னுடைய அண்ணன்!

அண்ணாவிற்குப் பிறகு இந்தப் பெரிய பொறுப்பினை என்னுடைய தோள்களிலே சுமத்தி வைத்திருக்கின்ற கழகத்தின் தங்கங்களே! உங்களையெல்லாம் நம்பித்தான் நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு அண்ணாவைத் தெரிகிறீர்கள். அண்ணன் ஒருவன் இருந்து எனக்கு வழங்க வேண்டிய ஆறுதலை- எனக்குத் தர வேண்டிய அறிவுரையை நான்கு கோடி தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் எனக்குத் தந்து கொண்டிருக்கிறீர்கள்."

-இவ்வாறு கண்கள் நீர்வீழ்ச்சிகளாக மாறிட முன்னுரையை ஆரம்பித்து, தொடர்ந்து நான் ஆற்றிய நீண்ட உரையில் கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களுக்கு விளக்கமுரைத்தேன். மாநில சுயாட்சிக் கொள்கைக்கான தீப ஒளி திருச்சி மாநாட்டில் சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது.



# 31

## "தமிழ் உணர்வும் தமிழக உரிமையும்"

சிறந்த தமிழ்ப் படம், சிறந்த தமிழ்ப்பட இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த எழுத்தாளர், பாடலாசிரியர் என்று பல முனைகளில் திரைப்படத் துறையில் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் பரிசுகள் வழங்குகிற நிகழ்ச்சியை அண்ணா அவர்கள் உருவாக்கியதையொட்டி 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நடைபெற்ற அந்தப் பரிசளிப்பு விழாவின்போது "இனித் தமிழக அரசு நிகழ்ச்சிகளில் தொடக் கத்தில் இறை வணக்கம் என்பது தமிழ்த்தாய் வாழ்த்தாக இருக்குமென்றும், "நீராருங் கடலுடுத்த" எனும் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய அந்தப் பாடலே அந்த வாழ்த்தாக அமையு மென்றும் அறிவித்தேன்.

வாழ்த்துப் பாடலுக்கு ஏற்றவகையில் அந்தப் பாட்டை ஓரளவு குறைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. மனோன்மணி யம் சுந்தரம் பிள்ளை எழுதிய அந்தப் பாடலில் சமஸ்கிருத மொழி உலக வழக்கு ஒழிந்த மொழி என்பதை "ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து" என்று குறித்துத் தமிழ் மொழியைப் புகழ்ந்தி ருந்தார்.

அரசு நிகழ்ச்சியில் - அதுவும் தமிழ்த் தாய் வாழ்த்தில் - மற்றொரு மொழியைக் குறைத்தும் பழித்தும் கூறுதல் வேண்டா மென்பதற்காகவும்- "அழிந்து, ஒழிந்து" என்ற சொற்களை ஒரு பகுதியினர் அமங்கலச் சொற்கள் எனக் கருதி முகஞ்சுளிப்பர் என்பதற்காகவும்; அந்த வரியையே அகற்றிவிட்டு இசையமைக் குமாறு கேட்டுக் கொண்டேன்.

**"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்**
**சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்**
**தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநல் திருநாடும்**
**தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே**
**அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற**
**எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே**
**உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"**

இவ்வாறு இசைக்கேற்பப் பாடல் ஒழுங்குப்படுத்தப் பட்டது.

மெல்லிசை மன்னர் எனப் போற்றப்படும் விசுவநாதன் இசையமைக்க - பின்னணி இசைப் புகழ் மணிகளான சௌந்திர ராசன், திருமதி சுசிலா ஆகியோர் பாடிய அந்த வாழ்த்து இசைத் தட்டுகளாக வெளியிடப்பட்டு, தமிழக அரசு விழாக்களில் பயன் படுத்தப்பட்டன.

அரசு விழாக்களில் தமிழ்த் தாய் வாழ்த்து என நான் அறிவித்தவுடனே - அதற்கும் எதிர்ப்பு கிளம்பிடத் தவற வில்லை!

"ஆனந்த விகடன்" இதழில் கருத்துரை தீட்டிய பிரபல எழுத்தாளர் திரு. கி. வா. ஜெகந்நாதன் அவர்கள், தமிழ் ஒரு குட்டி தேவதை என்றும், மொழி வாழ்த்துப் பாடலைக் கடவுள் வாழ்த்துப் பாடலாக மாற்றியது பொருத்தமற்றது என்றும் அதற்குப் பதிலாக "அங்கிங் கெனாதபடி" எனத் தொடங்கும் தாயுமானவர் பாடலைப் பாடலாமென்றும் குறிப்பிட்டிருந்தார். மெயில் போன்ற வேறு சில ஏடுகளிலும் மறுப்புக் கருத்துக்கள் வெளிவந்தன.

அப்போது பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் தமிழக அரசு எடுத்த முடிவை வரவேற்று விடுத்த அறிக்கையில் எதிர்க் கருத்தாளர்களுக்குத் தக்க பதில் அளித் திருந்தார். அந்த அறிக்கை மிக முக்கியமானது என்பதால் இங்கே அதனைக் குறிப்பிடுவது பயனுள்ள ஒன்றாகும்.

"தமிழ் இனத்தின் கடவுள் வணக்கப் பாடலாக பேராசிரியர் சுந்தரனாரின் "மனோன்மணீய" வணக்கப் பாடலையே பாடவேண்டுமென்ற கருத்து பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழகப் புலவர் குழுவில் தீர்மானமாக வந்தது அந்தப் பாடலில் சமஸ்கிருதத்தைவிட தமிழுக்கு உயர்வு கொடுக்கப்பட்டி ருக்கிறது என்பதனால் சமஸ்கிருதப் பற்றாளர் சிலர் எதிர்த்தனர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றோர் புலவர் குழுவி லிருந்து விலகுவதற்கு இதுவே வழி வகுத்தது. தாயுமானவர் பாடலைப் பாடலாமென்றும் திருக்குறள் முதல் அதிகாரத்தைப் பாடலாமென்றும் இதன்பின் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தாயுமானவர் பாடல், இந்து மதத்தை பெரிதும் சார்ந்தது எனப் பிற மதத்தினர் எதிர்த்தனர்.

திருக்குறள் முதல் அதிகாரத்துக்குக்கூட அது "தாள்" 'அடி'' என்று கூறுவதால் உருவ வணக்கத்தின் சாயலுடையது என்று கிறித்துவ, இஸ்லாமியப் புலவர்கள் சிலர் குறைப் பட்டனர்.

மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளையை விட இந்து மதத்தைக் கரைத்துக் குடித்தவர், வேதாந்த ஆராய்ச்சியில், கடவுள் ஆராய்ச்சியில் கரை கண்டவர் மிகச் சிலரே இருக்க முடியும்.

அத்தகையவர் இந்து மதத்தையோ வேறு எந்த மதத்தையோ புண்படுத்தாமல் எல்லா மதத்தினரும் ஒப்புக் கொள்ளத்தக்க விதத்தில் தமிழ் மொழி உருவாகவே பாடிய தேசியக் கடவுள் பாடல்தான் ''நீராருங் கடலுடுத்த'' என்ற பாடலாகும். அந்த வாழ்த்துப் பாடலைத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தேர்ந்தெடுத்தார் என்றால், அது அவர் கலைப் பண்புக்கு, தமிழன்புக்கு சீரிய சான்றாகும்".

பன்மொழிப் புலவர் அப்பா துரையாரின் இந்தக் கருத்தினை யொட்டி சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்களும் அறிக்கை யொன்றினை விடுத்தார்.

"நீராருங் கடலுடுத்த" என்று தொடங்கும் பாடல் அரசு விழாக்களிலும், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளி லும் பாடப்பட வேண்டுமென்று கலைஞர் கொடுத்த அறிவிப்பு, தமிழ்ப் மொழிப் பற்றுடைய அனைவர்க்கும் கரும்பாக இனித் திடும்போது - ஏனோ ஆனந்த விகடனுக்கு மட்டும் வேம்பாகக் கசக்கிறது! அரசு விழாக்களில் தமிழைத் தெய்வமாக வழி படுவோம் எனக் கலைஞர் கூறியிருக்கிறார்.

மொழியைத் தெய்வமாக வழி படுவது பிழையெனில் இந்தப் பிழையை முதலில் செய்த பெருமை, வடமொழியா ளர்க்கே உரிமை! மொழி வாழ்த்தையே கடவுள் வாழ்த்தாகப் பாடுவது பொருத்த மற்றது என்கிறார் கி. வா. ஜ! "ஓம்" என்ற எழுத்து வடிவம்தான் ஒலி வடிவமாக - இறை வடிவமாக - பிரணவ மந்திரமாக வழிபடப் படுகிறது என்பதை அவர் மறந்தார் போலும்!"

திரு. ம. பொ. சி. அவர்களைத் தொடர்ந்து தமிழ் அறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் ''நாடும் மொழியும் ஒருங்கே போற்றப்படும் சிறப்புக்குரிய அந்தப் பாடல் தமிழக மக்கள் ஏற்கத்தக்க வாழ்த்துப் பாடல்" என்று அறிவித்தார்.

தமிழ்த் தாய் வாழ்த்து - இன்றைக்கும் அரசு தமிழக நிகழ்ச்சிகளில் பாடப்படும்பொழுது, அந்தப் பாடல் எத்துணை எதிர்ப்புகளைச் சமாளித்து வெளிவந்துள்ளது என்ற கடந்த கால சரித்திரம் பலருக்குத் தெரியாமலே கூட இருக்கலாம்; அதனால் தான் நினைவூட்டினேன்!

அடுத்து, *1970 மார்ச் 21*-ஆம் நாள் டெல்லியில் நடை பெற்ற தேசீய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் நான் கலந்து கொண்டு ஆற்றிய உரையும், இறுதியாக வெளியிட்ட அறிவிப்பும் - தி. மு. கழகம், எந்த நிலையிலும் தமிழக மக்களின் உரிமைக்காகத் துணிவுடன் பாடுபடும் போர்க்குணம் கொண்டது என்பதை எடுத்துக்காட்டின!

''கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் கிடைக்கவில்லை என்று அரசியல் தலைவர் களும், பொருளாதார வல்லுநர்களும் வெளிப்படையாகவே கூறி விட்டார்கள். அதற்குக் காரணம், திட்டம் வகுப்பதற்கும், செயல் படுத்துவதற்கும் வேண்டிய எல்லா அதிகாரங்களையும் ஒரே இடத்திலே குவித்து வைத்திருப்பதுதான்.

ஆகவேதான் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி (Regional Autonomy at the State level and a new Federal set up at the Centre) வேண்டுமென்று நாங்கள் சொல்லி வருகின்றோம். இம்மாதிரி சொல்வதனால் நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வலுவான மத்திய அரசு இருக்க வேண்டுமென்ற கொள்கைக்கும் முரண்பட்டவர்கள் அல்ல.

மத்தியில் வலுவான ஆட்சி இருந்தால்தான் மாநிலங்களுக் கிடையே ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்து உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க முடியும். ஆனால், இன்றையதினம் மத்திய அரசானது சிக்கல் இல்லாத துறைகளில் சிக்கலைத் உண்டாக்குவதும், சிக்கல் இருக்கக் கூடிய இடங்களில் சிக்கலைத் தீர்த்து வைக்க முடியாமல் தவிப்பதுமான சூழ்நிலையில் இருக்கிறது

இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால் அரசியல் சட்டத்தையே மாற்றி அமைக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் அரசியல் சட்டமானது ஒரே கட்சி எல்லா மாநிலங் களிலும் மத்தியிலும் ஆட்சி புரியும் என்ற ஒரு திடமான நம்பிக் கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் காலம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மாநிலக் கட்சிகள் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. ஆனால்

மத்தியில் வேறொரு கட்சி ஆட்சிப் பொறுப்பை வகிக்கிறது. இம்மாதிரி மாறுபட்ட சூழ்நிலையில் மத்திய அரசு உருவாக்கும் ஒவ்வொரு கொள்கையையும் அந்தந்த மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்ப்பது சரியானதல்ல. ஆகவே விரைவில் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் நல்லது என்று என்னுடைய திடமான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு மத்திய அரசுக்குக் கடன் தவணையாக சுமார் 160 கோடி ரூபாய் திருப்பித் தர வேண்டியிருக்கிறது. ஆனால் எங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையோ 140 கோடி ரூபாய்தான். உண்மையைச் சொல்லப் போனால் உங்கள் கடனைத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்காகவே எங்களுக்கு உதவித் தொகை அளிப்பது போல் இருக்கிறது. ஆகவே, கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 900 கோடி ரூபாயில் எங்களுக்குக் கணிசமான உதவி அளிக்கப் பட வேண்டும்.

உரிமைகள் உதாசீனப்படுத்தப்படும்போது, உறவு கொண்டதே தவறோ என்கிற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது.

வறட்சிக்காக நான்கு ஆண்டு காலத்திற்கு ஒதுக்கப்படுகிற நூறு கோடி ரூபாயில் தமிழ்நாட்டிற்கு எதுவுமில்லை என்பதை எங்களால் எந்த விதத்திலும் ஒப்புக் கொள்ள முடியாது.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த 15 ஆண்டுகளாக மக்களும், மாநில அரசும், மத்திய அரசை இடைவிடாது வேண்டிக் கொண்டிருக்கின்றன. சேலத்திற்காகப் பல ஆண்டு காலம் போர்க்குரல் எழுப்பிய நாங்கள், இன்று ஆளுங் கட்சியாக வந்திருக்கிறோம் சேலத்திற்கான ஆரம்ப வேலைகளைத் தீவிரமாகச் செய்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் திட்டக்குழுவிற்கு வந்திருக்கிறார்.

ஆனால் சேலம்தான் இன்னும் வரவில்லை. சேலத்தைப் பற்றிய அறிவிப்பை தமிழ்நாடு மிகுந்த பரபரப்போடும், உணர்ச்சியோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆசையில் கல்லைப போடாமல் சேலம் திட்டத்திற்கான அடிக் கல்லைப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிரதமருக்கு நான் இறுதியாகவும் உறுதியாகவும் ஒன்று கூறிக் கொள்வேன். இந்தக் கூட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றி தங்களது அறிவிப்புத் தேவை. இன்னமும் அறிவிக்காமல் இருப்பதன் நோக்கமென்ன? யார் வந்த பிறகு அறிவிக்கலாம் என்று இருக்கிறீர்கள்?

கூடுதலாக மாநிலங்களுக்கு ஒதுக்கியுள்ள 175 கோடி ரூபாய் எல்லா மாநிலங்களுக்கும், எங்களுடைய தமிழ் நாட்டிற்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். வறட்சிப் பகுதிகளில் வேலை வாய்ப்பிற்கு ஒதுக்கப்படும் நூறு கோடி ரூபாயில் தமிழ் நாட்டை வஞ்சிக்கக் கூடாது. இந்த மூன்றிற்கும் தங்களிடமிருந்து ஒப்புதல் கிடைக்காத வரையில் இந்தத் திட்டத்தை நான்கு கோடி தமிழ் மக்களின் சார்பில் நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் திட்டத்திற்கான சம்மதம் தர முடியாது என்பதையும் திட்ட வட்டமாகக் கூறிக் கொள்கிறேன்."

இவ்வாறு நான் கூறியதின் விளைவாக 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ந் தேதி அன்று நாடாளு மன்றத்தில் பிரதமர் அவர்கள் தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று நான்காம் திட்டத்திலேயே சேலம் உருக்கு ஆலை துவக்கப்படும் என்று என்று அறிவித்தார்.

அதே ஆண்டு செப்டம்பர் திங்கள் 16-ம் நாள் உருக்கு ஆலைக்கான அடிக்கல் நாட்டு விழா என் தலைமையில் நடை பெற்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டது. தொடர்ந்து உருக்காலைக்கான பணிகள் நிறைவேற்றப் பட்டன. நில ஆர்ஜிதம் போன்றவைகள் விரைவு படுத்தப் பட்டன...

ஆனால் கழக ஆட்சி 1976 ஜனவரியில் கலைக்கப்பட்ட பிறகு, உருக்கு ஆலைத் தொழிற்சாலை, உருட்டு ஆலைத் தொழிற்சாலையாக மெலிந்து போயிற்று.

# 32

## கொள்கை வளர்ந்த நிலை

புதுடெல்லியில் நடைபெற்ற தேசீய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் நான் மாநில சுயாட்சி குறித்துப் பேசியதும், சேலம் இரும்பு உருக்காலை இடம் பெறாத நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள இயலாது என்று கடுமையாகக் கூறியதும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்குப் பிடிக்க வில்லை; டெல்லியிலிருந்து திரும்பும் போது விமானத்தில் அவரும் நானும் சந்தித்து அளவளாவிப் பேசிக் கொண்டிருக்கும் போது அவரே அதைக் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டின் தேவைகளுக்காக உரிமையுடன் போராடு வதில் என்ன தவறு இருக்க முடியும் என்று நான் அவருக்குப் பதில் அளித்தேன்.

மத்தியில் இருப்போர் எஜமானர் நிலையிலும் மாநில அரசுகள் எடுபிடிகள் நிலையிலும் இருப்பதை மாற்றியமைத் திடத்தான் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தி. மு. கழகம் தனது கோஷமாகவே ஆக்கிக் கொண்டது. அன்றைக்கு அந்தக் கோஷத்தைக் கேலி செய்தவர்கள் - கண்டித்தவர்கள் - பிரிவினை வாதத்தின் மறுபதிப்பு என்றெல்லாம் திசை திருப்பிய வர்கள், இன்றைக்கு அந்தக் கோஷம் இந்திய அரசியல் அரங்கில் எத்துணை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

தமிழ்நாட்டில், மாநில அளவில் மட்டுமல்லாமல் டெல்லி யிலும் முதலமைச்சர்கள் மாநாட்டில் பிரதமருக்கு நேராக மாநில சுயாட்சி முழக்கத்தை நான் எழுப்பியதால்–அது குறித்து வடபுலத்திலே செல்வாக்குப் பெற்ற ஆங்கில ஏடுகள் விமர் சிக்கத் தொடங்கின.

டெல்லியில் இருந்து வெளிவரும் இ ந் து ஸ் தா ன் டைம்ஸ்'' 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் பின்வருமாறு ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. என். எஸ். ஜே. என்பவர் அந்தக் கட்டுரையைத் தீட்டியிருந்தார்.

"காலம் சுழல்கிறது! தனக்கே உரித்தான முறையில் அது பழைய விஷயங்களுக்காகச் சில இடங்களில் பழி வாங்கவும் செய்கிறது. 1950 வாக்கில் தென்னகத்தில் சுற்றுப் பயணம் செய்த ஜவஹர்லால்நேரு அவர்கள் தி. மு. கழகத்தைக் "கற்காலக் கட்சி" என்றும், விளைவுகள் எதையும் ஏற்படுத்த முடியாத கட்சி என்றும் அலட்சியப்படுத்திப் பேசினார். ஆனால் 1960-ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்தக் கட்சி, வளர்ந்து விட்ட நிலையிலும் தாராள மனப்பான்மையுடன் விளங்குகிறது.

ஜின்னாவின் அரசியலைப்பற்றி நேரு கொண்டிருந்த வஞ்சினம் எத்தகையது என்று மௌலானா ஆசாத், தமது "இந்தியா விடுதலை அடைகிறது" என்ற நூலில் எத்தனை விளக்கமாக எழுதினாரோ, அதே வன்மத்துடன் தி. மு. க. வைப் பற்றி பேசியபோதிலும், காலம் மாறிய நிலையில் இன்று தி. மு. கழகம் காட்டுகிற அரசியல் பெருந்தன்மை - நேரு இருந்தால் அவரை மட்டுமல்ல; தி. மு. க. வின் நிறுவனரும் தன்னிகரில்லாத தலைவருமான திரு. அண்ணா அவர்களையே வியப்படையச் செய்திருக்கும். சுருங்கச் சொல்லின் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி அவர்களின் தலைமையில் தி. மு. கழகம் தன்னுடைய மாநில அரசியல் கட்சி என்ற தனித்தன்மையையும் இழந்து விடாமல், அகில இந்திய அரசியலிலும் தனது சிறப்பான பணியை ஆற்ற முற்படுகிறது. எடுத்த எடுப்பில் இது முன்னுக்குப் பின் முரணான முயற்சிபோல் தோன்றும்; அகில இந்திய அரசியலில் செயல்படும் முயற்சியில் எந்த மாநில அரசியல் கட்சியும் தன்னுடைய மாநில நலன் பற்றிய கொள்கைகளைத் தளர்த்திக் கொள்ள வேண்டியிருக்கும். அதன் விளைவாக அவர்களுக்கு உள்ள ஒரே பலமான மக்களாதரவையும் ஓரளவுக்கு அழித்துக் கொள்ள நேரிடும். திரு. கருணாநிதி அவர்கள் இந்த முரண்பாட்டை மிகவும் சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கிறார்.

திரு. கருணாநிதி அவர்கள் கூட்டாட்சிக்கும் கூட்டணி யாட்சிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கினார். அவர் கொடுத்திருக்கும் அரசியல் விளக்கமானது முற்றிலும் புதுமை யானது.

அவரது திட்டத்தின் இரண்டொரு அம்சங்கள் புரட்சி கரமானவை. முதலாவதாக, இது அரசியல் கட்சிகள் தாமாக முன்வந்து ஏற்படுத்திக் கொள்ளும் அரசியல் ஏற்பாடு அல்ல. அரசியல் சட்டத்திலேயே அமைக்கப்படும் மாற்றம் இது.

திரு. கருணாநிதி அவர்களின் புதிய கருத்துக்கள் பழைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கையின் மறு உருவமே என்று வாதிப்பவர்கள் இதைத் தவறாகப் புரிந்து கொண்டவர்களாவார்கள்.

இந்தக் கருத்துக்களை விரும்பாதவர்கள் கூட இன்றைய அகில இந்திய அரசியல் சூழ்நிலையில் திரு. கருணாநிதி அவர்கள் முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வரும் ஒரு அரசியல் சக்தி என்பதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும்.

ஒரு தலைவருக்குரிய ஆற்றலும் திறமையும் பெற்றவராக அண்ணா அவர்கள் இருந்தாரென்றாலும், அவரிடம் சில அமைதித் தன்மைகளும் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மைகளும் இருந்தன. இதற்கு மாறாக திரு. கருணாநிதி துடிப்புடன், புதுத் திட்டங்களுடன் பெரிய குறிக்கோள்களுடன் தன்னம்பிக்கையுடன் செயல்படுகிறார்.

இதற்கு முன்னர், தான் முதலமைச்சராக வருவதற்கு முன்னால் டெல்லி பக்கம் வந்திருப்பாரோ இல்லையோ என்று கருதப்படும் திரு. கருணாநிதியின் அரசியல் செல்வாக்கு அவர் முதலமைச்சராகும் வரை தமிழகத்தின் எல்லையைத் தாண்டவில்லை. ஆனால் இன்று அவர் அகாலிக் கட்சியுடன் குறிப்பிடத் தக்க அளவுக்கு சிறந்த தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அடுத்து வரும் பத்தாண்டுகளில் அரசியல் உலகத்தின் கவனத்தைத் தன்பால் இழுக்கக்கூடிய தலைவராக திரு. கருணாநிதி இருப்பார்.''

இவ்வாறு ''இந்துஸ்தான் டைம்ஸ்'' ஏடு எழுதியதை யொட்டியே - உலகப் புகழ்பெற்ற ஆங்கில ஏடான ''சங்கர்ஸ்-வீக்லி'' ஒரு கட்டுரை தீட்டியிருந்தது. ''மாநில சுயாட்சி-மத்தியில் கூட்டாட்சி'' என்ற கோஷத்தை நான் எழுப்பிய பிறகு, 'இந்த வார மனிதர்'' என்று தலைப்பிட்டு அந்த ஏட்டில் எழுதப்பட்டிருந்த கருத்துக்களை நான் நினைவூட்ட விரும்புவது; என்னைப் புகழ்ந்துரைத்துள்ளது என்பதற்காக அல்ல; கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட வாதம் எவ்வளவு வலுவானது என்பதையும்-கழகத்தின் கொள்கை, எதிர்காலத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என்பதையும் அப்பொழுதே பிரபல பத்திரிகைகள் உணர்ந்து அறிவித்தன என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான்!

இதோ; ''சங்கர்ஸ் வீக்லி'' அ௺ எழுதியதை அப்படியே தருகிறேன்.

''இன்று முதலமைச்சராகவும். திரு. அண்ணாதுரையின் வாரிசாகவும் திகழ்கின்ற கருணாநிதி நிதானத்தையும், உறுதியையும் பெற்றுள்ளதோடன்றி, அரசியல் நுட்பங்களில் நல்ல தேர்ச்சியும், ஒரு நிபுணத் தன்மையையும் பெற்றிருக்கிறார். இவை அவரை அரசியல் அரங்கத்தில் நடுநாயகமானவராக ஆக்கியிருக்கிறது. பஞ்சாப்பைச் சேர்ந்த அகாலி தளத்துடன் ஏற்பட்ட கூட்டு திரு. கருணாநிதியுடைய ராஜ தந்திரத்தின் உச்ச கட்ட வெற்றிகளில் ஒன்றாகும்.

மாநிலங்களை அங்கங்களாகக் கொண்ட மத்திய ஆட்சி என்று அவர் அண்மையில் உருவாக்கியுள்ள புது சித்தாந்தம் அவருடைய பெரும் போர்த் தந்திரங்களில் ஒன்றாகும். இந்தியா முழுவதையும் நிர்வகிப்பதில் மாநிலக் கட்சிகளான தி. மு. க. அகாலி தளம் போன்ற கட்சிகளும் கூட இந்த சித்தாந்தத்தின் காரணமாக எடுத்த எடுப்பிலேயே முக்கியத்துவம் வாய்ந்த சக்திகளாகி விடுகின்றன. இப்படிப்பட்ட ஒரு செயல் திட்டத்தை உருவாக்கியதன் மூலம் இன்றைய நிலவரத்தின் அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்வதிலும், அதன் வாயிலாகத் தனக்கும், தன் கட்சிக்கும் உயர்ந்தபட்ச சாதகங்களைச் சேர்ப்பதிலும் திரு. கருணாநிதிக்குள்ள ஆற்றல் நன்கு வெளிப்படுகிறது. இந்தச் செயல் முறை சாத்தியமானதா இல்லையா என்பது வேறு. ஆனால் திரு. கருணாநிதி இதர பிராந்தியத் தலைவர்களுடன் சேர்ந்து; தாம் முதிர்ச்சி அடைந்து விட்டவர்தான் என்பதனை நிரூபித்து விட்டார்.

கருணாநிதியின் புதிய சித்தாந்தம் கண்டு யாரும் மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. கூட்டாட்சித் தத்துவத்துக்கு ஒரு ஸ்தாபன உருவம் கொடுப்பதற்குத்தான் கருணாநிதியின் சித்தாந்தம் முயற்சி செய்கிறது. இதனை எதிர்க்கும் தீவிரவாதிகளின் மூளையற்ற முரட்டுத் தனத்தின் காரணமாகவேகூட இந்த நிலை என்றேனும் ஒருநாள் ஏற்படத்தான் போகிறது.''

இவ்வாறு அந்த இதழ்களில் வெளியிடப்பட்ட எண்ணங்கள்; இன்றைக்குச் செயல்வடிவம் கொண்டுள்ளன என்பதற்கும்– பரவலாகத் துணைக்கண்டம் முழுவதும் மத்திய மாநில உறவுகள் பற்றிய புதிய சிந்தனை எழுந்துள்ளன என்பதற்கும்– பெங்களூரில் நடைபெற்ற தென்மாநில முதல்வர்கள் மாநாடும்,

காஷ்மீரில் நடைபெற்ற மத்திய மாநில உறவுகள் குறித்த மாநாட்டில் காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா, கர்னடக முதல்வர் ஹெக்டே, மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு, ஆந்திர முதல்வர் என். டி. ராமராவ், மற்றும் பல கட்சித் தலைவர்கள், தி. மு. கழகத்தின் சார்பில் சாதிக், தண்டபாணி, எம். பி. ஆகியோர் கலந்து கொண்டு விவாதித்ததும்-பொருத்த மான எடுத்துக் காட்டுகளாகும்.

மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்து அறிக்கை தருவதற் காக இப்போது உச்ச நீதிமன்ற முன்னுள் நீதிபதி சர்க்காரியா அவர்களை மத்திய அரசு நியமித்திருப்பது என்பது கூட-அந்தக் கமிஷனின் அறிக்கை எப்படியிருந்தாலும்; மத்திய அரசு, மாநிலங்களின் உரிமைக் குரலைத் தட்டிக் கழிக்க முடியாத நிலையில் தள்ளப்பட்டுள்ளது என்பதைத்தான் தெளிவாக்குகிறது.

எனவே 1970 பிப்ரவரியில் நடைபெற்ற திருச்சி மாநாட்டி லும், மார்ச்சில் நடைபெற்ற டெல்லி தேசிய வளர்ச்சிக் குழுவின் (என்.டி.சி.) கூட்டத்திலும் முழங்கப்பட்ட மாநில சுயாட்சிக் கோஷம்; காற்றுடன் கலந்து போய்விடாமல் இந்திய நாட்டு அரசியல் அரங்கில், மெல்ல மெல்ல—ஆனல் உறுதியாகப் பரவ ஆரம்பித்துவிட்டது என்றே கூறலாம்!

மாநில சுயாட்சி-மத்தியிலே கூட்டாட்சி என்ற கருத்துக்கு பலமூட்டும் வண்ணம் ஏற்கனவே பல அரசியல் அறிஞர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள், ஆதாரங்களை அள்ளி வழங்கி யிருக்கிறர்கள் என்றுலும்—அவற்றை ஒரு மாநிலத்தின் ஆளுங் கட்சி சிந்தித்துப் பார்த்தும், அனுபவ ரீதியாக உணர்ந்தும், படிப்படியாகப் பல்வேறு கட்டங்களில் அந்த முழக்கத்தை உறுதியாக ஒலித்திட முன்வந்தது என்றுல் அது தி. மு. கழகமே ஆகும்!

ஆளுங்கட்சியாக இருந்தபோது மட்டுமல்லாமல்-1976-க்குப் பிறகு எதிர்க்கட்சியாக இருந்திடும் நிலையிலும் அந்த முழக்கத்தைக் கழகம் முனைப்புடன்தான் ஒலித்து வருகிறது.

"மாநில சுயாட்சி" முக்கியத்துவம் பெற்ற 1970-ஆம் ஆண்டில் டெல்லி மாநிலங்களவைக்கான தேர்தலும், தமிழக சட்டமன்ற மேலவைக்கான தேர்தலும் நடைபெற்றன.

குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதமர் இந்திராகாந்திக்குச் சாதகமான முறையில் வி. வி. கிரி அவர்களைத் தி. மு. கழகம் ஆதரித்து வெற்றிபெறச் செய்தது என்ற போதிலுங்கூட

அந்தக் கட்சிக்கும் கழகத்திற்கும் அதன் தொடர்பாக எந்தத் தேர்தல் உறவும் ஏற்படவில்லை.

சட்டமன்ற மேலவைக்கு வேட்பாளர்களாகக் கழகச் சார்பில் என். வி. என்., சி. பி. சிற்றரசு, மன்னை நாராயணசாமி, நீலநாராயணன், எஸ். ஏ. ராசமாணிக்கம் ஆகியோர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தனர். சுதந்திரக்கட்சி சார்பில் வேட்பு மனுதாக்கல் செய்த திரு. சுந்தரேசன் அவர்களுக்குக் கழகம் விட்டுத்தர வேண்டுமென்று ராஜாஜி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நண்பர் நீலநாராயணன் அவர்களின் வேட்பு மனு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதனை நீலநாராயணன் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். பி. சோ. கட்சிக்கு ஒரு இடம் கழகச் சார்பில் அளிக்கப்பட்டு நண்பர் ஆறுமுகசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநிலங்களவை (ராஜ்யசபா) தேர்தலில் கழகச் சார்பில் காஞ்சி கல்யாணசுந்தரம், டி. கே. சீனுவாசன், எஸ். எஸ். ஆர். ஆகியோரும் கழக ஆதரவுடன் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் அப்துஸ் சமத் அவர்களும், சுதந்திரா கட்சி சார்பில் மாரிசாமி அவர்களும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அப்பொழுது ராஜாஜி அவர்கள் விடுத்த அறிக்கையொன்றில், "தமிழ்நாடு மேலவைக்கான தேர்தலில் தி. மு. கழகம் தன்னுடைய வேட்பாளரைத் திரும்பப் பெற்றுக்கொண்டு சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. சுந்தரேசன் போட்டியின்றி வெற்றி பெற உதவி செய்ததற்காகப் பாராட்டுகிறேன். இதே போல் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து மாநிலங்கள் அவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. எஸ். எஸ். மாரிசாமி தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நம்புகிறேன். இந்தத் தேர்தலில் வெற்றிபெற திரு. சி. சுப்பிரமணியம் பகீரதப் பிரயத்தனம் செய்வதாகக் கூறப்படுகிறது. இது எதற்கு என்று கடவுளுக்குத்தான் தெரியும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

திரு. சி. சுப்பிரமணியம் 1967-ஆம் ஆண்டு தேர்தலில் கோபி பாராளுமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் பி. ஏ. சாமிநாதன் அவர்களால் தோற்கடிக்கப்பட்ட காரணத்தால் மத்திய அமைச்சரவையில் இடம் பெற முடியாமல் போனது!

மாநிலங்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றால் அவர் மத்திய அமைச்சராகக்கூடும் என்று உறுதியான கருத்து பரப்பப் பட்டது.

"சி. சுப்பிரமணியம் அவர்கள் மாநிலங்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று மத்திய மந்திரியாக வருவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? உங்கள் ஆதரவு உண்டா?"

என்று டெல்லியில் என்னிடம் நிருபர்கள் கேட்டபோது "கோயிலுக்குக் குறுக்கே நந்தியாகவும் இருக்கமாட்டேன்— கோட்டைக்குக் கொண்டுசெல்ல குதிரையாகவும் இருக்கமாட்டேன்" என்று கூறினேன்.

சி. எஸ். தேர்தலைப் பொறுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பணம் பெற்றுக்கொண்டு கட்சிமாறி வாக்களிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கழக உறுப்பினர்கள் மிகவும் கட்டுப்பாடாக இருந்து அந்தத் தேர்தலில் வாக்களித்து, கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட காஞ்சி கல்யாண சுந்தரம், டி. கே. சீனுவாசன், எஸ். எஸ். ஆர். ஆகியோர்களையும், கழக ஆதரவு பெற்ற தோழமைக் கட்சி வேட்பாளர்களான அப்துஸ் சமத், மாரிசாமி ஆகியோரையும் வெற்றி பெறச் செய்தனர். இந்திரா காங்கிரஸ்கட்சி சார்பில் போட்டியிட்ட சி. சுப்பிரமணியம் அவர்கள் தோல்வி அடைந்தார். தி. மு. கழகத்தில் ஊடுருவல் நடக்காது என்பதை நிரூபிக்க அந்தத் தேர்தல் உதவியது.



# 33

## மருத்துவமனையிலும் மறவாத மக்கள் பணி

"திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அமைச்சராவதற்குக் குறுக்கே நந்தியாகவும் இருக்க மாட்டேன்-அதே சமயம் அவரைக் கோட்டைக்குக் கொண்டு செல்லும் குதிரையாகவும் இருக்கமாட்டேன்" என்று 1970-ஆம் ஆண்டு மாநிலங்களவைத் தேர்தலின்போது நான் கூறியிருந்தாலும் கூட, 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு தி.மு.கழகத்திற்கும், இந்திரா காங்கிரசுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளுக்குமிடையே அமைந்த தேர்தல் உடன்பாட்டின் காரணமாக அவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்கின்ற வாய்ப்பு உருவாயிற்று!

ஆம்; கோட்டைக்கு அவரைத் தூக்கிச் சுமந்திட வேண்டிய குதிரையாக இருந்திட வேண்டியதாயிற்று. 1971-ஆம் ஆண்டு கோவையில் தி.மு.கழகத்தின் பொதுக்குழு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் டெல்லியில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"சி. சுப்பிரமணியம் அவர்களுக்காக கரூர் பாராளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற கே. கோபால் அவர்களும், கிருஷ்ணகிரி பாராளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற தீர்த்தகிரி கவுண்டரும் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறார்கள். இரண்டு தொகுதிகளில் எந்தத் தொகுதியில் சுப்பிரமணியம் அவர்களைப் போட்டியிடச் செய்யலாம்?" என்று பிரதமர் இந்திரா அவர்கள் என்னிடமே கருத்துக் கேட்டார். நான் தெரிவிக்கும் கருத்துக்கு ஏற்ப சி. எஸ். அவர்களுக்கு இடைத் தேர்தலுக்கான தொகுதியை அறிவிக்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பிறகு என் விருப்பப்படியே கிருஷ்ணகிரி பாராளுமன்றத் தொகுதியில் திரு. சி. எஸ். அவர்கள் இடைத்தேர்தலில் போட்டியிட்டார். அவரை எதிர்த்துக் காமராஜர் தலைமையிலே இருந்த பழைய காங்கிரஸ் கட்சி போட்டியிடுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் போட்டியிடவில்லை. தேர்தல் பிரச்சாரத்திற்காக நான் இரண்டொரு நாட்கள் சென்றிருந்தேன். அந்தப் பிரச்

சாரக் கூட்டத்தில் பேசிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்: "எப்போது இந்தத் தொகுதியில் என்னை நிற்கும்படிக் கலைஞர் முன் மொழிந்தாரோ அப்போதே எனது வெற்றி உறுதியாகி விட்டது" என்று உணர்ச்சி பொங்கிடக் குறிப்பிட்டார்.

பிரச்சாரக் கூட்டங்கள் முடிந்து ஓய்வுக்காக நான் மைசூர் சென்றிருந்தேன். தேர்தலில் வாக்கு எண்ணிக்கைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கும்போதே சி. எஸ். அவர்கள் எனக்கு மைசூருக்குத் தொலைபேசி மூலம் வெற்றி வாய்ப்புகளை எடுத்துச் சொன்னார்.

சில மணி நேரத்திற்குப் பிறகு வெற்றிச் செய்தியினையும் மகிழ்ச்சியுடன் கூறி, "வெற்றி விழாக் கூட்டத்திற்கு மத்திய அமைச்சர் சவான் வருகிறார்; நீங்களும் வரவேண்டும்" என்று வலியுறுத்தினார். திரு. சவான் ஒப்புக்கொண்ட தேதியில் எனக்கு வசதிப்படாது என்று நான் கூறியபோது, எனக்கு வசதியான தேதியில் சவான் அவர்களும் கலந்து கொள்வார் என்று கூறி அதற்கேற்ப என்னுடைய ஒப்புதலையும் பெற்றார்.

வெற்றி விழாப் பாராட்டுக் கூட்டத்தில் என்னையும் தி. மு. கழகத்தையும், சவான் அவர்களும், சி. எஸ். அவர் களும் வெகுவாகப் புகழ்ந்தனர். தேர்தல் பணிகளைச் சிறப்புடன் ஆற்றிடத் துணைபுரிந்த நண்பர் க. ராசாராம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

பிறகு சி. எஸ். மத்திய அமைச்சராகவும் ஆனார்! டெல்லிக் குச் சென்ற பிறகு தி. மு. கழக ஆட்சிக்கு விரோதமாக மாறிய வர்களில் திரு. சி. எஸ். அவர்களும் முக்கியமானவர். 1972-ஆம் ஆண்டு கழகத்தைப் பிளக்க எப்படியெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற கதையை விரிவாக எழுத இருக்கிறேன்.

ஆனால் வறட்சி நிவாரணப்பணி குறித்து மத்திய அமைச்சர் சி. எஸ். அவர்கள் சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய போது; "இதுவரை கொடுத்த பணத்துக்குக் கணக்கு காட்டி விட்டுத்தான் டெல்லியிடம் மாநில அரசு மீண்டும் நிதி கேட்க வேண்டும்" என்று குறிப்பிட்டதையும் அது குறித்து சட்டப் பேரவையில் விவாதம் வந்தபோது "மத்திய அமைச்சர், தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளைக் கூட்டி வறட்சிப் பணி கள் குறித்து விரிவாகப் பேசலாம்—விவாதிக்கலாம்—செலவழிக் கப்பட்ட தொகை, வகை பற்றி எங்களிடம் விபரம் அறியலாம். அதை விடுத்து தெருவிலே நின்று கொண்டு பொதுக்கூட்டத்தில்

கணக்கு கேட்பது முறையல்ல! நாகரீகமல்ல! அப்படிப்பட்ட பணம் எங்களுக்குத் தேவையில்லை!" என்று நான் அறிவித்ததை யும் இப்போது குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

"குதிரை, கீழே தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்தது"- என்பார்கள்! ஆனால் இந்தப் பழமொழி தலை கீழாக மாறிவிட்டது ஏறிச் சென்ற குதிரையை எட்டி உதைத்ததுமல்லாமல் வெட்டி யும் வீழ்த்த முற்பட்டனர்!

மனச்சாட்சியின் சவுக்கடிகள் விழுந்தன! வலியின் வேதனை பொறுக்க முடியவில்லை! என்ன செய்வது; தாங்கிக் கொள்ளத் தானே வேண்டும்! நெஞ்சுக்கு நீதி வழங்கப்படும் போது வேதனையும் ஏற்படுகிறது. ஒருவிதமான இதமான ஆறுதலும் கூடவே இணைகிறது அல்லவா?

கோயில் நந்தி—கோட்டைக் குதிரை—இரண்டையும் பற்றிக் கூறிய காரணத்தால் சிறிது முன்னேறிப் போய் 1971-ஆம் ஆண்டினைத் தொட்டுக்காட்ட வேண்டியதாயிற்று! திரும்பவும் 1970-ஆம் ஆண்டிலிருந்து தொடருவோம்.

அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர்கள் எல்லோரும் அரசு கொள்கைகளைப் பொறுத்தவரையில் ஒன்றுபட்ட கருத்து உடையவர்களாக இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமை களைப் பார்க்கும்போது கழக ஆட்சியில் அமைச்சரவை எப்படி செயல்பட்டது என்பது குறித்து 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வந்த "கேரவான்" (Caravan) ஏட்டில் வந்த ஒரு கட்டுரை கூறும் விவரம் வருமாறு:

"46 ஆண்டு நிரம்பிய கருணாநிதி திறமைமிக்க நுட்பவாதி என்பதை நிரூபித்துவிட்டார். கட்சிக்குள் கசப்புணர்ச்சி ஏற்படுவதை அவர் தவிர்த்துவிட்டார். அனைவருடனும் நியாய மானதோர் சமரசத்துக்கு அவர் வழிவகுத்தார்.

அண்ணாவின் புகழும் பெருமையும் மங்காதிருக்குமாறு அவர் காத்து வருகிறார். தனது சொற்பொழிவு ஒவ்வொன்றையும் அண்ணாவை நினைவூட்டியே அவர் துவக்குகிறார். அண்ணா நமது எல்லா செயல்களையும் கண்காணித்து வருகிறார் என்ற உணர்வையே அவர் ஏற்படுத்தி வருகிறார்.

கருணாநிதி அமைச்சரவைக் கூட்டங்களை ஒழுங்காக அடிக்கடி கூட்டுகிறார். முடிவுகளுக்கு அமைச்சரவையின் முழு ஒப்புதலைப் பெறுகிறார். இதனால் ஒரு உள் அமைச்சரவை முடிவு களை எடுக்கிறது என்ற எண்ணம் ஏற்படுவதைத் தவிர்க்கிறார்.

தமிழ்நாட்டு அமைச்சர்களின் சிறப்பியல்பு என்னவெனில் அவர்கள் ஒரு குரலில் பேசுகிறார்கள் என்பதுதான். ஒரு அமைச்சர் மற்றவரின் கருத்துக்களுக்கு மாறாகப் பேசினார் என்பதோ—மாறுபட்ட நிலையை மேற்கொண்டார் என்பதோ இங்கு கிடையாது.''

1953-ஆம் ஆண்டில் திருப்பத்தூருக்கு அருகில் ஏற்பட்ட கார் விபத்தின் காரணமாக என்னுடைய இடது கண்ணில் பலத்த அடிபட்டு அதனையொட்டி இடது கண்ணில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தேன்.

பின்னர் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது 1967-ஆம் ஆண்டு தஞ்சைக்குச் செல்லும் வழியில் மறுபடியும் கார் விபத்திற்கு ஆளாகி அறுவை சிகிச்சை செய்துகொண்ட அதே இடது கண்ணில் மீண்டும் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு தொடர்ந்து அந்தக் கண்ணில் அடிக்கடி தொல்லை இருந்து கொண்டே வந்தது.

அந்தக் கண்ணில் 1970-ஆம் ஆண்டு மறுபடியும் வலியும் வீக்கமும் ஏற்பட்டது. அதனுடன் பெருந்துறை தொகுதி இடைத் தேர்தல், மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு, ஏப்ரல் மாதம் 23-ந் தேதி அன்று சட்டமன்ற மேலவைத் தேர்தல் நடந்தபோது, அதன் தலைவராக சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்களை அமரச் செய்து, அவரைப் பாராட்டி உரையாற்றிய பிறகு இடது கண்ணில் தொந்தரவு அதிகமாகவே, சென்னையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். கண் மருத்துவர் டாக்டர் ஆப்ரகாம் அவர்கள் எனக்கு சிகிச்சை அளித்தார்.

ஏப்ரல் 28-ந்தேதி மாலை 6 மணி அளவில் கண்ணில் சிறிய தொரு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதற்குப் பிறகு மே மாதம் 2-ந் தேதி அன்று குடியரசுத் தலைவர் கிரி அவர்கள் கண் மருத்துவ மனைக்கு வந்திருந்து விரைவில் நான் நலம் பெற வேண்டுமென்ற விழைவினைத் தெரிவித்தார்.

கண் மருத்துவமனையில் நான் இவ்வாறு அவதிக்கு உட்பட்ட நிலையில் இருந்தபோது நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் பணிபுரிந்த 16,000 தொழிலாளர்கள் மே 3—ந் தேதி முதல் திடீர் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். தொழிலாளர்களுக்கும், காவலர்களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் வரை நடந்தது.

மருத்துவமனையில் இருந்தவாறே உடனடியாக நெய்வேலிக்கு போலீஸ் ஐ. ஜி. யாக இருந்த ஆர். எம். மகாதேவன் அவர்களையும், தமிழக அரசின் தொழிலாளர் கமிஷனராக இருந்த எம்.எம். ராசேந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்களையும் அனுப்பிவைத்தேன். நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் தேவன் என்பவர் இறந்துவிட்டார்.

கண் மருத்துவமனையில் இருந்தவாறே கண்களில் கட்டு போடப்பட்ட நிலையில் தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் பல முறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நெய்வேலி நிலவரங்களை உடனுக்குடன் அறிந்து தேவையான நடவடிக்கைகளை எப்படியெப்படி எடுக்க வேண்டுமென்று யோசனை கூறினேன்.

தொழிலாளர்களுக்கும் ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தையொட்டி வேறு ஏதாவது புதிய பிரச்சினைகள் இருக்குமானால் அவைகளைப் பற்றி நேரடியாகப் பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வர நான் தயாராக இருப்பதாகவும், தொழிற்சங்கத் தலைவர்களும் இதுபற்றி ஒரு முடிவுக்கு வந்து நெய்வேலியில் அமைதியான சூழ்நிலை உருவாக உதவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

மறுநாள் 4-5-70 அன்று கண் மருத்துவமனையிலேயே அமைச்சர்கள் நாவலர், என்.வி.என்., ப.உ. சண்முகம், மாதவன், ஓ.பி. ராமன் ஆகியோருடன் நெய்வேலி சம்பந்தமாக ஆலோசனை நடத்தினேன். போலீஸ் அதிகாரிகள் மகாதேவன் அவர்களும், டயஸ் அவர்களும் சந்தித்து நிலைமைகளை நேரில் விளக்கினர்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறுவதாக அறிவிப்பார்களேயானால் மருத்துவமனையில் இருக்கும் எனக்கு அதைவிட மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி வேறு எதுவும் இல்லை என்றும் தெரிவித்தேன்.

என்னுடைய வேண்டுகோளின் விளைவாகவும், தொழிற்சங்கத் தலைவர்கள் காட்டூர் கோபால், அனந்தன் நம்பியார், கோவிந்தராசன், விருத்தாசலம் செல்வராஜ் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாகவும், தொழிலாளர்கள் மே மாதம் 6-ந் தேதி முதல் வேலைக்குத் திரும்பினர்.

நெய்வேலி தொழிலாளர் பிரச்சினை ஒருபுறம் இருக்க மின்சார வாரிய ஊழியர்கள் கிளர்ச்சி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முனைந்தனர். அதுபற்றியும் மருத்துவமனையிலிருந்தவாறே ஒரு வேண்டுகோள் அறிக்கை விடுத்தேன்.

கண் சிகிச்சை செய்து கொண்டது பற்றி பிரதமர் அவர்கள் எழுதிய கடிதத்தில், "அன்புள்ள திரு கருணாநிதி அவர்களுக்கு, தாங்கள் கண்ணில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டு நான் கவலை கொண்டேன். அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறியது என்பதறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். தாங்கள் விரைவிலேயே பூரண நலம் பெறுவீர்கள் என்றும், வழக்கமான பணிகளை தாங்கள் விரைவில் ஆற்றுவீர்கள் என்றும் நான் நம்புகிறேன்" என்று எழுதியிருந்தார்கள்.

கண்ணில் தொந்தரவு நீங்கி மே மாதம் 8-ந்தேதியன்று காலையில் வீடு திரும்பினேன்.

மருத்துவமனையில் இருந்த போது மின்சார வாரிய ஊழியர்களுக்கு உறுதி தந்ததற்கிணங்க மின்வாரிய ஊழியர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வுகளை அரசின் சார்பில் அறிவித்தேன்.

இதற்கிடையே தென் ரயில்வே டிரைவர்கள், பயர்மென்கள் சங்கத்தின் சார்பில் சென்னையில் வேலை நிறுத்தம் செய்ய உத்தேசித்திருந்த தகவலை அறிந்த மத்திய ரெயில்வே அமைச்சர் நந்தா அவர்கள் தொலைபேசி மூலம் என்னிடம் தொடர்பு கொண்டு, ரெயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் தலையிட்டு சமரசம் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். இரு முறை பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பிறகு வேலைக்குத் திரும்புவது என்று அவர்கள் முடிவெடுத்ததோடு, என்னை நேரிலும் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# 34

## முதல் வெளிநாட்டுப் பயணம்

ஒரு தவறு இன்னொரு தவறுக்குச் சமாதானமாகி விடாது என்று ஆன்றோர் கூறுவர்!

*1971*-ஆம் ஆண்டு வரையில் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித்தலைவராக இருந்த கருத்திருமன் அவர்கள் விவாதங்களில் பேசும் போது மிகுந்த கடுமையான வார்த்தைகளைப் பயன் படுத்துவார் என்றாலும் பழகுவதற்கு இனியவராய்த் திகழ்ந்தார் நல்ல காங்கிரஸ்காரர். அண்ணா அவர்களிடத்தில் நிறைந்த அன்பு கொண்டவர். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடை பெற்ற தவறுகளை ஆளுங் கட்சி சார்பில் யாராவது எடுத்துச் சொன்னால், உடனே ஆவேசமாக எழுந்து "அட, ஏனய்யா நாங்க செய்த தவறையே சொல்லிகிட்டு இருக்கீங்க? அதுக்குத் தான் நாங்க எதிர்வரிசையிலே உட்கார்ந்திருக்கோமே! எங்க தவறைச் சொன்னா உங்க தவறு மறைஞ்சிடுமா?" என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்பார்.

ஒரு நாள் அவர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்பினார். கோவையில் ஒரு போலீஸ் அதிகாரி அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதாகக் குறைபட்டுக் கொண்ட அவர்; அந்த அதிகாரி அவரைப் பார்த்து, "நீங்கள் தான் எதிர்க்கட்சித் தலைவர் என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டதாகக் குறிப்பிட்டுவிட்டு, "அப்படியானால் முதலமைச்சர் யார் என்றுகூட எனக்கும் கேட்கத் தெரியும்!" என்று ஆத்திரத்துடன் கூறினார். உடனே அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் எழுந்து, "உங்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அண்ணாவையும், கலைஞரையும், நாவலரையும் நிறுத்தி வைத்து நீங்கள் யார் என்று ஒரு போலீஸ் அதிகாரி கேட்டதை நினைவூட்டுகிறேன்" என்றார்!

உடனே கருத்திருமன் அவர்கள் சினங் கொண்டு, "அப்படியானால் அதே பண்பாட்டில் நீங்களும் இறங்கியிருக் கிறீர்களா?" எனக் கேட்டார்.

அப்போது நான் குறுக்கிட்டேன். "மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் கூறிய புகார் குறித்து நான் முன்பே கேள்விப் பட்டு அந்தப் போலீஸ் அதிகாரியிடம் விளக்கம் கேட்கச்

சொன்னேன். அவர் அப்படி நடக்கவில்லை என்று கூறியிருக்கிறார். இருந்தபோதிலும் அப்படியொரு சம்பவம் நடந்திருந்தால் அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இது போல நடைபெறுமல் நடவடிக்கை எடுக்கப்படும். எங்களை ஒரு காலத்தில் அப்படி நடத்தினார்கள் என்பதற்காக எங்கள் காலத்திலும் உங்களுக்கு அப்படி நடக்கிறது என்பது போல பதில் சொல்வது நல்ல மரபுமல்ல-முறையுமல்ல!'' என்று நான் பதில் அளித்ததும், முகம் மலர்ந்திட கருத்திருமன் அவர்கள் எழுந்து ''முதலமைச்சர் விளக்கத்திற்கு நன்றி! இது தான் தமிழர் பண்பாடு!'' என்று கூறினார்.

இன்று அந்தப் பண்பாடெல்லாம் எங்கேயிருக்கிறது என்று தேட வேண்டியிருக்கிறது!

1970 ஜூன் திங்கள் என்னுடைய பிறந்த நாள் விழா சென்னைக் கடற்கரையில் கொண்டாடப்பட்ட போது ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிர ரூபாய் என்னிடம் நிதியாக வழங்கப்பட்டது. அதில் ஒரு லட்சம் ரூபாய் அண்ணா அறக் கட்டளை நிதியென்றும் மீதி இருபத்தி ஐயாயிரம் ரூபாய் என் விருப்பம்போல் செலவழித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள்.

அவர்கள் கூறியதைப் போலவே ஒரு லட்சம் ரூபாயை அண்ணா அறக்கட்டளை நிதியில் சேர்த்துவிட்டு, என் விருப்பம் போல் செலவிட்டுக் கொள்ளலாம் என்று தந்த 25 ஆயிரம் ரூபாயைப் பற்றிக் குறிப்பிடும் போது ''என் இஷ்டப்படி செலவு செய்ய 25 ஆயிரம் ரூபாயைத் தந்துள்ளனர். நான் கடமைப் பட்டுள்ள குடும்பத்திற்கு-என்னை, கழகத்தை, லட்சேப லட்சம் தம்பிமார்களை உருவாக்கிய அண்ணாவின் குடும்பத் திற்கு-அண்ணியார் அவர்களுக்கு இந்த இருபத்தி ஐயாயிரம் ரூபாயை ஒப்படைக்கிறேன்" என்று அறிவித்தேன்.

அண்ணா கவிதாஞ்சலி எனும் பெயரில் நான் அண்ணா அவர்களைப் பற்றி வானொலியில் பாடிய கவிதை வரிகள் கிராமபோன் ரிக்கார்டுகளாக ஏ. வி. எம். நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டிருந்தன. அவைகள் விற்பனையான 'ராயல்டி தொகை பத்தாயிர ரூபாயை ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் எனக்கு அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் நான் அந்த ராயல்டி தொகையும் அண்ணியார் அவர்களுக்கே சேரட்டுமென்று கூறி அதனையும் அந்த விழாவிலேயே அறிவித்து அவ்வாறே அவர்களுக்கு வழங்குமாறு அறிவித்து விட்டேன்.

அண்ணா அவர்களின் குடும்பத்தாருக்காக அப்போது வழங்கப் பட்ட முப்பத்தி ஐயாயிர ரூபாய் மட்டுமின்றி 1973-74-ஆம் ஆண்டில் தலைமைக் கழகச் சார்பில் பத்தாயிர ரூபாய் நிதியும், அம்பாசிடர் கார் ஒன்றும் வழங்கப்பட்டது. எங்களையெல்லாம் ஆளாக்கி மகிழ்ந்த அந்தக் குடும்பம் மகிழ்வுடன் வாழ வேண்டுமென்பதற்காக மாநில முழுவதும் கழகத்தின் சார்பில் நிதி வசூலித்து 1975 நவம்பர் ஆறும் நாள் சென்னையில் ஒரு நிதியளிப்பு விழா நடத்தி அருமை அண்ணியார் அவர்களின் கையில் மூன்று லட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபாயை வழங்கினோம். கழக வரலாற்றுக் குறிப்பிலும், எனது தனிப்பட்ட வாழ்க்கைக் குறிப்பிலும் கடமைப்பட்ட ஒரு நற்காரியத்தை எங்களால் இயன்ற அளவு செய்து முடித்தோம் என்ற நிகழ்ச்சி இடம் பெறுவது எங்களுக்குக் கிடைத்த அரும்பேறு என்பதால் இதனை இங்கே குறிப்பிட வேண்டியதாயிற்று.

1970 ஜூலைத் திங்கள் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடலானேன். இங்கிலாந்து, பிரான்சு, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் இருந்து வந்த அழைப்புகளை ஏற்று அந்தப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனக்கென்னவோ வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்பதில் ஒரு தீவிரமான ஆசை என்றைக்கும் இருந்ததில்லை. வெளிநாட்டுப் பயணங்கள் அனுபவ அறிவுக்குப் பெரிதும் பயன்படுகின்றன என்பது உண்மையென்றாலுங்கூட என்னைப் பொறுத்தவரையில் அந்தப் பயணங்களில் ஒரு வெறித்தனமான ஆர்வம் என்றைக்கும் இருந்ததில்லை.

1953-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு கார் விபத்தினால் என் கண்களில் ஒன்றில் வலி ஏற்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டேன். 1967-ஆம் ஆண்டு மீண்டும் நடைபெற்ற பயங்கரமான கார் விபத்தில் அதே கண்ணில் அடிபட்டு வலித் தொல்லை அதிகமாயிற்று. அந்த வேதனையையும் பொறுத்துக் கொண்டு மூன்று நான்கு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினேன் என்றாலும் வெளிநாட்டுப் பயணத்தின்போது இங்கிலாந்தில் உள்ள புகழ்பெற்ற கண் மருத்துவர்களிடம் காட்டி சிகிச்சை பெறலாம் என்ற எண்ணமும் இருந்ததால் ஜூலை முதல் நாள் பயணம் புறப்படத் தயாரானேன்.

அந்தப் பயணம் பற்றி "இனியவை இருபது" என்ற தலைப்பில் நான் தொடர்ந்து எழுதிய கட்டுரைகள் நூல் வடிவில் வந்திருப்பதாலும் அந்த நூல் ஏராளமாக விற்றிருப்பதாலும்-இப்போது விரிவாக எழுத வேண்டிய அவசியம்

இல்லை என்று கருதுகிறேன். ஆனால் அந்தப் பயணத்திற்கு என்னை வழியனுப்பி வைத்தபோது தமிழகத்தின் அறிவு மேன்தைகள் சிலர் வழங்கிய கருத்துக்கள் ஒரு எளியவனின் வரலாற்று ஏட்டில் இடம் பெறாமல் போய்விடக் கூடாதே என்பதற்காக அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

சீரணியினர் சார்பில் நேரு கலையரங்கில் நடைபெற்ற வழியனுப்பு விழாவில் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் என்னைக் கட்டித் தழுவி அன்பு வாழ்த்துக்களை வழங்கினார்கள்.

அந்த விழாவில் அரசின் சார்பில் ''தமிழரசு'' என்ற இதழ் வெளியீட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அந்த வழியனுப்பு விழாவில் பேசும் போது டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், ''நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெளி நாடு செல்வதறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பெயரும், புகழும் பெற்றிருக்கிறார்கள். பிரச்சினைகள் வரும்போது அவை களைச் சாமர்த்தியத்துடனும், விடாமுயற்சியுடனும் தீர்க்கக் கூடியவர் நம்முடைய முதலமைச்சர். முதலமைச்சரின் சுற்றுப் பயணம் குறித்து சிலரால் மகிழ்ச்சி அடைய முடியவில்லை என் பதை அறிந்தேன். இன்றைய தினம் தமிழ்நாடு ஒரு சிறந்த நிர்வாகத்தைப் பெற்றிருக்கிறது. சட்டம், ஒழுங்கு மிகத் திறமையுடன் பாதுகாக்கப்படுகிறது தமிழ்நாட்டில். ஆகவே இந்தத் தமிழ்நாட்டின் நன்மைக்காகவும், தொடர்ந்து நல்ல வகையில் பணியாற்றுவதற்கான நிலைமையை உருவாக்கக் கூடிய வகையிலும், முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பயணத்தை வெற்றிகரமாக முடித்துத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

அதே விழாவில் பேசிய மேலவை உறுப்பினர் பெரியவர் கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் ''முதலமைச்சர் அவர் களின் மீதுள்ள அன்பின் காரணமாக இப்போது பேசுவதற்கு முன் வந்திருக்கிறேன். வயதில் பெரியவன் என்ற முறையில் அவரை மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். இந்தியாவின் மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் மட்டும்தான் நாம் ஒரு நிலையான ஆட்சியைப் பெற்றிருக்கிறோம். பாக்கி மாநிலங்கள் எல்லாம் இன்றிருப்பார் நாளை இருப்பது திடமில்லை என்கிற அளவில்தான் இருக்கின்றன. உட்கார்ந்திருக்கும்

நாற்காலி நிலைக்குமா என்பது மற்ற மாநிலங்களில் கேள்விக் குறியாக இருக்கும்போது, இங்கே அப்படியில்லை. அசைக்க முடியாத அமைச்சரவைக் குழு சிலர் வேற்றுமை தோன்றக் கூடுமோ என்று எதிர்பார்த்தார்கள். ஏமாந்தார்கள். இவர்களுக்குள் எதிர்பார்த்தபடி வேற்றுமை தோன்றிடவில்லையே என்பதில் அவர்களுக்கெல்லாம் வருத்தம். அது இவர்கள் செய்த தப்புத்தான்.

தமிழகத்தைப் போல் அமைதி இருக்கிற நாடு வேறில்லை. முதலமைச்சர் அவர்கள் பயணம் வெற்றிகரமாக முடிந்து நலமுடன் திரும்பி வரவேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்" என்றார்.

நலம் நாடுவோர் குழுவின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வழியனுப்பு விழா நிகழ்ச்சியில் பெரியார் அவர்கள் கலந்து கொண்டு என்னை வழியனுப்பி வைத்தார்கள். அவர் வழியனுப்பி வைத்தார் என்று சொல்வதைவிட அந்த விழாவில் நான் பெரியார் அவர்களைத் தாள் பணிந்து வணங்கி விடை பெற்றேன் என்பதுதான் பொருந்தும்.

ஆஸ்திரேலியத் தூதுவராக சென்னையில் இருந்த திரு. பட்ரிக்ஷா அவர்களும், திரு. கருத்திருமன் அவர்களும் என்னுடைய இல்லத்திற்கு வந்து என்னுடைய பயணம் வெற்றிகரமாக அமைந்திட வாழ்த்து தெரிவித்தார்கள்.

பெரியார், ராஜாஜி, காயிதேமில்லத் ஆகியோரிடமும் அவர்கள் இல்லங்களுக்குச் சென்று விடை பெற்றேன்.

நான் வெளிநாடு புறப்படுவதற்கு முன்பே என்னுடைய இலாகாக்களை மற்ற அமைச்சர்களுக்கிடையே பகிர்ந்தளித்தேன். செய்தியாளர், நீங்கள் இல்லாத நேரத்தில் அமைச்சரவைக் கூட்டத்திற்கு யார் தலைமை வகிப்பார்கள் என்று கேட்டதற்கு, நான் இல்லாத நேரத்தில் கட்சிப் பொறுப்புக்களையும், அரசுப் பொறுப்புக்களையும் நாவலர் அவர்கள் கவனிப்பார் என்றும், அமைச்சரவை நண்பர்களும் அவரோடு இருந்து ஒத்துழைத்து காரியங்களை ஆற்றுவார்கள் என்றும் கூறினேன்.

பயணம் புறப்பட்ட 1-7-70 அன்று காலை அண்ணா அவர்களின் கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கி விடை பெற்றேன்.

சென்னையிலிருந்து புறப்படும் விமானம் மாலை 6.30 மணிக்குத்தான் என்றாலும் காலை முதல் ஆயிரக்கணக்கானவர்

கள் - தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த நண்பர்களும், கழகத் தோழர்களும் என்னைச் சந்தித்து மாலை அணிவித்து பயணம் வெற்றிகரமாக அமைந்திட வேண்டுமென வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணமே இருந்தனர்.

சரியாக பிற்பகல் 4 மணி அளவில் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முன் என் தாய், தந்தை, அண்ணா ஆகியோரின் படங்களுக்கு மாலையணிவித்து வணங்கிவிட்டுப் புறப்பட்டேன். என்னுடன் தயாளு, நிதித்துறை செயலாலர் வெங்கட் ரமணன். தனிச்செயலாளர் வைத்தியலிங்கம்,டாக்டர் ஆப்ரகாம் ஆகியோர் வந்தனர்.

நான் புறப்பட்ட விமானம் பம்பாய் விமான நிலையத்தை அடைந்தபோது அங்கு பம்பாய் வாழ் தமிழர்கள் ஆயிரக் கணக்கானோர் கூடியிருந்து எனக்கு உற்சாகமாக வரவேற்பளித்தார்கள். விமானம் பம்பாய் விமான நிலையத்தை அடைந்தபோது பலத்த மழை பெய்துகொண்டிருந்தபோதிலும் அதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் கூடி நின்று என்னை வரவேற்றனர். பம்பாய் நகரில் அன்று நடந்த கழகப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றி விட்டு இரவு 1 மணிக்கு பம்பாயிலிருந்து புறப்படும் விமானத்தில் ரோம் நகருக்குப் பயணமானோம்.

2-7-70 காலை 8-15 மணியவிளல் ரோம் நகரை சென்றடைந்தோம். அன்று பிற்பகல் ஐ. நா. உணவு - வேளாண்மை நிறுவனத்திற்குச் சென்று அதனைப் பார்வையிட்டோம். 3-7-70 அன்று காலை வாட்டிகன் நகர் சென்று அங்கு தொழில் அதிபர்களுடனும், தொழில் வல்லுநர்களுடனும் கலந்துரையாடினோம், பின்னர் கிறித்தவ மதத் தலைவரான போப்பாண்டவரைச் சந்தித்து உரையாடினோம். போப் அவர்கள் அண்ணா அவரைச் சந்தித்தது பற்றிக் கூறினார். அரைமணி நேரத்திற்குமேல் போப் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். போப் அவர்கள் எனக்கு ஒரு பதக்கத்தையும், அவரே கையெழுத்திட்ட சமாதானச் செய்தி ஒன்றையும் தந்தார். நான் அவருக்கு தமிழகத்தின் கலை நுட்பப் பொருட்கள் சிலவற்றையும், நான் எழுதிய கவிதைத் தொகுப்புக்களையும் (ஆங்கில மொழி பெயர்ப்பு) அளித்தேன். ரோம் நகர் மன்றத்தின் சார்பில் எனக்கு வரவேற்பு ஒன்றும் அளிக்கப்பட்டது.

4-7-70 அன்று ஸ்விட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜூரிச் நகருக்குச் சென்றேன். அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்தேன். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 7-7-70 அன்று பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் நகரை அடைந்தேன். அங்கு பிரெஞ்சு நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளும், இந்தியத் தூதரக அதிகாரிகளும், பாரீசில் வாழும் தமிழர்களும், இந்தியர்களும் ஏராளமாகக் கூடி வரவேற்றனர்.

பாரீசில் என்னை மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டு அமைப்பாளரும், பிரெஞ்சுப் பேராசிரியருமான பிலியோசா, உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகச் செயலாளர் தனிநாயகம் அடிகள், மற்றும் தமிழ் அறிஞர்கள் சந்தித்து, ஜூலை 15-ந் தேதியன்று பாரீசில் துவங்கும் மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டினைத் துவக்கிவைக்க வேண்டுமென்று பிடிவாதமாகக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளை மறுக்க முடியாமல் அதற்குத் தகுந்தாற்போல் என்னுடைய பயணத் திட்டம் மாறுதல் செய்யப்பட வேண்டியதாயிற்று

பிரெஞ்சு நாட்டின் கலாச்சார உறவு அமைச்சர் எட்மண்ட் மைக்கேல் அவர்கள் என்னை அழைத்து விருந்தளித்தார். ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கல்வி கலாச்சார நிலையத்தின் தலைமை இயக்குநராக இருந்த டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் யுனெஸ்கோ தலைமையகத்தில் வரவேற்பு விருந்தொன்றை எனக்களித்தார்.

10-7-70 அன்று மூனிச் நகருக்குச் சென்றேன். அங்கே மேயர் ஹான்ஸ் ஜோசேன் அவர்களும், பவேரிய விவசாய அமைச்சர் ஹான்ஸ் ஐசென்மானும என்னை வரவேற்று உபசரித்தனர். பவேரிய அமைச்சர் மதிய விருந்தளித்தார்.

மேற்கு ஜெர்மனியில் அந்த நாட்டின் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சருடன் தமிழகத்தவருக்குத் தொழில் வளர்ச்சிக்கு உதவி புரிவது குறித்துப் பேசினேன். அங்கிருந்து அன்று நாவலர் அவர்களுக்குப் பிறந்த தின வாழ்த்துத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்தேன்.

ஜூலை 15-ஆம் தேதியன்று பாரீஸ்நகரில் அங்குபுகழ்பெற்ற பல்கலைக் கழக மாமண்டபத்தில் 39 உலக நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள், 60 உலகப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த

ஆராய்ச்சி அறிஞர்கள் எல்லாம் கொலு வீற்றிருந்த மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டினை நான் துவக்கிவைத்தேன். அந்த மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் மதியழகன் அவர்கள் தலைமையில் தமிழகக் குழுவினரும் கலந்து கொண்டனர்.

அன்று மாலையே லண்டன் வந்து சேர்ந்து புகழ்பெற்ற கண் டாக்டர் சர் ஸ்டீவர்ட் டியூக் எல்டர் அவர்களிடம் கண்ணைப் பரிசோதனை செய்து கொண்டேன். இந்தப் பரிசோதனையின்போது என்னுடன் தமிழகத்திலிருந்து வந்திருந்த டாக்டர் ஆப்ரகாம் அவர்களும் உடனிருந்தார்.

பரிசோதனைக்குப் பிறகு சர் டியூக் எல்டர் சென்னையில் எனக்குத் தரப்பட்ட சிகிச்சையே போதுமானது என்றும், சென்னையில் நடந்த சிகிச்சைக்குப்பின் தரப்பட்ட மருந்து களையே இன்னும் சில நாட்கள் தொடர்ந்து பயன்படுத்தினால் போதும் என்றும், அறுவை சிகிச்சை தேவையில்லை என்றும் கூறினார்.


அங்கிருந்து தமிழகத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ப. உ. சண்முகம் அவர்களிடமும், முரசொலி மாறனிட மும் டாக்டர் தெரிவித்ததைக் கூறினேன். ப. உ. சண்முகம் மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களும், நாகர்கோவில் பஸ் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்வதாகத் தெரி வித்தார். அந்தத் தொழிலாளர்களை எல்லாம் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று அங்கிருந்தவாறே ஒரு வேண்டுகோள் தமிழகத்தின் ஏடுகள் மூலம் விடுத்தேன்.

ஜூலை 16–ந் தேதி மறுபடியும் டாக்டர் பெட்போர்டைச் சந்தித்து, அவரிடமும் கண்ணைக் காட்டினேன். அவரும் அறுவை சிகிச்சை எதுவும் தேவையில்லை என்ற கருத்தையே தெரிவித்தார்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் லண்டனில் செய்தியாளர் கள் சந்திப்பு நடைபெற்றது. பல்வேறு பிரச்சினைகள் குறித்து நிருபர்கள் எழுப்பிய கேள்விகளுக்குத் தகுந்த விடைகளை அளித்தேன்.

சென்னையில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற் சாலையைத் திறப்பது குறித்தும், டிராக்டர் தொழிற்சாலையை விரிவுபடுத்துவது பற்றியும், பெட்ரோகெமிக்கல் தொழில்கள் நிறுவுவது பற்றியும் அந்தந்தத் துறையில் சிறந்து விளங்கும் தொழில் அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினேன்.

கவென்டரியில் உள்ள பெர்கூசன் டிராக்டர் தொழிற்சாலையைப் பார்வையிட்டேன். அந்தப் பெர்கூசன் கம்பெனியார் நான் அந்தக் கம்பெனிக்கு வந்ததையொட்டி டிராக்டர் ஒன்றை எனக்கு அன்பளிப்பாகத் தந்தனர். அதனை நான் அப்போதே கோவை விவசாயக் கல்லூரிக்கு அன்பளிப்பாக அறிவித்து, அவர்களிடமே அதை கோவை விவசாயக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டேன்.



# 35

## கொள்கையும் கட்டுப்பாடும்

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு 1970 ஜூலை 21-ஆம் நாள் சென்னை திரும்பினேன். அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் வரவேற்பு நிகழ்ச்சியொன்று ஏற்பாடாகியிருந்தது. அப்போது அந்த அரங்கிற்கு "பாலர் அரங்கம்" என்றுதான் பெயர் இருந்தது. ஒரு காலத்தில் சட்ட சபைக் கூட்டம் நடைபெறும் இடமாக அந்த இடம் விளங்கி, அதன் பின்னர் பாலர் அரங்கம் என்ற பெயரில் திரை யரங்காக மாற்றப்பட்டிருந்தது.

அந்த அரங்கின் அடித்தளத்தை மட்டுமே வைத்துக் கொண்டு பெரும் பகுதி மாற்றம் செய்து புதியதோர் தோற்றப் பொலிவுடனும், குளிர் சாதன வசதியுடனும் அந்த இடத்தை உருவாக்கி அதற்கு நகைச்சுவை மன்னரும் சிறந்த சிந்தனை யாளருமான என். எஸ். கே. அவர்கள் நினைவாக "கலைவாணர் அரங்கம்" என்ற பெயரையும் சூட்டுகின்ற முயற்சியில் நான் ஈடுபட்டு வெற்றி கண்டது இன்றைக்கும் என் நெஞ்சுக்கு இதமான ஒரு நிகழ்ச்சியாகும்.

அந்த அரங்கத்தில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசியது-அடுத்து இரண்டாண்டு களுக்குப் பிறகு ஏற்பட்ட திடீர் மாற்றங்களை எண்ணும்போது நினைவில் நிறுத்திட வேண்டிய ஒன்றாகும். அவரது அன்றைய பேச்சையும் அதன் பின்னர் சில நிகழ்ச்சிகளில் பேசிய பேச்சுக் களையும் நினைவிற் கொண்டால்தான் 1972-ல் ஏற்பட்ட சில நிலைமைகளின் உண்மைப் பின்னணி என்ன என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியும்.

"கலைஞர் அவர்கள் அண்ணாவின் கொள்கை வழியில் செயல்படுகிறார். கலைஞர் அவர்கள் மேலை நாடுகளில் இருந்து அமைச்சர்களுக்கும் கழக நண்பர்களுக்கும் கடிதமெழுதி யிருந்தார்கள். எனக்கும் அவர் கைப்படவே கடிதம் எழுதி யிருந்தார். அந்தக் கடிதமே நம்மைத் தூற்றுகின்ற எதிரி களுக்குப் பதிலாகும். தமிழ்நாட்டு நண்பர்களின் அன்பையும் பாசத்தையும் எந்தச் சூழ்நிலையில் இருந்தபோதிலும் அவர் மறக்கவில்லை. அப்படிப்பட்ட தனித்தன்மை வாய்ந்த

ஒருவரைத் தலைவராகக் கொண்டிருக்கும் நிலையில் அவர் பல்லாண்டு சேவை செய்ய வேண்டும் என்கிறபோது தமிழகத்தில் உள்ள நிலைமைகளையும் கூற விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் பொறாமை. எங்கு பார்த்தாலும் எதிர்ப்புச் சக்திகள் இருக்கின்றன. மக்களைக் காக்க முதலமைச்சர் கலைஞர் செயல்படுகிறபோது அவரை மக்கள் விரோதியாக்க பத்திரிகை பலத்தைப் பயன்படுத்துகிறார்கள். கழகத்தின் தலைவராக, தமிழகத்தின் முதல்வராக, தொண்டனாகப் பணி புரியும் கலைஞரிடம் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. போட்டி, பொறாமை. சுயநலத்தின் காரணமாக கழகத் திற்கு எதிராகச் செய்யப்படும் சூழ்ச்சிகளை எதிர்த்துப் பொடிப் பொடியாக்குவோம். நேற்று வந்தவர்கள் எல்லாம் அரசியலில் புகுந்து கொண்டு இன்று கழகத்தை ஒழிப்பேன் என்று கூறுகிறார்கள்."

1970-ஆம் ஆண்டு நண்பர் எம். ஜி. ஆரின் உரையில் காணப்படும் "நேற்று வந்தவர்கள்" என்ற சொற்றொடரும், "அரசியலில் புகுந்து கொண்டு கழகத்தை ஒழிப்பேன் என்கிறார்கள்" என்ற சொற்றொடரும் இப்போது நான் இந்த இரண்டாம் பாகத்தை எழுதும் போது எத்தனை எத்தனை எண்ண அலைகளை எழுப்புகின்றன தெரியுமா?

நான் தாயகம் திரும்பிய மறுநாளே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில், "அன்புக்குரிய கருணாநிதி அவர்களுக்கு ஆசீர்வாதம். சௌக்கியமாகத் திரும்பி வந்து ஊர் சேர்ந்ததற்கு மகிழ்ச்சி" என்று குறிப்பிட்டிருந்தார்.

பாரிசில் நடைபெற்ற மூன்றும் உலகத் தமிழ் மாநாட்டினைத் துவக்கி வைத்து நான் ஆற்றிய உரை பற்றி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு விட்டுத் தமிழகம் திரும்பிய மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், "மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு வணக்கம். "என் கண்ணிலும் சிறந்தது தமிழ்" எனக் கூறி, பாரிஸ் மாநாட்டு வந்திருந்தோர் மனத்தை யெல்லாம் கவர்ந்து, தமிழின் பெருமையை விளக்கி விட்டீர்கள். உலகினை வெல்லும் தங்கள் திறன் கண்டு மகிழ்ந்தேன். இந்தத் தமிழன்பு தங்களைக் காக்க வேண்டுமென என் மனம் வணங்கத் தொடங்கியது. தங்கள் கண்ணுக்கு ஒன்றுமில்லை என்று இலண்டன் மருத்துவர்கள் கூறினார்கள் என மாநாடு முடிவதற்கு முன்னரே அறிந்து எல்லோரும் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டோம். தங்களுடைய தமிழன்பும் திறனும் தமிழ்

நாட்டுக்கும் உலகினுக்கும் நீண்ட காலம் பயன்பட வேண்டு மென்று எல்லாம் வல்ல கடவுளை வேண்டிக் கொள்கிறேன்" என்று எழுதியிருந்தார்.

என்னை வரவேற்றுப் பாராட்டும் விழாவொன்று மயிலாப்பூர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் சார்பில் நடைபெற்றது. தர்மபுரம் ஆதினகர்த்தர், காஞ்சி ஞானப்பிரகாச ஆதினத் தலைவர், குன்றக்குடி அடிகளார், சுந்தரலிங்க அடிகளார், திருவண்ணாமலை ராமதை சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டினர். அந்த விழாவில் நான் நன்றி தெரிவித்து உரையாற்றியபோது,

"கடவுளை நாம் ஏற்றுக் கொள்கிறோமா என்பதைவிட, கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிறாரா என்பதுதான் முக்கியம். எனவே கடவுள் நம்மை ஏற்றுக் கொள்ளும் வழியில் நாம் நடைபோட வேண்டும். கடவுள் ஏழைகளின் புன்னகையில் இருக்கிறார். அந்தப் புன்னகையில் கடவுளைக் காணத் துடிப்பவன் நான்" என்று குறிப்பிட்டேன்.

1970–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு கொண்டு வரப்படும் என்று அறிவித்ததற்கு இணங்க, அந்த ஆண்டே, அந்தச் சட்டமன்றத் தொடரிலேயே மார்ச் 31-ந் தேதி நில உச்சவரம்பு மசோதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மசோதாவில் கூறப்பட்டிருந்தாவது :

1961-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நில உச்சவரம்புச் சட்டம் ஒன்று முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது. ஐந்து பேர் அடங்கிய ஓர் குடும்பத்திற்கு முப்பது ஏக்கர் என்று அதில் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகும் நில உறவு முறையில் ஏற்றத் தாழ்வுகள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

மேற்படி சட்டம் அமலாக்கப்பட்ட பிறகும் பொது நலனுக்கு விரோதமாக சில மனிதர்களிடமே அதிக நிலம் சேர்ந்திருக்கிறது.

நிலச் சீர்திருத்தத்தையொட்டிய மற்றொரு நடவடிக்கை யாக இப்பொழுது இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது நில உறவு முறைகளில் பல ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டுமென்ற குறிக்கோளை எய்தும் பொருட்டு உச்சவரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராவாகக் குறைக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

இந்த மசோதா அந்தக் குறிக்கோளை நிறைவேற்றப் பயன்படும்.

1970 பிப்ரவரி 26-ந் தேதி முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்ததாகக் கருதப்படும்.

இந்த மசோதா அவையிலே விவாதத்திற்காக 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் 8-ந் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. சுதந்திரா கட்சியில் அப்போதிருந்த ஹண்டே அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திண்டிவனம் ராமமூர்த்தி அவர்களும், குடியரசுத் தலைவரின் அனுமதி பெருமல் மசோதாவைக் கொண்டு வருவது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள்.

அதற்குப் பதிலளித்த நிதியமைச்சர் மதியழகன், குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக முன்பே அனுப்பப்பட்டிருக் கிறது என்றும், முன்கூட்டியே அனுமதி என்பது தேவையில்லை என்றும், இந்தப் பொருள் மாநில அரசுக்குரியதாக வரும் பட்டியலில் இடம் பெற்றதால் இதைத் தன்னிச்சையாகச் செய்யலாம் என்றும், மேலும் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற வேண்டுமென்றுதான் இருக்கிறதே தவிர முன்கூட்டியே பெற வேண்டும் என்பதல்ல என்றும், மேலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த நிலச் சீர்திருத்த மசோதாவைப் பிரேரேபிக்க அனுமதி தருகிரேம் என்று தந்தி வந்திருப்ப தாகவும், எனவே அரசியல் சட்டத்திற்கு முரணானது எதுவுமில்லை என்றும் கூறினர்.

அதுபற்றி பேரவைத் தலைவர் தன் முடிவைத் தெரிவிக்கும் போது, இந்த மசோதாவைப் பிரேரேபிக்கலாம் என்று தந்தி வந்திருக்கிறது. ஆளுநரின் அனுமதி பெற்றது பற்றித்தான் அறிவிக்கப்படுவதுண்டே தவிர குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்றது பற்றி அவைக்கு அறிவிப்பதில்லை என்றும், இந்த மசோதாவிற்கு ஆளுநர் அனுமதி தந்திருக்கிருர் என்றும், சில சட்டங்களை விரைவாகக் கொண்டு வந்து நிறைவேற்றியவுடன் குடியரசுத் தலைவருக்குத் தெரிவித்து அனுமதி பெற விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது என்றும், ஆகவே இந்தச் சட்டம் கொண்டு வருவதில் எந்தவித முறைகேடும் நடைபெற்று விடவில்லை என்றும் கூறிய பிறகு மசோதா விவாதத்திற்கு வந்தது.

விவாதம் முடிவுற்றதும் சுதந்திரா உறுப்பினர் ஹண்டே அவர்கள் எழுந்து இந்த மசோதாவை பொதுமக்களின் கருத்தை

அறிய சுற்றுக்கு விடவேண்டும் என்று வலியுறுத்தினர். அதற்கு நான் "இச்சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசு கொண்டுவரவில்லை. அதோடு பொதுமக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் பத்திரிகைகளின் கருத்துக்களையும் அறிந்து அதற்கேற்ற படி திருத்தங்கள் செய்துதான் இந்த மசோதா கொண்டுவரப் பட்டுள்ளது" என விளக்கமளித்தேன்.

அதற்குப் பின்னர் சுதந்திரா கட்சியின் தலைவராக இருந்த சீமைச்சாமி அவர்கள் எழுந்து "முதல்வர் அளித்த சமாதானம் எங்களுக்குத் திருப்தி அளிக்கிறது என்று சொல்லத்தக்க அளவிற்கு முதல்வருக்கே உரிய சாமர்த்திய வாதத்தினால் விளக்கம் அளித்தார்கள். இருந்தாலும் ஏற்றுக்கொள்ள மன வேதனை கொண்டு சபையிலிருந்து வெளிநடப்பு செய்கிறோம்" என்று கூறி வெளிநடப்பு செய்தார்கள். நண்பர் ஹண்டே உள்ளிட்ட சுதந்திரா கட்சி உறுப்பினர்கள் அவரைப் பின்பற்றி வெளியேறினார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அகில இந்திய அளவில் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ந் தேதி நிலமீட்பு இயக்கம் நடத்தப் போவதாக அறிவித்ததை யொட்டி தமிழகத் திலும் நடத்தப் போவதாக அந்தக் கட்சியின் சார்பில் அறிவிக் கப்பட்டது.

தமிழகம் முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அதில் பெரும்பான்மையாகக் கைது செய்யப்பட்டது தஞ்சை மாவட்டத்தில்தான்.

அதுபற்றி திருச்சியில் நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்ட போது "நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் தரவேண்டும் என்ற கொள்கை கம்யூனிஸ்டுகளுக்கு மாத்திரமல்ல; எல்லா முற்போக்குக் கட்சிகளுக்கும் தி. மு. கழகத்திற்கும் உடன்பா டான கொள்கை. அதை நிறைவேற்றுவதற்கு சட்டப்படி தி. மு. க. ஆட்சி செயல்படுகிறது. எனினும் எந்தவிதமான கட்சிக் காழ்ப்பும் காட்டாமல் சட்டம் அமைதி காத்திட நடவடிக்கை எடுக்கும். இதில் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கைது செய்யப்பட வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்ட தற்காக மிகவும் வருந்துகிறேன். அவர்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்த அவர்களுக்கு உரிமை உண்டு. அதே உணர்ச் சியை அமைதியான முறையில் சட்டப் பூர்வமாகச் செயல்

படுத்தத் தயாராக இருக்கிற இந்த அரசின் வேண்டுகோளை அவர்கள் ஏற்றிருந்தால் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும். கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளில் பஞ்சாயத்து ஒன்றிய தேர்தலில் வேட்பாளர்களாகவோ வேட்பாளருக்கு ஓட்டளிக்க உரிமை உள்ளவர்களோ இருப்பார்களானால் அந்த உரிமையைச் செயல்படுத்த, அதாவது ஓட்டளிப்பதற்குச் செல்ல வேண்டு மென்று அவர்கள் கேட்பார்களானால் அவர்களை ஜாமீனில் விடுவது பற்றி யோசிக்கப்படும்" என்று கூறினேன்.

நில மீட்பு இயக்கத்தில் ஈடுபட்டு சிறையில் இருந்த கம்யூ னிஸ்ட் கட்சியினரின் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினர் ஏ. கே. சுப்பையா அவர்கள் சட்டத்துறை அமைச்சராக இருந்த மாதவன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், "எனது கட்சியும். மாநில விவசாயத் தொழிலாளர் சங்கமும் ஆகஸ்ட் 15, 16, 17 ஆகிய தேதிகளில் நடத்திய நில மீட்பு இயக்கப் போராட்டம் முடிந்துவிட்டதால், மேற்கொண்டு இந்த இயக்கம் நடத்தப்பட மாட்டாது" என்று எழுதியிருந்தார்.

அவருடைய கடிதத்தின் அடிப்படையில் நில மீட்பு இயக் கத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள வர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்று விடுதலை செய்ய அரசு முடிவு செய்துள்ளது என்று சட்டப் பேரவையில் அறிவித்து விட்டு, அவர்களை எல்லாம் விடுதலை செய்ய உத்தரவிட்டேன்.

1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21,22 ஆகிய நாட் களில் சென்னையில் கூடிய கழகத்தின் தலைமைச் செயற்குழு 'கட்சி அமைப்புக்களை மேலும் வலுப்படுத்தவும், கழகப் பிரச்சா ரத்தை விரிவுபடுத்தவும் அமைச்சரவையில் உள்ள கழக முன்னணியினரை ஈடுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் அமைச் சரவையைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று இந்தச் செயற் குழு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்! வழி மொழிந்து பேசியவர் நண்பர் மதுரை முத்து அவர்கள்.

செயற்குழுவில் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முக்கியமான காரணம் அமைச்சர்களிடையே ஒழுங்கு, கட்டுப் பாடு கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். முதலமைச்சர் பதவியிலே இருப்பவர்களுக்குத் தன்னுடைய அமைச்சரவையிலே இருப்பவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி இருக்கவேண்டும். அமைச்சர் எப்படிப்பட்ட தவறுகளைச்

செய்தாலும் - ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மீறி நடந்தாலும்- கட்சிக்கும், அமைச்சரவைக்கும் கெட்ட பெயர் வரக்கூடிய அள விற்கு நடந்து கொண்டாலும்-எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது வீண்பழி சுமத்தி பேரவையிலேயே சவால் விட்டு, அதனை நிருபிக்க முடியாமல் நாட்டு மக்கள் அத்தனை பேரும் அந்த அமைச்சர் செய்த மோசடியைக் கண்டுபிடித்தாலும்-அமைச் சர்கள் ஒருவருக்கொருவர் குழு மனப்பான்மையோடு நடந்து கொண்டு ஆளுக்கு ஒரு கொள்கையைப் பேசினாலும் அதனைத் தட்டிக் கேட்க முடியாதவர் முதலமைச்சராக இருக்கமுடியாது. அதனைத் தட்டிக் கேட்கவேண்டுமென்றால் அப்படிக் கேட்பவர் ஒழுங்காக இருக்கவேண்டும். அமைச்சர்மீது குற்றச்சாட்டு பற்றிக் கேட்டால் அவர் தன் மீதுள்ள தவறுகளை எங்கே திருப் பிக் கேட்பாரோ என்ற அளவிற்கு நடந்துகொள்ளும் முதலமைச் சர்களால் தவறு செய்யும் அமைச்சர்களைத் தட்டிக் கேட்கவும் முடியாது; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் முடியாது.

மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் – மேயராக இருந்தவர் கள்-பலர் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டது. அவர்களில் பலர் கழகத்தைச் சேர்ந்தவர்கள்; மற்றவர்கள் வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மீது குற்றச்சாட்டு கூறிய போது- பேரவையிலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாரா என்று எதிர்க் கட்சிகள் கேட்டபோது, உடனடியாக அவையிலே, மாநகராட்சியிலே ஆண்டு கொண்டிருப்பது கழகம் என்றாலும், அவையிலேயே மாநகராட்சியைக் கலைத்துவிட உத் தரவு பிறப்பிக்கப்படும் என்று கூறியதோடு, கழக உறுப்பினர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தேன். அவ்வாறே நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது, மாநகராட்சி கலைக்கப்பட்டது.

கழக அமைச்சரவையில் இருந்த சில அமைச்சர்கள் மீது அப்போது பரவலாகச் சில குற்றச்சாட்டுகள் வந்து கொண் டிருந்தன.

அதனையெல்லாம் மனதில் கொண்டு கழக அமைச்சரவை யில் மாறுதல் செய்ய விரும்பினேன். அந்த எண்ணத்தின் விளை வாக செப்டம்பர் 9-ஆம் நாள் அமைச்சர்கள் மதியழகன், முத்துசாமி, வேழவேந்தன் ஆகியோரின் பதவி விலகல் கடிதங் கள் ஆளுநரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

"உங்களது எதிர்காலத் திட்டம் என்ன?" என்று செய்தி யாளர்கள் கேட்டதற்கு - "கட்சிப் பணிதான்; எங்களது செயற்

குழு முடிவின்படி கட்சிப் பணியாற்றுவதற்காக அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகல் தந்தோம். அதன்படி என்னைக் கட்சிப் பணியாற்றும்படி தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன். இன்னும் விரிவாகக் கட்சிப் பணியாற்றிட எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. கழகத்திற்காக முழு நேரப் பணியாற்றும் வாய்ப்பும் பிரச்சாரப் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது'' என்றும்- "உங்கள் பதவி விலகலால் கட்சியில் பிளவு ஏற்படுமா?'' என்ற கேள்விக்கு ''எங்கள் கழகம் உறுதிமிக்கது; பிளவு ஏற்படாது. மேலும் வலிமை பெறும் வகையில் செயலாற்றுவோம். பிளவு என்பது எதிர்க்கட்சிகளின் விருப்பமாக இருக்கலாம்" என்றார் நண்பர் மதியழகன்.

அது மாத்திரமல்ல; அமைச்சர் பதவியை இழந்துவிட்ட இரண்டொரு நாட்களில் சென்னையிலே நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டிலே கலந்து கொண்டு மதியழகன் அவர்கள் உரையாற்றினர்.



# 36

## நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்

கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது மத்திய அரசில் எடுக்கப்படும் முற்போக்குத் திட்டங்களை ஆதரிப்பது என்பதை கொள்கையாகக் கொண்டிருந்தது. அந்த வரிசையில் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முன்னாள் மன்னர்கள் அனைவருக்கும் அரசால் அளிக்கப்பட்டு வந்த அங்கீகாரத்தை ரத்து செய்வது என்று பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் முடிவெடுத்து அதற்கொப்ப 7-9-70 அன்று அதற்கான உத்தரவை குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.

இதனை டெல்லியில் தி. மு. கழகத்தின் சார்பில் நாடாளு மன்ற தி. மு. க. குழு செயலாளராக இருந்த இரா. செழியன், எம். பி. வரவேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

மன்னர் மானிய ஒழிப்பு மசோதா இதற்கு முன்பு மக்கள் அவையில் நிறைவேற்றப்பட்ட பிறகு மாநிலங்களவையில் ஒரு ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்ததை முன்னிட்டு குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தத் தீர்மானத்தை எதிர்த்து காமராஜர் நாடாளுமன்றத் தில் வாக்களித்தது தமிழக அரசியலில் அவருக்கு மிகுந்த எதிர்ப்பை ஏற்படுத்தியது.

செப்டம்பர் 7-ந் தேதியன்று குடியரசுத் தலைவர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என்றும், அது தங்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பாதிப்பதாகவும் கூறி, குவாலியர், உதயபூர் நாபா, கட்ச், நலகார், பாட்னு, தாரங்கதாரா, காசி மன்னர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள்.

இந்த உத்தரவிற்கு எதிராக பல்கிவாலாவும், உத்திரவிற்கு ஆதரவாக அட்டார்னி ஜெனரல் நிரேன் டேவும், மோகன் குமாரமங்கலமும் 21 நாள் வாதாடினார்கள். உச்ச நீதிமன்றத் தில் நடந்த இந்த வழக்கை தலைமை நீதிபதி இதயதுல்லா, நீதிபதி கள் ஷா, சிக்ரி, ஷிலாட், பார்கவா, மிட்டர், வைத்தியலிங்கம் குரோவர், ஹெக்டே, ரே, டுவா ஆகியோர் விசாரித்தனர்.

இந்த வழக்கில் டிசம்பர் 15-ந் தேதியன்று தீர்ப்பு கூறப் பட்டது. ''மன்னர்களுக்கு மானியமும் தனிச் சலுகைகளும்

அளிக்கப்படுவதைத் தடுத்த குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது" என்று தீர்ப்பு கூறப்பட்டது.

மன்னர்களுக்குரிய உரிமைகளையும், சலுகைகளையும் மானியங்களையும், இந்த அவசரச் சட்டத்துக்கு முன்னர் இருந்ததுபோல் அரசு தர வேண்டும் என்று தலைமை நீதிபதி உட்பட ஒன்பது நீதிபதிகள் தீர்ப்பு கூறினர்.

அந்தத் தீர்ப்பு பற்றிய என்னுடைய கருத்தை செய்தியாளர்கள் கேட்டபோது ''சோஷலிசத்தை நோக்கி நாடு சென்றிட வேண்டுமென்று கருதுகிற கொள்கையுடையவர் யாரும் இந்தச் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைய முடியாது. அப்படி மகிழ்ச்சி அடைகிறவர்களை ரசிக்கவும் முடியாது. மன்னர் மானிய ரத்துக்கான தேவைப்படும் அரசியல் சட்ட ரீதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் தி. மு. கழகத்தின் ஆசை'' என்று கூறினேன்.

தீர்ப்பையொட்டி நாடாளுமன்ற மக்களவையில் பெருத்த விவாதம் நடைபெற்றது. அதற்கு பதிலளித்த பிரதமர் இந்திரா ''ராஜமானிய ஒழிப்புக் கொள்கையில் அரசாங்கம் தொடர்ந்து உறுதியாயிருக்கிறது. அதைத் தக்க அரசியல் சட்ட வழி வகைகள் மூலம் நிறைவேற்றியே தீரும் என்பதை நான் இப்போது அவைக்குத் தரக்கூடிய உறுதி'' என்று கூறினார்.

மன்னர் மானிய ஒழிப்பு ரத்து உத்தரவு செல்லாது என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததையொட்டி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு இடைக்காலத் தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் இந்திய அரசியல் அரங்கில் தோன்றியது.

அந்தச் சந்தேகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் நாடாளுமன்ற மக்களவை டிசம்பர் 28-ஆம் தேதி கலைக்கப்பட்டு-மறு தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப் பட்டது.

அதுபற்றி ராஜாஜி, ஜெகஜீவன்ராம், நிஜலிங்கப்பா ஆகியோர் வானொலியில் கருத்து தெரிவித்ததையொட்டி, என்னிடம் கருத்து வானொலி சார்பில் கேட்டபோது – ''இப்போது பிரச்சினை மக்கள் கைக்கே வந்திருக்கிறது. தங்களுடையவும் தங்களது சந்ததியினருடையதுமான வருங்காலத்தை மக்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அண்மையில்

நாடாளுமன்றத்தின் முன்வந்த சில பிரச்சினைகள் மூலம் எந்தத் தலைவர்கள்; தங்களை எங்கே அழைத்துச் செல்வார்கள் என்பதை மக்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இதற்கு முன்போல அல்லாது இப்போது மக்கள் முன்னிலையில் அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியது தெளிவாகத் தெரிகிறது. சோஷலிச வருங் காலத்தை மலரச் செய்யவும் வன்முறையற்ற விதத்தில் வறுமையை ஒழிக்கப் போராடவும் சமுதாயத்தின் அடித் தளத்தில் கிடக்கிற இந்தியாவின் கோடிக்கணக்கான உழைக்கும் பாட்டாளிகளுக்கு இது ஒரு அருமையான வாய்ப்பாகும் நான் மக்கள் மீதும், ஜனநாயகத்தின் மீதும் மகத்தான நம்பிக்கை வைத்திருப்பவன். மக்கள் குரலே மகேசன் குரல்.''

தேர்தல் பற்றி கழகத்தின் நிலை பற்றி பேசுவதற்காக மத்திய அமைச்சராக இருந்த ரகுராமையா சென்னை வந்து என்னுடன் பேசினார்.

தேர்தல் பற்றி கழகத்தின் நிலையை அறிவதற்காக ஜனவரி 11-ந்தேதி கூடவிருந்த கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுவை ஜனவரி 3-ந்தேதியே கூட்டுவதற்கு அறிவிப்பு செய்யப்பட்டது.

பிரதமரின் அழைப்பின் பேரில் டிசம்பர் 31-ஆம் தேதி யன்று டெல்லி சென்று பிரதமருடன் ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசினேன். டெல்லியில் சி. சுப்பிரமணியம் அவர்கள் என்னைச் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசிக் கொண் டிருந்தார்.

டெல்லியில் செய்தியாளர்கள் தேர்தல்பற்றிக் கேட்ட போது, ''நாடாளுமன்ற இடைத் தேர்தலையொட்டி தமிழக சட்டமன்றததுக்கான தேர்தலையும் நடத்துவதா என்ற பிரச்சினை குறித்து ஜனவரி 3-ந தேதி சென்னையில் கூடும் கழகப் பொதுக் குழுவில்தான் இறுதி முடிவெடுக்கப்படும்'' என்று அறிவித்தேன்.

சட்டமன்ற கலைப்பு குறித்து பிரதமரிடம் ஆலோசனை எதுவும் நாடினீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, ''இது கழகம் முடிவு செய்யவேண்டிய பிரச்சினை. இதில் பிரத மரின ஆலோசனையை நான் நாடவும், பிரதமர் தனது கருத்து என்று எதையும் என்னிடம் தெரிவிக்கவும் இல்லை" என்று கூறி னேன். மேலும் நான் தொடர்ந்து கூறும்போது ''அடிக்கடி தேர்தலைச் சந்திக்கும் தொல்லையிலிருந்து மக்களைத் தவிர்ப்பதற் காகவும், நிர்வாகம் தடங்கலின்றி நடைபெற்று மக்களின்

நன்மைகளில் நாட்டம் செலுத்தவும், பொதுப்பணம் விரயமாவதைத் தடுப்பதற்காகவும், நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சி, பஞ்சாயத்து ஆகியவைகளுக்கான தேர்தலை ஒரே நேரத்தில் நடத்துவது சிறந்தது என்று நான் கருதுகிறேன். இது ஒரு நிபுணர் குழு அமைத்து பரிசீலிக்க வேண்டிய பிரச்சினையாகும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஏழு கட்சி முற்போக்குக் கூட்டணியில் தி.மு. கழகமும், இந்திரா காங்கிரசும் பங்கு கொண்டுள்ளன. இந்தக் கட்சிகளிடையே தொகுதி உடன்பாடு செய்துகொள்வது குறித்து பிரதமர் இந்திராவுடனும் ஜெகஜீவன்ராமுடனும் பரவலாகப் பேசப்பட்டது. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தின் முடிவுக்குப் பின்னர் மாநில அளவில் மற்றத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவோம்'' என்று கூறினேன்.

டெல்லியிலிருந்து திரும்பியபோது நான் பயணம் செய்த விமானத்தில்தான் காமராஜர் அவர்களும், சி. சுப்பிரமணியம் அவர்களும் சென்னை வந்தார்கள்.

சென்னையில் ஜனவரி 3-ஆம் தேதியன்று கூடிய செயற்குழுவும், பொதுக் குழுவும் தமிழக சட்டமன்றத்தைக் கலைத்து விட்டு சட்டசபைத் தேர்தல்களை நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒருங்கிணைத்து நடத்துவதா என்பதைப்பற்றி முடிவெடுக்க கழகத் தலைவராக உள்ள எனக்கும், பொதுச் செயலாளராக இருந்த நாவலருக்கும் அதிகாரமளித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தை நண்பர் மதுரை முத்து முன்மொழிய அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும் வழிமொழிந்தனர்.

இதற்கு மறுநாள் ஜனவரி 4-ஆம் தேதி காலை 11-15 மணிக்கு ஆளுநரைச் சந்தித்து-அன்று காலையில் கூடிய தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தெரிவித்ததின் பேரில் கவர்னர் மாளிகையிலிருந்து கீழ்க்கண்ட பிரகடனம் வெளியிடப்பட்டது.

''தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி இன்று காலை 11-15 மணிக்கு தமிழக ஆளுநரை ஆளுநர் மாளிகையில் சந்தித்து தமிழ்நாடு சட்டமன்றத்தை 1971 ஜனவரி 5-ஆம் தேதி முதல் கலைக்குமாறு பரிந்துரை கூறுவதெனவும்-நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடத்துவதெனவும், சோஷலிச-மதச்சார்பற்ற கொள்கைகளை-செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மக்களிடமிருந்து புதிய கட்டளையைப் பெறுவது எனவும் அமைச்சரவை செய்த முடிவினை

கவர்னரிடம் தமிழக முதல்வர் தெரிவித்தார். ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின் ஆளுநர், இந்த விஷயத்தில் அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று 1971 ஜனவரி 5-ஆம் தேதி முதல் தமிழக சட்டமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டார்."

இந்த அறிவிப்புக்குப் பிறகு, செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து சட்டமன்றத்தைக் கலைக்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு நான் அளித்த பதில், "இந்திய நாடு முழுவதும் நாடாளுமன்றத் தேர்தல் முன் கூட்டியே நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. தேர்தல் நடைபெறும் என்று உறுதியானவுடன் தமிழ்நாட்டில் அதன் விளைவுகள் பற்றியும் நடத்த வேண்டிய சூழ்நிலைகள் குறித்தும் ஆலோசித்து வந்தேன்.

இன்றைய சட்டப்பேரவை இன்னும் ஓராண்டு காலம் தொடர்ந்து பதவியில் நீடிக்கலாம் என்பது உண்மை.

ஆனால் ஆண்டுதோறும் மக்கள் மாறி மாறி தேர்தல்களைச் சந்திக்கும் நிலையால் ஆட்சி இயந்திரம் சரிவரச் செயல்படாதிருக்கலாம். எடுத்த கொள்கை முடிவுகளை ஆட்சி இயந்திரத்தின் வாயிலாக நிறைவேற்ற முடியாத தேக்க நிலை ஏற்படவும், பொது மக்களுக்கு சங்கடங்களை உருவாக்கவும் வழி வகுக்கும் என்று கருதுகிறேன்.

இன்னும் ஓராண்டு காலம் கழக அமைச்சரவை அதிகாரத்தில் இருக்கலாமென்றாலும் பொது மக்களது நன்மைக் கருதியும் பாராளுமன்றத் தேர்தலுடன் ஒருங்கிணைத்து தேர்தலை நடத்துவதே பொருத்தமாகும் என்று தி. மு. கழகச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் அளித்த கருத்துக்களையும் அறிந்தேன்.

இந்திய நாட்டு அரசியலில் சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும். சமய சார்பற்ற அரசு கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்துக்கள் பலமான விவாதத்திற்கு உரியவைகளாகியிருக்கின்றன.

இந்த நோக்கங்களை நிறைவேற்றவும் தேவையான சட்டங்களை இயற்றவும் திட்டங்களைச் செயல்படுத்தவும் கழக அரசு நடவடிக்கைகள் எடுத்தும், மத்திய அரசு எடுத்த இதுபோன்ற கொள்கை நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்தும் வந்திருக்கின்றது.

இந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக மக்களுடைய தீர்ப்பைப் பெற நாடாளுமன்றத்தேர்தல் நடைபெறும் போது சட்டப் பேரவைத் தேர்தலும் நடத்துவது பொருத்தமுடையதாகும் என்ற முடிவிற்கு தி.மு.கழக அமைச்சரவை வந்துள்ளது.

மீதியிருக்கும் ஓராண்டு பதவிக் காலத்தையும் நாங்கள் பொருட்படுத்தாமல் ஏற்ற கொள்கைகளுக்கு மக்கள் தீர்ப்பைப் பெறவும், தொடர்ந்து நடைபெறும் தேர்தல் தொல்லைகளிலிருந்து மக்கள் விடுபட்டு நன்மை பெறவும் இரண்டு தேர்தல்களையும் ஒருங்கிணைத்து நடத்த வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கூறியிருக்கிறோம்" என்று கூறினேன்.

"தேர்தலில் வெற்றி உங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதா?" என்று கேட்டதற்கு "நான் வெற்றி வாய்ப்புக்களைப் பற்றி ஆணவத்தோடு என்றுமே சொல்லிப் பழக்கப்பட்டவன் அல்ல. அடக்கத்தோடு சொல்கிறேன். மிகச் சாதாரணமான எங்களை சாதாரணமான மக்களின் பிரதிநிதிகளாக சாதாரணமான மக்கள் தேர்ந்தெடுத்து இந்தப் பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் தொடர்ந்து ஊழியம் புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த மக்கள் எங்களிடத்தில் மீண்டும் வேலை வாங்கத் தயங்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்" என்று கூறினேன்.

சட்டமன்றத் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து வைப்பது குறித்து நான் பொதுக்கூட்டம் ஒன்றில் அப்போது கூறிய மூன்று உவமைகள்:-

கார்த்திகை மாதத்தில் அகல் விளக்குகளை ஏற்றுவார்கள் தாய்மார்கள். தீப்பெட்டியிலிருந்து ஒரு குச்சியை எடுத்து உரசி ஒரு விளக்கைப் பற்றவைத்து விட்டு கீழே போட்டுவிட்டு மற்றொரு விளக்கை ஏற்ற இன்னொரு குச்சியை எடுத்து உரசிட மாட்டார்கள். ஒரு தீக்குச்சியினால் எவ்வளவு விளக்குகளை ஏற்ற முடியுமோ அவ்வளவு விளக்குகளை ஏற்றுவார்கள். அதுபோலத் தான் நாடாளுமன்றத் தேர்தலையும், சட்டமன்றத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நாம் நடத்துகிறோம்.

வீட்டிலுள்ள தாய்மார்கள் அடுப்பைப் பற்றவைத்து அரிசிக்கு உலை வைத்து சோறு வடிப்பார்கள். உடனே அடுப்பை அணைத்து விட்டு குழம்புக்காக என்று சிறிது நேரம்

கழித்து அடுப்பைப் பற்ற வைக்க மாட்டார்கள். ஒரு தடவை அடுப்பைப் பற்றவைத்து சோறு பொங்கி விட்டு உடனே குழம்புக்கும் நீர் வைத்து சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்து குழம்பு கொதிக்க வைப்பார்கள். அதைப்போலத்தான் நாடாளு மன்றத் தேர்தல் நடக்கும் அதே நேரத்தில் சட்டமன்றத் தேர்தலையும் நடத்துகிறோம்.

ஸ்டுடியோக்கள் நிறைந்துள்ள கோடம்பாக்கம் பகுதி யிலுள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஸ்டுடியோவில் ஒரு கொலு மண்டபம் 'செட்' போட்டார்கள் என்றால், அதில் எடுக்கப்பட வேண்டிய அத்தனை காட்சிகளையும் எடுப்பார்கள். ஒரு கொலு மண்டபம் காட்சியை எடுத்துவிட்டு அந்த செட்டைக் கலைத்து பிறகு வேறு காட்சியை எடுத்து முடித்து விட்டு மீண்டும் ஒருமுறை கொலு மண்டப செட் போட்டு கொலு மண்டபக் காட்சியை எடுக்க மாட்டார்கள். அப்படி எடுத்தால் பணம்தான் விரயமாகும்.

ஜனவரி மாதம் 4-ஆம் தேதியன்றே கழக வேட்பாளர் களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று பேர்களைக் கொண்ட துணை ஆய்வுக் குழுக்கள் அறிவிக்கப்பட்டு, அந்தக் குழுக்கள் ஜனவரி மாதம் 5-ந் தேதி முதல் சுற்றுப் பயணம் செய்யும் என்றும், 12-ந் தேதி அன்று அறிக்கை தாக்கல் செய்யும் என்றும் பொதுச்செயலாளர் அறிவிப்பு வந்தது.

டெல்லியில் நடைபெற்ற தேர்தல் அதிகாரிகள் மாநாட்டில் பேசும்போது தலைமைத் தேர்தல் கமிஷனராக இருந்த சென்வர்மா "தமிழ்நாட்டில் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது மிகவும் எளிது. ஏனெனில் தமிழ்நாடு ஒழுங்கும், கட்டுப்பாடும் நிறைந்த மாநிலம் ஆகும்" என்று குறிப்பிட்டார்.

6-1-71 அன்று சென்னை வானொலியில் நான் விடுத்த வேண்டுகோளில் "தேர்தல் களத்தில் எல்லா அரசியல் கட்சி களும் நிற்கின்றன. இன்று தமிழகத்தில் அரசு நடத்துகின்ற நமது கட்சியில் உள்ளோர் உட்பட அனைத்துக் கட்சியினரும், தமது கொள்கை விளக்கங்களை தரக்குறைவு எதுவும் ஏற்படா வண்ணமும், தமிழகத்தின் பாரம்பரிய பண்பாடு எள்ளளவும் பாதிக்காத அளவிலும், அளிப்பதற்கேற்ற வகையில், தங்கள் தங்கள் கட்சிகளின் பிரச்சார இயந்திரங்களைக் கண்காணித்து

வருவார்கள் என்ற நம்பிக்கை கொள்வதோடு, அவ்வாறு அனைவருமே நடந்து கொள்ளவேண்டும் என்ற பணிவன்பான வேண்டுகோளையும் விடுத்திடுவது என் கடமை என்று கருது கிறேன். இந்த மகத்தான சோதனையில் எல்லாக் கட்சிக்காரர் களும், தமிழ்நாட்டின் பண்பாட்டையும், அரசியல் நாகரீகத்தை யும், அமைதியான சூழ்நிலையையும் பேணிக் காத்தனர் என்பது தான் நாம் ஏற்றி வைக்கும் அணையாத விளக்காகும்; எழுதி வைக்கும் அற்புத சரித்திரமாகும். அமைதி வழி தேர்தல் நடை பெற-அறவழிகள் கடைப் பிடிக்கப்பட-கொடும்பகை உணர்வு ஒழிந்து-கொள்கைப் பற்றுணர்வே மிகுந்து-கட்சிகள் வேறு வேறு இருக்கலாம்; ஆனால் கருத்தொருமித்த நட்பு வளர்ந்திட வேண்டும் என்ற சூளுரையை அனைவரும் எடுத்துக் கொண்டு தேர்தலில் ஈடுபடுவோம், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு-அதற்குக் கட்டுப்படுவோம்" என்று கேட்டுக் கொண்டேன்.

தி. மு. கழகத்திற்கு பெரும்பான்மை இருந்தபோதிலும், இன்னும் ஓராண்டுகள் ஆட்சியில் இருக்கலாம் என்றபோதிலும் இந்தியாவிலேயே தைரியமாக முதன்முதலில் முன்வந்து சட்ட மன்றத்தைக் கலைத்த கட்சி அப்போது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

ஆனால், அதுபற்றி "இந்து" எழுதிய தலையங்கத்தில் ஒவ்வொரு நாளும் தி. மு. கழகத்தின் பிரகாசம் குறைந்து வருவ தாகவும், அதனால் தான் சட்டசபை கலைக்கப்பட்டதாகவும் எழுதியது.

# 37

## 1971 தேர்தல் களம்

நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் குறித்து விவாதித்திட 8-1-71 அன்று முற்போக்கு கூட்டணி கட்சிகளின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தி. மு. கழகம் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்ட், தமிழரசுக் கழகம், முஸ்லீம் லீக் பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

இந்தக் கட்சிகள் தங்களுக்குள்ள கொள்கை, இலட்சியம், தனித்தன்மை எதனையும் இழக்காமல் சந்தர்ப்பவாத பிற்போக்குச் சக்திகளை தோல்வியுறச் செய்வதன் மூலம் ஏற்றத் தாழ்வற்ற சோஷலிச சமுதாயத்தை ஜனநாய முறையில் அமைக்கவும், ஏழ்மை விரட்டப் பட்டு சாதி மத வேற்றுமையின்றி எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற தத்துவம் நிலைபெறவும், வேலையின்மைக் கொடுமையிலிருந்து படித்தோர், பாமரர், கிராமப்புறத்து மக்கள் விடுபடவும், சோஷலிச அடிப்படையில் மத்திய அரசும் மாநில அரசும் திட்டங்கள் வகுத்துச் செயல்பட அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்திட வேண்டுமென்ற பொது நோக்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவர தொகுதி உடன்பாடு செய்து கொள்வதென்று முடிவெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் இரண்டு பிரதிநிதிகளைக் கொண்டு இணைப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

தி. மு. கழகத்திற்கும் பார்வர்டு பிளாக் கட்சிக்கும் 18-1-71 அன்றும், தி. மு. கழகத்திற்கும் முஸ்லீம் லீக் கட்சிக்கும்இடையே 19-1-71 அன்றும் தொகுதி உடன்பாடு குறித்து ஒப்பந்தம் கையெழுத்தாகியது. ஜனவரி 19ஆம் தேதியன்று தமிழகத்திற்கு வருகை தந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடன் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தலில் இட ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தினேன். அந்தப் பேச்சின் போது பொதுச் செயலாளர் கல்வி அமைச்சர் நாவலர், தொழில் அமைச்சராக இருந்த மாதவன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சி. சுப்பிரமணியம் ஆகியோர் உடன் இருந்தனர். ஒரு மணி நேரத்திற்கு மேல் அந்தப் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் நான் கூறும்போது, "சென்ற 1967 தேர்தலில் தி. மு. கழகம் 170 இடங்களில் போட்டியிட்டது. அதைவிட அதிகமான இடங்களில்தான் இந்தத் தடவை கழகம் போட்டியிடும். 1967ஐவிட இந்தத் தேர்தலில் அதிகமான இடங்களில் போட்டியிடவேண்டும் என்ற அடிப்படையில்தான் மற்றக் கட்சிகளோடு நாங்கள் தேர்தல் உடன்பாட்டுப் பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் முஸ்லீம் லீக் கட்சியுடனும், பார்வர்டு பிளாக் கட்சியுடனும், தமிழரசு கழகத்துடனும் எங்களுடைய பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து விட்டது. பி. எஸ். பி. கட்சியுடன் நாங்கள் பேசி அவர்களுக்கு ஒதுக்கக்கூடிய இடங்களைப் பற்றி விவாதித்து முடிவெடுத்திருக்கிறோம் என்றாலும் அந்தப் பேச்சுவார்த்தை நாளைக்கு சுமுகமாக முற்றுப் பெறலாம் என்று நம்புகிறேன்.

இந்திரா காங்கிரசைப் பொறுத்தவரையில் 5 முதல் 7 நாடாளுமன்றத் தொகுதிகளையும், சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் 10 முதல் 15 தொகுதிகளையும் நாங்கள் விட்டுக் கொடுக்க முன்வந்தோம். இது கூட்டணியிலுள்ள மற்றக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை விட அதிகமானது. இதில் இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்கு திருப்தியில்லை. அதனால் அந்தக் கட்சியோடு நடைபெறும் பேச்சு வார்த்தை இடையில் தடைபட்டிருக்கிறது" என்று கூறினேன்.

"இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நான்கு நாடாளுமன்ற இடங்களும், பத்து சட்டமன்ற இடங்களும், பார்வர்டு பிளாக் கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற இடமும் ஒன்பது சட்டமன்ற இடங்களும், முஸ்லீம் லீக் கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற இடமும், எட்டு சட்டமன்ற இடங்களும், தமிழரசு கழகத்திற்கு இரண்டு சட்ட மன்ற இடங்களும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கு நான்கு சட்ட மன்ற இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன" என்றும் அறிவித்தேன்.

23-1-71 அன்று செய்தியாளர்களிடமும் கூறிய தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் சி. சுப்பிரமணியம் "நாங்கள் கூட்டணியிலிருந்து பிரிந்து போக விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் எங்களுக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட இடங்களை தி. மு. க. விட்டுத் தரவேண்டும். அதிலிருந்து அவர்கள் பின்வாங்கக்கூடாது. அப்படி ஏதாவது உடன்பாடு ஏற்படா

விட்டால் தனித்துப் போட்டியிடத் தயங்கமாட்டோம்'' என்று கூறினர்.

இதற்கிடையே தி. மு. கழகத்துடன் உடன்பாடு பற்றிப் பேச்சு நடத்த பெரியவர் பக்தவத்சலம் அவர்களும், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் வந்தார்கள். சட்டப்பேரவையில் எண்பதுக்கு மேற்பட்ட இடங்களும், நாடாளுமன்றத்தில் இருபதுக்கு மேற்பட்ட இடங்களும் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர்கள். தி.மு.க.வுடன் உடன் பாடு ஏற்பட்டால் மட்டுமே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவுடன் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும் வந்திருந்தார். அவர் எப்படியாவது உடன்பாடு ஏற்பட வேண்டும் என்பதிலே குறியாக இருந்தார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் காமராஜர் அவர்களின் தலைமையில் உள்ள பழைய காங்கிரஸ்தான் பலம் வாய்ந்தது என்பதையும், இந்திரா காந்தியை ஆதரிக்கும் காங்கிரஸ் வலுவற்றது என்பதையும் நான் பிரதமரிடமே சுட்டிக்காட்டியிருப்பதை எடுத்துச் சொல்லி பிரதமரிடம் வாக்களித்தவாறு ஏழு அல்லது எட்டு நாடாளு மன்றத் தொகுதிகளையும், பதினைந்துக்குக் குறைவான சட்டமன்றத் தொகுதிகளையும் அவர்களுக்கு ஒதுக்குவதாக நான் உறுதி யளித்தேன். உடனே பக்தவத்சலம் அவர்களும், சுப்பிரமணியம், அவர்களும், பேச்சுவார்த்தை முறிந்து விட்டது எனக் கோபத் துடன் கூறிவிட்டு வெளியேறினர்கள். ''இது எங்கள் சுய மரியாதைக்கே ஒரு சவால்!'' என்று திரு. சி. எஸ். அவர்கள் ஆத்திரத்துடன் கூறினர். நான் சிரித்துக்கொண்டே அமைதி யாகச் சொன்னேன்; ''எங்கள் இயக்கமே சுயமாரியாதை இயக்கம்'' என்று!

திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களின் முகம் வாடி விட்டது. ''கழகத்துடன் உடன்பாடு இல்லையென்ருல் நான் தேர்தலில் நிற்கும் பிரச்சினையே இல்லை'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாடு 24-7-71 அன்று சென்னை அசோக்நகரில் அமைந்த அண்ணு அரங்கில் நடை பெற்றது. சிறப்பு மாநாட்டிற்கு கழகத்தின் தலைவர் என்ற முறை யில் நான் தலைமை தாங்கினேன். பொதுச் செயலாளர் நாவலர் மாநாட்டை திறந்துவைத்தார். கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். கழகத்தின் கொடியினை ஏற்றிவைத்தார்.

வரவேற்புக் குழு தலைவராக இருந்த நீலநாராயணன் வரவேற்புரைக்குப் பிறகு என்னைத் தலைமையேற்குமாறு முன்

மொழிந்திட- மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, எம். எல். சி., கழகத் துணைப் பொதுச் செயலாளர் க. ராசாராம், பேராசிரியர் அன்பழகன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்., அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அமைச்சர், என். வி• நடராசன், கே. ஏ, மதியழகன் ஆகியோர் வழிமொழிந்து உரை யாற்றினர்.

கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத், நாவலர் நெடுஞ் செழியன், எம். கல்யாணசுந்தரம், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., அப்துஸ்சமது, ஏ. ஆர். பெருமாள் ஆகியோர் பேசியபிறகு நான் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு உரையாற்றினேன்.

எனது உரையில் "இன்று மாலையில் இந்த மாநாட்டிற்கு வரும் வரை மாலை 4 மணி வரை இந்திரா காங்கிரசுடன் நமக் குள்ள உடன்பாடு முறியாது என்ற நம்பிக்கையுடன்தான் இருந்தேன். நேற்றும் இன்றும் நமது தோழர்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் எட்டு இடங்கள் நாடாளு மன்றத்திலும், 12 அல்லது 13 இடங்கள் சட்டமன்றத்திலும் அவர்களுக்குத் தருவது என்று வாக்களிக்கப்பட்டது. திரும்பி வந்து பேசுவார்கள் என்று நினைத்திருந்தோம். ஆனால் சுப்பிர மணியம் தனது கட்சி போட்டியிடும் தொகுதிகளை இன்று மாலை (24-1-71) அறிவித்து விட்டார். நேற்று அவர் கரூர் தொகுதியில் போட்டியிடப் போவதாக எங்களிடம் தந்த பட்டியலில் கூறப் பட்டிருந்தது. ஆனால் இன்றைய பட்டியலில் அவர் கோவைத் தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்• ஏற்கனவே பேசி முடிவு செய்யப்பட்டு கோவை நாடாளு மன்றத் தொகுதி இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு என்று ஒதுக்கப் பட்ட பிறகு கோவையில் போட்டியிடுவேன் என அறிவித் திருப்பது முற்போக்குக் கூட்டணியின் உறவைப் பாதிக்கும். ஆகவே நம்மோடு உடன்பாடு கொள்ள சம்மதிக்கவில்லை போலும் என்கிற கருத்தோடு மீண்டும் மேடையில் நாங்கள் ஏற்கனவே ஆய்வுக் குழுவில் தேர்ந்தெடுத்திருந்த பெயர்களை யெல்லாம் இணைத்து இந்த வேட்பாளர் பட்டியலை வெளியிடுகி றேன். இதனை நமது உழைப்பால் வெற்றிப் பட்டியலாக்கிட வேண்டும். என்று கேட்டுக்கொண்டு கழக வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டேன்.

தேர்தல் சிறப்பு மாநாட்டில் தோழமைக் கட்சிகளின் உடன்பாடு குறித்தும், போட்டியிடும் இடங்கள் குறித்தும், கழக வேட்பாளர்கள் குறித்தும் அறிவித்து விட்டு நிம்மதியாக

இரவு உறங்கிடச் சென்றேன். இரவு பனிரெண்டு மணி அளவில் தொலைபேசி மணி அடித்தது. டெல்லியிலிருந்து பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரும், திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களும் பேசினார்கள். "என்ன இப்படி ஆகிவிட்டதே!" என்று வருத்தப் பட்டார்கள்.

"எங்கள் மீது எந்தக் குறையுமில்லை. தமிழ்நாட்டில் உள்ள உங்களது காங்கிரஸ் தலைவர்கள்தான் முதலில் பட்டியலை வெளியிட்டு விட்டார்கள். அதற்குப் பிறகு நாங்களும் வேறு வழியின்றி எங்கள் மாநாட்டில் பட்டியலை அறிவித்து விட்டோம்" என்று பதில் அளித்தேன்.

"மறு பரிசீலனை செய்து இருபது சட்டமன்றத் தொகுதிகளும், பத்து நாடாளுமன்றத் தொகுதிகளுமாவது ஒதுக்கித் தர முடியுமா?" என்று கேட்டார்கள். "இனிமேல் சட்டமன்றத் தொகுதிகளை ஒதுக்குகிற முயற்சியில் ஈடுபடுவது இயலாது என்றும், முடியுமானால் நாடாளுமன்றத் தொகுதிகள் சிலவற்றை ஒதுக்குவது பற்றி யோசிக்கிறேன்" என்றும் கூறினேன்.

அந்தப் பேச்சின் தொடர்பாக திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் எங்களுடன் மீண்டும் உடன்பாடு குறித்துக் கலந்துரையாட வந்தார். அந்தப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்பாட்டின் விவரம் வருமாறு:

"காங்கிரஸ் (இ) கட்சி சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதில்லை என்றும் பின்வரும் பத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும் போட்டியிடுவதென்றும் இரு கட்சிகளும் பரஸ்பர முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும் நாடாளுமன்றத் தொகுதிகளிலும், சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒத்துழைப்பு வழங்கப் பாடுபடுவதென்றும் உறுதி தெரிவிக்கப் படுகிறது. இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள இடங்கள் வருமாறு : 1. கரூர், 2. மதுரை, 3. திருத்தணி, 4. கடலூர், 5. மேட்டூர், 6. புதுவை, 7. தென்காசி, 8. திண்டிவனம், 9. கிருஷ்ணகிரி, 10. சிவகாசி. இவைகளில் கரூர், மதுரை, திண்டிவனம், கிருஷ்ணகிரி, சிவகாசி ஆகிய ஐந்து தொகுதிகளில் கழகம் ஏற்கனவே வேட்பாளர்களை அறிவித்திருந்தும் அவர்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த உடன்பாட்டுக்கு ஒப்புக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது. காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர். வி. சாமிநாதனும், கழகச் சார்பில் நானும், நாவலரும் கையெழுத்திட்டோம்.

இந்த உடன்பாடு குறித்து சி. சுப்பிரமணியம் கருத்து வெளியிடும்போது "தி. மு. கழகத்திற்கும் காங்கிரசுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டிருப்பதை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். நடைபெறவிருக்கும் இத்தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. நான் எந்தவொரு தொகுதியிலும் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன். சிண்டிகேட் காங்கிரஸ் கூட்டணியை முறியடிப்பதை மனதிற்கொண்டு இந்த முற்போக்கு கூட்டணியின் உடன்பாடு ஏற்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்" என்றார்.

இறுதியாக கழகக் கூட்டணியின் சார்பில் சட்டமன்றத்திற்கு கழகம் 201 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 10 இடங்களிலும், பார்வர்டு பிளாக் 9 இடங்களிலும், முஸ்லீம் லீக் 8 இடங்களிலும், பி. சோ. கட்சி 4 இடங்களிலும், தமிழரசு கழகம் 2 இடங்களிலும் போட்டியிட்டன. நாடாளுமன்றத்திற்கு கழகம் 24 இடங்களிலும், காங்கிரஸ் 10 இடங்களிலும் (பாண்டிச்சேரி உட்பட), முஸ்லீம் லீக் 1 இடத்திலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 4 இடங்களிலும், பார்வர்டு பிளாக் 1 இடத்திலும் போட்டியிட்டன.

கழகத்துடன் தேர்தல் உடன்பாடு இல்லையென்றால் போட்டியிடப் போவதில்லை என்று கூறிக் கொண்டிருந்த மோகன் குமாரமங்கலம், பாண்டிச்சேரி நாடாளுமன்றத் தொகுதியில் வேட்பாளராக நின்றார்.

அண்ணாவை இழந்துவிட்ட நிலையில் கழகம்! ராஜாஜி அவர்களும் காமராஜர் அவர்களும் ஒன்றாக இணைந்து கழகத்தின் தலைமையில் இருந்த முற்போக்குக் கூட்டணியை வீழ்த்த வேண்டுமெனக் கச்சை கட்டி நின்ற தேர்தல் களம்! சேலத்தில் பெரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் இராமர் போன்ற கடவுளர் சிலைகளைக் களங்கப்படுத்தி விட்டதாகப் பரபரப்பான பிரச்சாரம்! அரசாங்கத்தின் தலைமைப் பீடத்தில் இருந்த முக்கியமான இரண்டொரு அதிகாரிகளேகூட ராஜாஜி அவர்களையும், காமராஜர் அவர்களையும் ரகசியமாகச் சந்தித்து கழகத்தையும், கழகத்தின் தோழமைக் கட்சிகளையும் தோற்கடிக்க முழு முயற்சிகளை மேற்கொண்ட வெளிப்படையான சதிச் செயல்!

இத்தனையையும் எதிர்கொண்டு கழகத் தலைமையில் முற்போக்குக் கூட்டணி தேர்தல் களம் புகுந்தது.

# 38

## அமைச்சரவையில் எம்.ஜி.ஆர்?

**1971** மார்ச் 1, மார்ச் 4, மார்ச் 7 என்று மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு தேர்தல் நாட்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. எப்படியும் முற்போக்குக் கூட்டணியைத் தோல்வியடையச் செய்ய வேண்டுமென்று சபதம் மேற்கொண்டு ராஜாஜி அவர்களும், காமராஜர் அவர்களும் இணைந்து நின்று செயல்பட்டார்கள். சென்னைக் கடற்கரையில் மிகப்பெரிய கூட்டமொன்றில் அந்த இரண்டு பெருந்தலைவர்களும் கலந்துகொண்டு ஆற்றிய உரையில் கழகத்தையும், கழகத்தின் தோழமைக் கட்சிகளையும் கடுமையாகத் தாக்கினார்கள்.

1967-இல் காமராஜரும் காங்கிரசும் தோற்கடிக்கப்பட வேண்டுமென்று முழுமூச்சுடன் பணியாற்றியும், எழுதியும், பேசியும் உலாவந்த ராஜாஜி அவர்கள், சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் காமராஜருக்குக் குங்குமத் திலகமிட்டு ஆசி வழங்கினார்.

அந்தப் படம் எல்லா நாளேடுகளிலும் வெளி வந்தது அவர்களது கூட்டணிக்கு ஜனநாயக முன்னணி என்று பெயர் கழக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பியே தீருவேன் என்று காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கும், ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரச்சாரத்திற்கும் புறப்பட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் திருத்தணி முருகன் கோயிலுக்குச் சென்று கையில் ஒரு வேலுடன் ஆவேசமாகக் கிளம்பினார்.

தினமணி, எக்ஸ்பிரஸ், இந்து ஆகிய ஏடுகள் நாள்தோறும் எல்லாப் பக்கங்களிலும் கழகக் கூட்டணிக்கு எதிரான பிரச்சாரத்திலேயே ஈடுபட்டிருந்தன.

கழகத் தலைமையில் முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரமும் விறுவிறுப்புடன் ஆரம்பமானது. தி. மு. கழகம் பிரிவினைவாத இயக்கம் என்றும் அதனுடன் உடன்பாடு கொள்ளலாமா என்றும் பிரதமர் இந்திரா காந்தியை நிருபர்கள் கேட்டபோது, அந்தக் கட்சி பிரிவினைக் கொள்கையைக் கை

விட்டுவிட்டது என்று அவர் பதில் அளித்தார். சேலத்தில் திராவிடர் கழகத்தினர் கடவுளர் சிலைகளைக் களங்கப்படுத்தியது குறித்துக் கேட்டபோது இந்திரா காந்தி அவர்கள்; திராவிடர் கழகத்திற்கும் தி. மு. கழகத்திற்கும் கடவுள் குறித்த கொள்கையில் நடைமுறை வேறுபாடுகள் உண்டு என்றும், திராவிடர் கழகம் ஒரு அரசியல் கட்சி அல்ல என்றும் விளக்கமளித்தார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தி. மு. கழகத்தின் கொள்கையென்பதும் அன்றைக்கு இந்திரா காங்கிரஸ்காரர்களாலேயே எடுத்துக் கூறப்பட்டது.

வடக்கே இந்திரா காந்தியையும், தமிழகத்தில் கருணாநிதியையும், வீழ்த்துவதே தங்களது நோக்கமென்று பழைய காங்கிரசார் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்தனர்.

சுமார் முப்பது நாட்கள் வேனிலேயே தமிழக முழுதும் சென்று இரவு பகல் பாராது தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன் ஒரு பகுதியில் எம். ஜி. ஆர். அவர்கள் நீண்ட சுற்றுப்பயணத் திட்டம் வகுத்துக்கொண்டு வேன் மூலம் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டார். விடியற்காலை ஐந்து அல்லது ஐந்தரை மணி அளவில் எங்காவது ஒரு இடத்தில் இறங்கிக் குளிப்பது – பிறகு ஏழு மணிக்கெல்லாம் மீண்டும் வேனில் ஏறிப் புறப்படுவது! வழியில் சாலையோரத்தில் வேனை நிறுத்திவிட்டு, அதற்குள்ளேயே அமர்ந்து சாம்பார் சாதம், தயிர் சாதம் பொட்டலங்களைக் கொண்டுவரச் செய்து சாப்பிடுவது! ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு வேன் செல்லும்பொழுது கிடைக்கும் சொற்ப இடை நேரத்தில் ஒரு மின்னல் உறக்கம் கொள்வது! இப்படி முப்பது நாட்கள் – கண்கள் வீங்கிவிட்டன! கன்னங்கரேலென ஆகிவிட்டது உடல் முழுதும்! நாற்பத்தேழு வயது அப்போது– அதனால் தாங்கிக் கொண்டது உடல்!

காமராஜர், நிஜலிங்கப்பா, ராஜாஜி, மொரார்ஜி போன்ற மிகப் பெருந்தலைவர்களின் கூட்டணிதான் வெற்றி பெருமென்றும் – மத்தியில் இந்திராவின் தோல்வியும், தமிழ்நாட்டில் தி. மு. க.வின் தோல்வியும் உறுதியென்றும் பத்திரிகைகள் யூகங்களை வெளியிட்டன. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் பலபேர், தங்களை மந்திரிகள் எனக் கருதிக்கொண்டு அதற்கேற்ற உடைகளைத் தைப்பதற்கு அளவுகள் கொடுத்துவிட்டனர்.

சிலர், மூக்குக் கண்ணாடிகளைச் சரி செய்து கொண்டனர், 'பைல்'களைப் பார்ப்பதற்காக! "மார்ச் 10–ஆம் தேதிக்குப்

பிறகு என்னைக் கோட்டையில் வந்து சந்தியுங்கள்" என்று சில காங்கிரஸ் தலைவர்கள் நிருபர்களிடம் கூறினர். அரசின் மிகப் பொறுப்பு வாய்ந்த இடத்தில் இருந்த அதிகாரிகள் ஒரு சிலர் தேர்தல் வாக்களிப்பு தொடங்குவதற்கு முதல் நாளே ராஜாஜிக்கும், காமராஜருக்கும் ஆளுயர மாலை அணிவித்து அவர்களிடம் ஆசி பெற்றுக் கொண்டனர்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமுதாய ரீதியாகப் பொதுவான முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமேயல்லாமல் யாரோ ஒருவர் இருவரை, பிற்படுத்தப் பட்டோரில் உயர் பதவிகளில் அமர்த்துவதால் அந்தச் சமுதாயத் திற்கு எந்த ஆதாயமும் இல்லை என்பதையும், அப்படி எந்தத் தனிப்பட்ட மனிதர்களைத் தூக்கி ஊட்கார வைக்கிறோமோ— அவர்கள் நமக்கே துரோகம் செய்யத் தயாராக இருப்பார்கள் என்பதையும் நான் உணர்ந்து கொள்ள 1971-ஆம் ஆண்டு தேர்தலும் ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது என்றே கூறலாம்.

நான் போட்டியிட்ட சைதாப்பேட்டைத் தொகுதி தேர்தல் அலுவலகத்தையே போலீசார் சுற்றி வளைத்துக் கொண்டும் உள்ளே நுழைந்தும் சோதனையிட்டு, தேர்தல் பணியாற்றிய கழகத் தோழர்களை மிரட்டுகிற அளவுக்குப் பெரிய அதிகாரி களால் தூண்டிவிடப்பட்டார்கள் என்றால் எவ்வளவு பெரிய சூழ்ச்சி வலையத்தை முற்போக்குக் கூட்டணி உடைத்தெறிந்து விட்டு வெற்றி பெற வேண்டியிருந்தது என்பதற்கு வேறு எடுத்துக்காட்டுகளே தேவையில்லை!

என் முதுகுக்குப் பின்னால் நடைபெற்ற சதிகளையும், சூழ்ச்சிகளையும் தெரிந்தும் தெரியாதவனைப் போல நடந்து கொண்டு, தேர்தலை அமைதியாக நடத்தும் அரசுப் பொறுப்பை மிக்க அக்கறையுடன் கவனித்துக் கொண்டேன்.

ஒருவாறு தேர்தல் முடிவுற்று மார்ச் 10, 11ஆகிய நாட்களில் வாக்குகள் எண்ணப்பட்டன. முதல் நாள் 133 தொகுதிகளில் வாக்குகள் எண்ணப்பட்டதில் கழகம் 111 இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தம் 234 தொகுதிகளிலும் கழகத்திற்கு 184 இடங்களும், தோழமைக் கட்சிகளான இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு 8 இடங்களும், பார்வர்டு பிளாக் கட்சிக்கு 7 இடங் களும், பி. சோ. கட்சிக்கு 4 இடங்களும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு 6 இடங்களும், தமிழரசு கழகத்திற்கு ஒரு இடமும், சிண்டிகேட் காங்கிரசுக்கு 15 இடங்களும் சுதந்திரா

கட்சிக்கு 6 இடங்களும் மற்றவை சுயேச்சைகளுக்கும் கிடைத்தன.

சேலத்தில் திராவிடர் கழகம் நடத்திய ஊர்வலத்தைத்தான் கழகக் கூட்டணியை எதிர்க்க சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியும், சுதந்திரக் கட்சியும் பெரிதும் தேர்தல் பிரச்சாரத்தில் பயன் படுத்தியதால், தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் பெரியார் அனுப்பிய வாழ்த்துத் தந்தியில் "உங்களைப் பாராட்ட எனக்குத் தமிழில் வார்த்தை கிடைக்கவில்லை. என் மீதிருந்த பழி நீங்கியது. உங்களுக்கு உலகப் புகழ் கிடைத்தது" என்று குறிப்பிட்டிருந்தார்.

கழகக் கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி குறித்து 11-3-71 "மெயில்" இதழில் "மக்களின் புதிய கட்டளை" என்ற தலைப்பில் டி. ஏ. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் ஒரு சிறப்புக் கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை பின்வருமாறு :

"இப்போது அறிவிக்கப்பட்ட வியக்கத்தக்க முடிவுகளை வைத்து மதிப்பிடும்போது தமிழ்நாட்டு வாக்காளர்களின் நம்பிக்கையை தி. மு. க. பெற்றிருக்கிறது என்ற உண்மையை யாரும் மறுத்திட முடியாது. அநேகமாக எல்லாத் தொகுதி களிலும் தி. மு. கழக வேட்பாளர்கள் 1967 பொதுத் தேர்தலில் பெற்றதைவிட அதிக வாக்குகள் பெற்றிருக்கிறார்கள். தி. மு. க. 1967-இல் இருந்த நிலையில் இல்லை. இப்போது தி. மு. க. ஆளும் கட்சியாதலால் அக்கட்சியின் குறைபாடுகளைப் பிரச்சாரத்திற் காகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு சாதகமான நிலை பழைய காங்கிரசுக்கு இருந்தது.

அடுத்து குறிப்பிட வேண்டியது 1967-இல் தி. மு. கழகத் துடன் இருந்த ராஜாஜி இந்த முறை காமராசருடன் சேர்ந்து கடுமையான பிரச்சாரம் செய்தார். ஆனால் இந்த முதியவரின் சொற்களை இந்த முறை வாக்காளர்கள் காது கொடுத்துக் கேட்கவில்லை.

தி.மு. கழகத்துடன் உள்ள உறவை முறித்துக்கொண்டால் அதனால் நஷ்டமடைவது ராஜாஜிதான் என்று திரு. கருணாநிதி சொன்ன ஆருடம் பலித்துவிட்டது. தேர்தலை எதிர்நோக்குவது என்று திரு. கருணாநிதி எடுத்த முடிவு நல்ல பயனைக் கொடுத் துள்ளது.

தேர்தலில் குறிப்பிடத்தக்க வகையில் பெற்ற இந்த வெற்றிக்காக பொதுவாக தி.மு.கழகமும், குறிப்பாக திரு.

கருணாநிதியும் பாராட்டுக்களைப் பெற எல்லா காரணங்களும் உண்டு. என்றாலும் தேர்தல்கள் என்பது இலக்கை நோக்கிச் செல்லுகிற ஒரு வழிதான். இலட்சியம் என்பது நல்ல அரசு நடத்துவதுதான்.

முதல் பகுதியான சென்ற நான்காண்டுகளில் தி.மு.க. இந்த மாநிலத்து மக்களுக்கு நல்ல அரசை வழங்கியது. தி. மு. கழகம் தமிழ் நாட்டில் சட்டம் அமைதியைக் காப்பாற்றியிருக்கிறது தமிழ்நாட்டில் சொத்துக்களுக்கும் உயிருக்கும் எவ்வித ஆபத்தும் இல்லை. சட்டத்தின் ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றது.

இப்போது தி. மு. க. மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் முன்பு அண்ணாவின் ஆ சியைப் போல திரு. கருணாநிதியின் ஆட்சியும் மக்கள் விரும்பியதை வழங்கியது என்பதுதான் அதற்கு முக்கிய காரணம்."

கழகத்தின் வெற்றி குறித்து தமிழகப் புலவர் குழுவின் சார்பில் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபால் பிள்ளை அவர்கள் அனுப்பியிருந்த வாழ்த்து இதோ!

தண்டமிழ் நாட்டின் தனிமுதல்வன் அண்ணாமுன்
கண்ட அரசு செழித்தோங்கப் – பண்டை
அருணோ தயத்தின் அலர்ந்த மலராம்
கருணா நிதியே கதி.
இருந்தமிழே நீயுன் இதயங் களிக்கப் பெருந்தமிழர் தொண்
டாற்றிப் பேணும் - மருந்தனைய
நந்தம் தமிழரசு நாளுஞ் செழித்தோங்க
வந்திப்போம் உன்னை மகிழ்ந்து!
வெற்றித் திருவாய் விளங்குந் தமிழரசின்
பெற்றியினை நாளும் பெருகச் செய் - நற்றமிழர்
எல்லோரும் வாழ இயம்பும் புலவர்குழு
பல்லாண்டு வாழ்த்துப் பரிந்து!

இத்துணை பெரிய வெற்றியினூடே இரண்டு அதிர்ச்சிகள் எங்களுக்கு! நாவலரின் திருவல்லிக்கேணி தொகுதியில் அவரை எதிர்த்து நின்ற நண்பர் விநாயகம் முந்திக் கொண்டிருந்தார். மைலாப்பூர் தொகுதிதான் வேண்டுமென்று பிடிவாதமாகக் கேட்டு, அங்கு போட்டியிட்ட சிலம்புச்செல்வர் ம. பொ. சி.

அவர்கள் தோல்வியடைந்தார். இரவு இரண்டு மணி அளவில் நாவலர் தோற்றுவிடுவார் எனக் கண் கலங்கிக்கொண்டிருந்த போது திடீரென நற்செய்தி கிடைத்தது; சுமார் ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுவிட்டார் என்று! 180-க்கு மேற்பட்ட இடங்களில் தமிழக வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு வெற்றிவாகை சூடியிருந்தபோதிலும் நாவலர் தோற்றுவிடுவாரோ என்ற அச்சமும் - ம. பொ. சி. வெற்றி பெறவில்லையே என்ற துயரமும் எங்களை ஆட்டிப் படைத்தன.

மார்ச் 14-ஆம் நாள் கட்சித் தலைவர் தேர்தலுக்கு - அதாவது முதல்வர் தேர்தலுக்கு, நாள் குறிக்கப்பட்டது. இதற்கிடையே காஷ்மீரில் படப்பிடிப்பில் இருந்த கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர். அவர்கள் டெல்லி வந்து, அவசர அவசரமாக என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். இவ்வளவு மகத்தான வெற்றி கிடைக்கும் என எதிர்பார்க்காத காரணத்தால் எம்.ஜி.ஆர். அவர்கள், வாக்கு எண்ணப்படுவதற்கு முன்பே காஷ்மீர் சென்று விட்டிருந்தார்.

டெல்லியிலிருந்து தொலைபேசியில் என்னிடம் உரையாடிய பொழுது, அமைச்சரவையில் தனக்கும் ஒரு இடம் வேண்டுமென்பதையும், அதுவும் "மெடிகல் மினிஸ்டர்" என்பதையும் சூசகமாகத் தெரிவித்து எனது பதிலை எதிர்பார்த்தார். "நீங்கள் உடனே வாருங்கள். எல்லாம் நேரில் பேசிக்கொள்ளலாம்" என்றேன். டெல்லியிலிருந்து விமானம் உடனே கிடைக்காத காரணத்தால் எம்.ஜி.ஆர். அவர்கள் தனி விமானம் ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு சென்னை வந்துசேர்ந்தார்.



# 39

## மூன்ருவது-கழக அமைச்சரவை

சுகாதாரத்துறை என்றும் - பின்னர் மக்கள் நல்வாழ்வுத் துறை என்றும் பெயர் மாற்றம் பெற்ற (Health Portfolio) தைத் தான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் "மெடிகல் மினிஸ்டர்" என்று பெயரிட்டு; அந்தத் துறையின் அமைச்சராகத் தன்னை ஆக்கிட வேண்டுமென்று என்னிடம் வலியுறுத்தினர். எந்த இலாக்கா என்பதைப் பற்றிக்கூட நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்காமல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அமைச்சரவையில் இடமளிக்கத் தயாரானேன். ஆனல் அந்தக் கருத்துக்கு நவலார், மாதவன் போன்ற ஒருசிலர் எதிராக இருந்தார்கள்.

அமைச்சரவையில் அவர் இடம் பெறுவதே கூடாது என்பது அவர்களது எண்ணமாக இருந்தது. படங்களில் நடிப்பதை நிறுத்திக் கொண்டால் அமைச்சரவையில் அவர் இடம் பெறுவதில் எந்தத் தடையும் இல்லையல்லவா என நான் வினவினேன். ஆனல் எம். ஜி. ஆர். அவர்கள், நடித்துக் கொண்டே அமைச்சராக இருக்க வேண்டுமென்றும் அதற்கேற்ப அமைச்சர் பணிக்கான கோட்பாடுகளைத் திருத்தச் சொல்லி பிரதமர் இந்திரா காந்தி அவர்களை வற்புறுத்த வேண்டுமென்றும் யோசனை கூறினர்.

நண்பர் மாதவன், அரசாங்க சட்ட வல்லுநர்களை அணுகி அவர்களது கருத்தை எழுத்து வடிவத்தில் பெற்று வந்தார்.

நடிப்புத் தொழிலில் ஈடுபட்டவாறு அமைச்சர் பதவியில் இருப்பது கோட்பாடுகளுக்கு மாருனது என்ற கருத்தையே சட்ட வல்லுநர்கள் வழங்கினர்கள். நானும் எம். ஜி. ஆர். அவர்களிடம்; "கோட்பாடுகளே குறுக்கே நிற்காவிட்டாலும், அமைச்சர் பதவியில் இருந்துகொண்டு திரைப்படத்தில் பல்வேறு விதமான பாத்திரங்களில் நடிக்கும்போது-அது ஏதோ ஒரு வித்தியாசமாகத் தோன்றும்-எனவே, உங்களை அமைச்சராக்கு வதில் எனக்கு ஆட்சேபணையில்லை-படங்களில் நடிப்பதை நிறுத்திக் கொள்ளுங்களேன்" என்று கூறினேன்.

ஆனால் அவர் கேட்பதாக இல்லை. உடனடியாக வெளிக்காட்டிக் கொள்ளமுடியாத கோபத்தை ஆழமாக உள்ளத்தில் அடக்கி வைத்துக்கொண்டு, அமைச்சர் பதவிக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்.

தி. மு. கழக சட்டமன்ற கட்சித் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஆளுநர் உஜ்ஜல்சிங் அவர்களைச் சந்தித்து அமைச்சரவைப் பட்டியலை அளித்தேன். முதல்வராக நானும், கல்வி அமைச்சராக நாவலரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக என். வி என்.னும், தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக திருமதி சத்தியவாணிமுத்துவும், உணவு அமைச்சராக ப. உ. சண்முகமும், தொழில் அமைச்சராக மாதவனும், பொதுப்பணித் துறை அமைச்சராக சாதிக் பாட்சாவும், கூட்டுறவுத் துறை அமைச்சராக சி. பா. ஆதித்தனும், வேளாண்மைத் துறை அமைச்சராக அன்பில் தர்மலிங்கமும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக ராஜாராமும், மின்துறை அமைச்சராக ஓ. பி. இராமனும், போக்குவரத்துத்துறை அமைச்சராக பண்ருட்டி ராமச்சந்திரனும், அறநிலையத் துறை அமைச்சராக மு. கண்ணப்பனும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தோம்.

மார்ச் 15–ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அமைச்சரவைப் பதவியேற்கும் விழா நடைபெற்றது. தி. மு. கழகத்தின் முதல் அமைச்சரவை 1967 மார்ச் திங்கள் 6–ஆம் நாளும், இரண்டாவது அமைச்சரவை 1969 பிப்ரவரி 10–ஆம் நாளும், மூன்றாவது அமைச்சரவை 1971 மார்ச் 15–ஆம் நாளும் பதவி ஏற்றன!

அமைச்சர் பதவியேற்றவர்களில் 1976–ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்படும்வரையில் கழகத்திலேயிருந்து–ஆட்சிக் கலைப்பு, மிசாக் கொடுமை போன்ற சோதனைகள் கழகத்தைத் தாக்கியபோதும், தேர்தல் தோல்விகளைக் கழகம் சந்திக்க நேரிட்டபோதும்–ஆடாமல், அசையாமல் கொள்கை குலையாமல் நிலைத்தவர்கள் யார் யார் என்பதும்; பதவிச்சுவை–அதிகார அந்தஸ்து–இவற்றுக்காகப் பல் இளித்துக் கட்சி மாறிவிட்டவர்கள் யார் யார் என்பதும் நாட்டு மக்கள் அறிந்த உண்மையாகும்.

அமைச்சரவை பதவியேற்ற அன்றிரவு கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாடாளுமன்ற தி. மு. க

குழுத் தலைவராக நாஞ்சிலாரும், துணைத் தலைவராக இரா. செழிய னும் செயலாளராக சி. டி. தண்டபாணியும், கொறடாவாக ஜி. விசுவநாதனும், துணைக் கொறடாவாக மாயவனும், பொருளாள ராக சிட்டிபாபுவும், துணைச் செயலாளர்களாகபி. ஏ. சாமிநாதன், தா. கிருஷ்ணன் ஆகியோரும், மாநிலங்களவை குழுத் தலைவராக தில்லை வில்லாளனும், துணைத் தலைவராக டி. கே. சீனிவாசனும், கொறடாவாக புதுவை சிவப்பிரகாசமும் ஒருமனதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுடன் இணைந்து நடைபெற்ற நடாளுமன்றத் தேர்தலில் புதுவை உட்பட நாற்பது இடங்களில், திரு. காமராசர் அவர்கள் போட்டியிட்ட நாகர் கோயில் தொகுதி ஒன்றைத் தவிர மற்ற எல்லா இடங்களும் தி. மு. க. தலைமையிலான கூட்டணிக் கட்சிக்கே கிடைத்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நண்பர் மதியழகன் அவர்களுக்கு அந்த அமைச்சரவையில் எப்படியும் இடம் தந்தே ஆக வேண்டுமென்று அவரது இளவல் கே. ஏ. கிருஷ்ணசாமி எனது இல்லத்தினை முற்றுகையிட்டு வாதாடினர்! போராடினர்! மதி அவர்கள் அமைச்சர் பதவியில் இருந்தபோது கே. ஏ. கிருஷ்ணசாமி பெயரால் வாங்கப்பட்ட வீடு ஒன்றினைக் குறித்துச் சட்டப் பேரவையில் புகார் கூறப் பட்ட காரணத்தினுல்தான் மதியழகன் பதவியிழக்க நேரிட்டது என்ற அந்த நிலையில் மீண்டும் மதியழகன் அவர்களை அமைச்ச ராக்க இயலாத சூழலை நான் விளக்கினேன்.

ஆனல் இறுதியாக கண்ணீர் கண்டு கசிந்துவிடும் எனது பலவீனத்தின் காரணமாக மதியழகன் அவர்களைச் சபாநாயகராக ஆக்குவதற்கு ஒப்புதல் அளித்தேன். அதேபோலத்தான் பண்ருட்டி ராமச்சந்திரனின் கண்ணீர் என் கால்களையே நனைத்துவிட்ட நிலையில்; மரணப்படுக்கையில் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு அளித்த உறுதிமொழிக்கு மாருக பண்ருட்டி ராமச்சந்திரனுக்கும் மந்திரிப் பதவி தரச் சம்மதித்தேன்.

மிகப் பெரும் தலைவர்களான ராஜாஜி, காமராஜர் இருவரது தலைமையில் தேர்தல் களத்தில் போரிட்ட அணியை வெற்றி கண்டு மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிட்ட பூரிப்பில், கழகத்தோடு சேர்ந்து வளர்ந்த மதி போன்றவர்களை யும்-கண்ணீர் மல்க நின்ற பண்ருட்டி ராமச்சந்திரன் போன்ற வர்களையும் புறக்கணிக்க என் மனம் இடம் தரவில்லை!

பிற்காலத்தில் அதனால் ஏற்பட்ட விளைவுகள் எவ்வளவு விபரீதமானவைகள் என்பதை நான் விளக்கத் தேவையில்லை.

தமிழகத்தில் கழகம் பெற்ற மகத்தான வெற்றி குறித்து, டெல்லியிலிருந்து வெளிவரும் "லிங்க்" என்ற ஆங்கில ஏடு, பின்வருமாறு எழுதியது :-

"பிரமாதமான முறையில் மீண்டும் ஆட்சியைப் பிடித்திடுவோமென்று வலதுசாரி சக்திகளின் கூட்டு பெரிய நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருந்த மாநிலம் தமிழ்நாடு. ராஜாஜியும், காமராசரும் கூட்டுச் சேர்ந்தால் அது வெல்லற்கரிய மாபெரும் சக்தி என்பதாக ஒரு மாயை மிகக் கவர்ச்சிகரமாகக் கட்டி வளர்க்கப்பட்டது. ஆனால் தமிழகத்து மக்கள் வேறுவகை சிந்தனை உடையவர்களாக இருந்தனர். அந்தக் கூட்டுக்கு இத் தேர்தலில் அவர்கள் கொடுத்துள்ள சாட்டையடியிலிருந்து அவர்கள் மீண்டும் எழுவதென்பது இயலாத காரியம்.

நாடாளுமன்ற தேர்தலோடு தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல்களையும் நடத்திடுவதென்று கருணாநிதி தீர்மானித்தபோது மந்த புத்தி அரசியல் பண்டிதர்கள், இது சிக்கலான ஒரு சோதனை என்று கூறினர்.

ஆனால் முற்போக்கு அணியின் பிரகாசமான வெற்றியும், சிண்டிகேட் சுதந்திரா கூட்டுக் கும்பலின் கேவலமான தோல்வியும், ஊக்கமிக்கவரும் திரைக்காவிய கர்த்தாவுமான தி. மு. கழகத் தலைவர் கருணாநிதி, ராஜகோபாலாச்சாரியார், காமராசர் ஆகியோரைக் காட்டிலும் நுண்திறன் வாய்ந்த அரசியல் தந்திரமிக்கவர் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது.

தமிழகத்தில் இயங்கும் ஏக போக ஏடுகள் தங்கள் முழு ஆத்திரத்தையும் தி. மு. கழகத்தை வலிந்து தாக்கி பிரச்சார இயக்கம் நடத்தின. இதனால் எல்லாம் தி. மு. கழகம் அரசை விட்டு அகலும் என்ற கருத்தை ராஜாஜி, காமராஜர் கூட்டத்தினரால் உருவாக்க முடிந்ததற்கும் அந்த ஏடுகளே காரணம்.

சுதந்திராவும், சிண்டிகேட்டும் அடைந்துள்ள படுதோல்வி உண்மையிலேயே அவமானகரமானது."

மீண்டும் முதல்வர் பதவியேற்றவுடன் 16-3-71 வானொலியில் நான் ஆற்றிய உரையை இங்கு நினைவுபடுத்துவது தேவையான ஒன்றாகும்.

"தமிழகத்தைப் பொறுத்த வரையில் கழக அரசினைத் தங்களுக்குப் பாதுகாப்பான மெய்க்காப்பாளனாகவும் - தங்களுக்குப் பணியாற்றும் ஊழியனாகவும் - தங்கள் வீட்டில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்காகவும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நம்பிக் கொண்டிருப்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு உழைப்பதற்கு நாங்கள் சூளுரை மேற்கொண்டிருக்கிறோம். ஏழை எளிய மக்கள் வாழ்வு ஒளிபெற - சாதிபேதமற்ற சமூக நீதி நிலைத்திட - சமதர்மம் நடைமுறைக்கு வந்திட - தனி மனிதனின் வாழ்வுக்கான அடிப்படைச் சொத்துரிமைகளைச் சீர்குலைக்காமல் இந்த அரசு சீரிய பணியாற்றும்.

விஞ்ஞான யுகத்திற்கு ஏற்ற சமதர்ம சமுதாய அமைப்பில் நமது கவனத்தைக் கவருகிறவர்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலே வாய்ப்பு வசதிகளின்றி பின்தங்கிய சமூகத்தவரும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஆவர். அவர்களைக் கைதூக்கிவிட இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப் படும்.

தொழிலாளர் கிளர்ச்சியாயினும் - மாணவர் எழுச்சியாயினும் - விவசாயிகள் கிளர்ச்சியாயினும், கிளர்ச்சி நடத்துவோரைப் பற்றிச் சிந்திக்காமல் கிளர்ச்சியின் காரணத்தை உணர்ந்து அவைகளில் வீண் கௌரவப் பிரச்சனை பார்க்காமல், அவர்தம் முறையீடுகளுக்குச் செவி சாய்த்து நியாயமெனப்பட்டதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டத் தேவையில்லை என்பதே அரசு தொடர்ந்து கடைப்பிடிக்க விரும்பும் பண்பாகும்.

ஆளுங் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவது தான் அரசு! அதுபோல அனைவரையும் சேர்த்து நடத்துவது தான் நல்லரசு! அந்த நல்லரசாக இந்த அரசு தொடர்ந்து நடந்திட நாளும் நாங்கள் பணியாற்றுவோம்.

ஆகவே இவர்கள் ஆளுகிறார்களே என்று எண்ணாமல், இவர்கள் ஆளுவதற்கும் இனிய அறிவுரைகளைக் கூறுவோம் என்று நல்லிதயம் கொண்டு எங்களை வாழ்த்துமாறு, கருத்து மாறுபாடு - கொள்கை மாறுபாடு கொண்டவர்களையும் வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்

சாதாரணமானவர்கள் நாங்கள்; சாதாரண மக்களுக்காக உழைப்பதற்கு முன் வந்திருப்பவர்கள். எங்களை ஆளாக்கிய

எங்கள் அண்ணன் எதையும் தாங்கும் இதயம் கொண்டு, கடமை போற்றி, கண்ணியம் வளர்த்து, கட்டுப்பாடு குலையாமல் நடப்பதற்கு கற்றுக் கொடுத்திருக்கிறுர். அந்த அண்ணனின் வழிநின்று அயராது உழைப்போம்.

குறை இருந்தால் சுட்டிக் காட்டுங்கள்!

காழ்ப்புணர்ச்சியின்றி நடுநிலையோடு கருத்துக்களை எடுத்துக் கூறுங்கள்! தமிழகத்தின் அரசியல் பண்பாடும், நாகரிகமும் அணுவளவும் குறையாத வகையில் உண்மை விமர்சனங்களைச் செய்திடுங்கள்.

நியாயங்களுக்குத் தலைவணங்குகிறேம். தொடர்ந்து நேர்மை வழி நடக்க உறுதி பூணுகிறேம்.

உங்கள் அரசு இது!

உங்கள் வீட்டுப் பிள்ளைகள் நாங்கள்!

குறை இருந்தால் கண்டியுங்கள்! குற்றம் இருந்தால் தண்டியுங்கள்!

தேர்தல் முடிந்து விட்டது – புயல் ஓய்ந்து விட்டது – இனி தென்றல் வீசட்டும்!

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்!

இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்!

தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்திடுவோம், வாரீர்!''

# 40

## மதுரையில் ஒரு விழா!

இந்தியாவிலேயே முதன் முதலாகக் கழக ஆட்சியில் தான் மாநிலத் திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு, 1971–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் தொடங்கப் பெற்றது. அந்தக் குழுவுக்குத் தலைவராக மாநில முதலமைச்சர் இருப்பதென்றும், திட்டக்குழுவின் துணைத்தலைவராக தலைமைச் செயலாளர் நிலையில் உள்ள ஒரு முழுநேர அலுவலரை நியமிப்பது என்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பதவிக்கு அப்போது தலைமைச் செயலாளராக இருந்த இ. பி. ராயப்பா அவர்கள் நியமிக்கப்பட்டார். வருவாய் வாரியத் துறை முதல் உறுப்பினராக இருந்தவரும், மின்வாரியத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவருமான பி. சபாநாயகம் அவர்கள், தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். இந்த மாற்றங்களையொட்டி, போலீஸ் ஐ. ஜி. யாக இருந்த ஆர். எம். மகாதேவன் அவர்கள் லஞ்ச ஊழல் ஒழிப்பு டைரக்டராகவும், மத்திய புலன் விசாரணைப் பிரிவில் டைரக்டராக இருந்த எப். வி. அருள் அவர்கள் ஐ. ஜி. யாகவும் நியமிக்கப் பட்டனர்.

இந்தப் பதவி மாற்றங்களுக்குப் பிறகு மதுரை மாநகரில் நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றமாக மாற்றம் பெற்ற நிகழ்ச்சியும் தொடர்ந்தது. நகராட்சி மன்ற உறுப்பினர்களே, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாகும் தகுதி பெற்றனர். இந்த நிலையை, அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த கல்வி அமைச்சர் நாவலர், ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினார். ஆனால், நான் அதற்குரிய காரணங்களைக் கூறி, நகராட்சி மாநகராட்சியாகும் போது நகராட்சி உறுப்பினர்கள் மாநகராட்சி உறுப்பினர்களாகும் தகுதி பெறுவதில் தவறில்லை என வாதிட்டேன்.

அமைச்சரவையினரின் ஒப்புதலையும் பெற்று 1971 மே திங்கள் முதல் நாள் மதுரை மாநகராட்சி தொடக்க விழா மகிழ்ச்சிப் பெருக்குடன் நடைபெற்றது. நாவலர் தலைமையில் மாநகராட்சி மன்றத்தை நான் தொடங்கி வைத்தேன். நகராட்சியின் தலைவராக இருந்த நண்பர் மதுரை முத்து

அன்றைய தினம் மதுரை மாநகராட்சியின் முதல் மேயரானர், அந்த விழாவில் பழம்பெரும் நடிகர் டி. ஆர். மகாலிங்கம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். மதுரைக் கோபுரமும். பாண்டிய மன்னர்களின் சின்னமான மீன்களும் வரையப் பெற்ற மாநகராட்சி மன்றத்தின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து, நண்பர் முத்து அவர்களுக்கு மேயர் பதவிக்கான அங்கி முதலிய அணிகளை அணிவித்தபோது நான் ஆற்றிய உரையை இந்த வரலாற்று ஏட்டில் பதியச் செய்வது எனது கடமையாகும்.

பிற்காலத்தில் அரசியல் சூழல்கள் என்னிடமிருந்து முத்து அவர்களைப் பிரித்துவிட்டன என்பதற்காக நான் அவரது கடந்தகாலப் பணிகளுக்குத் திரை போட்டு விடுவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. சிவப்பு வெல்வெட்டில் தைக்கப் பெற்ற விசேட அங்கியை அவருக்கு அணிவித்தேன். மதுரை ரோட்டரி கழகம் நூறு பவுன்களைக் கொண்டு மேயருக்கான சங்கிலியொன்றை தயாரித்து நன்கொடையாக அளித்திருந்தது. அந்தச் சங்கிலியை அவர் கழுத்தில் நான் அணிவித்தேன். தங்க முகடு பொறிக்கப்பட்ட வெள்ளிச் செங்கோலையும் மேயரிடம் நான் வழங்கினேன். சென்னை நகர மேயராக இருந்த நண்பர் சா. கணேசன் அமைச்சர்களுடன் வந்திருந்து மதுரையின் புதிய மேயர் முத்துவை வாழ்த்தினர். அந்த விழாவில் உணர்ச்சி பொங்கிட நான் ஆற்றிய உரை வருமாறு

"இன்று மதுரை மாநகரமே மகிழ்ச்சியால் துள்ளிடும் பொன்னுளாகும். மதுரை நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றமாக இன்று மாறி அதனுடைய முதல் மேயராக முத்த அவர்கள் பொறுப்பேற்றிருக்கிருர்கள். முத்து அவர்கள் பேசுகிற நேரத்தில் இது மாநகராட்சியாக மாறுவதற்கு நானும் நாவலர் அவர்களும் ஏனைய அமைச்சர் பெருமக்களும் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளை எல்லாம் இங்கே தொகுத்துச் சொன்னர்கள்.

சென்னையில் மேயர் பதவி என்று ஒன்று இருந்தது. அது நண்பர் சா. கணேசன் அவர்களுக்கு இப்போது கிடைத்திருக்கிறது. முதலமைச்சர் பதவி என்று ஒன்று இருந்தது. அது எனக்குக் கிடைத்தது. ஆனல் முத்து அவர்களைப் பொறுத்தவரையில் மேயர் பதவி என்று ஒன்று இருந்தது அத அவருக்கு மதுரையில் கிடைத்ததா என்ருல் இல்லை, மேயர்

பதவி முத்துவை நாடி இப்போது வந்திருக்கிறது. இது புதுமை யானதும் மகிழத்தக்கதுமான பெரிய அம்சமாகும்.

முத்து அவர்களை மேயராக ஆக்கி நாங்களெல்லாம் மகிழ்ச்சி அடைகிற நேரத்தில் இருதயத்தின் ஒரு மூலேயில் ஒரு சோகக் குரல் ஒலிப்பதை என்னுல் மறைத்துக் கொள்ள முடிய வில்லே. நண்பர் முத்து அவர்களாலும் அதை மறைக்க முடியாது என்பதை அறிவேன். அந்த சோகக் குரல் ஒலிப் பதற்குக் காரணம் எங்களேயெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணு அவர்கள் இங்கு இல்லேயே என்பதுதான்.

அண்ணு அவர்கள் இருந்து அவருடைய திருக்கரங்களால் இந்த அங்கியை எடுத்துத் தந்து அவருடைய செங்கோலேக் கொடுத்து, அவருடைய கையால் முத்து அவர்களுடைய கழுத்தில் இந்தத் தங்கச் சங்கிலியை அணிவித்து அதை நாங்கள் பார்த்து களிக்க கொடுத்து வைக்கவில்லேயே என்ற அத்தகைய உணர்ச்சி உள்ளத்தைக்குடையாமல் இல்லே. முத்து அவர்கள் மதுரை மாநகரத்தின் மேயராகப் பொறுப் பேற்றிருக்கிருர் என்ருல் இதற்குப் பின்னுல் — மதுரைக்குப் பின்னுல் — இந்த நகராட்சி மன்றத்திற்குப் பின்னுல் எத்தனே வரலாறுகள் இருக்கிறதோ, அதைப் போல மேயராக ஆகியிருக் கிருரே மதுரை முத்து, அவருக்குப் பின்னுல் மிகப்பெரிய வரலாறு இருக்கிறது!

அந்த வரலாறு குருதியால் எழுதப்பட்ட வரலாறு - இரத்தத்தால் தீட்டப்பட்ட வரலாறு — அந்த வரலாறு கண்ணீரால் எழுதப்பட்ட வரலாறு—தியாகச் செயல்களால் உருவாக்கப்பட்ட வரலாறு—அந்த வரலாறு அடக்குமுறைகளே அடக்கிக் கொண்டிருக்கிற வரலாறு. அந்த வரலாற்றுக்குப் பின்னுல் சிறைச்சாலேகள் தோன்றும். அந்த வரலாற்றுக்குப் பின்னுல் சித்திரவதைகள் காணக்கிடைக்கும்.

அந்த வரலாற்றை எல்லாம் கடந்துதான் — பயங்கரப் பாதைகளே எல்லாம் தாண்டித்தான்—கடுமையான காட்டாறு களே எல்லாம் கடந்துதான்—கனல் தெறிக்கும் பேச்சுக்கள் அனல் தெறிக்கும் ஏச்சுக்கள் தாங்க முடியாத எதிர்ப்புக் கணேகளே தாங்கித் தாங்கித்தான்; மதுரை மாவட்டத்திலே கூட அல்ல—ராமனுதபுரம் மாவட்டத்தில் ஒரு சின்னஞ்சிறிய ஊரிலே பிறந்த முத்து, இன்று மேயராக உயர்ந்து நிற்கிருர்.

வாலிப வயதில் வட்டிக் கடையிலே வேலே பார்த்தார். பிறகு ஆலேத் தொழிலாளியாக இருந்தார். ஆலேத் தொழிலாளர்

போராட்டத்திலே குதித்தார். பெரியார் அவர்களின் சுய மரியாதை இயக்க பிரசாரமாக மாறினார். அல்லும் பகலும் அயராமல் உழைக்கின்ற தொண்டராக இருந்தார். இன்றைக்கு தி. மு. கழகத்தைக் கட்டிக் காக்கின்ற காவலர்களிலே ஒருவராக மதுரை மாவட்டத்திலே—ஏன், தமிழகத்திலே விளங்குகிறார். இது இங்கே அமர்ந்திருக்கின்ற இந்த மேயருக்குப் பின்னால் இருக்கின்ற வீர வரலாறு. கண்ணீர்க் காவியம். புதிய புற நானூறு படைத்தவர் இன்று மதுரை நகர மேயராக இருக்கிறார்.

முத்துவா? மேயராவதா? என்று எண்ணுபவரும் இருந்திடுவார்கள். மதுரை முழுதும் இன்று மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கிறது என்றாலும் மகிழ்ச்சி அடைபவர்களிலே சிலருக்கு வியப்பிருக்கலாம். மதுரை முத்து மேயராவதா? இவ்வளவு பெரிய பதவிகளை ஏற்பதா? என்று எண்ணிடுவோரும் இருக்கத்தான் செய்வார்கள்.

நான் அவருக்கு அங்கியை எடுத்து – சங்கிலியை எடுத்து அணிவித்த நேரத்திலும் செங்கோலை எடுத்து அவர் கையிலே கொடுத்த நேரத்திலும் எனக்கு ஏற்பட்ட உணர்வெல்லாம் நான் என்னுடைய வாழ்க்கைத் துணை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட போது என்னுடைய மனைவிக்கு நான் மாங்கல்யம் எடுத்து அணிவித்தபோது எவ்வளவு பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டதோ அந்த மகிழ்ச்சியைத்தான் அந்த உணர்ச்சியைத்தான் இந்தக் கிழப்பெண்ணை மணந்துகொள்கிற இந்த நேரத்திலே நான் பெற்றிருக்கின்றேன்.

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட கழகத்தினுடைய முத்து இங்கே மதுரையினுடைய சொத்தாக உங்களுக்கெல்லாம் கிடைத்திருப்பது கண்டு நான் வாழ்த்துகின்றேன். அவருக்கு அணிவிக்கப்பட்டிருக்கின்ற சிவப்பு நிற ஆடையைத் தொட்டுப் பார்த்தால் பட்டுப் போன்ற மிருதுவான தன்மையைக் காணலாம். ஆனால் அந்த ஆடை மறைத்திருக்கின்ற அவர் மார்பகத்தில் எத்தனை எத்தனை விழுப்புண்கள் இருக்கின்றன என்பதை அவரோடு குடும்ப பாசத்தோடு பழகி இருக்கின்ற எங்களுக்குத்தான் அது தெரியும். அவருடைய கழுத்திலே இன்றைக்கு நூறு பவுன் தங்கச் சங்கிலி ஒன்றை மாட்டியிருக்கின்றோம். அந்தச் தங்கச் சங்கிலிக்குரிய கழுத்து எத்தனை கட்டாரிகளால் குறி பார்க்கப்பட்ட கழுத்து எத்தனை கத்தி வீச்சுகளுக்கு ஆளாக இருந்த கழுத்து; அதை நாம் அறிவோம்; நாடறியும்."

இவ்வாறு நான் உரையாற்றிய மதுரை நிகழ்ச்சிக்கு முதல் நாள்; அதாவது ஏப்ரல் 30ம்–ஆம் நாள் திருக்கழுக்குன்றம்

கோயில் திருப்பணி ஆறு லட்சத்து ஐம்பதாயிர ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டதை நான் தொடங்கி வைத்தேன். அந்த விழாவில் சிட்டிபாபு எம். பி., மதுராந்தகம் ஆறுமுகம், முனு ஆதி, செங்கை விசுவநாதன் ஆகிய எம். எல். ஏ. க்கள் கலந்து கொண்டனர்.

ஆலய நிகழ்ச்சியென்றதும் அப்படியே என் கொள்கைகளை மறந்துவிட்டு நான் கொண்டிருக்கும் இலட்சியத்துக்கு மாருக எதையும் உளறிவிடுகிற பழக்கம் என்றைக்கும் என்னிடம் இருந்ததில்லை.

அந்த ஆலயத் திருப்பணித் தொடக்க விழாவில் "இறைவன் என்ருல் யார்?" என்ற கேள்வியுடன் எனது உரையை ஆரம்பித்தேன். அதனைத் தொடர்ந்து நான் பேசியதை இந்தப்பகுதியில் இணைப்பது அவசியமெனக் கருதுகிறேன். அந்தப் பேச்சு பின் வருமாறு :

"இங்கேகூட மாநில சுயாட்சி அமைந்திட இறைவன் அருள் புரிவானுக என்று எழுதி வைத்திருக்கிருர்கள். எழுத்தறிவித்தவன் இறைவனுவான் என்பது பழமொழி. எழுத்தறிவிப்பவர் யார்? ஆசிரியர்கள், அப்படியானுல் அவர்களும் இறைவனுவார்கள்.

ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிருன் என்ருர் தாகூர். இங்கே ஏழைகள் எல்லாம் கூடியிருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் இறைவன் தான்.

இறைவன் யார்? இறைவன் அல்லாதவன் யார்? எல்லோருக்கும் கடவுள்கள் தான் நல்லது செய்வது என்ருல் நல்லது செய்கிறவர்கள் எல்லாம் கடவுள்கள் தான்.

நம்முடைய மனச்சாட்சி தான் நமக்குக் கடவுள்.

தவறு செய்கிருேமா இல்லையா என்பதை ஒரு நீதிபதி பல நாள் வக்கீல் வாதத்தை வைத்து கண்டுபிடிப்பதைவிட—உளநூல் ஆராய்ச்சிக்காரர் விஞ்ஞான மகிமையால், தவறு செய்கிருேமா இல்லையா என்று கண்டுபிடிப்பதைவிட; தவறு செய்கிருேமா இல்லையா என்பதைச் சொல்கிற ஒப்பற்ற நீதிபதி உண்டென்ருல் அது மனச்சாட்சி தான். அந்த மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்துகொண்டால், நாமம் தரித்தாலும் தரிக்கா விட்டாலும் — விபூதி பூசினுலும் பூசாவிட்டாலும் — உண்டியலில் பணம் போட்டாலும் போடாவிட்டாலும் — மொட்டை அடித்துக்

கொண்டாலும் இல்லாவிட்டாலும் - ருத்ராட்சம் அணிந்தாலும் அணியாவிட்டாலும் - துளசி மணி மாலை போட்டாலும் போடா விட்டாலும் - காவியாடை உடுத்தினாலும் உடுத்தாவிட்டாலும் - கமண்டலத்தை கையில் ஏந்தினாலும் ஏந்தாவிட்டாலும் மனச்சாட்சிக்குப் பயந்து நடக்கிற மனிதன் தான் ஆண்டவன்!

திருவாரூரில் பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த தேரை மறுபடியும் ஓட வைப்பதற்கான முயற்சிகளை கழக அரசு செய்து அதனை ஓடச் செய்தது. அந்த விழாவில் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த கண்ணப்பன் கலந்து கொண்டார். தேர் ஓடுவதற்கான சாலையினை பழுது பார்த்திட மட்டும் இரண்டு இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டது. மேலும் இரண்டு இலட்ச ரூபாய் பராமரிப்புச் செலவு போன்றவைகளுக்காகச் செலவு செய்யப்பட்டது.

அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு தந்தை பெரியார் அவர்களின் முன்னிலையில் அமைச்சர்களுக்கு நடைபெற்ற ஒரு பாராட்டு விழாவில் நான் பேசும்போது "பகுத்தறிவு பிரச்சாரத்தை தொடருவோம்! அதே நேரத்தில் பக்திப் பிரச்சாரத்தைத் தடுக்க மாட்டோம்" என்று கூறினேன். அந்த விழாவில் மேலும் பேசும்போது "திருவாரூர் தேரை ஓட விட்டேன் என்பதும், அதற்காக நான்கு இலட்ச ரூபாய்க்குத் சாலை போடப்பட்டது என்பதும் பற்றி சிலர் நினைக்கலாம். ஆனால் தேர் நான்கு நாட்கள்தான் ஓடுகிறது. அதற்குப் பிறகு மக்கள் தான் அந்தப் பாதையில் நடக்கிறார்கள். அரசை நடத்து பவர்களுக்கு இப்படிப்பட்ட சாதுரியங்கள் தேவை. நாளைக்கு மறுநாள் போடக்கூடிய ரோட்டை இன்று தேர் ஓடுகிற நேரத்தில் போட்டால் பக்தர்களின் மனமும் பூரிக்கிறது. மக்களுடைய தேவையும் நிறைவேறுகிறது.

நான் ஒரு புடவைக் கடையைத் திறந்து வைக்க அழைக்கப்படுகின்றேன். அப்போது அந்தக் கடையில் உள்ள புடவைகள் நன்றாக இருக்கிறது என்று சொன்னேனென்றால் உடனே ஒரு புடவையை எடுத்துக் கொடுத்து கட்டிக்கொள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அதைப் போல ஒரு ஆலயத் திருப்பணியைத் தொடங்கி வைக்கிறேனென்றால் உடனே அங்கேயிருக்கிற கடவுளை ஏற்றுக்கொள் என்று அவர் களும்சொல்லமாட்டார்கள். ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக் கொள் ளாததும் அவரவர்களது மனதைப் பொறுத்ததாகும்."

ஒன்றே குலமென்போம் உண்மையின் பெயரே தெய்வம் என்போம் என்று பாடிய பாரதியாரின் கவிதையை ஏற்றுக் போற்றுகிறவர்கள்; எனது கருத்தை மட்டும் ஐயத்தோடு நோக்குவது ஏன் என்பதுதான் புரியவில்லை. "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்" என்று பாரதியார் சாடுவதைவிடவா "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கை வேகமாக இருக்கிறது?



# 41

## பிறந்த நாள் பணிகள்

அனைத்து ஜீவராசிகளும் ஆண்டவன் படைப்பு என்று அனுதினமும் காலட்சேபம் நடத்திக் கொண்டிருக்கிற உபதேசிகளின் தொகை நாட்டிலே பெருகிய வண்ணமிருக்கிறது. அந்த ஜீவராசிகளில் உயர்திணைப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள மனிதர்களைச் சாதிவாரியாகப் பிரித்து தீண்டத் தக்கவன்–தீண்டத் தகாதவன் என்று கொடுமைப்படுத்திடும் செயலைப் போலவே சமுதாயத்தின் ஒரு சிறு பகுதியினராகத் தொழுநோயால் அவதியுறும் இரவலர்களையும் சொறிநாய்களைவிடக் கேவலமாகத் துரத்திடும் நிலையும் இருந்து வருகிறது. புகைவண்டி நிலையங்களில், பேருந்து நிலையங்களில், கோயில் வாசல்களில் அழுகிப் போன உடல், குறைந்துபோன அங்கங்கள், இவற்றை மூலதனமாகக் கொண்டு ',பிச்சைக்கார வியாபாரம்'' நடத்தும் ஏழை எளியோர்க்கு ஏதாவது செய்யவேண்டுமென என் நெஞ்சில் அலைமோதிக்கொண்டிருந்த துடிப்பு உணர்வுக்கு செயல்வடிவம் கொடுக்க, ஆட்சிப் பொறுப்பைப் பயன்படுத்திட எண்ணினேன்.

எனவே 1971–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3–ஆம் நாள் எனது 48–வது பிறந்த நாளை "தொழு நோய்ப் பிச்சைக்காரர் நல்வாழ்வு நாள்'' என அறிவித்து, அவர்களுக்கு வாழ்வளிக்க மாவட்டந்தோறும் விடுதிகள் கட்டுவதற்கான திட்டங்களைத் தீட்டினேன். எல்லா மாவட்டங்களிலுமுள்ள அந்த விடுதிகளில் சுமார் நாலாயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வாழ்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த விடுதிகள், ஏனோதானோவென்று கட்டப்படாமல் நல்ல வசதிகளுடன் பெரிய நிலப்பரப்பில் அமைக்கப்பட்டன அங்கே அவர்களுக்கு பயிரிடுதல், தொழில்கள் செய்தல் போன்ற பல பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கை கால்கள் குறைந்த நிலையில் அவர்களால் எத்தகைய கருவிகளைக் கொண்டு தொழில் புரியும் பயிற்சிகளைப் பெற முடியுமோ அதற்கேற்ப வசதிகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு விடுதியிலும் தொழுநோய் சிகிச்சைக்கான மருத்துவ நிலையங்களும் அமைக்கப்பட்டன. விடுதிகளை விட்டுத் தொழுநோய் இரவலர்கள் வெளியில் சென்று

பிச்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. விடுதிகளிலேயே அவர்களுக்கு நல்ல உணவு வழங்கப்பட்டது. விடுதியில் நோய்க்கு சிகிச்சையும் பெற்றுக் கொண்டு, தொழிலும் கற்றுக் கொண்டு, இனிப் பிச்சையெடுக்காமல் வாழ முடியும் என்ற நம்பிக்கையும் கொண்டு, அதன்படி நடப்பவர்கள் மட்டுமே விடுதிகளில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டார்கள்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் இந்தியாவுக்கே வழி காட்டும் வகையில் அமைந்திருக்கிறது" என்று ஆளுநர் கே. கே. ஷா, பல நிகழ்ச்சிகளில் புகழ்ந்துரைத்தார். செங்கற்பட்டுக் கருகில் உள்ள பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் அந்த விடுதியில் வாழ்வோருக்கான தொழில் இயந்திரமொன்றைத் துவக்கிவைத்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் தமிழக அரசின் போற்றத்தக்க திட்டமென்று குறிப்பிட்டுப் புகழ்ந்து கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் எனது பிறந்த நாள் நிகழ்ச்சியின் போது இதேபோன்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அரசின் சார்பிலும் பொதுமக்கள் உதவியுடனும் நடைமுறைப்படுத்தப் பட்டன.

நகரங்களில் வாழும் ஏழை எளியோர், கிராமங்களில் வாழும் ஏழை எளியோர் மட்டுமல்ல; நடுத்தர வர்க்கத்தினர்கூட, தங்களின் கண்ணொளி பாதிக்கப்படுமேயானால் அதற்கேற்ற சிகிச்சை பெற்று புத்தொளி பெற்றிட முடியாத அளவுக்கு இருந்திட்ட நிலை என் உள்ளத்தைப் பல காலமாகக் குடைந்து கொண்டிருந்தது உண்டு. ஒரு ஏழை, தனது கண்ணொளியை இழந்து அதனை மீண்டும் பெற எண்ணினால், கிராமத்திலிருந்து நகர்ப்புற மருத்துவமனைக்குச் சென்று "கேட்ராக்ட்" அறுவை சிகிச்சை செய்து கொள்ளவும், மருத்துவமனையில் ஒரு வார காலம் ஓய்வெடுக்கவும், அப்போது தேவைப்படும் சத்துணவைப் பெறவும், மூக்குக் கண்ணாடி வாங்கிப் போட்டுக் கொள்ளவும் தேவையான குறைந்த பட்சத் தொகைக்குக் கூட வழியில் லாமல் இருந்தது மாத்திரமல்ல; அந்தப் பண வசதியே கிடைத் தால் கூட—கிராமத்திலிருந்து நகரத்திற்குச் சென்று சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்ற அக்கறையுமற்றிருந்தான். அந்த ஏழை எளியோர் இருக்கும் கிராமப்புறம் தேடிச் சென்று கண் டாக்டர்கள் புடைசூழ பெரிய அளவில் முகாம்களை அமைத்து ஒவ்வொரு முகாமிலும் சுமார் ஆயிரம் பேருக்குக்

குறையாமல் பல்வேறுவிதமான கண் நோய்களுக்கு சிகிச்சை யளித்ததோடு – "கேட்ராக்ட்" அறுவை வைத்தியமும் நடத்தப் பட்டு அவர்களுக்கு அந்த முகாம்களில் ஒரு வாரம் தங்குவதற்குப் போதுமான வசதிகளும் வழங்கப்பட்டு – இப்படி நூற்றுக்கணக் கான முகாம்களில் லட்சக்கணக்கான மக்கள் கண்ணொளி கிடைக்கப்பெற்று மகிழ்ந்து திரும்பினார்கள்.

கண்ணொளி வழங்கும் அந்தப் பரவலான திட்டம் வெற்றி கரமாக நடைபெற மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த பேராசிரியர் அவர்கள் பெரும்பணி ஆற்றி னார்கள். கண்மருத்துவ நிபுணரும் ஏழைகளுக்குக் கண்ணொளி வழங்குவதில் ஆர்வங்கொண்டவருமான மதுரை டாக்டர் வெங்கடசாமி அவர்கள், தமிழக அரசின் கண்ணொளி முகாம் களை கிராமப்பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் வெற்றிகரமாக நடத்தி லட்சக்கணக்கானோர் நன்மை பெற ஆக்கபூர்வமான யோசனைகளை அவ்வப்போது கூறியதுமல்லாமல் அவரும் உடனிருந்து அந்த முகாம்களில் நற்பணியாற்றினார். டாக்டர் ஆப்ரகாம், டாக்டர் செல்வம் போன்ற கண் மருத்துவ நிபுணர்கள் அந்த முகாம்களில் நூற்றுக்கணக்கான உதவியாளர் களுடன் தங்கியிருந்து அரிய சேவை புரிந்தனர்.

"மனிதனை வைத்து மனிதன் இழுப்பதா? மனிதனா? மாடா?" இந்தக் கேள்வியை மகாத்மா காந்தியடிகள் கேட்டு, அதனைப் படித்து உணர்ச்சி வசப்பட்டிருக்கிறோம். ஆனால் அந்தக் கேள்விக்கு விடைகண்டு, அந்தக் கொடுமையை நீக்கத் தமிழகத்தில் எனது ஐம்பதாவது பிறந்தநாள் வரையில் யாரும் முன்வரவில்லை. சென்னையிலும் கடலூர் போன்ற நகரங் களிலும் ஏறத்தாழ இரண்டாயிரம் கைரிக்ஷாக்கள் இருந்தன. அந்த ரிக்ஷாக்கள் பெரும்பாலும் நடுத்தரக் குடும்பத்தினர் யாருக்காவது சொந்தமாக இருக்கும். அவற்றை இழுத்துப் பிழைப்பவர்கள் அன்றாடங் காய்ச்சிகளாக இருப்பர். எனது ஐம்பதாவது பிறந்த நாளின் போது அந்தக் கைரிக்ஷாக்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு, அந்தக் கைரிக்ஷா தொழிலாளிகளுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படுமென அறிவித்தேன் அந்த அறிவிப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. உரிய நஷ்டஈடு தரப்பட்டு எல்லா கைரிக்ஷாக்களையும் அரசாங் கம் கைப்பற்றிக்கொண்டது. அந்தக் கைரிக்ஷாக்களை மாடு போல் இழுத்து வயிறு கழுவி வந்த தொழிலாளிகளுக்கு அரசாங் கமே இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியது.


எனது 51-வது பிறந்தநாளின் போதுதான் ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் உருப்பெற்றது. ஊனமுற்றோருக்கான உதவிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அதுவரையில் செய்யப்பட்டன என்றாலுங்கூட அதனை அரசாங்க அளவில் பெரிய திட்டமாக வகுத்துப் பரவலாக நடைமுறைப்படுத்திய பணி அப்போதுதான் ஆரம்பமாயிற்று. மாமல்லபுரம் செல்லும் பாதையில் முட்டுக்காடு (முத்துக்காடு) என்னும் இடத்தில் ஒரு தொழிற் சாலை நிறுவப்பட்டு, அதில் ஊனமுற்றோர் தொழில்பயிற்சி பெறவும்—அப்படிப் பயிற்சி பெறும்போதே அந்தத் தொழிற் சாலையில் உற்பத்தி நடக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தத் தொழிற்கூடத்தில் மட்டுமல்லாது அரசின் பல்வேறு தொழிற் கூடங்களில் ஊனமுற்றோருக்கு ஏற்றவகையில் தொழில் பயிற்சிகளும் அளிக்கப்பட வசதிகள் செய்யப்பட்டன. ஊனமுற்றோர் ஆயிரக்கணக்கானவர்களுக்கு சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டன. மூன்று சக்கர சைக்கிள்களும் அளிக்கப்பட்டன. ஊனமுற்ற சிறுவர்களுக்கான சிறப்புப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. காது கேட்காத பள்ளிச் சிறார்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

52-வது பிறந்தநாளையொட்டி ஆதரவற்ற சிறுவர், சிறுமிகளுக்கான கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. ஆலயங்களுடன் அந்தக் கருணை இல்லங்கள் இணைக்கப்பட்டு, செலவினங்களை ஆலய நிர்வாகமும் அரசும்பகிர்ந்து கொள்ளும் முறையில் திட்டம் வகுக்கப்பட்டது. முப்பது வயதுக்குக் குறைந்த விதவைகளை மறுமணம் புரிந்துகொண்டால்—விதவை மணத்தை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் பத்தாயிர ரூபாய் அரசு சார்பில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டு அந்தத் திட்டம் நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டது. ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கு ஆயிரக்கணக்கான தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. நாற்பத்தி ஐந்து வயதான விதவைத் தாய்மார்களுக்கு முதியோர் உதவித் தொகை அளிக்கப்படுவதற்கு வழிவகுக்கப்பட்டது.

கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தவும் அரசின் சார்பில் அந்தத் திருமணத் தம்பதிகளுக்கு சுமார் ஏழாயிர ரூபாய் கிட்டும் வகையில் குடும்ப நிதி வழங்கப்பட்டது. மணமக்கள் இரண்டு வேறு சாதியினராக இருந்தால் மட்டும் போதாது;

இருவரில் ஒருவர் உயர் சாதி எனக் கருதப்படுகிறவராகவும்— இன்னொருவர் தாழ்ந்த வகுப்பு எனக் கருதப்படுகிறவராகவும் இருந்து—அவர்கள் அந்தச் சாதிக் கொடுமையிலிருந்து விடுபட்டு சமத்துவ நிலையில் திருமணம் செய்து கொள்கிறவர்களாக இருத்தல் வேண்டும். அரசு தரும் பணத்திற்காகத் திருமணம் செய்து கொண்டு, பிறகு கைவிட்டு விடக்கூடாதென்பதற்காக— அந்த உதவியை முதலில் ஒரு பத்திரமாக வழங்கி, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அந்தப் பணத்தைப் பெறுகிற வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

சமுதாயத்தில் உள்ள மேடுபள்ளங்களை சமப்படுத்தவும்— சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு நம்பிக்கையிழந்தவர்களுக்கு வாழ்வளிக்கவும்—மனிதாபிமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவும்— என சிறந்த நாட்களைப் பயன்படுத்திக்கொண்டு கழக அரசின் சார்பில் செய்யப்பட்ட மக்கள் பணிகள் இவை.



# 42

## சில சட்டங்கள்!

சோஷலிச சமுதாய அமைப்பைக் காண விரும்பும் ஒரு அரசு, நிலச் சீர்திருத்தத்தில் கண் துடைப்பாகக் காரியமாற்றாமல் படிப்படியாக முற்போக்கான சட்டங்களைக் கொண்டு வருவதில் முனைப்பாக இருந்திடல் வேண்டும். ஏராளமான நிலபுலங்களை மக்கள் ஏமாந்த காலத்தில் தங்களுக்குச் சொந்தமாகக் குவித்துக் கொண்டோர் கிராமத்து ராஜாக்களாகப் பரிபாலனம் செய்து வந்தனர். பெரும் பண்ணைக்காரர்களாகச் சிலரும் அவர்களிடத்தில் அடிமைகளாகப் பண்ணையாட்களும் என்ற நிலைதான் கிராமப் புறங்களை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. விடுதலைப் போராட்ட காலத்திலேயே காங்கிரஸ் கட்சியினால் முழங்கப்பட்டு வந்த நில உச்சவரம்பு என்ற கொள்கை, சுதந்திரம் வந்தபிறகு ஆங்காங்கு அமைந்த காங்கிரஸ் ஆட்சிகளினால் எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டுச் சட்ட வடிவம் பெறும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அப்படியொரு ஆபத்து தங்களுக்கு வந்து விடக்கூடாதென்பதற்காக பெரு நிலச் சொந்தக்காரர்களான கிராமத்துப் பிரபுக்கள் பலபேர் தங்களைக் காங்கிரஸ் இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.

நில உச்சவரம்பு பற்றிக் காங்கிரஸ் தொண்டர்கள் விறுவிறுப்பாகப் பேசியபோதெல்லாம் தமிழகத்துக் காங்கிரசின் பெருந்தலைவர்கள் தங்களைச் சுற்றியிருந்த கபிஸ்தலங்களுக்காகவும், பூண்டிகளுக்காகவும், வடபாதிமங்கலம், மூலங்குடி, உக்கடைகளுக்காகவும் வாய்மூடி மௌனிகளாகவே இருந்தனர். ரத்தம் சிந்தி வளர்க்கப்பட்ட தேசீய விடுதலை இயக்கமான காங்கிரஸ் பேரியக்கம் நிலப்பிரபுக்கள், ஆலை அரசர்கள், பஸ் முதலாளிகள் ஆகியோரின் அரவணைப்பில் தேர்தல் பேரியக்கமாக நடமாட வேண்டிய அளவுக்கு எப்படியோ உள்ளாகி விட்டது.

அதனால் நிலச் சீர்திருத்தங்களும், தேசீயமயக் கொள்கையும் தயங்கித் தயங்கித் தடுமாறிக் கொண்டிருந்தன. தேசீயமயக் கொள்கை என்ற பெயரால் நூறு மைல் எக்ஸ்பிரஸ் பஸ்கள் மட்டுமே அரசுடைமையாக ஆக்கப்பட்டனவே தவிர, டி.வி.எஸ்., ஏ. பி. டி., ராமன் அண்ட் ராமன், எஸ். ஆர். வி. எஸ். போன்ற முரட்டுத் தனியார் பஸ் கம்பெனிகள் மூட்டை மூட்டை

யாகப் பணத்தைத லாபமாகக் குவித்துக் கொண்டிருந்தன. ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்றிருந்த அந்தக் கால கட்டத்திலே அந்தப் பழம் பெரும் பஸ் கம்பெனிகள் எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அரசின் போக்குவரத்துக் கழகங்களாக மாறின.

பல்லவன் பாண்டியன், சேரன், சோழன், அண்ணு பெரியார், கட்டபொம்மன் என்ற பெயரில் அந்தப் போக்கு வரத்துக் கழகங்கள் மக்களின் தேவைக்கேற்ப சேவை புரியத் தொடங்கின. 1973-ஆம் ஆண்டு பஸ்களை முழுமையாகத் தேசீய உடைமையாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டு முதல் கட்டமாக நீலகிரி மாவட்ட பஸ்களை முழுவதுமாக அரசுடைமை யாக்கினேம்.

அதற்குள் பஸ் முதலாளிகள் அந்த முற்போக்குச் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரையில் சென்றனர். சுமார் பத்தாண்டுகால இடைக்காலத் தடைக்குப் பிறகு, அந்த வழக்கைத் தீர விசாரித்த உச்ச நீதிமன்றம் 1973-ல் கழக ஆட்சிக் காலத்தில் பஸ்களைத் தேசீய உடைமையாக்கிடக் கொண்டு வரப் பட்ட சட்டத்தைப் பாராட்டி அது செல்லத்தக்கதே எனத் தீர்ப்பும் அளித்துள்ளது. இந்த இரண்டாம் பாகத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது அந்த இனிப்பான செய்தி கிடைத் துள்ளது என்ருலுங்கூட, இன்றுள்ள எம். ஜி. ஆர். ஆட்சியில் அந்தத் தீர்ப்பைச் செயல்படுத்தாமல் முடக்கிப் போட்டு, பஸ் முதலாளிகளுக்குச் சாதகமாக ஒரு அவசரச் சட்டத்தையும் பிறப் பித்திருக்கிருர்கள். அண்ணு விரும்பிய தேசீயமயக் கொள்கை, அவரது பெயரை மட்டும் கட்சிக்குச் சூட்டிக்கொண்டவர்களால் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று!

விடுதலைப் போராட்ட காலத்தில் நில உச்சவரம்பு முழக்கத்தை எழுப்பிக் கொண்டிருந்த காங்கிரசும், தமிழ் நாட்டில் 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது. திடீரென்று அறிவிக்கப் பட்டிருக்க வேண்டிய இந்தச்சட்டம் 1959-ஆம் ஆண்டிலேயே "வரப்போகிறது! வரப்போகிறது!" என்ற "பராக்கு"களுடன் பரிவட்டம்" கட்டிக்கொண்டு வந்த காரணத்தால் நிலப் பிரபுக்கள் அத்தனை பேரும் முன்கூட்டியே தங்கள் நிலங்களை உற்ருர் உறவினர்களுக்கும், அறநிலையங்களின் பெயராலும், வீட்டில் உள்ள சாமி சிலைகள், சாமி படங்களின் பெயராலும் பிரித்துப் பிரித்து எழுதி வைத்துக்கொண்டனர். எல்லா நிலப்

பிரபுக்களும் அவ்வாறு தங்களுக்கு வசதியாக எழுதி வைத்துக் கொண்டபிறகு 1960–ஆம் ஆண்டு முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் 1959–ல் அவசர அவரமாக என்ன நடந்தது என்பதற்குச் சில உதாரணங்கள் தர விரும்புகிறேன்.

1959 வரையில் கபிஸ்தலம் பண்ணையின் நில அளவு மொத்தம் 2,028 ஏக்கர்! அதில் 1,464 ஏக்கரா பிரித்துப் பிரித்து விற்பனை செய்யப்பட்டு விடுகிறது! மிச்சத்தில் 389 ஏக்கர், தரிசு நிலம் என்று அறிவிக்கப்பட்டு விடுகிறது! 125 ஏக்கர் அறக் கட்டளையென அறிவிக்கப்படுகிறது! எனவே 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு சட்டப்படி அந்தப் பண்ணையிலிருந்து அரசுக்கு உபரியாகக் கிடைப்பது நான்கு ஏக்கர் 84 சென்ட் மட்டுமே!

அடுத்தது பூண்டிப் பண்ணையார்–மொத்த நிலம் 467 ஏக்கர்! 1959 இறுதியிலேயே 295 ஏக்கர் நிலம் பிரிந்து விற்கப்பட்டு விடுகிறது. 134 ஏக்கர் வீட்டில் பாகம் செய்து கொள்ளப் படுகிறது.

அதே பண்ணையில் இன்னொருவரின் மொத்த நிலம் 385 ஏக்கர்! அதில் 307 ஏக்கர் முன் எச்சரிக்கையாக விற்கப்பட்டு விடுகிறது!

அதே பண்ணையில் இன்னொருவரின் மொத்த நிலம் 625 ஏக்கரில் 1959–ஆம் ஆண்டுக்குள் 552 ஏக்கர் விற்பனை செய்யப் பட்டு விடுகிறது!

அதே பண்ணையில் மற்றொருவரின் மொத்த நிலம் 298 ஏக்கரில் 197 ஏக்கர் நிலம் முன் கூட்டியே விற்கப்பட்டு விடுகிறது.

அதே பண்ணையில் பிறிதொருவரின் மொத்த நிலம் 498 ஏக்கரில் 468 ஏக்கர் நிலம் சட்டம் வருவதற்கு நான்கு மாதங் களுக்கு முன்பு விற்கப்பட்டு விடுகிறது.

அதே பண்ணையில் மற்றொருவரின் மொத்த நிலம் 699 ஏக்கரில் 629 ஏக்கர் முன்கூட்டியே விற்கப்பட்டு விடுகிறது! மற்றும் ஒருவரின் நிலம் 446 ஏக்கரில் 256 ஏக்கர் விற்பனை! 100 ஏக்கர் பாகப் பிரிவினை!

அந்தப் பண்ணையில் மட்டும் ஆக மொத்தம் சுமார் 4,000 ஏக்கர் நிலத்தில் 1959 இறுதியில் சட்டம் வரப்போவதை அறிந்து

முன் ஜாக்கிரதையாகக் காரியங்கள் ஆற்றியதால் அரசுக்கு உச்சவரம்பு சட்டத்தில் கிடைத்த மிச்ச நிலம் 48 ஏக்கர் மட்டும்தான்!

இதே வழியைப் பின்பற்றித்தான் வடபாதிமங்கலங்களும், மூலங்குடிகளும் தப்பித்துக் கொண்டன! அதனால்தான் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட உச்சவரம்புச் சட்டத்தை அண்ணா அவர்கள் மிச்சவரம்புச் சட்டம் என்று கேலி பேசினார். அந்தச் சட்டப்படி தமிழகம் முழுதும் உபரி நிலமாக அறிவிக்கப் பட்டது 24,194 ஏக்கர்! அதிலே அரசு கைப்பற்றியது 16,330 ஏக்கர்! நிலமற்ற விவசாயிகளுக்கு ஒப்படை செய்தது எதுவு மில்லை!

1970-ஆம் ஆண்டு பிப்ரவரியில் கழக ஆட்சி 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு எனத்திட்டம் என அறிவித்து ஒரு சட்டத்தையும் இயற்றியது. அந்த உச்சவரம்புச் சட்டத் தால் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது 1,08,068 ஏக்கராகும்! அதில் அரசு கைப்பற்றியது 88,146 ஏக்கர்! நிலமற்றவர்களுக்கு ஒப்படை செய்த நிலம் 62,682 ஏக்கர்' பயனடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர்!

இத்தகைய புரட்சிகரமான சட்டங்களையெல்லாம் கொண்டு வந்த கழக அரசு, நிதிநிலையின் காரணமாக மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டது! அந்தச் சட்டம் ஒத்திவைப்பது பற்றி கேள்விப்பட்டு மூதறிஞர் ராஜாஜி அவர்களே என் இல்லம் தேடி வந்து அந்த எண்ணத்தைக் கைவிட வேண்டு மென்று கேட்டுக் கொண்டார். கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களும் என்னைச் சந்தித்து வேண்டுகோள் விடுத் தார். கோவையில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுவில் எடுத்த முடிவுக்காக மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைக்க வில்லையென்றும், தமிழக அரசின் நிதி நிலைமையை உத்தேசித்துச் சிறிது காலம் அந்த ஒத்திவைப்புத் தேவைப்படுகிறதென்றும் அந்தப் பெரியவர்களிடம் விளக்கினேன்.

மதுவிலக்கை ஒத்தி வைத்து சட்டப்பேரவையில் நான் உரை நிகழ்த்தும்போதுகூட மெத்த வேதனையுடன்தான் இருந்தேன்.

"புனித நோக்கத்துடன் இந்தியப் புவி முழுவதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்பட வேண்டுமென்று காந்தியடிகள் கூறினரோ, அந்தக் கொள்கை அவர் ஏந்திய கொடி நிழலில்

அணிவகுத்து நின்ற அவர்தம் தானைத்தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல மத்திய அரசினை நடாத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப்பட்டது வேதனை தரும் செய்தியாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்?"

என்று சட்டப்பேரவையில் பேசினேனே தவிர, மனச்சாட்சி இடங்கொடுக்காத நிலையில்தான் மதுவிலக்குச சட்டம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தேன்.

மதுவிலக்குச் சட்டத்தை மீண்டும் அமல்படுத்தக் கோரி காமராசர் அவர்கள் போர்க்குரல் கொடுத்தார் அவரது கட்சியைச் சேர்ந்த பல்லாயிரவர் மறியல் செய்து சிறைச்சாலைக்குச் சென்றனர். அவர்கள் யார் மீதும் வழக்கு நடத்தி தண்டனை வாங்கித்தர முனையாமல் அனைவரும் விடுதலை செய்யப் பட்டார்கள்.

ஒத்திவைக்கப்பட்டிருந்த மதுவிலக்குச் சட்டத்தை 1973-ஆம் ஆண்டு மறுபடியும் அமல் நடத்தக் கழக அரசு முன் வந்து அவ்வாறே அறிவித்து மதுவிலக்கை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்தது!

இன்றைக்கு மதுவிலக்கை ரத்து செய்துவிட்டுப் பல முனைகளிலும் கோடிக்கணக்கான ரூபாய்களை லஞ்சமாகக் குவிக்கிறார்களே; அது போல் இல்லாமல் அன்றைக்கு அரசின் நிதி ஆதாரத்திற்காக மட்டுமே மதுவிலக்கு கைவிடப்பட்டது! ஆம்; ஒத்திவைக்கப்பட்டது! பின்னர் மக்கள் கருத்தை மதித்து மதுவிலக்குச் சட்டம் எழுந்து நடமாடத் தொடங்கியது.



# 43

## "டாக்டர்" பட்டம்

சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற புரையோடி விட்டிருக்கிற சில நிலைமைகள், ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய வேண்டுமென்று ஆர்த்தெழுந்திருக்கிற உணர்வுகள், பொருளாதாரத்திலே படுபாதாளத்தில் போய்க் கொண்டிருக்கிற ஏழை மக்களின் நிலவரங்கள், இவைகளின் காரணமாக உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு ஆளாகிவிடும் சில இளைஞர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில், தாங்கள் கொண்ட கொள்கைகள் நிறைவேற வேண்டுமென்பதற்காக தொடக் கூடாத - எண்ணியும் பார்க்கக் கூடாத வன்முறைகளைக் கருவிகளாக ஆக்கிக் கொண்டு கொலைகள் மூலம் தங்கள் இலட்சியம் வெற்றி பெறும் எனக் கருதி அதன் தொடர்பாக வடக்கே சில மாநிலங்களில் காணப் பட்ட சம்பவங்கள், மெல்ல மெல்ல தெற்கேயும் பரவி குறிப் பாகத் தமிழகத்திலே சில மாவட்டங்களில் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன.

நக்சல்பாரி இயக்கம் என்ற பேரால் இந்த இயக்கத்தை நடத்துகிறவர்கள்; ஒரு குறிக்கோளுக்காக இந்த இயக்கத்தை நடத்துகிறோம் என்று வாதிட்டாலும் கூட அதற்கென அவர்கள் கையாளுகிற முறைகளை யாரும் ஏற்றுக் கொள்ள இயலாது. வறுமையிலே அழுத்தப்பட்டுப் பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் வாழ்வு நடத்திக் கொண்டிருக்கும் ஏழை எளியோர் கூட தங்களின் எதிர்காலத்திற்காக நடை பெறும் இத்தகைய வன்முறைகளை நிச்சயம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பண முதலைகள், நிலத் திமிங்கிலங்கள் ஆகியோரை வேட்டையாடி வீழ்த்தி விடுவதின் மூலம்; தாங்கள் விரும்பும் சமுதாய அமைப்பை உருவாக்கி விடலாம் என எண்ணிடும் தீவிரவாத வாலிபர்கள், அந்த எண்ணமும் கை கூடாமல் தங்களையும் பலியிட்டுக் கொள்கிற கொடுமையும் வேதனையும் நிறைந்த நிகழ்ச்சிகளும் நடைபெற்று விடுகின்றன.

கழக அரசு நடைபெற்ற காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டு நடைபெற்று அதன் தொடர்பாகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கலியபெருமாள் என்ற தீவிர

நக்சலைட்வாதியைக் கூட காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் அந்தத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிய நிலையெல்லாம் உண்டு. சென்னை மேயராகப் பொறுப்பேற்றிருந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த க. சுப்பு அவர்களும் என்னிடம் தந்த முறையீட்டைப் பெற்று, நண்பர் கலிய பெருமாள் அவர்களைத் தூக்குக் கயிற்றிலிருந்து வெளியே கொண்டு வந்தது கழக அரசு!

இதுபோன்ற நடவடிக்கைகள் மேலும் தீவிரமடையாமல் இருப்பதற்கு நோய் என்ன என்பதை முதலிலே அறிந்து அதற்கு சிகிச்சை அளிப்பது போல சமுதாய—பொருளாதார அரசியல் ரீதியில் பிரச்சினைகளை எப்படி அணுக வேண்டுமென்று அனைவரும் யோசிக்க வேண்டும். அந்தக் கடமை அரசுக்கும், கட்சிகளின் தலைவர்களுக்கும் உண்டு என்பதையும் நினைவூட்டுகிறேன்.

முதலமைச்சராக எம். ஜி. ஆர். வீற்றிருக்க எதிர்க் கட்சித் தலைவனாக நானிருந்து — வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நடைபெற்ற நக்சலைட் கிளர்ச்சிகள் குறித்து விவாதம் வந்த போது எடுத்து வைத்த கருத்துக்களின் சுருக்கம் தான் இது!

அதன் தொடர்பாக 1982-ல் போலீஸ் மானியத்தில் பேசும் போது கூட நான் பின்வருமாறு குறிப்பிட்டேன்.

"நக்சலைட்டுகள் — போலீசார் இவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒரு கைகலப்பின் காரணமாக போலீசாரும் நக்சலைட் இளைஞர்களும் மடிந்து போன ஒரு நிகழ்ச்சி குறித்து இந்த மன்றத்தில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசப்பட்டபொழுது நான் சொன்ன கருத்துக்கள் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரத் தக்கவையாகும். ஏன் நக்சலைட் உருவாகிறான்? எந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட வன்முறைகள் தலைதூக்குகின்றன? மிதிக்க மிதிக்கப் புழுவும் புலியாகும் என்கிற அளவுக்கு ஏழை எளிய மக்கள்—விவசாயப் பெருங்குடி மக்கள் — தொழிலாள மக்கள் — முடக்கப்பட முடக்கப்பட, ஒடுக்கப்பட ஒடுக்கப்பட, கிளர்ந்தெழுகிறார்கள். இந்த அடிப்படையைப் பற்றி சிந்திக்காமல் அலட்சியப்படுத்தி விட்டு துப்பாக்கிக் குண்டுகளால் பிரச்சினையைத் தீர்த்து விடலாமெனக் கருதி—நக்சலைட் அல்லாதவர்களுக்கும் நக்சலைட் பட்டம் சூட்டி அவர்களைப் போலீசாரே கொன்று குவித்துத் தண்டனை

வழங்குவது என்பது எங்கே போய் முடியும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்"

இவ்வாறு ஆளுங் கட்சியாக இருந்த போதும் சரி—எதிர்க் கட்சி என்ற நிலையிலும் சரி — நக்சலைட்டுகளின் தீவிரவாத வன்முறையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலுங் கூட — அந்த இளைஞர்கள்பால் எனக்கொரு இரக்க உணர்வு இருந்தே வந்திருக்கிறது.

1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களின் பட்டமளிப்பு விழாப் பேருரை ஆற்றிடவும் அந்தப் பல்கலைக் கழகம் எனக்களித்த "டாக்டர்" பட்டத்தைப் பெறவும் நான் அங்கு சென்றிருந்த போது அந்தத் தீவிரவாத இளைஞர்களின் கடுமையான எதிர்ப்புக்கு ஆளாக நேரிட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் காங்கிரஸ் என்றும், இந்திய மாணவர் காங்கிரஸ் என்றும் அமைப்புகளின் பெயரால் எதிர்ப்புத் துண்டு அறிக்கைகளை அந்தத் தீவிரவாத மாணவர்கள் வெளியிட்டு — பெரும் அமளிக்கு வித்திட்டார்கள்.

ஆனால் பெரும்பாலான மாணவர்கள் என்னை வரவேற்றுப் பட்டமளிப்பு விழா உரையினை அமைதியாகக் கேட்டதோடு, ஆர்வத்துடன் முன் வந்து பட்டங்களையும் பெற்றுச் சென்றனர். விழா நிகழ்ச்சிகள் காலையில் முடிவுற்ற பிறகு மாலையில் அந்தத் தீவிரவாத மாணவர்களுக்கும் போலீசாருக்குமிடையே தகராறு மூண்டது! அந்த நிகழ்ச்சியை யொட்டி உதயகுமார் என்ற மாணவர் குளத்தில் விழுந்து இறந்து விட்ட செய்தியும் வந்தது! ஒன்றோடொன்று தொடர்பு படுத்தப்பட்டன! அந்த நிகழ்ச்சி குறித்து நீதி விசாரணைக்கு உடனே அரசின் சார்பில் அறிவிக்கப் பட்டது. உதயகுமாரின் பிணம் குளத்தில் அடையாளம் தெரியாத அளவுக்கு உப்பி விட்ட காரணத்தால்; முதலில் இறந்தது யார் என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. உதயகுமாரின் பெற்றோரால் கூட அடையாளம் கண்டு பிடிக்க இயலவில்லை. நீதி விசாரணை அறிக்கையில் குளத்தில் விழுந்து மாண்டது உதயகுமாராக இருக்கலாமென்றும், போலீஸ் தாக்குதலால் அது நிகழவில்லையென்றும் தெளிவாக்கப்பட்டது.

கல்லூரியில் படித்துப் பட்டம் பெறாத எனக்கு "டாக்டர்" பட்டம் கொடுக்கலாமா என்பதுதான் அன்றைய தினம் எழுப்பப் பட்ட பெரிய பிரச்சினையாக இருந்தது. அந்தக் கேள்வியை மனத்தில் ஒரு ஓரமாக வைத்துக் கொண்ட நான் அந்த விழாவில் உரையாற்றினேன்.

"விரிந்து மலர்ந்து தழைக்கும் அறிவுலகில் ஆற்றலாளர்களாய்ப் பீடு நடை போடப் பட்டம் பெறுகின்றீர் இன்று. உமக்கிடையே வாழ்த்துரை தந்திட வந்துள எனக்குமோர் பட்டமளிப்பினை நடாத்துகின்ற நிகழ்ச்சிக்கு எவ்வாறு நான் நன்றி கூறுவேன். சங்க காலத் தமிழகத்தில் விழுப்புண் படாது! இயற்கையாக ஒருவன் இறந்திடுவானாயின் அவன் சடலத்தைப் புதைப்பதற்கு முன்னர் கத்தியால் ஓர் காயத்தைச் செய்து அவனை விழுப்புண் பெற்றவனாய் ஆக்குதல் மரபாம். அவ்வாறே இன்று எனக்கும் ஓர் பட்டத்தை அளித்து என்னையும் பட்டம் பெற்றவனாக ஆக்குகின்றீர் என எண்ணுகின்றேன். என் உழைப்பில் நான் மேலும் உற்சாகம் பெற்றிட – என் கொள்கைகளில் நான் மேலும் உறுதிகொண்டிட – இந்தச் சிறப்பு எனக்குத் தரப்பட்டுள்ளதாகக் கருதி, இந்த விருது தமிழ் உணர்வுக்கும், கலையார்வத்துக்கும், பண்பட்ட பகுத்தறிவுத் கொள்கைக்கும் அளிக்கப்பட்ட விருது எனக் கொண்டு, இந்தப் பெருமையை என்னருந் தமிழர்க்கும் எனை வளர்த்த தலைவர்க்கும் காணிக்கையாக்குகின்றேன்."

இப்படித் தான் அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையைத் தொடங்கினேன்.

"இளைஞர்கள் தான் முற்போக்கு எண்ணங்களின் முன்னோடிகள். இளைஞர்களின் அமைதியின்மை – இந்தியப் பிரச்சினை அல்ல; அனைத்துலகப் பிரச்சினை! ஒவ்வொரு பழைய தலைமுறையும், புதிய தலைமுறையைப் பழித்தே பழக்கப்பட்டிருக்கிறது. பிளேட்டோ காலத்திலிருந்து இப்படித்தான்; இன்று நேற்றல்ல!

**"இந்தத் தலைமுறை முன்புபோல் இல்லை.**
**தரம் குறைந்து விட்டது"**

இது நமது பாட்டனார் காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்படும் குறை! குடுமித் தலையில் மாற்றம் ஏற்பட்ட போதும் குமுறல்–இப்போது உடலைப் பிடிக்கும் உடைகளைக் காணும்போதும் குமுறல்–நடையுடைகளில் ஏற்படும் மாற்றங்களல்ல; மனத்தில் ஏற்படும் மாற்றங்கள் தான், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், புதிய கோணங்களை ஏற்படுத்தவல்லவை! ஒரு தலைமுறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் வேறுபாடு இருப்பது தவறில்லை. ஆனால், இடையில் ஆக்க பூர்வமான வளர்ச்சி தழைத்திடல் தேவை. பிளேட்டோ காலத்திம் சில நூறு மாணவர்கள் இருந்தார்கள்; ஆனால் இன்று

அமெரிக்க நாட்டின் மக்கள் தொகையில் பாதிப்பேர் மாணவர்கள்.

இந்தியாவில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கும் மாணவர்களின் தொகை, பிரான்சு நாட்டு மக்கள் தொகைக்குச் சமம். மாணவர்களில் ஒரு சிலரது உள்ளத்தில் தீவிரவாதம் பொங்கியெழுந்து வழிந்தோடுகிறது. நான் தீவிரவாதத்தின் பகைவனல்ல. முகத்திலே இருக்கும் பருக்கள் அழகைக் கெடுக் கின்றன. உண்மை தான். அதற்கு அடிப்படைக் காரணா முணர்ந்து மருந்திடல் தான் முறையே தவிரச் சந்திர பிம்பமெனும் வதனத்தை விகாரமாக்கும் பருக்களைக் கிள்ளி எறிகிறேன் என நகங் கொண்டு பெயர்த்தெறிந்தால் ரத்தம் கொப்பளிக்கும். தழும்புகள் தோன்றும். சில வேளைகளில் புண்பட்டுப் புரையோடி உயிருக்கே உலை வைக்கும். குறு மருக்களை அகற்றும் கொள்கை யில் வேறுபாடில்லை. முறையில் தானே முரண்பாடு! இலட்சியத்தைப் போலவே இலட்சியத்தை அடையும் வழிமுறை களும் நன்முறைகளாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக் கழகத்திற்கு வரும் பாதையிலே பால் வடியும் முகத்தினன்–மாணவன் ராஜேந்திரன் சிலையாக நின்று கொண்டி ருக்கிறான். தன்னை வளர்த்த மொழியைக் காக்க, அவன் தன்னுயிரைத் தாரை வார்த்தான். இலட்சியம் ஈடேறப் பிறரை வருத்தல்–பிறரை அழித்தல்–முறையல்ல! கூடாது! கூடவே கூடாது!

"கொலைவாளினை எடடா; மிகு
கொடியோர் செயல் அறவே!"

என்றார் பாதிதாசன். கவிதையை உற்றுக் கவனியுங்கள்! கொடியோர் செயல் அறவே; கொலைவாளினை எடடா என்றாரே தவிர; கொடியோர் தலை அறவே கொலைவாளினை எடடா எனக் கூறினார் இல்லை! சிலர் செயல் அறத் தான் அந்தச் சிங்க நாதம் செய்தார்.

அந்தச் சிங்கக் கூட்டத்தைத் தான் என் எதிரே காணு கின்றேன். இறும்பூதெய்துகின்றேன்.

கருமுகில் கண்டு திருமயில் ஆடுமென்பர்.
கதிரொளி கண்டு தாமரை மலருமென்பர்,
என் நிலையும் அது தான்!
உமது விழியொளி கண்டு மகிழ்கின்றேன்–விடை
பெற முடியாது பிரிகின்றேன்"

இவ்வாறு எனது உரையை அன்றைக்கு நிறைவு செய்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவம் குறித்து 1-8-71 "ஜனசக்தி" இதழ் எழுதியிருந்த கட்டுரையின் சில பகுதிகளை இங்கு நினைவூட்டுவது பொருத்தமானதாகும்.

"அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகள் நமக்கு வேறு பல சம்பவங்களை நினைவூட்டுகின்றன. ஒருமுறை இலக்கிய மேதை மார்க்சிம் கார்க்கியைப் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பேச மாணவர் பேரவை அழைப்பு விட்டது. பாரிஸ் பல்கலைக் கழகச் சட்டவிதிகளின்படி, பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் மட்டும் தான் பேசலாம். அந்த விதிப்படி, மாக்சிம் கார்க்கிக்கு, 'நீங்கள் படித்த கல்லூரி எது? வாங்கியுள்ள பட்டம் என்ன?, என்ற கேள்விக் கடிதத்தை அனுப்பினார்கள்.

மாக்சிம் கார்க்கி, பல்கலைக் கழகத்தவர் அல்ல. 'நான் உலகம் எனும் பல்கலைக் கழகத்தில், மக்கள் என்றும் முடிவுறு இலக்கியத்தைக் கற்று வரும் மாணவன்' என்று பதில் எழுதினார். இதன் விளைவாகத் தான் "எனது பல்கலைக் கழகம்" என்ற நூலை மாக்சிம் கார்க்கி எழுதினார்.

இன்றைக்கு அதே பாரிஸ் பல்கலைக் கழகத்தில் மாக்சிம் கார்க்கியின் படைப்புக்கள் இலக்கியத்திற்குப் பாடப் புத்தகங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இங்கே தமிழகத்தில் பல்கலைக் கழகங்களில் கட்டாய பாடமாகப் பயில்கிறோமே திறக்குறள், அதைப் படைத்துத் தந்த வள்ளுவர் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவரா? கவிச் சக்கரவர்த்தி கம்பன் பெற்ற பல்கலைக் கழகப் பட்டம் எது? பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் பல்கலைக் கழகங்கள் தந்த பட்டங்கள் எது?

இதனால் கல்வி வேண்டாம், படிக்காத மேதைகளே மேல், என்று மொட்டையாக வாதிடுவதாகவும் கொள்ளவேண்டாம்;

பட்டம் பெற்ற நவீன உயர்சாதி அகங்காரம் தான் அண்ணாமலைப் பல்கலைக் கழக குழப்பங்களுக்கு மூல காரணம்.

பட்டம் பெறாத பலர் உலகில் பல அரங்கங்களில் ஆற்றியுள்ள பணிகளை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தால், இந்தக் கூச்சல் எழுந்திராது. இப்படி 'ஜனசக்தி'யில் நண்பர் தா. பாண்டியன் அவர்கள் எழுதியது என் உள்ளத்திற்கு இதமாக இருந்தது.

# 44

## அமெரிக்கப் பயணம்

ஏற்கனவே கார் விபத்தின் காரணமாக பாதிக்கப் பட்டிருந்த ஒரு கண்ணில் மீண்டும் 1967-ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்பட்ட பயங்கரக்கார் விபத்தினுல் அடிக்கடி வலி ஏற்பட்டு என்னைத் தொல்லைப் படுத்திக் கொண்டே யிருந்தது. முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு ஓய்வறியாப் பணிகளின் காரணமாக வலித் தொந்திரவு மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. அந்த வலியுடன் ஒப்புதல் தந்த நிகழ்ச்சிகளுக்குச் சென்றேன். பேசினேன். எழுதினேன். கோப்புகளைப் படித்தேன். குறிப்புகளை எழுதினேன். சற்றேறப்ப 1954-ஆம் ஆண்டிலேயிருந்து ஒரு கண்ணில் ஏற்பட்ட அந்த பாதிப்புடன் வலியை-உறுத்தலை-நீர்வடிதலை-சிவந்துகொண்டு எரிச்சல் மிகுவதை-இத்தனையையும் பதினேழு ஆண்டுக் காலம் தாங்கிக்கொண்டும், அவ்வப்போது கண் மருத்துவர்கள் முத்தையா, ஆப்ரகாம், இராமலிங்கம் ஆகியோரிடம் கிசிச்சை செய்துகொண்டு தற்காலிகமாக நலிவினைப் போக்கிக் கொண்டும் கட்சிப் பணிகளைக் குறைவற ஆற்றினேன். இருந்த போதிலும் ஒரு கண்ணில் ஊசியால் குத்துவது போன்ற ஒருவித வேதனையுடன்-ஆனுல் அந்த வேதனையை வெளியில் காட்டிக்கொள்ளாமல் மாநாடுகள், பொதுக் கூட்டங்கள், கட்சியின் பல்வேறு நிகழ்ச்சிகளில் தொய்வின்றி என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். விடிய விடியக் கண்விழித்துத் தேர்தல் பிரச்சாரங்களுக்கும் அட்டியின்றிச் சுற்றிச் சுழன்றேன்.

1971-ஆம் ஆண்டில் தாங்கிக் கொள்ளவே முடியாத வேதனை அடிக்கடி கண்ணில் தாக்கிடவே வெளிநாடு சென்று அறுவை சிகிச்சை செய்து கொள்வதென்ற முடிவுக்கு வந்தேன். சென்னை டாக்டர்களும் அந்தக் கருத்தையே தெரிவித்தனர். அமெரிக்க அரசாங்கம் எனக்கு விடுத்த அழைப்பினைப் பயன் படுத்திக் கொண்டு மூன்று வாரகாலம் அமெரிக்காவில் சுற்றிப் பார்க்கவும் கண் சிகிச்சை பெறவும் புறப்பட்டேன்.

அப்படி சிகிச்சைக்குப் புறப்பட்ட அந்த நேரத்திலும் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரச் சாரத்தை நடத்தி விட்டுத்தான் கிளம்பினேன். கோவை

மாவட்டத்தின் கொள்கைச் சிங்கமெனப் புகழப்பெற்ற உடுமலை நாராயணன் எம். பி. அவர்கள் மறைந்த காரணத்தால் அந்தத் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்றது. மதியழகன் அவர்களின் தம்பி கே. ஏ. கிருஷ்ணசாமி அந்தத் தொகுதியில் போட்டியிட வேண்டுமென்று பிடிவாதம் செய்தார். அவருக்கு வெற்றிவாய்ப்பு இல்லையென்று கோவை மாவட்டக் கழகத்தினர் கூறிய காரணத்தால் கே. ஏ. கிருஷ்ணசாமிக்கு ராஜ்யசபா உறுப்பினர் பதவி தருவதாக வாக்களித்து மோகன்ராஜ் என்ற இளைஞரை வேட்பாளராக நிறுத்தப்பட்டது. அந்த மோகன்ராஜ் கட்சிக்கு ஒரு சோதனை வந்த காலகட்டத்தில் கட்சியினால் நாடாளுமன்ற உறுப்பினராக ஆனதைக்கூட மறந்து விட்டு ஒதுங்கிக்கொண்டார்! நல்ல வேளை கழகத்தைத் தாக்கிடவில்லை! அந்தமட்டில் லாபம்தானே!

திட்டமிட்டபடி பொள்ளாச்சி தேர்தல் பிரச்சாரத்தை முடித்து விட்டு 1971 நவம்பர் 8-ஆம் நாள் மாலை அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டேன். என்னுடன் முரசொலி மாறன், நிதித்துறைச் செயலாளர் வெங்கட்ரமணன் இருவரும் வந்தனர். கண் மருத்துவ நிபுணர் டாக்டர் வெங்கடசாமி அவர்கள், அமெரிக்காவில் எங்களை வந்து சந்திப்பதாகக்கூறி முன் கூட்டியே சென்று விட்டார்.

8-ஆம் தேதி மாலை 6-45 மணி அளவில் சென்னையில் புறப்பட்ட விமானம் 8-30 மணி அளவில் பம்பாய் நகரை அடைந்தது. அங்கே பம்பாய் தமிழர்களின் சார்பில் தரப்பட்ட வரவேற்பை ஏற்றுக் கொண்டு, இரவு ஒரு மணி அளவில் புறப்பட்டோம்.

நவம்பர் 10-ஆம் தேதியன்று பகல் 3மணி அளவில் அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் போய்ச் சேர்ந்தோம். விமான நிலையத்தில் இந்தியத் தூதர் எல்.கே.ஜா, அமெரிக்க அரசின் வரவேற்புத்துறை உயர் அதிகாரிகள், அமெரிக்க வெளிநாட்டிலாகா அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர். அமெரிக்க விமான நிலையத்தில் அப்போது கழக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விசுவநாதன் அவர்களும் என்னை வரவேற்றார். விமான நிலையத்திலிருந்து நேராக இந்திய தூதர் எல். கே. ஜா அவர்களின் இல்லத்திற்குச் சென்றோம்.

நவம்பர் 12-ஆம் தேதியன்று அமெரிக்க ராஜாங்க இலாகாவின் உயர்மட்ட அதிகாரிகளிடம் வங்கதேசப்

பிரச்சினையில் இந்தியா மேற் கொண்டுள்ள நிலை குறித்து விளக்கினேன். அமெரிக்க ராஜாங்க இலாகாவின்சார்பில் எனக்கு பகல் விருந்து அளித்தார்கள். அப்போது அமெரிக்க நாடாளு மன்றத்தின் இரு அவைகளான செனட் - காங்கிரஸ் ஆகிய அவைகளின் உறுப்பினர்களையும் - அரசின் உயர்மட்ட அதிகாரி களையும் சந்தித்தபோது பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசினேன்.

அன்று மாலை புகழ்பெற்ற அமெரிக்க செனட் சபையின் உறுப்பினரும், ஜனநாயகக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், அமெரிக்கக் குடியரசுத் தலைவராக புகழுடன் விளங்கி மறைந்த ஜான் கென்னடி அவர்களின் இளைய சகோதரருமான எட்வர்டு கென்னடி அவர்களைச் சந்தித்து உரையாடினேன். மேலும் பாப்டோல், சாக்ஸ்பி ஆகிய செனட் உறுப்பினர் களுடனும் அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் கல்லாகர் என்பவருடனும் விவாதித்தேன். கல்லாகர் ஆசிய விவகாரங்கள் பற்றிய துணைக் குழுவின் தலைவராவார்.

நவம்பர் 13-ஆம் தேதியன்று உலகிலேயே பெரிய விவசாயப் பண்ணை என்று கூறப்படும் 'பெல்டஸ் வில்லி' என்ற இடத்தில் உள்ள விவசாயப் பண்ணையைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து நேராக பால்டிமோர் நகரை அடைந்தேன். பால்டிமோர் நகரில் உள்ள "ஜான்ஹாப்கின்ஸ்" மருத்துவ மனையில் எனது கண்ணைப் பரிசோதனை செய்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று முடிவு கட்டினர். அதனை புகழ்பெற்ற கண் மருத்துவ நிபுணர் டாக்டர் மாமுனி என்பவர் செய்தார். பதினேழு ஆண்டுக்காலம் நான் அனுபவித்த கண்வலி எனும் வதையை நான் எடுத்த துணிவான முடிவின் காரணமாகப் போக்கிக்கொண்ட நிம்மதி ஏற்பட்டது.

நவம்பர் 14-ஆம் தேதி அறுவை சிகிச்சை நடைபெற்ற அன்றுதான் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் வாக்குகள் எண்ணப்பட்டன. கழக வேட்பாளராக அங்கே போட்டியிட்ட மோகன்ராஜ் பெரும் வெற்றியை அடைந்தார் என்ற செய்தி எனக்கு தொலை பேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. 15-ஆம் தேதி காலை நாவலர் அவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மருத்துவமனையில் எனக்குத் துணையாக இருந்த முரசொலி மாறனுடன் பேசினார். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் எனது பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய காயிதே மில்லத் அவர்கள் திடீரென்று ரத்த வாந்தி

எடுத்து டெல்லி வெலிங்டன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கும் செய்தி கேள்விப்பட்டிருந்த நான் அவரது உடல்நிலை குறித்து இரா. செழியன் மூலம் விவரம் கேட்டறிந்தேன். மருத்துவமனையில் சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டேன். மருத்துவமனையில் இருந்தபோது எனக்கு அடிக்கடி உதவி புரிந்த அலெக்ஸாண்டர் என்ற டாக்டரையும், திருமதி வைத்திஞதன் என்ற அம்மையாரையும் மறக்க முடியாது.

தமிழகத்தில் உள்ள அமைச்சர் பெருமக்களிடமிருந்தும், கழக முன்னணித் தலைவர்களிடமிருந்தும், மற்றும் பல நண்பர்களிடமிருந்தும் என்னுடைய உடல்நலம் கேட்டு ஏராளமான தொலைபேசிகளும், தந்திகளும் வந்துகொண்டேயிருந்தன. அதற்கெல்லாம் நன்றி தெரிவித்து 17-11-71 அன்று தொலைபேசி மூலம் தமிழகப் பத்திரிகைகளுக்கு செய்தி தந்தேன்.

நவம்பர் 20-ஆம் தேதியன்று மருத்துவமனையிலிருந்து வெளியே வந்து, அன்று கென்னடி முனை சென்று ராக்கெட் தளத்தைப் பார்வையிட்டேன். புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளரான வால்ட் டிஸ்னி அவர்களின் அதிசய உலகமான ''டிஸ்னி லாண்ட்'' நகரைப் பார்த்தேன். தமிழகத்திலே அதுபோன்றதொரு நகரை எப்போது அமைப்போமோ என்று எண்ணிக் கொண்டேன். கென்னடி முனைக்கு அருகே உள்ள அழகுமிகு ''ஆர்லண்டோ'' நகருக்குச் சென்றேன். எழில்மிகு ஏரிகள் பல நிறைந்த நகரம் இது. அமெரிக்காவின் பிற பகுதிகளில் குளிர் வாட்டிக் கொண்டிருந்த நேரத்தில் ஆர்லண்டோ நகரம் மட்டும் வெப்பமாக இருந்தது.

ஆர்லண்டோவில் உள்ள நுண்கலை மற்றும் கலைக் கழகங்களுக்கு நிதி சேர்க்கும் முகத்தான் நடைபெற்ற ஒரு சிறப்பு விருந்தில் என்னைச் சிறப்பு விருந்தினஞக அழைத்தார்கள். இக்கலைக் கழகங்களின் ஆண்டுச் செலவு மட்டும் அப்போதே ஏழுகோடி ரூபாயாகும். அந்த சிறப்பு விழா பழங்கால முறையில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு அமெரிக்க நாட்டின் பூர்வ குடிகளான சிவப்பிந்தியர்களின் உடைகளை அணிந்திருந்த அமெரிக்கப் பிரமுகர்களையெல்லாம் கண்டு வியந்தேன்.

அந்த விருந்து நடைபெற்ற நகரின் அழகிய ஏரியின் நடுவே இருந்த மிகப் பெரிய நீரூற்று பற்றிய கவிதை ஒன்றை

எழுதினேன். அந்தக் கவிதையை ரசித்த அந்த விழாவின் தலைவர் அக்கவிதையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட எனது அனுமதியைக் கேட்டார். அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு விருந்தில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

அன்று நான் எழுதிய கவிதை வருமாறு :-

''ஆர்லந்தோ எனும் நகரில் அரியதோர் ஏரியிலே
அழகிய மத்தாப்பூ ஊற்றொன்று கண்டேன்
ஒளிவிளக்குப் போடுகின்ற தாளத்திற்கு
ஒரு லயமும் பிசகாமல் ஆடுகின்ற
நீரூற்று ஆட்டக்காரி நாட்டியத்தின்
நேர்த்தி யென்ன சொல்வேன்!
பசும்புல் தரை மீது பால் நிறத்தில்
பனிக்கட்டி உருள்வது போல் ஓர் காட்சி - அதைப்
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
'படக்' என மாறிவிடும் மற்றோர் காட்சி
இப்படித் தான் இங்குள்ள 'அப்போலா, கிளம்பிற்றென்று
இருள்கிழித்து வானேறும் நீரின் கரங்கள்
பொற்கொல்லர் பட்டறையில்
பொன் பரப்பும் மஞ்சள் ஒளி
விற்பட்ட அம்பு போல விர்ரென்று எழுந்து பாயும்.
கற்காலக் கொள்கை மனிதர் கடவுளர்கள் சந்நிதியில்
காவுக்கு ஓர் உயிரை வெட்டும் போது
பீறிட்டுக் கிளம்புகின்ற ரத்தம் போல
சீறித்தான் தாவுதய்யோ சிவப்பு வண்ணம்.
மார்கழித் திருநாளில் நம்மூரில்
மங்கையர்கள் திருவாயில்
பாவிரித்துத் தத்தம் தெருவாயில் பறங்கிப்
பூவிரித்து வைக்கின்ற கோலம் போல்
கண் கொள்ளாக் காட்சி கண்டேன்.

நல்ல வேளை
தனியாக ரசிக்கின்ற வாய்ப்பெனக்கு
தப்பினேன் அதனாலே!
பெண்ணொருத்தி அருகிருந்தால் நீரூற்றின்
வண்ணத்தைக் கணக்கெடுத்து - மறுநாளே
வகைக்கு ஒன்றாக ஆடை கேட்பாள்.''

பின்னர் 22-11-71 அன்று சிகாகோ நகரைச் சென்றடைந்தேன். அங்கு ''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகையைச் சேர்ந்த திரு. வாரன் உன்னு என்பவரும், ''பால்டிமோர் சன்'' பத்திரிகையைச் சேர்ந்த திரு. ஆடம்பிளேமோர் என்பவரும் என்னைச் சந்தித்து முறையே தங்கள் பத்திரிகைகளுக்கான பேட்டியினை சிறப்பாக வெளியிட்டனர்.



# 45

## பாகிஸ்தான் ஆக்ரமிப்புக் கண்டனம்

"சிகாகோ பல்கலைக் கழகத்தில் அரசியல் கருத்தரங்கில் உரையாற்றுவதற்கு அன்பழைப்பு விடுத்த லாயிட் ருடால்ப் அவர்களுக்கும், சுசனே ருடால்ப் அவர்களுக்கும், பேராசிரியப் பெருமக்களுக்கும், மாணவ நண்பர்களுக்கும் என் நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

அமெரிக்க நாட்டு சுற்றுப்பயணத்திற்கிடையே இந்தப் பல்கலைக் கழகத்தில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

விவேகானந்தரின் பொன்மொழிகள் எதிரொலித்த நகரம் இந்த எழில்மிகு சிகாகோ நகரமாகும்.

அந்தப் பெருமைக்குரிய மனிதர் பிறந்த நாட்டிலிருந்து, அமைதி வழியில் விடுதலைப் போர் நடத்தி வெற்றிகண்ட காந்தியடிகள் தோன்றிய நாட்டிலிருந்து, இருள் மிகுந்திருந்த தென்பகுதியில் பகுத்தறிவு ஒளி பரப்பிய பெரியார் ராமசாமியும், அரசியலில் புதுவழி வகுத்த அறிஞர் அண்ணாவும் தோன்றிய நிலப்பரப்பிலிருந்து ஒரு பெரிய மக்கள் இயக்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் உங்களையெல்லாம் இந்த அரசியல் கருத்தரங்கில் சந்திக்கிறேன்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுகும்" என்று எச்சரிக்கை விடுத்த சிலப்பதிகாரம் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் ஆண்ட நாடுகளின் அரசியல் சிறப்பை இன்னமும் விளக்கிக் கொண்டிருக்கிறது.

அரசியலுக்கென ஒரு தனி அதிகாரமே வகுத்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் நெறி கண்ட வள்ளுவரின் திருக்குறள் மணம் கமழும் நாடு நான் பிறந்த தமிழ்நாடு.

அந்தப் புகழ்மிக்க மாநிலத்தின் நான்கு கோடி மக்களின் கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாமல் இருபது ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த ஒரு பெரிய கட்சியை ஜனநாயகப் போர்க் களத்தில் சந்தித்து ஆட்சி மாற்றத்தைச் செய்த சரித்திரம்

என்னுடைய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

அடிமை விலங்கொடிந்து ஆனந்த சுதந்திரம் வந்த பிறகும், எதிர்பார்த்த ஒளிமிகு வாழ்வு எங்கள் மக்களுக்குக் கிட்டவில்லை.

ஆளவந்தவர்களிடம் காணப்பட்ட அக்கறையற்ற தன்மை அதற்கொரு காரணமாயினும் இந்திய நாடு அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடு என்பதை மறந்து விட முடியாது.

ஆறு பிரேசில் நாடுகள் - ஒன்பது நைஜீரியாக்கள் - பதினைந்து எகிப்துகள்-கிட்டத்தட்ட மூன்று அமெரிக்க நாடுகள்- இந்த மக்கள் தொகையைக் கொண்டது இந்திய நாடு. அதற்காக மக்கள் தொகைக் கணக்கையும், அதன் சுமையை யும் கூறிக்கொண்டே பொறுப்புக்களைத் தட்டிக் கழித்து விடவும் கூடாது.

எல்லாம் அவனவன் தலையில் எழுதியபடிதான் நடக்கு மென்று ஏமாற்றுகிறவன் கூற - அதனை ஏமாற்றப்பட்டவனும் ஏற்றுக்கொண்டிருந்த காலத்தை மாற்றி அந்தத் தலையெழுத்தைத் திருப்பி எழுத நாங்கள் எழுதுகோல் பிடித்திருக்கிறோம். அதில் இந்தியாவில் இப்போது தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறதென் றால் எங்கள் கட்சி மக்களிடம் உருவாக்கி வைத்திருக்கிற அரசியல் விழிப்புதான் காரணம்.

சாதாரண மக்களுக்குத் தொண்டு செய்திட அந்தஸ்து மிக்க குடும்பத்தினர்தான் பதவிப் பொறுப்புக்கள் ஏற்க வேண்டுமென்றிருந்த ஐதீகத்தை அறவே மாற்றி சாமான்ய மக்களுக்குத் தொண்டாற்ற சாமான்யமக்களின் மத்தியிலிருந்தே தலைவர்களைத் தோன்றச் செய்த பெருமை எங்கள் அரசியல் கட்சியின் அஸ்திவாரமாக அமைந்த சுயமரியாதை இயக்கத்திற்கு உண்டு.

பெரியாரின் சுயமரியாதை இயக்கம் எங்கள் நாட்டு மனிதனின் கண்களைத் திறந்தது.

அண்ணாவின் அரசியல் ஈடுபாடு அந்த மனிதனுக்கு ஜனநாயக உணர்வுகளைத் தெளிவுபடுத்தியது.

பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிற நீங்கள் எங்கள் இயக்க வளர்ச்சியைப்பற்றியும் இந்தப் பல்கலைக்

கழகத்தில் ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் காண நான் மகிழ்கிறேன்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் பண்டித நேரு இந்தியா முழுமைக்கும் பரப்பிடத் தொடங்கிய ஜனநாயக ஒளி, தமிழகத்தில் முழுப்பிரகாசமாகத் திகழ்வதற்குக் காரணம், எங்கள் இயக்கம் பட்டிதொட்டிகளில் உள்ள ஏழை எளிய சாதாரண மக்களிடமும், கல்வி அறிவற்ற மக்களிடமும் ஜனநாயக தத்துவத்தை ஓயாமல் பிரச்சாரம் செய்வதுதான்.

தன் கையில் தரப்படுகிற வாக்குச் சீட்டின் சக்தியை ஒவ்வொரு குடிமகனும் இன்று உணர்ந்திருக்கிறான்.

அதனால் அரசாங்கத்தின் அச்சாணி; சட்டசபையிலோ, நாடாளுமன்றத்திலோ இருக்கிறது என்று அடையாளத்திற்காகச் சொன்னாலும் உண்மையிலேயே மக்கள் மத்தியில்தான் அந்த அச்சாணி இருக்கிறது. அவர்கள்தான் எங்களைத் தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியாக மாற்றியிருக்கிறார்கள். நாங்கள் போற்றிவரும் அரசியல் பண்பாடு நீண்ட காலமாகவே ஆளுக்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே உள்ள 'பலகை'யின் அகலத்தை வெகுவாகக் குறைத்திருக்கிறது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாலைந்து ஆண்டுகளில் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும், பின் தங்கிய மக்கள் நலனுக்கும் திட்டங்கள் வகுத்துச் செயல் படுகிறோம்.

பட்டிதொட்டியெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும், மின்வசதி பெருக்கிடவும் தீவிரமாகச் செயல்படுகிறோம். பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நாங்கள் எடுத்துள்ள முயற்சி வேகமாக நடைபெறுகிறது. குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளைக் கட்டித் தருகிறோம். குடியிருப்பு மனைகள் சொந்தமில்லாமல் இருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அவைகளைச் சொந்தமாக்க சட்டம் செய்துள்ளோம். நிலமற்ற ஏழை எளியோர் மூன்று லட்சத்திற்கு மேற்பட்டோருக்கு நிலப்பட்டாக்கள் வழங்கியுள்ளோம். இலக்கியப் புகழும், வரலாற்றுப் புகழுமிக்க தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறோம்.

இவைகளால் எல்லாம் நாங்கள் திருப்தி அடைந்து விட்டோமா என்றால் இல்லை. நேரு, ஒருமுறை கூறியது போல் கடைசியாக ஒரு ஏழையின் கண்ணீர் துடைக்கப்படும் வரையில் எங்கள் பணி முடிந்ததாக அர்த்தமில்லை,

மிகப் பெரிய இந்திய நாட்டில் ஒவ்வொரு மாநில மக்களுக்கும் நல்வாழ்வு பெருகி, மாநிலங்கள் மேலும் மேலும் பலமும் வளமும் பெறவேண்டுமானால் மத்திய அரசில் குவிந்துள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டுமென்று மாநில சுயாட்சிக் குரலை தி.மு.க. எழுப்பி வருகிறது மத்திய அரசை எந்த வகையிலும் பலவீனப்படுத்தாமல் மாநில சுயாட்சி அமைந்திட வழிவகைகள் உண்டு.

அவைகளை விவாதித்து நல்ல முடிவுக்கு வரவேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டில் இதனைப் பேசித் தீர்த்துக் கொள்வது இயலாத காரியமல்ல. இதனை வலியுறுத்திப் பேச இப்போது இந்தியாவில் நிலைமைகள் சரியில்லை. எண்ணிய தீவிரத் திட்டங்களை நிறைவேற்றமுடியாமல் எல்லையோர ஆக்ரமிப்பு!

ஒரு ஜனநாயக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சோதனையை அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகள், தாமதமின்றி தயக்கம் காட்டாது தவிர்த்திட முன்வர வேண்டும்.

உலகம், யந்திரமயமாகிக் கொண்டு வருகிறது. உள்ளங்களும் யந்திரங்களாகி விட்டால் பிறகு உருகி அழுகின்ற கண்களையும் உவகையால் சிரிக்கின்ற உதடுகளையும் காண முடியாது.

அந்த நிலைமை ஏற்படாமலிருக்க மனிதாபிமான உணர்வுடன் எதனையும் அணுகும் அன்பு வழி ஜனநாயக அரசியல் வளர்க்கப்படவேண்டும்''.

இவ்வாறு 23-11-71 அன்று மாலை சிகாகோ பல்கலைக்கழக அரசியல் அரங்கில் உரையாற்றினேன்.

சொற்பொழிவைத் தொடர்ந்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் கருத்தரங்கிற்கு வந்தவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தேன். பல்கலைக்கழகப் பேராசிரியர் ருடால்ப் சிகாகோ பல்கலைக் கழக வளைவுக்குள் சிறப்பு விருந்து ஒன்றை அளித்தார்.

சிகாகோவில் மூன்று நாட்கள் தங்கிவிட்டு புகழ்பெற்றதும் மகத்தானதுமான ''நயாகரா'' நீர்வீழ்ச்சியையும் பார்த்துக் களித்துவிட்டு, 25-ந் தேதி அன்று நியூயார்க் நகரை வந்தடைந்தேன். இந்திய தூதரக அதிகாரிகளும், நியூயார்க் நகர இந்தியர்களும் விமான நிலையத்தில் என்னை உற்சாகத்துடன் வரவேற்றனர். ஐ.நா. மன்ற தலைமையகத்தைச் சுற்றிப்பார்த்தேன். ஐ.நா. வின் பொதுச்செயலாளர் ஊதாண்டுக்கு அடுத்தபடியாக மிக

உயர்ந்த பதவியில் இருந்த சி.வி. நரசிம்மன் எனக்கு ஒரு விருந்து அளித்தார். ஐ.நா. மன்றத்தில் இந்தியத் தூதுக்குழுவைச் சேர்ந்த உயர் அதிகாரியின் ஏ.எஸ். மணி என்னுடன் வந்திருந்து விளக்கங்களைத் தந்தார். ஐ.நா. மன்ற நடவடிக்கைகளை இந்தியப் பிரதிநிதிகளுடன் அமர்ந்து கவனித்தேன். ஐ.நா. மன்றப் பொதுச் செயலாளர் ஊதாண்ட் அவர்கள் உடல்நலமின்றி மருத்துவ மனையில் இருந்த காரணத்தால் அவர் தொலைபேசியின் மூலம் என்னைத் தொடர்புகொண்டு விசாரித்தார். நியூயார்க் நகரில் "ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் நிலையம்" சென்று அங்குள்ள கம்ப்யூட்டர் இயந்திரங்களின் வேலைமுறைகளை அறிந்து கொண்டேன். நியூயார்க் நகரில் செய்தியாளர்கள் பேட்டி கண்டபோது;- இந்தியாமீது பாகிஸ்தான் பகை கக்குவதை நான் வன்மையாகக் கண்டித்து, பாகிஸ்தானின் குற்றச்சாட்டுக்களை மறுத்து விளக்கங்கள் அளித்தேன். "நீங்கள் அமெரிக்க பயணத்தை மேற்கொண்டிருப்பது உங்கள் சொந்த முடிவின் மீதா அல்லது பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்த யோசனை மீதா?" என்று கேட்டதற்கு "நான் இந்தியாவுக்காகப் பேசுகிறேன்; இந்திராவுக்காக அல்ல" என்று விடையளித்தேன்.

நியூயார்க் நகரில் வாழும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து "தமிழ்ச் சங்கம்" அமைத்து அதன் தொடக்க விழாவில் என்னைக் கலந்துகொள்ள அழைத்தார்கள். அதன்படி அந்த விழாவில் கலந்துகொண்டு நியூயார்க் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தேன். தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர் பி.எஸ். குமரேசன் என்னை வரவேற்றுப் பேசினர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதன் முதலாக இணைந்த பதின்மூன்று மாநிலங்களில் ஒன்றுன மேரிலாந்து மாநில ஆளுநர் மார்வின் மாண்டலை டிசம்பர் முதல் தேதியன்று சந்தித்தேன். அவர் எனக்கு அம்மாநிலத்துச் சின்னம் ஒன்றையும்-இரட்டைச் சங்கிலி ஒன்றையும் பரிசாக அளித்தார். பின்னர் முன்னள் அமெரிக்கக் குடியரசுத் துணைத் தலைவரும் செனட் சபை உறுப்பினருமான ஹம்ப்ரேயைச் சந்தித்தேன். அரை மணி நேரத்திற்கு மேல் அவருடன் உரையாடினேன்.

அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் நான் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் இந்தியா-பாகிஸ்தான் இடையே சண்டை மும்முரமடைந்தது. இந்தியா-பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் டாங்கிப் படைகளையும், ராணுவத்தையும் பாகிஸ்தான் குவித்து வைத்துக் கொண்டு, இந்தியப் பகுதியை நோக்கிச் சுட ஆரம்பித்தனர்.

அதற்கு பதிலடி கொடுக்கத் தக்கவிதத்தில் இந்தியா ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. டிசம்பர் முதல் வாரத்தில் இந்தியப்படைகளும், பாகிஸ்தான் படைகளும் நேரடி சண்டையில் ஈடுபட்டன.

வாஷிங்டனில் ஹம்ப்ரே அவர்களைச் சந்தித்தபோது வங்காளதேச பிரச்சினை குறித்து அவரிடம் விளக்கமாக எடுத்துரைத்தேன்.

உலக வங்கித் தலைவர் மாக்ன மாரா அவர்களைச் சந்தித்தேன். அயல்நாடுகளுக்கான அமெரிக்க உதவித் திட்டத்தின் நிர்வாகியான திரு. ஹன்னா அவர்களையும், கூப்பர் அவர்களையும் சந்தித்தேன்.

3-12-71 அன்று இரவு குடியரசுத் தலைவர் வி.வி. கிரி அவர்கள் இந்தியா முழுவதும் அவசர நிலைமையை பிரகடனம் செய்தார். பாகிஸ்தான் விமானங்கள் ஸ்ரீநகர், அவந்திப்பூர், அமிர்தசரஸ், பதன்கோட், அம்பாலா, ஆக்ரா, ஜோத்பூர் ஆகிய நகரங்கள் மீது குண்டுகளை வீசின. இந்திய வீரர்கள் பீரங்கியால் சுட்டு அந்த விமானங்களை விரட்டினர்.

இந்தச் செய்தி கேட்டதும் நான் எனது சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு தாயகம் திரும்ப முடிவு செய்தேன். எனக்கு பெரிய வரவேற்பு கொடுப்பதற்கான அறிக்கையினை துணைப் பொதுச் செயலாளராக இருந்த என்.வி.என். அவர்களும், சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த நீலநாராயணன் அவர்களும் செய்திருந்தார்கள்.

அதனை அறிந்த நான் வாஷிங்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்பு தமிழக செய்தியேடுகள் மூலம் விடுத்த செய்தியில் "இந்தியாவில் தவிர்க்க இயலாத நிலையில் ஏற்பட்டிருக்கிற போர் சூழ்நிலையை இந்திய மக்கள் நெஞ்சுறுதியோடு சமாளிப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தியாவின் வெற்றிக்கு தமிழ் நாட்டு மக்கள் கட்சி சார்பற்ற முறையில் எல்லாவிதத் தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்க வேண்டுகிறேன் 5-ந் தேதி சென்னை வந்து சேருகிறேன். விமான நிலையத்தில் எனக்கு வரவேற்பு நிகழ்ச்சி எதுவும் வேண்டாமென்றும் யாரும் மாலை முதலியவைகளை அணிவிக்க வேண்டாமென்றும் கேட்டுக்கொள்கிறேன்" என்று அறிக்கை விடுத்தேன். அன்று என்னை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்புக் கூட்டம் பாகிஸ்தான் ஆக்ரமிப்புக் கண்டனக் கூட்டமாக மாற்றப்பட்டது.

# 46

## வங்கதேச உதயம்

**1971** டிசம்பர் 5-ஆம் நாள் இரவு 7-30 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்த நான், அங்கிருந்து நேராக அண்ணா சிலைக்குச் சென்று மாலை அணிவித்து விட்டு கலைவாணர் அரங்கில் பாகிஸ்தான் போர் வெறிக் கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அமெரிக்காவில் கண் அறுவை சிகிச்சை முடிந்து வருகிற என்னை என் துணைவியர்கள் தயாளும், ராஜியும், என் சகோதரிகளும், என் மருமகன்களும், பிள்ளைகள், பெண்கள், பேரன், பேத்திகளும்கூட அந்தக் கண்டனக் கூட்டத்தில் வந்துதான் சந்தித்து உடல் நலம் விசாரித்தறிந்து கொண்டனர். இந்தியாவுக்கு வெற்றி கிட்டும் வரையில் நம்மிடையேயுள்ள கட்சிப் பிணக்குகளை மறந்து ஓரணியில் திரண்டு அனைத்துக் கட்சிகளும் அணிவகுப்போம் வாரீர் என்று வேண்டுகோள் விடுத்து அந்தக் கூட்டத்தில் பேசினேன்.

அதற்கு மறுநாள் சென்னை சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து உரையாற்றினேன்.

அதே நாளில் டெல்லியில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் நாடாளுமன்ற மக்களவையில் வங்க தேசத்தை அங்கீகரிப்பதாக முடிவெடுத்துள்ளதாக மிகுந்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே அறிவித்தார்கள். அனைத்து எதிர்க் கட்சிகளும் பிரதமரின் அறிவிப்பைப் பாராட்டின. தமிழகத்தின் சட்ட மன்றத்தில் அந்தத் தீர்மானம் குறித்து விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடையில் நான் குறுக்கிட்டு, வங்க தேசத்தை இந்தியா அங்கீகரித்தது பற்றி பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவித்ததைத் தெரிவித்தேன்.

இந்தியா - பாகிஸ்தான் போர் பற்றி விவாதிக்க முதலில் ஐ. நா. சபையின் பாதுகாப்பு சபை கூடியது. போரை உடனே நிறுத்த வேண்டுமென்றும், பிடித்த இடங்களில் இருந்து இந்தியப் படை வெளியேற வேண்டுமென்றும், அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது. அதனை ரஷ்யா தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி தோற்கடித்தது. அடுத்து அமெரிக்

காவும், சீனுவும் கூட்டாகச் சேர்ந்து தீர்மானம் கொண்டு வந்தன. அதையும் ரஷ்யா தோற்கடித்தது. பாதுகாப்பு சபையில் செயலிழந்த நிலையில் பொதுச்சபையைக் கூட்ட அமெரிக்காவும் சீனுவும் ஏற்பாடுகளைச் செய்தன.

ஐ. நா. பொதுச் சபையில் ஆர்ஜெண்டைனுவும், மற்றும் 13 நாடுகளும் சேர்ந்து யுத்த நிறுத்தம் பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்தன. அதில் இந்தியா - பாகிஸ்தான் இடையே நடைபெறும் யுத்தத்தை உடனே நிறுத்த வேண்டுமென்றும், பிடித்த இடங்களில் இருந்து இரண்டு நாட்டு ராணுவமும் வாபஸ் ஆகி தங்கள் பழைய இடத்திற்குப் போக வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக அமெரிக்கா, சீனு, ஜப்பான், இலங்கை உட்பட 104 நாடுகள் - எகிப்து உட்பட எல்லா முஸ்லீம் நாடுகளும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக ஓட்டுப் போட்டன. ரஷ்யா, பல்கேரியா, ஹங்கேரி, கியூபா, போலந்து, செக்கோசுலேவியா, பூட்டான் உட்பட 11 நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவாக தீர்மானத்தை எதிர்த்து ஓட்டுப் போட்டன. இங்கிலாந்து, பிரான்சு, சிங்கப்பூர், நேபாளம், ஆப்கானிஸ்தான், டென்மார்க் உட்பட பத்து நாடுகள் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்தியாவின் சார்பில் கருத்து தெரிவிக்கும்போது சுதந்திர வங்காளத்தை அங்கீகரிக்கும் வரை போர் ஓயாது என்று தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி நான் சென்னையிலே ஒரு கூட்டத்திலே பேசும் போது - "ஐ. நா. மன்றம் இந்தியா படைகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று கூறி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை ஆதரித்து இதுவரை நம்மோடு இருந்த யூகோ நாடு ஓட்டு அளித்திருக்கிறது. இந்தியாவிற்குப் பக்கத்தில் உள்ள இலங்கை நாடும் இந்தியாவிற்கு எதிரான இந்தத் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறது. இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது 55 கோடி மக்களின் 110 கோடி கரங்கள்தான்" என்று கூறியதோடு - அமெரிக்காவில் செய்தியாளர்கள் "இந்திய நாட்டின் எல்லையில் நடக்கும் போர் பற்றி தமிழ்நாட்டில் என்ன கவலை?" என்று கேட்ட கேள்விக்கு நான் அளித்த பதிலையும் அந்தக் கூட்டத்தில் கூறினேன். நான் அந்த அமெரிக்கா நிருபருக்கு அளித்த பதில் இதுதான்!

"சாலையில் நீங்கள் நடந்து போகும்போது காலில் ஆணி ஏறினல் உடனே 'ஐயோ' என்று வாய் அலறுகிறது. கால்தானே

பாதிக்கப்பட்டது என்று வாய் அலருமல் இருந்து விடுவதில்லை. அதுபோல வடநாட்டில் ஒரு பாதிப்பு ஏற்பட்டாலும், தமிழ் நாட்டு வாய் கதறும், பதறும்'' என்று கூறினேன்.

டிசம்பர் 12-ஆம் தேதியன்று கழகத்தின் தலைமைச் செயற் குழு சென்னையிலே கூடி, இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினையில் நியாயங்களைப் புறக்கணித்து அமெரிக்கா போன்ற அரசுகள் நடந்து கொள்ளும் போக்கிற்கு கண்டனம் தெரிவித்தும், இந்தியாவின் பக்கம் ரஷ்யா போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. தலைமைக் கழகத்தின் சார்பில் தமிழக அரசு திரட்டிய பாதுகாப்பு நிதிக்கு 25,000 ரூபாய் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

டிசம்பர் 7-ஆம் தேதியன்று வானொலியில் நான் ஆற்றிய ''கொடி நாள்'' உரையில் அறிவித்ததற்கிணங்க அந்தப் போரிலே மாண்ட தமிழகத்தைச் சேர்ந்த மாவீரர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசின் சார்பில் ஐயாயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. மேலும் நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கரும், புஞ்சையாக இருந்தால் மூன்று ஏக்கரும் அவர்களது குடும்பத்தினருக்குத் தரப்பட்டது. மத்திய அரசின் அனுமதி யோடு வீர விருதுகளுக்கு அளிக்கப்பட்டிருந்த தொகையை அதிகமாக்கித் தந்தோம். பரம வீர சக்கரத்திற்கு பதினைந் தாயிரம் என்றும், மகாவீரச் சக்கரத்திற்கு பத்தாயிரம் ரூபாய் என்றும், சேனுபதக்கம் பெறுவோருக்கு மூவாயிரம் என்றும், இராணுவ அறிவிப்பு எனும் பாராட்டுப் பட்டியலில் இடம் பெற்றோருக்கு இரண்டாயிரம் ரூபாய் என்றும் உதவித் தொகை அளிக்கப்பட்டது. அப்படிப்பட்ட மாவீரர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரு நூறுக்கு மேற்பட்டவர்களாகும்.

இதையன்னியில் தமிழகத்தின் சார்பில் இந்தியாவின் போர் நிதி 1972-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் தேதி இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை தமிழகத்திற்கு அழைத்து வழங்கப்பட்டது. இந்த விழா சென்னை தீவுத் திடலில் நடை பெற்ற போது, நாட்டுப் பாதுகாப்பு நிதியாக ஆறு கோடி ரூபாயை தமிழகத்தின் சார்பில் பிரதமர் கையில் நான் வழங்கி னேன். அந்த நிகழ்ச்சிக்கு தமிழகத்தின் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தலைமை தாங்கினர்.

இந்த நிகழ்ச்சிக்கு நான் வருவதற்கு முதல் இரண்டு நாட்கள் - மே 19, 20 ஆகிய நாட்களில் நீலகிரியில் நடைபெற்ற கழக மாநாட்டில் கலந்து கொண்டேன். 20-ஆம் தேதி இரவு

மாநாட்டை முடித்துக் கொண்டு, அன்று இரவே நீலகிரி துரித ரயில் மூலமாக சென்னை வந்து, 21–ஆம் தேதி காலை 10–15 மணிக்கு விமானத்தின் மூலம் சென்னைக்கு வரும் பிரதமரை வரவேற்று – அங்கிருந்து நேராக யுத்த நிதி வழங்கப்படும் நிகழ்ச்சிக்கு காலை 11–15 மணிக்கு நான் அழைத்து செல்வ தாகத்தான் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் மாநாட்டை முடித்துக் கொண்டு நீலகிரி ரயிலில் நானும், மற்ற அமைச்சர்களும் புறப்பட்டு வந்து கொண்டிருந்த போது – திருப்பூர் அருகே வஞ்சிப்பாளையம் எனும் நிலையத்திற் கருகே, நீலகிரி துரித வண்டிக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மங்களூர் விரைவு ரயிலில் இஞ்சின் கோளாறு ஏற்பட்டு, வண்டி நகர முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டதன் காரணமாக நாங்கள் வந்த ரயிலும் பல மணி நேர தாமதத்திற்குப் பிறகே புறப்பட இயலும் என்றும், எப்போது புறப்படும் என்பதைச் சொல்வதற்கு இயலாது என்றும் தெரிவித்து விட்டார்கள்.

இரண்டு நிலையங்களுக்கு இடையிலே நாங்கள் பயணம் செய்த ரயில் நின்று கொண்டிருக்கிறது. நேரமோ நள்ளிரவு. காலையில் பிரதமரை மீனபாக்கம் விமான நிலையத்தில் வரவேற்க வேண்டும். எனவே உடனடியாக ஒரு கார் ஏற்பாடு செய்து, அதிலே நானும், மற்ற அமைச்சர்களும் புறப்பட்டு, எப்படியும் காலையிலே சென்னை வந்து சேர்ந்ததாக வேண்டுமென்ற எண்ணத்தோடு விரைந்தோம். வழியிலேயே செங்கற்பட்டில் குளித்து விட்டு, உடைகளை மாற்றிக் கொண்டு, விமானம் மீனபாக்கத்திற்கு வந்து சேருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால் நாங்கள் வந்து சேர்ந்தோம்.

நாங்கள் பிரதமரை வரவேற்க வருவதற்கு எவ்வளவு தடைகள் ஏற்பட்டதோ, அதைப்போல் பிரதமர் அந்த விழாவில் வந்து கலந்து கொள்வதற்கு மறைமுகமாக பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன; இருந்தாலும் நான் அந்த விழாவிலே குறிப்பிட்டதைப்போல எவ்வளவு தடைகள் வந்தாலும், எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் நாங்கள் நினைக்கிற காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்போம் என்றதைப் போல் அந்த விழா நடை பெற்றது.

தமிழகத்தின் சார்பில் ஐந்தரைக் கோடி ரூபாய்தான் அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தாலும்கூட ஆறு கோடி ரூபாய் நிதியினை அந்த விழாவில் அளித்தோம். அப்போது இந்தியா முழுவதிலும் அதுவரை 25 கோடி ரூபாய் தான் போர்

நிதி தரப்பட்டிருந்தது. அதிலே நான்கில் ஒரு பகுதியினைத் தமிழகம் தந்தது என்ற பெருமையினை கழக அரசு பெற்றது. தமிழகத்தைவிட பெரிய மாநிலமான—பிரதமரின் சொந்த மாநில மான உத்தரப் பிரதேசத்தின் சார்பில் ஐந்து கோடிக்கும் குறை வாகத்தான் போர் நிதியாகத் தரப்பட்டிருந்தது.

நிதியினைப் பெற்றுக்கொண்ட பிரதமர் தனது உரையில் "நாட்டை முன்னேற்றும் பணிகளில் நமக்கு இடையூறுகள் வரலாம். இங்கே வந்து சேருவதில் இருந்த சங்கடங்களைப்பற்றி முதலமைச்சர் குறிப்பிட்டார். கடந்த இரவு அவருக்கு ஏற்பட்ட சங்கடங்களை மீறி வரமுடிந்ததென்பதை அவர் உணர்த்தினார். இதேபோல் நாட்டில் பல சங்கடங்களையும், இடர்களையும் எதிர் நோக்கியுள்ள நாம் அவற்றை மீறி புதிய சமுதாயம் காணும் பணியில் நாம் வெற்றி பெறவும் உறுதிகொண்டிருக்கிறோம். போர் நடந்த நேரத்திலும் போர் இல்லா நேரத்திலும் நாட்டிற்கு ஏற்பட்ட கஷ்டமான நேரத்திலெல்லாம் நீங்கள் அளித்த மகத்தான ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் தமிழக முதல்வருக்கும், ஆளுநருக்கும் தமிழ் மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினார்.

இந்த ஆறுகோடியை அன்னியில் சென்னையிலேஅமைச்சர் களின் துணைவியர்கள் ஊர்வலமாகச் சென்று போர் நிதியாகத் திரட்டிய மூன்று லட்சம் ரூபாய் பெறுமான முள்ள பொருட்களை எல்லாம் நேரடியமாக அனுப்பியதோடு, அடையாளமாக சில பொருட்களை நான் டெல்லி சென்றபோது நேரிலே எடுத்துச் சென்று பிரதமரிடம் அளித்தேன்.

15-12-71 அன்று பாகிஸ்தான் தளபதியாக இருந்த நியாஜ் போரை நிறுத்துவதாக அறிவித்தார். அதனையொட்டி பிரதமர் இந்திராவும் போரை நிறுத்திக்கொள்வதாக அறிவித்தார். வங்காள தேசத்தில் சுதந்திர அரசு டிசம்பர் 16-ஆம் தேதி நள்ளிரவில் பொறுப்பேற்றது.

இந்தியாவின் வெற்றி பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது "வங்க தேசம் உதயமாகி விட்டது, வெற்றிச் செய்தி நம்மையெல்லாம் களிப்பில் ஆழ்த்துகிறது. நமது படை வீரர்கள் நினைத்திருந்தால் டாக்காவை போரிட்டு பிடித்திருக்க முடியும். ஆனாலும், போர்க்களத்திலும் மனிதாபிமான உணர்ச்சி யோடு நடந்துகொண்டு எதிரிகளை சரணடையச் செய்து, அவர் களுடைய உயிரையும் பாதுகாத்து இருக்கிறார்கள். இது இந்தியா வின் பெருமையை உயர்த்துகிறது. இந்த வெற்றிக்கு உயிரைப்

பணயமாக வைத்து போரிட்ட வீரர்களை எல்லாம், இந்திய மண் போற்றிப் பாராட்டுகிறது'' என்று கூறினேன்.

டெல்லியில் உள்ள வங்காள தேச தூதர் ஆபீசில் பத்திரிகைத் தொடர்பு கலாசார அதிகாரியாகப் பணியாற்றிய அம்ஜாதுல் ஹக், சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்துப் பேசினர். டெல்லி பாராளுமன்றத்திற்கு அடுத்தபடியாக தமிழக சட்டமன்றம்தான் வங்காள தேச வெற்றியைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்று கூறி அதற்காக நன்றி தெரிவித்து, என்னையும் வங்காள தேசத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

சுதந்திர வங்காள தேசத்திற்குப் பாராட்டு தெரிவித்து தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்மானத்தை அவையிலே டிசம்பர் 17-ஆம் தேதியன்று நான் கொண்டு வந்து அனைவராலும் ஆதரிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது.

அதிலே நான் பேசும்போது கூறியதாவது:

''சுதந்திரக் கொடியை வங்க தேச மக்கள் ஏற்றி வைத்த நேரத்தில் அதை ஏற்றி வைக்கக்கூட அவர்களுக்கு ஒரு இடம் இல்லை. வங்க தேசத்தில் எங்கோ ஒரு மூலையில், ஒரு மரத்தினடி யில் தங்களுடைய அரசை அவர்கள் உருவாக்கினர்கள். இவர் ஜனதிபதி, இவர் பிரதமர், இவர் ராணுவத் தளபதி என்று பிரகடனம் செய்தபோது உலக நாடுகள் கேலிக் கண்களோடு அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்ததையும், இது எங்கே நடக்கப் போகிறது? புது நாடா? இது உருவாகுமா? என்றெல்லாம் கேட்ட தையும் யாரும் மறந்திருக்க முடியாது.

இன்று அந்தப் படம் மாறி, அவர்கள் கிட்டத்தட்ட ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்களின் தளநாயகர்களாகப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிறர்கள். எங்கோ ஒரு இடத்தில் அவர் களாகச் சூட்டிக் கொண்ட முஜிபுர் நகர் என்ற இடத்தில் பறக்க விட்ட அந்தக் கொடி, இன்று வங்க தேசத்தின் தலைநகரமான—இந்திரா காந்தி அறிவித்ததைப் போல—சுதந்திர நாட்டின் சுதந்திரத் தலைநகரமான டாக்கா நகரில் பறக்க விடப்பட்டிருக் கிறது என்ருல், புறக்கணிக்கப்படுகிறவர்களும், அலட்சியப் படுத்தப்படுபவர்களும், உரிமையின்றி நசுக்கப்படுபவர்களும், விடுதலை விரும்பிகளும் என்றைக்காவது ஒரு நாள் வெற்றியை நிச்சயம் பெற்றே தீருவார்கள் என்ற நம்பிக்கையை அகில

உலகத்திற்கும் ஜனநாயக ரீதியில் அறிவித்துக் கொண்டிருக்கிற தகுந்த சாட்சியாகும்.

டாக்கா என்றாலே—டாக் என்ற ஒருவகை மரம் நிறைந்த இடம் என்றும் அதனால்தான் அப்பெயர் வந்தது என்றும் கூறு கிறார்கள். மரங்கள் அடர்ந்த ஒரு இடத்தில் ஒரு புதிய அரசு உருவாகியது. மரங்கள் அடர்ந்து இருந்த காரணத்தால் அந்தப் பெயரைப் பெற்ற ஒரு தலைநகரத்தில் இன்று அந்த அரசு நிலை பெறுகிறது.

இந்தப் போர் இந்தியாவிலே ஒரு பகுதியில் நடை பெற்றாலும் இது தமிழ்நாட்டையும் பாதிக்கக் கூடிய போர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. தமிழ் மாநிலம், ஆந்திர மாநிலம், கேரள மாநிலம், கர்நாடக மாநிலம், பஞ்சாப், மராட்டியம் என்ற பாகுபாடு இல்லாமல் அந்த ஒரே உத்வேகத் தோடு எதிரியை போர்முனையில் சந்தித்தோம்.

தமிழ்நாட்டிற்கு ஒருவேளை போர் வராவிட்டாலும் தமிழ் நாடும் போர்முனையில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழ்நாட்டு வீரர்களில் சிலர்—ஏன், பலர் என்றுகூடச் சொல்லலாம்—இந்தப் போரில் தங்கள் இன்னுயிரைத் தந்திருக் கிறார்கள். அவர்கள் அணிந்திருந்த ராணுவ உடைகள் அவர் களது வீட்டிற்கு திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த உடைகளை கண்ணீரால் நனைத்து, தங்கள் அருமந்தச் செல்வனின் நினைவாக—வீட்டுத் தலைவனின் நினைவாக பேழையில் வைத்துப் பூட்டி அப்பேழைகளுக்கு மலர் கொண்டு பூஜித்துக் கொண்டிருக் கிற அந்த வீட்டுத் தாய்மார்கள் நம் அனுசரணைக்கும் ஆதர விற்கும் உரியவர்கள்.

நாம் மண்ணாசை பிடித்தலையவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக போர் நிறுத்தம் செய்கிறோம் என்று சொல்லியிருக் கிறோம். முதலில் இந்தியாவில் போர் தொடுத்தது பாகிஸ்தான். போர் தொடுப்பதில் முந்திக்கொண்டது பாகிஸ்தான். இன்று போர் நிறுத்தம் செய்கிறோம் என்பதில் முந்திக் கொண்டிருப்பது இந்தியா.

இதை மனதில் கொண்டு உலக நாடுகளில் சில நாடுகள் தாங்கள் எடுத்த அநியாயமான முடிவுகளிலிருந்து தங்களை மாற்றிக்கொள்ளா விட்டால் இந்தியா அவர்களுக்கு மேலும் புத்தி வரக்கூடிய அளவிற்கு பாடத்தைப் புகட்டும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

இன்று அமெரிக்காவின் கையில் "பூட்டோ" இருக்கலாம். ஆனால் ரஷ்யாவின் கையில் 'வீட்டோ' இருக்கிறது. நல்ல நாடுகள்—நியாயத்திற்காகப் பாடுபடுகிற நாடுகள் நம் பக்கம் இருக்கின்றன. அந்த நாடுகளுக்கெல்லாம் மீண்டும் இப்பேரவை யின் சார்பிலும் நான்கரை கோடி தமிழ் மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

போரில் பாகிஸ்தான் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து யாகியாகானை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவர் ராஜினமா செய்ய வேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டங்கள் நடந்தப்பட்டன. தனக்கு எதிர்ப்பு வலுத்து வந்ததைக் கண்ட யாகியாகான் முப்படைத் தளபதிகளின் கூட்டத்தைக் கூட்டி பதவியை விட்டு விலக சம்மதிப்பதாக அறிவித்தார். அதன்படி 20-12-71 அன்று யாகியாகான் தனது பதவியை விட்டு விலகினர்.

அவருக்குப் பதிலாக பாகிஸ்தானின் புதிய அதிபதிராக 43 வயதே உடைய பூட்டோ பதவி ஏற்ருர். பதவியேற்றவுடன் பூட்டோ அளித்த பேட்டியில் ரகிமான் விடுதலை செய்யப் படுவாரா என்பதை உடனே கூறுவதற்கில்லை என்று கூறிய போதிலும் 3-1-72 அன்று கராச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பூட்டோ பேசும்போது "ரகிமானை விடுதலை செய்யலாமா? வேண்டாமா?" என்று கூட்டத் தினரைப் பார்த்துக் கேட்டார். கூடியிருந்த மக்கள் விடுதலை செய்யலாம் என்று கூறியதன் பேரில் பூட்டோ, உங்கள் கருத்தை யும் உலக மக்களின் கருத்தையும் ஏற்று ரகிமானை விடுதலை செய்கிறேன் என்று அறிவித்தார்.

# 47

## துரோகத்தின் தொடக்கம்!

வலிவோடும் பொலிவோடும் கழகம் வளர்ந்து கொண்டிருந்தது. நாட்டு மக்கள் – ஏன்; பிற நாட்டாரும் நல்லறிஞர் பெருமக்களும் பாராட்டுகிற அளவுக்கு கழக ஆட்சியும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கழகம் நாள்தோறும் புதுமுறுக்குடன் வீறு கொண்டெழுவது கண்டு, கழகத்தின் துணையோடு மத்தியில் ஆட்சிப் பொறுப்புக்கு வரவும் – பதவியை நிலைநிறுத்திக் கொள்ளவும் வாய்ப்பு பெற்ற இந்திரா காங்கிரஸ் மூலவர்கள் இனித் தமிழக மாநில ஆட்சியில் தாங்கள் ஆதிக்கம் கொள்ள முடியாது என்று கருதி கழகத்தைப் பிளக்கும் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினர். அப்படியொரு விஷவிதையை திருமதி இந்திரா காந்தி அவர்களின் மனத்தில் தூவியவர் மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலமாகும். கழக ஆதரவால் நாடாளுமன்ற உறுப்பினராக ஆன அவர் அப்படி நன்றி தெரிவிக்க ஆரம்பித்தார்.

1972–ஆம் ஆண்டு பிறந்தது – இந்த ஆண்டின் நிகழ்ச்சிகளில் முக்கியமானவைகளை மட்டும் சிலவற்றை பூர்வாங்கமாகத் தொகுத்துத் தருகிறேன்.

சென்னை சிம்சன் கம்பெனி தொழிலாளர்களிடையே ஒரு பிரச்சினை எழுந்தது. அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்த காட்டூர் கோபால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும், அவருக்கு எதிராக ஒரு கோஷ்டி செயல்பட்டது. அவர்களுக்குப் பின்னால் மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் இருந்து தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார். சென்னையிலே வந்து ''நான் அமைச்சர் என்ற முறையில் அல்ல; தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் பேசுகிறேன்" என்ற ரீதியில் பேசினார். அதுகுறித்து கருத்து கூறும்போது நான், ''மாநில விஷயங்களில் மத்திய அமைச்சர்கள் இருக்கின்ற நிலைமைகளை இருதரப்பிலும் தெரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு ஆவேசமாகப் பேசிவிடுவது அவர்கள் வகித்துவரும் பெறும் பொறுப்புக்கு அழகல்ல'' என்று கூறினேன்.

திரு. மோகன் குமாரமங்கலத்தின் தூண்டுதலின் விளைவாக சில தொழிற்சங்கத் தலைவர்கள் டெல்லி சென்று பிரதமரிடம் முறையிட்டார்கள். அதன்பேரில் டெல்லி சர்க்கார் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த காடில்கர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, டெல்லிக்கு வந்திருக்கும் தொழிற்சங்கத் தலைவர்களையும், தமிழக தொழிலாளர் நல அமைச்சரையும் வைத்து சிம்சன் விவகாரம் குறித்து பேசவேண்டியிருப்பதால், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை உடனே டெல்லிக்கு அழைக்கும்படி பிரதமர் இந்திரா கூறியிருப்பதாகத் தெரிவித்தார். அதற்கு உடனே நான் பதில் சொல்லாமல் இரவு 10 மணிக்கு மேல் மீண்டும் தொடர்பு கொண்டு பதில் கூறுவதாகக் கூறிவிட்டு, சென்னையிலே ஆயிரம் விளக்கு பகுதியிலே அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களிடம் சிம்சன் பிரச்சினை பற்றிய விவகாரம் முழுவதையும் விளக்கி, மத்திய அமைச்சரின் கட்டளையை ஏற்று தமிழக அமைச்சரை அனுப்பவேண்டுமா? வேண்டாமா? என்று கேட்டேன். மக்கள் அனுப்பத் தேவையில்லை என்று கூறியதின்பேரில், அதனையே மத்திய சர்க்காருக்குப் பதிலாகத் தெரிவித்துவிட்டேன். இவ்வளவிற்கும் அங்கே தொழிலாளர்களின் பிரச்சினைகள் அனைத்தும் சமரசமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த காட்டூர் கோபால் அங்கே தலைவராக இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஜனநாயக முறையிலே நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற முடியாமல், இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட முற்பட்டார்கள்.

டெல்லிக்கு தமிழக அமைச்சரை அனுப்ப மறுத்த போதிலும், மத்திய அரசின் சார்பில் மாற்று யோசனைகள் தெரிவிக்கப்பட்டால், அது குறித்து ஆலோசிப்போம் என்று தெரிவித்தேன்.

சிம்சன் தொழிற்சங்கத்திற்கு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என்று மற்றவர்கள் கோரினார்கள். மார்ச் மாதம் முதல் வாரத்திலேயே தேர்தலை நடத்துவதற்கு நான் ஒப்புக்கொண்டேன். அதன் பின்னர் மத்திய அமைச்சர் காடில்கர் அந்தப் பிரச்சினையில் நான் காட்டிய ஆர்வத்திற்காக நன்றி தெரிவித்துக் கொண்டதோடு, மாநில அரசு விவகாரத்தில் தலையிடும் எண்ணம் டெல்லி சர்க்காருக்கு சிறிதளவும் இல்லை என்றும் தெரிவித்தார்.

10-1-72 அன்று இரவு சிம்சன் தகராறு குறித்து தொழிற் சங்கத் தலைவர்கள் பி. ராமமூர்த்தி, எம். கல்யாணசுந்தரம், அந்தோணிபிள்ளை, ராமானுஜம், மணிவர்மா, காட்டூர் கோபால் ஆகியோர் என்னைச் சந்தித்துப் பேசினார்கள். அமைச்சர்கள் நாவலர், என். வி. என்., மாதவன் ஆகியோர் அந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார்கள்.

அந்தப் பேச்சு வார்த்தையின் பயனாக உடன்பாடு ஏற்பட்டு சிம்சன் தொழிலாளர்கள் திரும்பவும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர். கழகத்தின் சார்பில் காட்டூர் கோபால் அங்கே வெற்றி பெற்றிருந்தபோதும்கூட, பெருந்தன்மையாக கழகம் அந்தப் பிரச்சினையிலே நடந்து கொண்டு, காட்டூர் கோபால் அவர்களைத் தொழிற்சங்கத் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யச் செய்து அந்தத் தொழிற்சாலையில் அமைதி ஏற்பட கழகம் உதவியாக இருந்தது.

இந்திரா காங்கிரஸ் தி. மு. கழகத்துடன் அதுவரை உறவு கொண்டிருந்தபோதிலும் சிம்சன் பிரச்சினைக்குப் பிறகும், மோகன் குமாரமங்கலம் அவர்களும், சி. சுப்பிரமணியம் அவர்களும் மத்திய அமைச்சர்களாக இருந்துகொண்டு தமிழகத்தில் வந்து மாநில அரசைப் பற்றி விமர்சித்துப் பேசுவதின் காரணமாகவும் கழகத் தோழர்கள் மத்தியில் அந்தக் கட்சியுடன் உறவு கொள்வது பற்றி கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. அதன் காரணமாக 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந்தேதி தஞ்சையில் கழகத்தின் செயற்குழுவும், பொதுக்குழுவும் கூடியது.

அந்தப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்:-

"பிற்போக்கு சக்திகளை முறியடிக்க தமிழ்நாட்டில் தி. மு. க தலைமையில் அமைந்த முற்போக்கு கட்சிகளின் தேர்தல் உடன்பாடு, தேர்தல் வெற்றிக்குப் பிறகும், ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்க ஒன்றுபட்டு பாடுபடுகிறது எனினும், குறிப்பாக இந்திய தேசிய காங்கிரஸ் (இ. காங்கிரஸ்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகிய இரண்டும், அண்மைக் காலமாக தி. மு. கழகத்திற்கு எதிராகக் கடைப்பிடிக்கும் போக்கும் மேடைப் பேச்சுக்களும், எழுத்துக்களும் கழகத்தினர் இடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை இப் பொதுக்குழு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஆளும் கட்சியான தி. மு. கழகம், தோழமைக் கட்சிகளில் ஒன்ருக இருப்பினும், அதன் ஆட்சியின் போக்குபற்றி கருத்து அறிவிக்கவும் தங்கள் தங்கள் கட்சிக் கொள்கைகளுக்கு ஏற்ப செயல்படவும் இருக்கின்ற உரிமைகளை இப் பொதுக் குழு ஏற்று வரவேற்கிறது என்ருலும், பிற்போக்கு சக்திகளும் வன்முறையாளர்களும் வலுப்பெறும் வகையில், ஆளும்கட்சியான தோழமைக் கட்சிக்கு எதிராக மேற்குறிப்பிட்ட இரண்டு கட்சிகளும் எடுக்கும் நடவடிக்கைகள் கழகத்தின் எல்லா மட்டத்திலும் கசப்பு உணர்ச்சி ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் தோழமை உணர்வோடு அந்த இரண்டு கட்சிகளுக்கும் இந்தப் பொதுக்குழு தெரியப்படுத்திக் கொள்கிறது.

இந்த விரும்பத்தகாத நிலை மேலும் நீடிக்கக் கூடாது என இக்குழு கருதுவதோடு தவிர்க்க முடியாத அளவில் இந்த நிலை தொடருமாளுல் அதுபற்றி இறுதி முடிவெடுக்க கழகத் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோருக்கு பொதுக்குழு அதிகாரம் அளிக்கிறது.''

இந்தத் தீர்மானத்தை மதுரை மேயர் முத்து முன்மொழிய தென்னரசு, சேப்பெருமாள் ஆகியோர் வழி மொழிந்தனர்.

2) அண்மையில் சென்னையில் ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சினையில் மத்திய அரசின் அமைச்சர் ஒருவர், மாநில அரசுடன் எந்தவித தொடர்பும் கொண்டு கலந்து பேசாமல் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக, மத்திய மாநில அரசுகளின் உறவுகளைப் பாதிக்கும் வகையில் பேசியதும் நடந்து கொண்டதும், ஆளும் கட்சியும் நேசக் கட்சியுமாக உள்ள தி. மு. கழகத்தை அலட்சியப்படுத்தும் போக்காக அமைந்துள்ளதை, இப்பொதுக்குழு சுட்டிக்காட்டுவதோடு, இது போன்ற நிலை இனி ஏற்படாத வண்ணம் பிரதமர் கண் காணிப்பார் என்று நம்புகிறது.

இந்தத் தீர்மானத்தை அரங்கண்ணல் அவர்கள் முன் மொழிய, நீலநாராயணன் அவர்களும், வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் வழி மொழிந்தனர்.

இந்தப் பொதுக்குழுத் தீர்மானத்திற்குப் பிறகு இந்திரா காங்கிரஸ், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பகைக்கவே தொடங்கி விட்டது என்றே கூறலாம். கழகத்தில் சரிவு ஏற்படுத்த என்ன வழி என்று யோசித்தனர். அமைச்சராக

இருந்த ஆதித்தனுர் கையில் உள்ள தினத்தந்தியின் பலத்தைக் குறைத்தால் கழகத்தை பலவீனப்படுத்த முடியுமா என சிந்தித்து அவரிடம் ஊடுருவினுர். ஆதித்தனுர் அதற்கு இடம் கொடுக்க வில்லே. அதற்குப் பிறகுதான் டெல்லியின் பார்வை நண்பர் எம். ஜி. ஆரின் மீது விழுந்தது. கழகத்திற்கு ஒரு வகையில் பலமானவராகவும் அதே சமயம் சோதனேகளேத் தாங்க முடியாத பலகீனராகவும் ஒருவர் டெல்லிக்குத் தேவைப்பட்டார். அந்தத் தேவையை நிறைவு செய்யக் கூடியவராக எம். ஜி. ஆர் அவர்களுக்குக் கிடைத்தார்.

எம். ஜி. ஆர். அவர்களிடம் டெல்லி வட்டாரம் பரிவுடனும் பயமுறுத்தல் காட்டியும் பழக ஆரம்பித்தது. இந்தச் செய்திகள் மெல்ல மெல்ல சில ஏடுகளில் "கிசு கிசு" செய்திகள் என்பார்களே அது போல வரவும் தொடங்கிற்று. ஆனுல் எம். ஜி. ஆர் அவர்களின் உள்ளம் ஊசலாட்டத்தில் இருந்தது.

திடீரென்று கழகத்திற்குத் துரோகம் செய்ய அவருக்குத் துணிவில்லே - அதே சமயம் டெல்லிக்காரர்களின் கைப்பாவை யாகச் செயல்படவும் வேண்டியிருந்தது! அந்த ரகசியம் வெளியில் தெரிந்து விடாமல் இருக்க அவர் பொதுக் கூட்டங் களிலும், கழக மாநாடுகளிலும் தன்னே ஒரு தீவிர தி. மு. க. வீரராகவும், என்பால் நிறைந்த அன்பு கொண்டவராகவும் காட்டிக் கொண்டு பேசினுர்.

செங்கற்பட்டு மாவட்டக் கழக மாநாடு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8, 9 ஆகிய நாட்களில் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. நண்பர் எஸ். எஸ். தென்னரசு மாநாட்டிற்கு தலேமை தாங்கிட நண்பர் ஆலடி அருணு மாநாட்டினேத் திறந்து வைத்தார்.

அந்த மாநாட்டிலே கழகப் பொருளாளராக இருந்த எம். ஜி. ஆர். பேசும்போதுதான், கழகத்தைப் பிளவுபடுத்த எவராலும் முடியாது என்று கூறினுர். எம். ஜி. ஆர். கூறிய தாவது :-

"கழகத் தோழர்களுக்கும், கழகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள ஆதரவாளர்களுக்கும் நம் மீது பற்றும் பாசமும் கொண்டுள்ள பொது மக்களுக்கும் நான் இந்த மாநாட்டிலே ஒரு வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில் நாம் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அது அப்படியே சில பத்திரிகைகளில் வராது. பொய்தான் வரும். உண்மையைச் சொன்னால் அவர்களுக்கு வியாபாரம் ஆகாது. உள்ளத்துப் பொருமைக்கு அமைதி ஏற்படுத்திக் கொள்வதற்காகவே அவர்கள் மக்களிடம் பொய்யைப் பரப்புவதில் முனைந்து நிற்கிறார்கள். கழக அரசின் நல்ல திட்டங்களை வரவேற்று எழுதினால் மக்களின் நல்லெண்ணம் நம் பக்கம் விழுந்து விடுமோ என்று பயப்படுகிறார்கள். 8-4-72 அன்றைய மாலை ஏடு ஒன்றில் செயற்குழு முடிவதற்கு முன்பே எம். ஜி. ஆர். வெளியேறிய மர்மம் என்ன என்று செய்தி வெளியிடப்பட்டது. அதில் ஓர் இடத்தில் எம். ஜி. ஆர். சோர்வாக இருந்தார் என்று எழுதியிருக்கிறார்கள் இப்படிப்பட்ட விமர்சனங்களை மக்கள் நம்பிவிட வேண்டாம். என் மேலும், முதல்வர் கலைஞர் மேலும், நாவலர் மேலும் பற்று வைத்துள்ள தோழர்களே, உங்களுக்கெல்லாம் எங்கள் மேல் சந்தேகம் உண்டாக வேண்டும் என்பதற்காகவே அவர்கள் இதைச் செய்கிறார்கள்.

கழகம் பிரிவுபட வேண்டும், கழகத்தில் உள்ளவர்களிடையே பிளவு ஏற்பட வேண்டும் என்கிற நப்பாசையோடு நடத்தப்படுகிற அப்படிப்பட்ட ஏடுகளுக்கு கழகத் தோழர்கள் ஆதரவளிக்கக் கூடாது.

எம். ஜி. ஆர். வராதது ஏன்? ஏன்? என்கிறார்கள். எம். ஜி. ஆர். ஒருவரை வைத்து கழகம் வளரவில்லை. வேறு எந்த ஒருவருக்காகவும் கழகம் இல்லை. அப்படி இருப்பதாலே தான், அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப்பிரிந்த போதும் கூட, கழகம் இருக்கிறது.

அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட நமது கழகம் அவருடைய கொள்கையின் மீதும், லட்சியங்களின் மீதும் பற்று வைத்துள்ள லட்சோப லட்சம் மக்களை நம்பித்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட கழகத்தில்தான் பூசலை உண்டாக்க நினைக்கிறார்கள். பிளவை உண்டாக்கப் பார்க்கிறார்கள். நடக்குமா?

அப்படியே உண்டாக்கினாலும் கூட அதை எங்களுக்குள் தீர்ப்போமே தவிர அது சந்தைக்கும் வராது, எங்களுக்குள் சச்சரவும் வராது.

யாரானாலும் சரி, உண்மையைப் பேச வேண்டும். பொய் நீண்ட நாள் நீடிக்காது. தி. மு. கழக அரசு

சோஷலிசத்தை அடிப்படையாக வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் செயல் முறையைத் தடை செய்ய துணைக் கண்டப் பேரரசின் மூலம் சிலர் முயற்சிக்கிறார்கள். அவர்கள் அப்படி ஆசைப்படுகிறார்கள்.

எல்லோருக்கும் சரிசமமான உரிமை கொண்ட சமதர்மம் உருவாக வேண்டும் என்பதுதான் தி. மு. க. அரசின் கொள்கை. உள்ளன்புடனும், பாசத்துடனும், பண்புணர்ச்சியுடனும் திட்ட மிட்டுப் பணியாற்றி வருகிறது தி. மு. க. ஆட்சி. இதன் மீது கொண்ட அச்சம் காரணமாகத்தான் மாற்றார்கள் ஏசிப் பேச ஆரம்பித்துள்ளார்கள். தி. மு. க. ஆட்சியிலே ஊழல், ஊழல் என்று பேசி வருகிறார்கள். பக்தவச்சலனாரே கூட ஊழலைப் பற்றிப் பேசுகிறார். இப்படியெல்லாம் சொல்வதன் மூலம் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைக் கிறார்கள் போலும். அது ஒருக்காலும் அவர்களுக்கு நிறை வேறப் போவதில்லை.

தி. மு. க. ஆட்சியில் குறைகள் நடக்கிறது என்றால் அது பற்றி இன்ன குறை நடக்கிறது என்று சொல்லுங்கள். யார் மீது குற்றம் என்று தெளிவாகச் சொல்லுங்கள். அதற்காக வழக்கு மன்றத்துக்கு வேண்டுமானாலும் செல்லலாம். இப்படி எல்லாம் செய்யாமல் சில பத்திரிகைகளைத் தூண்டிவிட்டு அவற்றிக்குப் பணம் கொடுத்துப் பொய் பிரச்சாரங்கள் செய்யச் சொல்வானேன்.

கழகத்துக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு இப்படி எல்லாம் வழிகோலலாம் என்று சில குழப்பவாதிகள் நினைக் கிறார்கள். இங்கு குழப்பங்களை ஏற்படுத்த அனுமதிக்க மாட்டோம்.

தி. மு. க. மக்கள் கட்சி. இது தனி மனிதக் கட்சி அல்ல. அண்ணா அவர்கள் கழகத்தை உருவாக்கினார்கள். கலைஞர் அவர்கள் இதனைக் கட்டிக்காத்து வருகிறார்கள். கழகத்தைப் பிளவுபடுத்தச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்போரின் நினைப்புக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். கழகத்தைப் பிளவுபடுத்த எவரும் பிறக்கவில்லை. இனிமேலும் பிறக்கப் போவதுமில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு முதலமைச்சர் பொறுப்புக்கு வருவது பற்றி நமது கலைஞர் அவர்கள் என்ன சொன்னார் என்று இதுவரை நான் எந்த மேடையிலும் சொல்லவில்லை. இங்கே அதைச் சொல்லலாம்

என்று கருதுகிறேன். "முதலமைச்சர் பொறுப்புக்கு நான் வர விரும்பவில்லை. எனக்கு வேண்டாம்" என்றுதான் அவர் தெரிவித்தார். அது மட்டுமல்ல; தம்பி மாறன் அவர்களையும் அனுப்பி வைத்து தனக்கு இந்தப் பதவி வேண்டாம் என்று தெரிவித்திடச் சொன்னார். கலைஞரின் துணைவியாரும் இதையே தெரிவித்தார். ஆனால் நாங்கள் தான் அதை மறுத்தோம். ஆகவே கலைஞர் அவர்கள் இந்தப் பதவியை விரும்பியவரல்ல; வேண்டுமென்று கேட்கவுமில்லை. மக்களின் விருப்பத்தை நிறைவேற்றத்தான் அவர் முதலமைச்சர் ஆனார். நாங்கள் எல்லாம் சேர்ந்துதான் அந்தச் சுமையை (முதல்வர் பொறுப்பு) சுமக்க வைத்தோம். அவர் படங்களுக்கு வசனமெழுதினால் பல ஆயிரங்களை சம்பாதிக்க முடியும். அதற்குக்கூட நேரமில்லாமல் இந்தச் சுமையை மக்களுக்காக அவர் ஏற்றி ருக்கிறார்."

—காஞ்சி மாநாட்டில் இப்படிப் பேசிய எம். ஜி, ஆர். அவர்களே, கழகத்தைப் பிளக்கும் கருவியாக மாறினார்!

அந்த மாற்றம் பகிரங்கமாக வெளிப்படுவதற்கு முன்பு அவர் பேசியவைகளை நினைவுபடுத்திக் கொள்வது மிக முக்கியம்.

மறைந்தும், ஒளிந்தும், டெல்லியினால் தூண்டிவிடப் பட்டும் தொடங்கப்பட்ட அந்தத் துரோகத்தின் முழு உருவம் 1972 செப்டம்பர் மாத இறுதியில் வெளிப்படுவதற்கு முன்பு – அந்த இடைக்காலத்தில் எம். ஜி. ஆர். அவர்கள், என்னைப் பற்றியும், கழக ஆட்சியைப் பற்றியும் ஆற்றிய பாராட்டுரைகளை இப்போதும் எடுத்துப் படித்தால், "இவரா இப்படிச் செய்தார்?" என்று வியப்பு ஏற்படும். அந்த உரைகள் சிலவற்றை நினைவுபடுத்துகிறேன் முதலில்.

# 48

## புயல் புகுமுன்!

**1972**-ம் ஆண்டு அக்டோபர் 8-ஆம் நாள் சென்னை லாயிட்ஸ் காலனியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர்; கழகத்தை நேரடியாகத் தாக்கிப் பேசினார். கழகத்தின் மிக முக்கியமான பொறுப்பில் இருக்கக் கூடிய ஒருவர் செயற்குழுவிலோ பொதுக் குழுவிலோ தனது கருத்துக்களைச் சொல்லாமல் பொதுக் கூட்டமொன்றில் கழகத்தின் கட்டுப்பாட்டை மீறிப் பேசவேண்டிய திடீர் சூழ்நிலை எதுவும் ஏற்பட்டு விடவில்லை. எந்தக் கட்சியிலும்-ஏன்; இப்போது எம்.ஜி.ஆரைத் தலைவராகக் கொண்ட கட்சியிலேகூட அவரது கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்படுகிறவர்கள் அல்லது பேசுகிறவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு "விலக்கி விட்டோம்" என்ற பெட்டிச் செய்திகளை வெளியிட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். சென்னைக் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். என்ன பேசினார், எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விபரங்களைப் பிறகு பார்ப்போம்.

அவர் இப்படிப்பட்ட ஒரு கலவரத்தைக் கட்சிக்குள் ஆரம்பிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்புவரையில்கூட என்னைப் பற்றியும் கழகத்தைப் பற்றியும் எப்படி புகழ்ந்து கொண்டிருந்தார் என்பதை அறிந்து கொள்ளவேண்டியது மிக முக்கியம்.

"உலகம் சுற்றும் வாலிபன்" என்ற திரைப்படப் பிடிப்பிற்காக எம்.ஜி.ஆர். வெளிநாடு சென்றபோது நான் விமான நிலையம் சென்று அவரை வழியனுப்பி வைத்தது குறித்து "பொம்மை" என்ற பிரசித்தி பெற்ற கலைத்துறை இதழில் எம்.ஜி.ஆர். எழுதியிருந்த கட்டுரையின் ஒரு பகுதி இதோ:

"அண்ணா அவர்கள் வந்திருந்து முன்பு மாலை அணிவித்த அதே விமானக் கூடத்தில் அண்ணாவைத் தேடினேன். அண்ணா இல்லை என்பது எனக்குத் தெரியாதா? நன்கு தெரியும்! ஆனாலும் உள்ளத்திலிருந்த எண்ணம் 'அண்ணா வந்து என்னை வாழ்த்தி வழியனுப்ப வேண்டுமே' என்பது! நான் அந்தப் பேராசையோடு சுற்றிலும் பார்த்தேன்!

சுற்றியலைந்த கண்களுக்கு முன் அதோ வருகிறார்! அதோ அருகில் வந்துவிட்டார்! போலீஸ் அதிகாரிகள் அவரை என் அருகில் அழைத்துவர உதவினார்கள்! ஆமாம்! கலைஞர் கருணாநிதியின் உருவில் அண்ணா என்னை தேடி வந்தார்!

கலைஞர் வந்தார்! அண்ணாவைப்போல் என்னைவிட வயதில் மூத்தவரில்லாவிடினும் அண்ணாவுக்குரிய தகுதியைப் பெற்ற கலைஞர் மாலையை என் கழுத்தில் அணிவித்தார்.

நான் உணர்ச்சிவயப்பட்டிருந்தபோதே அவர் தன்னைச் சமாளித்துக்கொண்டு அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்; வண்டியை நேராக விமானத்திற்கு அருகில் கொண்டு செல்லும்படி!

நான் 'வேனில்' ஏற்றப்பட்டேன். வண்டி நகர்ந்தது. "கலைஞர் அண்ணா" விடம் ஏதேதோ பேசவேண்டுமென்று விரும்பினேன். இயலவில்லை. பெருத்த ஏமாற்றத்தோடும், வேதனையோடும் விமானம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டேன்.

தூரத்தில் அண்ணன் திரு. எம்.ஜி.சி. மற்றும் பல பெரியவர்கள், அன்பர்கள், தோழர்கள் இருந்தனர். எல்லோரிடமும் சென்று என் வணக்கத்தைச் சொல்ல ஆசைப்பட்டேன்: இயலவில்லை. விமானத்தின் உள்ளே சென்று அயர்ந்து உட்கார்ந்தேன். பெருத்த ஏமாற்றம்!

திடீரென வெளியே இருந்து போலீஸ் அதிகாரிகள் சிலர் விமானத்திற்குள் வந்தனர். கலைஞர் கருணாநிதியின் உருவில் அண்ணா மீண்டும் என்னைத் தேடி வந்தார். என்னை ஆரத் தழுவினார்.

எங்கள் இருவர் கண்களிலும் நீர் மல்கின.

நான் புறப்படுவதைப் பற்றி அவரிடம் பேசியதுண்டு. ஆனால் குறிப்பிட்ட தேதியில் நான் புறப்பட இருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லவே இல்லை. முன்பு பேரறிஞரிடமும் இப்படித்தான் செய்தேன். அவரும் வந்தார். இப்போது இவரும் வந்தார்.

நான் சுமார் ஏழுவயதுப் பையனாக இருக்கும்போது என் தாயிடமிருந்து முதன் முதலாகப் பிரிந்து நாடகக் கம்பெனியில் சேருவதற்காகப் புறப்பட்ட நாளன்று வாயிற்படிவரை நாங்கள் (நானும் என் சகோதரரும்) வருவதும், உடனே ஓடி கூடத்தில்

அழுதபடி உட்கார்ந்திருந்த தாயைக் கட்டி அணைத்து அழுவதும் எங்களைப் பெரியவர்கள் ஆறுதல் கூறி அழைத்துச் செல்வதும் வாயிற்படியைத் தாண்டும்போது மீண்டும் ஓடித் தாயைக் கட்டிக்கொண்டு ஓவெனக் கதறி அழுவதுமாயிருந்த அந்தக் காட்சியினை இது இப்போது நினைவுறுத்தியது.

மனத்திலிருந்த பெரும் பாரம் இறக்கி வைக்கப்பட்டது போன்ற உணர்வு! கடைசியில் என் அண்ணா நான் இருக்குமிடத்திற்கே கலைஞரின் உருவில் தேடிவந்து ஆசி கூறிவிட்டார் என்ற பெரும் ஆறுதல்...

ஒரு பெருமூச்சு. அது எத்தனை பேர் என்னைக் கவனிக்குமாறு செய்துவிட்டது.''

இப்படி எழுதிய எம்.ஜி.ஆர். தான்; தனது சங்கடங்களுக்காகவும் டெல்லியின் மிரட்டலுக்குப் பணிந்தும் என்னையே அண்ணாவுக்கு விரோதி என்று பேசவேண்டிய நிலைமைக்கு ஆளானார்!

இன்னும் அவரது பேச்சுக்கள் சிலவற்றைப் பார்ப்பது அவசியம். அவற்றைப் படித்தால்தான் அவர் 1972அக்டோபரில் சென்னையில் கழகக் கட்டுப்பாட்டை மீறிப் பேசியது எவ்வளவு முரண்பாடு கொண்டது என்பதும், அவரை டெல்லியிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளச் செய்யபட்ட ஒரு ஏற்பாடு என்பதும் தெளிவாகும்.

1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவருடைய பரங்கிமலைத் தொகுதியில் "கருணாநிதிபுரம்" என்று ஒரு பகுதிக்கு பெயரினைச் சூட்டி, அதற்கான பெயர்ப் பலகையினை அவரே திறந்து வைத்தார். அந்த விழாவில் அவர் பேசியது மறக்கக் கூடிய பேச்சா?

"ஒரு நல்ல தோழரும், தொண்டரும், செயலாற்றலுடைய சிறந்த தலைவரும் குடிமகனுமான தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பெயரை இந்த குடியிருப்புப் பகுதிக்கு சூட்டி என்னை அழைத்துத் திறந்து வைக்கச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த விழாவிலே கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் இருபதாண்டுகளாகத் தொடர்புண்டு. அப்போது நான் கோவையிலே இருந்தேன். ஊருக்குள் பிளேக் என்ற நோய் பரவிக்கொண்டிருந்த காரணத்தால் குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டுக் கலைஞர் என் வீட்டில் வந்து தங்கினார். என் வீடு என்றால் அப்

போது 12 ரூபாய் வாடகை வீடுதான். இரண்டு பேரும் ஒன்ருக இருந்தோம். ஆனுல் அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த வராகவும், நான் காங்கிரஸ்காரஞகவும் இருந்தேன்.

அப்போதெல்லாம் அவரை என் பக்கம் இழுக்க முயற்சித் தேன். ஆனுல் நிலைமை எப்படி ஆயிற்று? நான் அவர் பக்கம் தான் ஈர்க்கப் பட்டேன். இன்று அவர் கழகத் தலைவராகவும், நான் கழகத்தின் பொருளாளராகவும் இருக்கும் நிலைமைக்கு அந்த ஈர்ப்பு நடைபெற்றுள்ளது.

கலைஞர் அவர்கள் இன்று முதல்வராக இருக்கிருர் என்ப தால்தான் அவருக்குப் பெருமையும் புகழும் என்று யாராவது நினைத்தால் அது மாபெரும் தவருகும். இந்தப் பதவிகளெல்லாம் அவரைத் தேடி வந்து அமைவதற்கு முன்பே பேருக்கும் புகழுக் கும் உரியவராக இருப்பவர் கலைஞர்.

கோவையில் இருந்தபோது பல்லாண்டுகளுக்கு முன்பு ராஜகுமாரி, அபிமன்யு என்ற படங்களுக்கெல்லாம் கலைஞர் உரையாடல்களை எழுதிஞர். அந்தப் படங்களில் அவருடைய பெயர் வெளியிடப்படவில்லை. இப்படிப் பிரபலப்படுத்தப் பட வில்லையே என்பதற்காக அவர் தம்முடைய உழைப்பை— திறமையை காட்டாமல் இருந்ததில்லை. சலியாது உழைத்தார். தன் பெயர் வரவில்லை என்ருலும் தன் கருத்து வந்திருக்கிறது என்கிற திருப்தியில் உழைத்தார்.

அதுவும் கொள்கைப் பிடிப்புள்ள தம் கருத்துக்களை படத்தில் அவர் நுழைக்கத் தவறியதே இல்லை. தனக்கென ஒரு கொள்கை தனக்கென ஒரு தலைவன் என்று வகுத்துக்கொண்டு பற்ருேடும், பிடிப்போடும் அயராது உழைத்து வந்தவர் கலைஞர்.

கொள்கைப் பிடிப்புக் காரணமாகச் சமயம்வரும்போது அண்ணுவுடனும் சரி, என்னுடனும் சரி, கலைஞர் வாதிடுவதற்கு ஒருபோதுமே தயங்கியதில்லை. அதேபோல கழகத்துக்கு ஒரு கேடு வருகிறது என்ருல் தன் உயிரைக்கூட மதிக்காமல் முனைந்து பாடுபடுவதில் அவருக்கு இணையான செயலாற்றல் யாருக்கும் இருந்திருக்க முடியாது.

ஒருதடவை பாண்டிச்சேரியில் அவர் சுயமரியாதை இயக்கத்தில் பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தபோது அவரை தெருவில் தள்ளி அடித்து சாக்கடையில் வீசிவிட்டுப் போஞர் கள். ரத்தம் சொட்டச் சொட்ட எழுந்து போய் ஒரு வீட்டுக்குள்

நுழைந்தபோது அந்த வீட்டுக்குள் சீட்டடிாக் கொண்டிருந்தவர்கள் யார் தெரியுமா?

அவரை அடிப்பதற்கு யார் ஆட்களை அனுப்பினர்களோ அவர்களே உள்ளே இருந்தார்கள். அங்கிருந்து தப்புவதற்கு அவர் எப்பாடு பட்டிருப்பார் என்பதை விளக்க வேண்டியதில்லை.

இப்படியெல்லாம் அடிபட்டுத் தொல்லைகள் மிகத் தாங்கியவர் கலைஞர். கல்லக்குடி போராட்டத்தில் உயிரை வெல்லமாக நினைக்காமல் தண்டவாளத்தில் முதலில் படுத்தவர் கலைஞர்.

இந்தத் தியாகம் மிகுந்த அனுபவங்களை எல்லாம் பெறும் போது அவர் இப்படி ஒருநாள் தமிழகத்தின் முதல்வராக ஆகப் போகிறேம் என்று அப்படியெல்லாம் தொல்லைப்பட்டவரல்ல.

தமிழ் காக்க வேண்டும்; தமிழ்மானம் காக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் பல்லாண்டு காலம் ஓயாது உழைத்துச் செய்த தியாகத்தின் பலனுக இன்று அவரைத்தேடிப் பதவி கிடைத்திருக்கிறது.

சிலருக்குப் பதவி கிடைத்தால் நாடு குட்டிச்சுவராகி விடுகிறது. ஆனுல் நமது கலைஞருக்கு பதவி கிடைத்ததால் நாடு வாழ்கிறது. ஏழை எளியவரின் நம்பிக்கை எல்லாம் அவரது விழிகளை நோக்கி உயர்கின்றன.

கலைஞர் பெற்றுள்ள நல்ல அனுபவம், திறமை, செயலாற்றல், அறிவுணர்வுகள் எல்லாம் இந்தத் தமிழ் மண் நலம் பெறும்படி பரிமளிக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் ஆகிய இந்த இரண்டு பெரிய பொறுப்புக்களையும் வகித்து வரும் கலைஞர் அவர்கள் எத்துறையில் திரும்பினுலும் அத்துறை சிறப்படைகிறது. எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்குகிறுர் அவர்.

கட்சியின் ஒவ்வொரு தொண்டனையும் தலைவனையும் நன்ருகப் புரிந்து வைத்துக்கொண்டு அவர் கழகத்தைச் சீராக நடத்திச் செல்கிறுர்.

தமிழகத்தின் முதல்வர் என்னும் முறையில் நல்ல நிர்வாகத் திறமையோடு கட்சிப் பாகுபாடு இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறுர் கலைஞர். எல்லாத் தரப்பினருக்கும் தேவை

யான நன்மைகளை உரிய நேரத்தில் செய்து வரும் ஒரே முதல்வர் கலைஞர் அவர்கள்தான்.

எந்தக்கட்சியிலும் காணக் கிடைக்காத அருங்குணங் களைப் பெற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் அவரது அறிவாற்ற லுக்கும் நல்ல பண்பாட்டுக்கும் அவருக்கு இப்போதுள்ள முதல்வர் பதவி மட்டும் போதாது. இன்னும் உயரிய பதவிகள் எல்லாம் அவரைத் தேடி வரும் காலம் விரைவில் வந்தே தீரும் இத்தகைய உயரிய மனிதரின் பெயரால்–கருணையும் நிதியும் கலந்திருக்கும் பண்பாளரின் பெயரால் இந்தப்பகுதி கருணாநிதி புரம் என்று அமையப் பெற்றது பெரும் பேறாகும்.''

குடிநீர் வாரியத்தின் ஆண்டு விழாவும், பல்லவபுரம் குடிநீர் திட்ட அடிக்கல் நாட்டு விழாவும் 1972 ஏப்ரல் 27–ந்தேதி நடைபெற்றது. அந்த விழாவில் எம். ஜி. ஆர். பேசியதாவது:–

''என்னை இந்த விழாவிலே வாழ்த்துரை வழங்க வேண்டு மெனக் கட்டளையிட்டிருக்கிறார்கள். நான் வாழ்த்துகிறேன் என்றால் உங்கள் சார்பில் வாழ்த்துவதாகத்தான் இருக்கும்.

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேச்சைக் கேட் கிறவர்களும்–நாகரிகம் தெரிந்தவர்களும் அத்தனைப் பேரும் வாழ்த்துரை வழங்குவார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் அவரது கொள்கைகளை நிறைவேற்றித் தரும் பாங்கை யும் – துணிவினையும் தமிழகம் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிற உலக மக்கள் அத்தனைப் பேரும் பாராட்டிக் கொண்டிருக்கும் காலம் இது.

டாக்டர் கலைஞர் அவர்கள் தி. மு. கழகத்தின் தலைவராக மட்டுமின்றி – இந்த நாட்டின் முதல்வராகவும் தமிழகத்தின் தொண்டனாகவும் – தோழனாகவும் – நண்பனாகவும் – ஆசானாக வும் – அமைச்சராகவும் பணியாற்றிக் கொண்டிருப்பதை எண்ணி யெண்ணி வியக்கின்றவர்களில் நானும் ஒருவன்.

கட்டுக்கோப்பு குலையாமல் அதே நேரத்தில் ஆடம்பர மின்றி செய்து நமது தலைவரை யாரும் குறை கூறாமல் இருக்கத் தக்க விதத்தில் நடத்த வேண்டுமென்று சொன்னேன். இது பற்றி முதலமைச்சரிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது அவரும், ''நான்கூட கந்தப்பன் அவர்களிடம் பல்லவபுரத்தில்

நடக்கும் விழாவுக்கு சென்னையிலே ஏன் போஸ்டர் ஒட்ட வேண்டுமென்று கேட்டேன்'' என்றார். இப்படிப்பட்ட தலைவரைத்தான் சிலர் குறை கூறுகிறார்கள்.

அண்ணா அவர்கள் நம்மோடு இருந்து நம்மை சிந்திக்க வைத்தார். அதன்மூலம் கட்சியை வளர்த்தார். இன்று நமக்கெல்லாம் பதவியைத் தந்துவிட்டு மறைந்து விட்டார். அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது என்னவோ - நினைத்தது என்னவோ - அவர் உயிரோடு இருந்தால் எதையெதைச் செய்வாரோ அவற்றையெல்லாம்கூட கலைஞர் அவர்கள் செய்து முடித்துக் கொண்டிருக்கிறார்.

அவரது உள்ளத்தில் இருக்கின்ற எழுச்சியைப் பற்றி அதிகாரிகளிடம் பேசிக் கொண்டிருந்த போது நான் அறிந்தேன். கலைஞர் அவர்கள் உள்ளத்தில் கொண்டிருக்கின்ற எழுச்சி, தமிழர்களுக்குத் தனது கடமையைச் செய்யவேண்டும் என்கிற துடிதுடிப்பு அவருக்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அவர்கள் வாயிலாகவும் நான் அறிந்தேன்.

டாக்டர் கலைஞரின் திட்டம் - அண்ணா அவர்களின் கொள்கை-ஏழை எளியமக்களுக்கு உதவிகள் செய்யவேண்டும்-அவர்கள் வாழ்வு முன்னேற திட்டம் தீட்டப் பட வேண்டும் என்பதுதான்.

டாக்டர் கலைஞரின் அமைச்சரவை செய்து வருகின்ற நல்ல பல காரியங்களை எண்ணி எண்ணி நாடு மகிழ்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நமது தலைவர் - முதல்வர் டாக்டர் கலைஞர் பல்லாண்டு வாழ வேண்டும் - பல்லாண்டு ஆள வேண்டும்.''

எம். ஜி. ஆர். அவர்கள் "பாரத்" பட்டம் பெற்றமைக்காக தி. மு. க. தலைமைக் கழகச் சார்பில் 1972-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28-ஆம் தேதி நடைபெற்ற பாராட்டு விழாவில் நன்றி தெரிவித்து எம். ஜி. ஆர் பேசியதாவது:-

"கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பினைப் பற்றி இங்கே கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். முரட்டுக் கதரைப் போட்டுக் கொண்டு கலைஞர் அவர்களை என் பக்கம் இழுக்க முயன்றேன் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அதில் நான் அடைந்த தோல்வியை மகிழ்வோடு ஒப்புக் கொள்கிறேன்.

நான் முதன் முதலாகப் பெற்ற பட்டம் புரட்சி நடிகர் பட்டம். அந்தப் பட்டத்தை எனக்கு முதன் முதலாகத் தந்து பாராட்டியவர் இன்று கழகத் தலைவராகவும் தமிழக முதல்வராக வும் இருக்கும் கலைஞர் அவர்கள். அன்றே எனக்குப் பட்டம் தரும் அளவுக்குத் தகுதி படைத்திருந்த அவரிடம் நான் என் தோல்வியை ஒப்புக்கொள்வதில் மகிழ்ச்சியே அடைகிறேன்:

இன்று கலைஞர் அவர்களை எந்த மாநிலத்திலிருந்து வந்தவர் களாக இருந்தாலும் சந்தித்துப் பேச விரும்புகிறார்கள். இந்த நாட்டில் மட்டும் என்றில்லை. நான் சிங்கப்பூர் சென்றிருந்த போதும், பினாங்குக்குச் சென்றிருந்தபோதும் அங்குள்ள அமைச் சர்களும் மக்களும் முதல்வர் கலைஞர் அவர்களைப் பற்றிக் குறிப் பிட்டுப் பேசத் தவறவில்லை. அந்த அளவுக்கு கலைஞர் அவர் களை வெளிநாட்டினர் கூட பெருமையோடு நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமில்லை, கடல்கடந்துள்ள மக்களும் கலைஞர் அவர்கள் மீது அதிக அன்பு வைத்துள்ளார்கள் என்பதை அண்மையில் நான் வெளிநாடு சென்றபோது அறிந்தேன்.

எனக்குப் புரட்சி நடிகர் என்ற பட்டம் அளித்தபோதே கலைஞர் அவர்களைப்பற்றி நான் சொன்னது – திருவாரூர் மு. கருணாநிதி என்ற சொற்களை தி. மு. க. என்று விளக்கிக் கூறி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அவருக்கும் தொடர்பு உண்டு என்று சொன்னேன்.

இன்று டாக்டர் கலைஞர் அவர்களே என்று குறிப்பிடு கிறேன் என்றால், ஏற்பட்டிருக்கின்ற பெரிய மாற்றத்தை – சிறப் பான வளர்ச்சியை பார்க்கவேண்டும். கல்லக்குடி போராட்டத் தில் தன் உயிரையே பணயமாக வைத்தவர் கலைஞர் அவர்கள். அன்று உயிரையும் பணயமாக வைத்துப் போராடிய கலைஞர் தான் இன்று கழகத்தின் தலைவர். இறந்தாலும் லட்சியத்தோடு – கொள்கையோடுதான் நாம் இறக்கப் போகிறோம். மிகப்பெரிய பொறுப்பு நம்மிடம் இருக்கிறது. கழகத்தை வளர்ப்பதற்காக என்றென்றும் பாடுபடுவோம்.''

—இப்படி விழாக்கள், நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டிருந்த எம். ஜி. ஆர். அவர்கள் மதுரையில் நண்பர் முத்து அவர்கள் 1972 ஆகஸ்டில் நடத்திய கழக மாநாட்டில் கலந்து கொண்டபோது ஒரு வீரமிக்க உரையே ஆற்றினார்.

# 49

## கட்டுப்பாடு மீறிய காரியங்கள்

**1972** ஆகஸ்டு 5, 6 ஆகிய நாட்களில் மதுரை மாவட்ட மாநாடு முரசொலி மாறன் தலைமையில் நடைபெற மாவட்டச் செயலாளர் நண்பர் மதுரை முத்து அவர்களால் ஏற்பாடுகள் தொடங்கப் பட்டன. மாநாட்டின் திறப்பாளர், மாணவர்களை இந்தி ஆதிக்கத்திற்கு எதிராகத் தட்டியெழுப்பிய அடலேறுகளில் ஒருவரான எல். கணேசன். அந்த மாநாட்டுக்குச் சில நாட்களுக்கு முன்பு கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கள் என்னை வந்து வீட்டில் சந்தித்தார். அந்தச் சந்திப்பில் அவர் முக்கியமாக ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினார்.

அவருடன் படங்களில் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணியைக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்க்க விரும்புவதாகவும், அந்தப் பெண்மணி மதுரை மாநாட்டுக்கு வரவேண்டுமென்றும்; மாநாட்டு மேடையிலேயே அந்தப் பெண் மணிக்கு முன்வரிசையில் இடம்தரவேண்டுமென்றும், அதுகுறித்து மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் மதுரை முத்து அவர்களுக்கு கழகத் தலைவர் என்ற முறையில் நான் கட்டளையிட வேண்டு மென்றும் எம்.ஜி.ஆர். வலியுறுத்தினார்.

"ஏ, அப்பா! திராவிடர் இயக்கம் இதையெல்லாம் தாங்காது-கொஞ்சம் பொறுமையாக இருந்து சிந்தியுங்கள்!" என நான் அவரிடத்தில் விளக்கமளித்தேன்.

"நண்பர் முத்து அவர்களை உங்களுக்குத் தெரியாதா என்ன--உங்களுக்குத் தங்க வாள் பரிசளிப்பு விழா நடத்திய வராயிற்றே; அதனால் அவரிடமே இதுகுறித்துப் பேசுங்கள். அவரும் என்னைப்போலவேதான் கருத்து சொல்வார். ஒத்துக் கொள்ள மாட் ார்!" என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தேன்.

எம்.ஜி.ஆர். அவர்கள் பிரச்சினையை அத்துடன் விடாமல் மதுரை முத்து அவர்களுக்கே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரிடம் பேசியிருக்கிறார். முத்து அவர்கள் எம். ஜி. ஆரிடம் மிகவும் கண்டிப்பாக "அப்படியெல்லாம் யாரை யும் அழைத்து வந்து மேடையில் உட்காரவைப்பதென்றால் அவர்களை மாநாட்டுப் பந்தல் முகப்பிலே நிறுத்திவிடுவேன்—

அனுமதிக்க மாட்டேன்!" என்று கூறிவிட்டார். எம். ஜி. ஆரின் அந்த யோசனைக்கு இலட்சிய நடிகர் என அழைக்கப்படும் எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்களும் மிகக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து விட்டார்.

தலைமைக் கழக அளவில் நானோ, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களோ, பேராசிரியர் போன்றவர்களோ எம்.ஜி.ஆரின் அந்த வேண்டுகோளை ஏற்காத நிலையிலும்—கழக முன்னணித் தளபதிகளான மதுரை முத்து போன்றோர் கடுமையாக எதிர்த்த நிலையிலும் எம். ஜி. ஆர். அவர்கள் அந்தப் பெண் மணியாம் கதாநாயகி நடிகையை மதுரை மாநாட்டுக்கு அழைத்து வருகிற எண்ணத்தைக் கைவிட்டு விட்டார்.

ஆனாலும் அவர் மனத்தில் ஏற்பட்ட ஏமாற்றம்; வெறுப் புணர்வின் வடிவம் கொண்டு விட்டது என்றே அவரது பிற்கால நடவடிக்கைகள் எடுத்துக் காட்டின.

சினிமாப் படங்களில் நடித்துக் கொண்டே அமைச்சராக வேண்டுமென்றார். படங்களில் நடிப்பதை நிறுத்திக்கொண்டு அமைச்சராவதில் எந்தத் தடையுமில்லையென்று கூறினேன். அதன் காரணமாகவும் அவர் உள்ளத்தில் புகைச்சல் இருந்தது.

அதைத் தொடர்ந்து மதுரை மாநாட்டிலும் அவரது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டதால் மேலும் கோபம் கொண்டிருந்தார்.

இதற்கிடையிலேதான் கழகத்தில் பிளவு ஏற்படுத்த மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் எம். ஜி. ஆர். அவர்களைப் பயன்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டார்.

மத்திய அமைச்சர்களுக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் இடையே இருந்த சில ரகசியத் தொடர்புகளைப் பற்றி கழகப் பிரமுகர்களில் ஒருவரான சேலம் மாவட்டக் கழக அவைத் தலைவர் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் அவர்கள் சென்னை மயிலாப்பூரில் உள்ள அவரது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதி அதனை எதிர்க்கட்சிப் பத்திரிகையொன்றில் வெளியிடுமாறு குறிப்பிட்டிருந்தார்.

ரகசியத் தொடர்பு என்பது அந்நியச் செலாவணிச் சிக்கல், வருமான வரிச் சிக்கல் போன்றவைகளாகும். எஸ். எஸ். எம். சுப்பிரமணியத்துக்கும் எம். ஜி. ஆருக்கும் இருந்த பகையில் அவர் அப்படியொரு கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதம் எப்படியோ வெளியாகி எங்கள் கைக்கு வந்து சேர்ந்தது. எஸ். எஸ். எம். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த ரகசியத் தொடர்பு மர்மங்கள் உண்மையானவைதான் என்பதை காலதாமதமாகத்தான் எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது!

இருப்பினும் அந்த ரகசியத்தைக் கழகத் தலைமைக்குத் தெரிவிக்காமல் எதிர்க்கட்சி ஏட்டில் செய்தி பரப்பிட எஸ். எஸ். எம். அவர்கள் முயன்றது தவறு என்று அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. 14–6–72 அன்று சென்னையில் நடைபெற்ற கழகத் தலைமைச் செயற்குழுவில் அது குறித்து எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. கடிதம் எழுதியதை அவர் ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்கள் குறுக்கிட்டு, ''கட்சியில் நான் இருக்க வேண்டுமா? எஸ். எஸ். எம். இருக்க வேண்டுமா?'' என்பதை முடிவு செய்யுங்கள் என்று பேசினார். அவரது வற்புறுத்தலின் காரணமாகப் பின்வரும் தீர்மானத்தைச் செயற்குழு நிறைவேற்றியது.

''கழகக் கட்டுப்பாட்டுக்குப் புறம்பாக சேலம் மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் நடந்து கொண்டது பற்றிக் கூறப்பட்ட புகாரைச் செயற்குழு விசாரித்தது. அந்த விசாரணையின்போது திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் தந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை என்ற காரணத்தாலும், அவர் தனது குற்றங்களை ஏற்றுக் கொண்ட காரணத்தாலும், அவரைக் கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பு உட்பட எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் ஐந்தாண்டு காலத்திற்கு விலக்கி வைப்பதென்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.''

எம். ஜி. ஆர். மீது எஸ். எஸ். எம். அவர்கள் ஒரு அபாண்டத்தைக் கூறி, அதனையும் எதிர்க்கட்சி ஏட்டிலே வெளியிட முயற்சித்தார் என்றுதான் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் நம்பினர். கால ஓட்டத்திலேதான் அந்தக் குற்றச் சாட்டு அபாண்டமில்லை – உண்மையானது என்பது அனைவருக்கும் தெளிவாயிற்று. ஆனால் அந்த நேரத்தில் யாருக்கும் உண்மையொன்று மர்மமான இருட்டில் மறைந்து கொண்டிருந்தது தெரியாமல்தான் போய்விட்டது.

ஜூன் மாதத்தில் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஆகஸ்டில் மதுரை மாநாடு!

அந்த மாநாட்டில் கலந்து கொண்டார் எம். ஜி. ஆர். ஆனால் அவர் எண்ணம் ஈடேறாத மனக் குறையுடன் கலந்து கொண்டார்! பின்னணியில் மத்திய அரசின் மிரட்டல்கள்! எங்களுக்கு இதெல்லாம் அப்போது இவ்வளவு அப்பட்டமாகத் தெரியாது! ஏதோ எங்கிருந்தோ ஒரு சதி உருவாகிறது என்பது மட்டும் மின்னல் கீற்றுப் போலத் தெரிந்ததே தவிர, விவகாரங்கள் முழு வெளிச்சத்திற்கு வரவில்லை.

துரோகம் செய்யத் துணிந்து விட்டவர்கள், தங்களைப் பூரணமான விசுவாசிகளாகக் காட்டிக் கொள்வார்கள் அல்லவா? ஏசுநாதருக்குத் துரோகம் செய்த ஜூடாஸ் கூட அப்படித் தானே கடைசி நேரத்திலும் நடந்து கொண்டான்!

மதுரை மாநாட்டில் எம். ஜி. ஆரின் பேச்சு மத்திய அரசுக்கு எதிரான போர் முழக்கமாக இருந்தது! கழக அரசு தூய்மையானது என்று அழுத்தம் திருத்த'மாகப் பேசினார்! 'காங்கிரசார் இதனை ஊழல் ஆட்சி என்கிறார்களே; ஊழல் ஆட்சியா இது?'' என்று பொதுமக்களைப் பார்த்து மாநாட்டில் கேட்டார்! ''இல்லை! இல்லை! என்ற பதில் முழக்கம் விண்ணைப் பிளந்தது! மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு - இது ஊழல் ஆட்சி அல்ல!" என்று முடிவு கூறினார்.

மிக மிக விசுவாசி போலக் காட்டிக்கொண்ட அவர் மத்திய அரசை எப்படித் தாக்கிப் பேசி-மாநில சுயாட்சிக்காக முரசு கொட்டினார் என்பதையும் பார்ப்போம்! இதோ அந்தப் பேச்சின் ஒரு பகுதி:-

ஏதோ இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்று யாரோ முயற்சி செய்வதாக நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். இதுவரை நான் பேசாத பேச்சை - சொல்லாத சொல்லை இப்போது சொல்லும்படி அவர்கள் தூண்டிவிட்டிருக்கிறார்கள்.

அடுத்து நியாய பூர்வமாக எந்த ஆண்டில் தேர்தல், நடைபெற வேண்டுமோ அப்போது நடவாமல் அதை மீறி இடையில் தேர்தல் நடக்கும் நிலை உருவாக வேண்டும் என்று விரும்புவார்களானால்-மோகன் குமாரமங்கலமோ, சி. சுப்பிரமணியமோ அதற்குத் தூண்டிவிட்டிருந்தால், தாய்மார்களே, பெரியோர்களே, கழகத் தோழர்களே, நீங்கள் அதை அனுமதிக்கப் போகிறீர்களா?

அப்படி ஒரு சூழ்நிலை தோற்றுவிக்கப்படுமானால் மறுவினாடி ராஜூவத்தையே தமிழ்நாடு சந்திக்கும்.

இந்த ஆட்சியை கலைக்க வேண்டுமென்பதற்கு உண்மையான காரணம் என்ன இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கலைஞர் அவர்களிடம் முன்பிருந்த நிமிர்ந்த நடையில்லை; மற்றவர்களுக்காக விட்டுக் கொடுத்து விட்டுக் கொடுத்து பழகிவிட்டார். அவரது உடல்தான் குனிந்திருக்கிறதே தவிர உள்ளம் குனியவில்லை. தன்னை அடக்கிக் கொண்டு அடக்கத்தின் உருவாக இருக்கிறார். தனது மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு யாரையும் ஏளனமாகப் பேசக் கூடாது என்ற அடக்க சுபாவத்தை மேற்கொண்டிருக்கிறார். இதெல்லாம் அண்ணா அவர்கள் நமக்குக் கற்றுத் தந்த பாடம்தான் காரணமாகும்.

எம். ஜி. ஆர். : மாநில சுயாட்சியை...

மக்கள் : அடைந்தே தீருவோம்...

எம். ஜி. ஆர். : தமிழக அரசை...

மக்கள் : காப்போம்! காப்போம்...!

எம். ஜி. ஆர். : கலைஞர் தலைமையில்...

மக்கள் : வழி நடப்போம்...''

இப்படி ஆகஸ்டில் மதுரையில் பேசியவர், செப்டம்பரில் சில கூட்டங்களில் மெல்ல மெல்லத் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், மத்திய அரசின் விருப்பத்தை முடித்து வைக்கவும் தலைப்பட்டார்.

அப்படிச் சில கூட்டங்களில் பேசியபோது கழகத்தினர் திகைத்தனர். பதைத்தனர்.

அக்டோபர் 8-ஆம் நாள் சென்னையில் அண்ணா பிறந்த நாள் விழாவும், எம். ஜி. ஆர். ''பாரத்'' பட்டம் பெற்றமைக்கு பாராட்டு விழாவும் நடைபெற்ற போது ஒரு முடிவுக்கே வந்தவராக முன்னுக்குப் பின் முரணைப் பேசி முடித்தார். அந்தக் கூட்டத்திற்கு மு. அரங்கநாதன், எம். சி. தலைமை வகித்தார். பார்த்தசாரதி, எம். சி., ஆயிரம் விளக்குப் பகுதிச் செயலாளர் ஜார்ஜ், ஆலந்தூர் மோகனரங்கம், கே. ஏ. கிருஷ்ணசாமி, கோவை செழியன், ஆர். எம். வீரப்பன், நாஞ்சிலார், பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசியபின் இறுதியில் பேசிய எம். ஜி. ஆர். கூறியதாவது:-

"திருக்கழுக்குன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் எனக்கு என்ன உணர்ச்சி ஏற்பட்டதோ-என்ன என்ன பேச வைத்தார்களோ-அதே சூழ்நிலையைத்தான் நான் இங்கு காண்கின்றேன்.

அண்ணா அவர்களுடைய உருவச் சிலையை அங்கே திறந்து வைத்துவிட்டு-பேசிவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே அண்ணா அவர்களைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன். அண்ணாவின் அனுமதியோடு நான் பேசுகிறேன்.

யாரோ சொன்னார்கள்-மதுரை முத்து இந்திரா காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள் என்று! நான் கேட்டேன்-முதலமைச்சர் கருணாநிதி இன்றைய தினம் மதுரையில் அவரைப் பாராட்டுவதாக இருந்ததே என்றேன்.

என்னமோ தெரியவில்லை. வியாபாரம் இங்கே நடக்கவில்லை. அங்கேதான் நடக்கும் என்று போய் விட்டதாகச் சொன்னார்கள். விவரம் 15-ந் தேதிக்குப் பிறகுதான் தெரியும். இப்படிக் குழப்பி விடுவதில் சில உண்மைகள் வெளிவரும்.

"எம். ஜி. ஆர். என்றால் தி. மு, க."-"தி. மு. க. என்றால் எம். ஜி. ஆர்." என்று சொன்னேன். உடனே ஒருவர்-நாங்கள் எல்லாம் தி. மு. க. இல்லையா? என்று கேட்டார். நான் சொல்கிறேன். நீயும் சொல்லேன். உனக்கும் உரிமை இருக்கிறது. எனக்கும் உரிமை இருக்கிறது. உனக்கு துணிவில்லாததால் என்னைக் கோழை ஆக்காதே!

உனக்கு துணிவிருந்தால், நான்தான் தி. மு. க. என்று சொல்! நான் மறுக்கவில்லை. நான் 'மட்டும்' தி. மு. க. என்றால் தான் கேள்வி! இதைக்கூட புரிந்துகொள்ளாத தமிழர்கள் கட்சியில் வந்து மாட்டிக் கொண்டார்களே என்பதை நினைத்து அனுதாபப்படுகிறேன்.

இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தேவையற்ற பிரச்சினைகள். மதி பேசுகையில் நான் கலைத்துறையில் பணியாற்றுவதோடு இன்னும் கொஞ்சம் அதிகமாக அரசியலில் பங்கு கொள்ள வேண்டும் என்று சொன்னார்.

இவ்வளவு கொஞ்சமாக அரசியலில் பங்கு கொள்வதையே சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லையே! இன்னும் அதிகமாக ஈடுபட்டால் எல்லோருக்கும் என்ன ஆகுமோ? பரிதாபத்திற்குரியவர்கள்!

முன்பொரு முறை சொன்னேன், காமராசர் அவர்களை தலைவர் என்று! அண்ணாவை வழிகாட்டி என்று சொன்னேன்.

தலைவர்கள் பலர் இருப்பார்கள். இந்தக் கூட்டத்திற்கு அரங்கநாதன் தலைமை வகிக்கிறார். இன்னொரு கூட்டத்திற்கு இன்னொருவர் தலைமை வகிக்கலாம். இப்படித் தலைவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் கட்சிகளுக்குக் கொள்கைகளைத் தருகிற வழிகாட்டி ஒருவர்தான் இருக்க முடியும். இப்போது ஒப்புக் கொள்கிறார்கள்.

அண்ணா அவர்கள்தான் தி. மு. கழகத்திற்கு வழிகாட்டி. காங்கிரசுக்கு மகாத்மா காந்திதான் வழிகாட்டி. இதிலே ஒரு வேறுபாடு அப்போது ஏற்பட்டது.

அப்போதும் இதே மதுரை முத்து 'தூக்கி எறிவோம்' என்று சொன்னார். தூக்கி எறிந்து பழக்கம்! ஆனால் யாரை என்றே தெரியவில்லை.

கழக நண்பர்களுக்குச் சொல்கிறேன். நான் மக்களைச் சந்திக்கிறவனே தவிர, தலைவர்களைத் தேடிப்போய் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளவேண்டிய நிலையில் என் தாயும், தமிழகமும், அண்ணாவும் வைக்கவில்லை.

நான் தொண்டர்களைச் சந்திக்கிறவன். மக்களை நம்புகிறவன். அண்ணா மக்கள் குரலே மகேசன் குரல் என்று சொன்னது மாதிரி மக்களை நம்புகிறவன்.

எனக்கு ஒரு கொள்கை இருந்தது. முன்பு காங்கிரசில் இருந்தேன். அதற்குப் பிறகு நான்கு ஆண்டு காலம் எந்தக் கட்சியிலும் இல்லாமல் அஞ்ஞாத வாசம் இருந்தேன். எந்த அரசியல் கட்சியிலும் என் கொள்கை இருக்கும்.

கடைசியாக 'பணத்தோட்டம்' என்ற அண்ணாவின் புத்தகத்தைப் படித்தபிறகு, அதிலுள்ள பொருளாதாரத் தத்துவங்களை உணர்ந்த பிறகு அதுதான் சரியான பாதை; அண்ணாவின் வழியில் செல்ல வேண்டுமென்று முடிவெடுத்துக் கொண்டு கழகத்திற்கு வந்தவன்.

கவிஞர் கண்ணதாசன் சொல்கிறார்; கருணாநிதி அவர்கள் என்னை கட்சிக்கு அழைத்து வந்தாராம். பாவம்! அண்ணாவை எனக்கு அறிமுகம் செய்தது டி.வி.என். எனக்கும் கருணாநிதிக்கும் விவாதம் ஏற்படும். நான் காங்கிரசைப் பற்றிப் பேசியிருப்பேன். அபேதவாதங்களைப் பற்றிப் பேசியிருப்பேன்.

ஒரு சமயம், கம்யூனிசக் கொள்கைகளை ஏற்று தீவிரவாதியாக இருந்தவன். ரெயில்கள் கவிழ்க்கப்பட்டபோது, அது எனக்குத் தெரிந்திருக்குமோ? என்னவோ?

ஆனால் நேதாஜியைப் பற்றி கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவின் உத்தரவின் பேரில் குறை கூறியதும் என் தொடர்புகளை அறுத்துக் கொண்டேன். இந்தியத்துணைக் கண்டத்தின் அரசியலை இந்தியத் துணைக் கண்டம்தான் தீர்மானிக்க வேண்டு மென்ற கொள்கையை உணர்ந்தேன்.

இப்படி ஒவ்வொரு விதமாக உணர்ந்தபிறகு அண்ணாவின் கொள்கைதான் நாட்டிற்கு மறுமலர்ச்சியைத் தரும் என உணர்ந்து நான் கழகத்திற்கு வந்தவன். அண்ணாவைத் தெரிந்து கொண்டபோது — நெற்றியில் விபூதியைப் பூசிக்கொண்டு செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்ற ஐயா அவர்கள் தலைமையில் நடந்த சீர்திருத்த மாநாட்டில் மேடையில் இரண்டு நாட்களும் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன்.

நான் யாருக்கும் பயந்து கொள்கையை மாற்றிக் கொண்டவன் அல்ல. அப்படிப்பட்ட தேவையும் இல்லை.

தேர்தல் நேரத்தில் தி.மு.கழகத்திற்கு வாக்குத் தாருங்கள்; இன்னின்ன கொள்கையை நிறைவேற்றுவோம் என்று சொன்ன வன் நான்.

அப்படிச் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டு மென்று இப்போது சொல்ல உரிமை இல்லையா?

கழகத்திற்கு வாக்கு தாருங்கள், இன்னின்ன காரியங்களை நிறைவேற்றுவோம், ஊழல் இருக்காது; நேர்மை இருக்கும் என்று சொன்னேனே; அப்படிப்பட்டவைகள் கழகத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புவதற்கு-சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லையா?

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். போய்விடுவார் என்று சொல்ல அவர்களுக்கு அச்சம். யாருக்கோ என்னுடைய கேள்வி உறுத்துகிறது. யாருக்கோ என்னுடைய கேள்வி குழப்பத்தை உண்டாக்குகிறது.

மந்திரிகள் - சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணக்கு காட்ட வேண்டுமென்று சொல்கிறோம். கணக்கு அங்கே காட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் இவர்களின் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்ற கணக்கை தி. மு. கழகப் பொதுக்குழு ஏன் கேட்கக் கூடாது?

ராமச்சந்திரனுக்கு ஒரு பங்களா இருந்தால் அது ஆட்சிக்கு வந்தபிறகு வந்ததா? அதற்கு முன்னால் வந்ததா? இதைக் கேட்கக் கூடாதா? என் மனைவி மீது, உறவினர்கள் மீது பங்களா, சொத்து வந்திருக்குமானால் அது எப்படி வந்தது? மாவட்ட, வட்ட, கிளைக் கழகச் செயலாளர்களுக்கு எப்படி வந்தது?

ராமச்சந்திரன் சினிமாவில் நடிக்கிறான்; சம்பாதிக்கிறான்; நீ சம்பாதித்தால் அதற்கு கணக்குக் காட்டு!

இதை எதிர்க்கட்சிகள் கேட்க வேண்டியதில்லை. நாமே கேட்டுக் கொள்வோம். இந்தத் தீர்மானங்களை பொதுக்குழுவில் கொண்டுவர இருக்கிறேன். மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள் பொதுக்குழுவில் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கிடைக்கவில்லை என்றால் தமிழகம் முழுவதும் இந்தக் கேள்வியைத் தீர்மானமாக உருவாக்குவேன். மக்களைச் சந்திப்பேன்.

மாவட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், பதவிகளில் இருப்பவர்கள் குடும்பத்திற்கு வாங்கியிருக்கிற சொத்துக்கள் இருந்தால் கணக்கு காட்ட வேண்டும். அவைகள் எப்படி வந்தது என்று விளக்கம் சொல்ல வேண்டும்.

பொதுக்குழுவில் நிறைவேற்றி, அதற்காக குழு அமைத்து, அதனிடம் ஒவ்வொருவரும் தங்கள் கை சுத்தமானது என்பதை மக்கள் முன்னால் நிரூபிக்கலாம்.

நிரூபிக்க முடியாதவர்களை மக்கள் முன்னால் நிறுத்தி அவர்கள் தவறு செய்திருந்தால் அவர்களைத் தூக்கி எறிவோம். அண்ணாவின் கொள்கைக்கு மாறு தேடியவர்களை எல்லாம் மக்கள் முன்னால் நிறுத்தி தூக்கி எறிவோம். 15-த் தேதிக்குப் பிறகு சந்திக்கிறேன்.''

சென்னை பொதுக் கூட்டத்தில் எம். ஜி. ஆரின் இந்தப் பேச்சுக்குப் பிறகும் கழகத்தின் ரத்த நாளங்கள் புடைத்தெழாமல் இருக்க முடியுமா? முடியவில்லை! அதன் விளைவு?



# 50

## செயற்குழுவின் சீற்றம்

மதுரையில் இருந்த என்னை, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கழகத்தின் முன்னோடிகள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களின் மனக்குமுறலை வெளியிட்டு உடனடியாக நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் மீது நடிவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நானும் நண்பர் மதுரை முத்து அவர்களும் மதுரையிலிருந்து உடனடி யாகச் சென்னை திரும்பினோம். அக்டோபர் 9-ந் தேதி மாலையிலேயே பல்வேறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் சென்னை நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள். அக்டோபர் 10-ந் தேதி காலை தலைமைக்கழகத்தின் செயற்குழு உறுப் பினர்கள் இருபத்தி ஆறு பேர் கையெழுத்திட்ட ஒரு முறை யீட்டுடன் என்னையும் பொதுச் செயலாளர் நாவலர் அவர் களையும் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் சந்தித்தார்கள். தலைமைக்கழகத்தின் மிகப் பொறுப்பு வாய்ந்த குழு செயற்குழு. அந்தக் குழுவில், கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட 31 பேர் உறுப்பினர்கள். அவர்களில் 26 பேர் என்னையும் நாவலரையும் நெருப்புப் பொறி பறக்கும் கண்களுடன் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் எங்களிடம் அளித்த முறையீடு வருமாறு :-

அண்மையில் சில நாட்களாகக் கழகப் பொருளாளர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கழக சட்டத்திட்டத்திற்கு மாறாகவும், கழக அரசையும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மாவட்ட, வட்ட, கிளைக் கழகச் செயலாளர்களையும் குற்றம் சாட்டும் முறையில் கழகத்தையே இழிவுபடுத்திப் பேசி வருவ தாலும், கழகச் செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் மட்டுமே பேசக் கூடியதும், மறுக்கப்படக் கூடியதுமான பிரச்சினைகளைப் பொது மேடையில் பேசி பொதுமக்களிடையே குழப்பம் விளைவித்து வருகிறார். மேலும் கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவில் மதுவிலக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆதரித்துப்பேசி, அந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறை வேற்றுவதற்கு ஒத்துழைத்திருந்தும் இப்போது அதனை எதிர்த்துப் பேசி வருகிறார். மேலும் கழகப் பொதுக்குழுவிலும் செயற் குழுவிலும் அவர் ஒரு தீர்மானத்தை கொண்டுவரப் போவ

தாகவும் அந்தத் தீர்மானத்தைப் பொதுக்குழு ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர் பொது மக்கள் முன்னுல் சென்று — பிரச்னையை எடுத்து வைத்துக் கழகத்தைச் சந்திப்பேன் என்றும் பேசியிருக்கிருர்.

அவருடைய இந்தப் போக்கு, கழக அமைப்பையும், பொதுக்குழுவையும் நமது ஜனநாயக முறையையும் இழிவுபடுத்துவதாக உள்ளது. ஆகவே கழகக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றவும் விதிமுறைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் அவர் மீது உடனடியாகத் தக்க நடவடிக்கையை எடுக்கப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிருேம்.''

—இந்த முறையீட்டில் கையெழுத்திட்டவர்கள் திரு.டி.கே. சீனிவாசன், திரு. மதுரை முத்து, திரு, ஈ. ஆர். கிருஷ்ணன் திரு. க. ராசாராம், திரு. ப. உ. சண்முகம், திரு. கே. டி. எஸ் மணி, திரு. நீலநாராயணன், திரு. எஸ். ஏ. இராசமாணிக்கம், திரு. எம். செல்வராஜ், திரு. எச். எல். முருகேசன், திரு. தோப்பூர் திரு வேங்கடம், திரு. எஸ். எஸ். தென்னரசு, திரு. அழகியநம்பி திரு. எம். எஸ். வெங்கடாசலம், திரு. இரா. இராசன், திரு. சாதிச் பாட்சா, திருமதி. சத்தியவாணிமுத்து, திரு: க. அன்பழகன் (பேராசிரியர்) திரு. அன்பில் தர்மலிங்கம், திரு. மன்னை நாராயணசாமி, திரு. என். வி. நடராசன், திரு. பரூக் மரைக்காயர் (புதுவை முதல்வர்), திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திரு. து. ப. அழகமுத்து, திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் திரு. சி. வி. எம். அண்ணுமலை ஆகியோர் ஆவார்கள்.

முறையீட்டை எங்களிடம் அளித்ததோடு மாத்திரமல்லாமல் உடனடியாக எம். ஜி. ஆர். அவர்களைக் கழகத்திலிருந்து அறவே விலக்க வேண்டுமென்றும் செயற்குழு உறுப்பினர்களின் பெரும் பகுதியினர் வாதாடினுர்கள். சூடு பறக்கும் விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே நாவலர் அவர்களும், திரு. என். வி. என். அவர்களும் ஓர் அறிக்கையை சுருக்கமாகத் தயாரித்து எங்களிடம் படித்துக் காட்டினர்.

''தலைமைக் கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கள், அண்மைக்காலத்தில் கழகக் கட்டுப்பாடுகளை மீறியும், கழகத்திற்குக் களங்கம் ஏற்படும் வகையிலும் தொடர்ந்து தன்னுடைய நடவடிக்கைகளின் மூலம் செயல்பட்டு வருவதால் அவர் இன்று முதல் கழகப் பொருளாளர் பொறுப்பிலிருந்தும் மற்றும் கழகத்தின் சாதாரண உறுப்பினர் உட்பட எல்லாப் பொறுப்புகளில் இருந்தும் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிருர்.

அவர் பெயரில் விரைவில் முறைப்படி நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.''

நான் அந்த அறிக்கையின் வாசகத்தைக் கேட்டவுடன் சொன்னேன்; ''இப்போதைக்குச் செயற்குழு உறுப்பினர்களின் முறையீட்டை பெற்றுக் கொண்டதாகவும், அது குறித்து எம். ஜி. ஆர். அவர்களிடம் தலைவரும், பொதுச் செயலாளரும் பேசுவதாகவும் முடிவு செய்யப்பட்டதாகப் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்தால் போதுமானது'' என்று.

முதலில் மிக ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருந்த மதுரை முத்து, ஈ. ஆர். கிருஷ்ணன் போன்றவர்கள், என்னுடைய கருத்தை நீண்ட விவாதத்திற்குப் பிறகு ஏற்றுக் கொண்டு, சலிப்புடன்; ''ஏதாவது செய்யுங்கள்'' என்று கூறி அமர்ந் தார்கள்.

நான் உடனே என். வி. என். அவர்களைப் பார்த்து, நிருபர் களை வரச் சொல்லி, சொல்லி அனுப்புங்கள் என்றேன்.

''நிருபர்களிடம் அறிக்கையை கொடுத்து விட்டேன். அவர்கள் போய்விட்டார்கள்'' என்றார் என். வி. என்.

''ஏன் கொடுத்தீர்கள்? அறிக்கையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போதே யார் கொடுக்கச் சொன்னது?"

—என்று வழக்கமாக என். வி. என். அவர்களிடம் காட்டும் உரிமை உணர்வோடு கோபித்துக் கொண்டேன்.

''நாவலர்தான் கொடுக்கச் சொன்னார்!'' என்றார் என். வி. என்.

''என்ன நாவலர்?" என்று நான் நாவலரைப் பார்த்தேன்.

''ஆமாம்—நான்தான் கொடுக்கச் சொன்னேன். நீங்கள் திடீரென்று மாறி இப்படி ''சாப்ட்'' (Soft) ஆகிவிடுவீர்கள் என்று எதிர்பார்த்துத் தான் உடனே கொடுக்கச் சொல்லி விட்டேன்!'' என்றார் பொதுச்செயலாளர் நாவலர்.

அதைக் கேட்டதும், பெரும்பாலான செயற்குழு உறுப் பினர்கள் கரவொலி செய்தனர்.

''கழகக் கட்டுப்பாட்டை யார் மீறினாலும் அவர்களை மன்னிக்க முடியாது!'' என்று உரத்த குரலில் நாவலர் அவர்கள் முழங்கினார். அவர் முகம் கோபத்தால் சிவந்திருந்தது.

பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்களும், பொதுச் செயலாளர் நாவலரும் ஒரு முடிவுக்கு வந்த பிறகு அதற்குக் கட்டுப்பட வேண்டியதுதானே எனது கடமை!

அடுத்து, சிறிது நேரத்திற்கெல்லாம் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எம். ஜி. ஆர். அவர்களுக்கு, விளக்கம் கேட்கும் கடிதம் ஒன்றை அனுப்பினர். அந்தக் கடிதம் வருமாறு:-

"கழகத்தின் முன்னணித் தோழர்களில் ஒருவராகவும் கழகப் பொருளாளர் என்ற பொறுப்பிலும் உள்ள தாங்கள், அண்மைக்காலமாகக் கழகக் கட்டுப்பாடு—ஒழுங்கு முறைகளை மீறியும், கழகத் தோழர்களிடையே பிளவு உருவாக்கும் முறையிலும், கழகத்தின் கண்ணியத்துக்குப் பொதுமக்களிடையே இழுக்கு ஏற்படும் வகையிலும், கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையிலும் தாங்கள் செயல்படுவதும் பேசி வருவதும் கழகத்தின் பல்வேறு பொறுப்பிலுள்ள தோழர்களால் தலைமைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கழகத் தலைமைச் செயற்குழு-பொதுக்குழுக் கூட்டங்களில் முறைப்படி பேசி விவாதிக்க வேண்டிய கருத்துக்களை தாங்கள் வெளிப்படையாகப் பேசுவதுடன், அவை, கழகத்திற்கு எதிரானதும் ஊறு செய்யக் கூடியதுமான வகையில் இதழ்களில வெளிவரும் நிலைமைகளையும் உருவாக்கி வருகிறீர்கள். பல இதழ்களிலும் பரவலாக நாள்தோறும் வெளியிடப்படும் தங்கள் முறைகேடான பேச்சுக்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது தலைமைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

மதுவிலக்குக் கொள்கை பற்றிக் கோவையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழு ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. இதனைத் தாங்களும் உடனிருந்து நிறைவேற்றி யிருப்பதுடன், அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகத் தாங்கள் விளக்கமாகப் பொதுக்குழுவில் பேசியுமிருக்கிறீர்கள். இந்தத் தீர்மானத்தின் பேரில் கழகமும் கழக அரசும் மேற்கொண்ட செயல்முறைகளைத் தாங்கள் இத்தனை நாள் கழித்து பகிரங்கமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறீர்கள். இது, கழகக் கட்டுப்பாட்டையும், பொதுக்குழுவின் முடிவின் பேரிலும் கழகமும் கழக அரசும் மேற்கொண்ட செயல்முறைகளை அவதூறாகப் பேசுவதாகவும் அமைவதாகத் தலைமைக்கழகம் கருதுகிறது.

மேலும் 8—10—72 அன்று சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் தாங்கள் ஒரு தீர்மானம் தாக்கல் செய்யப் போவதாகவும், அந்தத் தீர்மானம் பொதுக்குழுவில் நிறைவேருமற் போகுமானுல், அந்தத் தீர்மானத்தைப் பொது மக்கள் முன்னிலையில் வைத்து, மூலைக்கு மூலை பிரச்சாரம் செய்து வெளியில் ஆதரவு திரட்டப் போவதாகவும் பேசியிருக்கிறீர்கள். பொதுக்குழுவில் எந்த ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கும் அதன் உறுப்பினரான யாருக்கும் முழு உரிமை உண்டு. ஆனால், அப்படிக் கொண்டு வரும் தீர்மானம் நிறைவேருமற் போகுமானல், பொதுக்குழுவின் முடிவுக்குக் கட்டுப்படவோ அடங்கவோ மறுத்து அதே தீர்மானத்தை பொதுமக்களிடையில்—அதாவது கழகத்துக்கு வெளியே—வலியுறுத்துவேன்—ஆதரவு தேடுவேன் என்று பகிரங்கமாகத் தங்களைப் போன்ற முக்கியப் பொறுப்பில் உள்ள தோழர் அறிவிப்பது கழகக் கட்டுப்பாடு—ஒழுங்கு முறை—கழகம் வளர்க்க விரும்பும் ஜனநாயக அடிப்படை ஆகியவைகளைப் புறக்கணிக்கத் துணிந்துவிட்ட செயலாகவே கருத வேண்டியிருக்கிறது.

மேலும் இவை போன்று அடிக்கடி தங்களால் கழக நன்மைகளுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பேசப்பட்டு வரும் கருத்துக்கள், கழகத் தோழர்களிடையில் கட்டுப்பாடு இன்மையும் பொதுமக்களிடையில் கழகத்தைப் பற்றித் தவருன இழிவான எண்ணமும் உருவாக ஏதுவாகிறது என்று தலைமைக் கழகம் கருதுகிறது.

எனவே, இவை போன்ற காரணங்களாலும், கழகத் தோழர்களிடையே குழப்பமும், பொதுமக்களிடையே கழகத்திற்கு இழுக்கும் நேர்வதைத் தடுக்கும் வகையில் தங்களை இன்று முதல் கழகப் பொருளாளர் பொறுப்பு மற்றும் சாதாரண உறுப்பினர் பொறுப்பு உட்பட கழகத்தின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்ட்) வைப்பதுடன், மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே தங்களை ஏன் அறவே கழக்கத்திலிருந்து நீக்கக்கூடாது என்பதற்கும் இந்தக் கடிதம் கிடைத்த பதினைந்து நாட்களுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தாங்கள் தெரிவிக்க விரும்பும் விளக்க-சமாதானங்களை தெரிவிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

(ஒ—ம்) இரா. நெடுஞ்செழியன்,<br>
பொதுச்செயலாளர். தி. மு. க,

முன்கூட்டி அறிவித்திருந்தபடி கழகத்தின் இதயம் போன்று விளங்குகிற செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள் அக்டோபர் 12-ஆம் நாள் சென்னையில் தொடங்கின. இதற்கிடையே நாஞ்சில் மனோகரன் (நாஞ்சிலார்), முரசொலி மாறன் ஆகிய இருவரும் எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்துக் கழகத்தில் பிளவு ஏற்படுத்தாமல் ஒன்றுபட்டுப் பணியாற்றிட வழி காணுமாறு வலியுறுத்தினார்கள்.

அந்த அடிப்படையில் அக்டோபர் 12 செயற்குழுவில் பேசிய நாஞ்சிலார் அவர்கள், "எம்.ஜி.ஆர். பொதுக்கூட்டத்தில் பேசிய கருத்து தவறுதான் என்றாலும் அதற்காக அவர் வருத்தம் தெரிவித்துக் கொள்வதாக இருந்தால் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பற்றி செயற்குழு யோசிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொண்டு அவ்வாறு எம். ஜி. ஆர். அவர்கள், செயற்குழுவினரிடமும் பொதுக்குழுவினரிடமும் வருத்தம் தெரிவிப்பதற்கு ஒரு நாள் அவகாசம் தரலாம் என்றும் குறிப்பிட்டேன். இறுதியாக செயற்குழு உறுப்பினர்களும் அந்தக் கருத்துக்கு ஒப்புதல் தந்தனர்.

ஆனால்...நடந்தது என்ன?



# 51

## வேறு வழியில்லை; விலக்கப்பட்டார்!

அக்டோபர் 13-ஆம் நாள் காலையில் நாஞ்சிலார் என்னை வந்து சந்தித்தார். அப்போது என்னுடனிருந்த கோ. சி. மணி, நாஞ்சிலாரின் சமாதான முயற்சி தேவையில்லையென்று கோபாவேசமாகப் பேசினர். நான் கோ. சி. மணியை அமைதிப் படுத்தினேன். எம். ஜி. ஆருடன் நெருங்கிப் பழகி அவரது பட நிறுவனத்தில் முக்கிய பணியாற்றிவந்த ஆர். எம். வீரப்பனும் என்னை வந்து சந்தித்தார். எம். ஜி. ஆர் போக்கு தவருனது தான் என்பதை ஒப்புக்கொண்ட வீரப்பன், எப்படியும் சமரசத் திற்கு வழி இருக்கிறது என்ருர் அப்போது மதுரைமுத்து வந்து விட்டார். அவர் மிகுந்த ஆவேசத்துடன் பேசினர். நான் மிகச் சிரமப்பட்டு அமைதியை ஏற்படுத்தி, நாஞ்சிலாரிடத்திலும் வீரப்பனிடத்திலும் எம். ஜி. ஆர். அவர்களிடம் பேசி சமரச முயற்சியில் வெற்றி பெற்ருல் எனக்கு மகிழ்ச்சிதான்; வரவேற் கிறேன் என்று கூறினேன்.

அன்று பிற்பகல் நாஞ்சிலார், முரசொலி மாறனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இருவரும் சென்று எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்தால் நல்ல முடிவு ஏற்படும் என்று கூறினர். மாறன், என்னிடம் கருத்து கேட்கவே-நானும் அதற்கு ஒப்புதல் அளித்தேன். இருவரும் சென்று எம்.ஜி.ஆரிடம் பேசினர்கள். வலிமை பெற்றுத் திகழ்கிற ஒரு பெரும் இயக்கத்தைப் பிளந்து சீர்குலைத்துவிடக் கூடாதென்று இரு வரும் எடுத்துக் கூறியிருக்கிருர்கள். இறுதியாகத் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து பொதுச்செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதுவதாக எம். ஜி. ஆர். ஒப்புக்கொண்டிருக்கிருர்.

ஆனல் அப்படியொரு கடிதம் எழுதத் தொடங்குவதற்குள் தொலைபேசி மணி அடித்திருக்கிறது. எம். ஜி. ஆர். எடுத்துப் பேசியிருக்கிருர். யார் பேசினர்கள்; என்ன பேசினர்கள் என்று தெரியாது! அது எம்.ஜி.ஆருக்கு மட்டுமே தெரியும்! மறுமுனையில் இருந்தவர்கள் சமரச முயற்சியை முறித்துவிட்டார்கள் என்பதும் எம். ஜி. ஆரைத் தங்கள் வலையிலிருந்து மீளவொட்டாமல்

ஆக்கிவிட்டார்கள் என்பதும் அடுத்த விநாடியே நாஞ்சிலாருக்கும், முரசொலி மாறனுக்கும் புரிந்துவிட்டது.

தொலைபேசி ரிசீவரைக் கீழே வைத்தவுடன் எம்.ஜி.ஆர்., பொதுச் செயலாளர் நாவலருக்கோ அல்லது செயற்குழு பொதுக்குழுவுக்கோ வருத்தம் தெரிவிக்கும் கடிதத்தைத் தர இயலாது என்றும் நடந்தது நடந்ததுதான் என்றும் மறு பரிசீலனைக்கே இடமில்லையென்றும் இருவரிடமும் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். ஒரு நொடியில் எண்ணத்தை மாற்றிக் கொண்ட எம். ஜி. ஆரின் செயலைக் கண்டு வியப்பும் வேதனையுமுற்ற நாஞ்சிலாரும் மாறனும் நேரே செயற்குழுவுக்கு வந்து நடந்ததை விளக்கினார்கள்.

வேறு வழியில்லாமல் கழகக் கட்டுப்பாடு காக்கும் நோக்கத்துடன் செயற்குழு, பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

"கழக நலனுக்காக எம். ஜி. ஆர். அவர்கள் வருத்தம் தெரிவித்து கழகம் பணியில் ஈடுபட வாய்ப்பு அளித்தும்கூட, அவர் அதனைப் பயன்படுத்திக்கொள்ளாதது வருந்தத்தக்கதாகும். எனவே அவர்; கழகத்தின் ஒழுங்குமுறைகள் குலையும் அளவுக்கு நடந்து கொண்டதற்காக பொதுச்செயலாளர் அவர் மீது கழகசட்ட திட்டவிதி 31-ன்படி எடுத்துள்ள நடவடிக்கையை இந்தச் செயற்குழு ஒருமனதாக ஏற்றுக்கொண்டு இந்தத் தீர்மானத்தைப் பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்கிறது."

மறுநாள், பொதுக்குழு கூடியது. அன்று காலை பெரியார் அவர்கள் அளித்திருந்த செய்தியாளர் பேட்டியொன்று தினமணி முதலிய ஏடுகளில் வெளிவந்திருந்தது. அந்தச் செய்தியில் பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருந்ததாவது:

"நேற்று (12 - 10 - 72) என்னைச் சந்தித்த சில பிரமுகர்கள் நான் தலையிட்டு சமரச முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதன்பேரில் நான் எம். ஜி. ஆரைக்கூப்பிட்டு அனுப்பினேன். அவர் இன்று காலை (13 - 10 - 72) ஒன்பது மணிக்கு என்னை வந்து சந்தித்தார். "பிறர் பரிகாசம் செய்வார்களே; இது ஏன் இப்படி நடந்தது? நடக்கலாமா?" என்று எம். ஜி. ஆரிடம் கேட்டேன். "என்மீது தவறு இல்லை. தி. மு. க. தலைமைதான் சரியாக நடந்து கொள்ளவில்லை" என்று அவர் பதில் சொன்னார். "பொது மேடையில் பகிரங்கமாகக் குற்றம் சாட்டி நீங்கள் பேசியது சரியல்ல என்றுதான் நானும் கருது

கிறேன். கட்சிக் கட்டுப்பாடு, ஆட்சி நலன் கருதியாவது நீங்கள் சொன்னதை வாபஸ் பெற்று வருத்தம் தெரிவிப்பது நல்லது என்பதே என் அனுபவம். அப்படிச் செய்யுங்கள்!'' என்று எம். ஜி. ஆருக்கு நான் அறிவுரை கூறினேன். அவர், தன்னுடைய நிலையை விளக்கி, என்னுடைய யோசனையை நண்பர்களுடன் கலந்து பேசி ஆலோசித்து முடிவு செய்வதாக பதில் சொல்லிவிட்டுச் சென்றார். எம். ஜி. ஆரிடம் என் யோசனையைக் கண்டிப்பாகவே நான் சொன்னேன். ஏன் தகராறு செய்து கொள்கிறீர்கள் என்று கேட்டேன். தாமிரப் பத்திர விருதை என்னிடம் நேரில் வழங்குவதற்காக முதலமைச்சர், இன்று காலை 11 மணிக்கு என்னைச் சந்தித்தார் கட்சி ஒற்றுமை, ஆட்சி நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கட்சி பிளவு படாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று முதலமைச்சரிடம் கேட்டுக் கொண்டேன். என் யோசனையை அவர் ஏற்றுக் கொண்டார்.''

பெரியார் அவர்களின் இந்த அறிவிப்பு அக்டோபர் 14-ந் தேதி ஏடுகளில் வருவதற்கு முன்பு 13-ந் தேதி அவர் என்னிடம் நேரில் கூறியவாறுதான் நாஞ்சிலாரையும் மாறனையும் எம்.ஜி.ஆர். அவர்களிடம் சமரச முயற்சியில் ஈடுபடுவதற்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் எடுத்த முயற்சி இறுதிக் கட்டத்தில் எப்படித் திசை மாறிக் கவிழ்ந்தது என்பது குறித்து செயற்குழுவில் இருவரும் அறிவித்தார்கள்.

செயற்குழுவைத் தொடர்ந்து மறுநாள் பொதுக்குழு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது எம். ஜி. ஆர் கூறியதாக ஒரு செய்தி "சுதேசமித்திரன்" தினசரி இதழில் வெளியாகியிருந்தது. "கழகத்திலிருந்து நிரந்தரமாகத் தன்னை நீக்கினால் தி. மு. க. தலைவர்களின் ஊழல்கள் அம்பலமாகும்'' என்று எம். ஜி. ஆர். அறிவித்ததாக அந்தச் செய்திக்கு தலைப்பு தரப்பட்டிருந்தது.

அந்தச் செய்திக்குத் தன்னுடைய மறுப்பைத் தந்தி மூலம் அந்தப் பத்திரிகைக்கு எம். ஜி. ஆர். தெரிவித்துவிட்டு, அந்தத் தந்தியின் பிரதிகளை எனக்கும் நாவலருக்கும் அனுப்பி யிருந்தார்.

அந்தத் தந்தியாவது, "தங்கள் பத்திரிகையில் இன்று வெளியாகியிருக்கும் முதல் பக்கத் தலைப்பையும் அதற்குரிய செய்தியையும் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். கழகத் தலைவர் களைப் பற்றியோ, கழகத்தைப் பற்றியோ, கழக உறுப்பினர்

களைப் பற்றியோ நான் அவ்வாறு கூறவில்லை. உடனடியாக இதர ஏடுகள் வெளியிட்டதுபோல் நான் சொன்னதைப்பற்றி சரியான செய்தியை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

இதிலிருந்து என்ன புரிகிறது? மதுரை மாநாட்டில் அவர் பேசிய போதும், கடைசியாக "சுதேசமித்திரன்'' செய்திக்கு மறுப்பு தெரிவித்தபோதும் தி. மு. க. வில் ஊழல் என்பதற்காக அவர் இப்படியெல்லாம் கட்டுப்பாடு கடந்து நடக்கவில்லை யென்பதும், அவரது சொந்த விவகாரங்கள் காரணமாக ஆட்டு விக்கப்பட்டார் என்பதும், அதனால் ஏற்பட்ட விளைவுகள்தான் அவரது முரண்பட்ட நடவடிக்கைகள் என்பதும் தெளிவாகி விட்டன!

எம். ஜி. ஆர். மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளு மாறு செயற்குழு நிறைவேற்றிய பரிந்துரைத் தீர்மானம் பொதுக்குழுவில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. மொத்தம் 310 பொதுக்குழு உறுப்பினர்களில் கூட்டத்தில் கலந்து கொண் டோர் 277 உறுப்பினர்கள்! அந்த 277 உறுப்பினர்களும் செயற் குழுவின் முடிவை ஒருமனதாக ஆதரித்து நிறைவேற்றினர்.

அந்த நிகழ்ச்சி குறித்து யு.என்.ஐ. என்ற செய்தி நிறுவனம் பின்வருமாறு செய்தி வெளியிட்டது:

"எம். ஜி. ஆர். மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்திற்கு 310 பேர்களைக் கொண்ட பொதுக்குழுவில் இன்று வந்திருந்த 277 பேர்களில் எதிர்ப்புக் குரல் ஒன்றுகூட எழவில்லையென்பது பார்வையாளர்களுக்கு வியப்பாக இருந்தது.''

இப்படி ஜனநாயக முறைப்படி ஒரு கட்சி எடுத்த நடவடிக் கைக்கு எதிராக, எம். ஜி. ஆர் பெயரால் உள்ள மன்றத்தினர் ஆங்காங்கு அராஜகம் நடத்திடத் தூண்டிவிடப்பட்டனர். பஸ்கள், லாரிகள் வழிமறிக்கப்பட்டன. கொளுத்தப்பட்டன. பயணிகள் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இந்தச் செய்திகளையெல்லாம் கேள்வியுற்று அக்டோபர் 14-ஆம் நாள் விழுப்புரத்தில் பேசிய பெரியார் அவர்கள்;

"சினிமாக்காரர்கள், ரசிகர்கள் என்ற பெயரால் இப்படி ரகளை செய்கிறார்கள். இதுமாதிரி நடக்குமென்று நான் முன்பே கூறியிருக்கிறேன். தி. மு. க. வில் வெளி ஆட்களால் ரகளை வராது. உள்ளேயிருப்பவர்களால்தான் வருமென்று கூறியிருக் கிறேன். சமரசமாகப் போங்கள் என்று எவ்வளவோ கூறினேன்.

முடியாது என்று எம். ஜி. ஆர். கூறிவிட்டார். கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த கழகக் கொடிகளையெல்லாம் ரசிகர்கள் அசிங்கப்படுத்துவது கேவலமான செயலாகும். இந்த நேரத்தில் அனைவரும் தி. மு. கழகத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும் தி.மு.கழகத்தை ஏன் ஆதரிக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்! சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை முடிந்த வரையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதற்காகத் தான் அவர்களை ஆதரிக்கிறேன். கழக அரசு, பலவிதங்களில் ஏழைகளுக்கு நன்மை செய்து வருகிறது. அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு தேவையான அளவு செய்து வருகிறது''

என்று உணர்ச்சிகரமாக உரையாற்றினார். அக்டோபர் 15–ஆம் நாள் சென்னைக் கடற்கரையில் பொதுக்குழு முடிவுகளை விளக்கி, பொதுச் செயலாளர் நாவலர் தலைமையில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. லட்சக்கணக்கான மக்கள் குழுமி யிருந்த அந்தக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சுருக்கம் இதோ:

''எம். ஜி. ஆர். அவர்கள் கழகத்தின் கட்டுப்பாட்டை மீறிய காரணத்தாலேதான் மிக வருத்தத்தோடு அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று.

சாதாரணமானவர்கள் கட்டுப்பாட்டை மீறினால் கூப்பிட்டுப் பேசியே சரிசெய்து விடலாம். கழகத்தின் முக்கியப் பொறுப்பிலே இருக்கிற எம். ஜி. ஆர். கட்டுப்பாட்டை மீறினால் கழகத்தின் நாணயத்தை – லட்சோப லட்சம் தொண்டர்களின் நல்லுழைப்பை மற்றவர்கள் எப்படி நினைப்பார்கள் என்பதால்' தான் நடவடிக்கை எடுத்தோம்.

ஒரு குவளை தண்ணீர் வெதும்பினால் அண்டா தண்ணீரை ஊற்றலாம். அண்டா தண்ணீர் வெதும்பினால் குளத்து நீரை ஊற்றலாம்; குளமே வெதும்பினால் கடல் தண்ணீரை ஊற்றலாம். கடல் தண்ணீரே வெதும்பினால்?

கட்டுப்பாட்டை மீறுவோர் யாரானாலும் கழகம் நடவடிக்கை எடுக்கும். இவர்மீது நடவடிக்கை எடுக்கா விட்டால் மற்றவர்களுக்கு ஒரு நீதி? எங்களுக்கு ஒரு நீதியா என்று கேட்கமாட்டார்களா?

ஒரு கணவனும் மனைவியும் நடுரோட்டிலே இதைத்தான் பேசலாம்—வீட்டுக்குள்ளே பேசத்தக்கவை இவை இவைதான்

என்பதற்கு வரைமுறை இருக்கிறது. வீட்டு விஷயங்களை எவளும் வீதிக்குக் கொண்டு வரமாட்டாள். அப்படிக் கொண்டு வருபவளை எவனும் மனைவியாக ஏற்றுக்கொள்ள மாட்டான்.

எம். ஜி. ஆருக்கு நம்முடைய கணக்கின்மேல் இதுவரை இல்லாத சந்தேகம் இப்போது வந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், அவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் கணக்கை மன்றத்தில் வைக்க வேண்டுமென்று 69-ஆம் ஆண்டில் சட்டம் நிறைவேற்றியவர் கலைஞர். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத, இந்திரா காந்தியே நிராகரித்த அந்தச் சட்டத்தை நிறைவேற்றி அதன்படி கணக்கும் தரப் பட்டு வருகிறது. ஆனால் எம். ஜி. ஆர்.தான் முதலாண்டு மட்டுமே கணக்குத் தந்தாரே தவிர, கடந்த இரண்டாண்டாகக் கணக்குத் தரவில்லை. 13 தடவை நோட்டீஸ் அனுப்பியுங்கூட தரவில்லை.''

தலைமை உரையை அடுத்துப் பேசிய அம்மையார் அமைச்சர் சத்தியவாணிமுத்து பின்வருமாறு குறிப்பிட்டார் :

''கழகத்தை அழிக்க வேண்டும் என எம். ஜி. ஆர். நினைக்கிறார். ஆனால் தன்னை அறியாமல் கழகத்தை அழிப்ப தாக எண்ணிக்கொண்டு அவர் தன்னையே அழித்துக் கொள்கிறார்.

சம்பத் அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியபோது கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்று நானும் மற்றவர்களும் சம்பத்திடம் சமாதானத்திற்குச் சென்றோம். அதைப் போல இப்போதும் கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். இப்படி தவருகப் பேசி செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் நடவடிக்கை எடுக்கப் பட்டபோது தாம் பேசிய பேச்சுக்கு வருத்தம் தெரிவித்தால் என்ன என்று கேட்க நானும் மற்றவர்களும் சென்றிருந்தோம்.

அமைச்சர்களைப் பற்றி மட்டுமல்ல; கழகத்தின் செயலாளர்களைப் பற்றி எல்லாம் குற்றஞ்சாட்டினீர்களே! யாரை நீங்கள் குறை கூருமல் விட்டீர்கள்? மறுபடியும் கட்சிக்கு வருபவர்களாயிருந்தால் இப்படியெல்லாம் பேசுவீர் களா என்று நான் எம். ஜி. ஆரைக் கேட்கிறேன்.

கழகத் தலைவரும், பொதுச் செயலாளரும் கதவு திறந்தே இருக்கிறது என்றார்கள். ஏன் வருத்தம் தெரிவித்திருந்தால் என்ன? பெரியாரே வருத்தம் தெரிவிக்கச் சொன்னாரே, ஏன் வருத்தம் தெரிவித்திருக்கக்கூடாதா? எங்களைப் பொறுத்தவரை

கழகம் பெரிதா, எம். ஜி. ஆர். பெரிதா என்ருல் கழகம்தான் பெரிது. கழகத்தின் கிளைகளை எல்லாம் மாற்றுங்கள் என்கிருர். அதை மாற்ற நீங்கள் யார்? யாரால் கழகத்தை ரசிகர் சங்க மாக மாற்றி விட முடியும்?

கழகத்தைக் கலைக்க முயற்சி எடுப்பதன்மூலம் அவர் தன்னையே அழித்துக் கொள்ள நினைக்கிருர்.

நாங்கள் எல்லாம் செத்து மடிவோமே தவிர கழகத்தை அழிக்க விடமாட்டோம்.

யார் நினைத்தாலும் கழகத்தை அழிக்க முடியாது.''

இவ்வாறு திருமதி சத்தியவாணிமுத்து ஆவேச உரை நிகழ்த்தினர்.



# 52

## "இதுசத்தியம்" என்ருல்!

சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் மிக வேகமாக எம். ஜி. ஆர். அவர்களைத் தாக்கிய நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நான்கு ஆண்டுகள் கழித்துக் கழக கழக ஆட்சி கலைக்கப்பட்டபிறகு கழகத்திலிருந்து விலகி, "மக்கள் தி.மு.க." என ஒரு கட்சி கண்டு, அந்தக் கட்சியுடன் எம்.ஜி.ஆர். கட்சியில் போய் இணைந்து அங்கே அமைச்சர் பதவி பெற்றுக் கொண்டார்.

அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள், கழக அமைச்சரவையிலிருந்து விலக்கப்பட்ட காரணத்தால் அவர்களும் சில ஆண்டுகளுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். கட்சிக்குச் சென்று ராஜ்யசபா பதவி பெற்றுக்கொண்டார்.

எனது அமைச்சரவையில் இருந்த ராஜாராம், மாதவன் ஆகியோரும் கழக ஆட்சி கலைக்கப்படும் வரையில் பதவியிலே இருந்து எம்.ஜி.ஆர். அவர்களைக் கடுமையாக விமரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். கழக ஆட்சி, மத்திய அரசினுல் கலைக்கப் பட்ட பிறகு கழகம் பல சோதனைகளுக்கு ஆளாகிய நேரத்தில் கழகத்தை விட்டு விலகி நாவலருடன் இணைந்து அவர்களும் எம்.ஜி.ஆருடன் சேர்ந்து கொண்டனர்.

அவர்கள் இருவரும் எம்.ஜி.ஆர். அவர்களை விலக்கியதை நியாயப்படுத்திப் பேசியதை இப்போது நினைவுபடுத்துவது அவசியம்.

இதோ: இன்றைய எம்.ஜி.ஆர். கட்சியின் சபாநாயகர்—அன்றைய கழக அமைச்சர்; நண்பர் ராசாராம் அவர்கள் பேசியது;-

"கழகத்தை விட்டு சம்பக் விலகியபோது மாற்றுக் கட்சிகளும் பல பத்திரிகைகளும் பெரிதுபடுத்தின. ஆனுல் அவரது கதை உங்களுக்குத் தெரியும், அரசியல் வியாபாரத்திற்காக வந்த அவர் அது நடக்காமல் இப்போது கோழி வியாபாரத்தில் இறங்கியிருக்கிருர்.

1971-ல் நடந்த பொதுத் தேர்தலில் நம்மை ஒரு சாதாரண நகைச்சுவை நடிகர் "சோ" எதிர்த்தார், அவரை ஜனசங்கத்தினர்

புதுடில்லிக்கே அழைத்துப் பேசச் சொன்னார்கள். என்ன நடந்தது? அவரால் ஜெயிக்கவா முடிந்தது? என்ன ஆனார் அவர்?

எம்.ஜி.ஆர். இதை எல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு காமராசரின் அரவணைப்பையும் பக்தவத்சலத்தின் பாசத்தையும் சுப்பிரமணியத்தின் அன்பையும் பார்க்கிற போது எம்.ஜி.ஆருக்கு சற்று சுறுசுறுப்பாகத்தான் இருக்கும். ஆனால் அந்தக் கிறுகிறுப்பு நீடிக்குமானால் நிச்சயம் ஆபத்தாகி விடும்.

எம்.ஜி.ஆர். மீது எந்தவிதமான வெறுப்பும் எங்களுக்கு இல்லை. ஆனால் அவரைவிட கழகத்தை நாங்கள் மேலாக மதிக்கிறோம். ரோமாபுரி வரலாற்றில் ஒரு சம்பவம். நான் சீசரை நேசிக்கிறேன்; ஆனால் அதைவிட மேலாக ரோமாபுரியை நேசிக்கிறேன் என்று புரூட்டஸ் சொல்கிறான். அதேபோல்தான் நாங்கள் எம்.ஜி.ஆரை. நேசிக்கிறோம். ஆனால் அவரினும் மேலாக கழகத்தை நேசிக்கிறோம்.

எம்.ஜி.ஆர். ஒரு தனி மனிதர். கழகமோ லட்சோப லட்சம் மக்களால் உருவாக்கப்பட்டது. கழகம் அழிந்தால் தமிழகத்திற்கு வேறு வழி கிடையாது. இதை எல்லாம் மனதிற் கொண்டுதான்—கழகத்தின் நலனைக் கருதித்தான் எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயக ரீதியில் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவை நாடு ஏற்கும்—நல்லவர்கள் ஏற்பார்கள்.

இது ராசாராம் பேசியது! அது மட்டுமல்ல; அண்ணாவின் மருத்துவ சிகிச்சைக்காக எம்.ஜி.ஆர். பண உதவி ராசாராம் மூலமாக அனுப்பியதாக எம்.ஜி.ஆர். பேசியதை மறுத்துப் பின்வரும் ஒரு அறிக்கையும் விடுத்தார். அந்த அறிக்கை இதுதான்:—

"காஞ்சிபுரத்தில் பேசிய எம்.ஜி,ஆர். அவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது தான் செலவுகளைச் செய்ததாத வெளியிட்டு அதில் என் பெயரையும் ஏனோ இழுத்துள்ளார். அந்தச் செய்தியைச் சொன்ன அவர் ஓர் பயங்கரமான செய்தியைச் சொல்வது போல கூறியுள்ளார். அவரது வார்த்தைகள் என்னைத் திடுக்கிட வைத்தன.

கோபத்திலும் ஆத்திரத்திலும் செய்யப்படும் நடவடிக்கைகள், பேசும் பேச்சுகள் அத்தனையும் நிதானம் தவறித்தான் இருக்கும் என்பதை நான் நன்கறிவேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய செய்தியை அண்ணாவின் மகனே வந்து தன்னிடம் சொல்லியதாகவும் அவரைத் தான் நம்பாமல் என்னிடம் பணம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார் எம்.ஜி.ஆர். இப்போதுதான் அவரது எண்ணம் வெளியிடப்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே அண்ணாவின் மகனை நம்பவில்லையாம். காலம் கனிந்தால் ஒருவேளை தான் அண்ணாவையே நம்பவில்லை என்று கூறுவார் போல் தெரிகிறது.

அவர் புதுக்கட்சியின் தலைவர் ஆனதிலிருந்து தி.மு.க.வில் உள்ள அமைச்சர்கள் முதல் கிளைக்கழகச் செயலாளர்கள் வரை கணக்கு கேட்கிறார். அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தது 1969–ஆம் ஆண்டு பெப்ரவரி 3–ஆம் தேதி. எல்லோரையும் கணக்கு கேட்கும் இவர்தான் சொல்கிறாரே, அந்தச் செலவு பற்றி 1969-ஆம் ஆண்டு வாக்கில் அண்ணாவே அப்படிச் சொன்னதில்லை. கலைஞரால் கூட அப்படிச் சொல்ல முடியாது. கழகம் மக்களுடையதாகி விட்டது.

நம்மிடம் அவர் கணக்கு கேட்கிறார். எந்தக் கட்சியிலிருந்து யார் விலகினாலும் இந்தக் கேள்வியைக் கேட்பது வழக்கம்.

காங்கிரசைவிட்டு வெளியேறியபோது பெரியாரிடம் கணக்கு கேட்கப்பட்டது. சம்பத் நம்மைவிட்டு விலகியபோதும் நாவலரைப் பார்த்து கணக்கு கேட்டார். காங்கிரசை விட்டு சுப்பிரமணியம் விலகியபோது காமராசரிடம் கணக்கு கேட்டார். இப்போது நம்மைப் பார்த்து எம்.ஜி.ஆர். கணக்கு கேட்கிறார்.

24 மணி நேரமும் கழகத்திற்காகவே பணியாற்றுகிறார் கலைஞர். —அதனால்தான் நாங்கள் எல்லாம் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவரது படத்தை உடைக்கிறார்கள் அவரது சீடர்கள் — கழகக் கொடியை வெட்டுகிறார்கள். அவர்கள் எல்லாம் கழகத் தோழர்கள்தானும் அவர் சொல்கிறார். யாராவது நம்புவார்களா?"

அடுத்து நண்பர் மதுரை முத்து அவர்கள் பேசியபிறகு, நான் உரையாற்றினேன். எனது உரையை அடுத்த அத்தியாயத்தில் வெளியிடுகிறேன். அதற்கு முன்பு, தமிழரசுக்

கழகத் தலைவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் அவரது "செங்கோல்" பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளை இங்கே குறிப்பிடுகிறேன்.

கொள்கை சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தில் தி.மு.க.வுடன் பூசல் ஏற்படுத்திக் கொண்டுள்ளார் எம்.ஜி.ஆர். இதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கின்றது.

எம்.ஜி.ஆர். தமது தொகுதியில் நடந்த கூட்டமொன்றில் எம்.ஜி.ஆர். மன்றங்கள் மு. க. முத்து ரசிகர் மன்றங்களாக மாற்றப்பட்டு வருகின்றன என்று மிகுந்த வேதனையோடு கூறினார். அவருடைய வேதனையைப் புரிந்துகொண்ட முதல்வர். மு.க.முத்து மன்றங்கள் கலைக்கப்பட வேண்டும்' என்று அறிக்கை விட்டார். அத்துடன் பூசல் முடிந்துவிடுமென நம்பினோம்.

ஆனால் முடியவில்லை. மற்றொரு கூட்டத்தில், வட்டச் செயலாளரிலிருந்து எல்லோரும் கணக்கு காட்ட வேண்டுமென்றார். உண்மையில் முதல்வர் கூறியது போன்று, எம்.ஜி.ஆர். கோருவது இதுவரை உலகில் எந்தக் கட்சியும் கடைப்பிடிக்காத தாகும்.

சட்டமன்றத்தில் ஆண்டுதோறும் கணக்கு கொடுக்கும் கடமையை எம்.ஜி.ஆர். நிறைவேற்றவில்லை என்றும், 13 முறை நினைவூட்டுக் கடிதம் அனுப்பியும் பயனில்லை என்றும் சொல்லப்படுகிறது.

நிலைமை இதுவாக, திடீரென்று வட்டச் செயலாளர்களிடமும்அவர்கள் உறவினர்களிடமும் சொத்துக் கணக்கு கேட்க வேண்டுமென்று எம்.ஜி.ஆர். கோரியதில் நியாயம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. எம்.ஜி.ஆரின் இந்தக் கோரிக்கை கட்சி முழுவதையுமே புண்புடுத்தியதாகுமென்று கூறுவதில் நியாயம் இருக்கிறது.

மதுவிலக்கை தி.மு.க. அரசு கைவிட்டது பற்றியும் இப்போது எம்.ஜி.ஆர். குற்றம் சொல்லுகிறார். இதிலும் அவரது வாதத்தில் வலிமை இல்லை. மதுவிலக்கு எடுபடுவதை முதலில் ஆதரித்துவிட்டு, இப்போது எதிர்ப்பது என்பது பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடிப்பது ஆகாது.

ஆனால் எம்.ஜி.ஆர். சொத்துக் கணக்கு கேட்பது தன் கழகத்திற்கு எதிர்க் கட்சியாக உள்ள இந்திரா காங்கிரசிடமல்ல;

தான் எந்தக் கழகத்தின் பொருளாளராக இருக்கிறாரோ அந்தக் கழகத்தாரிடம் தான் கேட்கிறார். கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு கட்சியின் பொதுக்குழுவிலே அதைக் கேட்க வேண்டும். மேல்மட்டத் தலைவர்களில் ஒருவரான அவரே இந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தவறியது சாதாரண விஷயமல்ல.

பொதுக்குழு கூடும் தேதி அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையிலே அன்பர் எம்.ஜி.ஆர். தெருவில் நின்று கணக்கு கேட்பது? "எனது தீர்மானம் பொதுக்குழுவில் ஏற்கப் படாவிட்டால் நான் மக்களை அணுகுவேன்" என்று எம்.ஜி.ஆர். பேசியது தி.மு.க. மட்டுமல்லாமல் கட்சிக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் விரும்பும் எந்தக் கட்சியும் பாராட்ட முடியாத தாகும்.

தி.மு.க. கழகம் மிகுந்த துணிவோடு தனிப்பட்ட விருப்பு வெறுப்பை மறுத்து கட்சியின், நாட்டின் நலன் கருதி அன்பர் எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதனை தனி நபர்களைவிடவும் கட்சிதான் பெரிது என்ற சிந்தாத்தத்தில் நம்பிக்கை உடைய கட்சிகள் அனைத்துமே ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கின்றன.

தி.மு.க. அரசு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழினத்தின் தனி நலன்களுக்கும் பாடுபட்டு வருகின்றது. தமிழின்—தமிழினத்தின் பகைவர்கள் இந்த அரசை ஒழித்துக் கட்ட முயன்று வருகின்றனர். அவர்கள் வெற்றிக்கு தெரிந்தோ தெரியாமலோ உதவுவோர் தமிழின் — தமிழினத்தின் வருங் காலத்திற்கு கேடு செய்வோராவார். இந்தக் கோணத்தில் நின்று பார்த்தும் நாம் தி.மு.க. பொதுக்குழுவின் முடிவு தவிர்க்க முடியாதென்று கருதுகின்றோம்.

எம்.ஜி.ஆர். எதிர்காலத்தில் எப்படி நடந்துகொண்டாலும் சரி; தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க. அரசுக்குத் தொடர்ந்து தங்கள் ஆதரவை அளித்து வரவேண்டும். வேறுவிதமான நடப்பவர்களை வருங்காலத் தலைமுறை வாழ்த்தாது. இது சத்தியம்."

இப்படி எழுதினார் சிவம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்தான் இன்றைய எம்.ஜி.ஆர். ஆட்சியில் சட்டமன்ற மேலவைத் தலைவராகப் பணியாற்றுகிறார்!

# 53

## திகைக்கவில்லை தித்திப்பு வழங்கினர்!

கடற்கரைக் கூட்டத்தில் காரசாரமாகவும், கடுமையாகவும் கழக முன்னணியினர் பேசிய பிறகு இறுதியாக நான் பேசினேன். அந்த நீண்ட உரையில் சில பகுதிகளை நினைவூட்ட விரும்புகிறேன்.

"பல தீர்மானங்கள் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி நிறைவேற்ற வேண்டிய தி.மு. கழகம் அவைகளை எல்லாம் இன்று மறந்து விட்ட நிலையில் சில பிரச்சினைகள் நாட்டிலே உருவாகியிருக்கின்றன.

அதுதான் என்னுடைய இனிய நண்பர்—அன்றும் இன்றும் சரி, என்றும் நான் அவரை இனிய நண்பர் என்றுதான் அழைப்பேன்—அந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். திடீரென்று தி. மு. கழகத்தின் மீது நடத்திய தாக்குதல்கள் முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற இலட்சக்கணக்கான தொண்டர்களுடைய நெஞ்சம் துடிக்கின்ற அளவிற்கு, 18,000கிளைக் கழகச் செயலாளர்களுடைய நெஞ்சம் பதறுகிற அளவிற்கு — 135 வட்டச் செயலாளர்களுடைய உள்ளம் உருகுகின்ற அளவிற்கு — 14 மாவட்டச் செயலாளர்கள் பதட்டம் அடைகிற அளவிற்கு—செயற்குழு, பொதுக்குழு இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகி விட்டதே என்று வேதனைப்படுகிற அளவிற்கு — கொந்தளிக்கிற அளவிற்கு சில காரியங்களில் என் இனிய நண்பர், புரட்சி நடிகர் அவர்கள் ஈடுபட்டு விட்டார்.

கணக்கு கேட்டார் எம். ஜி. ஆர்., ஆகவே கழகத்தை விட்டு விலக்கி விட்டார்கள் என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள். எனக்கொரு மகிழ்ச்சி. எந்தப் பத்திரிகையிலே எம். ஜி. ஆர். அவர்கள் கிண்டல் செய்யப்பட்டு எழுதப் பட்டாரோ—அந்தப் பத்திரிகைகள் எல்லாம் இன்று எம்.ஜி.ஆர் அவர்களைத் தூக்கிவைத்துக் கொண்டு பாராட்டுகின்ற காட்சியைப் பார்த்து எனக்கொரு மகிழ்ச்சி.

"பாரத் பட்டம் எப்படி வந்தது? யார் சிபாரிசு செய்தார்கள்?" என்று கேட்ட பத்திரிகைகள் எல்லாம் இன்று பாரத் எம். ஜி. ஆர் என்று எழுதுகின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார் என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எத்தனை கிளைக் கழகங்கள் என்று அவர் கணக்கு கேட்டிருப்பாரேயானால், துணைப் பொதுச் செயலாளர் என்.வி.என் மற்றொரு துணைச் பொதுச் செயலாளரான ராசாராம் அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து 18 ஆயிரம் கிளைக் கழகங்கள், 135 வட்டக் கழகங்கள் 14 மாவட்டக் கழகங்கள், இவை தவிர மாநில அமைப்புகள், செயற்குழு, பொதுக்குழு இப்படிப்பட்ட அமைப்பு ரீதியில் செயல்படுவதுதான் தி. மு. கழகம்.

எம். ஜி. ஆர். ‘‘நான் கேட்ட கணக்கு எதற்காகத் தெரியுமா? எதிர்க் கட்சிக்காரர்கள் புகார் சொல்கிறார்கள், அதற்காகத்தான் நான் கணக்கைக் கேட்கிறேன்’’ என்றார். இதோடு நிறுத்தியிருந்தால் கூட நான் மகிழ்ச்சி அடைவேன். அடுத்து அவர் ‘‘அனைவரும் சொத்துக் கணக்கு வைக்க வேண்டும் என்று பொதுக்குழுவில் கேட்பேன்; அதற்கொரு தீர்மானம் கொண்டு வருவேன். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால் பொது மக்களைச் சந்திப்பேன்" என்றார். இதற்கு என்ன பொருள்?

எம்.ஜி.ஆருக்காகப் பரிந்து பேசுகிற காங்கிரஸ்காரர்களை மற்றக் கட்சிக்காரர்களைக் கேட்கிறேன். உங்கள் பொதுக்குழுவிற்கு ஒரு தீர்மானத்தை ஒருவர் கொண்டு வந்து — அது நிறைவேறா விட்டால் பொது மக்களைச் சந்திப்பேன் என்று உங்கள் கட்சியிலே உள்ள ஒருவர் சொன்னால் அவர்களைச் சீராட்டிப் பாராட்டுவீர்களா? அல்லது உங்கள் கட்சியிலிருந்து வெளியேற்றுவீர்களா? இதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

18 ஆயிரம் கிளைக் கழகச் செயலாளர்களின் கணக்குகளையும் கொண்டு வந்து பொதுக்குழுவில் வைப்பது என்றால் அது எவ்வளவு உயரம் இருக்கும்? அவ்வளவையும் ஆராய்வது என்றால் அது நடக்கின்ற காரியமா? நடைமுறைக்கு ஒத்து வரக் கூடிய செயலா?

இது எம். ஜி. ஆர். அவர்களுக்கு நன்கு தெரியும். தெரிந்தும் கேட்டார், ஏன்? அவருடைய எண்ணம் வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும். இரண்டிலே ஒன்றை விரும்பினார்.

அவர் விரும்பினார் என்பதற்கு ஒரு சாட்சி – அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 26 செயற்குழு உறுப்பினர்கள் மனு கொடுத்து சொன்ன நேரத்தில் கண்கள் குளமாக எங்கள் நா தழுதழுக்க ஒருவரோடு ஒருவர் உரையாடி வேதனை

யோடு இந்த முடிவைச் செய்தோம். முடிவைச் செய்த நாங்கள் வேதனைப்பட்டோம். ஆனால் முடிவைக் கேள்விப் பட்ட எம். ஜி. ஆர். மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்.

யாராவது ஒரு கழகத் தோழன் தான் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதாக கேள்விப்பட்டால் அவன் சாதாரணத் தொண்டனாக இருந்தாலும் ஐயோ, என்னையா விலக்கி விட்டார்கள்? என்று பதறியிருப்பான். எம். ஜி. ஆர். பதற வில்லை; செய்தி கேட்டுப் பாயாசம் சாப்பிட்டார் எனப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். அவர் திகைக்கவில்லை. தித்திப்பு வழங்கினார்; கலகலவென்று சிரித்திருக் கிறார். படப்பிடிப்பைத் தொடர்ந்து நடத்தியிருக்கிறார் என்றெல் லாம் செய்தி வருகின்றன. ஆகவே அவர் எதிர்பார்த்த ஒன்று-தேவைப்பட்ட ஒன்று நடந்திருக்கிறது!

நான் நண்பர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். எம். ஜி. ஆர். தி.மு.கழகத்தின் மீது எந்தக் குற்றச்சாட்டுக்கள் சொன்னாலும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்குத் தான் நாம் பதிலளிக்க வேண்டுமே யல்லாமல் நம்மோடு பழகிய நண்பரைப் பற்றி முன்பு காங்கிரஸ்காரர்கள் சொன்னதுபோல் சொல்லக் கூடாது.

மதுரை முத்து என்னை விட வயதில் பெரியவர்; அனுபவத்திலேயும் பெரியவர். அண்ணா அவர்களிடத்திலே எங்களைப் போல் பழகியவர். ஆகவே அவரை நான் கண்டிக் கின்ற தகுதியுள்ள தலைமை இடத்திலே இருந்தாலும் நான் தலைவன் என்ற அகந்தையில்லாமல்-முத்துவுக்கு தம்பி என்ற முறையில் மதுரை முத்து அவர்களுடைய காலைப் பிடித்துக் கேட்டுக் கொள்வேன். எம். ஜி. ஆர். அவர்களைப் பற்றி இங்கு பேசிய வார்த்தைகளை இனிமேல் பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் எம். ஜி. ஆர். அவர்களோடு நான் 27 ஆண்டுக்காலம் பழகியிருக்கிறேன். தோழர்கள் எல்லாம் பழகி யிருக்கிறார்கள். அவருடைய ஆற்றலும் பணியும் இந்தக் கழகத்திற்கு தேவைப்பட்டது என்பதை நான் மறந்து விடவில்லை. அவர் இங்கே இருந்த நேரத்திலும், தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்ன நேரத்தில்-நான் புண் பட்டிருந்தால் வருத்தப்பட்டிருக்க மாட்டேன்; தனிப்பட்ட

நாவலர் புண்பட்டிருந்தால் வருத்தப்பட்டிருக்க மாட்டார்; மதுரை மேயர் முத்து தனிப்பட்ட முறையில் புண்பட்டு இருந்தால் வருத்தப்பட்டிருக்க மாட்டார்-ஆனால் எங்கள் அண்ணன் வளர்த்து 'இதைக் காப்பாற்று தம்பி' என்று எங்களிடத்திலே ஒப்படைத்து விட்டுப் போனாரே-அந்தக் கழகமே புண்படுத்தப்பட்டு விட்ட காரணத்தாலே தான் நாங்கள் இந்த முடிவுக்கு வர நேரிட்டது!

எம். ஜி. ஆர். - மாற்றார் சந்தேகிக்கிறார்கள், ஆகவே நானும் சந்தேகிக்கிறேன் என்று சொல்கிறார். இது ராமாயணம் போல் இருக்கிறது.

யாரோ ஒரு சலவைத் தொழிலாளி சந்தேகிக்கிறான். ஆகவே நான் சீதையை காட்டுக்கு அனுப்பகிறேன் என்று இராமன் அனுப்பினான் சீதையைக் காட்டுக்கு! இராமன் அனுப்பலாம்! இராமச்சந்திரன் இப்படி கழகத்தைக் காட்டுக்கு அனுப்பத் துணியலாமா?

எம். ஜி. ஆர். அவர்களுக்கு இந்த எண்ணம் வரலாமா? தி. மு. கழகத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு அண்ணா வழியில் தான் நிற்பது உறுதி என்று சொல்லிக்கொண்டு, எங்களோடு உடன்பிறவா சகோதரராக பழகிக் கொண்டிருந்த ஒரு நண்பர் எது வேண்டுமானாலும் எங்களிடம் தனித்துப் பேசியிருக்கக் கூடாதா?

ஒரு மாத காலம் பேசினார்! ஆதித்தனாரைப் பற்றித் தாக்கிப் பேசினார். **தினத்தந்தி**, மாலை முரசு ஏட்டைப் பற்றி ஏளனமாகப் பேசினார். எதை எதையோ பேசினார். தனிப் பட்ட முறையில் நாங்கள் எல்லாம் தாக்கப்பட்டோம். நிருபர் களுக்குத் தெரிந்தது கூட முதலமைச்சருக்குத் தெரியவில்லை என்று கேலியாக ஆலந்தூரில் பேசினார். அதையெல்லாம் இந்த ஒரு மாத காலம் நாங்கள் தாங்கிக் கொண்டோம். இறுதியாகத்தான் நாங்கள் தாங்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டோம்''

* * *

உண்மையிலேயே தூங்குபவனைத்தான் தட்டி எழுப்ப முடியும்; வேண்டுமென்றே தூங்குபவனைப் போல பாசாங்கு செய்பவனை எப்படி எழுப்ப முடியும்? ஏதாவது

வேண்டாததைச் சொல்லிக் கழகத்தை விட்டு வெளியேறி விட்டால் அல்லது வெளியேற்றப்பட்டு விட்டால் மத்திய சர்க்காருக்கு நல்ல பிள்ளையாகி விடலாம் என்ற நினைப்போடு எம். ஜி. ஆர். அவர்கள், கட்சிக்கரைக் கூட்டத்திற்குப் பிறகு தனிக்கட்சி தொடங்குவதிலே ஆர்வம் காட்டத் தலைப்பட்டார். அந்த முயற்சிக்கு மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அவர்களின் முழுமையான தூண்டுதல் இருந்தது. குமார மங்கலத்தின் தூதுவர்களும் சென்னையில் எம். ஜி. ஆர். தோட்டத்தில் முகாமிட்டு அவரை உசுப்பி விட்டுக்கொண்டிருந்தார்கள். புதிய கட்சிக்குப் பெயர், கொடி இவற்றையெல்லாம் கூட மோகன் குமாரமங்கலம் அவர்களால் அனுப்பப் பட்ட சில முக்கிய பிரமுகர்கள் தான் எம். ஜி. ஆருக்கு வகுத்துக் கொடுத்தனர்.

திராவிடர் இயக்கத்தைப் பிளக்க இப்படியொரு சூழ்ச்சி நடைபெறுவதைக் கண்டும் கேட்டும் தந்தை பெரியார் அவர்கள் வெகுண்டெழுந்து 24-10-72 அன்றைய விடுதலை இதழில் ஒரு தலையங்கம் எழுதினார். அந்தத் தலையங்கத்தின் சில பகுதிகள் எம். ஜி. ஆரின் அந்தப் போக்கிற்கான காரணத்தை நாட்டுக்கு அம்பலமாக்கின. பெரியார் அவர்கள் அக்டோபர் 24-ஆம் நாள் விடுதலையில் எழுதிய தலையங்கப் பகுதிகள் வருமாறு:-

"எம். ஜி. ஆர். ஒரு சினிமாக் கலைஞர். அந்தத் துறையில் எனக்கு அனுபவம் இல்லை என்பதோடு வெகு காலமாகவே நான் சினிமா பார்ப்பதில்லை. கலைத்துறைகள் என்பவை முழுதும் ஒரு சாரார் ஆதிக்கத்திலும் அவர்கள் கைவசத்திலும் இருந்து வந்ததானது. நமது ஆசையின்படி கொஞ்சம் கொஞ்சமாக மாறி நம்மவர்கள் கைக்கு வர நேர்ந்ததை முன்னிட்டும் நான் நமது கலைஞர்களைப் பாராட்டவும், அவர்கள் வளர்ச்சிக்கு பாடுபடவும், விளம்பரம் ஏற்படவும் முயற்சித்து இருக்கிறேன். என். எஸ். கிருஷ்ணன் அவர்களை வெளிப்படையாகவே பாராட்டியிருக்கிறேன். சிவாஜிகணேசன் அவர்களையும் நான் நாடகத்தில் பாராட்டியிருக்கிறேன். எம்.ஜி.ஆர். அவர்களை எனக்கு அவர் யார் என்றும் அவர் நிலை எது என்றும் ஒன்றுமே தெரியாது. சில திருமண நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன். சில தி.மு க நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன்.

வணக்கம் தெரிவித்துக் கொண்டதல்லாமல் ஒரு நிமிட நேரமாவது அவருடன் பேசியதாக எனக்கு ஞாபகம் இல்லை.

தி.மு. கழகத்தில் அவருக்கு சம்பந்தம் ஏற்பட்ட பிறகு தான் அவர் அரசியல் வாழ்வில் பிரஸ்தாபிக்கப்படும் தன்மையை அடைந்தார். அண்ணா இருந்த போது அவருக்கு இருந்த பெருமையை விட அண்ணாவிற்குப் பிறகு அதிக பெருமை, பிரபலம் அவருக்கு ஏற்பட்டது.

அவருக்கு 'இன்கம்—டாக்ஸ்' விஷயமாய் தொல்லை இருப்பதாகச் சொல்லப்பட்டதுடன், அதனால் அவருக்கு மனச் சங்கடம் இருப்பதாகவும், அதற்குப் பரிகாரம் தேடுவதில் அதிக கவனமாகவும் முயற்சியாகவும் இருக்கிறார் என்றும் சொல்லப் பட்டு வந்தது. இந்த நிலையின் மூலமாக அவருக்கு மனக்-குழப்பமும் பல யோசனைகளும் தோன்றுவது இயற்கையே ஆகும். அதன் பயன் தான் இன்றைய அவருடைய குழப்ப நிலைக்குக் காரணம் என்பது எனது கருத்து. அப்படியில்லா விட்டால் நான் அவரை அழைத்துக் கேட்டுக் கொண்டதற்கு ஒரு பதிலும் தெரிவிக்காமல் யோசிக்கிறேன், யோசித்துச் சொல்லுகிறேன் என்று சொல்லவும் எனது கருத்தை அலட்சியப் படுத்தவும் அவர் துணிந்திருக்க மாட்டார்.''

பெரியார் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்துக்களுக்குப் பிறகு, திராவிடர் இயக்கத்தின் தேவையில் உண்மையான அக்கறை கொண்டவர்கள் தெளிவு பெற்றார்கள்.

எனினும், கட்சியில் இருந்த சில அதிருப்தியாளர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொள்ள எம். ஜி. ஆர். பெரு முயற்சி செய்தார். அதன் விளைவாகச் சட்டப் பேரவைத் தலைவராக இருந்த அருமை நண்பர் மதியழகன் அவர்க கழகத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார்.

அவர் கழகத்திலிருந்தும், சட்டப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்தும் விலகிவிட விரும்பினார். ஆனால் எம்.ஜி.ஆரும், மோகன் குமாரமங்கலம் அவர்கள் தயாரித்து அனுப்பியிருந்த நண்பர்களும் மதியழகனை சுற்றி வளைத்துக் கொண்டு—சட்டப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகாமல் இருந்து கொண்டே, சட்டமன்றத்தில் ஆளுங் கட்சியான தி. மு. க. வுக்கு எதிராகச் செயல்பட வேண்டுமெனத் தூண்டி விட்டார்கள்.

இச்செய்தி என் காதில் விழுந்ததும் நண்பர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்களை அழைத்து மதியழகன் அவர்களிடம் தூது அனுப்பினேன். அவர், 'கழகத்திற்கு துரோகம் செய்ய முனையும் மதியழகனைப் போய்ப் பார்க்கவே மாட்டேன்' என்று முதலில் மறுத்தார். நான் பிடிவாதமாகப் பேசி எஸ். டி. எஸ். அவர்களை மதி அவர்களிடம் பேசுமாறு அனுப்பி வைத்தேன்.



# 54

## சட்டமன்ற மரபுகளை வெட்டிப் புதைத்த செயல்!

மதியழகன் அவர்களிடம் நீண்ட நேரம் பேசிவிட்டு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் என்னிடம் திரும்பி வந்து மதியழகன் அவர்களின் போக்கு சரியில்லையென்றும், சில நாட்களில் கழக ஆட்சி கவிழ்ந்து விடுமென்று எம். ஜி. ஆரும், மதி போன்றவர்களும் நம்பிக் கொண்டிருப்பதாகவும், எனவே மதி அவர்களிடம் இனிப் பேசிப் பயனில்லையென்றும் கூறினார். திராவிடர் இயக்கத்தை அழிப்பதற்கு முனைந்து விட்டவர்களுக்கு மதியழகன்; அவரையறியாமலே துணை போய்க் கொண்டிருக்கிறார் என்றும் நெஞ்சு நோகக் கூறினார். மதியுடன் எஸ். டி. எஸ். அவர்களுக்கு நெருங்கிய நட்பு உண்டு என்ற காரணத்தால், நான் அவரை மீண்டும் வலியுறுத்தி மதியிடம் போய்ப் பேசுமாறு கேட்டுக் கொண்டேன்.

யாரையும் தன்னுடைய உரையாடல் வன்மையால் இழுத்துவிடக் கூடிய அருந்திறமை பெற்றவர் மதியழகன் அவர்களாவார்கள். எனவே அவரிடம் இரண்டாவது முறையாக எஸ். டி. எஸ். ஐ நான் அனுப்பியது பெரிய தவறாகப் போய்விட்டது. ஆம்; எஸ் டி. எஸ். ஸும் மதியுடன் சேர்ந்து எம். ஜி. ஆர். ஆரம்பித்த கட்சியில் ஒருவராக ஆகி விட்டார். இந்த நிகழ்ச்சிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் தஞ்சை மாவட்டம் குத்தாலம் பகுதியில் என்னுடன் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் எஸ். டி. எஸ்; எம். ஜி. ஆர். அவர்களின் செயலை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

எம். ஜி. ஆர்., புதுக் கட்சி தொடங்குகிறார் என்ற செய்தி அறிந்தவுடன் சோவியத் நாட்டில் இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான எம். கல்யாணசுந்தரம் அவர்கள், சென்னைக்கு அவசரமாகத் திரும்பி, அந்தக் கட்சிக்கான தொடக்க முயற்சிகளுக்கு ஆலோசகராகவும், உற்ற துணையாகவும் செயல்பட்டார். அவரது யோசனைப்படி, தி. மு. க. அமைச்சரவை மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை கவர்னரிடம் தரப் போவதாகவும் அதற்கு நவம்பர் 7-ந் தேதிக்குள் கவர்னர் நடவடிக்கை எடுக்கா விட்டால் தமிழகம் முழுதும் அண்ணா வழியில் அர்த்தால்

நடத்தப்படுமென்றும் அக்டோபர் 31-ஆம் நாள் செய்தியாளர் களிடம் எம். ஜி. ஆர். தெரிவித்தார். அந்தக் குற்றச்சாட்டுக் களை விசாரிக்க மத்திய சர்க்கார் ஒரு கமிஷனை அமைக்க வேண்டுமென்று செய்தியாளர்களிடம் கூறிய எம். ஜி. ஆர்., "இந்தியாவில் எந்த ஒரு மாநிலமாக இருந்தாலும் அந்த மாநில அமைச்சரவை மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அதுபற்றி நீதி விசாரணை நடத்தும் அதிகாரம் மத்திய சர்க்காருக்குத் தான் இருக்கிறது" என்றும் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து சில நாட்களுக்குப் பிறகு கருத் தறிவித்த திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள், "நாங்கள் கவர்னரிடம் கொடுக்கப் போகிற ஊழல் புகார் பட்டியலில் கருணாநிதியும் இடம் பெற்றிருக்கிறார். எனவே கருணாநிதி ஒரு நல்ல மரபை ஏற்படுத்த வேண்டும். விசாரணை முடிந்து தீர்ப்புக் கிடைக்கும் வரையில் அவர் பதவியிலிருந்து விலக வேண்டும். அப்போதுதான் விசாரணை நேர்மையாகவும் நிர்ப்பந்தத்திற்கு இடமில்லாமலும் நடைபெறும். அது மட்டு மல்ல; கருணாநிதியின் ஆசி பெற்றவர் யாரும் முதலமைச்சராக இருந்து விசாரணை நடத்துவதற்கும் நாங்கள் ஒரு போதும் சம்மதியோம்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

அக்டோபர் 14-ந் தேதி கழகப் பொதுக்குழுவுக்கு எம். ஜி. ஆர். அனுப்பிய தந்தியில் "கழக அமைச்சர்கள் ஊழல்கள்" என்பது குறித்து எதுவுமே பேசவில்லையென்று அவர் குறிப்பிட்டிருந்தமைக்கு மாறாக, அதே திங்கள் இறுதியில் திடீரெனப் புகார்ப் பட்டியல் தயாரித்து விட்டார் என்றால் அதிலே அடங்கிக் கிடக்கும் மர்மம் எளிதில் புரியும்

மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் மூலம் சில பைல்'கள் அரைகுறையாகத் தயாரிக்கப்பட்டு, அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆதாரமற்ற புகார்கள் எழுதப் பட்டு — அதைக் கவர்னரிடம் வழங்கும் கருவியாக எம். ஜி. ஆர். பயன்படுத்தப்பட்டார். அதனால் தான் அவர் திரும்பத் திரும்ப அந்தப் புகார்களைப் பற்றித் தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று வாக்குமூலங்கள் அளித்து வந்தார்.

நவம்பர் 4-ஆம் நாள் எம். ஜி. ஆரும், எம். கல்யாண சுந்தரமும் புகார்ப் பட்டியல்களை எடுத்துச் சென்று கவர்னர் கே. கே. ஷா அவர்களிடம் கொடுத்தனர் அதனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கக் கோரினர். கவர்னர்,

"அரசியல் சட்டப்படி அந்தப் பட்டியலை முதலமைச்சருக்கு அனுப்பி அவரது கருத்தையும் அறிந்து தான் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப இயலும்" என்று கூறியதால் புகார்ப் பட்டியலை அவர்கள் திரும்ப எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

எனவே குடியரசு தலைவரிடம் நேரடியாக புகார் பட்டியலைக் கொடுக்க எம். ஜி. ஆர். அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் டெல்லி புறப்பட்டுச் சென்றனர்.

நவம்பர் 6–ஆம் தேதி காலையில் குடியரசு தலைவர் அவர்களை இரு தரப்பினரும் சந்தித்து கழக அமைச்சர்கள் மீது புகார் குற்றச்சாட்டுகள் அடங்கிய மனு ஒன்றினைத் தந்தார்கள்.

டெல்லியில் எம்.ஜி.ஆர். நிருபர்களிடம் கூறும்போது "நாம் கோரியுள்ளபடி தமிழக அமைச்சரவை மீது ஊழல் புகார்களை விசாரிக்க நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப் பட்டால் தி.மு.க. அமைச்சரவை உடனடியாக பதவி விலகுவது தான் நியாயம். நாகரிகம் உள்ள சர்க்கார் எதுவும் அதைத் தான் செய்யும்" என்று கூறினார். மேலும் "ஏதோ தவறுதல் ஒன்றுக்காக ஒரு போலீஸ்காரர் மீது விசாரணைக்கு ஏற்படாகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்தப் போலீஸ் காரர் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். இது சாதாரணமாக உள்ள நடைமுறையே. சாதாரண ஒரு சர்க்கார் சிப்பந்தி விஷயமே இப்படி என்றால், தமிழக அமைச்சரவை மேல் விசாரணை என்றால், அந்த சர்க்கார் தானாக பதவி விலகுவது தானே ஒழுங்குமுறைக்கு உகந்ததாக இருக்க முடியும்?" என்று கூறினார்.

நவம்பர் 7–ந்தேதி செய்தியாளர் ஒருவர் "சென்னையில் ஒரு ஆடம்பர பகுதியில் இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு வீட்டை மதியழகன் வாங்கினாரென்றும் அதற்கு அவர் கணக்குச் சொல்ல முடியவில்லை என்றும் புகார் கூறப் பட்டது. அவருடைய சகோதரருக்கும் அந்தச் சொத்தில் பங்கு உண்டு. அப்படியிருக்க அந்தச் சகோதரரை உங்கள் கட்சியின் அமைப்புக் காரியதரிசியாக்குவது முறையாகுமா? உங்களுடைய கட்சியில் சேர்ந்தவர்கள் எல்லாம் சந்தேகத்திற்கு இடமில்லாதவர்கள் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு எம்.ஜி.ஆர். பதிலளிக்கும்போது "சமூகத்தின் கீழ் மட்டத்திலுள்ள ஊழியர்களே எங்கள் கட்சியில் அதிகம்

இருக்கிறார்கள். என் கட்சியில் சேர்ந்துள்ள தி.மு.க. தலைவர்களைப் பற்றி சந்தேகத்திற்கு இடமில்லை. அவர்கள் புதுக் கட்சியில் சேர்ந்த போது அவர்களுடைய சொத்து எவ்வளவு, கடன் எவ்வளவு என்று எங்களுக்குத் தெரியும். மேலும் பணம் சேர்த்திருக்கிறார்களா என்று ஒரு ஆண்டு கழித்து மறுபடியும் விசாரணை நடத்துவோம்'' என்றார்.

சட்டப் பேரவைத் தலைவர் மதியழகன் அவர்களை எம்.ஜி.ஆர். சென்று பார்ப்பதும், எம்.ஜி.ஆரை, மதியழகன் சென்று பார்ப்பதுமாக இருந்தார்கள். நவம்பர் 10-ந் தேதியன்று அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து நடத்திய ஊர்வலத்தை பேரவைத் தலைவர் மதியழகன் அவர்கள் அண்ணா சாலையில் ஒரு இடத்திலிருந்து பார்வையிட்டார். இந்தக் காரணத்தினால் தமிழகச் சட்டப் பேரவை நவம்பர் 13-ஆம் தேதி கூட்டப்படும் போது பேரவைத் தலைவர் எந்த முறையில் நடந்து கொள்வாரோ என்பது தமிழக அரசியலில் ஒரு பெரிய கேள்விக்குறியாக இருந்தது.

13-ந் தேதி காலையில் பரபரப்பான சூழ்நிலையில் சட்டப் பேரவை கூடியது. அனுதாபத் தீர்மானம் முதலில் முடிந்து பேரவையின் தலைவர் அவர்கள் ஒரு அறிவிப்பினையும் செய்த பிறகு—முறைப்படி நிகழ்ச்சி நிரல்படி கேள்வி நேரம்! கேள்விகளை பேரவைத் தலைவர் எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக அந்த நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்பப் படுமானால் அவைகளுக்கு பேரவைத் தலைவர் அனுமதியே வழங்கிடக் கூடாது. ஆனால் அன்று நடைபெற்றது என்ன?

கேள்வி நேரம் தொடங்குவதற்கு முன்பு இந்திய கம்யூனிஸ்டு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுந்து ஒரு ஒழுங்கு பிரச்சினை எழுப்ப விரும்புவதாகக் குறிப்பிட்ட போது, கழக உறுப்பினர் ஒருவர் கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினைக்கே இடமில்லையே என்றார். இருந்தாலும் பேரவைத் தலைவர் அதற்கு அனுமதிக் காமல், ''தங்கமணியைப் பார்த்து ஒழுங்கு பிரச்சினை என்ன?'' என்று கூறும்படி அனுமதித்தார்.

உடனே தங்கமணி அவர்கள் கடந்த சட்டப் பேரவைக்குப் பிறகு பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதாகவும், அப்போது விவசாய அமைச்சராக இருந்த அன்பில் தர்மலிங்கம்

அவர்கள் திடீரென்று ராஜினமா செய்தார் என்றும், பிறகு அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்றும், அதற்கெல்லாம் காரணம் என்ன என்றும் கேட்டார். மேலும் அமைச்சர்களிடையே இலாகா மாற்றம் செய்யப்பட்டதற்கும் காரணம் என்ன என்றும் கேட்டார்.

அதற்கு, பேரவைத் தலைவர் "பதவி விலகும் அமைச்சர்கள் தங்கள் விலகலுக்கான காரணத்தை மன்றத்திற்கு அவர்கள் விரும்பினால் சொல்லலாம் என்றுதான் விதி உள்ளது. சொல்லித்தான் ஆக வேண்டும் என்று கட்டாயம், நிர்ப்பந்தம் கிடையாது. எனவே பதவி விலகிய அமைச்சர் தானாக விரும்பினால் அறிக்கை தரலாம். அமைச்சர்களை நியமிப்பது, மாற்றுவது ஆகியவை முதல்வருக்கு உள்ள உரிமை என்றாலும், இது விஷயத்தில் ஒரு மரபு ஏற்படுத்தலாம். பதவி விலகும் அமைச்சர் அவ்வாறு விலகியதற்கான காரணங்களை பொது மக்கள் அறிந்து கொள்ள அவ்வாறு விலகுபவர்கள் தங்கள் விலகலுக்கான காரணங்களை அறிவிக்க விதிமுறைகளை ஏற்படுத்தலாம்" என்றார்.

அடுத்து ஹண்டே அவர்கள் ஒரு ஒழுங்கு பிரச்சினை எழுப்பி பேரவைத் தலைவர் மீது ஆளுங் கட்சிக்காரர்களே நம்பிக்கை இல்லா தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்பது உண்மையா என்று கேட்டார். அவர் பேசும்போது தி.மு.கழகத்தைப் பற்றி குறிப்பிடும்போது "கருணாநிதி தி.மு.க." என்று கூற அதுக்குறித்து பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் எழுந்து "ஹண்டே அவ்வாறு குறிப்பிடுவது தவறு என்றும், கருணாநிதி தி.மு.க. என்று குறிப்பிடக் கூடாது என்றும், எங்களுடைய கட்சியின் பெயர் தி.மு.க., அதற்குத் தலைவர் கலைஞர் கருணாநிதி" என்றும் கூறினார். அப்போது சபாநாயகர் குறுக்கிட்டு, — "ஹண்டே குறிப்பிடுவது கருணாநிதி தலைமையிலான தி.மு.க. என்று தான்" என்று சமாதானம் கூறினார்.

அப்போது எம்.ஜி.ஆர். எழுந்து "இன்றைய அமைச்சரவை தங்களுடைய கட்சியின் நம்பிக்கையையும் இழந்து, மக்கள் நம்பிக்கையையும் இழந்து விட்டது. இந்த நிலையில் இந்த அமைச்சரவை நீடிப்பது சட்டவிதி ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டதா?" என்றார்.

கே.டி.கே. தங்கமணி அவர்கள் "இப்போது ஆளும் கட்சியாக உள்ள தி.மு.க. ஏழு கட்சிக் கூட்டணியுடன்

தேர்தலில் போட்டியிட்டது. அந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த மூன்று கட்சிகள் தி.மு.க.விலிருந்து பிரிந்து விட்டன. தி.மு.கழகம் இரண்டாக பிளவுபட்ட நிலையில் அந்தக் கட்சி ஆட்சி நீடிக்க முடியுமா?'' என்றார்.

அப்போது நான் எழுந்து, ''ஏகோபித்து எல்லா கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொண்டால், கேள்வி நேரத்தினை ஒத்திப் போட்டு விட்டு வேறு விவாதத்தை எடுத்துக் கொள்ள நாங்களும் தயார் என்றும் அமைச்சரவை மீது மன்றத்திற்கு நம்பிக்கை உள்ளதா இல்லையா என்பதை இங்கே கொண்டு வரப்படவிருக்கிற கண்டன தீர்மானத்தை விவாதித்த பிறகு ஆதரவு உள்ளதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்றும்'' குறிப்பிட்டேன்.

அப்போது மீண்டும் எம்.ஜி.ஆர். எழுந்து நாட்டில் உள்ள நிலை, இங்கு உள்ள நிலை ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து இந்த அவை, அரசு தொடர்ந்து நடைபெறுவது சரியா?'' என்றார்.

அப்போது சபாநாயகர், ''இன்று கிளப்பப்பட்டுள்ள பிரச்சினை ஒரு அசாதாரணமான பிரச்சினை ஆகும். முதல்வர் கருத்து அடிப்படையில் தங்களுக்கு மெஜாரிட்டி பலம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மந்திரி சபை நாட்டு மக்களின் நம்பிக்கை இழந்து விட்டது. கூட்டணியில் தோழமைக் கட்சிகளாக இருந்த கம்யூனிஸ்ட், புது காங்கிரஸ் கட்சிகள் விலகி விட்டன. தி. மு. கழகத்தினரும் வேறு கட்சிக்குப் போய் விட்டார்கள். எனவே இம்மந்திரி சபை நீடிக்க உரிமை இல்லை என்பது இன்னொரு தரப்பு வாதம். இது சரியா தவறா என்பதில் நான் போகவில்லை. இது ஒரு அசாதாரண பிரச்சினை. அசாதாரண சூழ்நிலை. இதற்கு ஒரு அசாதாராண தீர்வு கண்டு தான் சமாளிக்க முடியும். இதற்கு ஒரு யோசனையை என் தீர்ப்பாக அல்ல, யோசனையாக சொல்ல விரும்புகிறேன். நண்பர் என்ற முறையில் இல்லாவிட்டாலும், நாட்டை ஆளும் முதலமைச்சர் என்ற முறையில் இல்லாவிட்டாலும், முப்பது ஆண்டுகள் ஒன்றாகப் பழகியிருந்தவன் என்ற முறையில் இந்த யோசனையை முதலமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நம்பிக்கை இழந்து விட்டார்கள்; இந்த ஆட்சி நீடிக்க முடியாது என்பது வாதம். பெரும்பாலான எண்ணிக்கை உள்ள எம். எல். ஏக்கள் இருக்கிறார்கள் என்பதை மறுக்கவில்லை.

ஆனால் நாட்டில் இன்று ஒரு பதட்டமான அசாதாரண நிலை உள்ளது. சட்டம், அமைதி, ஒழுங்கு இல்லை. மக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு இல்லை. இன்று அசாதாரண நிலை உள்ளது. மாநிலத்தில் கடந்த ஒரு மாத காலமாக நடக்கும் நிலை சாதாரணமானவைகளாக இல்லை. அசாதாரண நிலைகளே உள்ளன. இப்பிரச்சினைக்கு பரிகாரம் டெல்லியில் இல்லை. கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையிலும் இல்லை. முதலமைச்சர் தான் பெரிய மனது வைத்து பொது மக்களைச் சந்தித்து அவர்கள் ஆதரவைப் பெற வேண்டும்.

சென்ற ஆண்டு எப்படி நாலாவது வருடத்திலேயே சட்ட சபையைக் கலைத்து மக்களைச் சந்தித்து வாக்குகளைப் பெற்றுரோ அதே போல இன்று மாநிலத்தில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலைக்குத் தீர்வு காண சட்டசபையைக் கலைக்கும்படி கவர்னருக்கு முதலமைச்சர் சிபாரிசு செய்ய வேண்டும் என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட சபையைக் கலைத்து மறு தேர்தலுக்கு நின்று மேலும் மக்கள் ஆதரவுடன் மீண்டும் வரலாம் என்பது என்னுடைய யோசனை. எனவே மக்களை இன்றைக்கே சந்திக்கிறீர்களா என்று எம். ஜி. ஆர். கேட்கிருர். அதற்கு முதலமைச்சர் ஏதேனும் பதில் சொல்ல விரும்புகிருரா?" என்று சபாநாயகர் மதியழகன் அவர்கள் கேட்டபோது, நான் எதுவும் பதிலே சொல்ல விரும்பவில்லை என்பதை சைகை மூலமே காட்டி விட்டேன்.

இந்த நிலையில் திடீரென்று சபாநாயகர் கே. டி. கே. தங்க மணியும் (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி) பொன்னப்ப நாடாரும் (காங்கிரஸ்) தெரிவித்த யோசனையை ஏற்றுக் கொண்டு சபைக் கூட்டத்தை டிசம்பர் 5-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருப்பதாக அறிவித்து விட்டு அறைக்குச் சென்று விட்டார்.

சட்டப்பேரவைத் தொடர்கூட்டமாக நடைபெறும் என்று நினைத்து வெளியூரிலிருந்து வந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் எல்லாம் ஒரே நாளோடு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது அறிந்து பேரவைத் தலைவர் அவர்கள்பால் மிகுந்த ஆத்திரம் கொண்டனர். அவர்களை எல்லாம் அமைதியடையச் செய்ய மிகுந்த நேர மாயிற்று.

பொதுவாக 13—11—72 அன்று கூடிய தமிழக சட்டப் பேரவை வரலாறு காணுத நான்கு நிகழ்ச்சிகளை முதன்முறை யாகக் கண்டது. அவை:

1. கேள்வி நேரமே எடுத்துக் கொள்ளப்படாமல், ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைப் பற்றி மட்டுமே ஒரு மணி நேரம் விவாதம் நடைபெற்று திடீரென்று சபை ஒத்தி வைக்கப்பட்ட நிகழ்ச்சி; அதற்கு சபாநாயகர் உடந்தையாக இருந்தது!

2. எதிர்க்கட்சித் தலைவர்களின் யோசனையை ஏற்று சட்ட சபை கூட்டத்தை சபாநாயகர் ஒத்தி வைத்த நிகழ்ச்சி;

3. ஆட்சியின் போக்கைக் கண்டித்தும், குறை கூறியும், சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டதாக கருத்து தெரிவித்து ஆளுங் கட்சியை தேர்தலில் மீண்டும் போட்டியிட சபாநாயகர் இருக்கையில் இருந்தவாறு யோசனை கூறிய நிகழ்ச்சி.

4. சட்டசபை தொடர் கூட்டமாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு, முதல் நாளோடு சபாநாயகர் தன்னிச்சையாக ஒத்தி வைத்த நிகழ்ச்சி.

இந்த நிகழ்ச்சி நடைபெற்ற அன்று மாலை சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. தோழமைக் கட்சியினரான இந்தியயூனியன் முஸ்லீம் லீக், பார்வர்டு பிளாக், தமிழரசு கழகம் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

"நாங்கள் எல்லாம் தங்களிடம் முழு நம்பிக்கை வைத்து ஏகமனதாக பேரவைத் தலைவராக தங்களைத் தேர்ந்தெடுத்தோம். எங்கள் நம்பிக்கை வீணாகும் வண்ணம் அண்மைக் காலத்தில் ஜனநாயக பாரம்பரியத்திற்கு விரோதமாக தாங்கள் நடந்து கொண்டது கண்டு வருந்துகிறோம். தங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டோம். ஆகவே தாங்கள் சட்டப்பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று இதன் மூலம் கேட்டுக் கொள்கிறோம்" என்று சட்டப் பேரவையில் உள்ள எல்லா அமைச்சர்களும், தி. மு. க., முஸ்லீம் லீக், பார்வர்டு பிளாக், தமிழரசு கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுமாக மொத்தம் 182 பேர் கையெழுத்திட்டு மதியழகன் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

பேரவையின் தலைவர் திடீரென்று டிசம்பர் 5-ஆம் தேதி வரை அவையை ஒத்தி வைத்து விட்ட காரணத்தால்—திரும்பவும் சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு சட்ட ரீதியாக என்ன வழி என்று ஆராய்ந்து, அதன்படி தமிழ்நாடு சட்ட மன்றத்தின் இருசபைகளின் அப்போதைய கூட்டத் தொடர் முடிவுற்றதாக (புரோ ரோக்) கவர்னர் அவர்கள் மூலமாக மாநில அரசின் ஆலோசனையின் பேரில் அறிவிக்கப்பட்டது.

# 55

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை:

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமென்று அண்ணாவின் பெயரால் கட்சிக்குப் பெயர் — கொடியிலும் அண்ணாவின் உருவம்—ஆனால் அண்ணா அவர்கள் கட்டிக் காத்த சட்டமன்ற ஜனநாயக மரபுகளை வெட்டிப் பிளக்கும் காரியத்தில் அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் எம். ஜி. ஆரும் அவருடன் சுமார் பத்து பேர் அவரது கட்சியில் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும் ஈடுபட்டார்கள்.

இன்றைக்கு சட்டமன்ற மரபுகளைப் பற்றி நியாய வாத வேதாந்தங்களைக் குன்றின் மீது ஏறி நின்றுப் பேசுகிறவர்கள் — எழுதுகிறவர்கள் — அன்றைக்குத் தங்களின் எரிச்சலைக் காட்டிக் கொள்ள எவ்வளவு மோசமாகச் சட்டமன்ற விதிமுறைகளைக் காலால் போட்டு மிதித்தனர் என்பதற்கு 1972 நவம்பர் 13-ஆம் நாள் சட்டமன்ற நிகழ்ச்சிகளே தக்க எடுத்துக் காட்டாகும்.

கேள்வி நேரம் முடிந்த பிறகு தான் அவையில் விளக்கங்கள் கோருவதோ அல்லது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதோ அவைத் தலைவரின் அனுமதியுடன் இடம் பெற முடியும். அதற்கு முற்றிலும் மாறாக நவம்பர் 13-ஆம் நாள் பேரவைத் தலைவர் அவையில் வந்து அமர்ந்ததுமே நண்பர் எம். ஜி. ஆரும் அவருக்கு துணையாக ஒரு சிலரும் எழுந்து கழக அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாய்மொழி மூலமாகவே கொண்டு வந்தனர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் எழுத்து வடிவில் முன்னரே கொடுக்கப்பட்டு, அதனை எப்போது அவையில் எடுத்துக் கொள்வது என முடிவு செய்யப்பட்டு அதன் பிறகு விவாதம், ஓட்டெடுப்பு இவைகள் எல்லாம் நடைபெற வேண்டுமென விதிகள் இருந்தாலும் கூட அவற்றையெல்லாம் குறித்து ஒரு சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் எடுத்த எடுப்பிலேயே கழக அமைச்சரவை உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டுமென்று எம்.ஜி.ஆர். அவர்கள், பேரவையில் கோரினார்.

வளர்த்த கடா, மார்பிலே பாயும் காட்சியைக் கண்டு நான் பதட்டமடையாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தேன்.

சபாநாயகரைத் தன் பக்கம் இழுத்துக் கொண்ட காரணத்தால் சபையின் விதிமுறைகளை அவருடன் சேர்ந்து துவைத்துத் துவம்சம் செய்வது எம்.ஜி.ஆருக்குச் சுலபமாக இருந்தது. சுவையாகவும் இருந்தது அவருக்கு!

திராவிடர் இயக்கத்தில் இப்படியொரு விரிசல் ஏற்பட்டு, வெள்ளப் பாழ் ஏற்படுவதைக் கண்டு களித்த காங்கிரஸ் கட்சியும், பிற கட்சிகளும் சட்டமன்ற விதிமுறைகளைக் கண்டு கொள்ளாமல் எரிகிற வீட்டில் பிடுங்கியது வரை லாபம் என்ற கணக்குப் போட்டுக் கொண்டு வேகமாகச் செயல்பட்டனர்.

இதிலே மிகவும் வேதனை என்னவென்றால் திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்குத் தனது பேருழைப்பை நல்கி, வியர்வையும் குருதியும் கொட்டிய எனது ஆருயிர் நண்பர் மதியழகன் அவர்களையே பயன்படுத்திக் கொண்டு அந்தக் கழகத்தையும் கழக அரசையும் வீழ்த்த நினைத்தார்களே அது தான் பெரும் வேதனை!

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டு விட்டு 1972 டிசம்பர் 2ஆம் நாள் சட்டமன்ற நிகழ்ச்சிக்குச் செல்லலாமெனக் கருதுகிறேன்.

1983 ஜூன் திங்கள் 3ஆம் நாள் எனது அறுபதாவது பிறந்த நாள் விழா! எம். ஜி. ஆரின் ஆட்சி, தமிழகத்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. நண்பர் மதியழகன் அவர்கள் எம். ஜி. ஆருடன் இல்லை. எம். ஜி. ஆரைப் பிரிந்து வந்து மீண்டும் தி. மு. கழகத்தில் இணைந்து விட்டார். அந்த மதி அவர்கள் எனது பிறந்த நாள் விழாவில் பேசியதை நினைத்துப் பார்க்கிறேன்.

"நாற்பதாண்டுகளுக்கு முன்பு திருவாரூர் நகரில் என்னுடைய பால்ய நண்பராகச் சந்தித்த என்னுடைய அருமைச் சகோதரர், இன்றைக்கு ஏழு கோடி மக்களுடைய இனத் தலைவராகப் பெருமை பெற்று தமிழர்களை வழி நடத்திச் செல்லும் பாங்கினைக் கண்டு நான் பேருவகை கொள்கிறேன்.

நான் இன்று தலைவரின் பேச்சாற்றலைப் பற்றியோ, எழுத்-தாற்றலைப் பற்றியோ, அவர்களின் தியாகத்தைப் பற்றியோ, தலைமையைப் பற்றியோ பேசப் போவதில்லை. அவைகள் எல்லாம் அங்கீகாரம் பெற்று எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன நம்முடைய பேராசிரியர் அவர்கள் தான் மிகவும்

அழகாகக் கேட்பார்கள். "இவரை விட்டால் தமிழ்நாட்டில் வேறு தலைவர் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்பார்கள். அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய தலைவர் இன்று அறுபதாவது வயதிலே அடியெடுத்து வைக்கின்ற நேரத்திலே இங்கேயிருக்கின்ற ஒரு கோமாளியின் ஆட்சியை - ஒரு விதூஷகனுடைய ஆட்சியை - தூக்கி எறிவதற்காக இன்றைய தினம் ஒரு அணி திரண்டிருக்கிறது. இந்தப் பெரிய அணியின் தலைவராக நான் கலைஞர் அவர்களைப் பார்க்கிறேன்.

எதிர்க்கட்சியிலே இருக்கிற பல தலைவர்களுக்குச் சொல்வேன். இன்றைய தினம் தமிழகத்திலே நடைபெறுகின்ற அநியாயங்கள் - அக்கிரமங்கள் — ஜனநாயகப் படுகொலைகள்— மக்களுடைய அவதிகள் வேறு எந்த நாட்டிலேயாவது இருக்குமேயானால் அந்த நாட்டிலே ஆளுபவர்கள் எக்கதிக்கு ஆளாகியிருப்பார்கள் தெரியுமா? இந்த நாட்டிலே இருக்கின்ற மிகக் கேவலமான நிலைமை சொரணை கெட்டவர்களாக — மானம் கெட்டவர்களாக — கொஞ்சம் கூட மரியாதை இல்லாதவர்களாக தமிழர்கள் இன்றைய தினம் இருக்கிறார்கள். இங்கேயிருக்கின்ற தண்ணீர் தட்டுப்பாடு, மின்சார தட்டுப்பாடு, அரிசிப் பிரச்சினை வேறு எங்கேயாவது இருக்குமேயானால் அந்த நாட்டு மக்கள் எப்படியோ கிளர்ந்தெழுந்திருப்பார்கள். இன்றைக்கு ஒரு நல்ல காலக் குறி தோன்றியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். கலைஞரின் தலைமையிலே நம்முடைய எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு பெரிய ஜனநாயகப் போராட்டத்தை நடத்தி, ஒரு கொடுங்கோல் ஆட்சி நடத்துபவனை வீட்டிற்கு அனுப்புவதற்கு நீங்கள் எல்லாம் பாடுபட்டாக வேண்டும்.

எம்.ஜி.ஆருடைய அருவருப்பான ஆட்சியை, மிகக் கேவலமான ஆட்சியை அப்புறப்படுத்துவதற்கு கலைஞர் அவர்கள் ஒரு அற்புதமான படைக்கருவி. தியாகத்திலே அவர்கள் வளர்ந்தவர்கள். நெருக்கடிகளை எல்லாம் சந்தித்தவர்; அடுத்த ஆண்டு அவருடைய மணிவிழா நடக்கும் நேரத்தில் இந்த ஆட்சி அகன்றது; தமிழர்கள் நலம் பெற்றார்கள் என்ற நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டும். அருமைத் தலைவரே, எங்கள் கண்ணின் கருமணியே, நீ நீடுழி வாழ்க. உன்னுடைய முயற்சிகள், போர்ப் பரணிகள் இந்த நாட்டிற்கும் வெளிநாடுகளிலே இருக்கும் தமிழர்களுக்கும் நல்ல பலனைத் தரட்டும் என்று ஒரு சகோதரனின் உள்ளத்தோடு உன்னை வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்''

இப்படிப் பேசிய மதியழகன் அவர்கள் பிறகு நீண்ட நாள் உயிரோடு இல்லை. அவரை வளைத்துக் கொண்டிருந்த நோய் அவரைப் பறித்துக் கொண்டே போய்விட்டது. அவரைப் பிரிந்த துயரம் மறையாத நிலையிலேயே 1972-ஆம் ஆண்டின் சட்டமன்ற நிகழ்ச்சிகளை எழுத வேண்டியிருக்கிறது.

நவம்பர் 13-ஆம் நாள் விளைவுக்குப் பிறகு, கவர்னர் அவர்களால் முடித்து வைக்கப்பட்ட (புரோரோக்) சட்டமன்றக் கூட்டத் தொடர் டிசம்பர் 2-ஆம் நாள் மீண்டும் தொடங்குமென அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது போல தி. மு. கழகம் உள்ளிட்ட 185 சட்டமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மதியழகன் அவர்கள் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவித்துத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். அதே போல் கழக அமைச்சரவையின் மீதும் நம்பிக்கையின்மையைத் தெரிவித்து எம். ஜி. ஆர். கோஷ்டியின் சார்பில் ஒரு தீர்மானம் தரப்பட்டிருந்தது.

ஆனால் அவர்கள் என்ன செய்யத் திட்டமிட்டிருந்தார்கள் என்றால்—பேரவைத் தலைவர் மீதுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாமல், அமைச்சரவை மீதுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முதலில் அனுமதிப்பது என்றும், அதற்கான விவாதம் முடிவுற்ற பிறகு அமைச்சரவை மீதுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தினை குரல் ஓட்டிற்கு முதலில் விடுவது என்றும், குரல் ஓட்டில் அதிகமான பேர்கள் அமைச்சரவை மீது நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னாலும், சபாநாயகரான மதியழகன் அவர்கள் எழுந்து, அமைச்சரவை மீது இந்தச் சட்டமன்றத்துக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி விட்டு, உடனடியாக சபையை ஒத்தி வைத்து விடுவது என்றும் முறைப்படி சபாநாயகரின் தீர்ப்பை எதிர்த்துப் பேசுவதற்கு விதிப்படி இடம் கிடையாதாகையால் அமைச்சரவையையும், சட்டசபையையும் கலைத்து விடலாம் என்றும் திட்டம் போட்டு அப்படிச் செய்ய முற்பட்டனர்.

ஆனால் டிசம்பர் 2-ஆம் தேதி நடைபெற்றது என்ன தெரியுமா?

தமிழகச் சட்டமன்றத்தில் பேரவையிலே அன்று வரலாறு காணாத வகையில் இரண்டு அவைகள் ஒரே நேரத்தில் நடைபெற்றன.

காலை 11 மணி அளவில் சட்டமன்றம் கூடியது. முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து விட்டு வேறு முக்கிய அலுவல்களைக் கவனிக்கலாம் என்று அவை முன்னவர் நாவலர் ஒரு தீர்மானத்தினை முன்மொழிந் தார். கேள்வி நேரத்தைப் பொறுத்தவரையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் தான் ஒத்தி வைக்க இயலும். யாராவது ஒரு உறுப்பினர் எதிர்ப்பு தெரிவித்தால் கூட, கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க இயலாது. எனவே கேள்வி நேரத்தை ஒத்திவைக்க நாவலர் தீர்மானம் முன்மொழிந்த போதிலும், சிலர் குரல் ஓட்டின் போது அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரி விக்காத காரணத்தால் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப் பட்டது.

கேள்வி நேரம் முடிந்த பிறகு சட்டமன்றக் கழக உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் எழுந்து, "நானும், இந்த அவையின் 184 உறுப்பினர்களும் தற்போதைய சபாநாயகர் அவர்கள் பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அரசியலமைப்புச் சட்டத்தின் 179-வது விதியில் அந்தத் தீர்மானத்தைத்தான் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது" என்று கூறி அதனை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறினார்.

உடனே அவை முன்னவர் நாவலர் அவர்கள் எழுந்து, "உறுப்பினர் வீராசாமி கூறியதை நான் ஆதரிக்கிறேன். இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுமானால் அதைப் பரிசீலிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இந்த அவையின் முன் தற்போதைய சபாநாயகர் அவர்கள் பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டு மென்று கூறும் தீர்மானம் உள்ளது. இந்த அவையின் 185 உறுப்பினர்களது நம்பிக்கையை இழந்து விட்ட ஒரு சபாநாயகர் இந்த அவைக்குத் தலைமை தாங்க முடியாது. இந்த அவையின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவரே இதன் நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல முடியும். முறையான சபாநாயகர் இருந்தால் தான், சபை கூடியதாகப் பொருள் கொள்ள இயலும். இதுவே அரசியல் சட்ட நெறியின்படியும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் சட்ட விதியின்படி முக்கிய கோட்பாடாகும். இந்த அவையின் 185 உறுப்பினர்கள் தற்போதைய சபாநாயகர் பதவியிலிருந்து அகற்றப்பட தீர்மானம் கொடுத்துள்ளனர். ஆகவே இந்த அவை வேறு

அலுவல்களைக் கவனிக்கும் முன்னால் பதவியிலிருந்து இப்போதுள்ளவரை அகற்ற வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின்படி 14 நாள் அவகாசம் முடிந்து விட்டது. இந்தத் தீர்மானத்தைக் கவனிக்க சபாநாயகரே நாள் குறிப்பிட வேண்டுமென்றும் அரசியல் சட்டத்தின் அப்பிரிவு கட்டளையிடுகிறது. சபாநாயகரே இத் தீர்மானமானது உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று நவம்பர் 13-ம் தேதியன்று அறிவித்தார். அவ்வாறு தேதி குறிப்பிடாமல் அரசியல் சட்டம் கூறுகிறபடி அவர் தன் கடமையைச் செய்யாது தட்டிக் கழிக்கும்போது இந்த மன்றமானது அரசியல் சட்டப்படி நடவடிக்கை எடுத்தாக வேண்டியுள்ளது. அரசியல் சட்டத்தின் 208-வது பிரிவின் கீழ் வகுக்கப்பட்டுள்ள செயல் விதிகள் அரசியல் சட்டத்துக்கு உள்ளடங்கியதேயாகும். எனவே இந்த அவை சபாநாயகரைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்று கூறும் தீர்மானத்தை பரிசீலனைக்கு உடனே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசியல் சட்ட 181-வது பிரிவின்படி சபாநாயகருக்கெதிரான தீர்மானம் வருமேயானால் அப்போது சபாநாயகர் அவையில் இருந்தாலும் அவர் அவைக்குத் தலைமை தாங்கக் கூடாது என்றுள்ளது.

அரசியல் சட்டத்தின் 175(2)-ம் பிரிவின்படி மாநில ஆளுநர் தெரியப்படுத்தியுள்ள பொருள்களை இந்த அவை பரிசீலித்திட வேண்டும். இப்போது சபாநாயகராக உள்ளவர் அரசியல் சட்டத்தின் 179-ம் பிரிவும் 175-ம் பிரிவும் கூறுகிற கட்டளைகளின்படி நடக்க மறுக்கிறார். எனவே துணை சபாநாயகர் இந்த அவைக்குத் தலைமை தாங்கிட வேண்டுமென்று இந்த அவை தீர்மானிக்க நான் முன்மொழிகிறேன்.

நாவலர் முன்மொழிந்த தீர்மானத்தை அவை ஏற்றுக் கொண்டது. அதன்படி துணை சபாநாயகர் சீனிவாசன் அவைக்குத் தலைமையேற்றார்.

ஆனால் அ. தி. மு க. நண்பர்கள், அவர்களது தலைவர் எம். ஜி. ஆர். ஆகியோர் அமைச்சரவை மீது தாங்கள் கொடுத்த தீர்மானத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒலி

பெருக்கியே இல்லாமல் அவர்களாக எழுந்து கூற, அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, அவர்கள் திட்டப்படியே அப்போது செயல்பட்ட மதி அவர்கள், அதனை எடுத்துக் கொண்டு அதன் மீது பேசுவதற்காக எம். ஜி. ஆரை அழைக்க அவரும் ஒலிபெருக்கியே இல்லாமல், அவர் என்ன பேசுகிறார் என்பது மற்ற உறுப்பினர்களுக்கோ, பத்திரிகையாளர்களுக்கோ கேட்காத போதிலும் அவர் விடாப்பிடியாக அப்படியே நின்று கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

பெரும்பாலான உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட நாவலரின் தீர்மானத்திற்கு அவர்கள் மதிப்பே அளிக்காமல் நடந்து கொண்டார்கள். துணைத்தலைவர்தான் அவையை நடத்த வேண்டுமென்று அவை தீர்மானித்த போதிலும், மதி அவர்கள் தனது இருக்கையிலிருந்து நகரவில்லை. அவையிலேயே மத்தியில் தற்காலிகமாக ஒரு இருக்கை போடப்பட்டது. ஒலிபெருக்கியும் வைக்கப்பட்டது. அவை உறுப்பினராக இருந்த ராயபுரம் வேதாசலம் அவர்கள் மதி அவர்களின் மேஜை மீது இருந்த "மணி"யை எடுத்து துணை அவைத் தலைவருக்கு வைத்திட்டார்.

அவையில் ஒரே நேரத்தில் இரண்டு தீர்மானங்கள்—ஒன்று பேரவைத் தலைவர் மதி அவர்கள் மீது 185 உறுப்பினர்கள் கொண்டு வந்திருந்த நம்பிக்கை இல்லா தீர்மானம்; மற்றொன்று அமைச்சரவை மீது ஒரு சிலரே கொண்டு வந்திருந்த நம்பிக்கை இல்லா தீர்மானம். ஆனால் அந்தத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதமோ, பேச்சுக்களோ சபையின் நடவடிக்கை குறிப்பிலேயே ஏறவில்லை. பத்திரிகையாளர்களுக்கும் கேட்கவில்லை.

பிறகு அன்றைய தினம் துணை அவைத் தலைவராக இருந்த தம்பி சீனிவாசன் அவையினை நடத்தினார். மிக இளம் வயதிலேயே அந்தப் பொறுப்பினை ஏற்ற தம்பி சீனிவாசன் அன்றைய தினம் அவையை மிகவும் திறமையாக நடத்தினார். இருக்கையில் அமர்ந்ததும் உறுப்பினர் ஆற்காடு வீராசாமி கொண்டு வந்துள்ள தீர்மானத்தை அவையின் பரிசீலனைக்கு வைக்கிறேன் என்று கூறிட, தீர்மானத்தை வீராசாமி முன்மொழிந்திட, சகோதரர் அரங்கண்ணல் அவர்கள் வழி மொழிந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்று தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அன்றைய தினம் அந்த அளவிற்கு நிலைமையை சமாளித் திருக்காவிட்டால் அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லை என்று அவை முடிவு செய்துவிட்டதாக அ. தி. மு. க. வினரின் தூண்டுதலின் பேரில் பேரவைத் தலைவர் இடத்திலிருந்து மதி அவர்கள் அறிவித்திருப்பார்கள். பிறகு அதனைச் சமாளிப் பதற்குள் சட்ட சிக்கல்கள் எல்லாம் எழுந்திருக்கக் கூடும்.

அமைச்சரவை மீதுள்ள நம்பிக்கை இல்லா தீர்மானத்தை எடுத்துக் கொண்டு விவாதிக்க நாங்கள் பயப்பட்டோம் என்றிருக்கக் கூடாது என்பதற்காக 7—12—72 அன்று நானே கழக அமைச்சரவை மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் ஒன்றை முன் மொழிந்தேன்.

அந்தத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதம் எம். ஜி. ஆர். டெல்லியிலே கொண்டு போய் கொடுத்த புகார் பட்டியல் அதற்கான பதில் என்ற வகையிலே விளக்கமாக அமைந்தது. பெருவாரியான வாக்குகளால் கழக அமைச்சரவை மீது நம்பிக்கை வைக்கும் தீர்மானம் நிறைவேறியது.



# 56

## தஞ்சையும்—பூம்புகாரும்!

இவ்வாறுகப் புயல் வீசிய பிறகும் அதற்கு முன்பும் கழக ஆட்சி உறுதியாகவும் வலிமையுடனும் தமிழுக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்கு, தமிழர் வரலாற்றுக்கு, தமிழர் இலக்கியத்துக்கு, தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அளப்பரிய சாதனைகளைப் புரிந்த குறிப்புக்களை நான் இந்த வரலாற்று ஏட்டில் இடம் பெறச் செய்திட விரும்புகிறேன். அவற்றைத் தொகுத்துத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கை மீது படை நடத்தி சிங்கள மன்னனை வென்று அங்கிருந்து பன்னிரண்டாயிரம் அடிமைகளைக் கொண்டு வந்து காவிரிக்கு அணை கட்டச் செய்து அதன் மூலம் தன் புகழை நிலை நிறுத்திக் கொண்டான் கரிகாற் சோழன். அவனைப் போலவே மலைவளம் இல்லாத சோழ நாட்டிலே தன் மன வளத்தால் படை பலத்தால் கருங்கற்களைக் கொண்டுவந்து தஞ்சையிலே கோவிலைக் கட்டி, அதன் வாயிலாக தன் பெருமையை மேலோங்கச் செய்துகொண்டவன் இடைக் காலச் சோழர்களில் தலைசிறந்தவனாக விளங்கியவன் இராசராச சோழன்.

இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தர சோழனுக்கும் வானமாதேவிக்கும் இளைய மகனாக ஐப்பசித் திங்கள் சதய நாளில் பிறந்து கி. பி. 985இல் அரியணை ஏறி கி.பி. 1010இல் தஞ்சைக் கோவிலைக் கட்டி முடித்தான் இராசராசன். இலங்கையை வென்று அங்குள்ள மாதோட்டம் என்ற பகுதியிலிருந்து இக் கோயிலுக்காக மான்யம் தர கட்டளை பிறப்பித்தான் என்று பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் தனது தென்னாட்டுப் போர்க் களங்களில் எழுதியிருக்கிறார்.

பாஸ்கர ரவிவர்மன் என்ற சேர மன்னனையும் அமர புங்கன் என்ற பாண்டிய மன்னனையும் வென்ற பிறகே அருள் மொழித்தேவன் என்ற தன் பெயரை மன்னர்கட்கெல்லாம் மன்னன் என்று பொருள் படும்படி இராசராசன் என்று மாற்றி அதையே கல்வெட்டுக்களிலும் பொறிக்கச் செய்தான் என்று திருக்கோவிலூர் கல்வெட்டுக் கூறுகிறது.

குடமலைகாடு, வெங்கி நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, கலிங்கம், கொல்லம், ரட்டபாடி, ஈழம், ஆகிய

நாடுகளை இராசராசன் வென்றதாகவும் அவனுடைய மெய்க் கீர்த்திகள் விளக்குகின்றன.

அத்தகைய மாமன்னன் இராசராசனின் ஆட்சியிலே இன்று இந்தியாவில் இருக்கின்ற மக்களாட்சி முறையை விட மிகச் சிறப்பான மக்களாட்சி முறையை அவன் முடியாட்சி முறை மூலம் செயல்படுத்தி வந்தான். முதன்முதல் உலகிலேயே நிர்வாகிகளை மக்களால் தேர்ந்தெடுக்க குடவோலை முறையைக் கொண்டு வந்த தமிழ் மன்னன் இவன் தான். இன்றைக்கு இருக்கின்ற ஊராட்சி முறைகளுக்கு முன்னோடியாக சீராட்சி நடத்திக் காட்டியவன் இராசராசன். மத்தியிலே அதிகாரங்களைக் குவித்துக் கொண்டிராமல் அதிகார முறையைப் பரவலாக்கி தன் நாட்டை மண்டலங்களாகவும், கூற்றங்களாகவும், வள நாடாகவும் பிரித்து அனைத்தும் சுயாட்சியோடு நடைபெறும் வகையில் ஆட்சி செய்தவன் இராசராசன்.

வரி ஏய்ப்பு செய்பவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாதபடி சட்டம் வகுத்தவன் இராசராசன். இவ்வளவு சிறப்புக்குரிய மன்னன் கட்டிய கோயில் தான் தஞ்சை பெரிய கோவில். அறிவியல் உலகம் வியக்கத்தக்க வகையில் கட்டிய கோவில் இது. அத்தகைய கோயிலைக் கட்டிய இராசராசனுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசு அவனுடைய சிலையினை அவன் கட்டிய கோயிலுக்குள் வைக்க மத்திய அரசிடம் அனுமதி கேட்டு பலமுறை வாதாடி, போராடிய நிகழ்ச்சி கழக ஆட்சியில் முக்கியமானதொன்றாகும்.

உண்மையிலேயே மக்களாட்சி முறையை மதிக்கின்ற அரசாக இந்திய அரசு இருந்தால் உலகிலேயே முதன் முதல் மக்களாட்சி முறையை ஏற்படுத்தி இன்றைய ஆட்சி நிர்வாகங் களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த இராசராசனை ஜனநாயக நாட்டின் முதல் அரசனாக ஏற்று அவன் கட்டிய ஆலயத்திற் குள்ளேயே அவனுடைய சிலையினைத் திறக்க மத்திய அரசு அனுமதித்திருக்கும். ஆனால் மத்திய அரசு இராசராசன் கட்டிய கோவிலுக்குள்ளே அவனுடைய சிலையினைத் திறந்து வைக்க தமிழக அரசின் சார்பில் கடிதம் மூலமாகவும், நேரிலும் பலமுறை கேட்டுக் கொண்ட பிறகும் அனுமதி தராமல் வாயிற் காப்போனைப் போல கோயிலுக்கு வெளியே வைப்பதற்குத்தான் அனுமதி தந்தார்கள்.

அதன் அடிப்படையில் 1972-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நாளன்று இராசராச சோழன் சிலைத் திறப்பு விழா தஞ்சை பெரிய கோவிலுக்கு அருகே நடைபெற்றது. அந்த விழாவிற்கு கல்வி அமைச்சர் நாவலர் தலைமை தாங்கிட, அமைச்சர் மன்னை வரவேற்பரை ஆற்றிட, நான் இராசராசசோழன் சிலையினைத் திறந்து வைத்தேன். தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., அமைச்சர் கண்ணப்பன் ஆகியோரும் உரையாற்றினர். அவ்வை டி.கே. சண்முகம் அவர்களின் இராசராச சோழன் நாடகம் விழா முடிவில் நடைபெற்றது.

அரசு சார்பில் அந்த விழா நடைபெற்றாலும், தஞ்சை நகரத்தையே கழக நண்பர்கள் அண்மையில் மறைந்து விட்ட தஞ்சை நடராசன் தலைமையில் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு அலங்கரித்திருந்தனர். ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அந்த விழாவில் கலந்து கொண்டனர். உணர்ச்சியும் உத்வேகமும் போட்டியிட மக்கள் அந்த விழாவில் ஆர்வம் காட்டினர்.

அந்த விழாவில் நான் பேசும்போது கூறியதாவது:-

"அருள்மொழித்தேவன் எனும் இயற்பெயர் படைத்த மாமன்னன் இராசராசசோழனின் திருவுருவச் சிலைத் திறப்பு விழா இந்த இடத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மாமன்னன் கட்டிய பெரிய கோவிலுக்குள்ளே அவனது சிலையை வைக்க வேண்டும் என்ற முயற்சியிலே நாம் வெற்றியினைப் பெறாமல் அவன் அமைத்த ஆலயத்துக்கு எதிரில் அவனது சிலையை நிறுவியிருக்கிறோம்.

அவன் ஆண்ட மண்ணின் தலைநகரில் அவன் கட்டிய கோவிலுக்குள் அவனது சிலையை திறந்து வைக்கக் கூடாது என்று மத்திய அரசு அனுமதி மறுத்து விட்டதற்காக நண்பர்கள் இங்கே வருத்தத்தோடு பேசினார்கள்.

அவர்கள் இராசராசனின் சிலையை கோவிலுக்குள் வைக்க அனுமதி மறுத்தத்தற்குக் காரணங்கள் உண்டு.

சிலம்புச் செல்வர் அவர்கள் என்னைப் பார்த்து 'லட்சோப லட்சம் மக்கள் திரண்டிருக்கும் இந்தக் காட்சியைச் செய்திப் படப் பிரிவினர் படம் பிடித்தார்களே; அதை மத்திய அரசக்கு அனுப்பி வையுங்கள் என்று கூறினார்.

செய்திப்படம் பார்த்துத்தான் லட்சோப லட்ச மக்கள் கூடியிருக்கிறார்கள் என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டியதில்லை. அவர்களுக்கு முன்பே தெரியும்—இந்த சிலை திறப்பு விழாவிற்கு இலட்சக்கணக்கான மக்கள் வருவார்கள் என்று கோவிலுக்குள் சிலை அமைப்பு விழா நடத்தினால் இந்த லட்சக் கணக்கான மக்கள் கூட்டம் இடம் கொள்ளாது அவதியுறும் என்ற காரணத்தால் தான் போலும்; கோவிலுக்குள் சிலை வேண்டாம்; வெளியே வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள்.

கன்னித் தமிழ் மன்னன்—களம் பல கண்டவன் கடாரம் வென்றவன்—அவன் செல்லாத நாடில்லை; வெல்லாத பூமியில்லை—சோழன் சென்றான்; வென்றான்; ஆட்சியில் நிலைத்து நின்றான் எனும் பெரும் புகழுக்குரிய பெருமன்னன் சிலை அவன் கட்டிய பெருவுடையார் கோவிலில் வைக்க அனுமதி கிடைக்கவில்லை என்பது சாதாரண நிகழ்ச்சி அல்ல.

ஆலயத்தைக் கட்டியவனுக்கு ஆலயத்தில் இடமில்லை; வெளியே வைத்துக் கொள் எனும் ஆணை கேட்டதும்...... இதற்குக் கூட உரிமை இல்லை என்றால் நமது மற்ற உரிமைகள் என்ன ஆவது? என்ற உணர்ச்சி தமிழர் உள்ளத்திலெல்லாம் அரும்பிடத் தொடங்கியது.

இராசராசசோழன் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் உணர்ச்சியின் திருவுருவாகத் திகழ்ந்தான். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்று சிலை உருவில் இங்கே நின்றிருந்தாலும் அந்த உணர்ச்சியை நமக்கு ஊட்டிக் கொண்டிருக்கிறான்

சிலையை அமைக்கும்போது கோவிலுக்குள் இடம் தர மறுத்து விட்டதால் இங்கே சிலை அமைக்கப்படுகிறது என்ற சொற்றொடரை அமைக்குமாறு சிலம்புச் செல்வர் கூறினார். அவ்விதமே அமைத்திருக்கிறோம்.

இந்தச் சிலை திறப்பு பிரச்சினையை மாநில சுயாட்சியோடு தொடக்கக் காலத்தில் நாங்கள் இணைக்கவில்லை. இராசராச சோழன் தோன்றிய சதயத் திருநாளில் நடந்த விழாவின்போது இராசராச சோழனின் சிலையை கோவிலுக்குள் வைக்கும் எண்ணம் ஏற்பட்டது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

மத்திய அரசுக்கு எழுதினோம். அப்போது கூட மாநில சுயாட்சியோடு இந்தப் பிரச்சினையை முடிச்சுப் போடும்

எண்ணம் எழவில்லை. ஆனால்...தமிழகத்திலேயே மிகப் பெரிய ஆலயத்தைக் கட்டியவனுக்கு அந்த ஆலயத்திலே சிலை வைக்கக் கூடாது; இது தான் மத்திய அரசு நமக்குத் தந்த பதில்.

இது போன்று 1966-ஆம் ஆண்டிலும் அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சியின் முதல்வர் பக்தவத்சலம் வேலூர் கோட்டைக்குள்ளே மிகப் பெரிய ஆலயம் இருக்கிறது. அதற்குள்ளே ஆண்டவன் சிலை இல்லை. ஆகவே அங்கே ஒரு சிலை வைக்க வேண்டும். அதோடு வேலூர் கோட்டையைப் பராமரிக்கும் பொறுப்பை மாநில அரசின் தொல்பொருள் காப்புத் துறைக்கு அளிக்க வேண்டும் என்று டில்லிக்கு கடிதம் எழுதினார்.

முடியாது என்பது தான் டில்லி தந்த பதில். முடியாது எனும் பதில் முன்னேற்றக் கழக ஆட்சிக்கு மட்டும் கிடைக்கும் பதிலல்ல; காங்கிரஸ் ஆட்சிக்கும் கிடைத்த பதில் தான்.''

அந்த இராசராச சோழன் சிலை திறப்பு விழாவில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. பேசும்போது ''இந்தச் சிலையை திறந்து வைத்ததன் காரணமாக அப்பரும்,திருஞானசம்பந்தரும்,மாணிக்க வாசகரும் தமிழக முதலமைச்சர் கலைஞரை வாழ்த்துவார்கள்.

கலைஞர் நினைத்திருந்தால் இதை தகராறுக்குரிய பிரச்சினையாக ஆக்கியிருக்க முடியும். கலைஞர் அவர்கள் நினைத்திருந்தால் இந்தச் சிலை தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள சிலை—நிரந்தரமாக உள்ளே வைக்கும்வரை எந்த மத்திய மந்திரியும் இங்கே வரவிடாமல் தடுக்க எங்களால் முடியும். ஆனால் தர்மத்துக்கு அஞ்சுகிறோம்'' என்றார்.

இது தஞ்சையில் நடைபெற்ற விழா.

அடுத்து சோழ நாட்டின் தனிப் பெருந் தலைநகராக விளங்கியது பூம்புகார்!

பொதுவாக கடலுடன் ஆறு கலக்கும் முகத்துவாரத்திற்கு புகார் என்பது பெயர். அதன்படி காவிரியாறு கடலுடன் கலக்கும் இடமும் புகார் என்றே வழங்கப்பட்டது. பின்னர், இந்தப் புகார் பொலிவின் காரணமாகவும், சிறப்பின் காரணமாகவும் பூம்புகார் என்று அழைக்கப் பெற்றது. பிற்காலத்தில் பூம்புகார் என்னும் பெயர் மாறி, காவிரி புகும் பட்டிணம் என்றாகி, அதுவும் நாளடைவில் காவிரிப்பூம்பட்டிணம், காவிரிப்பட்டிணம், காவேரிப்பட்டிணம் என்று பலவாறாக அழைக்கப்படலாயிற்று.

கழக அரசு பழந்தமிழ் பெயர்களையும், போற்றத்தக்க பழந்தமிழ்ப் பண்பாட்டையும் விடாமல் வலியுறுத்தி வந்ததால், மீண்டும் பூம்புகார் மலர்ந்து, தமிழர் மனத்தில் மகிழ்ச்சியும் எழுச்சியும் ஏற்படுத்த திட்டமிட்டது.

காவிரிப் பூம் பட்டிணம் மூன்று பிரிவுகளாக விளங்கியது. கடற்கரை ஓரமாக அமைந்த பகுதி மருவூர்ப்பாக்கம்; நகராக அமைந்த பகுதி பட்டிணப்பாக்கம், இரண்டிற்கும் இடையே அமைந்த பகுதி நாளங்காடி.

கரிகால் சோழன் காலத்தில் தான் காவிரி பூம் பட்டிணம் சிறப்போடு விளங்கியது. அவன், வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வளர் பேரிமயத்துப் புலிக்கொடியை நாட்டி விட்டுத் திரும்பினன். அவன் மீண்டு வரும் வழியில் வச்ர நாட்டு மன்னன் முத்துப் பந்தர் ஒன்றையும், மகத அரசன் தோரண வாயில் ஒன்றையும், திறையாகவும், பரிசாகவும் கொடுத்தனர்.

முத்துப் பந்தரும், தோரண வாயிலும் பொன்னும் மணியும் இழைத்த அரிய வேலைப்பாடுகள் உடையவை. கரிகாலன் இவற்றை யெல்லாம் காவிரிப் பூம் பட்டிணத்திற்குக் கொண்டு வந்து ஒன்று சேர்த்துக் கண்கவரும் கொலுமண்டபம் ஒன்றை அமைத்தான். இந்த மண்டபம் புலவர்கள் பாடும் சிறப்பைப் பெற்றது. இதற்கு பட்டி மண்டபம் என்று பெயர்.

பட்டினப் பாக்கத்தில் ஐவகை மன்றங்கள் இருந்தன. வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச் சதுக்கம், பாவை மன்றம் ஆகியவைகளாகும்.

இவைகள் எல்லாம் அமையப் பெற்ற பூம்புகார் காலத்தின் கோலத்தால் கடற்கோளுக்கு இரையாகி, மறைந்த நகரங்களில் ஒன்ருகி விட்டது. அப்படி மறைந்த நகரை மீண்டும் அதே வனப்புடன் காணவேண்டும்—கண்ணகி வாழ்ந்த ஊரில் அவளுக்கு நிலையான நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்று நான் பெரிதும் விரும்பினேன்.

சிலப்பதிகாரக் காட்சிகளை சிற்பங்களாக வடித்து அவற்றை ஒரு மண்டபத்திலே அமைத்து, சிலப்பதிகாரக் கதையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைக்க வேண்டுமென்று, அதற்காக சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்றினை நிறுவ வேண்டுமென்றும் திட்டமிட்டேன். அந்தக் கலைக்கூடம் அமைந்துள்ள கட்டிடம் எழுநிலை மாடம் என பெயர் பெற்றது. நான்கரை லட்ச ரூபாய் செலவில் இந்தக்

கலைக்கூடம் அமைக்கப்பட்டது. இதனை 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் தேதி அதாவது இந்திர விழா நடந்த சித்திரைப் பௌர்ணமித் திருநாளில் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இந்தக் கலைக் கூடத்தில் கண்ணகியின் கதையை விளக்கும் 48 சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இப்படி சிற்பத்தில் ஒரு காப்பிய கதையை வடித்த முதல் கலைக்கூடம் இதுதான்! அதைத் விர ஒரே கல்லில் எட்டு அடி உயரம் உள்ள மூன்றரை டன் எடையுள்ள மாதவி சிலை ஒன்றும் அற்புதமாக வடிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கிறது: இந்தச் சிலைகள் யாவும் மாமல்லபுரத்திலுள்ள அரசினர் சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்தில் கணபதி ஸ்தபதி அவர்கள் மேற்பார்வையில் செய்யப்பட்டதாகும்.

கலைக் கூடம் ஏழு மாடங்கள் கொண்டதாகவும், முதல் மாடம் 12 அடி உயரமும், அதன் மேலுள்ள ஒவ்வொரு மாடமும் ஐந்து அடி உயரம் கொண்டதாகவும், ஏழாவது மாடத்திற்கு மேலுள்ள கலசப் பகுதி எட்டு அடி உயரமும் கொண்டு, மொத்த உயரம் ஐம்பது அடிக்கு மேல் உள்ளதாகும்.

சுற்றுலா பயணிகள் வசதிக்காக அறிஞர் அண்ணு பெயரில் விருந்தினர் மாளிகை ஒன்றும் அங்கே கட்டப்பட்டது. முத்துச்சிப்பிகள் வடிவிலும், நத்தைகள் வடிவிலும் தங்கும் விடுதிகள் அமைக்கும் பணியும் தொடர்ந்தது.

சென்னையில் உலகத் தமிழ் மாநாடு எந்த அளவிற்கு விழாக்கோலம் கொண்டு நடைபெற்றதோ, அதைப் போலவே ஐந்து லட்சம் மக்கள் ஊர்வலத்திலும், இரண்டு நாள் விழாவிலே பத்து லட்சம் மக்களும் கலந்து கொண்டு நடைபெற்றது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக பிரம்மாண்டமான ஊர்வலம் ஏப்ரல் திங்கள் 17-ஆம் தேதி காலையில் நடைபெற்றது. ஊர்வலத்தில் 24 அலங்கார வண்டிகள் இடம் பெற்றன.

பிற்பகலில் அங்கே அமைக்கப்பட்டிருந்த முத்துப் பந்தரில் தமிழர் வரலாற்றுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அதற்கு கி. வா. ஜகந்நாதன் தலைமை வகித்தார். அதில் புலவர் கோவிந்தராசன், நாகசாமி, கவிஞர் சுரதா, சௌந்திரராசன், நான் அண்ணன் என அருமையாக் அழைத்திட்ட பக்கர் எம். எல். சி., செ. கந்தப்பன், இராம. அரங்கண்ணல், சா. கணேசன், ராஜாராம் நாயுடு, புதுவை முதல்வர் பருக் மரைக்காயர் ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து கல்வி அமைச்சர் நாவலர் தலைமையில் சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை நான் திறந்துவைத்தேன். அதன் பின் பூம்புகார் கடற்கரை நிலா முற்றத்தில் நாவலர் தலைமையில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. அதில் தவத்திரு அடிகளார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பேராசிரியர் ஆகியோர் உரையாற்றிய பின் நான் உரையாற்றினேன். இரவு கவிஞர் கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்ட சிலப்பதிகார நாட்டியம் திருமதி கமலா குழுவினரால் நடத்தப்பட்டது. அதன்பின் நான் எழுதிய சிலப்பதிகார நாடகத்தை கரிகாலன் நாடக மன்றத்தினர் நடத்தினர்.

வெளி நாட்டுப் பயணிகளை கவரத் தக்க வகையில் இத்தகைய ஏற்பாடுகளை செய்ததோடு நின்று விடாமல், கலைக் கூடத் திறப்பு விழாவின்போது நான் கூறினேன். "இந்த இடத்தில் அழகிய கட்டிடங்கள், எழிலான மாடங்களை அமைப்பது மாத்திரம் தான் கழக அரசின் திட்டமல்ல; இப்பகுதியில் வாழும் ஏழையெளிய மீனவர்களுக்காக தமிழக அரசு இப்போது தீட்டியிருக்கின்ற ஒரு திட்டத்தை இங்கே நான் வெளியிடுவது நலம் என்று கருதுகிறேன். இந்தப் பூம்புகார் கடற்கரை ஓரத்தில் கிட்டத்தட்ட எழுநூறு மீனவர்கள் வாழ்கிறார்கள் அவர்களில் 400 பேர் கட்டு மரத்தை வைத்துக் கொண்டு தொழில் நடத்துபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எங்கள் கண்ணீரைத் தீர்க்க நீங்கள் எண்ண மாட்டீர்களா என்று அவர்கள் நினைப்பதற்குமுன் அதைச் செய்துமுடிக்க வேண்டும் என்று கருதும் இந்த அரசு வீட்டு வசதித் துறை வாயிலாகவும் சென்னையில் உள்ள குடிசை மாற்று வாரியம் தரும் அனுபவத்தின் அடிப்படையிலும் இங்குள்ள மீனவ மக்களுக்கெல்லாம் விரைவில் அவர்களது குடிசைகளை மாற்றி நல்ல வீடுகள் கட்டித் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியதோடு நின்று விடாமல் நாற்பது இலட்ச ரூபாய் நிதியினை அந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு வீடு கட்டித் தந்ததோடு, மீனவர்களுக்கு படகுகளும், நைலான் வலைகளும் வழங்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்தேன்.

ஏப்ரல் 18–ஆம் நாள் பூம்புகாரின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காலையில் "சிலப்பதிகாரத்தில் பெரும் சிறப்புடையது புகார் காண்டமா? மதுரைக் காண்டமா? வஞ்சிக் காண்டமா?" எனுந்தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது.

பட்டி மன்றத்திற்கு மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரான டாக்டர் மு. வ. அவர்கள் நடுவராக இருந்தார். புகார் காண்டமே சிறப்புடையது எனும் தலைப்பில் அவ்வை நடராசன், அறிவுடை நம்பி, கோவை இளஞ்சேரன் ஆகியோரும், மதுரைக் காண்டமே சிறப்புடையது எனும் தலைப்பில் சிலம்பொலி செல்லப்பன், மா. கி. தசரதன், புலவர் பொன்னி வளவன் ஆகியோரும், வஞ்சிக் காண்டமே சிறப்புடையது எனும் தலைப்பில் கா. வேழவேந்தன், புலவர் நன்னன், பேராசிரியர் காந்திமதி நாதன் ஆகியோரும் வாதிட்டனர்.

மாலையில் சிலப்பதிகாரத்தில் பாத்திரப் படைப்பு குறித்த கவியரங்கம் உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் நடை பெற்றது. பாண்டியனைப் பற்றி கவிஞர் சிக்கந்தரும், செங்குட்டு வனைப் பற்றி கவிஞர் தி. கு. நடராசனும், கண்ணகி பற்றி கவிஞர் முருகு சுந்தரமும், கவுந்தி அடிகள் பற்றி கவிஞர் கொத்த மங்கலம் சுப்புவும், மாதவி பற்றி கவிஞர் ஈரோடு தமிழன்பனும், கோவலன் பற்றி சுகி சிவனும் கவி பாடினர்,

தொடர்ந்து பூம்புகார் நிலா முற்றத்தில் இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் இன்னிசை நடை பெற்றது.

இறுதியாக நான் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விழா நிறைவுரை ஆற்றினேன். அப்போது ஆண்டுதோறும் பூம்புகார் விழா நடைபெறும் என்று அறிவித்தேன். ஆனால் கழக ஆட்சி மாறிய பிறகு அந்தப் பகுதியே சரியாகக் கவனிக்கப்படாத நிலைக்குள்ளாயிற்று!



# 57

## முப்பெரும் இழப்பு

**1972-**ஆம் ஆண்டு தொடங்கி 1973-ஆம்ஆண்டு இறுதிக்குள்ளாக தமிழகத்தின் மூன்று பெரும் வைரத்தூண்கள் சாய்ந்து விட்ட சோக சரித்திர ஏடுகள் தமிழர்களின் கண்ணீர்ப் பெருக்கிடையே புரண்டு விட்டன.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தலைவரும் பெரியாரின் அன்புக்கும், பேரறிஞர் அண்ணாவின் பாசத்திற்கும், எனது மட்டற்ற மதிப்புக்கும் உரியவரான பெருந்தகையாளர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் இயற்கை எய்தினார். மார்ச் இறுதியில் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சென்ற அவரை மீண்டும் தமிழகம் காண முடியாமல் கண்ணீரில் மிதந்தது. அவர் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்று செய்தி அறிந்தவுடன் கோவை மாவட்ட சுற்றுப் பயணத்தில் இருந்த நான் அதனை ரத்து செய்து விட்டு உடனடியாகச் சென்னை திரும்பினேன்.

ஸ்டான்லி மருத்துவமனையில் அவரது நிலையைக் கண்ட போது அந்தத் துயரத்தைத் தாங்கிக் கொள்ள எனக்குத் தெம்பு இல்லாமல் போயிற்று. அவரது பேரன்பைப் பெரிதும் பெற்றவரான எனது ஆருயிர் நண்பர் அப்துல் சமது அவர்களும், கேரளத்துச் சிங்கமெனப் புகழப்பட்ட முகமது கோயா அவர்களும், அண்ணன் திருப்பூர் மொய்தீன், அன்பு நண்பர்கள் அப்துல் லத்தீப், காஜாமொய்தீன், பீர்முகமது ஆகியோரும் தென்காசி ரிபாயி அவர்களும் அப்போது காயிதே மில்லத் அவர்களின் படுக்கையருகே இருந்தனர்.

கண்மூடி மயக்க நிலையில் படுத்திருந்த அவர் அருகே குனிந்து மெல்லிய குரலில் ''அய்யா! நான் கருணாநிதி வந்திருக்கிறேன்" என்று கூறினேன். அந்தக் குரல் கேட்டு காயிதே மில்லத் அவர்கள் கண் விழித்துப் பார்த்தார். அந்த நிகழ்ச்சி குறித்து தென்காசி எ. கே. ரிபாயி அவர்கள், அவர் எழுதிய ''கவ்மின் காவலர்'' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதை அப்படியே கோடிட்டுக் காட்டுகிறேன்.

"அவர்கள் கண் விழித்துப் பார்த்தார்கள். வந்திருப்பது யார் என்பதையும் புரிந்து கொண்டார்கள். கலைஞர் கருணாநிதியைப் பார்த்ததும் தங்களது கரங்களை நீட்டினார்கள். அவரும் அக்கரங்களைப் பிடித்துக்கொண்டார். அச்சமயம் காயிதே மில்லத் அவர்கள், மிகவும் பலகீனமான குரலில் "முஸ்லீம் சமுதாயத்திற்குத் தாங்கள் செய்த உதவிகளுக்கெல்லாம் எனது நன்றி" என்று கூறினார்கள். இவ்வார்த்தைகளைக் கலைஞர் கருணாநிதி எதிர்பார்க்கவேயில்லை, இதைக் கேட்டதும் அவர் அப்படியே மெய் மறந்து விட்டார். அவரது கண்கள் கலங்கிவிட்டன. என்ன சொல்வதென்றே தெரியாது அவர் தத்தளித்துக் கொண்டிருந்தார். அதற்குள்ளாக காயிதே மில்லத் அவர்களின் கண்கள் மூடிக் கொண்டன. மீண்டும் மயக்கநிலை ஏற்பட்டு விட்டது. அதற்குப் பிறகு தலைவர் அவர்கள் மீண்டும் சுய நினைவு பெறவேயில்லை."

எத்தகைய அன்புள்ளங்கொண்ட ஒரு மாமனிதரை நான் இழந்து விட்டேன் என்பதை எண்ணிக் கண்ணீர் வடித்தேன்.

காயித்த மில்லத் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் பேட்டை என்ற கிராமத்தில் பிறந்தவர். காந்தியடிகளும், அலி சகோதரர்களும் தேசீய இயக்கத்தில் ஈடுபட்டிருந்த போது அவர்களது அழைப்பின் பேரில் காயிதே மில்லத் அவர்கள்தனது கல்லூரி படிப்பை விட்டுவிட்டு தீவிர அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டார். 1936-ஆம் ஆண்டில் முகம்மது அலி ஜின்னாவின் ஆலோசனைக்கேற்ப முஸ்லீம் லீகில் காயிதே மில்லத் சேர்ந்தார். 1946-ஆம் ஆண்டு சென்னை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட காயிதே மில்லத் 1948-இல் சென்னை சட்ட மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கியவர். டெல்லி அரசியல் நிர்ணய மன்றத்தின் உறுப்பினராகவும் மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தவர். 1962-இல் கேரளத்தில் உள்ள மஞ்சேரி தொகுதியிலிருந்து நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காயிதே மில்லத் அவர்கள் இறுதிக் காலம் வரை அந்தக் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப் பட்டு வந்தார். வேட்பு மனு தாக்கல் செய்த பிறகு வாக்கெடுப்பு நாள் வரையில் தன் தொகுதிக்குள் அடியெடுத்து வைக்காமலே வெற்றி பெற்றவர் என்ற தனிச்சிறப்பு காயிதே மில்லத் அவர்களுக்கு உண்டு.

1965-ம் ஆண்டு இந்தியா மீது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடத்திய போது நாட்டுப் பற்று மிகுந்த காயிதே மில்லத்

அவர்கள் தன்னுடைய முஸ்லீம் லீக் இயக்கத்தின் முழு ஆதரவையும் பாகிஸ்தானை எதிர்ப்பதற்குத் தந்தார். அது மாத்திரமல்ல, இந்திய மண்ணின் மானத்தைக் காக்கும் வீரப் போருக்கு தன்னுடைய ஒரே செல்வன் மியாகானை தருகிறேன் என்றும் காயிதே மில்லத் அப்போது அறிவித்தார்.

இந்திய அரசியல் நிர்ணய சபையில் இந்தியாவின் பொது மொழியாக ஆட்சிமொழியாக இந்தி தான் இருக்க வேண்டுமென்ற போது, அந்த அவையில் உறுப்பினராக இருந்த காயிதே மில்லத் அவர்கள் அதனை கடுமையாக எதிர்த்தார். இந்தி கூடாது என்றால் இந்தியாவின் ஆட்சி மொழியாக எந்த மொழியை ஏற்பது என்று அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் கேட்டனர். "வளம் செறிந்ததும் தொன்மை நிறைந்ததுமான என தருமைத் தாய்மொழியுமான தமிழ் மொழியையே ஆட்சி மொழியாக்கலாம்", என்று ஆணித்தரமாக முழங்கியவர் காயிதே மில்லத் அவர்களாகும்.

அந்தப் பெருமகனாரின் இழப்பைத் தொடர்ந்து மற்றொரு பேரிழப்பு: 1972 டிசம்பர் திங்கள் 25-ஆம் நாள் மாலை 6 மணி அளவில் சென்னைப் பொது மருத்துவமனையில் இந்தியாவின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான மூதறிஞர் ராஜாஜி அவர்கள் காலமானார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட தென்னாற்காடு மாவட்டம் சென்றிருந்த நான் ராஜாஜி அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தி அறிந்து உடனடியாக சென்னைக்குத் திரும்பினேன்.

"அரசியலைக் கடந்து அன்பு காட்டிய ஒரு உள்ளத்தை நாம் இழந்தோம். தேசத்தின் தலைசிறந்த மூத்த தலைவர்களில் ஒருவர் தீப ஸ்தம்பம் சாய்ந்தது போல் சாய்ந்துவிட்டார்" என்று எனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ராஜாஜி அவர்களுக்கும் தி. மு. கழகத்திற்கும் இருந்த உறவு எத்தகையது என்பதை ராஜாஜி அவர்களே, "நமக்கிடையே உள்ள நட்பு நீக்க முடியாதது" என்று தமது கடைசி நாட்களில் குறிப்பிட்டார்.

அவருக்கும் கழகத்திற்கும் அது போல அண்ணா அவர்களுக்கும் அதற்கடுத்து எனக்குமுள்ள தொடர்பில் ஒன்றிரண்டை மட்டும் இங்கே நினைவு கூர்ந்திட விழைகிறேன்.

சென்னை மாநகராட்சி தேர்தலின் போது சுதந்திரா கட்சி தி. மு. கழகத்துடன் உறவு கொண்டு போட்டியிட்ட போதிலும், அந்தத் தேர்தலில் தோழமைக் கட்சியான சுதந்திரா கட்சி தோல்வி கண்டது. அந்தத் தோல்வியைப் பற்றி ராஜாஜி கூறும் போது "தி. மு. கழக வெற்றி என்பது சாம்பார். அதில் பல கட்சிகள் காய்கறிகள், பருப்பு போல் இருக்கின்றன. ஆனல்எனது கட்சி உப்பு போன்றது. உப்பின் உருவம் சாம்பாரில் தெரியாது. அது போல நாங்கள். இந்த வெற்றியில் எங்கள் உருவம் இல்லை. சாம்பாரில் உருவம் இல்லாமல் கலந்து உப்பு சுவையேற்றுவது போல இந்த வெற்றிக்கு நாங்கள் சுவையேற்றுகிறோம்" என்று சொன்னர்.

1964-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது ராஜாஜி அவர்களுக்கும் தி. மு. கழகத்திற்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. 1937-38-ஆம் ஆண்டில் இந்தியை தமிழகத்தில் வெகுவேகமாக நுழைப்பதற்கு காரணமாக இருந்த ராஜாஜி அவர்களே, 1965-ஆம் ஆண்டு "இந்தி வெறியர் களின் போக்கைப் பார்க்க எனது மூளையில் கூட பிரிவினை எண்ணம் வந்து விட்டது" என்று கூறினர்.

1967-ஆம் ஆண்டு தேர்தலின் போது ராஜாஜி மிகுந்த உற்சாகத்தோடு தி. மு. கழகம் ஆட்சி அமைப்பதைப் பார்த்து விட்டுத்தான் நான் கண் மூடவேண்டும் என்றார். அவரது அந்த ஆசையை தி.மு. கழகம் அவரது வாழ்நாளிலேயே நிறைவேற்றிக் காட்டியது.

1967-இல் கழக ஆட்சி அமைந்த சில நாட்களுக்குப் பிறகு தி.மு. கழகத்திற்கும் சுதந்திரா கட்சிக்கும் இடையே சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதைப் பற்றி குறிப்பிடும் போது கூட ராஜாஜி அவருக்கே உரிய பாணியில் "தி. மு. கழகத்திற்கும் சுதந்திரா கட்சிக்குமான தேன் நிலவு முடிந்து விட்டது" என்று குறிப்பிட்டார். அதைப்பற்றி அண்ணு அவர்கள் கூறும் போது தேன் நிலவு முடிந்து விட்டது என்று ராஜாஜி கூறுவதற்குக் காரணம், குடும்ப வாழ்க்கையை இனி துவக்க வேண்டும் என்பதற்காகத் தான்" என்றார்.

அறிஞர் அண்ணு அவர்கள் காலத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி, ராஜாஜி அவர்கள் என்பால் செலுத்திய அன்பு அலாதியானது. சிறப்பானது. 1964 இந்தி எதிர்ப்பு போராட்டத் தின் போது சென்னை ராயப்பேட்டை லெட்சுமிபுரம் யுவர் சங்கத் தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் ராஜாஜி அவர்

களும் நானும் தோழர் ஈ. வே. கி. சம்பத்தும் ஒன்ருகப் பேசினேம். அந்தக் கூட்டத்தில் நான் பேசும் போது "தூக்கணாங் குருவியொன்று தனது கூட்டுக்கு ஒளி கிடைக்கும் என நினைத்து கொள்ளிக்கட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து கூட்டில் வைத்ததாம். அது ஒளி கொடுப்பதற்குப் பதில் கூட்டையே பொசுக்கி விட்டதாம். அதுபோல தமிழகம் பயன்பெறும் என்று இந்தியைக் கொண்டு வந்தார் ராஜாஜி. ஆனல் அந்த இந்தியோ தமிழகத்தையே சுட்டுப் பொசுக்க முயல்கிறது'' என்று குறிப்பிட்டேன். அந்த உவமையை ராஜாஜி கேட்டு விட்டு, மனந் திறந்து என்னைப்பாராட்டினர். அந்தக் கூட்டத்தில் ஆங்கிலத்தில் பேசிய ராஜாஜி ''கருணாநிதி முழுக்க முழுக்க அரசியல் வாதி; இலக்கிய வாதி; பத்திரிகைக்காரர்'' என்று பாராட்டினர்.

அவர் மறைவதற்கு இரண்டொரு திங்களுக்கு முன்னல் 2-10-72 அன்று விடுதலை வீரர்களுக்கெல்லாம் தாமிர விருது அளிக்கும் விழா சென்னையில் ஏற்பாடாகியிருந்தது. அந்த விழாவில் ராஜாஜி அவர்களுக்கும் விருது வழங்கிட விருந்தோம். அதை அறிந்த ராஜாஜி அவர்கள் தனிப்பட எனக்கொரு கடிதம் எழுதினர். அதில் ''அன்புள்ள கருணாநிதி அவர்களுக்கு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு நீங்கள் தாமிர பத்திர விருதினை வழங்குவதாக அறிகிறேன். அந்த விழாவில் கலந்து கொண்டு உங்கள் கையால் தாமிரவிருது பெற இயலாமை குறித்து வருந்துகிறேன். எனவே என்னுடைய சார்பில் நீங்களே அந்த தாமிர பத்திரத்தைப் பெற்று எனக்கு அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று எழுதியிருந்தார்.

அதன்படி 2-10-72 அன்று நடைபெற்ற விழாவில் ராஜாஜி அவர்களுக்கான தாமிர பத்திர விருதினை ராஜாஜி அவர்கள் சார்பில் கவர்னரிடமிருந்து நானே பெற்றுக் கொண்டு, மறுநாள் அக்டோபர் 3-ஆம் தேதி அன்று காலை ராஜாஜி அவர்களின் இல்லத்திற்குச் சென்று தாமிர பத்திர விருதினை ஒரு தட்டில் வைத்து, அத்துடன் பழங்களையும் வைத்து—பெரிய ரோஜாப்பூ மாலை ஒன்றினை ராஜாஜி அவர்களுக்கு அணிவித்து, விருதினையும் வழங்கினேன்.

அதனைப் பெற்றுக் கொண்ட ராஜாஜி ஒரு பெரிய ஜரிகை மாலையை எனக்கு அணிவித்தார். ''முதல்வர் கருணாநிதி நேரில் வந்து தாமிர பத்திரத்தை எனக்குத் தருவதாக தீர்மானித்தது

நம்முடைய நாட்டுப் பண்பாட்டோடு ஒட்டி நின்ற மரியாதை முறை. இதை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்று பின்னர் அது குறித்து ராஜாஜி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் சிறிது நேரம் அவருடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு வீட்டிற்குச் செல்ல புறப்பட்ட போது ராஜாஜி அவர்கள் என்னை ஆசிர்வதிப்பதாகக் கூறி "என் ஆசிர்வாதம் வீண் போகாது" என்று சிரித்துக் கொண்டே கூறினார். அதைக் கேட்டு நான் சிரித்துக் கொண்டே "வீண் போகவில்லை. நீங்கள் கொடுத்து விட்ட ஆசிர்வாதத்தை உங்களாலேயே மாற்ற முடியாது" என்று கூறினேன். அதைக் கேட்டு ராஜாஜியும் சிரித்தார். பின், வாசல்வரை வந்து என்னை வழியனுப்பி வைத்தார்.

நான் இவ்வாறு கூறியதை மனதிலேயே வைத்துக் கொண்டிருந்த ராஜாஜி அதற்குப் பின் சில நாட்கள் கழித்து ஒருநாள் திடீரென்று அவருக்கு உடல் நலம் இல்லை என்ற செய்தி கேட்டு நானும், நாவலரும் அவரைப் பார்க்கச் சென்றோம். அப்போது ராஜாஜி அவர்கள் நான் என்னுடைய மகன் அழகிரி திருமணத்திற்கு அழைப்பதற்காகத் தான் வந்திருக்கிறேன் போலும் என நினைத்துக் கொண்டு, திருமணத்திற்கு நேற்றே வாழ்த்து அனுப்பி விட்டேனே என்றும் கலப்புத் திருமணம் எனக் கேள்வியுற்று மகிழ்கிறேன் என்றும் கூறினார். நான் திருமணத்திற்கு அழைப்பதற்காக இப்போது வரவில்லை. உடல் நலிவுற்றிருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டு பார்க்க வந்தேன் என்று சொன்னேன். உடனே என்னை அருகே அழைத்து தலையில் கைவைத்து ஆசி கூறி, நான் சில மாதங்களுக்கு முன்னால் சொன்ன வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு "திரும்பப் பெறமுடியாத ஆசி கூறுகிறேன்" என்றார்.

அந்தப் பெரிய மனிதர், திரும்ப முடியாத இடத்துக்குச் சென்று விட்ட போது, நட்பின் இலக்கணத்தைக் காட்சி வடிவில் கண்டோம். ஆம்: தந்தை பெரியார் அவர்கள், சுடுகாடு வரையில் வந்திருந்து ராஜாஜியின் உடலுக்குத் தீ மூட்டப்பட்ட போது நீர்வீழ்ச்சி யெனக் கண்ணீர் உகுத்தாரே; அந்தக் காட்சி தான் அது.

அந்தச் சோக நிகழ்ச்சியைத் தொடர்ந்து சரியாக ஓராண்டுக்குள் தமிழகத்தை அதிரச் செய்த மற்றொரு சோக நிகழ்ச்சி:

பேரறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களின் அரசியல் ஆசானும், சுயமரியாதை இயக்கத்தின் தந்தையும், இந்தி ஒழிப்புப் போரின் முதல் தளகர்த்தரும், பைந்தமிழ் நாட்டில் பகுத்தறிவுச் சுடர் பரப்பியவரும், கௌதமபுத்தருக்குப் பின் வந்த சமுதாயசீர்திருத்தப் புரட்சியாளரும், தென்னகத்தில் முதன் முதலாக சமதர்மக் கருத்துக்களை அறிமுகம் செய்தவரும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பாதுகாவலரும், திராவிடக் கழகத்தின் ஒப்பற்ற தலைவருமான பகுத்தறிவுச் சிங்கம், சமுதாயப் பணி நடத்திய சரித்திரநாயகன், தன்மான மூட்டிய தங்கம், தமிழினத்தின் வழிகாட்டி தந்தை பெரியார் அவர்கள் 1973-ஆம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மறைந்து சரியாக ஓராண்டு கழித்து, டிசம்பர் 24-ஆம் நாள் காலை 7-40 மணிக்கு வேலூர் மருத்துவமனையில் இயற்கை எய்தினர். செய்தி கேட்டு இயக்கத் தோழர்களும், தாய்மார் களும் "நடக்கக் கூடாதது நடந்து விட்டதே; சீர்திருத்தப் போரின் நாயகனது புரட்சி வாழ்வு முடிந்து விட்டதே; என்று கதறினர்.

செய்தி அறிந்ததும் சில நிமிடங்கள் எனக்கு என்ன செய்வதென்றே புரியாத நிலை. பழைய நினைவுகள் என் மனதில் அலை மோதின. முதலமைச்சர் என்ற முறையில் என்னை வளர்த்த அந்த ஆசானுக்கு நான் செய்ய வேண்டிய கடமை என்ன என்று சிந்தித்தேன். அவருக்கு அரசு மரியாதையுடன் இறுதிப் பயணம் செய்திட விரும்பி தலைமைச் செயலாளரை அழைத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும், பெரியாரின் உடலை பொதுமக்கள் பார்வைக்காக ராஜாஜி மண்டபத்தில் வைக்கவும் ஏற்பாடுகளைக் கவனிக்கக் கூறினேன். அதிகாரிகள் பெரியார் அவர்கள் அரசுப் பொறுப்பில் எதிலும் இல்லாத காரணத்தால் அரசு மரியாதை செய்வதற்கு விதிமுறைகள்படி வழியில்லை என்று கூறினர். அப்போது அவர்களிடம் நான் கூறினேன். "காந்தியடிகள் எந்த அரசுப் பொறுப்பில் இருந்தார்? எனவே நாம் விரும்பியபடி தந்தை பெரியாருக்கு அரசு மரியாதை தரப்பட்டே ஆகவேண்டும். அதனல் கழக அரசு கலைக்கப்படக் கூடிய நிலை தோன்றுமே யானல், அதை விட பெரிய பேறு எனக்கு இருக்க முடியாது. எனவே விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்" என்று கூறினேன். அதன்படி ஏற்பாடுகள் நடைபெற்றன. பெரியாரின் உடலை உடனடியாக சென்னைக்கு எடுத்து வரச்செய்து, ராஜாஜி மண்டபத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

பெரியார் மறைவையொட்டி பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எனக்கு அனுப்பிய இரங்கல் செய்தியில் "பெரியாரது மறைவு பற்றி அறிந்து துயருற்றேன். சர்ச்சைக் குரியனவற்றில் ஈடுபாடு கொண்டு அதில் களிப்பெய்தியமுனைப் பாற்றல் மிக்க மனிதர் அவர். ஏற்றுக் கொள்ளப்பட்ட பல கருத்துக்களை எதிர்த்து அறைகூவி நின்றவர் அவர். அவருடன் சேர்ந்து பணியாற்றிய அவர் இயக்க ஊழியர்களுக்கும், அவரைப் பின்பற்றியவர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக் கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

நான் விடுத்த இரங்கல் செய்தியில் "தந்தை பெரியார் தன்னுடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார். 95-ஆண்டுகள் வரை வாழ்ந்த அந்தப் பகுத்தறிவுச் சிங்கம் கடைசி மூச்சு வரையில் சமுதாயப் பணியை நடத்திய சரித்திரத்தை யாரும் மறுக்க முடியாது. இன்று தமிழ் நாடு தன்மான உணர்வோடு தலைதூக்கி நிற்பதற்குக் காரணமாக இருந்த மாபெரும் தலைவர். அவரால் சமுதாய அந்தஸ்து பெற்ற லட்சோப லட்சம் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது. எங்களை யெல்லாம் ஆளாக்கிய எங்கள் வழிகாட்டி. இந்தப் பிரிவு பற்றி என்ன செய்வதென்றே புரியாமல் திண்டாடுகின்றேன். இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்த புரட்சிக்காரரை இழந்து விட்டோம். அவர் தன்னுடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

பெரியாரின் இறுதி ஊர்வலத்தில் பல லட்சம் மக்கள் கலந்து கொண்டு இறுதி வணக்கம் செலுத்தினர். டிசம்பர் 25-ஆம் தேதி பகல் 3 மணி வரை பொதுமக்கள் பார்வைக்காக பெரியாரின் உடல் வைக்கப்பட்டிருந்தது. ராஜாஜி மண்டபத் திலிருந்து சரியாக 3 மணிக்கு பெரியாரின் இறுதி ஊர்வலம் புறப்பட்டு, பெரியார் திடலை 4-30 மணிக்கு அடைந்தது. இறுதி ஊர்வலத்தில் நான், அமைச்சர்கள், பெருந்தலைவர் காமராஜர், தளபதி வீரமணி, அன்னை மணியம்மையார், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., சம்பத் ஆகியோர் வந்தோம். காமராசர் என்னை அரவணைத்துக் கொண்டு ஆறுதல் கூறினர். காவல்துறையினர் சோக இசைமுழக்க, மும்முறை குண்டுகள் வெடிக்கப்பட்டு, அரசு மரியாதையுடன் தந்தை பெரியாரின் திருவுடல் கல்லறை யில் வைக்கப்பட்டது.

# 58

## கட்டபொம்மன் கோட்டை

**1973** மே திங்கள் 12-ஆம் நாள் நெல்லைச் சீமையில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மூவருக்குக் கழக அரசு விழா எடுத்தது. "செந்தமிழ் நாடெனும்போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என உற்சாகக் கவிதை பொழிந்து வீர சுதந்திர சங்கநாதம் புரிந்திட்ட முறுக்கி விட்ட மீசைக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியார் பிறந்து வளர்ந்த எட்டயபுரத்தில் அவரது பூர்வீக இல்லத்தினை நினைவுச்சின்னமாக்கிட அரசு ஏற்பாடு செய்த விழா—அன்றைக்கே ஒட்டப்பிடாரத்தில்; கப்பலோட்டிய தமிழன், வெள்ளையரை வெளியேறச் சொன்ன வேங்கை வரிப்புலி வ. உ. சிதம்பரனாருக்கு சிலை எடுத்த விழா—தொடர்ந்து பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு எடுக்கப் பட்ட உணர்ச்சிகரமான விழா.

பாஞ்சாலங்குறிச்சி விழாவில் நான் கலந்துகொள்ள வேண்டுமென்று அப்போது என்னை அழைத்தவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களான பெரியவர் மணலி கந்தசாமி அவர்களும், க. சுப்பு அவர்களுமாவார்கள்.

"பின்தங்கிய மக்களுக்கு நெஞ்சுரத்தோடு பாடுபடக்கூடிய தலைவர் ஒருவர் உண்டென்றால் அது நமது முதல்வர் கலைஞர்தான். அரசியலில் வேறுபாடு இருந்தாலும் இந்த உண்மையை ஒப்புக் கொள்வதில் நான் வெட்கப்படத் தேவையில்லை. கட்டபொம்மன் விழா எடுக்கும் இந்த நேரத்தில் அந்தக் கட்டபொம்மனாகவே நம் எதிரே கலைஞர் அவர்கள் வீற்றிருப்பதை நான் காண்கிறேன். கட்டபொம்மன் இப்போது இல்லை என்கிறார்கள்; அதை நான் நம்பமாட்டேன். அந்த கட்டபொம்மன்தான் இங்கே கலைஞராக வீற்றிருக்கிற காட்சியைக் காண்கிறேன்."

அந்த விழாவில் நண்பர் சுப்பு பேசிய பேச்சின் ஒரு பகுதிதான் இது!

அந்த நிகழ்ச்சியில் நான் அளித்த வாக்குறுதிக்கேற்ப 1974-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டு

விழா நடத்தப்பெற்று, 1974 ஆகஸ்டு 18-ஆம் நாளன்று அந்த எழுச்சிமிக்க கோட்டையின் திறப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கட்டபொம்மனின் புகழ் பாட உருவாக்கப்பட்ட கோட்டை குறித்தும், அதற்கான விழா குறித்தும் சில விபரங்கள்:-

180 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மண்ணிலிருந்து விடுதலைக் குரல் எழுப்பிய மாவீரன்—"வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்கு ஏது வரி?" என்று முதல் முழக்க மிட்ட மாவீரன்—கட்டபொம்மன் நினைவாக எழுப்பப்பட்ட கோட்டை அது. வரலாறுகளில் காணப்பட்ட செய்திகளை ஆதாரமாகக் கொண்டு முன்பு கட்டபொம்மன் கோட்டை இருந்த இடத்தில்தான் இந்தக் கோட்டையை எழுப்பியிருக் கிறோம்.

கோட்டையின் வடிவமைப்பு 15 மீட்டருக்கு 15 மீட்டர் சதுர அளவுள்ளதாகவும், பாதுகாப்பு அரண்களைக் கொண்ட மாதிரி அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. கோட்டையின் மையத்தில் பத்து மீட்டர் உயரமுள்ள மைய தர்பார் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தின் மேல்புறக் கடைசி யில் 3 மீட்டருக்கு 3 மீட்டர் அளவுக்கு மேடை உருவாக்கப் பட்டுள்ளது. மேல்புறக் கடைசியில் உள்ள மேடையில் உடைவாளின் மீது கையினை வைத்தவாறு தர்பார் மண்டபக் கொலு வீற்றிருக்கும் அமைப்பில் வீரன் கட்டபொம்மனின் அழகுச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு இருபுறத்திலும் ஊமைத்துரை, வெள்ளைத் தேவன், தானுபதிப்பிள்ளை, சுந்தரலிங்கம் ஆகியோர் உருவங்கள் சிற்ப வடிவங்களாக வடித்தெடுக்கப்பட்டு பதிக்கப்பட்டுள்ளன. வெளிப்புற அழகுக்கு ஏற்றவண்ணம் நன்கமைக்கப்பட்ட புல்வெளியும், தோட்டமும் உருவாக்கப்பட்டு, கருத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. ஒட்டப்பிடாரம் கிராமத் திலிருந்து கோட்டைக்குச் செல்லும் சாலையில் ஐந்து அழகு வளைவுகள் வீரபாண்டிய கட்டபொம்மனோடு உடன் வாழ்ந்து மறைந்த வீரப்பெருமக்களின் நினைவு வளைவுகளாக அமைக்கப் பட்டன.

நெல்லை மாவட்ட மக்களெல்லாம் திரண்டிருக்க கட்டபொம்மன் கோட்டை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு கல்வி

அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமை தாங்கினார். மற்றும் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், அமைச்சர்கள் ஆதித்தனார், ப. உ. சண்முகம், மணலி கந்தசாமி, எஸ். எஸ் தென்னரசு, தூத்துக்குடி சிவசாமி எம்.பி., ஆற்காடு வீராசாமி எம்.எல்.ஏ., கா. மு. கதிரவன் எம்.எல்.ஏ., மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

கட்டபொம்மன் கோட்டை திறப்பு விழாவிற்கு முன்பு லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மாபெரும் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. அந்த ஊர்வலத்தில் கட்டபொம்மன் வாழ்க்கை வரலாற்றுக் காவியங்கள் அலங்கார ஊர்திகளில் கொண்டு வரப்பட்டன. இந்த மாபெரும் ஊர்வலத்தினை, கட்டபொம்மன் கோட்டை வாயிலின் முன்பு அமைக்கப் பட்டிருந்த மேடையிலிருந்து நாங்கள் எல்லாம் பார்வை யிட்டோம். ஊர்வலம் கோட்டையை அடைந்ததும், அங்கே அமைக்கப்பட்ட கட்டபொம்மனின் சிலையினை நான் திறந்து வைத்தேன். கோட்டை எழுப்புவதற்கும், அந்த இடத்தினை செப்பனிடுவதற்கும் ஏழு லட்ச ரூபாய் செலவாயிற்று.

கட்டபொம்மன் குல தெய்வமான ஜக்கம்மா ஆலயத்தின் சார்பில் எனக்கும் அமைச்சர்களுக்கும் மாபெரும் வரவேற்பளிக் கப்பட்டது. விழா மேடையிலேயே கட்டபொம்மனின் வழித் தோன்றல்களான இருநூறு பேர்களுக்கு நிலப்பட்டா, மனைப் பட்டா வழங்கப்பட்டது. வீரபாண்டியனின் வாரிசுகள் சார்பில் வையப்ப நாயக்கர் அவர்கள் எனக்கு வீரவாள் ஒன்றை பரிசாக வழங்கினார். கட்டபொம்மன் கோட்டையை சமைத்துத் தந்த சிற்பிகள் கணபதி, மாணிக்கம், சிதம்பரம், சுப்பையா ஆகியோருக்கு கணையாழியும், பொன்னாடையும் என்னால் அணி விக்கப்பட்டன.

கட்டபொம்மன் கோட்டைக்கான அடிக்கல் நாட்டு விழா, திறப்புவிழா ஆகிய நிகழ்ச்சிகளில் ஒருசிலர் எடுத்துரைத்த கருத்துக்களில் முக்கியமான சில பகுதிகள் இந்த வரலாற்று ஏட்டில் இடம்பெறுவது நல்லது.

குறிப்பாக அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், "மிகப்பெரிய திட்டங்களைப் போடும் போது, பழமொழி சொல்வார்கள், 'மனக்கோட்டை கட்டுகிறான்' என்று. கேலி செய்வதற்காகவே கோட்டை கட்டுகிறான் என்று சொல்லப்பட்ட

நிலையை மாற்றி அமைத்து தமிழகத்தின் வீரத்தை நினைவு படுத்தும் வகையில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை எழுப்பியிருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களையும், பொதுப் பணித் துறையினரையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன். தமிழகம் வீரத்திற்கு எப்போதுமே மதிப்புத் தந்து வருகிறது என்பதற்கு இதுவும் நல்ல எடுத்துக்காட்டாகும். கட்டபொம்ம னுக்கு கருங்கல்லினாலேயே உருவச்சிலை அமைத்து கோட்டை யையும் அமைத்திருப்பது தமிழகத்திற்கு பெருமை தருவதாகும். வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு கலைஞரின் முயற்சியால் அழியாத நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது'' என்றார்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி., ''இதுவரை நான் அனுபவித் திராத மகிழ்ச்சியை-இனி என்றும் அனுபவிக்க முடியாத மகிழ்ச்சியை இந்த சிறப்பான விழாவின் மூலம் நான் அடைகிறேன். கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் கலைஞர் நிறைவேற்றுகிறார் என்பதற்கு இது அடையாளம்.

நடைபெற்ற ஊர்வலமும், அமைந்திருக்கிற கோட்டையும் வரலாற்றுச் சிறப்புடையதாகும். புராணங்களிலே ஒரு நகரத்தை நிர்மாணிப்பார்களானால் தெய்வத் தச்சன் மயனால் உருவாக்கப் பட்டது என்று கூறுவார்கள். அதைப்போல இந்த சிறப்புகளை எல்லாம் காணும்போது சரித்திரம் காணாத அற்புதத்தை கலைஞர் நிறைவேற்றியிருக்கிறார்.

இந்த சாதனை தமிழன் என்ற உணர்வு படைத்த ஒவ்வொருவரும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நன்றி உணர்ச்சியோடு போற்றத்தக்கதாகும்.

இன்றைக்கு சரியாக 175 ஆண்டுகளுக்கு முன்பு 1799–ஆம் ஆண்டு கயத்தாறு சாலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப் பட்டான். இன்று கலைஞர் அவர்கள் கட்டபொம்மனுக்கு கோட்டை எழுப்பியிருக்கிறார்.

தமிழா, உன் வரலாறு திரும்புகிறது. தமிழ்நாட்டில் இரண்டு கோட்டைகள் இருக்கின்றன. ஒன்று கலைஞர் ஆளும் கோட்டை; இன்னொன்று கலைஞர் அமைத்த கோட்டை.

இவ்வளவு சிறப்பான காரியங்களைச் செய்து வரும் தம்பி களுக்கு ஆசி கூற அண்ணன் இல்லையே என்ற குறை இருக்கிறது. என்னை அண்ணனாக நம்புங்கள்; நான் வாழ்த்துக் கூறுகிறேன்'' என்றார்.

பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், "கடந்தமுறை இதே பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு விழா நடந்த போது, கலைஞர் அவர்கள் ஆட்சியின் சாதனைகளைப் பாராட்டிப் பேசி அவரது ஆட்சி பொற்காலம் படைக்கவேண்டும் என்று கூறினேன். நான் யாரையும் அதிகம் பாராட்டமாட்டேன். பாராட்டுக்குரியவர்களைத்தான் பாராட்டுவேன். கலைஞர் சொன்னதைச் செய்கிறார். அரசியல் ஞானம் அவரிடம் முற்றி யிருக்கிறது. இந்த மக்களுக்காக-கட்டபொம்மன் பரம்பரைக்காக நிலப்பட்டா, மனைப்பட்டா கொடுத்து இந்த இடத்தை மீண்டும் ஊராக்க வேண்டும், ரெவினியூ ரிக்கார்டுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டோம். அதைப்பற்றி ஆவன செய்வதாகக் குறிப்பிட்ட முதலமைச்சர் அதையும் இன்று இந்த மகிழ்ச்சிகரமான விழாவில் நிறைவேற்றியிருக்கிறார். பாரதத்திலேயே சிறந்த மாநிலமாக தமிழகத்தை மாற்றிய பெருமை அவருக்குண்டு. கம்பளத்து மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஆட்சிக்கு-அற்புத சாதனைகளைச் செய்துவரும் ஆட்சிக்கு-கலைஞருக்கு உறுதுணையாக நிற்க வேண்டும்" என்றார்.

விழாவிலே பேசிய பண்ருட்டி ராமச்சந்திரன், "நெல்லை' குமரி மாவட்டங்களுக்கும் இந்த நல்ல நினைவுகளை எடுத்துச் சொல்லும் இயக்கமாகத்தான் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இயங்க விருக்கிறது. இதற்காக கலைஞர் அவர்களுக்கு இந்தப்பகுதி மக்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளனர். மக்களைக் காக்கும் ஆட்சிப்பொறுப்பில் அமைந்துள்ள கலைஞர் அவர்கள் இந்தக் கோட்டையை எழுப்பியிருக்கிறார். கலைஞர் அவர்கள் ஆற்றி வருகின்ற சீரிய பணிகளின் காரணமாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் சிறப்புற்று விளங்குகிறது. இந்தியாவில் 47 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள்தான் சிறப்பாக, லாபத்தில் நடக்கின்றன. இந்தக் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமும் லாபத்தில் நடக்கும் என்ற நம்பிக்கை இருப்பதற்குக் காரணம், அது கலைஞரால் துவக்கப்படுகிறது. எந்த இடத்தில் மக்கள் கூடக்கூடாது என்று ஆங்கில ஏகாதிபத்தியம் தடுத்ததோ, எந்தப் பகுதி நிலத்தை யாரும் பார்க்கக் கூடாது என்று அறிவித்தார்களோ எங்கே கோட்டை கொத்தளங்கள் இருக்கக் கூடாது என்று தரைமட்ட மாக்கினார்களோ, அங்கே கோட்டையை எழுப்பி உரிமை

உணர்வை-வீர உணர்வை ஊட்டுவதற்குப் பாடுபடுகிற கலைஞருக்கு தமிழக மக்கள் துணை நிற்பார்கள்.''

அமைச்சர் ஆதித்தனுர், அமைச்சரும் நண்பருமான ப.உ.ச. ஆகியோரும் புகழுரை, பாராட்டுரை வழங்கினுர்கள்.

ஆலடி அருணு அப்போது பேசிய போது, ''இங்கே கலைஞர் அவர்களைப்பற்றிப் பேசுகிறபோது கட்டபொம்மன் வாரிசு என்று பாராட்டினுர்கள், உண்மை! வரலாற்று அடிப்படையில் கட்டபொம்மனின் வாரிசாக இருப்பவர்தான் கலைஞர். இன்று கலைஞர் அவர்களால் மீண்டும் கோட்டை எழுகிறது. கட்ட பொம்மன் கொற்றம் இங்கே தோன்றப்போகிறது. அந்த வகையில் கலைஞர் அவர்கள் கட்டபொம்மனின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வாரிசாகத் திகழ்கிருர். ஒரு மாபெரும் வீரனுக்குச் செய்கிற நன்றி உணர்வான ஏற்பாட்டு அடிப்படையில் கலைஞர் அவர்கள் இந்தக் காரியங்களைச் செய்கிருர். அந்த நன்றி உணர்வோடு நாமும் கலைஞருக்குத் துணை நிற்க வேண்டும்'' என்ருர்.

அடுத்து, அந்தத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தூத்துக்குடி சிவசாமி ஆற்றிய உரையாவது:-

''சில நாட்களுக்கு முன்பு நான் இதே இடத்தில் பேசுகையில் ஒன்றைக் குறிப்பிட்டேன். கட்டபொம்மன் விழா அப்போது நடைபெற்றது. புராண காலத்தில் ரிஷ்ய சிருங்கர் கால்பட்ட இடமெல்லாம் மழை பெய்யும் என்று புராணத்தில் நான் படித்திருக்கிறேன். ஆனுல், கலைஞர் எந்தப் பகுதிக்கு வந்தாலும் அந்தப் பகுதி செழிப்பான மாற்றத்தைப் பெறும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று சொன்னேன். பாஞ்சாலங் கோட்டையை வெள்ளையர்கள் இடித்துத் தரைமட்டமாக்கி அந்த இடத்தில் எருக்கஞ்செடிகளைப் பயிரிட்டார்கள். அந்த இடத்தை மாற்றித் தாருங்கள் என்று கேட்டேன். அவர்கள், ஒருவரம்தானே கேட்டாய், பல வரம் தருகிறேன் என்று சொன்னுர்கள். ரெவினியூ ரெக்கார்டுகளில் இல்லாதிருந்த் பாஞ்சாலங்குறிச்சியை ரெவினியூ ரெக்கார்டுகளில் ஏறச்செய்தார். கட்டபொம்மனின் மாதிரிக் கோட்டை இங்கே உருவாகும் என்று அப்போது வரம் தந்தார். இருந்தும் நான் பேராசைக்காரனுக இருக்கிறேன். திருக்குறளில் ''தெய்வம் தொழாஎ் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்பார்கள். அதையேதான் இப்படி மாற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

"தெய்வம் தொழாது" கலைஞரைப் பின்பற்றினால் பெய்யெனப் பெய்யும் மழை என்று சொல்லத் தோன்றுகிறது. யார் கேட்டாலும் வரம் தரும் திறன் பெற்றவர் கலைஞர். இந்தப் பகுதிக்கு கலைஞர் அவர்கள் இன்னும் பல வரங்களைத் தரவேண்டும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்று சொல்வார்கள். பாஞ்சாலங் குறிச்சி மக்கள் நன்றிக்கு மிகவும் எடுத்துக்காட்டானவர்கள். கலைஞர் அவர்கள் போராட்டம் துவக்கும் காலத்தில் பாஞ்சாலங் குறிச்சி வீரப் பரம்பரையினர் கலைஞருக்கு வலது கரமாக இருப்பார்கள். சுப்பு அவர்கள் பேசுகையில் ஆதிக்கத்திற்கு கூற்றம் கலைஞர் என்று குறிப்பிட்டார்கள். அது நூற்றுக்குநூறு உண்மை. இந்தச் சின்னஞ்சிறு உருவமா அந்த வீரத்தைப் பெற்றது என்று அவரைப் பாராட்ட வேண்டுமென்று தோன்ற வில்லை. அன்னை அஞ்சுகம் அம்மையாரைத்தான் பாராட்ட வேண்டும். இத்தகைய வீரம் படைத்த தலைவரைப் பார்த்தா பதவி ஆசை பிடித்தவர் என்று சொல்கிறார்கள். வீரம்தான் வீரத்தைப் போற்ற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் கலைஞர் அவர்கள்" என்றார்.

அந்த விழாவில் பேசிய நண்பர் சுப்பு– "கடந்த முறை இந்த இடத்தில் கட்டபொம்மன் விழா நடை பெற்றபோது கலைஞருக்குப் பக்கத்திலே நாங்கள் அமர்ந்திருந்தாலும் கட்சி அடிப்படையில் தூரத்தில்தான் இருந்தோம். அந்த விழாவில் பேசுகையில், தோழர் மணலி அவர்களையும் என்னையும் பார்த்து "நீங்கள் சொல்கிற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் காட்டி வருகிறோம். நல்ல காரியத்திற்கு நீங்கள் ஏன் துணையாக இருக்கக் கூடாது" என்று கலைஞர் கேட்டார். மக்களுக்கு நன்மை செய்யும் கலைஞரை வீழ்த்துவது என்பது எட்டப்பன் வேலை என்பதால் அவருக்குத் துணையாக இருக்க வேண்டும் என்ற வகையில் நானும் இங்கே வந்திருக்கிறேன்" என்று குறிப் பிட்டார்.

இப்படியெல்லாம் என்னைப் பாராட்டியவர்கள், சிலர் இப்போது என்னை வேகவேகமாகத் தாக்குகிறார்கள் என்றாலும், அவர்கள் இப்போது தாக்குவதை சிலர் நினைவூட்டும்போது, அவர்கள் அப்போது பாராட்டிய இது போன்ற உரைகள் எல்லாம் என் நினைவிற்கு வந்து, இப்போது அவர்கள் தாக்கிப் பேசுவதை மறக்க துணை செய்கிறது.

அந்த விழாவிலே நான் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டேன். "ஜனவரி 3-ஆம் தேதி கட்டபொம்மன் பிறந்த நாள். நான் ஜூன் 3-ஆம் தேதி பிறந்தேன். இரண்டு பேருமே மூன்றும் தேதி பிறந்தவர்கள். அதனுல் தான் கட்டபொம்மனுக்கு எட்டப்பன் இருந்ததுபோல் — எனக்கும் சில எட்டப்பர்கள் இருக்கிருர்கள் என்று கருதுகிறேன். எனவே அந்த மூன்ரும் தேதி ஒரு சோதனையான தேதி என்று புரிகிறது" இப்படி நான் அந்த விழாவில் கூறியது எந்த அளவுக்கு உண்மையாகி விட்டது.

பின் எனது உரையை அந்த விழாவில் பின்வருமாறு நிறைவு செய்தேன் :—

"பதவிகள் பெரிதல்ல; ஆற்றுகின்ற பணி; மான உணர்ச்சியோடு போராடுகின்ற வீரம் அவைதான் என்றைக்கும் போற்றப்படக் கூடியவைகளாகும். அந்த வீரத்தை நெஞ்சில் ஏற்றிய தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபடும் ஒரே இயக்கமாக தி. மு. கழகம் இப்படிப்பட்ட பெரியவர்களின் துணையோடு அரசுக் கட்டிலில் இருக்கிறது. அண்ணன் இல்லை என்ருலும் ரத்தத்தோடு ரத்தமாக — தசையோடு தசையாக எங்கள் கண்ணின் கருமணியாக இதயத்தின் துடிப்பாக இருக்கிருர் எங்கள் மூச்சோடு மூச்சாக இருக்கிருர். அந்த அண்ணனை இதயத்தில் நினைத்து, அவரே இருந்து செய்ய முடியாத காரியங்களை அவருக்காகச் செய்கிருேம். அண்ணனே! கடற்கரையில் நீடு துயில் கொண்டிருக்கின்ற அண்ணனே! இதோ இந்தக் கட்டபொம்மன் கோட்டை உனக்குக் காணிக்கை! காவிரிப் பூம்புகார் கலைக் கூடம் உனக்குக் காணிக்கை! நானே உருவாக இருக்கும் வள்ளுவர் கோட்டம் உனக்குக் காணிக்கை! இப்படிப்பட்ட காணிக்கைகளை தொடர்ந்து தந்து கொண்டே இருப்போம்!"

# 59

## பொதுவாழ்வில் ஒரு பொன்னாள்!

**1967** முதல் 1976 ஜனவரி இறுதி வரையில் நடைபெற்ற ஒன்பதாண்டுக் கால கழக ஆட்சியில் முதல் இரண்டு ஆண்டுக் காலம் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து ஆற்றிய பணிகளில் தலைசிறந்த பணிகள் எனப்படுபவை —

சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றித் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியது — சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்படி செல்லுபடியாகும் என ஆக்கியது — தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் இருமொழிக்கே இடம்; இந்திக்கு இடமில்லை எனத் தடுத்து நிறுத்தியது.

அண்ணா அவர்களது மறைவுக்குப் பிறகு அவரது வழி நின்று கழக ஆட்சி, எனது தலைமையில் ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற முழக்கத்துடன் ஆற்றிய சாதனைகள் ஏராளம்!

குடிசை மாற்று வாரியம், ஆதி திராவிடர்களுக்கும் மீனவர்களுக்கும் இலவசமாக வீடு கட்டி வழங்கும் திட்டம், நகர்ப்புற — கிராமப்புற ஏழை எளியோர்க்கு இலவச அறுவை சிகிச்சை மூலம் கண்ணொளி வழங்கி மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம், தொழு நோய்ப் பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து அவர்களை வாழ வைக்கும் திட்டம், ஊனமுற்றோர்க்குப் பலவகையிலும் உதவியளித்து தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டம், சென்னை போன்ற நகரங்களில் கைரிக்ஷாக்களை ஒழித்து அந்தத் தொழிலாளிகளுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், பள்ளிச்சிறுவர் சிறுமியர்க்கு காது கேட்கும் கருவிகளை வழங்கும் திட்டம், ஆதரவற்ற சிறார்க்கு ஆலயங்களின் உதவியுடன் கருணை இல்லங்கள் அமைத்து அவர்கட்குக் கல்வி வழங்கிய திட்டம், விதவைகள் மறுவாழ்வுத் திட்டம், கலப்பு மணங்களை ஊக்கப்படுத்தும் திட்டம் -- இவைகளையன்னியில் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணய சட்டம், அவர்கள் குடியிருக்கும் மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிய சட்டம், தரிசு நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு ஒப்படை செய்யும் சட்டம், அரசுக்குச் சொந்தமான,

நிலத்திலிருந்து வீட்டு மனை ஒப்படை செய்யும் சட்டம், பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்பு சட்டம், பஸ்களை தேசீயமயமாக்கும் சட்டம், தனியாருக்குச் சொந்தமாக இருந்த மின் நிலையங்களை நாட்டுடமையாக்கிய சட்டம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம், பரிசுச் சீட்டு ஒழிப்பு மற்றும் குடிநீர் வாரியம், குறிப்பிட்ட காலத்துக்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி செய்து கொடுத்தது, கிராமங்களை முக்கிய சாலைகளுடன் இணைக்கும் இணைப்புச் சாலை திட்டம், பல நீர்த் தேக்கங்களை அமைத்து புதிதாக பதினைந்து லட்ச ஏக்கரா பாசன வசதி பெறுமாறு செய்தது, அரசு ஊழியர் கோரிக்கைகளை கவனிக்க இரண்டாவது ஊதியக் குழு அமைத்தது, இந்தியாவிலேயே முதன் முதலாக போலீஸ் கமிஷன் அமைத்து காவல் துறையினருக்கு ஊதிய உயர்வு போன்ற பல பரிந்துரைகளை நிறைவேற்றியது, அரசு அலுவலர் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவரது குடும்பத்துக்கு பத்தாயிர ரூபாய் பாதுகாப்பு நிதி அளித்தது, அரசு ஊழியர்க்கு திருமணக் கடன் தந்தது, அரசு ஊழியர்களின் பல்லாண்டு காலக் கோரிக்கையான ரகசியக் குறிப்பேட்டு முறையை ஒழித்தது, விபத்தில் உயிர் நீத்திடும் விவசாயத் தொழிலாளி, மரமேறும் தொழிலாளி, மீனவர்கள் குடும்பத்துக்கு உடனடி நிதி உதவி அளித்தது, பெண் போலீஸ் படையைத் தொடங்கியது, அண்ணா பிறந்த நாளன்று போலீசாருக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியை உருவாக்கியது. பிற்படுத்தப் பட்டோர் நலன்கள் பற்றி ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஒரு குழுவை நியமித்து அதன் பரிந்துரைகள் பலவற்றை ஏற்றது, பிற்படுத்தப் பட்டோருக்கும் ஆதி திராவிடர் நலனுக்கும் தனித்தனியே துறைகளும், அமைச்சர்களும் என்ற நிலையை ஏற்படுத்தியது, தொழிற் கல்லூரிகள், வேலைவாய்ப்பு இட ஒதுக்கீட்டில் 25 சதவிகிதம் என்பதை 31 என்றும், ஆதி திராவிடர்க்கு 16 என்பதை 18 சதவிகிதம் என்றும் உயர்த்தியது, பி. யு. சி. வரையில் எல்லா மாணவர்க்கும் இலவசக் கல்வியென அறிவித்தது, புன்செய் நில வரியை ரத்து செய்து, நஞ்சைக்கு ஐந்து ஏக்கர் வரையில் வரியை விலக்கியது, இந்தியாவிலேயே முன்னோடியாக மாநிலத் திட்டக்குழு கண்டது, ஆகஸ்ட் 15-இல் கோட்டை முகப்பில் கவர்னருக்குப் பதிலாக முதலமைச்சர்தான் கொடியேற்ற வேண்டுமெனக் கோரி அதிலே வெற்றிக் கண்டது, இப்படி எண்ணிறந்த காரியங்கள்—அணைக்கட்டுகள், பாலங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வேளாண்மைப் பல்கலைக்கழகம்

மற்றும் முற்போக்கு சட்டங்கள், மக்களை முன்னேற்றும் திட்டங்கள், தமிழகத்தை வளங்கொழிக்கச் செய்யும் வண்ணம் சாதனைகளாக மலர்ந்து மணம் பரப்பின.

இத்தனையும் ஒரு மாநில அரசுக்கு உரிய அதிகாரங்களைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட சாதனைகள்! மேலும் மாநில மக்களுக்கு மாநில அரசே நேரடியாக நன்மைகளைப் பெருக்கிட வேண்டுமென்பதற்காகத்தான் கழகத்தின் கொள்கையான மாநில சுயாட்சி முழக்கத்திற்கு வடிவம் கொடுக்கக் கழக அரசு முன்வந்தது.

மாநில சுயாட்சி முழக்கத்தின் வரலாற்றில் *1974* — ஆம் ஆண்டு ஏப்ரல் 16 — ஆம் நாள் மிக முக்கியமான நாளாகும். அன்றுதான் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழக சட்ட மன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானத்தை முன் மொழிந்து நான் உரையாற்றினேன், அந்த உரையின் சில பகுதிகள் வருமாறு

''மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெறப் போகும் சிறப்பு மிக்க தீர்மானத்தை நமது தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன் மொழிகிற பேறுபெற்றமைக்கு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சிந்தனைச் செல்வம் மிகுதியாகப் பெற்றுள்ள இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தத் தீர்மானத்தின் நல்ல நோக்கத்தை ஆய்ந்து தெளிந்து, தங்கள் பேராதரவை நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவின் வலிவும் பொலிவும் கெடாமலிருக்கவும், ஒருமைப் பாட்டுக்கு ஒரு துளி தீங்கும் நேராமல் இருக்கவும் தன் பங்கு எப்போதும் உண்டு என்று சூளுரை மேற்கொண்டு, அதனைச் செயல் வடிவிலும் பலமுறை நிரூபித்துக் காட்டியுள்ளது. இன்றைய ஆளுங்கட்சியான தி மு. கழகம் என்பதை அனைவரும் அறிவர்.

*1962* — ஆம் ஆண்டில் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டதும், சீன ஆக்கிரமிப்பின்போது அந்த எதிரிகளை நோக்கிப் போர் முழக்கம் செய்த பாடி வீடுகளில் ஒன்ருக இருந்ததும், பாகிஸ்தான் போக்கு முறியடிக்கப்பட இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களையும் முந்திக்கொண்டு ஆறு கோடி ரூபாய்க்கு மேல் தமிழகத்தின் சார்பில் போர் நிதி வழங்கிய தோடு, போர்முனையில் நிற்கும் உணர்வுடன் வெற்றிக்கான

வீரப் பணிகளைப் புரிந்ததும் — இன்றைய ஆளுங்கட்சியான தி. மு. கழகத்தின் நாட்டுப் பற்றுக்குச் சான்றுகளாகும்.

தேவையற்ற ஐயப்பாட்டுப் பின்னணியினூடே இந்தத் தீர்மானத்தின் நோக்கம் பற்றி சிந்தித்திட வேண்டாம் என்பதற்கே இவைகளைக் குறிப்பிட்டேன்.

இந்திய நாட்டில் கூட்டாட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை, அகில இந்திய காங்கிரஸ் கட்சி, 1945–ஆம் ஆண்டு இந்திய மக்கள் முன் வைத்த தேர்தல் பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

> "இந்தியக் கூட்டாட்சி என்பது, அதன் பல்வேறு பகுதிகளின்—விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். பகுதிகளுக்கு (அதாவது மாநிலங்களுக்கு) அதிகபட்ச சுதந்திரம் அளிப்பதற்காக எல்லோருக்கும் பொதுவான, முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்தபட்ச அதிகாரத்தைக் கூட்டாட்சி (மத்திய) அரசுக்கும், தேவைப் படும் பகுதிகள் (அதாவது மாநிலங்கள்) விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப்பட்டியலும் இருக்கலாம்."

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இந்தத் தேர்தல் பிரகடனத்தைத் தொடர்ந்து 1947–ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்திலும் மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்படும் அதிகாரங்களைத் தவிர, மற்ற எல்லா அதிகாரங்களும் சுயாட்சி உள்ள மாநிலங்களுக்கே உண்டு என்பது வலியுறுத்தப்பட்டது. அத்தீர்மானத்தின் பகுதியாவது:-

> "இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப்பகுதி களும், வேறு வெளியில் உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும். அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிறபடியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்பொழுதுள்ள எல்லைகளுடனே அவை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதி களாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் அப்பகுதி களுக்கே அளிக்கப்படும்."

இந்தத் தீர்மானங்களும், தேர்தல் பிரகடனங்களும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பிறகு மறந்துவிட்ட அல்லது மறைக்கப்பட்டுவிட்ட உண்மைகளாக ஆகிவிட்டன.

அந்த உண்மையை தி.மு. கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது, மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் பலமுறை வெளிக் கொணர்ந்து, அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று வாதிட்டிருக்கிறது.

*1967*-ஆம் ஆண்டு தி.மு. கழகத் தேர்தல் அறிக்கை பின் வருமாறு அமைந்தது:-

"ஒருமைப்பாடு என்பதை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, அது, ஒரு பகுதியினர் பிறபகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக ஆகிவிடாமல் பாதுகாத்திடும் பொறுப்பை தி.மு. கழகம் மேற்கொள்ள உறுதி கொண்டுள்ளது.

மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒரேசீராக எல்லா மாநிலங்களுக்கும் அமை வதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவும் தி.மு.கழகம் பொறுப் புடன் பணியாற்ற உறுதி கொண்டிருக்கிறது.

மாநில உரிமைகளைப் பாதுகாத்திடும் முறையிலும், குறிப் பிடப்படாத எஞ்சிய அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முறையை மாற்றி, அவை மாநிலங் களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் கழகம் பாடு படுவதுடன், அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தை திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது."

*1969*-ஆம் ஆண்டு "ஹோம் ரூல்" ஆங்கில ஏட்டில் அண்ணா அவர்கள் எழுதிய கடைசி கட்டுரையில்—

"அன்புள்ள தம்பி,

நான் பதவியைத் தேடிபைத்தியம் பிடித்து அலைபவனு மல்ல; காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்புக் கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டத்தின் கீழ் முதலமைச்சராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொண்டிருப்பவனுமல்ல. இதற்காக மத்திய அரசுக்கு எரிச்சல் ஏற்படுத்துவதும், டில்லியோடு சண்டை

போடுவதும் தான் எனது நோக்கம் என்று நான் பிரகடனம் செய்ய விரும்பவில்லை. அதனால் யாருக்கும் நன்மையில்லை. உண்மைதான்; சரியான பருவத்தில் ஒரு உறுதி ஏற்பட வேண்டுமென்பதுதான் முக்கியம். ஆனால் கூட்டாட்சி முறையைப்பற்றி மக்களுக்கு விளக்கம் கொடுப்பதை அதற்கு முன்னால் செய்ய வேண்டும். அந்தப் பணியில், அன்புத் தம்பி, உன்னுடைய உற்சாகமான ஒத்துழைப்பும், மனப்பூர்வமான பங்கேற்பும் எனக்குக் கிடைக்குமென்பதில் எனக்கு நிச்சயம் நம்பிக்கை உண்டு. பதவியில் இருப்பதின் மூலம், இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப் புறமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டு வர முடியுமானால், அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவி யாகும்'' என்ற அறிக்கையை இந்த அவையின் முன் வைத்திருப்பதோடு, அதனை ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தை யும் உங்கள் மேலான வழிமொழிதலுக்காக வைத்துள்ளேன்

இந்திய நாட்டின் சுதந்திரக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. வான்முகட்டைத் தொடுவது போல் அசைந்தாடும் அந்தக் கொடியின் கம்பீரம் காண, முகில்களைக் கிழித்துக்கொண்டு நமது விழிகள் தாவுகின்றன. வங்கம் தந்த தங்கக் கவி தாகூர் எழுதிய தேசீய கீதம் நமது செவிகளில் குற்றால நீர்வீழ்ச்சியின் சங்கீத ஓசையாக ஒலித்துக் கொண்டிருக் கிறது. அடிமைப்பட்டுக் கிடந்த நாடு, தன்னை விடுவித்துக் கொண்டு தலைநிமிர்ந்து கிளம்பிய வரலாற்று வரிகள், உலகப் புத்தகத்தில் கோடிட்டு வைக்கப்பட்டுள்ளன.

சிறையிலிருந்த நாடு, விடுதலை பெற்று விட்டது. கதவு திறந்தது. பூட்டிய இரும்புக் கூட்டிலேயிருந்த கைதி, புன்னகை மலர வெளியே வருகிறான். தந்தையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த தளிர்நடைச் செல்வம், இளங்கரம் தூக்கி, தாவியோடுகிறது, அவனைத் தழுவிக் கொள்ள! அவனும் அடக்க முடியாத மகிழ்ச்சி வெள்ளம் கரை புரள மகனைத் தூக்கி முத்தமிடக் கரங்களை நீட்டுகிறான். கைகள் இயங்க முடியாமல் தவிக்கின்றன. சிறையிலிருந்துதான் விடுபட்டு விட்டானே; இன்னும் என்ன தடை? தன்னை யார் தடுப்பது? சுற்றும் முற்றும் பார்க்கிறான். அவன் சிறையில் இல்லை; சுதந்திர பூமியில்தான் இருக்கிறான். பிறகு யார், தன் குழந்தையைக்கூடத் தழுவிட முடியாமல் அவனைக் கட்டுப்படுத்துவது? யாருமல்ல; அவன்

சிறையிலிருக்கும்போது அவன் கைகள் இரண்டையும் காலையும் சேர்த்து ஒரு விலங்கு மாட்டியிருந்தார்கள். விடுதலை அடைந்த பூரிப்பில், விலங்குகளைக் கழற்ற வேண்டுமென்ற நினைப்பு கூட இல்லாமல் அவன் வெளியே வந்துவிட்டான். அவன் சுதந்திர மண்ணில்தான் இருக்கிறான். கை, கால் விலங்கு மட்டும் கழற்றப் படவில்லை. மனிதன் விடுதலையாகிவிட்டான்; கை, கால்கள் மட்டும் கட்டுண்டு கிடக்கத் தேவையில்லையே; இந்தியா விடுதலை பெற்றுவிட்டது. அதன் அவயவங்களைப் போன்ற மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்?

இந்தக் கேள்வியின் நீண்ட நாளைய தாகத்தைத் தீர்க்கும் நெல்லிக்கனியாகத்தான் இன்று, இந்த அவையின் முன்னால் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

அரசியல் சட்டம் என்பது திருத்தப்படக்கூடாத ஒன்றல்ல. நமது அரசியல் சட்டம் 30 தடவைகளுக்கு மேல் திருத்தப்பட்டிருக்கிறது.

மாநிலங்களின் மொழிகள் வளரவும், பண்பாட்டுத் தன்மைகள் காக்கப்படவும், மாநிலத்திற்கு மாநிலம் நல்லுறவுகள் வளரவும், மத்திய மாநில உறவுகள் நிலைத்துச் செழிக்கவும், நாட்டின் பொருளாதாரம் வளம் பெற்றுத் திகழவும், அரசியல் சட்டத்தில் இந்த மகத்தான மாறுதலைச் செய்வது எதிர்காலத்தில் இந்தியாவின் வலிமையையும் வளப்பத்தையும் பெருக்குவதற்கு அடித்தளமாக அமையும் என்பதை உணர்ந்து மத்திய அரசினர் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக உங்கள் ஒத்துழைப்பு அமைய வேண்டுமென்று விழைகின்றேன். மக்களின் நல்வாழ்வை மையமாகக் கொண்டும், பெற்ற சுதந்திரத்தின் பயனை நாடு அனுபவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை நெஞ்சில் பதித்துக்கொண்டும், இந்திய அரசியல் அரங்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் நாம் ஏற்றிவைக்கும் இந்தச் சுடர்விளக்கு ஒளிவிட அரசியல் மேதைகள் தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்றும் பணிவன்புடன் கோருகிறேன்.''

மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து ஆளுங் கட்சியின் சார்பில் முதலமைச்சர் என்ற முறையில் நான் ஆற்றிய உரை என் இதயத்தில் எத்தகைய எழுச்சியையும், மகிழ்ச்சியையும், உணர்ச்சியையும் ஏற்படுத்தியது என்பதை என்னால் விவரிக்கவே இயலாது. அந்த நாள் என் பொதுவாழ்வில் ஒரு பொன்னாள்!

# 60

## தீர்மானம் நிறைவேறியது

என்னுடைய ஐம்பதாம் அகவை பொன் விழா ஆண்டினை நண்பர்களும் கழக அமைப்புக்களும் உயிரினும் மேலான உடன் பிறப்புக்களும் பாச உணர்வு பொங்கிடக் கொண்டாடி மகிழ்ந்த 1974–ஆம் ஆண்டில் சட்டப் பேரவையில் முன்மொழிந்து நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானம் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் ஒரு வழி காட்டியாக அமைந்துள்ளது என்பதனை 1984-ஆம் ஆண்டு எனது அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா கொண்டாடப்படும் போது அகில இந்தியத் தலைவர்களும், தமிழ் மாநில தலைவர்களும் சுட்டிக் காட்டிப் பேசியது எனக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்த வெற்றியோ அல்லது தி. மு. கழகத்துக்குக் கிடைத்த வெற்றியோ அல்ல: பல அரசியல் மேதைகள் இந்தியாவின் உண்மையான ஒருமைப்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும், அனைத்து மக்களின் நல்வாழ்வுக்கும் தேவையென வலியுறுத்திய "மாநில சுயாட்சி'' என்ற கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இதோ இதுதான் தமிழக சட்டப் பேரவையில் நீண்ட விவாதங்களுக்குப் பிறகு 20–4–74 அன்று நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மான வாசகமாகும்.

''மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், ராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல்

அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டு மென்று இப்பேரவை முடிவு செய்கிறது."

இந்த சரித்திரப் புகழ் வாய்ந்த தீர்மானம் அவையில் விவாதத்திற்கு வந்த போது அண்ணாவின் பெயரால் அ.தி.மு.க. கட்சி தொடங்கியவர்களான எம். ஜி. ஆர். அவர்களும் அவரது நண்பர்களும் தீர்மானத்தை வரவேற்கவோ ஆதரிக்கவோ முன் வரவில்லை. அ.தி.மு.க. வின் சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவ ராக இருந்த எட்மண்ட் அவர்கள், "ராஜமன்னார் குழுவின் அறிக்கை சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்குத் தகுதி யுடைய புத்தகமல்ல; உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவன் கூடப் பயன்படுத்த இதில் எந்தவிதமான கருத்தும் இல்லை. குப்பைக்கூடையில் தூக்கி எறியப்பட வேண்டிய அறிக்கை இது" என்று ஆவேசமாகக் குறிப்பிட்ட வாசகங்கள் அவைக்குறிப்பில் அப்படியே தான் இருக்கின்றன.

தீர்மானம் குறித்த விவாதத்தில் ஆதரித்தும் எதிர்த்தும் ஆலடி அருணா, பெ. சீனுவாசன், எல். கணேசன், என்.கே. பழனி சாமி, கே. கந்தசாமி, கே. பி. கந்தசாமி, அப்துல் ஜபார், ஜேம்ஸ், கே. எம். சுப்பிரமணியம், பி. டி. ஆர். பழனிவேல்ராசன், ஏ. சுப்பிரமணியம், திருமதி. ஆல்டாபௌலர், கே.டி.கே. தங்கமணி தோப்பூர் திருவேங்கடம், கா. வேழவேந்தன், மணலி கந்தசாமி, எச். வி. அண்டே, செ. கந்தப்பன், அப்துல் லத்தீப். எம். முத்தையா, ஏ. ஆர். மாரிமுத்து, ஏ. ஆர். பெருமாள், எட்மண்ட், திருப்பூர் மொய்தீன், பொன்னப்ப நாடார் ஆகியோர் உரையாற்றினார்கள்.

ஹண்டே அவர்கள் அ. தி. மு. க. சார்பில் பேசும்போது இறுதியில் "நீங்கள் மாநில சுயாட்சி கேட்பதற்கான தகுதியை இழந்து விட்டீர்கள். உங்களுக்கு அந்தச் சாவியைக் கொடுத்தால் தீமைகள் இன்னும் அதிகமாக வரும்" என்றார். உடனே நான் எழுந்து "அப்படியானால் இரண்டு ஆண்டுகள் கழித்து மாநில சுயாட்சி கேட்கலாமா? அப்பொழுது கொடுக்க வேண்டுமென்று கேட்பீர்களா?" என்று கேட்டேன். அதற்கு ஹண்டே, "நீங்கள் நல்ல ஆட்சி நடத்தியிருந்து இதைக் கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அந்த வாய்ப்பை இழந்து விட்டீர்கள்" என்றார். மேலும் அவரே தொடர்ந்து "நல்ல ஆட்சியாக இருந்தால் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. நாங்கள் வந்தால் நிச்சயமாகக் கேட்போம். அப்பொழுது கொடுக்க வேண்டுமென்பதில் சந்தேகம் கிடையாது" என்றார்.

அப்போதும் நான் 'அப்படி நீங்கள் (அ. தி. மு. க.) கேட்கும் போது ஒரு வேளை நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தால் நிச்சயமாக ஆதரிப்போம், பரந்த மனப்பான்மையோடு' என்று குறிப்பிட்டேன்.

ஹண்டே அவர்கள் பேசும்போது, தி. மு. கழகத்திற்கு இடைத்தேர்தல் தோல்வி ஏற்பட்டதால்தான் மாநில சுயாட்சி பற்றி பேசுவதாகத் தெரிவித்தார். அதற்கு நான் 1972 - ஆம் ஆண்டு மே திங்கள் 6, 7 தேதிகளில் தஞ்சை மாவட்ட கழக மாநாடு மன்னார்குடியில் நடந்தபோது "இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் பாதுகாப்பிற்கும் மேலும் வலிவு தரும் வகையில் மத்தியஅரசு பலமுள்ளதாகவும் மாநில அரசுகள் மக்களுக்கு வளம் பெருக்கும் வகையில் அதிகார உரிமைகளைப் பெற்றவைகளாகவும் விளங்கும் வண்ணம் தி. மு. க. கோரி வருகிற மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு மத்திய அரசு செவி மடுத்து ராஜமன்னார் குழு அறிக்கையின் அடிப்படையில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த மாநாடு கோருகிறது." என்ற தீர்மானத்தை முன் மொழிந்து அப்போது தி. மு க. வில் இருந்த எஸ். டி. சோமசுந்தரம் அவர்களே பேசியிருக்கிறார் என்றும், தேர்தல் தோல்விக்கு பிறகு தான் மாநில சுயாட்சிக் கருத்தை தி. மு. கழகம் கூறுகிறது என்பது சரியல்ல என்றும் கூறினேன்.

விவாதங்கள் முடிவுற்ற பிறகு அதற்கு நான் 110நிமிடங்கள் பதிலுரை ஆற்றினேன். எனது முழு உரையையும் குறிப்பிடாவிட்டாலும் முக்கியமான பகுதிகளை எனது வரலாற்று நூலிலே இடம் பெறச் செய்வது அவசியமெனக் கருதுகிறேன்.

"என்னுடைய அரசியல் பொது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை இந்த மக்கள்மன்றத்திலே முன்மொழிந்து ஐந்து நாட்கள் விவாதம் நடைபெற்று, தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற கட்டத்தில் இதுவரையில் பேசப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் நான் இந்தத் தீர்மானத்தைப் பற்றி முன்னுரையிலே குறிப்பிட்டிருக்கிற பல்வேறு கருத்துக்களுக்குத் தொடர்பாக இன்னும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பழைய காங்கிரஸ் கட்சி மாநில சுயாட்சியே ஒரு பயங்கரமான பூதம் என்கிற அளவுக்கு தங்களுடைய வர்ணனையை செய்திருக்கிறார்கள். ஆனும் காங்கிரஸ் கட்சி

டெல்லியிலே அவர்கள் இன்றைக்கு அரசோச்சுகின்ற காரணத்தினால் எதையும் விட்டுத் தர முடியாது என்கிற அந்த மனப்பான்மையில் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் கட்சிகளோடு இணைத்து அரசியல் சட்டம் திருத்தப்பட தேவையில்லை. மத்திய மாநில உறவுகளுக்காக என்ற ஒரு திருத்தத்தை அவர்கள் சார்பாக இரண்டு காங்கிரஸ் கட்சிகளுடன் இணைந்து வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும், பார்வேர்டு பிளாக் கட்சியும், தமிழ் அரசுக் கழகமும், சுயேட்சை உறுப்பினர்களுக்கும் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டிய இன்றியமையாமையும் மாநில சுயாட்சியினுடைய அவசியத்தையும் இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

மாநிலத்திற்கு சுயாட்சி தேவையில்லை; அதை அண்ணா எந்தக் காலத்திலும் சொல்லவில்லை; மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தேவை; அதிக அதிகாரங்கள் தேவை; ஆனால் அந்த அதிகாரங்களை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் கொடுக்க கூடாது என்ற கருத்தை அ. தி. மு. க. நண்பர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

தி. மு. கழக ஆட்சியில் தரப்பட்ட அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டனவா? என்னென்ன நல்ல காரியங்களை செய்வதற்கு இன்றைக்கு இருக்கின்ற அரசியல் சட்டம் இடம் தரவில்லை? இந்த இரண்டு கேள்விகளுக்கும் சுருக்கமாக பதில் அளிக்க வேண்டியது என்னுடைய கடமை.

இந்தியாவிலேயே தோன்ற இருக்கின்ற ஜனநாயகப் புரட்சியினிடையே தோற்றுவாயாக இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிற நாளாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலே தான் இந்தத் தீர்மானத்தை முன் வைத்திருக்கிறோம்.

அதிகாரங்கள் கூடுதலாக மாநிலங்களுக்கு வேண்டுமென்று கேட்பதால் மத்திய சர்க்காருக்கு குறைவான அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்ற பொருள் அல்ல. மத்திய சர்க்காருக்கு அதனுடைய வலிவு, காக்கப்படுவதற்கான அதிகாரங்கள் அங்கே இருக்க வேண்டுமென்பதும் மாநில சர்க்கார்களுக்கு அந்த மாநிலங்களின் வளம் பெருக்கப்படுவ

தற்குத் தேவையான அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்பது தான் மாநில சுயாட்சியினுடைய நோக்கம்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்த மாநாட்டில் எதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக ஒரு வரைவுக் குறிப்பையே அனுப்பினார்கள். அந்த வரைவுக் குறிப்பில் காங்கிரஸ் கட்சியால் தயாரிக்கப்பட்ட வரைவுக் குறிப்பு என்று குறிப்பிட்டிருந்தார்கள். நான் தமிழக அரசு சார்பாகச் சொன்னேன்—காங்கிரஸ் கட்சியினுடைய வரைவுக் குறிப்பை அங்கே நாங்கள் ஆராயத் தயாராக இல்லை; உங்களுடைய கட்சி உங்களுக்கு வரைவுக் குறிப்பு தந்தது; அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு பரிந்துரைத்து இருக்குமானால் அதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறி, அதற்குப் பிறகு அவர்கள் உறவை மாற்றிக் கொண்டு மத்திய அரசு பரிந்துரைத்த குறிப்பின் மீது விவாதிக்கப்படுவதற்கு நான் அழைக்கப்பட்ட போது அந்த நேரத்தில் 15 ஸ்டாண்டர்டு ஏக்ரா என்ற உச்ச வரம்பு கொண்டு வரவேண்டுமென்பது வரைவுக் குறிப்பில் ஓர் முக்கியமான அம்சமாகும். நான் அங்கே சொன்ன பதில் இது. ஏற்கனவே எங்கள் தமிழ் நாட்டில் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பே அமுல்படுத்தபட்ட சட்டமாகும் என்று எடுத்துச் சொல்லுகின்ற அளவுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லா மாநிலங்களையும் முந்திக் கொண்டு நாம் செய்து முடித்திருக்கிறோம் என்பதாகும் இப்படி எத்தனையோ எண்ணற்ற சாதனைகள்!

இன்னும் செய்ய வேண்டிய சாதனைகளுக்கு அரசியல் சட்டத்தினுடைய குறுக்கீடு என்ன? இந்தக் கேள்வி எழுந்தது. அந்தக் கேள்விக்கு நான் தருகின்ற பதில் இதோ விவாதத்தில் பேசும்போது கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூடச் சொன்னார் கள். கேரள மாநிலத்தில் தோட்டங்களையெல்லாம் அரசுடமை யாக்க வேண்டுமென்ற அவசரச் சட்டத்தை இன்றளவும் மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே ஒரு சமதர்மச் சட்டம் அங்கே முடங்கிப் போய் கிடக்கிறது என்ற கருத்துப்பட ஒரு குறிப்பை எடுத்துச் சொன்னார்கள்.

அதைப் போலத் தான் 1969—ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் என்கின்ற ஒரு சட் டத்தை நாம் இந்த மன்றத்திலே நிறைவேற்றினோம், ஆனால் அந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்ச நீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்ற

தீர்ப்பை வழங்கியது. இது போன்ற புரட்சிகரமான திட்டங்கள் செல்லுபடியாக வேண்டுமேயானல், ஒரு அரசியல் சட்டத்தில் 9-வது அட்டவணையும் சேர்க்கப்பட்டாக வேண்டும். 9-வது அட்டவணையிலே இந்தச் சட்டத்தை சேர்த்து 31-ஏ பிரிவின் கீழ் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று 26-2-72-இல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினேன். பலமுறை மத்திய அமைச்சர்களைச் சந்தித்த போதெல்லாம் இதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னேன். *24 - 11 - 73* - இல் கூட பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். இதுவரையில் சாதகமான முடிவு எதுவும் மத்திய சர்க்காரிடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லை.

*1973 — 74* - ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மால்கோ தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று அறிவித்தோம். அதை அறிவித்தவுடன் பெப்ரவரி மாதம் சட்ட நகலை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதைப் பெற்றுக் கொண்டதாக 2- 3- 73-இல் நமக்குக் கடிதமும் வந்தது. ஆனல், இதுவரையில் அந்தப் பிரச்சினை என்னவாயிற்று? முடியுமா? முடியாதா? என்கின்ற எந்த திட்டவட்டமான பதிலும் இல்லை. இதுவும் ஒரு சமதர்மத் திட்டம்.

*1972* - ஆம் ஆண்டு ஆகஸ்ட் *14* - ந் தேதி இரவு விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாடப்பட்ட பொழுது "தொழிலாளி களுக்கு நிர்வாகத்திலே பொறுப்பு, முதலீட்டில் பங்கு" என்கின்ற திட்டத்தை அறிவித்து, அதற்கான விதிமுறைகள் எல்லாம் வகுத்து மசோதா கொண்டு வந்து — இன்றைக்கு அந்தச் சட்டம் மத்திய சர்க்கருடைய தயவை எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறது. மத்திய அரசின் கம்பெனிச் சட்டம் இதற்காகத் திருத்தப்பட வேண்டும். இது நல்ல திட்டம் என்று பிரதமரே பாராட்டியிருக்கிருர்கள். ஆனல் அதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. நாம் சாதனைகள் செய்ய முடியாமல் அரசியல் சட்டத்தில் எப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள்தான் இவை.

உணவு உற்பத்தியில் பிரதான தொடர்பு கொண்டது உரம். உர உற்பத்தியை எடுத்துக் கொண்டால் தொழிற்சாலை களுக்குள்ளே நுழைந்து அவர்களிடத்திலுள்ள இருப்புகளைக் கேட்கவும், விநியோகத்தில் தவறு நடந்தால் உரத்தை பறி முதல் செய்யவும் நாம் கார்டுகள் கொடுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும் நமக்கு அதிகாரம் தேவை என்றும்

உரத் தொழிற்சாலைகளின் இருப்புகளைச் சோதனையிடுகிற அதிகாரம் நமக்குத் தேவை என்றும் பலமுறை கேட்டிருக்கிறோம், பயன் இல்லை.

சிறு தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறு தானியங்கள் ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத் திற்குச் செல்லக்கூடாது என்று தடை இருந்தது. அந்தத் தடையை மத்திய சர்க்கார் நீக்கி விட்டார்கள். யாரைக் கேட்டுக் கொண்டு நீக்கினார்கள்? நம் மாநிலத்தை கலந்துக் கொண்டு செய்யப் பட்டதா? இல்லை.

எண்ணெய் விலையை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தலாம் என்று தான் வேர்க்கடலைக்கு லெவி வேண்டுமென்றும், வியாபாரத்திற்கு லைசென்ஸ் தரப்பட வேண்டுமென்றும் அதற் கான அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டுமென்றும் அனுமதி கேட்டோம். 12 - 4 - 1973 - இல் இருந்து கேட்டோம். இதுவரை அந்த அனுமதி தரப்படவில்லை.

மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே இதுவரை எண்ணெய் டெப்போக்களுக்கு மண்ணெண்ணையை விநியோகம் செய்ய உத்திரவிடுகிற அதிகாரம் இதுவரையில் மாநிலத்திற்கு இருந்தது. ஆனால் திடீரென்று 1972 - இல் இந்த அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டார்கள்.

கரை போடப்பட்ட வேட்டி, வண்ணச் சேலைகள் ஆகிய வற்றை நெய்வது கைத்தறிகளுக்கே ஒதுக்கப்பட வேண்டு மென்றும் கைத்தறியாளர்களுக்கு தங்கு தடையின்றி நூல் கிடைக்க 1962 - ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 - ஆம் நாள் டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள் தொழிலமைச்சராக இருந்த போதே பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். கிட்டதட்ட இருபதாண்டு காலம் ஓடிவிட்டது! அந்தத் தீர்மானத்தின் கதி என்ன? கவனிக்கப்படவில்லை.

எனவே அதிக அதிகாரம் கேட்பது இங்கே அமர்ந் திருக்கிற அமைச்சர் பெருமக்கள் அந்த அதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா? அதிகாரம் எங்களுக் காக அல்ல. மாநிலத்திற்காக கேட்கிறோம். அது புரிய வேண்டும் என்பதற்காகத்தான் மாநில சுயாட்சி என்று சொல்கிறோம்.

மத்தியில் கூட்டாட்சி - மாநில சுயாட்சி என்று கூறுகிற நேரத்திலேயே அங்கு பிரிவினைக்கு எள்ளளவும் இடமில்லை

என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் 'நீங்கள் ஏற்கனவே திராவிட நாடு கேட்டவர்கள், பிரிவினை கேட்ட வர்கள். ஆகவே உங்களுடைய வரலாற்றை பின்னணியாகக் கொண்டு உங்களைச் சந்தேகிக்கிறோம்' என்று இங்கே சொன்னார்கள்.

போர், போர் என்று அலைந்த அசோகன் களம் பல கண்டான். கலிங்கம் வரை சென்றான் - கலிங்கத்தில் களம் கண்டான் – அவனுடைய கரியின் கால்பட்டு ஆயிரக்கணக் கானவர் பிணமாயினர்; பிணக்குவியலை கண்டான். நான் இனிமேல் போர் புரிய மாட்டேன், புத்தன் வழி செல்வேன் என்றவுடனே, அவனைப் பார்த்து உன்னுடைய பழைய வரலாறு போர் வரலாறு ஆகவே ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று கூறி இருந்தால் அன்றைய இந்தியக் கொடியிலே அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டிருக்க முடியாது. இன்றைக்கும் அசோகச் சின்னம் நம்முடைய இந்தியாவினுடைய தேசீய சின்னமாக ஆகி இருக்க முடியாது.

வழிப்பறி கொள்ளை அடித்த ரட்சன் வால்மீகியாகி இராமாயணம் எழுதினான். அவனையே ஒத்துக் கொண்டீர்கள் எங்களை ஒத்துக் கொள்ள கூடாதா?"

இப்படியெல்லாம் என்னுடைய பேச்சைத் தொடர்ந்த நான் அடுத்து அ. தி. மு. க. நண்பர்கள் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி என்ற வார்த்தையைச் சொன்னாரா என்று கேட்டதற்கு பதிலாக முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் 21 – 7 - 1968 – இல் நடைப்பெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் பேசிய நீண்ட பேச்சினை முழுவதும் படித்துக் காட்டி; "மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர, அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல!" என்று அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளதையும் எடுத்துக் காட்டினேன்.

தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆளுங் கட்சியான தி.மு. கழகம், இந்திய யூனியன் முஸ்லீம்லீக், பார்வாடு பிளாக்,தமிழ்நாடுகம்யூனிஸ்டு கட்சி,தமிழரசு கழகம் ஆகிய கட்சி உறுப்பினர்கள் 161 பேர் ஆதரித்து வாக்களித்தனர். தீர்மானத்தை எதிர்த்து பழைய காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, இந்திரா காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்த்த 23 பேர் வாக்களித்தனர்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற விவாதம் போதாதென்பது போல மேலும் விளக்கம் கேட்டு, விளக்கம் கேட்க அவகாசம்

தரப்படாததால் வெளி நடப்பு செய்வதாக நொண்டிச் சாக்கு கூறிவிட்டு அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தார்கள்.

பெரும் மகிழ்ச்சியும் எழுச்சியும் கொண்ட ஆரவாரத்துக்கிடையே பெருவாரியான வாக்குகளைப் பெற்று மாநில சுயாட்சி கோருகிற தீர்மானம் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேறியது.



# 61

## இராமனுக்கு விரோதி யார்?

கழக ஆட்சியின் மீது டெல்லிக்காரர்களுக்கு கோபம் ஏற்படுவதற்கான பல்வேறு காரணங்களில் மாநில சுயாட்சித் தீர்மானத்தைத் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றியதும் ஒன்றாக அமைந்தது. தீர்மானம் நிறைவேறியது 1974 – ஆம் ஆண்டு எனினும், அதற்கு முன்பே 1973 – ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14 – ஆம் நாள் அலகாபாத் நகரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் நான் கலந்துகொண்டு உரையாற்றியதும் டெல்லிக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். இந்தியாவில் முழுப் புரட்சி இயக்கம் ஒன்றினைத் தொடங்கி நடத்திய லோகநாயக் ஜெயப்பிரகாஷ் அவர்களுடன் நான் கொண்டிருந்த தொடர்பும் டெல்லிக்காரர்களுக்கு என் மீதும் கழக அரசின் மீதும் எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது. அப்பர் இந்தியா எக்ஸ்பிரஸ் மூலம் டெல்லியிலிருந்து நான் அலகாபாத் சென்றேன். என்னுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாறன், மாரிசாமி, சாமிநாதன், தெய்வீகன் ஆகியோர் வந்தனர். தென்னரசும் என்னுடன் பயணத்தில் கலந்துகொண்டார்.

உத்திரப் பிரதேச தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர் மாநாட்டைத் தொடங்கி வைத்துக் காலையில் உரையாற்றினேன். அன்று மாலை அலகாபாத் புருஷோத்தம தாஸ் தாண்டன் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் நான் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அலகாபாத் நகரின் பல பகுதிகளில் எனக்கெதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. "இராமனின் விரோதி கருணாநிதி" என்று இந்தி எழுத்துகளில் அச்சடிக்கப்பட்டிருந்தன அந்தச் சுவரொட்டிகளில்.

அந்தக் கூட்டத்தில் ராஜ்நாராயண் அவர்களும் கலந்து கொண்டார். என்னைப்பற்றி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளுக்கு விளக்கமாகப் பதிலளிக்குமாறு அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். என் பேச்சை இந்தியில் புரொபசர் சந்திரகாந்த் அவர்கள் மொழி பெயர்த்தார்.

நான் அலகாபாத் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையின் சில பகுதிகள் வருமாறு :

"தமிழ்நாட்டிலிருந்து உத்திரப் பிரதேசத்துக்கு வந்துள்ள என்னை இங்குள்ள சிலர் ஆச்சரியத்தோடு பார்க்கக்கூடும். சிலர் என்னைத் தவறான கண்ணோட்டத்துடன் நோக்கக் கூடும். நான் இராமனுக்கு விரோதி என்றுகூட யாரோ சுவரொட்டி ஒட்டியுள்ளார்களாம். இராமனுக்கு விரோதி இராவணனே தவிர, நானல்ல! இதைக்கூடப் புரிந்து கொள்ளாத சிலர் இங்கிருப்பது வியப்புக்குரியதேயாகும். உத்திரப் பிரதேசத்தில் நான் வந்துள்ள இந்த நேரத்தில் இங்கு ஒரு மக்கள் அரசு இல்லாதது வருந்தத்தக்கது. ஜனாதிபதி ஆட்சி நடைபெறுகிற போது இங்கு நான் வந்திருக்கிறேன். இங்கு மட்டுமல்ல; ஆந்திராவில் – ஒரிசாவில் – மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சிகள் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கிட்டத்தட்ட சுமார் பதினைந்து கோடி மக்கள் இந்தியாவில் ஜனநாயகத்தை அனுபவிக்காமல் ஜனாதிபதி ஆட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியபோது அம்பேத்கார் தெளிவாகச் சொன்னார். ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தப்படுகிற விதி செத்துப்போன எழுத்துக்களாக இருக்கும் என்று சொன்னார். ஆனால் அதற்குப் பிறகு பல்வேறு மாநிலங்களில் 32 தடவை ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 25 – வது ஆண்டு வெள்ளி விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஜனாதிபதி ஆட்சியைப் பொறுத்தவரையில் இன்னும் 18 தடவைகள் ஜனாதிபதி ஆட்சி வந்தால் நாம் 50 – வது ஜனாதிபதி ஆட்சிக்கு ஒரு பொன்விழா கொண்டாடலாம்.

கவர்னர் பதவி தேவையில்லை என்பது தி. மு. க. வின் எண்ணமாகும். ஆனால் ஆங்காங்கு அடிக்கடி ஜனாதிபதி ஆட்சி நடத்துவதற்காக அந்தப் பதவியை மத்திய அரசினர் வைத்திருக் கிறார்கள் போலும்.

இந்தியாவில் இதுவரைக்கும் ஜனாதிபதி ஆட்சி வராத மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக இருக்கிறது. அது தமிழ் நாட்டிற்கும் வரவில்லையே என்று சிலருக்குக் கவலையாக இருக்கிறது. அவர்கள் யார்? அவர்கள்தான் காங்கிரஸ்காரர்கள். நான் காங்கிரஸ் என்று கூறும்போது ஆளும் காங்கிரசைச்

சேர்த்துத்தான் கூறுகிறேன். அவர்களைச் சொல்லி குற்றமில்லை. இந்தியா முழுவதும் அவர்கள் கையில் இருக்கிறது. தமிழ்நாடு மாத்திரம் எதிர்க்கட்சியினர் கையில் இருப்பதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

இலட்சக்கணக்கில் அரிசன மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் தமிழ்நாட்டில் குடியிருப்பு மனை, விவசாய நிலப் பட்டாக்கள் தரப்பட்டுள்ளன. அரிசனங்களையும், பின் தங்கிய வர்களையும் நான் கவலையோடு கவனிப்பதற்கு என்ன காரணம் தெரியுமா? நான் பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்தவன்.

இரண்டு நாளைக்கு முன்புகூட சில காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டிற்குச் சென்று தி. மு. க. ஆட்சியை அகற்ற வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள கோபம் தி. மு. கழகம் மாநில சுயாட்சி கேட்கிறதே என்பதுதான்.

மாநில சுயாட்சி என்பது தேவையான எல்லா அதிகாரங் களும் எல்லா மாநிலங்களுக்கும் தரப்பட வேண்டும் என்பது தான். மாநில சுயாட்சி என்பது பிரிவினை அல்ல. பிரிவினையைத் தடுக்கவே நாங்கள் மாநில சுயாட்சி கேட்கிறோம்.

மாநிலங்கள் தங்கள் காரியங்களை வேகமாகச் சாதித்துக் கொள்வதை மத்திய சர்க்கார் தலையிட்டுத் தாமதப்படுத்துவதைத் தவிர்க்கத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம்.

குடிதண்ணீர் குழாய் போடுவதற்கு தேசிய நெடுஞ் சாலையில் ஒரு அடி ஆழம் தோண்டுவதற்குக் கூட மத்திய சர்க்கார் அனுமதி பெறவேண்டும். இப்படித் தேவையில்லாமல் இரட்டை இலாகாக்கள் பல இருக்கின்றன. மத்திய சர்க்கார் அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொண்டிருக்கிறது. மாநில சர்க்கார் அதிகாரங்களுக்காகத் தவிக்கிறது.

ஒரு சிறு கதை சொல்ல விரும்புகிறேன். ஒரு மருமகள் வீட்டு வாசற்படியில் கவலையோடு உட்கார்ந்திருந்தாள். அடுத்த வீட்டுக்காரி வந்து, "என்ன கவலையாக இருக்கிறாய்? சமைக்க வில்லையா?" என்றாள். "இல்லை" என்றாள். "ஏன், சமைப்பதற்கு அரிசி, கோதுமை இல்லையா?" என்று கேட்டாள் அடுத்த வீட்டுக் காரி. "அரிசி இருக்கிறது, சாமான்களும் இருக்கின்றன" என்றாள் மருமகள். "பிறகென்ன, கறிகாய் இல்லையா?" என்று அடுத்த வீட்டுக்காரி கேட்டாள். "அதுவும் இருக்கிறது"

என்றாள் இவள். "அடுப்பெரிக்க விறகு இல்லையா, நெருப்புப் பெட்டி இல்லையா?" என்றாள். "அதுவும் இருக்கிறது" என்று பதில் சொன்னாள். "பின் ஏன் கவலையோடு இருக்கிறாய்?" என்று அடுத்த வீட்டுக்காரி கேட்டாள். அதற்கு மருமகள் "எல்லாம் இருக்கிறது. ஆனால் எல்லாவற்றையும் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு, மாமியார், சாவியை எடுத்துக்கொண்டு போய்விட்டாள்" என்று பதில் கூறினாள். அதுபோல மாநிலங்கள் மருமகள்களாக இருக்கிறோம். மத்திய சர்க்கார் மாமியாராக இருக்கிறது. அந்த மாமியாரைப் பார்த்து சாவியைக் கொடு என்று கேட்கிறோம். அதற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி.

நாங்கள் கேட்கிற மாநில சுயாட்சி தமிழ்நாட்டுக்கு மாத்திரமல்ல; உத்திரப் பிரதேசத்திற்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம். இந்தக் குரலுக்கு உங்கள் அன்பான ஆதரவு தேவை. அதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

காலையிலே நடந்த மாநாட்டில் ராஜ்நாராயண் அதிகாரம் வேண்டுமென்று உரத்த குரலில் கேட்டார். உரத்த குரலில் கேட்கக் கூடிய உருவம் அவருக்கு இருக்கிறது. என்னுடைய உருவமும் அப்படிப்பட்டதல்ல. உள்ளமும் அப்படிப்பட்டதல்ல. அவர் கொண்டா சாவியை என்று கேட்பவர். நான் சாவியைக் கொடுங்கள் என்று கேட்பவன். இரண்டும் ஒன்றுதான். எனவே ராஜ்நாராயணனைச் சந்திப்பதற்குப் பதிலாக என்னை அவர்கள் சந்திப்பது நல்லது."

கூட்டத்திற்கு உத்திரப் பிரதேசத்தின் முன்னாள் அமைச்சர் திரு. ரூப்நாத் யாதவ் தலைமை வகித்தார். ராஜ்நாராயண், ராம்சேவக் யாதவ், சத் பிரகாஷ் மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அலகாபாத் சென்றிருந்தபோது பண்டித நேரு குடும்பத்தின் பழம் பெரும் வீடான "ஆனந்த பவன"த்தைச் சென்று பார்வையிட்டேன். கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளின் கூடுதுறையான திரிவேணி சங்கமத்திற்கும் சென்றேன்.

அன்று காலையில் நடைபெற்ற பின்தங்கியோர் மாநாட்டில் பேசும்போது இறுதியாக நான் கூறியது. 'மத்திய அரசு வேலை வாய்ப்புக்களில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதுபோல மத்திய சர்க்காருடைய உத்தியோகங்களில் இனி மேல் பின்தங்கிய மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு

இவ்வளவு இடம் என்று நிர்ணயிக்கப்படவேண்டும். அதையும் மத்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்'' என்று கூறினேன். நான் அன்று கூறிய அந்தக் கருத்துத்தான் இன்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளாக வெளிவந்திருக்கிறது.

எப்படியோ என்னுடைய அலகாபாத் பயணமும், காலையிலும், மாலையிலும் ஆற்றிய உரைகளும் டெல்லியின் மனதுக்கு இதமாக இல்லை!

அத்துடன் நான் முதலில் குறிப்பிட்டதைப் போல ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய கருத்துக்களுக்கு எனது ஆதரவைத் தெரிவித்து வந்ததும், டெல்லியின் கோபத்தை அதிகமாக்கத் தவறவில்லை.

பொது வாழ்வில் இருப்போர் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதிலும் - தூய்மையைக் கெடுப்போர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலும் நான் ஜெயப்பிரகாஷ் அவர்களின் கருத்தை வரவேற்றேன்.

அதன் காரணமாகத்தான் கழக அரசில் 1973 - ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 - ஆம் தேதியன்று சட்டப் பேரவையில் ஒரு மசோதா அறிமுகம் செய்யப்பட்டது. ''பொது வாழ்வில் ஈடுபட்டோர் லஞ்ச ஊழல் குற்றத் தடுப்பு மசோதா'' என்று அந்த மசோதாவுக்குப் பெயர்.

இந்தச் சட்டத்தின்படி பொது வாழ்வில் ஈடுபட்டிருப்போர் மீது சாட்டப்படும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க உயர்நீதி மன்ற நீதிபதி அந்தஸ்தில் உள்ள ஒரு நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும். அவருக்கு உதவியாக தேவைப்பட்டால் கூடுதல் கமிஷனர்கள் நியமிக்கப் படுவார்கள். கூடுதல் கமிஷனர்களாக நியமிக்கப்படுவோர் மாவட்ட நீதிபதி அந்தஸ்தில் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இதன்படி லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டால் பொது வாழ்வில் ஈடுபட்ட அவருக்கு ஏழு ஆண்டுக் காலம் வரை சிறை தண்டனை விதிக்க மசோதா வகை செய்யும். பொது வாழ்வில் ஈடுபட்டவர் மீது சாட்டப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு பொய்யானவை என்று விசாரணைக்குப் பிறகு முடிவானால் அவ்வாறு பொய்யான குற்றம் சுமத்தியவருக்கு மூன்றாண்டு காலம் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம்.

பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் யார் என்று கூறும் போது முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சர், முன்னாள் - இந்நாள் அமைச்சர்கள், சட்டப்பேரவை, மேலவை முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், முன்னாள் மேயர்கள், நகராட்சித் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், மாநகராட்சி முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர்.

இந்த மசோதாவை அறிமுகம் செய்தபிறகு அதுபற்றி ஆய்வு செய்வதற்காக பொதுக்குழுவிற்கு அனுப்பப்பட்டது.

இந்த மசோதாவை எம். ஜி. ஆர். அப்போது கறுப்பு மசோதா என்று வர்ணித்தார். அவர் அவ்வாறு கருத்து தெரிவித்தபோதும், அப்போது சென்னைக்கு வந்திருந்த ஜனசங்கத் தலைவர் எல். கே. அத்வானி அவர்கள் அந்த மசோதா பற்றி கருத்து கூறும்போது, "தமிழ்நாடு அரசின் ஊழல் ஒழிப்பு மசோதா பற்றிய கொள்கையை வரவேற்கிறேன். ஊழல் பிரச்சினை மாநில மட்டத்திலேயே தீர்க்கப்பட வேண்டும். மத்திய அரசு இதனை மேற்கொள்ளக் கூடாது. இந்த மசோதா வரம்பிற்குள் முதலமைச்சரும் சேர்க்கப்பட்டுள்ளது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். மத்திய சர்க்காரின் லோக்பால், லோக் அயுக்த் மசோதா வரம்புக்குள் பிரதமர் சேர்க்கப்படவில்லை" என்று கூறினார்.

அவர் மாத்திரமல்ல; 21 - 2 - 73 தேதியிட்ட 'இந்து நாளேட்டில் எம். ஏ. சதானந்த் என்பவர் அந்தச் சட்டம் பற்றித் தன்னுடைய கருத்தை எழுதியிருந்தார். அதில் "எல்லாவற்றுக்கும் வழிகாட்டும் தமிழ்நாடு, இந்த வகையிலும் அகில இந்தியா விற்கும் வழிகாட்டியுள்ளது. நடைமுறைக்கேற்ற நல்ல சட்டங்களைக் கொணர்வதில் தமிழகம் எப்பொழுதுமே முன்னோடி யாக இருந்திருக்கிறது. அந்த வகையில் இந்த மசோதாவும் ஒரு முன்னோடியாகும். ஒரு ஜனநாயக அமைப்பில், அறிவுபூர்வமான கருத்துக்கள் எந்தப் பக்கத்தில் இருந்து வந்தாலும் அவை வரவேற்கப்படவேண்டியவை. அந்த வகையில், மிகச் சிந்தனைத் தெளிவோடு இந்த மசோதா வந்துள்ளது. நடைமுறைக்கேற்ற நியாயமான ஒரு மசோதாவைத் தாக்கல் செய்யக் காரணமாக இருந்தவர்களைப் பாராட்டுகிறேன்," என்று எழுதியிருந்தார்.

சுயராஜ்யா வார இதழில் அதன் ஆசிரியர் க. சந்தானம் அவர்கள் இந்தச் சட்டம் குறித்து அப்போது ஒரு கட்டுரையே தீட்டியிருந்தார். அது வருமாறு:

"தமிழக சட்டமன்றத்தின் கடந்த கூட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள ஊழல் விசாரணைச் சட்டம் தீவிரமானதும் நெடு நோக்குடையதாகும் ஆனால் என்னை வியப்பிலாழ்த்தியது என்னவெனில், எம். ஜி. ராமச்சந்திரனும் வேறு சிலரும் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதானது ஏதோ ஊழலை மறைப் பதற்கென்றே செய்யப்பட்ட மாக்கியவல்லி நடவடிக்கை என்பதாக எடுத்த எடுப்பிலேயே கூறிவிட்டதாகும்.

அவர்கள் இந்தச் சட்ட நகலை உன்னிப்பாகப் பரிசீலித் தார்களா? புரிந்து கொண்டார்களா? என்று நான் ஐயுறு கிறேன்.

*1969* – ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவை முன் கொண்டு வரப்பட்டு பின்னர் என்ன காரணத்தாலோ மாநிலங் களவை முன் கொண்டு வரப்படாமல் காலாவதியாகும்படி விடப்பட்ட லோக்பால், லோக்அயுக்த் சட்ட நகலோடு தமிழக சட்ட நகலை அவர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

மத்திய சட்ட வரைவைக் காட்டிலும் சில வகைகளில் தமிழகத்தில் கொண்டுவரப்பட்டுள்ள சட்ட வரைவு சிறப்புடைய தாகும். லோக்பால் மசோதா பிரதம மந்திரிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதன் வரம்பிலிருந்து விலக்களித்தது. தமிழக சட்டமோ முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டப்பேரவை மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்களையும் அதன் வரம்புக்குள் சேர்த்துள்ளது.

சட்டத்தில் சாத்தியமான அளவுக்கு நீதிபதிகளை நியமிப் பதற்கான ஏற்பாடு சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவு பிற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரியாக விளங்கும்."

அந்தச் சட்டத்தின் சிறப்பு பற்றி நானே கூறுவதைவிட சந்தானம் போன்றவர்கள் எழுதியிருப்பதிலிருந்து அதனைப் புரிந்து கொள்ளலாம் என்பதற்காகத்தான் இதை எழுதி யுள்ளேன்.

இறுதியாக பொதுக்குழு முடிவிற்குப் பிறகு *1973* – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 - ஆம் தேதியன்று அந்த மசோதா தமிழகத்தின் இரண்டு சபைகளிலும் நிறைவேறியது.

சட்டத்தை முழுமையாகப் படித்துப் பார்த்த ஜெயப் பிரகாஷ்நாராயண் அவர்கள் கழக அரசைப் பாராட்டியதோடு,

தனது முழுப் புரட்சி இயக்கமான ஊழல் ஒழிப்பு இயக்கத்துக்கு இந்தச் சட்டம் ஓரளவு உதவிபுரியும் என்றும் கூறினர்.

கழக அரசு நிறைவேற்றிய இந்தச் சட்டத்தின் அடிப் படையில் நீதிபதி வெங்கடாத்திரி அவர்கள் ஊழல் குறித்து வரக்கூடிய புகார்களை விசாரிப்பதற்காக தமிழக அரசின் சார்பில் நியமிக்கப்பட்டார். ஆனல் ஊழல் புகார்களைக் கொண்டு போய் டெல்லியிலே கொடுத்த அ. தி. மு. க. வினர் யாரும் தமிழக அரசின் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு கூறி அந்தக் கமிஷன் முன்னல் ஒரு புகார்கூட கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு அந்தச் சட்டத் தையே திரும்பப் பெற்றுவிட்டார்கள்.



# 62

## ஜெ. பி. பாராட்டு!

மதுவிலக்கை நடைமுறைப்படுத்தி வந்த தமிழகம்-நமது மாநிலத்திற்கு அதனுல் ஏற்பட்ட இழப்பை ஓரளவுக்காவது சரிக்கட்ட மத்திய அரசு முன்வராததாலும், அதற்காக எத்தனையோ முறை மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தும் அது பயனளிக்காத காரணத்தாலும் மதுவிலக்குக் கொள்கையை அகில இந்திய அளவில் நடைமுறைப்படுத்தாததால் ஏற்பட்ட இன்னல்களுக்கு தமிழகம் ஆளாக வேண்டியிருந்ததாலும், நிதி நிலைமையைச் சமாளிப்பதற்காக மிகுந்த மனவேதனையுடன்-கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள்ளே கொளுத்தப் படாத கற்பூரமாக தமிழகம் எத்தனை நாளைக்கு இருக்க முடியும் என்ற கேள்வியை எழுப்பி, 1971-ஆம் ஆண்டு மதுவிலக்கை ஒத்திவைப்பதாக நான் அறிவித்திருந்த போதிலும்-அண்ணல் காந்தி நெறி நின்று அண்ணு வழியில் ஆட்சி நடத்திய எனக்கு மதுவிலக்கை ஒத்தி வைத்ததின் காரணமாக நெஞ்சில் ஏதோ ஒரு உணர்வு உறுத்திக்கொண்டே இருந்தது.

ஒத்திவைப்பது என்பது மீண்டும் நடைமுறைக்கு வரும் என்ற அடிப்படையில்தான் அதனை ஒத்தி வைத்தபோதே பேரவையில் நான் ஒத்திவைப்பதாக உறுதியாக அறிவித் திருந்தேன். அவ்வாறு நான் சட்டப் பேரவையில் அறிவித்தி ருந்ததற்கு இணங்க, 14-8-74 அன்று சட்டப் பேரவையில் முதல் துணைமதிப்பீடுகளை அவையிலே வைத்த போது பேரறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் அன்று அதே ஆண்டிலேயே மீண்டும் தமிழகத்தில் முழுமையான மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவேன் என்று மகிழ்ச்சியுடன் அறிவித்தேன்.

அப்படி அன்று நான் அறிவித்த போதே மற்ருெரு அறிவிப்பையும் அவையிலே அறிவித்தேன். அந்த அறிவிப்பு வருமாறு :

''நீண்ட நெடு நாட்களாக நல்லோர் பலரின் முறை யீடாக இருந்து வருவதும், ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில்

குறிப்பிடப்பட்டதுமான குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிப்பது என்று இந்த அரசு முடிவு செய்கிறது.”

இவ்வாறு சட்டப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து-அந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கான மசோதாக்கள் கொண்டு வந்து அவையிலே நிறைவேற்றப் பட்டன. அப்படி நிறைவேற்றப்பட்ட இரண்டு மசோதாக்களில் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் கழக அரசு நடைமுறைப் படுத்திய போதிலும்; குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்ற இடைக்காலத் தடையின் காரணமாக அது பத்தாண்டு காலமாக நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் அ. தி. மு. க. அரசின் சார்பில் அந்தச் சட்டத்தை எழுந்து நடமாடச் செய்யத்தக்க விதத்தில் விரைவுப்படுத்த தயாராக இல்லாததுதான் அதற்குக் காரணம் என்பதை நான் சொல்லாமல் அனைவரும் புரிந்துகொள்வர்.

1974-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவெங்கும் பல மாநிலங்களில் குழப்பமான நிலைமை. தமிழகத்தில் தி. மு. கழகம் மத்திய அரசிடம் வெகு வேகமாக மாநில சுயாட்சி கோரிக்கைக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. முதலமைச்சர் என்ற முறையில் நான் கலந்துக் கொள்கின்ற நிகழ்ச்சிகளில் எல்லாம் மாநில சுயாட்சி கோரிக்கைக்கு உள்ள நியாயங்களை எடுத்துக் காட்டியதோடு, இந்தியாவிலே உள்ள பழம்பெரும் தலைவர்கள் பலர் மாநில சுயாட்சிக்கு ஆதரவாகக் கூறிய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி வந்தேன். மாநில சுயாட்சிக்கு ஆதரவாக ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் கூறிய கருத்துக்களையும் நான் என்னுடைய கூட்டங்களில் எதிரொலிக்கத் தவறவில்லை.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் அந்தக் காலக் கட்டத்தில் இந்திரா காந்திக்குப் பெரிய கேள்விக்குறியாக இருந்து வந்தார். சர்வோதயத் தலைவராக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் அப்போது பீகாரில் உள்ள மந்திரிசபை மாற்றப்பட வேண்டும். அதை மாற்றுகிறவரை-வேறு தேர்தல் நடத்துகிறவரை தன்னுடைய போராட்டத்தை நிறுத்தமாட்டேன் என்று கூறி பீகாரில் பெரிய கிளர்சசியை நடத்தினர்! பீகாரே போர்களமாக இருந்தது.

ஜெ. பி. அவர்களின் இந்தக் கிளர்ச்சி பற்றிப் பெங்களூரில் என்னை நிருபர்கள் சந்தித்து கருத்து கேட்டபோது

ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு உள்ள ஐந்தாண்டு காலம் வரை காத்திருந்து, அந்த அரசு தவறு செய்யுமானால் அதை மக்களிடம் எடுத்துச் சொல்லி, மக்களால் வாக்குச் சீட்டுகள் அளிக்கப்பட்டு கீழே இறக்கப்பட வேண்டுமேயல்லாமல் இடையில் வன்முறைக் கிளர்ச்சிகளால் ஒரு அரசை இறக்குவது என்பது முறையாக ஆகிவிடக் கூடாது, அது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல; அதே நேரத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்ற பெரியவர்கள் இப்படிப் பட்ட கிளர்ச்சிகளில் ஈடுபடுவார்களானால் அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய அரிய யோசனைகளைக் கேட்டு அவர் களுடைய மனதைப் புண்படுத்தாமல் பேச்சு வார்த்தைகளின் மூலம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்" என்று சொன்னேன்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அமெரிக்க நாட்டிலே கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகத்திலே பயின்றவர் என்றாலும் சோஷலிச சித்தாந்தங்களோடுதான் இந்தியாவிற்குத் திரும்பினார். அங்கே பயின்ற அந்தக் காலத்திலே காப்பித் தோட்டங்களில் வேலை செய்து தன்னுடைய அன்றாடச் செலவிற்குச் சம்பாதித்துக் கொண்டவர். இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். சதித்திட்ட வழக்கில் ஹசாரிபாக் சிறையில் பூட்டப் பட்டார். அங்கிருந்து தப்பினார். வெள்ளைக்கார அரசாங்கம் ஜெயப்பிரகாஷ் நாராயணின் தலையைக் கொண்டு வருபவர் களுக்கு லட்சம் ரூபாய் பரிசு என்று அறிவித்தது. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஒன்பதாண்டு காலம் சிறைச்சாலையிலே வாழ்ந்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பல தடவைகள் அமைச்சர் பதவியையும், பிரதமர் பதவியையும் ஏற்க வேண்டு மென்று வலியுறுத்தியும் மறுத்துவிட்டவர் அவர்! குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் உட்பட பலர் கேட்டபோதும் மறுத்தவர் ஜெயப்பிரகாஷ் நாராயண். அப்படிப்பட்டவரை தமிழகத்திற்கு ராஜாஜி அவர் களின் நினைவாலயத்தைத் திறப்பதற்காக நான் அழைத்ததும் வருவதற்கு ஒப்புக்கொண்டார். ராஜாஜி அவர்கள் எந்த அளவிற்கு தமிழகத்துடன்—இந்தியாவுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியவர் என்பதையும் சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்டவருக்காக கழக அரசின் சார்பில் ஏற்படுத்தப் பட்ட நினைவாலயத்தினைத் திறப்பதற்காக வந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுக்கு தமிழகத்திலே காங்கிரஸ்காரர்கள்

கறுப்புக்கொடி காட்டப்போவதாக அறிவித்தனர். எம்.ஜி.ஆர். ஜெ. பி. அவர்களுக்கு கடிதம் எழுதி தமிழ்நாட்டிற்கு வந்து ஊழலை ஒழிக்கப் போராட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கறுப்புக்கொடி காட்டுவது பற்றி நான் கருத்து தெரிவிக்கும் போது "ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்தியா முழுவதும் ஊழல் ஒழிய வேண்டுமென்கிறார். இங்கே அவர் ஏதேனும் சுட்டிக்காட்டுவாரானால் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறது கழகம்! ஊழல் அல்லது தவறு என்று சுட்டிக் காட்டப் படுமானால் தம்பியானாலும், அண்ணன் ஆனாலும், ஆருயிர்த் தோழன் ஆனாலும், கழகம் நிர்வகித்த சென்னைக் கார்ப்பரேஷன் ஆனாலும் நடவடிக்கை எடுக்கத் தயங்காதது கழக அரசு. நாளை வரும் ஜெயப்பிரகாசர் சுட்டிக் காட்டினாலும் நடவடிக்கை எடுப்போம். அந்த அடிப்படையில்தான் அவரோடு நம் உறவிருக்கும். தி. மு. கழகம் ஜெயப்பிரகாசருக்கு அமோக வரவேற்பளிக்கும்" என்று குறிப்பிட்டேன்.

நான் கழகம் வரவேற்பு தரும் என்று கோவையிலே குறிப்பிட்டது மறுநாள் ஏடுகளில் வெளிவந்தது. அதன் விளைவை 1975–ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் காலையில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் கண்டது. பார்த்த இடமெல் லாம் தி. மு. கழகக் கொடிகள்தான். கறுப்புக்கொடி காட்டப் போவதாக அறிவித்தவர்கள் எல்லாம் சென்ற இடம் தெரிய வில்லை. மக்களின் ஆர்வப் பெருக்கின் அலைமோதலில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களை எப்படி புகைவண்டியிலி ருந்து இறக்கி காருக்குக்கொண்டு போவது என்று தெரியாத நிலை. அவரை வரவேற்பதற்காகச் சென்றிருந்த அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூட்டத்தில் சிக்கிக் கொண்டனர். அந்த அளவிற்கு தி. மு. கழகம் ஒரு மகத்தான வரவேற்பை சென்னையில் ஜெ. பி. அவர்களுக்கு அன்று கொடுத்தது.

அன்று பிற்பகல் ஜெ. பி. அவர்கள் என்னுடைய இல்லத் திற்கு வருகை தந்தார். பேராசிரியர் அவர்களும், நாவலர் அவர் களும் உடன் இருந்தனர்.

அன்று மாலையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் நினைவாக சென்னை கிண்டியில் காந்தி நினைவு மண்டபத்திற்கு அருகே தமிழக அரசால் அமைக்கப்பட்ட ராஜாஜி நினைவாலயத் திறப்பு விழா. நடைபெற்றது. தலைமைச் செயலாளர்

பி. சபாநாயகம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். விழாவிற்கு முதலமைச்சர் என்ற முறையில் நான் தலைமையேற்றேன். நாவலர் அவர்கள் ராஜாஜி அவர்களின் உருவச் சிலையைத் திறந்து வைத்து உரையாற்றினார். பின்னர் ராஜாஜி நினைவாலயத்தை ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார்.

அங்கே அன்று உரையாற்றும் போதுதான் ஜெயப்பிரகாசர் அவர்கள் என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டம். அதனை அண்மையில் இங்கு ஒழித்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அதனால் இங்குள்ள பெரும் புள்ளிகளுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கலாம். குஜராத் மாநிலத்தில் மதுவிலக்கு, குதிரைப் பந்தயம், லாட்டரி ஆகிய இந்த மூன்றும் கிடையாது! அதைப்போல மதுவையும், குதிரைப் பந்தயத்தையும் ஒழித்த நீங்களும் இந்த லாட்டரி யையும் வெகு விரைவில்........" என்று கூறியபோதே நான் குறுக்கிட்டு, ஜெ. பி. அவர்களிடம் அண்ணா பிறந்த செப்டம்பர் 15-ந் தேதி முதல் அந்த ஆண்டே 'லாட்டரி சீட்டு' தமிழகத்தில் இருக்காது என்று பலத்த கையொலிகளுக்கிடையே கூறினேன்.

தொடர்ந்து பேசிய ஜெ. பி. அவர்கள் "தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் இப்போது என்னிடம் செப்டம்பர் 15-ஆம் தேதியிலிருந்து லாட்டரி சீட்டை ஒழித்து விடுவதாகத் தெரிவித்தார். அவர் உடனுக்குடன் துணிகரமாக நீண்ட கால பயனளிக்கக்கூடிய முடிவுகளை எடுக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர் என்பதை நான் முன்பே அறிவேன். அதைத் தொடர்ந்து இப்போதும் இங்கேயே அறிவித்ததற்காக அவரை நான் பாராட்டுகிறேன். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ராஜாஜி அவர்களுக்கு இன்று எழுப்பிய நினைவாலயத்தைவிட மிகப் பெரிய சிறப்பு மகத்தான நினைவா லயம் என்னவென்றால் தமிழகத்தில் பரிசுச் சீட்டை ஒழித்தல், மதுக்கடை ஒழிப்பு, குதிரைப் பந்தய ஒழிப்பு ஆகியவைகள் தான்" என்றார்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் அந்த விழாவில் பேசிய ஏனைய கருத்துக்கள் வருமாறு :

"ராஜாஜி அவர்களின் பெயரால் அமைந்துள்ள மண்டபத்தினை திறந்துவைக்கும் பெருமையை எனக்களித் ததற்காக தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத்

தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் தலைசிறந்த தவப் புதல்வரின் நினைவால் கட்டப்பட்டுள்ள இந்த மண்டபத்தின் வடிவ அமைப்பினை உங்கள் முதலமைச்சர் அவர்களே தயாரித்தார் என்பதைக் கேட்டு நான் பெரும் மகிழ்ச்சியும் பேருவகையும் கொள்கிறேன்.

ராஜாஜிக்காக இந்த நினைவு மண்டபத்தினை தமிழக அரசு எழுப்பியதற்காக நான் முதற்கண் பாராட்டுகிறேன். பாரத நாட்டுப் பிரதமர் அவர்களுக்கு நான் ஒரு ஆலோசனை கூறலாம் என்றால் தமிழகத்தின் முதலமைச்சர் காட்டிய முன் உதாரணத்தைப் பின்பற்றி பாரதப் பிரதமர் அவர்கள் நம்முடைய நாட்டின் தலைநகரான டெல்லியில் ராஜாஜி அவர்களுக்கு ஒரு நினைவாலயத்தை எழுப்ப வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ராஜாஜி அவர்கள் தொடர்ந்து காங்கிரசிலே இருந்திருந்தால், இதற்குள் ராஜாஜி அவர்களுக்கு ஒன்றல்ல, எண்ணற்ற பல நினைவாலயங்கள் எழுப்பப்பட்டிருக்கும் என்று நான் துணிந்து கூற விரும்புகிறேன்.

அதிகாரத்தால், சம்பிரதாயத்தால் நிலைநாட்டப்பட்ட அமைப்பிற்கு எதிராக மாறுபட்ட கருத்து கொண்டிருப்பதை வரவேற்பதாக அண்மையில் பிரதமர் அவர்கள் கூறியிருப்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ராஜாஜி அவர்களுக்கு நினைவாலயம் எழுப்புவதின் மூலம் அவருடைய பெருமைக்கு மேலும் சிறப்பு தேடித்தர முடியாது. ஆனால் வருங்கால தலைமுறை தங்களுடைய நாட்டின் முன்னோர்கள் சிறப்பைப் பற்றி நினைந்து அவர்கள் காட்டிய வழிகள் பற்றி அறிந்து கொள்ள நினைவு மண்டபங்கள் உதவியாக இருக்கும். திருமதி இந்திரா காந்தி கூறியதைப்போல மாறுபட்ட கருத்து என்று எடுத்துக்கொண்டால், மனச்சான்றுக்கு உண்மையான மாறுபட்ட கருத்துக்கு உறுதுணையாக இருக்கிற உத்தம நெறியை விளக்க எடுத்துக்காட்டாக விளங்கியவர் ராஜாஜி அவர்களாகும். அந்த முறையில் பாரதப் பிரதமர் அவர்கள் மனச்சான்றுக்கு உண்மையான மாறுபட்ட கருத்தை வரவேற்பது உண்மையாக இருந்தால், ராஜாஜி அவர்களுக்கு இதுவரையில் நினைவாலயம் எழுப்பாத தவறை திருத்திக் கொண்டு உடனடியாக அவருக்கு நினைவாலயம் எழுப்ப முன் வருவார் என்று நம்புகிறேன்.

அந்த விழாவிற்கு தலைமை தாங்கிய நான் உரையாற்றும்போது, "ராஜாஜி அவர்களின் தூய நினைவாக இந்த நினைவுச் சின்னம் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. இந்த

நினைவாலயத்தைத் திறந்து வைப்பதற்கு எல்லா வகையிலும் தகுதி படைத்த ஒருவர் இன்று வருகை தந்திருப்பது விழாவிற்கு பெருமை சேர்ப்பதாகும். எத்தனையோ தியாகப் போராட்டங்களில் ஈடுபட்டவர்; தன்னலமற்றவர்; நாட்டிற்கு உழைத்தவர்; இன்னும் உழைத்துக் கொண்டிருப்பவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஆவார்கள்.

நேர்மையும் நியாயமும் நிலைக்க பாடுபட்டு வருகிற ஒரு தலைவர், அபிப்பிராய பேதங்களுக்கு இடையிலேயும்- அன்பால், அறிவால், ஆற்றலால், எங்கள் இதயம் கவர்ந்த ராஜாஜி அவர்களின் நினைவாலயத்தைத் திறந்து வைப்பது என்பது ராஜாஜியின் குடும்பத்தாரை மட்டுமல்ல; தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு நல்ல குடும்பத்தாரையும் மகிழ்ச்சியிலும் உணர்ச்சியிலும் திளைக்கச் செய்கின்ற நிகழ்ச்சியாகும். தமிழகத்தில் இன்று நடைபெறுகின்ற அரசுக்கு 1967-ஆம் ஆண்டு தொடக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்தவர் ராஜாஜி. அதன்பிறகு கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டபோதும், நான் அவரைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் ஆரம்பத்தில் நீங்கள் வழங்கிய வாழ்த்து கல்மேல் எழுத்துப்போல அப்படியே இருக்கிறது; அதனை, நீங்களே நினைத்தால்கூட உங்களால் மாற்றி எழுதிட இயலாது என்று கூறுவேன். அவரும் முகம் மலர புன்னகை புரிந்து என்னை மீண்டும் மீண்டும் வாழ்த்தி அனுப்புவார்.

1971-ஆம் ஆண்டு நிதிநிலை காரணமாகவும், பக்கத்து மாநிலங்கள் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தாத காரணத்தால் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாகவும் மெத்த மனவருத்தத்தோடு தமிழக அரசு மதுவிலக்கை ஒத்தி வைத்தது. தமிழக அரசு தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அவர் கருத்து வெளியிட்டார். என்னிடமும் வலியுறுத்தினர். மது விலக்கை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டு மென்று அவர் கூறிய உருக்கமிகு சொற்கள் என் உள்ளத்திலே ஊடுருவிப் பாய்ந்து குடைந்து கொண்டிருந்த காரணத்தினல் மீண்டும் தமிழக அரசின் சார்பில் முழுமையான மதுவிலக்குத் திட்டத்தை நடை முறைக்குக் கொண்டு வந்துள்ளோம்.

இது ராஜாஜி அவர்களுக்கு நாங்கள் செலுத்திய காணிக்கையாகும். இங்கு எழுப்பப்பட்டுள்ள இந்த நினைவாலயத்தைவிட, மீண்டும் மதுவிலக்குக் கொள்கையை

நாங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பதுதான் அவருக்கு பெரிய நினைவாலயம் ஆகும்" என்று குறிப்பிட்டேன்.

அன்று மறுநாள் சென்னை கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் பேசும் போது, "தி. மு. கழக அரசு ஊழல் செய்திருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். எம். ஜி. ராமச்சந்திரன் இந்த அரசைப் பற்றி முன்பே பத்திரிகைகளில் வெளியிட்ட அறிக்கையின் வாசகங்களைக் கடிதமாக்கி இன்று என்னிடம் அளித்தார்கள்.

எம். ஜி. ராமச்சந்திரன் கடிதத்தில் உள்ள வாசகங்கள் மிகவும் தரம் குறைந்த கசப்பான வசைமாரிகள். நடைபெறுகின்ற அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்துவதாலேயே இது ஊழல் உள்ள அரசு என்றாகி விடாது. உண்மையும் ஆகி விடாது. குற்றம் சாட்டுகிறவர்கள் குற்றச்சாட்டை நிரூபிக்க முன்வர வேண்டும்.

ஒருவர் மீது குற்றச்சாட்டு என்றதும், அவர்கள் கேட்டுக் கொண்டது போலவே பகிரங்க நீதி விசாரணை வைக்க உடன்பட்டு நீதி விசாரணை என்று பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார் முதலமைச்சர் திரு. கருணாநிதி. வேறு எந்த மாநில முதலமைச்சரும் செய்ய முன்வராதபோது, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதிதான் தன் அமைச்சரவை மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலையே அச்சடித்து சட்டமன்றத்தில் முன் வைத்தார். தமிழ்நாட்டில் ஆட்சி செய்யும் தி. மு. கழக அரசு பற்றி என் நிலை என்ன என்று அறிய அனைவரும் ஆவலோடு இருக்கிறார்கள். தி. மு. கழக அரசு சரிவர ஆட்சி நடத்தவில்லை என்றும், தவறுகளைச் செய்திருக்கிறது என்றும் குறை கூறுகிறார்கள். குற்றச்சாட்டுக்களைக் கூறுவது சுலபம். அவற்றை ஆதாரத்துடன் நிரூபிப்பது கடினம்" என்றார்.

ஜெ. பி. அவர்கள் இவ்வாறு தமிழக அரசைப் புகழ்ந்து கூறியதும், தமிழக அரசும், கழகமும் ஜெ. பி. அவர்களுக்கு அளித்த மாபெரும் வரவேற்பும் டெல்லியில் உள்ளவர்களுக்கு கழகத்தின் மீதும் கழக அரசின் மீதும் இருந்த கோபத்தை அதிகப்படுத்தின.

# 63

## நெருக்கடி நிலைப் பிரகடனம்

1975-ஆம் ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி என்பது சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில்-குறிப்பாக இந்தியாவின் நீதித்துறையிலே அழியாத இடம் பெற்ற தினமாகும். அன்று தான் 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உத்திரப்பிரதேசம் ரேபரேலி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தேர்தல் செல்லாது என்று அலகாபாத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்த நாள்.

தன்னுடைய தேர்தல் வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள் வதற்காக பிரதமர் இந்திரா காந்தி ஊழல் முறைகளைக் கையாண்டார் என்ற புகார்களில் இரண்டை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அளித்த நீதிபதி யின் பெயர் ஜகன் மோகன்லால் சின்ஹா. இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது என்று வழக்குத் தொடுத்தவர் அவரை எதிர்த்து அந்தத் தேர்தலில் தோல்வியடைந்த ராஜ்நாராயண். அந்த வழக்கில் பிரதமருக்கு ஆதரவாக வழக்கறிஞர் என். சி. காரேயும், ராஜ்நாராயணனுக்கு ஆதரவாக சாந்திபூஷனும் ஆஜரானார்கள். இரண்டு வழக்கறிஞர்களும் அரசியல் சார்புடையவர்கள். காரே புதிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; சாந்திபூஷன் பழைய காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்.

இந்திரா காந்தி தனது தேர்தல் வெற்றிக்காக இந்திய சர்க்காரின் கெஜட் பதிவு பெற்ற அதிகாரியாகப் பணியாற்றிய யஷ்பால்கபூர் அவர்களை தனது தேர்தல் வாய்ப்புகளுக்காகப் பயன்படுத்திக் கொண்ட ஊழலையும், இந்திரா காந்தியின் தேர்தல் கூட்டங்களில் உத்திரப்பிரதேச அரசு செய்த ஏற்பாடு களையும், போலீஸ் படைகளை அங்கு காவல் போட்ட வகையில் ஊழல் செய்தார் என்பதையும் நீதிபதி உத்தரவில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். யஷ்பால்கபூர் அவர்கள் முன்னதாகவே தனது வேலையை ராஜினாமா செய்த போதிலும் அது குடியரசுத் தலைவரால் ஜனவரி 25-ஆம் தேதிதான் ஒப்புக் கொள்ளப் பட்டது; எனவே அந்தத் தேதி வரையில் அவர் பணியில்

இருந்ததாகத்தான் பொருளாகும். அந்தக் கால இடைவெளியில் அவர் இந்திரா காந்தியின் வெற்றிக்காக உழைத்தது முறை கேடானது என்று நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவில் யாரும் எதிர்பாராத வண்ணம் திடீரென்று ஒரு பெரிய திருப்பத்தை அந்தத் தேர்தல் செல்லாது என்ற அறிவிப்பின் மூலம் ஏற்படுத்தி நாடு முழுவதும் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டு விட்டது. அனைவரது உள்ளத்திலும் "அடுத்தது என்ன?" என்ற கேள்வி பரவலாக ஒலிக்கத் தொடங்கியது.

இந்தத் தீர்ப்பு கூறப்பட்ட அரைமணி நேரத்திற்கெல்லாம் பிரதமர் சார்பில் நீதிபதி சின்ஹா முன்பு ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டு அந்தத் தீர்ப்பின் அமுல் இருபது நாட்களுக்கு நிறுத்தி வைக்கப் படும் என்று உத்தரவிட்டார். ஆனால் அந்த இருபது நாட் களுக்கு முன்பு உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டால், அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் "அமுல் நிறுத்த" உத்தரவு அந்தத் தேதியுடன் ரத்தாகிவிடும் என்று நீதிபதி சின்ஹா தெரி வித்தார்.

இந்திரா காந்தியின் அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர்களான ஜகஜீவன்ராம், சவான், உமாசங்கர் தீட்சித் பிரம்மானந்த ரெட்டி, எச். ஆர். கோகலே, டாக்டர் சங்கர்தயாள் சர்மா, புது காங்கிரஸ் கட்சித் தலைவர் பருவா ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையில், இந்திரா காந்தி பிரதமராக நீடிக்கிறார் என்றும், இந்திரா காந்தியின் தலைமையில் முழு நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருப்பதாகவும், அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பை ஆட்சேபித்து பிரதமர் உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்வார் என்றும், உச்ச நீதிமன்ற தீர்ப்பே இறுதியானது என்றும், நாட்டின் ஒருமைப்பாடு, ஸ்திரத் தன்மை, முன்னேற்றம் ஆகியவற்றுக்கு இந்திரா காந்தியின் தலைமை அவசியம் என்றும் தெரிவித்திருந்தனர்.

தீர்ப்பையொட்டி இந்திரா காந்தி உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்று முன்னாள் துணைப் பிரதமராக இருந்த பழைய காங்கிரஸ் தலைவர் மொரார்ஜி தேசாயும், சோஷலிஸ்ட கட்சித் தலைவர் மதுதண்டவாதே எம். பி. யும், சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டசும், இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மோகன் தாரியாவும் தனித்தனியாகக் கருத்து தெரிவித்திருந்தனர். பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த

**எஸ். கே. பட்டீல், எஸ். என். மிஸ்ரா, சாக்ளா ஆகியோர் தீர்ப்பு குறித்து தங்களது மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்**

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பிற்குப் பிறகும் இந்திரா காந்தி பிரதமராக நீடிக்க வேண்டும் எனக் கூறப்பட்ட கருத்தைப் பலமாகக் கண்டித்தார்.

ஜனசங்கத் தலைவர் வாஜ்பாய் அவர்கள் காஷ்மீரில் இருந்த குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அவர்களை ஜனதா முன்னணி கட்சிகளின் சார்பில் சந்தித்து அலகாபாத் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு ஏற்ப பிரதம மந்திரி இந்திரா காந்தி பதவி விலக வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கருத்தைத் தெரிவித்தார்.

தீர்ப்பு வெளியான அன்று நான் தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொண் டிருந்தேன். தீர்ப்பு குறித்து செய்தியாளர்கள் என்னுடைய கருத்தைக் கேட்ட போது, 'ஆளும் காங்கிரஸ் இந்தியாவில் மிகப் பெரிய கட்சி; இந்தியா, உலகத்தில் மதிக்கத்தக்க மிகப் பெரிய நாடு. இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இப்போது மத்திய அரசில் இருப்பவர்கள் என்ன முடிவெடுக்கிறார்களோ, அந்த முடிவுதான் இந்தியாவின் எதிர்கால அரசியலில் முன்மாதிரி யாகத் திகழும். இதுபோன்ற ஒரு நிலைமை தமிழ்நாட்டில தி. மு. கழக அரசுக்கு ஏற்பட்டிருந்தால் தமிழ்நாட்டில் உள்ள இந்திரா காங்கிரஸ் உட்பட மற்ற எதிர்க் கட்சிகள் எல்லாம் எவ்வளவு கூப்பாடு போட்டிருப்பார்கள், என்ன பாடுபடுத்தி யிருப்பார்கள் என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சூழ்நிலையிலும் தி. மு. கழகம் தன் பெருந் தன்மையை உணர்த்தும் வகையில்தான் இந்தக் கருத்தை அறிவிக்கிறது'' என்று கூறினேன்.

நிருபர்கள் தொடர்ந்து ''இந்திரா காந்தி ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்களா? வேண்டாமென்று சொல்கிறீர் களா?'' என்று குறிப்பிட்டுக் கேட்டதற்கு, ''அவர்களாகவே ராஜினாமா செய்திருந்தால் நாங்கள் பாராட்டியிருப்போம்'' என்று கூறியதோடு, "நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்லி யிருக்கிறோம். மேற்கொண்டு நடக்க வேண்டியது அவர் களுடைய அபிப்பிராயம். அவர்கள் எடுக்கும் முடிவு ஒரு ஜனநாயக நாட்டில் எதிர்காலத்திற்கு ஒரு முன்மாதிரியாக

இருக்குமென்பதை மறந்து விடக்கூடாது. ஜனநாயகத்திற்கு உரிய மதிப்பை அளிக்க வேண்டும்'' என்று கூறினேன்.

இந்திரா காந்திதான் நாட்டின் ஒரே தலைவர் என்று டெல்லியில் பல இடங்களில் இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்குகின்ற பணியினைச் செய்த போது சந்திரசேகர் எம். பி., கிருஷ்ணகாந்த் எம். பி., லெட்சுமிகாந்தம்மா எம். பி. ஆகியோர் அதில் கையெழுத்துப் போட மறுத்து விட்டனர்.

டெல்லியிலிருந்து வெளிவரும் இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு தனது 13-6-75 தேதியிட்ட தலையங்கத்தில், ''இப்போதுள்ள சூழ்நிலையில் சுப்ரீம் கோர்ட் அப்பீல் முடிவாகும் வரை பிரதமர் பதவியிலிருந்து விலகி நிற்பதே திருமதி இந்திரா காந்தி எடுக்கக்கூடிய சரியான நடவடிக்கையாக இருக்க முடியும். இவ்வாறு செய்வதின் மூலம் நீதித்துறையின் செயல் முறையையும் இந்திய ஜனநாயகத்தையும், அவை எழுப்பப்பட்டுள்ள அடித்தளத்தையும் அவர் மேன்மைப்படுத்தியவராவார். திருமதி இந்திரா நாட்டுக்கு நல்லது செய்திருக்கலாம், நன்றி. அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் நன்றாக நீடிக்கக்கூடும். ஆனால் அது வேறுவிஷயம். அவரது தேர்தல் அப்பீல் விசாரணையில் இருக்கும் போது அவர் தொடர்ந்து ஆட்சித் தலைமையிலும் இருக்க வேண்டும் என்பது வேறு. தலைக்கு மேல் கத்தி தொங்குபோது, அவர் பிரதமர் பதவியில் தொங்குவாரானால் செயல்படத் தேவையான திறமையோ, செயல்பட வேண்டுமென்கிற எண்ணமோ இல்லாமல் ஒரு தற்காலிக அரசின் தலைவராகவே அவர் இருக்க முடியும்'' என்று எழுதியது.

ஸ்டேட்ஸ்மென்ட் ஏடு தனது தலையங்கத்தில் ''அப்பீல் செய்து கொள்வது என்பது இதர இந்தியப் பிரஜைகளைப் போலவே இந்திரா காந்தியாருக்குத் தரப்பட்டிருக்கிற விஷயம் என்றாலும்; அதற்கிடையில் இந்திரா காந்தியார், நாட்டிற்கும் இதுவரை வெற்றிகரமாக நடைபெற்று வருகிற ஜனநாயக முறைக்கும் நன்றிக் கடன் ஆற்ற வேண்டியிருக்கிறது. அதுதான் அவர் பதவியை ராஜினமா செய்வதாகும். இப்போது ராஜினமா செய்யாமல் இருப்பதன் மூலம் தேர்தல் சட்டத்தையே மீறிய குற்றத்தைவிட பெரிய குற்றத்தை இந்திரா காந்தியார் செய்தவராகிறார்'' என்று எழுதியிருந்தது.

எதிர்க்கட்சிகள் எல்லாம் டெல்லியில் ஒன்று சேர்ந்து குடியரசுத் தலைவர் அவர்களின் இல்லத்திற்கு முன்னல் தொடர்ந்து

தர்ணு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்திராவைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டு குடியரசுத் தலைவரிடம் மகஜர் கொடுத்தனர்.

ஜூன் 22-ஆம் தேதியன்று டெல்லியில் பிரதமர் இந்திரா பதவி விலகக் கோரி மிகப்பெரிய பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் மொரார்ஜி தேசாய், அசோக் மேத்தா, ராஜ் நாராயண், மதுலிமாயி, எஸ். என். மிஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்கள்.

ஜூன் 23-ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றத்தில் பிரதமர் சார்பில் வழக்கறிஞர் பல்கிவாலா அலகாபாத் தீர்ப்பின் அமுலை நிறுத்தி வைப்பதற்கான மனுவையும், தீர்ப்பை எதிர்த்த அப்பீல் மனுவையும் தாக்கல் செய்தார். நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் மதிய உணவு இடைவேளைக்குக்கூடச் செல்லாமல் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, 24-ஆம் தேதி பிற்பகல் 3-45 மணிக்குத் தீர்ப்பு கூறுவதாகத் தெரிவித்தார்.

அதன்படி அவர் மறுநாள் அளித்த தீர்ப்பில், "பிரதம மந்திரி இந்திரா காந்தி ரேபரேலி தொகுதியிலிருந்து நாடாளு மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று அலகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அமுலை சில நிபந்தனைகளுடன் நிறுத்தி வைக்கவும், அப்பீல் பைசல் செய்யப்படும் வரை இந்திராகாந்தி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, அந்தப் பதவிக்குரிய உரிமைகளை அனுபவிக்கலாம் என்றும், அவர் தொடர்ந்து பிர்தம மந்திரி பதவியை வகிப்பதற்கு சட்ட பூர்வமான தடை எதுவும் இல்லை என்றும், ஆனால் நாடாளு மன்றத்தில் பிரேரணைகள், திருத்தச் சட்டங்கள் முதலியவைகளின் மீது ஓட்டு எடுக்கும்போது ஓட்டு போடுவதற்கு அவருக்கு உரிமை கிடையாது என்றும், நாடாளுமன்ற கூட்டங்களில் அவர் கலந்து கொள்ளலாம் என்றும், இந்த நிபந்தனைகளை நீக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தின் பெஞ்சுக்கு பிரதம மந்திரி மனு செய்து கொள்ளலாம் என்றும், முழுமையான நிபந்தனையற்ற இடைக்காலத் தடை உத்தரவிற்கும் நிபந்தனையுடன் இப்போது அளிக்கப்பட்டுள்ள இடைக் காலத் தடை உத்தரவிற்கும் நடைமுறை சம்பந்தப்பட்ட வரையில் வித்தியாசம் ஒன்றுமில்லை என்றும் நீதிபதி தீர்ப்பு

கூறினர். இந்த உத்தரவை மாற்ற வேண்டுமென்று எதிர் மனுதாரர் (ராஜ்நாராயண்) விரும்பினல் உச்ச நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சுக்கு அவரும் அப்பீல் செய்யலாம் என்றும் தீர்ப்பளித்தார்.

உச்ச நீதிமன்ற தீர்ப்புப் பற்றி நிருபர்கள் கேட்டதற்கு, பிரதமர் பதில் கூற மறுத்துவிட்டார். ராஜ்நாராயண், நீதிபதி அளித்த இடைக்காலத் தடை உத்தரவில் நிபந்தனைகள் விதித் திருப்பதை வரவேற்று, பிரதமர் ராஜினமா செய்ய வேண்டு மென்று கோரினர். பிரதமர் வீட்டில் காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்களும், தலைவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்களும் சேர்ந்து ஆலோசனை செய்தனர். இறுதியாக சுப்ரீம் கோர்ட்டின் நிபந்தனை கொண்ட இடைக் காலத் தடை உத்தரவிற்குப் பிறகும் ராஜினமா செய்வதில்லை என இந்திராகாந்தி முடிவு செய்தார்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பு வெளியானதும் அதுபற்றி செய்தி யாளர்கள் என்னிடம் கருத்து கேட்டனர். ''அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் வழங்கப்பட்ட பிறகு, அந்தத் தீர்ப்பின் உட்பொருளை உணர்ந்து இந்திய நாட்டு ஜனநாயக அரசியலுக்கு எதிர்கால முன்மாதிரியை அளிக்க வேண்டிய பொறுப்பின் சுமை, ஆளுங் காங்கிரசின் மீதும்–திருமதி. இந்திராகாந்தியின் மீதும் அதிகமாக விழுந்து விட்டது. அதனை உணர்ந்து சரியான முடிவெடுக்க வேண்டிய நிலைமைக்கு ஆளுங் காங்கிரசும், இந்திரா அம்மையாரும் தள்ளப்பட்டிருக்கிறர்கள். இந்திய ஜன நாயகத்தின் மேன்மை எந்த வகையில் பாதுகாக்கப்படப் போகிறது என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறர்கள்" என்று கூறினேன்.

நிபந்தனையற்ற இடைக்காலத் தடை பெறத் தவறியது இந்திரா காங்கிரசிற்குக் கிடைத்த அடுத்த தோல்வியாகத்தான் கருதப்பட்டது. அதற்குப் பிறகும் இந்திராகாந்தி ராஜினமா செய்ய மறுத்த காரணத்தால் அவரை ராஜினமா செய்ய வேண்டுமென்று கோரி நாடு முழுவதிலும் ஜூன் 29–ஆம் தேதியன்று போராட்டம் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் திட்ட மிட்டனர். அந்தப் போராட்டத்தை நடத்துவதற்காக மொரார்ஜி தேசாய் தலைமையில் மக்கள் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்த எதிர்க் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்கு தி. மு. கழகமும் அழைக்கப்பட்டிருந்தது.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பழைய காங்கிரஸ், ஜனசங்கம், பாரதீய லோக்தளம், சோஷலிஸ்ட், அகாலிதளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திராவிட முன்னேற்றம் கழகம் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன.

இவ்வாறு இந்தியா பூராவும் உள்ள முக்கிய ஏடுகளும். எதிர்க் கட்சிகளும், மூத்த தலைவர்களும், இந்திரா காந்தி அவர்களை ராஜினமா செய்ய வேண்டுமென்று வலியுறுத்திய போது, இந்திராகாந்தி அம்மையார் செய்தது என்ன தெரியுமா?



# 64

## இந்தியாவிலேயே முதல் தீர்மானம்!

அவசர நிலையைப் பிரகடனம் செய்தது பற்றி வானொலியின் மூலம் இந்திரா காந்தி 26–ஆம் தேதி காலையில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது :-

''இந்தியாவின் சாமானிய ஆடவர்கள், மகளிர் நலனுக்காக நான் சில முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்ததிலிருந்தே ஆழ்ந்த, பரவலான சதி உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நிச்சயமாகக் கருதுகிறேன். ஜனநாயகத்தின் பேரால் ஜனநாயகம் செயல்படுவதையே குலைக்க முயற்சி செய்யப் படுகிறது.

கலகம் செய்யும்படி நம்முடைய ராணுவத்தையும் போலீசாரையும் தூண்டிவிடும் அளவுக்கு சில நபர்கள் சென்றுள்ளனர். கடந்த சில மாதங்களில் நாம் உறுதியுடன் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் பெரிதும் உதவி புரிந்துள்ளன. பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும், ஏழை மக்கள், நிர்ணயமான வருமானம் உள்ளவர்கள் உட்பட பல்வேறு பிரிவினரின் இன்னலைப் போக்க மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அவற்றை விரைவில் அறிவிப்பேன்.

புதிய அவசர நிலை பிரகடனம், சட்டத்தை மதித்து நடக்கும் பிரஜைகளின் உரிமைகளை எவ்வகையிலும் பாதிக்காது என்று உங்களுக்கு உறுதி அளிக்க விரும்புகிறேன். கூடிய விரைவில் இந்தப் பிரகடனத்தை கைவிட்டுவிடும் வகையில் உள்நாட்டு நிலைமைகள் துரிதமாக அபிவிருத்தி அடையும் என்று நம்புகிறேன்.''

தி. மு. கழகம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் துடித்தெழுந்தது! நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள்; ஜூன் மாதம் 27–ஆம் தேதி காலை 11 மணிக்கு தலைமைச் செயற்குழு கூட்டத்தைக் கூட்டியது.

ஒருநாள் இடைவெளியில் கூட்டிய போதிலும் மொத்தம் 75 செயற்குழு உறுப்பினர்களில் 63 பேர் கலந்து கொண்டார்கள். முதல் நாள் இரவு தலைமைக் கழகத்தினருடன் கலந்துரையாடி விட்டு விடியற்காலை நான்கு மணி அளவில் என் கைப்படத் தீர்மானத்தை எழுதி, மறுநாள் செயற்குழு விவாதத்திற்கு வைத்தேன். அந்தத் தீர்மான வாசகமாவது :-

"உலகத்தின் மிகப் புகழ் வாய்ந்த மாபெரும் ஜனநாயக நாடாகக் கருதப்பட்டு வந்த இந்தியத் திருநாட்டில் அண்மைக் காலமாக ஆளுங் காங்கிரசார் கடைப்பிடிக்கும் போக்கும் பிரதமர் இந்திரா காந்தியார் அவர்கள் நடைமுறைப்படுத்தும் காரியங்களும் ஜனநாயக ஒளியை அறவே அழித்து நாட்டை சர்வாதிகாரப் பேரிருளில் ஆழ்த்தும் வண்ணம் அமைந்து வருவது கண்டு, தி. மு. கழகச் செயற்குழு தனது வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்று, விடுதலைக்கான வெள்ளி விழாவும், குடியரசுப் பிரகடனத்திற்கான வெள்ளி விழாவும் கொண்டாடி முடித்த பிறகும், அடித்தளத்து மக்கள், ஏழை, எளியோர், பாட்டாளிகள் வாழ்வில் நிம்மதியற்ற நிலையே தான் நீடித்து வருகிறது. அவர்களுக்காகப் பெரிய சாதனைகளை உருவாக்கப் போகிறோம் என்று மத்திய அரசினரால் அறிவிக்கப் பட்ட பட்டியல்கள் ஏராளமெனினும், பயன் எதுவும் ஏற்பட வில்லை.

தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் ஆளுங் காங்கிரசும், குறிப்பாக திருமதி இந்திரா காந்தி அவர்களும் முக்கியமாக வறுமையை விரட்டும் பணியை உடனடியாக நிறைவேற்றப் போவதாகக் கூறிவந்தனர். அந்தப் பணிக்கு எந்தக் கட்சியும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வறுமை நீங்கி ஏழையெளிய மக்கள் மகிழ்வெய்தி, இந்திய நாடு மேன்மையுறுவது எல்லா கட்சிகளுக்கும் உடன்பாடான கொள்கைதான்.

குறிப்பாக, தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில், இந்திரா காந்தி அறிவித்த முற்போக்குத் திட்டங்களை வரவேற்றுப் பாராட்டித் தனது ஒத்துழைப்பையும் நல்கியிருக் கிறது. வங்கிகளைத் தேசியமயமாக்குவது மன்னர் மானியத்தை ரத்து செய்வது போன்ற செயல்களை வற்புறுத்தியதும், வரவேற் றதும் தி. மு. கழகம் என்பதை நாடறியும். இது போன்ற இரண்டொரு அறிவிப்புக்களால், வறுமை தொலைந்து விட வில்லை. வறுமையை அகற்ற முடியாததற்கான பழியை எதிர்க்

கட்சிகளின் மீது சுமத்துகிற பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்து வந்த இந்திரா காந்தி அவர்கள், இப்போது திடீரென உள் நாட்டுப் பாதுகாப்பு என்ற பெயரால் அவசரப் பிரகடனத்தைச் செய்துவிட்டு, அந்த அவசரச் சட்டத்தையொட்டி, ஏழை யெளிய பின்தங்கிய மக்களுக்கு நன்மைகளை வாரி வழங்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு அவசரச் சட்டம் இல்லாமல், இதுவரை இருந்து வந்த ஜனநாயகச் செயல்முறையிலேயே ஏழை களுக்கான நன்மைகளை வழங்குவதை எந்தச் சூழ்நிலை தடுத்தது? நாடாளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மையான பலத்துடனும், இந்தியாவில் பல மாநிலங்களில் தங்கள் கட்சி ஆட்சியுடனும் வலிவோடு விளங்குகிற இந்திரா காந்தி, முற்போக்குத் திட்டங்களை ஏழைகளுக்கான நன்மைகளை நாடாளுமன்ற, சட்டசபைப் பெரும்பான்மையோடு சட்டமாக்க முடியவில்லை; ஆகவே உள் நாட்டுப் பாதுகாப்புக்கான அவசரச் சட்டமென்னும் ஆட்கொல்லி சட்டத்தைப் பிரகடனம் செய்கிறேன் என்பது வேடிக்கையான விபரீத வாதமாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், எதிர்க்கட்சி முதலமைச்சர்கள் தமிழகத்தில் அல்லது கேரளத்தில், அல்லது குஜராத்தில், ஏழை எளியோரை வாழவைக்கும் சட்டங்களை மறுக்கின்ற அரசுகள் இருக் கின்றனவா?

வருந்தத்தக்க செய்தி என்னவென்றால், ஏழை எளிய மக்களுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும் தமிழகத் தி.மு.க. அரசு நிறைவேற்றத் துடிக்கிற திட்டங்களை அங்கீகரிக்காமல் முட்டுக்கட்டை போடுவதில் மத்திய அரசு முனைப்பாக இருந்து வருகிறது என்பது தான் உண்மையாகும்.

உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு, பொய்யின் நிழலில் நின்று கொண்டு எதிர்க்கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து, அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களை தேடியலைந்து, வீண் அபவாதங்களை வாரியிறைத்து — எடுத்ததற்கெல்லாம் சதி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்குவாதிகள் என்ற சொற்கணைகளைப் பொழிந்து காலாகாலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திருமதி இந்திரா காந்தி நேற்றையதினம் (26-6-75) அதிகாலையில் சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை நடத்தியிருக்கிறார்.

வெளிநாட்டார் பகையிலிருந்து நாட்டை மீட்க அணி திரண்டு நின்றவர்களை யெல்லாம், இன்று உள்நாட்டைப் பாதுகாக்கிறேன் என்ற பெயரால் சிறைக் கொட்டடிகளில் தள்ளியிருக்கிறார். இந்திய மண்ணின் விடுதலைக்காக தியாகத் தழும்புகளை ஏற்ற பழம்பெரும் தேசபக்தர்கள், கைதிகள் என்ற பரிசினை, இந்திரா ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள் வெள்ளையர் ஆட்சியின் போதும் இல்லாத கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசத் தலைவர்களின் மீது ஏவி விடப்பட்டுள்ள அடக்குமுறை கண்டு நாடு குமுறி எழுந்துள்ளது. எல்லா செய்திகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன. அப்படியொரு சட்டம் பாய்ந்துள்ளது இப்போது! வையம் புகழ் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தியைக் கூட வானொலி வெளியிடவில்லை. 'சிலர் கைது' என்று கூறி, நாட்டின் நாயகர்களை நபர்களில் சிலராக வானொலி வர்ணிக்கிறது. தணிக்கை செய்யப்பட்ட பிறகே பத்திரிகைகளில் செய்திகள் வெளி வரவேண்டுமாம்.

விடுதலை பெற்ற இந்தியாவில், எத்தனையோ முறை எதிர்க்கட்சிகளின் எழுச்சி மிக்க கிளர்ச்சிகள் எரிமலைகளாக வெடித்திருக்கின்றன.

அப்போதெல்லாம், ஜவகர் காலத்திலோ, லால்பகதூர் காலத்திலோ, பாயாத உள்நாட்டுப் பாதுகாப்பு அவசரச் சட்டம், இன்று முதன்முறையாகப் பாய்வானேன்.

சதி நடத்துவோர், வன்முறையில் ஈடுபடுவோர், தகாத முறையில் பேசுவோர், எழுதுவோர் தண்டிக்கப்பட ஏற்கனவே எத்தனையோ சட்டங்கள் இருக்கும்போது, நாட்டைச் சர்வாதி காரப் பாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வருவது தேவை தானா? ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம் எனக் கூறி, சர்வாதிகாரக் கொற்றக் குடையின் கீழ் தர்பார் நடத்திட எடுக்கப்படும் முயற்சி நாட்டுக்கு ஏற்றது தானா?

இவைகளையெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் சிந்தித்துப் பார்த்து, நேற்றைய அவசர காலப் பிரகடனத்தினைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்திட முன்வரவேண்டும்.

பத்திரிகையாளர்களின் கைக்கட்டுகளை அவிழ்த்து விட்டு பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி

வழங்க வேண்டும். அதுவே, இந்திய ஜனநாயகத்துக்குப் பெருமை சேர்க்கும் காரியமாகும் என்று தி.மு.க. செயற்குழு சுட்டிக் காட்டுவதோடு, ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்தச் செயற்குழு பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு விடுக்கும் இந்த வேண்டுகோள் வெற்றி பெற இந்திய நாட்டு மக்கள், சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள், காந்தி அடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சின்னமாம் அறிஞர் அண்ணாவின் பாதையிலிருந்து தவறுமலும், தமக்கே உரிய தனிப் பண்பாட்டுடன் அமைதியான முறையில் வன்முறை தவிர்த்த வழியில் சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேரா வண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு, காண வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.''

தி. மு. கழகம் தமிழகத்தில் ஆளுங் கட்சியாக இருந்த போதிலும் துணிந்து மத்திய அரசை ஆளும் இந்திரா காந்திக்கு எதிராக இப்படிப்பட்ட தீரமிக்க தீர்மானத்தை அன்றைய தினம் நிறைவேற்றியது இந்திய அளவில்—ஏன் உலக அளவில் கூட பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது. அகில இந்தியாவிலும் நெருக்கடி நிலையை—இந்திரா காந்தியின் நடவடிக்கைகளை அன்றைய தினம் கண்டித்து முதன்முதலாக கட்சி ரீதியாக தீர்மானம் நிறைவேற்றி வெளியிட்ட பெருமையும் தி. மு. கழகத்திற்குத் தான் உண்டு.

கழகம் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியதற்கு மறுநாள்; உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிற யாரும் அதை எதிர்த்து வழக்கு மன்றங்களுக்குப் போக முடியாது, அதற்கு உரிமை கிடையாது என்ற வகையில் ஒரு அவசரச் சட்டத்தை குடியரசுத் தலைவர் பிரகடனம் செய்தார். கைது செய்யப்பட்டது ஏன் என்ற காரணத்தையும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லையென மற்றொரு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.



# 65

## காமராஜரின் கண்ணீரும் கடற்கரை சூளுரையும்!

நெருக்கடி நிலையின் விளைவாக தமிழகத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் தினந்தோறும் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அது பற்றிய விவரம் எதுவும் பத்திரிகை சென்சார் முறை காரணமாக வெளி உலகத்திற்கு தெரியவில்லை. மற்ற மாநிலங்களில் கைதுகள் தொடர்ந்த போதிலும் தமிழகத்தில் மட்டும் கழக அரசு யாரையும் கைது செய்யவில்லை. ஆனால் தமிழகத்திலிருந்து அச்சாகி புதுவை மாநிலத்திற்குச் சென்ற முரசொலி, கழகக் குரல் போன்ற ஏடுகள் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. தமிழகத்தில் நெருக்கடி நிலை இங்கே கழக அரசு இருந்த காரணத்தால் மக்களுக்கு அதன் வேகம் தெரியாத அளவிற்கு பாதுகாப்பாக இருந்தது. அதுகுறித்து அப்போது காந்தியடிகள், ராஜாஜி ஆகியோரின் பேரனாகிய ராஜ்மோகன் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடும்போது "தேசத் தலைவர்கள் கைதானது குறித்தும், இதற்கு முன்பு இல்லாத வகையில் பத்திரிகைகள் மீது 'சென்சார்' முறை அமுலாக்கப் பட்டது குறித்தும் தி.மு. கழகம் தீட்டியிருந்த பெருமைமிகு தீர்மானத்தை வாழ்த்துவதற்குத் தான் சென்னையில் கடந்த இரண்டு நாட்களாக மழை பொழிகிறது என்று எண்ண வேண்டி யிருக்கிறது. நம்மை விட்டுப் பிரிந்து சென்ற தலைவர்களான காந்திஜி, இராஜாஜி, அண்ணா ஆகியோரின் வருந்தும் இதயங்களை டாக்டர் கருணாநிதி நிச்சயம் மகிழ்வுற வைத்திருக்கிறார். இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலனாகவும், குரலாகவும் தமிழ்நாடு ஆகியிருக்கும் இந்த நேரம் போல் பாதித் தமிழனாக இருக்கும் என்னுடைய பெருமை இதற்கு முன் வேறெப்போதும் என்றுமே உயர்ந்திருக்கவில்லை. இந்தியாவில் இருக்கும் இதர மக்களும் தமிழ்நாட்டு தலைவர்கள் தெரிவித்திருக்கிற உணர்ச்சிகளைப் பங்கிட்டுக் கொள்வார்கள். தலைவர்கள் ஆரம்பித்து வைத்த காரியம் அசைக்க முடியாத நெஞ்சுறுதி கொண்ட பலரால் நிச்சயம் நிறைவேற்றி வைக்கப்படும்" என்று கருத்து தெரிவித் திருந்தார்.

நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டவுடன் அதனை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் பெருந்தலைவர் காமராஜர்

அவர்கள் கடுமையான கண்டனம் தெரிவித்து திருத்தணி பொதுக்கூட்டத்தில் பேசியது அப்போது பழைய காங்கிரஸ் தினசரியான "நவசக்தி" பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளியாகியிருந்தது.

சுதந்திர இந்தியாவில் ஜனநாயகம் வீழ்ச்சியடைகிறது என்பதையும், தனது தேசீய சகாக்கள் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள் என்பதையும் தாங்கிக் கொள்ள முடியாத அவர் உடல் நலிவுற்றுப் படுத்த படுக்கையானார்.

ஜூலை 4-ஆம் நாள் காலை நானும் கல்வி அமைச்சர் நாவலரும் காமராஜர் அவர்களைக் காண அவரது இல்லம் சென்றோம். அவர் அருகே சென்று அமர்ந்த என்னைக் கண்டதும் அவரது கண்கள் கலங்கின. மெதுவாகத் தொட்டேன். தழுவிக் கொண்டார். அவரது கண்கள் நீர்வீழ்ச்சிகளாயின. "தேசம் போச்சு! தேசம் போச்சு!" என்று உரக்கக்கூவினார். நான் வாய்விட்டுக் கதறி அழுது விட்டேன். நாவலர் கண்ணீர் வடித்தவாறு எங்களிருவரையும் தேற்றினார்.

"அய்யா! நீங்கள் சொல்லுங்கள்! இப்போதே நாங்கள் அனைவரும் ராஜினாமா செய்து விடுகிறோம்! இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த—சர்வாதிகாரத்தை அழிக்க—நீங்கள் தலைமையேற்று அணி நடத்துங்கள்! உங்கள் பின்னால் நாங்கள் வரத் தயார்!" என்றேன்.

"பொறுமையாக இருங்கள்! அவசரப்படாதீர்கள்! இப்போது இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் ஜனநாயகம் இருக்கிறது. நீங்கள் ராஜினாமா செய்தால் அதுவும் போய்விடும். கொஞ்ச நாள் பொறுமையாக இருங்கள்" என்று அவர் அறிவுரை கூறினார்.

நெருக்கடிநிலைப் பிரகடனத் தொடர்பாக பிரதமர் வானொலியின் மூலமாக இருபது அம்சத் திட்டத்தை அறிவித்தார். அந்த அறிவிப்பைக் கேட்டு மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள் தெரியுமா?

மராட்டிய முதல்வர் எஸ். பி. சவான் "பிரதமரது இருபது அம்சத் திட்டம் உண்மை உணர்வுடன் அமுல்படுத்தப்படும்" என்றும் — கேரள முதல்வர் அச்சுத மேனன் "இருபது அம்சத்தை உடனடியாக நிறைவேற்ற நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறோம். தேவையானால் அவசரச் சட்டங்கள் கொண்டு வரப்படும்" என்றும்—கர்நாடக காங்கிரஸ்

காரிய கமிட்டி கூடி உடனடியாக மாநில அரசு இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டது என்றும்—மத்தியப் பிரதேச அமைச்சரவை கூட பிரதமர் அறிவித்த திட்டங்கள் உறுதியோடு உடனடியாக அமுல் படுத்துவதென்று முடிவு செய்தது என்றும்—பஞ்சாப் முதல்வர் ஜெயில் சிங் "இருபது அம்சத் திட்டங்கள் உடனடியாகவும், தீவிரமாகவும் நிறைவேற்றப்படும்" என்றும் — அஸ்ஸாம் முதல்வர் எஸ். சி. சின்கா "பிற்போக்கு சக்திகளால் இந்தத் திட்டங்கள் இதுவரை நிறைவேற்ற முடியவில்லை. இப்போது புதிய வேகத்துடன் அவைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்படும்" என்றும்—ஆந்திர முதல்வர் வெங்கல் ராவ் அவர்கள் "இந்தப் புதிய திட்டத்தினை வேகத்துடனும், உற்சாகத் துடனும் செயல்படுத்த உறுதி எடுப்போம்" என்றும் — பீகார் முதலமைச்சர் ஜகநாத் மிஸ்ரா "சமுதாயத்தின் அமுக்கப்பட்ட மக்களுக்கு இது உதவும். இப்போதே செயல்படுத்தப் போகிறோம்" என்றும் தெரிவித்தார்கள். ஆனால் தமிழக கழக அரசின் சார்பில் கருத்து என்ன என்று செய்தியாளர்கள் என்னைக் கேட்ட போது "பிரதமர் அறிவித்த திட்டங்களை எல்லாம் நாங்கள் முன்பே நிறைவேற்றி விட்டோம். அதற்கான புள்ளி விவரங்கள் இதோ! அதற்கு மேலும் அவர்கள் சொல்லாத திட்டங்கள் — அரிசனங்களுக்கும், மீனவர்களுக்கும் இலவச வீடு வழங்கும் திட்டம்; குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்; கழக அரசு செயல்படுத்துகின்றது" என்று பதில் கூறியது தமிழகத்தின் சார்பில் நான் ஒருவன் மட்டும் தான்.

தமிழகத்தில் உள்ள நிலைமை பற்றி கலந்தாலோசிக்க ஜூலை 5-ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாட்டினைக் கூட்டி மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளில் எந்தவித தொய்வும் இன்றி ஆற்றுவதற் கான யோசனைகளை வழங்கினேன். கள்ளச் சாராயம் காய்ச்சுப வர்கள் மீது பாதுகாப்பு சட்டம் பாயும் என்று அறிவித்தேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை கடற்கரை சீரணி அரங்கில் மாபெரும் பொதுக் கூட்டம் ஜூலை 6-ஆம் தேதி நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மூவரும் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் ஐந்து லட்சத் திற்கு மேற்பட்ட மக்கள் உணர்ச்சிப் பெருக்கெடுத்த நிலையில் வந்து கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் நான் உரையாற்றும் போது கூறியதாவது:—

"இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளைக் கண்டு இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட பெரிய தலைவர்கள்—தங்களுடைய வயதான காலத்தில்—'தங்களுடைய பேரப் பிள்ளைகள் சுதந்திர இந்தியாவில் உலவுவார்கள்;—எல்லா விதமான உரிமைகளோடும் உலவுவார்கள்' என்று எண்ணிக் கொண்டிருந்த பழைய காலத்துத் தேசியவாதிகள்—கண் கலங்கும் காட்சியைக் காண்கிறோம்! இந்தக் காட்சி இருக்கலாமா?

முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர்—மிகப் பெரிய அறிஞர்—அவர் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'பத்திரிகைச் சுதந்திரம் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டதே' என்று எழுதியதை நேற்று இரவு படித்தேன்; என் கண்கள் கலங்கின!

இப்படி, இந்தியத் திருநாட்டில், தேசத் தலைவர்கள்—தேசியப் பாரம்பரியத்தில் வந்தவர்கள்—பல ஆண்டுக் காலம் தங்களை சிறைவாழ்விற்கு ஒப்படைத்துச் சுதந்திரம் பெறுவதற்காகப் பாடுபட்டவர்கள்—சிறைச்சாலைகளில் கஞ்சிக் கலயங்களை ஏந்தியவர்கள் — சித்திரவதைக்கு ஆளானவர்கள் — எல்லாம், 'கிடைத்த சுதந்திரம் என்னவாகுமோ' என்கின்ற அச்சத்தால் — ஐயத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! தூக்கமில்லாமல் வாடுகிறார்கள்! கண்ணீர் மல்குகிறார்கள் — கதறுகிறார்கள்!

அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் முன்வர வேண்டாமா என்று கேட்கத் தான் நாட்டு மக்களுடைய உணர்வை அவருக்கு எடுத்துச் சொல்லத் தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

அலகாபாத் தீர்ப்பை யொட்டி—அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றம் வழங்கிய சில நிபந்தனைகளையொட்டி—இந்தியாவின் ஜனநாயகத்தை உலகம் பார்த்து வேதனைப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தான் கழகம் கவலையோடு உற்று நோக்குகிறது!

செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன! அதற்கு ஆங்கிலத்தில் 'சென்சார்' என்று பெயர்; 'சென்சார்' என்றால்—இதுவரையில் சினிமாவில் தான் அதுபற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; அதுவும், 15,000 அடி படம் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தால் அதிலே இரண்டாயிரம் அடியை வெட்டி விட்

மீதியுள்ள படத்தை வெளியிடத் தருவார்கள். அது கூட இப்போது செய்வதில்லையே? ஆனால் இன்றைக்குள்ள பத்திரிகை 'சென்சார்', 'செய்திகளையே போடாதே' என்கிறது!

அமெரிக்காவில் ஒரு 'ஜனாதிபதி' சொன்னதாக நினைவு; காலையில் எழுந்ததும், 'நியூயார்க் டைம்ஸ்' போன்ற பத்திரிகையைப் பார்த்தால்தான், நாட்டில்—உலகில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது என்று சொன்னாராம்!

பத்திரிகையைப் பார்த்துத்தான் உலகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது! பத்திரிகை, காலத்தின் கண்ணாடி—நாட்டின் பிரதிபலிப்பு!

நாட்டுமக்கள் உள்ளத்தின் எதிரொலி பத்திரிகை—அது எந்தக்கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரி தான்!

தலைமை அமைச்சர், "நான் பத்திரிகை உரிமைகளை உடனடியாகத் தர இயலாது" என்று கூறியிருக்கிறார்; 'எதற்காகப் பத்திரிகைகளுக்கு உரிமை அளிப்பது — என்னை எதிர்க்கவா' என்று கேட்டிருக்கிறார்!

பத்திரிகைகளுடைய 'சென்சாரை'ப் பற்றி வந்திருக்கின்ற தாக்கீதுகள், எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக் கின்றன; தமிழ்நாட்டிற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது; அந்தத் தாக்கீதுகளில், மாநில அரசுகள், ஒன்றிரண்டைச் சேர்த்தும் நடைமுறைப்படுத்தலாம்.

ஆந்திர மாநிலத்தில் எதைச் சேர்த்திருக்கிறார்கள் தெரியுமா? 'பத்திரிகைகளில் தலைமை அமைச்சரைப் பற்றியோ—தலைமை அமைச்சரின் பேச்சுக்களைப் பற்றியோ தவறான விமர்சனம் எதுவும் வரக்கூடாது' என்று இருக்கிறது!

ஆனால் ஆந்திர மாநிலத்தில், 'தலைமையமைச்சரைப் பற்றி மாத்திரமல்ல—முதலமைச்சரைப் பற்றி வந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சேர்த்திருக்கிறார்கள்!

நாம் அவர்களுடைய தாக்கீதுகளை நடைமுறைப்படுத்து கின்ற நேரத்தில், நினைத்தால் சேர்த்திருக்கலாம்; ஆனால், நாம் ஜனநாயகவாதிகள்!

கருத்தைக் கருத்தால் சந்திப்போம்—

எழுத்தை எழுத்தால் சந்திப்போம்—
சொல்லைச் சொல்லால் சந்திப்போம்—

என்கின்ற தெம்பு இருக்கின்ற காரணத்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தகுந்த அவதூருன விஷயங்கள் வருமாஞல், 'அவைகளுக்கென்று ஏற்கனவே உள்ள சட்டங்கள் அவைகளைப் பார்த்துக் கொள்ளும்' என்று கருதுகிரேம்!

ஆகவே, 'முதலமைச்சரைப் பற்றி எழுதாதே—அவரைப் பற்றி எதுவும் சொல்லாதே' என்று சொல்லுகின்ற அளவுக்கு எழுதுகோல்களை முறிக்கின்ற சட்டத்தை — நாக்குகளை அறுக்கின்ற சட்டத்தை—கழகம் விரும்பவில்லை!

ஆகவே, எங்களுடைய மனச்சாட்சி இடம் தருகின்ற வரையில், அந்தத் தாக்கீதுகளை நாங்கள் நிறைவேற்றுவோம்!

மனச்சாட்சியையும் கடக்கின்ற நிலைமைகள் வருமேயாஞல், 'யோசிப்போம்' என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தர் ஒரு வாலிபனைச் சந்தித்தார்; அந்த வாலிபனிடத்தில் புத்தர் சொன்ஞர்— "ஏ, வாலிபனே! வீணையினுடைய நரம்பை மேலும் அதிகமாக முடுக்கிஞலும் அல்லது மேலும் அதிகமாகத் தளர்த்திவிட்டாலும் நல்ல இசையைக் கேட்க முடியாது" என்று! வீணையில் நரம்பை அதிகமாக முடுக்கிஞலும் நல்ல இசையைக் கேட்க முடியாது; அதிகமாகத் தளர்த்தி விட்டாலும் நல்ல இசை கிளம்பாது; அது எந்த அளவு முடுக்கப் பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருந்தால் தான், நல்ல இசை கிளம்பும்!

அதிகமாக முடுக்கப்பட்டு விட்டால்—சர்வாதிகாரம்!

அதிகமாகத் தளர்த்தப்பட்டு விட்டால்—பழைய காலத்து மன்னர்களுடைய ஆட்சி!

இன்றைக்கும் நாம் விரும்புவது, சர்வாதிகாரத்திற்கும்—பழங்கால மன்னர் ஆட்சிக்கும் இடையிலே உள்ள ஜனநாயக ஆட்சி!

வீணை நரம்பில் இனிய நாதம்—இன்ப நாதம்—எழிலிசை கிளம்ப வேண்டுமேயாஞல், நரம்பு எந்த அளவுக்கு முடுக்கப் பட வேண்டுமோ அந்த அளவுக்கு முடுக்கப்பட வேண்டும்!

'நான் இப்படித் தான் முடுக்குவேன்' என்று முடுக்கினால், நாதம் எழுவதற்குப் பதிலாக நரம்பே அறுந்து விடும்!

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த நிலைமை இருக்கப் போகிறது?

ஒரு வாரமா—ஒரு மாதமா—ஓராண்டுக் காலமா—அல்லது நீண்ட காலமா—புரியவில்லை?

எங்கள் நிலை என்னவோ—புரியவில்லை!

அதற்காக நாங்கள் திகைக்கவில்லை — வருத்தப்படவில்லை!

இன்றைக்கே ஒத்திகை பார்ப்பதைப் போலத் தான், நம்முடைய அமைச்சர்களெல்லாம், சாலையிலேயே காரை நிறுத்திவிட்டு நடந்து வந்தார்கள்; நான் தான் சொன்னேன்—'எல்லாக் கார்களும் அங்கேயே நிறுத்தப்பட்டு, அமைச்சர்களெல்லாம் நடந்தே வரட்டும்—ஒத்திகை பார்க்கட்டும்' என்று! ஆகவே, இது எங்களுக்குப் பழக்கமான காரியம்!

என்ன நடக்கப் போகிறது இந்தியாவில்? நாங்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறோம்— 'இந்திரா காந்தி அம்மையார், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவார்கள் — சர்வாதிகாரத்தின் எல்லைக்குச் செல்ல மாட்டார்கள்' என்று!

அந்த நம்பிக்கையோடு சொல்லுகிறேன் — இராஜாஜி இருந்தால்- 'ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்' என்று பிரார்த்தனை செய்து கொள்ளச் சொல்லுவார்!

பெரியார் இருந்தால்— 'இதை வைத்துப் புரட்சி நடத்துங்கள்' என்று சொல்லுவார்.

காயிதே மில்லத் இருந்தால்— 'நெருக்கடி நிலை தேவையில்லை' என்று சொல்லியிருப்பார்!

அண்ணா இருந்தால் என்ன சொல்லுவாரோ — அதைச் சொல்லுகிறேன் —இப்போது!

இந்தக் கடற்கரையில் ஒரு சூளுரையைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

''எழுந்து நில்லுங்கள்''— (கடற்கரை வெண்மணற் பரப்பில் வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் எழுந்து நிற்கிறார்கள் — மேடையிலுள்ள தலைவர்களும் எழுந்து நிற்கின்றனர்!)

"நான் சொல்லுவதை அப்படியே சொல்லுங்கள்"—(நான் சொன்ன சூளுரையை மக்கள் திரும்பச் சொல்லிச் சூளுரை ஏற்றனர்)

"எந்த நிலையிலும் — எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும்—

இந்தியாவின் மக்களாட்சி முறைக்குக் கேடு ஏற்படாமல்—

பாதுகாப்பதற்குத் தயங்க மாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம்!

தேசத் தலைவர்கள் விடுதலை—

பத்திரிகைகளின் நியாயமான உரிமைகள்—

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று—

இந்தியப் பிரதமர் அவர்களை—

தமிழ்நாட்டு மக்களின் இந்த மாபெரும் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. வாழ்க ஜனநாயகம்!"

இந்தச் சூளுரை முழக்கத்துடன் அந்த மக்கட் பெருங் கடல் கடற்கரையை விட்டு நகர்ந்துசென்றது.



# 66

## கடமை வீரரும் கர்ம வீரரும் மறைந்தனர்!

நெருக்கடி நிலையை எதிர்த்து நான் கடற்கரையில் பேசியதை அடுத்து தமிழகத்தில் உள்ள ஒரு சில அரசியல் வாதிகள் கழக அரசைக் கலைக்க வேண்டுமென்று குரலெழுப்பினார்கள். அதற்கு நான் திருச்சி மாவட்டத்தில் கரூரில் நண்பர் பராங்குசம் அவர்களுக்கு நடைபெற்ற மணிவிழாவிலே கலந்து கொண்டபோது பதிலளித்தேன். அது வருமாறு :

"இன்று நாடு இருக்கும் நிலைமையில் சர்வாதிகாரம் என்று சொன்னாலே சிலருக்குக் கோபம் வருகிறது. நாம் யாரையும் சர்வாதிகாரி என்று சொல்லவில்லை. சர்வாதிகாரியாக ஆகிவிடக் கூடாது என்றுதான் வேண்டுகிறோம். போகிற போக்கைப் பார்த்தால் சர்வாதிகாரம் எங்கே வந்துவிடுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. கூட்டம் நடக்கிற நேரத்தில் வானம் கருக்கத் தொடங்கினால் கூட்டம் ஏற்பாடு செய்த தோழர்கள் எங்கே மழை வந்துவிடுமோ என்று அஞ்சுவதைப் போல அஞ்சுகிறோம். மாடு; தும்பை அறுத்துக்கொண்டு வெளிக் கிளம்பிவிட்டால் எங்கே முட்டி விடுமோ என்று சந்தேகப்படுவதைப் போல இன்று இந்தியாவிலே இருக்கிற நிலைமைகளைப் பார்க்கும்போது சர்வாதிகாரம் வந்துவிடுமோ என்று அஞ்சுகிறோம். வராது என்று எங்களுக்குச் சொல்லுங்கள். நம்பிக்கை அளியுங்கள். வராது என்பதற்கான ஆதாரங்களைக் காட்டுங்கள் என்று கேட்கிறோம். ஜனநாயகம் வாழ வேண்டும் என்பது குற்றமா? நாங்கள் வேண்டாம் என்று வெறுப்பது இந்திரா காந்தியை அல்ல; சர்வாதிகாரத்தை! வேண்டும் என்று விரும்புவது ஜனநாயத்தை; ஆனால் இங்கே இருக்கிற சில கட்சிக்காரர்கள் இதை வைத்துக்கொண்டு கருணாநிதி மத்திய அரசோடு-இந்திரா காந்தியோடு மோதுகிறார். எனவே இந்த அரசைக் கலைத்து விட வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன். கழக அரசை ஏன் கலைக்க வேண்டும்? ஒருவேளை தமிழகத்திலே உள்ள சில எதிர்க்கட்சிக்காரர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தமிழகத்தில் கழக அரசை இந்திரா காந்தி கலைத்து விடுவார்களானால், சிம்மாசனத்தில் உட்கார்ந்

துள்ள நாங்கள் சிறையில் உட்கார நேரிடும். நண்பர்களே, இந்தச் சிம்மாசனத்திலுள்ள மகிழ்ச்சியைவிட ஆயிரம் மடங்கு அதிகமான மகிழ்ச்சியைத் தரக்கூடியது சிறைக்கூடம். ஆனால் அடக்குமுறைகளும், சிறைச்சாலைகளும் நல்ல இலட்சியங்களை அழித்துவிட முடியாது.

சிறையில் பூட்டப்பட்டவர், வெளியே வரும் நேரத்தில் இலட்சியங்களைத் துறந்துவிட்டு வெளியே வரமாட்டார். இன்னும் வேகமாக சுறுசுறுப்பாக வெளியே வருவாரே தவிர சிறையில் போட்டுவிட்ட காரணத்தால் - ஆட்சி கவிழ்க்கப் பட்டுவிட்ட காரணத்தால் — அந்த இயக்கம் தடைபடுத்தப் பட்ட காரணத்தால் சோர்வடைய மாட்டார். இந்த இயக்கத்தை தாறுமாறாக அவசரப்பட்டு எவராவது தடை செய்வார்களானால் - இந்த இயக்கத்தால் நடத்தப்படுகிற ஆட்சி கலைக்கப்படுமானால் நட்டம் எங்களுக்கல்ல. தற்காலிகமான லாபம் யாருக்காவது கிடைக்கலாம். ஆனால் நீண்ட கால லாபம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான்.''

இவ்வாறு கரூர் விழாவில் நான் பேசினேன்.

இத்தகைய நிலையில் இந்தியாவின் பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் சிறையில் இருந்தபோது டெல்லியில் ஜுலை 21-ஆம் தேதி நாடாளுமன்றம் கூடியது. மக்கள் அவையில் அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களும், மாநிலங்கள் அவையில் அமைச்சர் கே. பிரம்மானந்தரெட்டி அவர்களும் நெருக்கடி நிலை பிரகடனம் செய்தது சரிதான் என்று தெரிவித்து தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். தி.மு.கழகத்தின் சார்பில் இரா. செழியன் அவர்களும், எஸ். எஸ். மாரிசாமி அவர்களும் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து உரையாற்றினர். முடிவில் அந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள மாட்டோம் என்று அறிவித்துவிட்டு தி.மு.கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனசங்கம், பழைய காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஜுலை 22-ஆம் தேதி வெளிநடப்புச் செய்தன.

இந்தியா, பூராவும் இப்படிப்பட்ட குழப்பத்திற்கு ஆளாகியிருந்த நேரத்தில் தமிழக அரசில் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த எனதருமை நண்பர் என். வி. என். அவர்கள் இரண்டு மாத காலம் சென்னை பொது மருத்துவமனையில் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தார். அந்த இரண்டு மாத காலமும், நானும் தமிழக அரசின் ஏனைய அமைச்சர்களும், காலை, மாலை இரண்டு வேளையும் பொது மருத்துவமனையிலேயே

தங்கி என். வி. என். அவர்களை எப்படியாவது காப்பாற்றி விட முடியுமா என்று பார்த்தும் பயன் இல்லாமல் 3-8-75 அன்று அதிகாலை 2.45 மணிக்கு இயற்கை அடைந்தார். என். வி. என். அவர்கள் சென்னை மாவட்ட தி.மு.கழகத்தின் முதல் செயலாளர்; கழகச் சட்ட திட்டங்களைத் திருத்துவதற்கு அமைக்கப்பட்ட சட்டத்திட்டத் திருத்தக் குழுவின் முதல் செயலாளரும் அவர் தான். கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளரும் அவர்தான் நான் முதல்வர் பொறுப்பை ஏற்றபிறகு தான் அவர் அமைச்ச ரானார். அதுவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று ஒரு புதிய துறையை ஏற்படுத்திய பிறகு அந்தத் துறைக்கு முதன் முதலாக அமைச்சராக ஆனதும் அவர்தான்.

மதுரையிலே நடைபெற்ற பொதுக்குழுவிலேதான் என். வி. என். அவர்கள் கடைசியாகக் கலந்து கொண்டார். அப்போது ஜி. விசுவநாதன் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் கட்சிக் கட்டுப்பாட்டினைக் குலைக்கின்ற வகையில் நடந்து கொண்டார் என்பதைக் கேள்விப்பட்டு, என். வி. என். உடல் நலக்குறைவை சிறிதும் பொருட்படுத்தாமல் ஆவேசம் வந்த வரைப் போல மேடைக்கு வந்து கழகம் எப்படியெல்லாம் வளர்க்கப்பட்டது என்பது குறித்தும், துரோக சிந்தனை கொண்ட வர்களை வளரவிடக் கூடாது என்பது குறித்தும் கடுமையாகச் சாடிப் பேசினார். அதுதான், தான் கலந்து கொள்கிற கடைசி பொதுக் குழு என்றும் கூறி, அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் தான் நமது தலைவர், கலைஞரின் கரத்தைப் பலப்படுத்துவோம் என்று தானும் முழக்கமிட்டு, அங்கேயிருந்த அனைவரையும் முழக்க மிடச் செய்தார்.

காலமெல்லாம் ''கட்சி, கட்சி'' என்று அலைந்து கொண்டிருந்த அந்த உழைப்பின் உருவம் மறைந்த துயரை என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. எந்தக் காரிய மானாலும் "என். வி. என். எங்கே கூப்பிடுங்கள்!" என்றுதான் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பின்னர் நானும் அவரைத் தேடுவது வழக்கம்.

மருத்துவமனையிலே இருந்தபோது ஒருநாள் அவருக்கே தன் முடிவு தெரிந்து விட்ட நிலையில் தன் மகன்கள் சோமு வையும், செல்வத்தையும் என் கையோடு இணைத்து வைத்து, அவர்களுக்கு ஆணையிட்டார். என்ன ஆணை தெரியுமா? ''நீங்கள் கட்சிக்கும், கலைஞருக்கும் என்றைக்குமே துரோகம் செய்யக் கூடாது. துரோகம் நினைக்கவே கூடாது'' என்றார்.

மருததுவமனையில் இருந்த அனைவரும் கண்ணீர் கொட்டி நின்றோம். பிறகு என்னைப் பார்த்து "நான் ஏதாவது என்னை அறியாமல் எப்போதாவது தவறு செய்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்" என்று அவரைவிட பதினொரு வயது இளையவனான என்னைப் பார்த்துச் சொன்னபோது என் கண்ணீரைத் தடுக்க என்னால் இயலவே இல்லை.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் உடல்நலக் குறைவோடு இருந்த நிலையிலும் என். வி. என். அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்தார். காரை விட்டு இறங்க முடியாத அளவிற்கு அவரும் உடல் நலம் இல்லாமல் இருந்தார். காரின் அருகே என்னை அழைத்து எனக்கு ஆறுதல் கூறிவிட்டு விடை பெற்றார். மற்றும் தமிழகத்திலே உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் மத்திய உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்களும், ஆளுநர் அவர்களும் என். வி. என். அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

என். வி. என் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த நேரில் வந்து காரிலிருந்து இறங்கக்கூட முடியாத நிலையில் என்னை அழைத்து தனது வருத்தத்தைத் தெரிவித்து விட்டுச் சென்ற பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அதற்குப் பிறகு இரண்டு மாத காலமே உயிரோடு இருந்தார்.

அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியன்று காந்தி பிறந்த நாளையொட்டி காலையில் நானும் கவர்னர் கே. கே. ஷா அவர்களும், அமைச்சர் பெருமக்களும் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திவிட்டு, கட்சி அலுவலகத்திற்குச் சென்று புதுக்கோட்டை மாநாடு சம்பந்தமாக கலந்துரையாடி விட்டு, இரண்டு மணி அளவில் தான் வீடு திரும்பி சாப்பிட்டு விட்டு படுத்தேன். சுமார் 3 மணி அளவில் இன்று சென்னை நகர காவல்துறை கமிஷ்னராக இருக்கும் ஸ்ரீபால் அவர்கள் எனக்கு போன் செய்து காமராஜர் அவர்களுடைய உடல்நிலை சரியில்லை என்றும் கவலைக்கிடமாக இருக்கிறதென்றும், மருத்துவர்கள் விரைந்து கொண்டிருப்பதாகவும் கூறினார். நான் அவரிடம் உடனே அவருடைய இல்லத்திற்கு நான் செல்வதாகக் குறிப்பிட்டேன். உடனே போன் செய்து அமைச்சர் ராஜாராமை வரச் சொன்னேன். அவர் சில நிமிடங்களில் விரைந்து வந்தார். நான் சட்டையை மாட்டிக் கொண்டு கீழே இறங்க முற்படுவதற்கும், காமராஜர் மறைந்து விட்டார் என்கிற தகவல் காவல்துறையினர் மூலமாக எனக்கு வருவதற்கும்

சரியாக இருந்தது. கீழே இருந்த ராஜாராமை பார்த்ததும், அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு 'ஓ'வென கதறி விட்டேன். பின்னர் ஒருசில நிமிடங்களில் நான், ராசாராம், மாதவன், முரசொலி மாறன் ஆகியோர் காமராஜர் இல்லத்திற்குச் சென்றோம். அப்போது செய்தி வெளியே பரவாததால் காமராஜர் இல்லத்தில் பி. ராமச்சந்திரன் அவர்களும், ராஜாராம் நாயுடு அவர்களும்தான் இருந்தனர். சற்று நேரத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 2-ஆம் நாள் காந்தி பிறந்த நாளையொட்டி தேசத் தலைவர்களையெல்லாம் விடுதலை செய்யப் போகிறார்கள் என்று செய்தி வந்ததாகவும்—பிறகு அப்படி எதுவும் இல்லை என்று கேள்விப்பட்ட அதிர்ச்சியில் காமராஜர் அவர்கள் மாரடைப்புக்குப் பலியானார் என்றும் என்னிடம் கூறப்பட்டது. ஆம்; ஜனநாயகத்தை இனிக் காத்திட இயலுமா என்ற கவலையிலேயே காந்தி பிறந்த நாளில் அந்த காந்தியடிகளின் வழி நின்று பணியாற்றிய காமராஜர் மறைந்து விட்டார். சில நிமிடங்களில் கூட்டம் கட்டுக்கடங்காமல் சேர ஆரம்பித்தது. தமிழகத்திலே உள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் காமராஜரின் உடலை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைத்து, அங்கேயே அடக்கம் செய்ய முடிவு எடுத்தனர். அந்தச் செய்தி என் காதிலே விழுந்ததும், நான் அந்தக் கருத்தை மறுத்து, தி. மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோதிலும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களை அரசு மரியாதையுடன்தான் அடக்கம் செய்ய வேண்டுமென்றும், பொது மக்கள் பார்வைக்காக ராஜாஜி மண்டபத்திலேதான் வைக்க வேண்டுமென்றும் கூறினேன். அதிகாரிகளை அழைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறிவிட்டு, உடனடியாக காமராஜரின் உடலை ராஜாஜி மண்டபத்திற்கு எடுத்துச் சென்று பொது மக்கள் பார்வைக்கு வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறினேன்.

காமராஜர் மறையும்போது சரியாக 3.15 மணி என்ற போதிலும் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக அவரது உடல் ராஜாஜி மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நானும் அவரது உடல் சென்ற வேனுக்குப் பின்னாலேயே ராஜாஜி மண்டபம் சென்றேன்.

காமராஜருடைய உடலை எங்கே அடக்கம் செய்வது என்ற கேள்வி எழுந்தபோது கிண்டியில் காந்தி மண்டபத்திற்குப்

பக்கத்தில் ராஜாஜி நினைவகம் அருகில் அடக்கம் செய்யலாம் என்ற கருத்தினை நான் தெரிவித்தேன். அப்போது இரவு மணி எட்டாகி விட்டது. மழை வேறு. இருந்த போதிலும் நானே எந்த இடத்தில் அடக்கம் செய்யலாம் என்று பார்ப் பதற்காக கிண்டிக்குச் சென்றேன். என்னுடன் பேராசிரியர், ப. உ. சண்முகம், மேலவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ராஜாராம் நாயுடு, திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் உடன் வந்தனர். கிண்டிக்குச் சென்று அங்கே இருட்டில் காரைத் திருப்பி கார் வெளிச்சத்திலேயே இடத்தைப் பார்வையிட்டுத் தேர்ந்தெடுத்தோம். இரவோடு இரவாக மரங்களும், புதர்களும் நிறைந்த அந்த இடம் மறுநாள் சவ அடக்கம் செய்வதற்கேற்ற வகையில், பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து அமர்வதற் கேற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு அரசியல் மாறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் நாட்டுக்காக பாடுபட்ட பெருமகன் என்ற அளவில் கழக ஆட்சி பெருமுயற்சி எடுத்துக்கொண்டு அவரது இறுதிப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

காமராஜரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னை வந்தார். அவருடன் மத்திய அமைச்சர்கள் உமாசங்கர் தீட்சித், கே. பிரம்மானந்த ரெட்டி, சி. சுப்பிரமணியம், கே. ஆர். கணேஷ் ஆகியோர் வந்தனர். பிரதமரை விமான நிலையத்தில் நானும் கவர்னரும் வரவேற்று நேராக ராஜாஜி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றோம். பிரதமர் காமராஜரது உடல் மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அக்டோபர் 3-ந் தேதி மாலை 3.25 மணிக்கு ராஜாஜி மண்டபத்தினை விட்டு சவ ஊர்வலம் புறப்பட்டது. ராஜாஜி மண்டபத்து வராந்தாவிலிருந்த காமராஜர் உடலை நானும், அமைச்சர் ராஜாராமும், ராணுவ வீரர்களின் துணையோடு தோள் கொடுத்து தூக்கி வந்து அலங்கரிக்கப்பட்ட பீரங்கி வண்டியில் வைத்தோம். கொட்டும் மழையிலே பெருந்தலைவர் காமராஜரின் சவ ஊர்வலம் மக்கள் கடலிலே ஊர்ந்து சென்றது. கர்நாடக முதலமைச்சராக இருந்த தேவராஜ் அர்ஸ் அவர்களும் எங்களுடன் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

மறுநாள் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து காமராஜக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுமா என்று கேட்ட போது, காமராஜர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு

மண்டபம் கட்டப்படும் என்றும், காந்தி மண்டபத்துக்குப் பக்கத்தில் ராஜாஜி நினைவாலயம் இருப்பது போல அதற்கொப்ப பொருத்தமுடையதாக அந்த மண்டபம் அமையும் என்றும் கூறினேன். அது வெறும் அறிவிப்போடு நிற்கவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் இன்றும் கிண்டியில் காமராஜரின் புகழ் பாடிக்கொண்டிருக்கும் காமராஜர் நினைவாலயம். அந்த அறிவிப்பு பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பி. ராமச்சந்திரன், "தலைவர் காமராஜர் அவர்களின் புகழ் நீடித்து நிலைப்பதற்காக தமிழக அரசின் சார்பாக நினைவுச் சின்னம் எழுப்ப இருப்பதாக முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் அரசின் அந்த முடிவுக்கும் அரசின் அந்த முயற்சிக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

நினைவாலயம் மட்டுமல்லாமல் சென்னையில் அக்டோபர் 5-ஆம் தேதியன்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டபோது சென்னை மெரினா கடற்கரை சாலை காமராஜர் சாலை என்று அழைக்கப்படும் என்று அறிவித்தேன். அந்த இரங்கல் கூட்டம் சென்னை தேனாம்-பேட்டை காங்கிரஸ் திடலில் பா. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிஜலிங்கப்பா, பெரியவர் பக்தவத்சலம், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., வீரேந்திர பட்டீல், தளபதி வீரமணி, அப்துல் லத்தீப், ராஜாராம் நாயுடு, எம். கல்யாணசுந்தரனார், டாக்டர் சந்தோஷம், ஹண்டே, வி. பி. சிந்தன், எஸ். எஸ். ராமசாமி படையாச்சி, எச். எல். கிருஷ்ணமூர்த்தி, கலிவரதன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மணிவர்மா ஆகியோர் உரையாற்றிய பிறகு இறுதியாக நான் உரையாற்றினேன். அது வருமாறு:

"காமராஜருடைய செயல் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களை உயர்த்திக் கொண்டார்கள். பிற்படுத்தப்பட்ட மக்கள் அவருடைய தொண்டின் மூலம் முன்னுக்கு வரத் தலைப்பட்டார்கள். தமிழ்நாட்டு அரசியலில் அடித்தளத்திலே மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு இடத்திலே இருந்து தோன்றி இந்திய நாட்டு அரசியல் வானிலே ஒளிமிகுந்த கதிரவனாகத் திகழ்ந்து தமிழ்நாட்டின் பெருமையினை இந்திய அரங்கிலே உயர்த்திய பெருந்தகையாளர்தான் காமராஜர் அவர்கள்.

காமராஜர் அவர்களோடு இன்று நேற்றல்ல; எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து எதிர்க்கக்கூடிய சூழ்நிலை இருந்த அந்தக்

காலத்திலேயே அவர் மதிக்கத்தகுந்த ஒரு தலைவர்; பாராட்டத் தகுந்த ஒரு பெரியவர்; ஒரு தியாகி; ஒரு உழைப்பாளி; தொண்டர்க்குத் தொண்டர்; தலைவர்க்கு தலைவர் என்பதை நாங்கள் உணர்ந்தே அதை உரைத்தே வந்திருக்கிறோம்."

மேலும் அந்த நிகழ்ச்சியில் நான் உரையாற்றும்போது நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு காமராஜரின் பிறந்த நாள் விழா கொண்டாடுவதற்காக நண்பர் தண்டாயுதபாணி அவர்கள் மாணவர்கள் சார்பில் என்னிடம் தேதி கேட்டபோது, நான் அந்தத் தேதியில் வேறொரு நிகழ்ச்சிக் காக தேதி கொடுத்ததை ரத்து செய்து விட்டு காமராஜருடைய பிறந்த நாள் விழாவிற்கு வருவதற்கு ஒப்புதல் தெரிவித்தேன். நண்பர்கள் திகைத்துப்போய், நீங்கள் வரமாட்டீர்கள் என்று நினைத்தோம்; கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் கேட்டோம் என்று கூறியபோது நான் அவர்களிடம் "நாங்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருக்கு அளிக்கின்ற மரியாதை இது என்று நினைக்க வேண்டாம். உழைப்பிற்கு, தியாகத்திற்கு தன்னலமற்ற தொண்டிற்கு நாங்கள் அளிக்கின்ற மரியாதை இது என்று கூறியதையும் நினைவூட்டினேன்,

பின்னர் சட்டப் பேரவையில் 22-10-75-ல் காமராஜருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேறியபோது விரைவில் பேரவையில் காமராஜர் படம் திறந்து வைக்கப்படுமென்றும் அறிவிப்பு செய்தேன்.

# 67

## காமராஜர் நினைவு போற்றிய கழகம்

காமராஜர் அவர்களின் இறுதிக்காலத்தில் நான் அவருடன் எந்த அளவுக்குத் தொடர்பு கொண்டிருந்தேன் என்பதை நான் எடுத்துச் சொல்வதைக் காட்டிலும் முன்னாள் குடியரசுத் தலைவரும் காமராஜரின் மிக நெருங்கிய நண்பருமான நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்கள் அண்மையில் இரண்டு திங்களுக்கு முன்பு எனது மணிவிழாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்டுவது நல்ல சாட்சியத்துடன் கூடிய ஒன்றாகும்.

"இருண்ட நெருக்கடி நிலைக்காலத்தில் நானும் கருணாநிதியும் இணைந்து பாடுபட்டதை நினைவு கூர்கிறேன். நெருக்கடி நிலையை எதிர்ப்பதால் தனது முதலமைச்சர் பதவிக்கு ஆபத்து என்ற போதிலும் கருணாநிதி அவர்கள் சர்வாதிகாரத் திட்டங்களை எதிர்ப்பதில் உறுதியாக இருந்தார். நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட முதல் மூன்று மாத காலம் நானும் கருணாநிதியும் காமராசரின் வழி காட்டுதலையும் ஆசியையும் பெற்றோம்."

இதனை நான் சஞ்சீவி ரெட்டியார் அனுப்பிய மணிவிழா வாழ்த்தாக மட்டும் நான் கருதவில்லை. இந்திய நாட்டு வரலாற்றின் சோதனை மிகுந்த கட்டத்தில் பெரும்பாலான தேசத் தலைவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருந்த போது—நாடு எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்குக் கூடச் சுதந்திரத்தை இழந்திருந்த நேரத்தில்—உளம் நொந்து உடல் நலிந்து படுக்கையில் இருந்த காமராஜருடனும், தேச விடுதலைப் போரில் முக்கிய பொறுப்பு வகித்த தளகர்த்தர்களில் ஒருவரான நீலம் சஞ்சீவி ரெட்டியாருடனும் நான் கொண்டிருந்த துணிவு மிக்கக் கொள்கை உறுதி வாய்ந்த உறவுக்குக் கிடைத்த பரிசாகவே அந்த வாழ்த்தினை நான் மகிழ்வுடன் வரவேற்றுப் பூரித்தேன்.

நெருக்கடி நிலைப் பிரகடனமான பிறகு ஜூலை–ஆகஸ்ட்—செப்டம்பர் மாதங்களில் சஞ்சீவி ரெட்டி அவர்கள் சென்னைக்கு அடிக்கடி வந்தார். நான் ஜூலை முதல் வாரத்தில் காமராஜரை

சந்தித்து விட்டு வந்த பிறகும் கடற்கரையில் நெருக்கடி நிலையை எதிர்த்துத் தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் நான் பேசிய பிறகும் சஞ்சீவி ரெட்டி அவர்கள் என்னை வந்து சந்தித்தார். கழக அமைச்சரவை ராஜினமா செய்து விட்டு காமராஜர் தொடங்கும் ஜனநாயகம் காத்திடும் இயக்கத்தில் கழகம் துணை நின்று நெருக்கடி நிலையை எதிர்த்துப் போராடு வதற்கு தயாராக இருப்பதாக கழகத்தின் நிலையை திரு. ரெட்டி அவர்களிடம் நான் தெரிவித்தேன். அவரும் எனது கருத்தைக் காமராஜர் அவர்களிடம் தெரிவித்து இருவரும் கலந்து பேசி இறுதியாகக் கழக அமைச்சரவை ராஜினமா செய்யக் கூடாது என்பதில் காமராஜர் கண்டிப்பாக இருப்பதாகக் கூறிவிட்டார். தலைவர்களை விடுவிக்கவும், நெருக்கடியை எதிர்த்துப் போராடவும் காமராஜர் அவர்கள் ஆயத்தம் செய்து கொண்டு வருவதை திரு. ரெட்டியார் அவர்கள் வாயிலாக நானறிந்து அதற்கான ஆதரவை அவ்வப்பொழுது காமராஜரது அறிவுரைப் படி நானும் இயன்ற அளவு வழங்கி வந்தேன். ஆனல் மிகவும் குன்றி விட்ட அவரது உடல் நிலை உடனடியாக ஒரு போராட்டத்தைத் தொடங்குவதற்கு இயலாமல் அவரைத் தடுத்து நின்றது. அந்தக் கால கட்டத்துச் செய்திகளைத் தான் திரு. ரெட்டியார் எனக்கனுப்பிய மணிவிழா வாழ்த்தில் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

காமராஜர், உடல் நலிவுற்றுப்படுக்கையில் படுப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு அவரும் நானும் சென்னையில் ஒரு பொது இடத்தில் சந்தித்து மூன்று மணி நேரம் பேசினேம். பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஒரு டாக்டர் வீட்டு மாடியில் தான் அந்தச் சந்திப்பு மாலை ஆறரை மணி முதல் இரவு ஒன்பதரை மணி வரையில் நடந்தது. காமராஜர் அவர்களுக்கும் எனக்கும் சிகிச்சை அளித்த டாக்டர் அவர். அவர் வீட்டில் தான் அதிமுக்கியத்துவம் வாய்ந்த அந்த அரசியல் சந்திப்பு நிகழ்ந்தது. காமராஜருடன் நெருங்கியிருந்த நண்பர்களில் ஒருவரான நண்பர் கலிவரதன் அவர்கள் கூட அந்தச் சந்திப்பு குறித்து இந்த ஆண்டு காமராஜர் பிறந்த நாள் விழாவின் போது மயிலைப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மூன்று மணி நேரம் நானும் கர்மவீரர் காமராஜர் அவர் களும் நிகழ்த்திய அந்த உரையாடலில் எங்கள் இருவரது உள்ளுணர்வும் ஒன்று கலந்தன. ஆங்கிலத்தை அறவே அகற்றி விட்டால் அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக் கொள்ளும். என்று அவர் எச்சரித்துச் சொன்னது என்றைக்கும் மறக்க முடியாத

தாகும். கழகம் மாநில சுயாட்சி என்று குரல் கொடுக்கும்—போது அதனை வேண்டுமென்றே பிரிவினை வாதமெனக் கூறி திசை திருப்ப டெல்லியில் உள்ளவர்கள் முயலுகிறார்கள். எனவே விரைவில் நானே (காமராஜரே) அந்தக் கொள்கையை முன்வைத்து நாடு தழுவிய அளவுக்குக் கோஷம் கொடுக்கப் போகிறேன். அதற்கான ஆரம்ப வேலைகளை ஆந்திராவில் தொடங்குமாறு சஞ்சீவி ரெட்டியிடமும் கூறியிருக்கிறேன் என அவர் கூறிய சொற்கள் என் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவர் அந்தக் காரியத்தை முன்னேடியாக நின்று முடுக்கி விட முடியாமல் அவர் வாழ்வை முடித்துக் கொண்டார். ஆம்; விடுதலை பெற்ற நாட்டில் சுதந்திர மில்லாமல் வாழ்வதை எண்ணி—அந்த விடுதலை பெற்றுத் தந்த வித்தகன் காந்தி பிறந்த நாளிலேயே காமராஜர் கண் மூடிவிட்டார்.

அவரது நினைவைப் போற்றும் வண்ணம் நினைவகம் எனும் எழில் மண்டபம் கட்டியது மட்டுமல்ல; விருதுநகரில் அவரது பிறந்த இல்லத்தையும் அவரது நினைவுச் சின்னமாக கழக அரசு மாற்றியமைத்தது. காமராஜர் நினைவாக அஞ்சல் தலை வெளியிடும் முயற்சிக்கும் கழக அரசு மத்திய அரசைத் தூண்டிக் கடிதம் எழுதியது.

கழக அரசு எந்த அளவிற்கு காமராசரை இழந்த துயரில் பங்கு கொண்டது என்பதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு சொல்ல—வேண்டுமேயானால் காமராஜரின் நெருங்கிய நண்பரும், மேலவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவருமான ராஜாராம் நாயுடு அவர்கள் அப்போது மேலவையிலே பேசியதை நினைவூட்டுவது மிகப் பொருத்தமாகும். அது வருமாறு:-

''காமராஜர் மறைந்த அன்று—என்னால் எங்கு பேசினாலும் இதைச் சொல்லாமல் இருக்க முடியாது—நமது மாநில அரசை நடத்தும் முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அங்கு வந்து, அவர்களுடைய சகோதரர்களில் ஒருவர் இறந்து விட்டதைப் போல அந்த இடத்தில் தோற்றம் அளித்தார்களே தவிர, மற்றொரு கட்சித் தலைவர் இறந்தார் என்று அவர்கள் நினைத்ததாகத் தெரிய வில்லை. எங்களைக் கட்டிப்பிடித்து முதலமைச்சர் அன்று துக்கம் தெரிவித்ததும், அழுததும் என்னுடைய உயிர் உள்ள அளவும் மறக்க முடியாது. அவ்வளவு பாச உணர்ச்சியை அவர்கள் காட்டினார்கள். தமிழ்நாடு அரசாங்கத்திடமிருந்து அன்று அரசு

மரியாதையை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. தேனம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அவருடைய பிரேதத்தை பார்வைக்கு வைத்து அங்கேயே எரித்து நினைவுச்சின்னம் கட்டுவது என்று தான் முதலில் முடிவு செய்திருந்தோம். சிலர் ராஜாஜிஹாலுக்கு கொண்டு போய் வைக்கவேண்டும், முதலமைச்சரிடம் கேளுங்கள் என்று சொன்னார்கள். இதை எப்படி கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், அதே வினாடியில் முதலமைச்சர் அவர்கள் காமராஜர் வீட்டிற்குள் வந்து விட்டார். வந்ததும் முதல் வேலையாக இங்கே கூட்டத்தை சமாளிக்க முடியாது. உடனே ராஜாஜி ஹாலுக்குக் கொண்டு போக வேண்டும்; என்று நாங்கள் எதிர்பார்க்காத அளவிற்கு ஏதோ கனவு கண்டதைப் போலச் சொன்னார்கள். எங்கள் மனதை எப்படி தெரிந்து கொண்டார் என்றே எங்களுக்குத் தெரியவில்லை. எனக்கும் என்னுடைய சகாக்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும் இதற்கெல்லாம் என்ன கைமாறு செய்வது என்றே புரியவில்லை.

பிறகு ராஜாஜி ஹாலுக்கு வந்து எவ்வாறு வைக்க வேண்டுமென்று அவைகளை எல்லாம் சரி செய்து, மேடை போட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அங்கேயே மந்திரி சபை கூடியது என்ற வகையில் எல்லா அமைச்சர்களும் அங்கேயே வந்து விட்டார்கள். அவரை எங்கே வைப்பது என்பதற்கு காந்தி மண்டபத்திற்கு பக்கத்தில் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதே க்ஷணத்தில் முடிவு செய்தது மாத்திரமல்லாமல் அன்று இரவே முதலமைச்சர் அவர்கள் அவருடைய வண்டியிலேயே என்னையும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி காரியதரிசியையும் அழைத்துக் கொண்டு, மழை பெய்து கொண்டிருக்கும் போதே இரவு 8 மணிக்கு முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணி அமைச்சர் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்றோம். அவர்களே செய்திருக்கலாம். எங்களை அழைத்துச் சென்றிருக்க வேண்டியதில்லை; இருந்தாலும் எங்களையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்தில், அந்த இரவில் வெளிச்சம் இல்லை. கார்களை எல்லாம் திருப்பி நிறுத்தி விளக்கைப் போட்டு இடத்தைத் தேர்ந்தெடுத்து அன்றிரவே அங்குள்ள மரங்களை எல்லாம் அகற்றி இரவெல்லாம் அமைச்சர் அவர்கள் தூக்கமில்லாமல் அங்கேயே இருந்து ஏற்பாடுகளை எல்லாம் செய்தார்கள். இதற்கெல்லாம் என்ன கைமாறு செய்வது என்று எங்களுக்கு தெரியவே இல்லை. கட்சியைப் பற்றி நான் எண்ணவில்லை. என்னைப் பொறுத்தவரையில் என்றுமே இதை மறக்க

முடியாது; நான் உள்ள அளவும் மறக்க முடியாது. திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் ஆற்றிய இந்த உரை சட்டமன்ற மேலவைக் குறிப்பு நூலிலேயே இடம் பெற்றுள்ளது.

மறைவதற்கு நாற்பது நாட்களுக்கு முன் நடைபெற்ற என்னுடைய மகன் ஸ்டாலின் திருமணத்திலும் காமராஜர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடல் நலமற்ற அவர் மணமேடைக்கு வருவதற்கென்றே தனி வழி அமைக்கப் பட்டது. காமராஜருடன் அந்த மணிவிழாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, மத்திய அமைச்சர், ஜெகஜீவன்ராம், கவர்னர் ஷா, சீசஞ்வி ரெட்டி, வீரேந்திர பட்டீல், முகமது கோயா, பக்தவத்சலம், புதுவை ஆளுநர் சேத்திலால், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., சிவாஜி கணேசன், மூக்கையா தேவர், புலவர் கோவிந்தன், பேராசிரியர் ஆகியோரும் மணமக்களை வாழ்த்தினர்; மணவிழாவிற்கு நாவலர் தலைமை தாங்கினார். காமராஜர் வாழ்த்தும் போது, "திருமணம் நடத்திக் கொள்ளும் மணமக்களுக்கு ஆசி கூறவும் வாழ்த்தவும் வந்திருக்கின்ற பெரியோர்களில் நானும் ஒருவனாக சேர்ந்து மணமக்களை நீண்ட நாள் வாழவும் சகல பாக்கியத்துடன் வாழவும் ஆசி கூறுகிறேன்" என்று வாழ்த்தினார்.

காமராஜருக்கு தமிழக அரசின் சார்பில் நினைவுச் சின்னங்கள் அமைக்க மேற்கொண்ட முயற்சிகள் பற்றிக்கூட ஒருசில அரசியல்வாதிகள் அர்த்தம் கற்பித்து கழகத்தின் மீது மாசு கூற முற்பட்டனர். அப்போது நான் அதற்கு விளக்கம் அளிக்கும் முகத்தான் "ஆயிரம் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் காமராஜருக்கு நினைவுச் சின்னங்களை கழக அரசு அமைக்கிறதென்றால் — அந்த வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு ஒரு உணர்வு இருக்கிறது. அது தான் "தமிழன் என்ற இனஉணர்வு" என்று கூறினேன்.



# 68

## கோவை மாநாடும் சண்டிகர் மாநாடும்

சஞ்சீவ ரெட்டி அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்த போது சென்னை சட்டப்பேரவையில் காமராஜர் அவர்களின் படத் திறப்பு விழாவிற்கு 1977–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ந் தேதி வந்திருந்தபோது காமராஜர் படத்தைத் திறந்து வைத்துவிட்டு உரையாற்றும்போது தெரிவித்த கருத்தும் முக்கிய மானது. அப்போது சஞ்சீவரெட்டி பேசும்போது "காமராஜர் மிகவும் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். சாதாரண மனிதராகவே இருந்தார். அவருடைய கடைசி காலத்தில்–ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் மூன்றுமுறை நான் அவரை சென்னைக்கு வந்து சந்தித்தேன். அவர் இந்த நாட்டைப் பற்றி மிகவும் கவலை கொண்டிருந்தார் அப்போது நெருக்கடி நிலை இருந்ததால், அவர் சிந்தனை அனைத்தும் நாட்டைப் பற்றியதாகவே இருந்தது. இப்போது யாரும் எதுவும் சொல்லலாம். ஏனென்றால் பதில் சொல்ல காமராஜர் இல்லை. அவர் தனது கடைசிக்காலத்தில் மகிழ்ச்சி இல்லாமலே இருந்து இறந்தார். அவர் இறந்தபோது நெருக்கடி நிலை அமுலில் இருந்ததால் அவர் மறைவுச் செய்தி கேட்டதும் உடனே என்னால் சென்னைக்கு வர முடியவில்லை. சாதாரண சஞ்சீவரெட்டிக்கு விமான டிக்கெட் எப்படி கிடைக்கும்? இருந்தாலும் கடைசி நேரத்தில் தாமதமாகச் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். கருணாநிதியும் அவர் அரசும் என்னை விமான நிலையத்திலிருந்து காமராஜர் இறுதி யாத்திரை நடைபெற்ற இடத்துக்கு அழைத்துச் செல்ல உதவினார்கள். காமராஜர் தன் கடைசிக் காலத்தில் இந்த நாடு என்ன ஆகப் போகிறதோ தெரியவில்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார். காமராஜர் இறந்தபிறகு, அனந்தப்பூரில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து பேச முயன்றேன். கூட்டம் நடத்த அனுமதி தரப்படவில்லை. கைதானாலும் பரவாயில்லை என்று தடையை மீறி கூட்டத்தை நடத்தினேன். அந்த நிகழ்ச்சியும், பேச்சும் பத்திரிகையில் வெளிவரவில்லை. ஆனால் அதே கூட்டத்தை சென்னையில் நடத்தியிருந்தால் அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி அனுமதி வழங்கியிருப்பார். அந்த நிகழ்ச்சியையும் பத்திரிகையில் இடம் பெறச் செய்திருப்பார்" என்று காமராஜ ருடைய படத்திறப்பு விழாவிலே அ.தி.மு.க. அரசின் சார்பில்

ஏற்பாடு செய்யப்பட்ட அந்த விழாவிலே குடியரசுத் தலைவராக இருந்த சஞ்சீவரெட்டி அவர்கள் இவ்வாறு மனந்திறந்து பேசினர்.

சஞ்சீவரெட்டி அவர்கள் காமராஜரின் இறுதிக் கால நினைவுகளைப்பற்றி இப்படிக் கூறியபோதிலும், அக்டோபர் மாதம் 5-ந் தேதி டெல்லியில் நடைபெற்ற காமராஜர் இரங்கல் கூட்டத்தில் பேசிய இந்திராகாந்தி அம்மையார் "காமராஜர் மறைவதற்கு முன்பாக கடைசி இருமாதங்களில் புதுக் காங்கிரஸ் கட்சியுடன் நெருங்கிவர மிகவும் விரும்பினர். இதுசம்பந்தமாக நானும் அவரும் அந்தச் சமயத்தில் பலமுறை செய்திகளைப் பரிமாறிக்கொண்டோம். காமராஜரின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டியது நம்முடைய கடமை. நாட்டில் ஒழுக்கம், கடும் உழைப்பு ஆகியவற்றை மக்களிடம் ஏற்படுத்த அவசர நிலைமை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதை காமராஜரின் கட்சியினர் எதிர்த்தார்கள். ஆனால், அவசர நிலைமையின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராகக் காமராஜர் ஒரு வார்த்தைகூட கூறவில்லை. ஏனெனில் நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் அவருக்குத் தெரியும்" என்று கூறினர்.

பிரதமரின் அழைப்பை ஏற்று இந்திரா காங்கிரசுடன் இணைந்துவிட வேண்டுமென்று துடித்த பழைய காங்கிரஸ்காரர்களிலே ஒரு பகுதியினர் கர்மவீரர் காமராஜர் அவர்கள் பிரதமர் இந்திரா அறிவித்த நெருக்கடி நிலையையும், மிசா சட்டத்தையும், தேசத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதையும் மிகக் கடுமையாகக் கண்டித்துப் பேசிய கருத்துக்கள் காமராஜரின் வலக்கரம் போல் இருந்து செயல்பட்ட "நவசக்தி" நாளிதழிலேயே வெளி வந்ததை மறந்துவிட்டார்கள் என்றே கூறலாம். இல்லாவிட்டால் "காமராஜர் நெருக்கடி நிலையை எதிர்த்து ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை" என்று அக்டோபர் 5-ஆம் நாள் டெல்லியில் இந்திராகாந்தி அவர்கள் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களா?

"எமர்ஜென்சி"யை எதிர்ப்பதில் காமராஜர் தீவிரமாக இருந்தார் என்பதை உணர்ந்திருந்த பழைய காங்கிரஸ்காரர்களில் ஒருபகுதியினர், இந்திரா காங்கிரசுக்குச் சென்றல் பதவி, பவிசுகள் கிடைக்கும் என்று தெரிந்திருந்தும்கூட காமராஜரின் கொள்கைக்கு விரோதமாக நடப்பதற்குத் தங்கள் மனச்சாட்சி இடம்தரவில்லை என உறுதியாகக் கூறிவிட்டனர்.

எனவே பழைய காங்கிரசார் இருகூருகப் பிரிந்து நின்று ஒருவரோடொருவர் பல இடங்களில் மோதிக்கொண்டனர். சத்தியமூர்த்தி பவன், தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானம் போன்றவைகளை யார் எடுத்துக் கொள்வது என்பதிலும் பெரிய கருத்து வேறுபாடு தோன்றியது. பல இடங்களில் இந்த மோதுதல்கள் வலுப்பெற்று, மத்திய உள்துறை அமைச்சராக இருந்த பிரம்மானந்த ரெட்டி அவர்கள் எனக்கு அதுகுறித்து ஒரு கடிதம் எழுதினார். அதிலே தமிழகத்திலே உள்ள அவர் களுடைய கட்சி நிலைமை குறித்து தமிழக முதலமைச்சர் என்ற முறையிலே என்னுடைய சொந்தக் கவனத்தைச் செலுத்தி எல்லா அதிகாரிகளுக்கும் அதுசம்பந்தமாக உரிய உத்தரவுகள் இட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதோடு அந்தக் கடிதத்தைச் டெல்லியிலே செய்தியாளர்களிடமும் தெரிவித்தார். அந்தக் கடிதத்திற்கு நான் எழுதிய பதிலில் :-

"அன்பார்ந்த திரு. ரெட்டி அவர்களுக்கு,

தங்களுடைய 1975 நவம்பர் 29 நாளிட்ட கடிதம் கிடைத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்மை யில் ஸ்தாபன காங்கிரசில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஒட்டித் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கினைப் பராமரிப்பதில் தங்களுக்குள்ள கவலையினை நானும் தயக்கமின்றிப் பகிர்ந்து கொள்கிறேன். திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்தவரையில் அது, ஸ்தாபன காங்கிரசின் உள் விவகாரங்களில் கொஞ்சமும் அக்கறை கொள்வதில்லை என்றும், அது அவர்களே முடிவு செய்து கொள்ளவேண்டிய விவகாரம் என்றும் பலமுறை பத்திரிகைகள் வாயிலாகத் தெளிவாக அறிவித்துள்ளேன்.

இங்குள்ள நிலைமையைப் பொறுத்தமட்டில், சட்டம்—ஒழுங்கினைப் பாதுகாத்திடும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள அதிகாரிகள் அனைவரும் நடுநிலைமையோடு அமைதி காத்திடுவர் என்பதனை என்னுடைய இக்கடிதம் மேலும் தங்களுக்கு உறுதிப் படுத்தும் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கை களுக்கு தி.மு.க. ஆட்சி சாதகமாயிருந்து, இந்திரா காங்கிரசுடன் ஸ்தாபன காங்கிரசார் இணைவதற்கு எதிராகச் செயல்படுவதாக டெல்லிக்குப் புகார் கூறப்பட்டதால்தான் மத்திய உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவ்வளவு அவசரமாக எனக்குக் கடிதம் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு 1975–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25, 26, 27, 28 ஆகிய நாட்களில் கோவை மாநகரில் நடைபெற்ற கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு வரலாற்றுச் சிறப்புக்குரிய மாநாடாகும்.

அண்ணாவின் மறைவுக்குப்பிறகு கழகத் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டபிறகு, கோவை மாநில மாநாடு வரையில் கழகத்தின் சார்பில் மாவட்ட மாநாடுகள் தொடர்ச்சியாக முறையே ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்று வந்தன. 1970–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21, 22 ஆகிய தேதிகளில் திருச்சியில் அந்த மாவட்ட ஐந்தாவது மாநாடு சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த மாநாட்டினை எம்.ஜி.ஆர். திறந்து வைத்தார். அதற்குப் பிறகு அதே 1970–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19, 20 ஆகிய நாட்களில் வடஆற்காடுமாவட்ட ஐந்தாவதுமாநாடு வேலூரில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமை தாங்கினார். மதுரைமுத்து அவர்கள் அந்த மாநாட்டினைத் திறந்து வைத்தார்.

அடுத்து 1971–ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்ததை யொட்டி கழக மாநாடு எந்த மாவட்டத்திலும் நடைபெறவில்லை. 1972–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12, 13 ஆகிய நாட்களில் ராமனுதபுரம் மாவட்ட ஐந்தாவது மாநாடு ராஜபாளையம் நகரில் நடைபெற்றது. மாநாட்டிற்கு சகோதரர் அரங்கண்ணல் தலைமை தாங்கிட, நாடாளுமன்ற உறுப்பினர் முத்துசாமி திறந்து வைத்தார். அந்த மாநாட்டில் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் என். வி. என். அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அதே ஆண்டு ஏப்ரல் திங்களில் 8,9 ஆகிய நாட்களில் செங்கற்பட்டு மாவட்ட ஐந்தாவது மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் அந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். ஆலடி அருணா திறப்பாளர், திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அண்ணா அவர்களின் படத்தினை அந்த மாட்டில் திறந்து வைத்தார்.

அடுத்து மே மாதத்தில் தஞ்சை மாவட்ட ஐந்தாவது மாநாடு மன்னார்குடியில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்து கே. டி. எஸ். மணி தலைமை தாங்கிட சி. டி. தண்டபாணி அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்தார். தந்தை பெரியார்

அவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு பெருமை சேர்த்ததோடு, பேரறிஞர் அண்ணு அவர்களின் திருவுருவப் படத்திஜனயும் திறந்து வைத்தார்.

அதே மே திங்கள் 19,20 ஆகிய நாட்களில் உதக மண்டலத்தில் நீலகிரிமாவட்ட கழக மாநாடு நடைபெற்றது. ஈ. ஆர். கிருஷ்ணன் எம். பி. மாநாட்டிற்கு தலைமை தாங்கினர். து. ப. அழகமுத்து மாநாட்டினைத் திறந்து வைத்தார். சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அண்ணு அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். அடுத்து தர்மபுரி மாவட்ட மாநாடு, அதே 22-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17,18 ஆகிய நாட்களில் எம். எஸ். சிவசாமி தலைமையில், தமிழரசி திறந்து வைக்க நடைபெற்றது. ஏ. கே. ஏ. அப்துஸ் சமத் அவர்கள் அண்ணு அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்தார்.

அடுத்து அதே ஆகஸ்ட் மாதம் 5,6 ஆகிய நாட்களில் மதுரை மாவட்ட ஐந்தாவது மாநாடு மதுரையில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு முரசொலி மாறன் தலைமை தாங்கிட, எல். கணேசன் திறப்பாளராக இருந்தார். பி. கே. மூக்கையாத் தேவர் அவர்கள் அண்ணு அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்தார்.

பின்னர் 1973-ஆம் ஆண்டு ஜூலை மாதம் தென்னுற்காடு மாவட்ட ஐந்தாவது மாநாடு 14,15 ஆகிய நாட்களில் விழுப்புரத்தில் டி. கே. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. கோவை எஸ். ஏ. ராஜமாணிக்கம் அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்தார். அண்ணு அவர்களின் படத்தை எஸ்.எஸ். ராமசாமி படையாட்சி அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தியாவில் "எமர்ஜென்சி" பிரகடனத்திற்குப் பிறகு 1975-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9,10 ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்ட ஐந்தாவது மாநாடு திருநெல்வேலியில் நடைபெற்றது. செ. கந்தப்பன் அவர்கள் தலைமை தாங்கிட, ஜார்ஜ் கோமகன் மாநாட்டினைத் திறந்து வைத்தார். மாநாட்டில் அண்ணு அவர்களின் படத்தினை சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களும், தந்தை பெரியார் அவர்களின் படத்தினை மணலி கந்தசாமி அவர்களும், புரட்சிக்கவிஞர் படத்தினை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

அடுத்து, அதே ஆகஸ்ட் 16,17 ஆகிய நாட்களில் சேலம் மாவட்ட ஐந்தாவது மாநாடு சேலம் மாநகரில் நடைபெற்றது.

கவிஞர் கா. வேழவேந்தன் தலைமை தாங்கிட, நன்னிலம் நடராஜன் மாநாட்டினைத் திறந்து வைத்தார். அண்ணா அவர்களின் படத்தினை அன்னை மணியம்மையார் அவர்களும், தந்தை பெரியார் அவர்களின் படத்தினை விருதுநகர் வி.வி. இராமசாமி அவர்களும், புரட்சிக்கவிஞர் படத்தினை முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் அந்த மாநாட்டில் திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து அக்டோபர் மாதம் 11, 12 ஆகிய நாட்களில் புதுக்கோட்டை மாவட்ட முதல் மாநாடு அறந்தாங்கியில் நடைபெற்றது. திண்டுக்கல் காதர்சா மாநாட்டுத் தலைவர்; எஸ். எஸ். ராஜேந்திரன் மாநாட்டின் திறப்பாளர். தந்தை பெரியார் அவர்களின் படத்தினை தளபதி வீரமணி அவர்களும், அண்ணா அவர்களின் படத்தினை ஏ. ஆர். பெருமாள் அவர்களும், புரட்சிக் கவிஞர் படத்தினை புலவர் பொன்னிவளவன் அவர்களும் திறந்து வைத்தார்கள். அடுத்து மதுரையில் நவம்பர் 15, 16 ஆகிய நாட்களில் தி.மு. கழக மகளிர் மாநாடு அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி ராணி அண்ணியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொற்செல்வி இளமுருகு அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்தார். மாநாட்டில் மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய படத்தினை அன்னை மணியம்மையார் அவர்களும், டாக்டர் தர்மாம்பாள் அவர்களின் படத்தினை திருமதி பூங்கோதை அவர்களும் திறந்து வைத்தார்கள். அதே திங்கள் அடுத்தவாரம் குமரி மாவட்ட மூன்ருவது மாநாடு நாகர்கோவிலில் நண்பர் இரா. செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோவை மு. இராமநாதன் அந்த மாநாட்டினைத் திறந்து வைத்தார். தந்தை பெரியார் அவர்களின் படத்தினை எஸ்.எஸ். மாரிசாமி அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தினை டாக்டர் எம். சந்தோஷம் அவர்களும், புரட்சிக் கவிஞர் படத்தினை வலம்புரிஜான் அவர்களும் திறந்து வைத்தனர்.

இதை அடுத்துத்தான் கோவையில் கழகத்தின் ஐந்தாவது பொதுமாநாடு நடைபெற்றது. கழகத்தின் தலைவர் என்ற முறையில் நான்தான் அந்த மாநாட்டிற்கு தலைமை வகித்தேன். பொதுச்செயலாளர் நாவலர் மாநாட்டின் திறப்பாளர். அந்த மாநாட்டில் 19 தியாகிகளின் படங்களை தமிழகத்தின் 19 முக்கிய தலைவர்கள் திறந்து வைத்தார்கள்.

டிசம்பர் 25-ஆம் தேதியன்று பிற்பகல் இருபது லட்சம் மக்கள் கலந்துகொண்ட, தமிழ்நாடே கோவையில் புகுந்ததுவோ

என்று எண்ணிடத்தக்க அளவிற்கு ஏழுமைல் நீளம் கொண்ட ஊர்வலம் கோவையை அதிர வைத்தது. ஊர்வலம் ஒரு இடத்தைக் கடக்க மூன்று மணி நேரம் ஆகியது. நான்கு மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் 8.10 மணிக்கு பந்தலை அடைந்தது. அங்கே கழகக் கொடியினை மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் நான் ஏற்றி வைத்தேன்.

அடுத்த நாள் டிசம்பர் 26-ஆம் தேதியன்று காலை கலை நிகழ்ச்சிகளோடு அன்றைய நிகழ்ச்சி தொடங்கி, படத்திறப்பு விழாக்கள் நடைபெற்று, மாநாட்டிற்கு என்னை தலைமை தாங்கும் படி கோவை ராஜமணிக்கம் முன்மொழிய, மாவட்டச் செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள் மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் சாமிநாதன், மாநாட்டுத் தொண்டர் படைத்தலைவர் திருப்பூர் துரைசாமி, நிதிக்குழு தலைவர் தேவசகாயம், மாநாட்டுச் செயலாளர்கள் ஏ. எம். ராஜா, கோவை மு. ராமனுதன், சி.டி. தண்டபாணி, மற்றும் அலமேலு அப்பாதுரை, து.ப. அழக முத்து, அன்பில், மன்னை, தென்னரசு, மு. கண்ணப்பன், ராணி அண்ணியார், கழகப்பொருளாளர் பேராசிரியர் ஆகியோர் வழிமொழிந்து உரையாற்றினர்.

பேராசிரியர் வழிமொழியும் போது கவிதை நடையில்:

''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று சொன்ன
''அன்பு இதயத்தை'' தம் இதயமாகப் பெற்ற
கலைஞரை வழிமொழிகிறேன்.
அண்ணாவின் தூங்காத இதயமே தலைமை ஏற்க வா! அல்ல, அல்ல
தூங்காத இதயம் மட்டுமல்ல,
அறிஞர் அண்ணாவின் ஆற்றல்மிக்க இதயமே
தலைமை ஏற்க வா!
உனக்குரிய இடத்தில் அமர வா, வா! அல்ல, அல்ல;
உனக்குரிய பணியை ஆற்ற வா! அல்ல, அல்ல;
என்றும் பணியாற்றும் நீ அதைத் தொடர வா!
என்று கலைஞரை அழைத்து,
நானும் அவரை வழிமொழிந்தேன்
என்ற பெருமையைத் தேடிக் கொள்கிறேன்''

எனக் குறிப்பிட்டார்.

எனது தலைமையுரையின் முன்னுரையிலே; "கழக அமைச்சரவை 28-ஆம் தேதியோடு காலியாகும் என்று சிலர் எழுதியிருப்பது பற்றி இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். 28-ஆம் தேதி என்ன? பேசி முடித்துவிட்டு பந்தலை விட்டு வெளியில் போகும் நேரத்தில் அந்தச் செய்தி வந்தாலும் அதைவிட பரவசம் அடைகிறவர்கள் எங்களைப் போல வேறு யாரும் இருக்க முடியாது. நான் கிரீடம் பற்றி கவலைப்படுகிறவன் அல்ல. அந்தக் கிரீடத்தைத் தாங்கும் தலைபற்றித்தான் கவலைப்படுகிறவன். கிரீடம் போய் விடலாம். ஆனால் தலை இருக்கவேண்டும். கிரீடம்தான் அமைச்சரவை. தலைதான் திராவிட முன்னேற்றக் கழகம்" என்று குறிப்பிட்டேன்.

மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலே நெருக்கடி நிலையை ஒட்டி நிறைவேற்றப்பட்ட முதல் இரண்டு தீர்மானங்கள் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய வைகளாகும்.

**தீர்மானம் 1** ஒழுங்கு கட்டுப்பாட்டில் காட்டப்படுகிற ஆர்வத்தை இந்த மாநாடு வரவேற்கிறது. எனினும் அவைகளை நடைமுறைப்படுத்தும்போது ஜனநாயக முறைகள் பாதிக்கப் படாமல் நிலைத்து நீடிக்கவும் மீண்டும் இயல்பான சூழ்நிலை அமையவும் பேசித் தீர்த்து நாம் எதிர்பார்த்த நல்விளைவுகளைக் காண அனைத்துக்கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு வட்ட மேஜை மாநாட்டை உடனடியாகப் பிரதமர் கூட்ட வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. (முன்மொழிந்தவர்: இரா. செழியன்; வழிமொழிந்தவர்: நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி, டி.வி. நாராயணசாமி, என். கணபதி, மாயவன் எம்.பி.)

**தீர்மானம் 2** பொதுத்தேர்தல் முறைப்படி குறித்த காலத்தில் நடைபெறுவதும், அரசியல் கட்சிகளின் நடைமுறைப்பணிகள், திட்டங்கள், கொள்கைகள் ஆகியவைகள் பற்றி மதிப்பீடு செய்து, தீர்ப்பளிக்கும் வாய்ப்பை மக்கள் பெறுவதும் ஜனநாயக நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

*1971*-ஆம் ஆண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பெற்று, நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டபோது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தி.மு.க. பொதுக்குழு கூடி நாடாளுமன்றத் தேர்தலோடு சட்டப் பேரவைத் தேர்தலையும் இணைத்து நடத்துவதை நலம் என்றும், அதன் காரணமாக ஒரே ஆண்டின் தொடக்கத்திலும் இறுதியிலும் இரண்டு தேர்தல்களைச்

சந்திக்க வேண்டிய சூழ்நிலையைத் தவிர்க்க முடியும் என்றும், இரட்டிப்புச் செலவாகாமல் குறைக்கலாமென்றும் அரசு அதிகாரிகள் இரண்டு முறை தேர்தல் பணிகளில் ஈடுபடுவதால் வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட இயலாத நிலைமையைத் தவிர்க்கலாம் என்றும் கருத்தறிவித்து 71-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுடனேயே சட்டப் பேரவைத் தேர்தலையும் நடத்துவதென்று முடிவெடுத்தது.

இன்றுள்ள நிலையில் ஜனநாயக ரீதியாக பொதுத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டும் என்றும், அந்தத் தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறுவதற்கேற்ப சூழ்நிலைகளை உருவாக்கித் தரவேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துவதோடு, போதிய முன்னறிவிப்பு தந்து; வரும் மார்ச் திங்களில் நாடாளுமன்ற, சட்டப்பேரவை தேர்தல்களை ஒருங்கிணைத்து நடத்தவேண்டும் என்றும் கருத்தறிவிக்கிறது. (முன்மொழிந்தவர்: சாதிக், வழிமொழிந்தவர்: ஓ.பி. ராமன், ரெங்கநாதன் எம்.எல்.ஏ.)

மாநாட்டிலே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து நான் என்னுடைய முடிவுரையிலே நாடாளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைக்கும் சேர்த்து தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு பிரதமருக்கு கழகத் தோழர்கள் அனைவரும் தந்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். கழக மாநாடு கோவையில் நடைபெற்ற அதே தேதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநாடு சண்டிகார் நகரிலே நடைபெற்று, அந்த மாநாட்டிலே நாடாளுமன்றத் தேர்தலை ஓராண்டு காலத்திற்கு ஒத்திப்போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. "எமர்ஜென்சி"யின் காரணமாக இந்திரா காங்கிரஸ், எதேச்சாதிகாரமாகப் பெற்றுக்கொண்ட பயன்களில் இதுவும் ஒன்று!

# 69

## இந்தியாவில் இரு தீவுகள்

"நாடாளுமன்றத் தேர்தலை ஓராண்டிற்கு ஒத்திப்போட வேண்டும் என்று சண்டிகாரில் நடைபெறும் இந்திரா காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் பற்றி கருத்து என்ன?" என்று கோவை ரயில் நிலையத்தில் நான் புறப்படும் போது என்னைச் சந்தித்து நிருபர்கள் கேட்டார்கள்.

"எனது கருத்துக்களை நேற்றைய மாநில மாநாட்டில் விளக்கமாகக் கூறியுள்ளேன். ஆளும் காங்கிரஸ் கட்சியின் அந்தத் தீர்மானத்தை எந்த நிலையில் – பாரபட்சமற்ற முறையில் பாராளுமன்றம் அணுகுகிறது என்பதை ஜனநாயகத்தில் பற்றுள்ள அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இது இந்தியாவைப் பொறுத்த எதிர்பார்ப்பாக மட்டுமல்லாமல், அகில உலக அரசியல் அரங்கின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. எனவே, நாடாளுமன்ற முடிவினைப் பொறுத்திருந்து பார்ப்போம்" என்று அதற்கு நான் கருத்து தெரிவித்தேன்.

கோவை மாநில மாநாட்டை முடித்துவிட்டு சென்னை வந்ததும், அன்றைய காலை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு கோவை மாநாட்டைப் பற்றி "கோவையில் தி. மு. கழகம் நடத்திய ஐந்தாவது மாநில மாநாடு சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடைபெற்ற இரண்டாவது பெரிய அரசியல் மாநாடு" என்றும், "மாநாட்டின் இறுதி நாளான ஞாயிற்றுகிழமையன்று மதிய உணவிற்கான இடைவேளை விடப்படவில்லை. மாநாட்டுப் பந்தலுக்குள் மக்கள், காலை 10 மணி முதல் சுமார் பன்னிரண்டு மணிநேரம் அமர்ந்திருந்தனர்" என்றும் எழுதியிருந்தது. இரண்டாவது பெரிய மாநாடு என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் குறிப்பிடக் காரணம், அகில இந்திய அளவில் ஆவடியில் 1955–ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டைச் சேர்த்து குறிப்பிட்டதாகும்.

1976–ஆம் ஆண்டு ஜனவரி 1–ஆம் தேதியன்று நாடாளு மன்ற கழக உறுப்பினர்களின் கூட்டம் நாடாளுமன்றத்தில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக சென்னையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு :

"திராவிட முன்னேற்றக் கழகம் 1957 முதல் சட்டப் பேரவையிலும், சட்டமன்றத்திலும் (மேலவை), நாடாளுமன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு 1967 முதல் தமிழ்நாட்டில் ஆளுங்கட்சியாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாகும். எதிர்க்கட்சியாக தி. மு. கழகம் செயல்பட்ட போது டெல்லியிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, பாராளுமன்ற முறை ஜனநாயகத்திற்கு ஒருசிறிதும் பழுது ஏற்படாத வகையில் ஆட்சியின் முற்போக்குத் திட்டங்களை வரவேற்றும் குறைகளை, குற்றங்களைக் கண்ணியத்துடன் சுட்டிக்காட்டியும் தன்னுடைய கடமையை ஆற்றி வந்திருக்கிறது.

அந்த அடிப்படையில் இன்றைய அரசியல் சூழ்நிலையில் கழக நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்களின் இந்தக் கூட்டம், தனது எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்று விவாதித்தது. இன்றுள்ள அரசியல் நிலை குறித்து கழகம் தனது கருத்தைத் தொடர்ந்து ஆட்சி மன்றங்களிலும், மக்கள் மன்றங்களிலும் வலியுறுத்தி வந்துள்ளது.

மேலும் நமது கழகத்தின் கருத்தை நமக்கே இயல்பான அரசியல் பண்பாட்டுடன், நாடாளுமன்ற மாநிலங்களவைக் கூட்டங்களில் எடுத்து வைப்பது என்றும் – பாராளுமன்றத்தில் எழுகின்ற பிரச்சினைகளின் அடிப்படையில் உடன்பாடுள்ள மற்ற கட்சிகளின் ஒத்துழைப்புடன் கருத்துக்களைத் தெரிவிப்பது என்றும்–கழகத்தின் கொள்கைகளை, இலட்சியங்களைப் பொறுத்து நமது தனித்தன்மையை எப்போதும் போல் கட்டிக்காத்து வருவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கோவை மாநில மாநாட்டில் நான் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தமிழ்நாட்டிலிருந்து லட்சக்கணக்கான தந்திகள் பிரதமருக்கு-'தமிழகம் குடியரசு தலைவர் ஆட்சியை விரும்பவில்லை; தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலோடு சேர்த்து சட்டமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும்' என்று வலியுறுத்தி அனுப்பப்பட்டன. அந்தத் தந்திகளின் குவியல்கள் பிரதமர் அலுவலகத்தை அசைத்தன.

நெருக்கடி நிலை காரணமாக மத்திய அரசினருக்கும் கழகத்திற்கும் இடையே உறவு குலைந்து எந்த நேரத்திலும் ஆட்சி கலைக்கப்படலாம் என்ற நிலைமை. அப்போது கூட 6-1-76-இல்

நான் முரசொலியில் உடன்பிறப்பிற்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தேன்.

"அமைப்பு ரீதியான கழகம்;
ஆடை அணிந்துள்ள உடலைப் போல!
அதில் ஆவி நிகர்த்தது கொள்கை;
பதவி என்பது அணிகலன்;
அணிகலன் இன்றி வாழ முடியும்;
கொள்கை இல்லையேல் ஆவி இல்லை;
ஆடையில்லையேல் மானம் போகும்!"

அன்றைய தினம்தான் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் கூட இந்திரா காங்கிரசில் தன்னை இணைத்துக் கொண்டார்.

காமராஜரின் மறைவிற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி இரண்டு பிரிவாகப் பிரிந்த நிலையில் ஒரு பிரிவினர் இந்திரா காங்கிரசுடன் சேர்ந்து பயனடைய வேண்டுமென்று நினைத்தனர். இன்னொரு பிரிவினர் காமராஜரின் விருப்பப்படியே தாங்கள் தனித்தன்மையுடன் ஒதுங்கியிருக்க வேண்டுமென்று எண்ணினர் என முன்பே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா; அந்தப் பிரிவினரை இந்திரா காங்கிரசுடன் சேர்க்கவொட்டாமல் நான் தான் தடையாக இருக்கிறேன் என்ற எண்ணம் இந்திரா காங்கிரசில் உள்ளவர்களுக்கு! அதன் காரணமாக எப்படியாவது தமிழக ஆட்சியைக் கலைப்பதற்காக அவர்கள் படாதபாடு பட்டனர். டெல்லிக்கு தூதுமேல் தூது சென்றனர். கழக ஆட்சியைப் பற்றியும், கழகத்தைச் சேர்ந்த ஒருசில உள்ளூர்ப் பேச்சாளர்கள் பேசுவதையெல்லாம் பெரிதுபடுத்தியும் பிரதமரிடம் சென்று ஒன்றுக்குப் பத்தாய் கூறினர். இரண்டு காங்கிரசும் இணைவதற்கு நான்தான் தடை என்று கூறினர்.

இதன் விளைவாக நாடாளுமன்றத்தில் ஒருநாள் 1976-ஆம் ஆண்டு ஜனவரி முதல்வாரம் மத்திய அமைச்சர் ஓம்மேத்தா அவர்கள் தமிழகத்தில் கழக அரசு மற்ற கட்சிகள் கூட்டம் நடத்தவதற்கு அனுமதி அளிப்பதில்லை என்றும், காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பைத் தடுப்பதாகவும் குறிப்பிட்டார். அது பற்றி மறுநாளே செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து எனது கருத்தை கேட்டனர். நான் அந்தக் கருத்தை மறுத்து பிரதமருக்கும், மத்திய உள்துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதி யிருப்பதாகவும், தமிழ்நாட்டில் மத்திய அரசால் தடை செய்யப் பட்ட கட்சிகளைத் தவிர மற்ற எல்லா கட்சிகளின் கூட்டமும்

நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்றும் பதில் கூறினேன். 'ஓம்மேத்தா அவர்கள் காங்கிரசின் உள்கட்சிப் பிரச்சினைகளில் தி.மு.கழகம் தலையிடுகிறது என்று பேசியிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்தது. இன்னொரு கட்சியின் பிரச்சினைகளில் தலையிட வேண்டிய அவசியம் தி. மு. கழக அரசுக்கோ தி. மு. கழகத்திற்கோ என்றைக்கும் இருந்ததில்லை என்று அதற்கு நான் பதில் கூறினேன்.

8-1-76 அன்று தலைமைச்செயலகத்தில் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா சம்பந்தமாக ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினை பெப்ரவரி 15, 16 ஆகிய இரண்டு நாட்களில் சிறப்பாக நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டு, அந்தச் செய்தி பத்திரிகைகளுக்கும் தரப்பட்டது.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நடைபெற்ற ஒரு விவாதத்திற்கு குறுக்கிட்டுப் பதிலளித்த பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் இந்தியாவில் கட்டுப்பாடற்ற இரண்டு தீவுகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். கழகம் ஆட்சிபுரிந்த தமிழ் நாட்டையும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த குஜராத் மாநிலத்தினையும் மனதில் கொண்டுதான் அவர்கள் அவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்தக் குற்றச்சாட்டைப்போலவே, பிரதமர் அவர்கள் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தமிழ்நாட்டில் மிகக் குறைவு என்று நாடாளுமன்றத்தில் கூறினார். அதற்கும் நான் விரைமாக, திட்டங்களுக்கு மத்திய அரசு தந்த உதவி போதுமானதல்ல என்றும், சொந்த முயற்சியால்தான் தமிழக அரசு மேலோங்கி நிற்கிறது என்றும், 1965-66-ஆம் ஆண்டில் நபர்வாரி வருமானத்தில் ஏழாவது இடத்திலிருந்த தமிழகம் அப்போது நான்காவது இடத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டு நீண்ட விளக்கமான பதிலை அளித்தேன்.

தமிழகத்திலும் குஜராத்திலும் நடைபெற்ற ஆட்சிகள் "எமர்ஜென்சி"யை ஏற்காத கட்சிகளின் தலைமையில் இருந்த ஆட்சிகள் என்பதால் மத்திய அரசின் இத்தகைய குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாக நேர்ந்தது என்பதுதான் உண்மை.

குஜராத்தின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் பாபுபாய் படேல் அவர்களும் நானும் கலந்து கொண்ட காமராஜர் சிலைத் திறப்புவிழா வடசென்னையில்

*20-1-76* அன்று நடைபெற்றது. அந்த விழாவிலே பா. ராமச்சந்திரன், பி. ராமமூர்த்தி, குமரி அனந்தன், வி. தண்டாயுதபாணி, டாக்டர் சந்தோஷம், அரு. சங்கர், கே. ஆறுமுகசாமி ஆகியோர் கலந்து கொண்டார்கள். அந்த நிகழ்ச்சியும் மத்தியில் இருந்த இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர் களுக்கு ஆத்திரத்தை அதிகமாக்கிற்று.

எனவே, தமிழக அரசைக் குற்றஞ்சாட்டி, பிரதமரும், மத்திய அமைச்சர்களும் ஏதாவதொன்றைச் சொல்லுவது வாடிக்கையாகி விட்டது. அந்த வழியில் மத்திய உள்துறை அமைச்சர் பிரம்மானந்தரெட்டி 'மிசா' சட்டத்தை குறிப்பிடாத காரியங்களுக்கெல்லாம் தமிழகத்தில் பயன்படுத்துவதாக ஒரு குற்றச்சாட்டைக் கூறினார். அது குறித்தும் நிருபர்கள் என்னிடம் கருத்து கேட்டனர்.

''எது எதற்கு 'மிசா' சட்டத்தைப் பயன்படுத்த வேண்டு மென்று குறிப்பிட்டு, மத்திய அரசிடமிருந்து வந்த தாக்கீதுபடி தமிழக அரசால் 'மிசா' சட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உணவுக் கலப்படம், பதுக்கல் வியாபாரிகள் மீது 'மிசா' சட்டம் உபயோகப்படுத்தப்படுகிறது.அதைப்போன்றசமூகக் குற்றவாளி கள் என்று கருதப்படும் கள்ளச் சாராயம் காய்ச்சும் பேர்வழிகள் 150க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி கைது செய்யப்பட்டவர்கள் கட்சி சார்பற்ற முறையில் கைது செய்யப்பட்டுள்ளனர். மிசா சட்டத்தைப் பயன்படுத்தி; கள்ளச் சாராயம் காய்ச்சியதாகக் கைதான கைதிகளை விடுவிக்க வேண்டுமென்று மத்திய அரசு எங்களுக்கு உத்தரவு பிறப்பித் துள்ளதால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்'' என்று நான் பதில் கூறினேன்.


நிருபர்கள் தொடர்ந்து, ''மத்திய அரசுக்கு எதிரான, 'அனுமதேய'த் துண்டுப் பிரசுரங்கள் தமிழ் நாட்டில் பிரசுரிக்கப் படுவதாக மத்திய அமைச்சர் பிரம்மானந்தரெட்டி கூறியிருக் கிறாரே?'' என்று கேட்டனர். அதற்கு நான், ''அவரே அதை 'அனுமதேயத்' துண்டுப் பிரசுரம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படிப்பட்ட அனுமதேயத் துண்டுப் பிரசுரங்களை வெளி யிட்டவர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம்'' என்று பதில் கூறினேன்.

அரசியல்வாதிகளைக் கைது செய்யவேண்டும்; கடத்தல் காரர்களையும், கள்ளச் சாராயப் பெரும் வியாபாரிகளையும் கைது செய்யக்கூடாது என்ற மத்திய இந்திரா அரசின் உத்தரவு

சமூக விரோதிகளை அடக்கவே 'எமர்ஜென்சி' கொண்டு வரப் பட்டது என்ற இந்திராகாந்தியின் வாதத்தை வலுவிழக்கச் செய்தது.

அவசர நிலைமைக்குப் பிறகு கைதாகி காவலில்வைக்கப் பட்டிருந்த தலைவர்கள் யாரும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று பிரதமரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "எதிர்க்கட்சித் தலைவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஒரு தேதி குறிப்பிட்டுச் சொல்வது கடினம். முதலில் அந்தத் த்லைவர்கள் வன்முறைகளைக் கைவிடுவார்கள் என்பது' உறுதியாக வேண்டும். அதன்பின்னரே அடுத்த நடவடிக்கை களைச் சிந்திக்க இயலும்" என்று கூறினார்.

அப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பரூவா அவர்கள் பம்பாயில் சிவாஜி பூங்காவிலே பேசும்போது "பிரதமர் இந்திராகாந்தி ஆர். எஸ். எஸ். இயக்கத்தைத் தடை செய்து விட்டார். தி. மு. கழகமும் ஒழுங்காக நடக்காவிட்டால் அதற்கும் அதே கதி நேரலாம்" என்று கூறினார். அதே பரூவா அவர்கள் டெல்லியிலே பேசும் போது "மத்திய அரசுதான் தேசிய அரசு, இந்தியாவின் மெட்ரோ பாலிடன் அரசு; மற்ற மாநில அரசுகள் எல்லாம் முனிசிபல் அரசுகளே" என்று கூறினார்.



# 70

## வையம் புகழ் வள்ளுவர் கோட்டம்

**1976** - ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இந்திய நாட்டு வரலாற்றிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு வரலாற்றிலும் மிக முக்கியமான இடத்தைப் பெற்ற காலகட்டங்களில் ஒன்ருகும். அந்தத் திங்கள் கடைசி நாள் மாலையில்தான் கழக ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய்தியை எனது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த செய்தி நிறுவனத்தின் இயந்திரம் ஆங்கிலத் தட்டச்சு எழுத்துக்களின் மூலம் வழங்கியது.

ஜனநாயகத்தின் மீது கொண்டிருக்கும் பற்றின் காரண மாக நெருக்கடி நிலையை எதிர்த்தமைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்திராகாந்தி அம்மையாரின் அரசு தந்த தண்டனை அது! ஆனுல் கழகமோ அதனைக் களத்தில் பட்ட விழுப்புண்ணுகத் தான் கருதிக்கொண்டது.

கழக வரலாற்றில் ஒரு மாபெரும் சோதனைக் கட்டத் தையும், அடக்குமுறைகளைத் தாங்கும் உச்சக் கட்ட நிலையையும், இழித்தும் பழித்தும் அழித்துவிடத் துணிந்த மத்திய அரசினரின் கொடுமைகளை உறுதியோடு சந்திக்கும் சந்தர்ப்பத்தையும் அந்த ஜனவரி 31 - ஆம் நாள் மாலை நேரம்தான் தொடங்கி வைத்தது என்று கூறலாம்.

அந்த வேளை வருவதற்கு முன் அந்த மாதத்தில் உருண்டோடிய நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவுகூர்தல் வேண்டாமா?

கன்யாகுமரி முனையில் விவேகானந்தர் பாறைக்கு எதிரே யுள்ள மற்ருெரு பாறையில் 75 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையொன்றினை, பத்து லட்ச ரூபாய் செலவில் வைப்பது எனக் கழக அரசு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவு ஜனவரி முதல் நாள் ஏடுகள் மூலம் அறிவிக்கப்பட்டது.

கழக ஆட்சியின் அந்தத் திட்டம் உடனடியாகச் செயல் படத் தொடங்கியும்கூட இதுவரையில் நிறைவேறவில்லை. ஆனுல் எனது உள்ளத்து உன்னத குறிக்கோள்களில் ஒன்ருக இருந்த வள்ளுவர் கோட்டத்தின் வேலைகள் அனைத்தும் முற்றுப் பெற்று அதன் திறப்பு விழாவுக்கான தேதியினைக் குறிக்கவும்,

விழா எத்தகைய சிறப்புடன் தமிழ்த் திருவிழாவாக நடைபெற வேண்டுமென்ற திட்டங்களைத் தீட்டவும் ஜனவரி 8 - ஆம் நாளன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான், நாவலர், பேராசிரியர், ப. உ. சண்முகம், மாதவன், ராஜாராம், ராமச்சந்திரன் மற்றும் அரசின் பல்வேறு துறை அதிகாரிகள், ஏ. வி. மெய்யப்ப செட்டியார், ஏ. எல். சீனுவாசன், எம். எம். ஏ. சின்னப்பாதேவர், நகர ஷெரீப் ராம கிருஷ்ணன், துணை ஷெரீப் சரவணன், கே. வி. சீனுவாசன், திரையரங்க உரிமையாளர் சார்பில் ராஜகோபால் செட்டியார் ஆகியோர் கலந்துகொண்டு வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவுக்கான திட்டங்கள் வகுத்தோம்.

பிப்ரவரி திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் அந்தத் திறப்பு விழாவைக் கழக அரசு முன்னின்று நடத்துவதென நாள் குறிக்கப்பட்டது.

திருக்குறள் சுவடி பொறித்த வண்ணக்கொடியினை ஏந்திட திருக்குறளில் உள்ள 1,330 பாக்களை விளக்கும் வகையில் – 1,330 மாணவர்கள், 1,330 மாணவிகள், 1330 ஆசிரியர்கள், 1,330 ஆசிரியைகள் அந்த ஊர்வலத்தில் பங்கு கொள்வார்கள். திருக் குறளின் முப்பாலை எடுத்துக் காட்டும் வகையில் தஞ்சை முத்துப் பல்லக்குகள் மூன்றில் திருக்குறள் சுவடி வைத்து ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும். ஊர்வலத்தின் முகப்பில் 13 யானைகளும்– 133 குறள் அதிகாரங்களை விளக்கும் வகையில் 133 குதிரைகளில் வீரர்களும் அமர்ந்து செல்வார்கள். அலங்கார வண்டிகளில் திருக்குறள் சிற்பங்கள் மட்டுமின்றி, தமிழ்நாட்டு கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், கிராமிய நடனங்கள், பொய்க் கால் குதிரை, நாதஸ்வரக் கச்சேரிகள் போன்றவை இடம் பெறும் என்றும் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்படடது.

ஆனல் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவினை கழகஅரசு நிறைவேற்றுவதற்கு முன்பு ஜனவரி 31 மாலையிலேயே கலைக்கப் பட்டு விட்டது. அரசியல் சூழ்நிலையின் காரணமாக எஞ்சியிருந்த அதனுடைய அமைப்புப் பணிகளும், அதன் திறப்பு விழா நிகழ்ச்சியும் அறவே நின்றுவிடுமோ என்று தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் கவலைப்பட்டன. ஆனல் 1976 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 - ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைக்கிருர் என்ற செய்தி வந்தது.

"கோட்டம் திறக்கப்படுகிறது. குறளோவியம் தீட்டப் படுகிறது" என்ற தலைப்பில் முரசொலியில் இரண்டரை பக்கத் திற்கு வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவான 15-4-76 அன்று நான் "கடிதம்" எழுதியிருந்தேன். "இன்று எழுதுவது பெரிய கடிதம்" என்று தொடங்கி எழுதப்பட்ட கடிதம் அது! "சில குறிப்புகள் "சுயபுராணம்" போல் தோன்றக்கூடும். இப்போது அந்தக் குறிப்புக்கள் தேவையோ இல்லையோ, எதிர்காலத்துக்கு நிச்சயம் தேவைப்படும். எனவே இந்த மடலில் என்னைப்பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தால் பொறுத்தருள வேண்டு கிறேன்" என்ற வேண்டுகோளுடன் நான் எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் இதோ:

உடன்பிறப்பே,

இன்று சென்னையில் ஒரு விழா!

திருவிழா! திருமிகு விழா! திருவள்ளுவர்க்கு எடுக்கும் விழா!

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பாய்—காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய்—வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்-மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதீ கொடுக்கும் மதியாய்—நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய்—எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற ஏற்றமிகு குறளுக்கு ஓவியம் தீட்டப்படுகிறது. அந்தக் குறளோவியக் கோட்டம் திறக்கப்படுகிறது.

மாசறு பொன்னாக, வலம்புரிமுத்தாக, காசறு விரையாக, கரும்பாக, தேனாகத் திகழ்கின்ற திருக்குறளுக்கு விழா என்றால் உலகப்பந்தின் மீது எந்த மூலையில் இருக்கிற தமிழனும் நெஞ்சு புடைத்து நிற்பான்—மகிழ்வான்—தகதகவெனக் குதிப்பான்—தண்மதி கண்ட ஆம்பலாகும் அவன் உள்ளம்—தாமரை, கதிர் கண்டது போன்ற துள்ளல் எழும் என்பதில் ஐயமுண்டோ?

ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறைக்கன்றோ பெருமை சேர் விழா, தாயகத்து மண்ணில் நிகழ்கின்றது.

இந்த விழா நாள் என்று வரும்? இன்றே வராதா? என்று எத்தனை நாள் காத்திருந்தோம் நாம்! அந்த நாள்தானே இந்த நாள்!

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று இடைக்காடர் கூற, "அல்ல! அல்ல! அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத்தரித்த குறள்" என்று ஔவையார் திருத்தம் கூறியதாகப் புகழப்படும் பொய்யா மொழிக்கல்லவா இன்று விழா! புத்தொளி பாய்ச்சிய புலவனுக் கல்லவா விழா!

கோட்டம் திறக்கப்படுகிறது! குறளோவியம் தீட்டப் படுகிறது.

"தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ் மொழி ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும். தரணி எங்கும் பரவிட வேண்டும், மங்காமல் மறையாமல் போற்றிப் புகழப்படவேண்டும். அந்த மறுமலர்ச்சி, தமிழுக்கு ஏற்படத் தான், தி.மு. கழகம் ஆட்சி பீடம் ஏறிட விரும்புகிறது" என 1967 விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா முழங்கியதை அவர் மறைவுக்குப் பிறகும் மறந்தோமில்லை என்பதற்குச் சான்று பகரும் வகையிலேதான் தில்லையாடியில் வள்ளியம்மை நகர் உருவாக்கினோம்.

புதிய பூம்புகார், வாழ்ந்த தமிழகத்தின் வரலாற்றுச் சின்னமாக எழுந்து நிற்கிறது.

அன்னியரை எதிர்த்த அடலேறு கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை கம்பீரமாகக் காட்சி தருகிறது.

காரைக்குடியில் தமிழ்த் தாய்க்கு ஓர் ஆலயம். கலனைகிக் கிடந்த மயிலை வள்ளுவர் கோயிலுக்குப் புதிய திருப்பணி. நுங்கம்பாக்கத்தில் உலகோர் கவனத்தைத் திருப்பும் வண்ணம் ஒப்பற்ற வள்ளுவர் கோட்டம்.

உடன்பிறப்பே, இவைகளை எல்லாம் நினைக்கிறேன். நெஞ்சு இனிக்கிறது. திரும்பிப் பார்க்கிறேன். தேன் பாய்கிறது, 'இதயமெனும் கழனியிலே! உயிர், தமிழுக்கு எனும் உறுதிப் பயிர் விளைகிறது! களைகளுக்கு இங்கு இடமில்லை என்ற திடமும், தெம்பும் பிறக்கிறது.

ஆகா! அதோ! அதோ! வள்ளுவர் கோட்டத்துத் தேரின் உச்சியிலே நானும் நாவலரும் இணைந்து கலசத்தை ஏற்றி வைக்கும் உணர்ச்சிமிகு காட்சி! மனத்திரையில் நிலைத்து நிற்கிறது.

கோட்டம் திறந்திட வருகிறவர் குடியரசுத் தலைவர். நமது அன்புக்குரியவர்! மேன்மை தங்கிய பக்ருதீன் அலி அகமது

அவர்கள். வள்ளுவர் கோட்டத்தை அவரது திருக்கரங்களால் திறக்கிறார் என்பதில் எனக்குப் பெரு மகிழ்ச்சி.

குடியரசுத் தலைவர் தேர்தலில் அவர் வேட்பாளராக நின்ற போது என்னைச் சந்திக்கக் கோபாலபுரம் இல்லத்துக்கு வந்திருந் தார். அந்தப் பெருமகனாரின் பாதம்பட்ட என் வீட்டுப் படிக்கட்டுகள், மிக்க பாக்கியம் செய்தவை என்று அன்றைக்கு நான் மகிழ்ந்தேன். அந்த மகிழ்ச்சியை விடக் கோடானுகோடி பங்கு அதிக மகிழ்ச்சியை இன்று நான் அடைகிறேன், அவர் அவர் கோட்டம் திறக்க வருவது கண்டு!

திறப்பு விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிறவர், தமிழ் மக்களிடத்தில் ஐந்தாண்டுக் காலம் இரண்டறக் கலந்து பழகிடும் வாய்ப்பினைப் பெற்ற தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்களாவார்கள். அவர்கள் மனந்திறந்து பேசக்கூடிய பண்பாளர். தன் பெயருக்கு முன்னால் உள்ள எழுத்துக்களான "கே. கே" என்பதைக்கூட "கலைஞர் கருணாநிதி ஷா" என்றும் இன்பம் பொங்கிடக் குறிப்பிட்டுத் தனது பாச உணர்வை என்மீது பல நேரங்களில் மழையாகப் பொழிந்தவர். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற குறள் நெறிக்கேற்ப, ஆளுநர் அவர்கள் தலைமை ஏற்பதும் மேன்மைமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் திறப்பு விழா நடத்து வதும் சாலப் பொருத்தமுடையதாகும்.

என் இனிய உடன்பிறப்பே! "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்பதும் வெறும் சொல்லழகுக் கோவையல்ல. செய்திகள்தான் வரலாற்று வரிகளாக மாறுகின்றன. என்றாலும், எல்லாச் செய்திகளும் வரலாறாக ஆகிவிடுவதில்லை. இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பதால் எல்லாக் குழந்தைகளுமே தலைவர்கள் ஆகிவிடுவதில்லை. ஆனால் ஒன்று, குழந்தைகள்தான் தலைவர்களாகிறார்கள்.

நாட்டு விடுதலைக்காக வனப்புமிகு வாலிபத்தைப் பல ஆண்டுக் காலம் சிறைக்கோட்டங்களில் தியாகத் தீயில் கருக்கிக் கொண்ட மாவீரர் பண்டித நேரு அவர்கள், மண் மீட்கும் போரிலே களத்தில் நின்றபோது மகாத்மாவின் மடியில் தவழ்ந்த இளங்குழந்தை இந்திராதான் இன்றைய இந்தியத் திருநாட்டின் தலைமை அமைச்சர்!

நமது ஆளுநர் அவர்கள் கல்விக்கூட விழாக்களில் உரையாற்றும்போது உற்சாகம் மேலிடக் குறிப்பிட்டது எனக்கும் உனக்கும் கூட நன்றாக நினைவிருக்கிறது. "சிறுமிகளே, நீங்கள் 'எல்லாம் இந்திராகாந்தி போல எதிர் காலத்தில் ஆகவேண்டும். சிறுவர்களே, நீங்கள் எல்லாம் கருணாநிதி போல், காமராஜர் போல் ஆகவேண்டும்" என்று பலத்த கையொலிக்கிடையே கூறுவார். என்னைத் தலைவர்கள் வரிசையில் சேர்த்தார் என்பதற்காக இதைக் குறிப்பிடவில்லை. நான் கிடக்கிறேன், சாதாரணமானவன்; என்னை விட்டு விடு! இந்திய நாட்டுப் புகழ்மிக்க பிரதமர் இந்திராகாந்தி போலவும், தியாகச்சுடர் காமராஜர் போலவும் எதிர்காலத்தில் குழந்தைகள் ஒளி விட்டுத் திகழ வேண்டும் என்பது போலத்தான் இன்றைய செய்திகளும் நாளைய வரலாறுகளாக மாறிட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

செய்திகள், குழந்தைகளைப் போல! வரலாறுகள், தலைவர்களைப் போல! ஒரு சாரருக்கு களிபெருவுவகை வழங்கும் செய்தி, மற்றொரு சாராருக்கு மாறாக மனநோயைத் தரவல்ல தாகவும் விளங்கிடக்கூடும்.

இன்று 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் வியாழக்கிழமை! இந்த நாளில் சென்னை மாநகரில் வள்ளுவர் கோட்டம் திறக்கப்படுகிறது. இது செய்தியா? வரலாறா? என்று கேட்டால் அதற்குத் தெளிவாகக் கிடைக்கக்கூடிய பதில் 'வரலாற்றுச் செய்தி" என்பதுதான்.

இப்படி ஒரு கோட்டம் அமைத்திடும் எண்ணம் எவ்வாறு எழுந்தது தெரியுமா?

பூம்புகார் உருவாக்கியதும், பாஞ்சாலக்குரிச்சி கண்டதும், புதிய எழுச்சி தமிழுக்குக் கிடைப்பதும் உணர்ந்த நல்லோர் சிலர் மயிலாப்பூர் திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையீடு ஒன்றைத் தந்தனர் என்னிடம்!

மறுநாளே நானும் அறநிலைய அமைச்சர் கண்ணப்பனும் மயிலைக்குச் சென்றோம். கோயிலைப் புதுப்பிக்கத் திட்டம் ஒன்று வகுக்கப் பட்டது. அதற்கென கருத்துரை வழங்கிட குழு ஒன்றும் உருவாக்கப் பட்டது. இதற்கிடையே அந்தக் கோயிலை அன்னியில் நகரில் நடுப் பகுதியில் கோட்டம் ஒன்று அமைத்தால் என்ன என்ற ஆசையும் தோன்றியது. அதுபற்றி

விவாதித்தோம். பெரிய அளவில் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாக அந்தக் கோட்டம் அமைய வேண்டுமென விரும்பினோம்.

பூம்புகார் கலைக்கூட பணிகளை முன்னின்று நடத்திய சிற்பி கணபதி ஸ்தபதியாரிடம் கோட்டம் பற்றிய விவாத அரங்குகளைத் தொடர்ந்து நடத்தினோம். கோட்டம் எப்படி அமைந்திட வேண்டும், வள்ளுவர் சிலை இருக்குமிடம் எப்படி அமைந்திட வேண்டும் என்பதற்கான "கோணல்மாணல்" கோட்டுச் சித்திரங்களை நானே வரைந்து காட்டினேன். நான் வரைந்து காட்டிய வள்ளுவர் கோட்ட அமைப்புச் சித்திரம் கோணல் மாணல் கோடுகளாக இருந்தாலும் அடிப்படை எண்ணத்தைப் புரிந்துகொண்டு அதனைத் திருத்தியமைத்து சிற்பிகளும், அரசு அதிகாரிகளும் வேலைகளைத் தொடங்கினர். இடையில் பணிகள் விரைவில் முடிவுற வேண்டி ஸ்தபதியார் எஸ். கே. ஆச்சார் அவர்களும் இணைத்துக் கொள்ளப் பட்டார். அவர்தான் குமரி முனையில் விவேகானந்தர் மண்டபத்தை வியக்கத்தக்கவண்ணம் வடித்துத் தந்தவர்.

குமரி முனையில் கோயில் எழுப்பிய சிற்பியும் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் பூம்புகார் எழுப்பிய சிற்பியும் சேர்ந்து வழங்கும் சிறப்புமிகு கோட்டம்தான் சீர்சால் வள்ளுவர் கோட்டம். சிற்பக் கலைக்கு உயிரூட்டும் கழக அரசை அந்த இரு சிற்பிகளுமே பெரிதும் பாராட்டியுள்ளனர்.

"எத்தனையோ அற்புத சிற்பங்கள் இருக்கலாம். ஆனால் ஒரு பெரிய கதையையே தொடர்ச்சியாக சிற்பங்களில பூம்புகாரில் வடிக்கச் செய்த அரசு, இந்த அரசுதான்" என்று கழக அரசை கணபதி ஸ்தபதி பாராட்டினார், "பூம்புகார் பெருந் தச்சன்" என்ற விருதினை மாமல்லபுரத்தில் எனக்கு சிற்பிகள் வழங்கிய விழாவில்!

"பழைய காலத்தில் எத்தனையோ மன்னர்கள் கலையைப் பேணி வந்திருக்கிறார்கள். கோயில்களையும் மண்டபங்களையும் கட்டும்படி சிற்பிகளை அவர்கள் தூண்டியிருக்கிறார்களே தவிர யாரும் தனது வாழ்நாளில் இப்படி ஒரு கல்தேரை பிரம்மாண்ட மாக உருவாக்கும்படி கூறியதில்லை" என்று ஸ்தபதி எஸ். கே. ஆச்சார், ஒரு பத்திரிகை பேட்டியில் கருத்து வெளி யிட்டார்.

நூற்றுக்கணக்கான சிற்பிகளுக்கும் ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளிகளுக்கும் வேலை வாய்ப்பு அளித்த திட்டங்கள்தான்

இவைகள். அதே நேரத்தில் தமிழ்மொழியின் மேன்மையை — கலாச்சார மாண்பை நிலைநிறுத்தும் பணியுமாகும்.

பாரதியின் பாட்டாக, பாரதிதாசனின் கவிதையாக, பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையாக, மொழி பெயர்ப்புக்களாக வடிவு கொண்டிருந்த வள்ளுவருக்கு இதோ கோட்டம் அமைத்து விட்டோம். வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டுக்கு வரலாற்றுப் புகழ் கொண்ட வள்ளுவர் கோட்டம்!

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த எழில்மிகு கோட்டத்தை நானும் நாவலரும் அமைச்சர்கள் சிலரும் சென்று சென்று பார்த்து வந்தோம். கோட்டத்தில் அமைக்கப்பட்ட ஒவ்வொரு கல்லும் எங்கள் கவனத்திலிருந்து தப்பியதில்லை.

காலம், யாருடைய காலடியிலும் அடிமைப்பட்டுக் கிடக்கவில்லை. அது ஒரு காற்று! பல திசைகளிலும் வீசும் ஆற்றல் பெற்றது! அப்போது புரியும் அவர்களுக்கு சரித்திரத்தின் வல்லமை.

மீண்டும் நமது ஆளுநர் அவர்களின் சொற்பொழிவுக் குறிப்பு ஒன்றையே நான் நினைவுகூர்ந்திட விரும்புகிறேன்.

"கருணாநிதி அவர்களே! தாங்கள் ஒரு உண்மையை உலகிற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறீர்கள். கீழ்த்தளத்திலிருந்து ஒரு மனிதன், மிக உன்னத நிலைக்கு வரமுடியுமென்று காட்டியதற்காக எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

அரசியல்வாதிகள் இடையில் மறைந்துவிடலாம். ஆனால் எழுத்தாளராக — மனிதத்தன்மை உள்ளவராக இருக்கும் கருணாநிதி, என்ன நேர்ந்தாலும் சரித்திரத்திலிருந்து மறையமாட்டார்."

ஜூலை 31-ஆம் நாள் 1971-ஆம் ஆண்டு நமது தமிழக ஆளுநர் ஆற்றிய உரைதான் இது. அவர் கருணாநிதி என்று என் பெயரைக் குறிப்பிட்டிருந்தாலும்கூட, நான் ஆற்றிய பணி, ஆற்றுகிற பணி எல்லாமே கழகச் சார்பில், கழக அரசின் சார்பில், அண்ணாவின் வழியைப் பின்பற்றி என்கிறபோது, தனிப்பட்ட எனக்கல்ல; நானும் நீயும் மற்றவர்களும் இணைத்துள்ள இந்தக் கழகத்துக்கு, கழக அரசின் நற்சாதனைகளுக்கு, தமிழ்ப் பணிக்கு என்றே பொருள் கொண்டிட வேண்டும்.

சரித்திரத்தில் நமக்குக் கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல! எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும் மறைக்க முடியாத இடம்! அந்த நம்பிக்கையுடன்தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக்கண்ணால் காணுகிறேன்.

உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக்கால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு, பாலூட்டிச் சீராட்டிப் பழமுத்தம் சுளை சுளையாய்த்தந்து, பள்ளிக்கு அனுப்பி பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமண விழா நடைபெறும்போது, தாலிகட்டும் காட்சியினைக் காணமுடியாமல் மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந் தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்!

என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியைத் நான் பெறுகிறேன் இன்று! ஆம்–என் வாழ்நாளின் குறிக்கோள் களில் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன், ஆனந்தப்பள்ளு பாடுகிறேன்.

**"நெடுநாள் ஆசை நிறைவேற்றம்**
**நெஞ்சில் இன்பக் கொடியேற்றம்"**

நீயும் சேர்ந்து பாடுக இந்த மகிழ்ச்சிப் பாடலை! வாழ்க வள்ளுவர்! வெல்க குறள் நெறி!"

என்று நான் அந்த வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா அன்று எழுதினேன்.

வள்ளுவர் கோட்டத் திறப்பு ஆளுநர் தலைமையில் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சீர்காழி கோவிந்தராஜன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினார். குடியரசுத் தலைவரின் உரையை திரவியம் மொழி பெயர்த்தார்.

அந்த விழாவிற்கு முன்னாள் முதலமைச்சர் என்ற முறையிலோ, அந்த வள்ளுவர் கோட்டம் எழும்பிடக் காரண மாக இருந்தவன் என்ற முறையிலோகூட நான் அழைக்கப் படவில்லை. அழைக்கப்படாதது மாத்திரமல்ல, வள்ளுவர் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டியபோது அமைக்கப்பட்ட அந்த 'கல்' கூட அங்கே இருந்திடக் கூடாது என்று அப்புறப் படுத்தப்பட்டு விட்டதாகப் பின்னர் அறிந்தேன்.

# 71

## கழக ஆட்சி கலைக்கப்பட்டது!

வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவுக்கான நாள் நிச்சயிக்கவும் விழா ஏற்பாடுகளைப் பற்றி விவாதிக்கவும் ஜனவரி எட்டாம் நாள் தலைமைச் செயலகத்தில் அமைச்சர்களும் அதிகாரிகளும் கூடினோம் என்பதைக் குறிப்பிடத் தொடங்கியதுமே — கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் குடியரசுத் தலைவர் ஆட்சியில் திறப்பு விழா நடைபெற்ற அந்த நிகழ்ச்சிகளுக்கு என் நினைவுகள் பறந்தோடி விட்டன. அந்த நினைவுகள் தான் கடந்த அத்தியாயம் முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டன.

ஏப்ரல் திங்களில் இருந்து மீண்டும் 'ஜனவரி திங்களுக்கே வருகிறேன்.

என் இதயத்தில் எத்தனையோ எழுத்தாளர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் நண்பர்களாகவும் இடம் பெற்றுள்ள சிலரில் ''சாவி'' ஒருவர். நெருக்கடி நிலையில் எழுத்தாளர்கள் எல்லாம் மிரட்டப்பட்டுக் கைகள் கட்டப்பட்டிருந்த போது கூட ஏப்ரல் மாதம் நடந்த வள்ளுவர் கோட்ட விழாவில் நான் அழைக்கப்படாததை உருக்கமாகச் சுட்டிக்காட்டி ''தினமணி கதிர்'' இதழில் எழுதிய எழுத்தாளரும் அவர் ஒருவரே யாகும்.

அவருக்கு ஜனவரி திங்கள் 29–ஆம் நாள் அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழா! அந்த விழாவுக்கு நான் வருவதாக ஒப்புக் கொண்டிருந்தேன் — ஆனால் அதற்கு முதல் நாள் சற்று உடல் நலிவு. மருத்துவர்கள் இரண்டு நாள் ஓய்வு எடுக்கச் சொல்லியிருந்தார்கள். அதனைக் குறிப்பிட்டு சாவி அவர்களுக்கு எனது இயலாமையைத் தெரிவித்தேன். ''தாங்க முடியாத காய்ச்சலோடு சுபாஷ் சந்திரபோஸ் திரிபுரா காங்கிரசுக்குச் சென்று படுத்துக் கொண்டே தனது உரையை ஆற்றினார்'' என்று சாவி அவர்கள் எனக்கு பதில் அளித்தார்.

''காய்ச்சலாக இருந்தால் நானும் வந்து படுத்துக் கொண்டே உரையாற்றி விடுவேன். ஆனால் எனக்கு வந்துள்ள நோய் அடிக்கடி தொல்லை தரக்கூடிய வயிற்றுப் போக்கா

யிற்றே!" எனக் கூறினேன். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு சென்னை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற சாவி அவர்களின் அறுபதாம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். "சாவி 60" என்ற சிறப்பு மலரினை அமைச்சர் ராஜாராம் வெளியிட அதன் முதல் படிவத்தை எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். ஏ. எல். சீனிவாசன், சௌந்தரா கைலாசம், கி. வா. ஜகந்நாதன், கல்கி ராஜேந்திரன், சோ. ராமசாமி, சிவசங்கரி ஆகியோர் எனது தலைமையில் நடைபெற்ற அந்த விழாவில் சாவியின் எழுத்தாற்றலையும், எழுத்துலக அனுபவங்களையும் புகழ்ந்து போற்றி வாழ்த்தினர். ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஒரு முதலமைச்சரோடு பழகுகிறோம் என்றில்லாமல் அரசியல்வாதியாகவும் எழுத்தாளராகவும் இருக்கிற ஒரு நண்பரோடு பழகுகிறோம் என்ற முறையில் என்னிடம் நட்புறவு கொண்டுள்ள சாவி அவர்களின் சிறப்பியல்புகளைப் பாராட்டுவதாக அந்த விழாவில் நான் குறிப்பிட்டேன். எந்த நிலையிலும் நான் அவருடன் பழகிய அந்தக் கால கட்டத்தில் ஆட்சி பீடத்தில் இருப்பவனாயிற்றே என்ற எண்ணம் எங்கள் நட்புக்குக் குறுக்கே நிற்கவில்லை.

அந்த விழா நிகழ்ச்சி முடிவுற்று வீட்டுக்குச் சென்ற போது இன்னும் இரண்டொரு நாட்களில் ஆட்சி கலைக்கப் பட்டு விடக் கூடும் என்று சில நண்பர்கள் வந்து என்னிடம் சொன்னார்கள். அவர்களுடைய முகத்தில் அவர்களாலேயே மறைத்துக் கொள்ள முடியாத ஒரு அச்சம் பரவியிருந்ததை என்னால் உணர முடிந்தது! அன்று வெளி வந்த முரசொலி நாளிதழில் "வீரர்கள் பின் தொடரட்டும்" என்ற தலைப்பிட்டு ஒரு கடிதம் எழுதினேன். ஏற்றுக் கொண்ட கொள்கையைக் காத்திடவும் நிறைவேற்றிடவும் எந்த விலை கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டில் ஒரு சலனமும் எனக்கு ஏற்படவில்லை.

இந்த அத்தியாயத்தை எழுதும்பொழுது ஒன்றைச் சுட்டிக் காட்ட வேண்டும். இலங்கையில் சிங்கள வெறியர்களாலும் இராணுவத்தினாலும் இனப் படுகொலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களைக் காப்பாற்றி அவர்களுக்குப் பாது காப்பு அரண் நிலையானதாக அமைவதற்காக நடைபெறும் முயற்சியில் ஒரு அங்கமாக நியூயார்க் தமிழர்கள் டாக்டர் பஞ்சாட்சரம் போன்றவர்கள் நியூயார்க்கில் ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அந்த மாநாட்டுக்கு தமிழ்நாட்டிலிருந்து

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் அவர்களும், தி.மு.கழகத்தின் தலைமைக் கழகச் செயலாளர்களில் ஒருவரும் மாநிலங்களவையில் இலங்கைத் தமிழர்களுக்காக வீரக் குரல் கொடுக்கக் கூடியவர்களில் ஒருவரான தம்பி வை. கோபாலசாமி அவர்களும், தலைமை நிலைய வழக்கறிஞர் டி.பி. ராதாகிருஷ்ணன், செஞ்சி ராமச்சந்திரன், எம்.எல்.ஏ., மணவைத் தம்பி ஆகிய நண்பர்களும் மதுரை ஆதீன கர்த்தர் அருணகிரி அடிகளாரும் சென்றிருந்தனர். லண்டனில் நடைபெற்ற அதே போன்ற ஒரு நிகழ்ச்சிக்கு மாநிலங்களவை உறுப்பினர் தம்பி எல். கணேசன் அவர்களும் சென்றிருந்தார். அவர்கள் எல்லாம் திரும்பி வந்து என்னைச் சந்தித்த போது ஏதேதோ சிறுசிறு பொருள்களை வாங்கி வந்து எனக்குப் பரிசாக அளித்தனர். ஷேவிங் ரேசர், கிரீம், சோப்பு, அழகான குதிரைப் பொம்மை, இப்படி இருந்தன அந்த பொருள்கள். அவற்றில் எலாம் விலை மதிப்பற்றதாக ஒரு பொருளை வீரமணி அவர்கள் என்னிடம் வழங்கினர். வேறொன்றுமில்லை—ஒரு நீல வண்ண மான அட்டைதான் அது! வானத்தில் பறவைகள் பறப்பது போன்ற நிழற்படம்! அதன் கீழே இந்த வாசகங்கள்! மார்ட்டின் லூதர் கிங் அவர்களுடைய பொன் மொழி!

"சுதந்திரத்திற்காக எந்த விலையும் கொடுக்கலாம். அதற்காக பதவியைக்கூட இழக்கலாம். சிறைக்கும் செல்ல லாம். ஒரு பணக்கார அடிமையாக இருப்பதை விட சுதந்திர முள்ள ஏழையாக இருப்பதே சிறப்பு. சுயமரியாதையை விட்டு விட்டு வளத்துடன் வாழ்வதைக் காட்டிலும் கொள்கைப் பிடிப்புக்காக வறுமையில் உழன்று சாவதே பெருமையெனக் கருதுவேன்"

இந்த அட்டையும் இதில் பொறிக்கப்பட்டுள்ள மார்ட்டின் லூதர் கிங்கின் பொன்மொழியும் 1976 ஜனவரியில் என் கைக்குக் கிட்டவில்லை யென்றாலும்—ஏறத்தாழ இதே உணர்வைத் தான் பெரியாரும் அண்ணாவும் என் இதயத்தில் ஒளி விளக்காக ஏற்றி வைத்திருந்தார்கள். அந்த உறுதியின் வெளிச்சம் தான் அப்போது என் ஒவ்வொரு பேச்சிலும், எழுத்திலும் பிரதி பலித்துக் கொண்டிருந்தது என்பதை இப்போதும் எண்ணி ஒரு உள்ளார்ந்த இன்பத்தில் மூழ்குகிறேன்.

சுதந்திரத்திற்காக எந்தத் தியாகத்திற்கும் தயார் எனத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட காந்தியடிகளின் நினைவு நாள் ஜனவரி 30-ஆம் தேதி!

அன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகிற நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன்.

அங்கிருந்து புறப்பட்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டப் பணிகளைப் பார்வையிடச் சென்றேன். நான் விரும்பியவாறு திருவாரூர்த் தேர் போன்ற முழுத் தோற்றமும் வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர் சிலை அமையும் இடத்தில் ஏற்படுவதற்கு அந்தத் தேர் வடிவத்தில் "தொம்பை" கள் தொங்கவிடுமாறு யோசனை கூறினேன். பிற்பகல் இரண்டு மணி வரையில் அங்கேயே இருந்து கோட்டப்பணிகள் பற்றி சிற்பிகளுடன் விவாதித்து விட்டு வீட்டுக்கு வந்தேன்.

அன்று மாலை கவர்னர் கே.கே. ஷா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட காந்தியடிகள் நினைவு நாள் — கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினேன். விழாவுக்கு ஆளுநர் ஷா அவர்கள் தலைமை ஏற்றிருந்தார். திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் காந்தியடிகளைப் பற்றிய பாடல்களை இசைத்தார். விழாவில் ஆர் வெங்கட்ராமன் அவர்களும், ம.பொ.சி. அவர்களும் கலந்து கொண்டனர்.

"காந்தியடிகளும் அவர் அணியில் நின்று தியாகத் தலைவர்களும் பெற்றுத் தந்த சுதந்திரத்தையும் அவர்கள் போற்றிய ஜனநாயகத்தையும் எல்லாவிதமான ஆபத்துக்களிலுமிருந்தும் நாம் காத்திட வேண்டும்"

என்று எனது உரையில் குறிப்பிட்டேன். காந்தியடிகளின் நினைவுநாள் விழாவில் ஜனவரி 30-ந் தேதி மாலையும், 31-ந் தேதி காலையும் உரையாற்றிய கவர்னர் கே.கே. ஷா அவர்கள்; "இந்தியாவில் காந்தியடிகளின் அடியொற்றி நடைபெற்று வருகிற ஆட்சியாகத் தி.மு.க. ஆட்சி விளங்குகிறது" எனக் கூறினர்.

30-ந் தேதி காந்தி நினைவு நாள் நிகழ்ச்சி முடிவுற்றதும் — அருகாமையில் கட்டப்பட்டு வந்த காமராஜர் நினைவு மண்டபத்தைப் பார்வையிடச் சென்றேன். அந்த மண்டப முகப்பில் மிகப் பெரிய "இராட்டை" ஒன்று இடம் பெற வேண்டுமென்று கூறியிருந்தேன். அதை, எங்கே, எப்படி அமைக்க வேண்டுமென்பதை யெல்லாம் குறித்து அங்கிருந்த அலுவலர்களிடம் கலந்து பேசி விட்டுப் புறப்பட்டேன்.

மறுநாள் காலையிலும் கிண்டியில் கவர்னரும், கழக அமைச்சர்களும் கலந்து கொண்ட காந்தியடிகள் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்று மாலை சென்னை டான்பாஸ்கோ பள்ளியின் ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக 5 மணி அளவில் சென்றேன். அந்த விழாவில் எம்.ஏ சிதம்பரம் செட்டியாரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். விழாவுக்கு என்னுடன் தம்பி துரைமுருகனும் வந்திருந்தார். டான்பாஸ்கோவில் ஒரு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவைச் செய்து விட்டு, மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினேன்.

''அநேகமாக முதலமைச்சர் என்ற நிலையில் நான் கலந்து கொள்ளும் கடைசி நிகழ்ச்சியாக இது இருக்கும்''

என்று எனது உரையினிடையே நான் சொன்னதும், விழாவுக்கு வந்திருந்தோர் ''அப்படிச் சொல்லாதீர்கள்!'' என்று உணர்ச்சி பொங்க ஒலியெழுப்பினர்.

மாலை ஆறரை மணி அளவில் விழா முடிவுற்றது. நானும் துரைமுருகனும் காரில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டோம். வீட்டு வாசலில் இறங்கி உள்ளே செல்வதற்குப் படியேறுவதற்கு முன்பே எனது மருமகன்கள் அமிர்தம், செல்வம் இருவரும் கையில் ஒரு துண்டுத் தாளை வைத்துக் கொண்டு சிரித்தவாறு ''ஆட்சியைக் கலைத்து விட்டார்கள்'' என்றனர்! செய்தி நிறுவன இயந்திரத்தில் அடிக்கப்பட்ட செய்தி தான் அது! அப்பாடா! சஸ்பென்ஸ் முடிந்தது!'' என்று கூறிக் கொண்டே, தெருப் பக்கம் திரும்பிப் பார்த்து, நான் பயன்படுத்திக் கொண்டிருந்த அரசாங்கக்காரை உடனே தலைமைச் செயலகத்திற்கு எடுத்துச் சென்று விடுமாறு சொல்லி விட்டு மாடிக்குச் சென்றேன். என்னிடம் பணியாற்றிய தனி அலுவலர்கள் கண்ணீர் வடித்துக் கதறியழுதனர்.

''சே! இது என்ன; பைத்தியக்காரத்தனம்! தைரியமாக இருங்கள்!'' எனக் கூறி விட்டு அந்த நல்ல செய்தியை நண்பர்களுக்குச் சொல்ல ''டெலிபோனை'' எடுத்தேன்! என்ன ஆச்சரியம்! அதற்குள் என் டெலிபோன் இணைப்பு துண்டிக்கப் பட்டு விட்டது.

சில நிமிடங்களில் எப்படித்தான் செய்தி சென்னை முழுவதும் பரவியதோ தெரியாது — வீட்டு வாயிற்புறத்தில் ஆயிரக் கணக்கானோர் அழுது புலம்பியவாறு கூடிவிட்டனர்.

அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்புவது அன்றிரவு முழுவதும் பெரும் வேலையாகி விட்டது.

இரவு எட்டு மணியிருக்கும்—அதற்குள்ளாக முதலமைச்சர் பந்தோபஸ்துக்கு என்றிருந்த போலீசார் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டனர். என்னுடைய துணைவியர்கள் தயாளுவாலும், ராஜியாலும் எவ்விதக் கலக்கமுமின்றி மிகச் சாதாரண நிகழ்ச்சியாக அதனை எடுத்துக் கொண்டனர். அவர்கள் மட்டுமல்ல, குடும்பத்தில் என் சகோதரிகள், பிள்ளைகள், பெண்கள், மருமகன்கள், எல்லோருமே அதனை ஒரு திடுக்கிடத் தக்க நிகழ்ச்சியாகக் கருதவில்லை. அதனால் அவர்கள் உள்ளத்தைக் கடுகளவு வேதனையும் தீண்டவில்லை.

எல்லோரும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் ஒரு விழா நிகழ்ச்சி போல எண்ணிக் கொண்டிருந்தோம்.

"போலீஸ் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்; உங்களைப் பார்க்க வேண்டுமாம்"

என்று வீட்டில் நீண்டகாலமாகப் பணியாற்றும் செயல் மணி ஓடி வந்து சொன்னான். கைது செய்ய வந்திருப்பது போல் தெரிகிறது என்றும் கூறினான்.

'வரச்சொல்' என்றேன்! வந்தார்கள் போலீஸ் அதிகாரிகள்!

"என்ன விசேஷம்? நான் கைதாக வேண்டுமா?" எனக் கேட்டேன்.

"இல்லை! உங்களை இல்லை" என ஒரு அதிகாரி அழுது கொண்டே சொன்னார்.

"யாரைக் கைது செய்ய வேண்டும்?" என்று கேட்டேன்.

"உங்கள் மகன் ஸ்டாலினை!" என்று கூறினார்கள்; தழுதழுத்த குரலில் கண்ணீர் சிந்தியவாறு!

"அவன் ஊரில் இல்லையே — நாளை மாலையில்தானே வருவான்" என்றேன்.

"வீட்டில் இருக்கிறாரா? என்று "சர்ச்" செய்து பார்க்கும் படி உத்திரவு!" என்றார்கள்.

"தாராளமாகச் 'சர்ச்' செய்யுங்கள்" என்றேன்.

அவர்கள் தங்கள் கடமையைச் செய்தார்கள். வீட்டில் ஸ்டாலின் இல்லை! அவர்களை வெறுங்கையுடன் அனுப்புவது எனக்கு என்னவோ போலிருந்தது—அதனால் அவர்களைப் பார்த்து "வேண்டுமானால் நாளைக்கு என்னைக் கைது செய்வதை, இப்போதே செய்து கொண்டு போங்களேன்"' என்றேன்.

மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுப் போலீசார் புறப் பட்டனர். ஆட்சிப் பொறுப்பு பறி போன ஓரிரு மணிநேர இடை வெளியில் இத்தனை நிகழ்ச்சிகள்!



# 72

## அடக்குமுறை அடுக்கடுக்காக!

ஆட்சி பறிபோய் விட்டது என்ற செய்தி கேட்டு எந்தவிதச் சலனமும் சங்கடமும் தலைகாட்டாமல் இருந்த வீட்டில் என் மகன் ஸ்டாலினைக் கைது செய்யத் தேடுகிறார்கள் எனக் கேள்வியுற்றதும் என்னைத் தவிர அனைவரும் அதிர்ச்சியுற்றனர். அந்த அதிர்ச்சியை எனக்கு முன்னால் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தனர். ஆனால் ஸ்டாலினின் துணைவியோ; ஐந்து மாதங்களுக்கு முன்புதான் திருமணமாகி வீட்டுக்கு வந்த புதிய மருமகள்! ஓரிரு மாத கர்ப்பவதி வேறு! இந்த நிலையில் கணவன், தன்னிடமிருந்து மிசாக் கொடுமையால் பிரிக்கப்படுவதை அந்தப் பெண்ணால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் காலில் விழுந்து கோவெனக் கதறியழுதது. இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு ஆறுதல் கூறி-எல்லாவித தியாகத்திற்கும் எல்லோரும் தயாராக இருக்க வேண்டுமென்று உரக்கச் சப்தமிட்டேன். அதற்குள் தலைமைக் கழகத்தின் செயலாளர்களான வீராசாமி, நீலநாராயணன், சிட்டிபாபு, செ. கந்தப்பன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தி வந்தது.

மறுநாள் ஸ்டாலின் வீடு வந்து சேர்ந்ததும் போலீஸார் கைது செய்யத் தேடுகிற விஷயத்தைச் சொல்லிச் சிறைக் கோட்டப் பயணத்திற்குத் தயாராக இருக்குமாறு கூறினேன். அவனும் குளித்து முழுகித் தன் இளம் மனைவியைத் தேற்றி விட்டு என் காலில் விழுந்து வாழ்த்துப் பெற்றுத் துணிமணிகளுடன் பயணத்திற்குத் தயாரானான். நானே போலீஸ் ஐ.ஜி.க்கு “போன்” செய்து ஸ்டாலின் வந்துவிட்ட விஷயத்தைக் கூறினேன். சில நிமிடங்களுக்கெல்லாம் “போலீஸ் வேன்” வந்து வீட்டு வாசலில் நின்றது. வீட்டாரும், அந்த வீதியில் வசித்தோரும், கழகச் செயல்வீரர்களும் சூழ்ந்து நின்று ஸ்டாலினைப் போலீஸ் வேனில் ஏற்றி வழியனுப்பி வைத்தோம். அவன் கையை அசைத்து விடைபெற்றுக் கொண்டபோது எல்லோருடைய இதயமும் குலுங்கி, விழிகள் குளமாகத்தான் காட்சியளித்தன! என் மகன் மட்டுமா; எத்தனை எத்தனை வீட்டு வீரப்புதல்வர்கள் அன்றைய தினம் மிசாக் கைதிகளாகச் சிறைச்சாலைகள் பலவற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்ற செய்தி என் நெஞ்சத்தை மேலும் வலுப்படுத்தி என்னை வளையாமல் நிமிர்ந்து நிற்கச் செய்தது.

அன்றிரவு மீண்டும் போலீசார் பல லாரிகளில் வந்து வீட்டை முற்றுகையிட்டனர். என்னைத்தான் தேடி வந்திருக்கிறார்கள் என்று நான் பயணத்திற்குத் தயாரானேன். "உங்களையல்ல; உங்கள் மருமகன் மாறனைத் தேடி வந்திருக்கிறோம்" என்றார்கள். விடுவார்களா மாறனை? 1975-ல் நெருக்கடி நிலைப் பிரகடனப்படுத்தியதையொட்டி தி. மு. க. தனது எதிர்ப்பைத் தீர்மானத்தின் மூலம் வெளிப்படுத்தியபோது–'முரசொலி' இதழில் "இட்லராகிறார் இந்திரா" என்ற கார்ட்டூனை வெளியிட்டவனாயிற்றே மாறன்! அந்தக் கார்ட்டூன் வெளிநாட்டு வார ஏடுகளில் கூட பிரசுரிக்கப்பட்டு இந்திராவின் சர்வாதிகாரத்தைத் தமிழகம் வன்மையாகக் கண்டிக்கிறது என்பதற்குச் சான்று காட்டி எழுதப்பட்டதே; அதனால் மாறனை மிசாச் சட்டம் விட்டுவிடுமா?

டெல்லியில் இருந்து வந்து கொண்டிருப்பதாகவும் வந்தவுடன் போலீசுக்குத் தகவல் அனுப்புவதாகவும் கூறினேன். போலீசார் விமான நிலையம் சென்று காத்திருந்தனர். ஆனால் மாறன், கமலநாதன், மாரிசாமி ஆகியோர் ஐதராபாத் வந்து இறங்கி வெவ்வேறு வழிகளில் ஊர் வந்து சேர்ந்தனர். மாறன் சென்னை வந்ததும், ஐ. ஜி.க்குப் போன் செய்தேன்; 'நீங்கள் தேடுகிறவர் தயார்!" என்று! உடனே போலீஸ் வேன் வந்தது! கழகத் தொண்டர்கள் ஏராளமானோர் வீட்டு வாசலில் குழுமி விட்டனர். மாறனின் துணைவியும், பிள்ளைகளும், தாயாரும் என்னதான் தைரியமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாலும் அவர்களின் கலங்கிய கண்கள் அவர்களது வெந்து நொந்த உள்ளங்களை வெளிப்படுத்திக் கொண்டுதானிருந்தன. மாறனைக் கட்டித் தழுவி உச்சி மோந்து, "சென்று வா" எனச் சொல்லி போலீஸ் வண்டியில் ஏற்றி அனுப்பினேன். கூடியிருந்தோர் வாழ்த்தொலி முழங்கினர் மாறன் விடைபெற்ற போதும்; ஸ்டாலின் விடைபெற்ற போதும்! அவை வாழ்த்தொலியாக இல்லை! எதேச்சாதிகார வெறியர்களை வீழ்த்துவதற்கு எழுந்த சூளுரை போலத்தான் என் செவிகளில் ரீங்காரமிட்டது.

தொடர்ந்து கழகக் கண்மணிகள் மிசாக் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்ட செய்திகள் கிடைத்த வண்ணமிருந்தன. ஆனால் அவர்கள் சிறையில் அடைபட்டிருப்பதைக் கூட ஏடுகளில் வெளியிட முடியாத அளவுக்குத் தடை போட்டிருந்தது கவர்னரின் ஆட்சி! ஆம்; இந்திரகாந்தியின் ஏஜெண்டுகளாக இருந்த கவர்னர்கள் அந்த அம்மையார் ஆட்டி வைக்கப்படுகிறபடி ஆடுகிற பொம்மைகளாகத்தானே இருந்தார்கள்!

என் வாழ்வையும், என்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட கழகத்தின் வரலாற்றையும் பின்னிப் பிணைத்துச் சுழன்றோடுகிற இந்த சரித்திரப் பெருவெள்ளத்தில் இயக்கத்தை அழித்தொழிக்க எடுக்கப்பட்ட இறுதிக் கட்ட முயற்சியில் எத்தனை பேர் — யார் யார் – மிசாவெனும் அடக்குமுறைக்கு ஆளானார்கள் என்ற பட்டியலை இடம் பெறச் செய்வது என் கடமையல்லவா? அவர்களில் எத்தனை பேர் நிமிர்ந்து நின்று தாக்குப் பிடித்தார்கள்; எத்தனை பேர் வளைந்து நெளிந்து வதங்கிப் போனார்கள் என்பது எனக்கும் அவர்களது மனச்சாட்சிக்கும் மட்டுமே தெரிந்திருக்கட்டும்!

ஆட்சி கலைக்கப்பட்ட இரண்டொரு நாட்களுக்கெல்லாம் பிப்ரவரி 3–ஆம் நாள்! அதுதான் அண்ணா நினைவு நாள்! அண்ணா சதுக்கம் சென்று வழக்கம்போல மலர் வளையம் வைத்தோம்! அந்த நாளைப் பயன்படுத்திக் கொண்டு; "அண்ணா சதுக்கத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியல்" என்று முரசொலியில் வெளியிட்டு அந்தத் திரைமறைவில்; மிசாவில் கைதானோர் யார் என்பதை நாட்டுக்கு அறிவித்தேன்! தணிக்கை அதிகாரிகளை ஏமாற்ற அப்படியொரு தந்திரம்–

இதோ; மிசாவில் மாவட்ட வாரியாகக் கைதானவர்கள் பெயர்களை குறிப்பிடுகிறேன்.

**சென்னை மாவட்டம்**

நீலநாராயணன், நா. வீராசாமி, ஏ .வி. பி. ஆசைத்தம்பி. முரசொலி மாறன், சிட்டிபாபு, சீத்தாபதி, அ. செல்வராசன், டி. ஆர். பாலு, மு. க. ஸ்டாலின், புலவர் பொன்னிவளவன், மைனர் மோசஸ், சா. கணேசன், சோ. மா. ராமச்சந்திரன். பழக்கடை ஜெயராமன், வள்ளுவன், உசேன், கு. இராமலிங்கம், வழக்கறிஞர் ஆர். கணேசன், து. கணபதி, கோடம்பாக்கம் சவுந்தரராஜன், சுப்பு, செல்வம், ராயபுரம் கபடா ராஜு, மு. கன்னியப்பன், காட்டூர் கோபால், துறைமுகம் கிருஷ்ணன், மயிலை சம்பந்தம், ஆர். ஆறுமுகம், மாணவர் தமிழ்மணி;

**செங்கற்பட்டு மாவட்டம்**

சி. ஆறுமுகம், மா. வெ. நாராயணசாமி, பம்பல் நல்லதம்பி, காஞ்சிபுரம் கே. டி. எஸ். மணி, வி. பி. அகிலன், விரராகவன், மாதவரம் வேதாசலம், எருக்கஞ்சேரி மதிவாணன்,

கும்மிடிப்பூண்டி வேணு, கோபாலகிருஷ்ணன், வேலு, ஊத்துக் கோட்டை ஸ்ரீராமலு, ஊத்துக் கோட்டை ஏ. டி. ஆறுமுகம், ஆலந்தூர் ஆப்ரகாம், பரங்கிமலை டில்லிபாபு, பல்லாவரம் பாலகிருஷ்ணன், காட்டாங்குளத்தூர் இராமு, கண்ணபிரான், ஓமலூர் கன்னியப்பன், செங்கற்பட்டு பசுபதி, அன்சர், செ. கோ. விசுவநாதன், திருக்கழுக்குன்றம் வகாப், சபாபதி செங்குன்றம் ஏழுமலை, மதுராந்தம் சுந்தரமூர்த்தி, பிரேம்ராஜ், குலசேகரன், காஞ்சி வெங்கடேசன், ஏ. சுப்பிரமணியம், ராஜமாணிக்கம், டி. சீனிவாசன், மீஞ்சூர் கேசவன், பொன்னேரி நாகலிங்கம், விருகம்பாக்கம் லோகநாதன், போரூர், பி.கே.ராஜ கோபால், பூவை டி. ராஜரத்தினம், அம்பத்தூர் ரங்கைக்கண்ணன் குப்புசாமி, குன்றத்தூர் பாலகிருஷ்ணன், தி. சு. லட்சுமணன் கம்பராசபுரம் எம். ராஜகோபால், செங்கை கே. ஆர். சந்திரன் பல்லாவரம் இருதயராஜ், பட்டாபிராம் கா. மு. பாபு மதுராந்தகம் சஞ்சீவி;

வட ஆற்காடு மாவட்டம்

விி. எம். தேவராஜ், துரைமுருகன், ஆரணி செல்வரசு ஏ.சி. நரசிம்மன், வேலூர் வி. டி. தேவராஜன், மு. நடராஜன் திருப்பத்தூர் ஏ.டி. மணி, திருவத்திபுரம் பாண்டியன், குடியேற்றப் ஏ. கே. துரைசாமி, செங்கம் சி. பாண்டுரங்கம், எம்.பி.வடிவேலு களம்பூர் அண்ணாமலை;

தென் ஆற்காடு மாவட்டம்

விருத்தாசலம் எம். செல்லராஜ், பொன். சொக்கலிங்கம், நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி, சி. இராமகிருஷ்ணன், சி. குப்புசாமி, ஏ. வி. தண்டபாணி, ஏ. பாட்சா, வி. எஸ். மணி, வி. மாயவன், சி. ராஜகோபால், வி. துரை, வேங்கை மார்பன், சி. பாண்டுரங்கன்;

தஞ்சை மாவட்டம்

கோ. சி. மணி, எல். கணேசன், என். கிட்டப்பா, தாழை மு. கருணாநிதி, தஞ்சை எஸ். நடராஜன், நன்னிலம் நடராஜன், குடந்தை பத்மநாபன், வெங்கிடங்கால் ஏ. சந்தானம், வரதகோபாலகிருஷ்ணன், தஞ்சை டி. கே. கோவிந்தன், பேராவூரணி கிருஷ்ணமூர்த்தி, திருவாரூர் தென்னன், சித்தமல்லி ந. சோமசுந்தரம், மன்னை பாலகிருஷ்னன், செம்பனார் கோவில் மதிவாணன், மாயவரம் செங்குட்டுவன், சிக்கல் கணபதி, ஏனாதி ஏ. பி. இராஜன், திருவாரூர் ராஜன், குடந்தை ஆர். துரை,

திருவாரூர் முருகு பாண்டியன், பட்டுக் கோட்டை அப்துல் சமது, மாயவரம் பாக்கியராஜூ, தஞ்சாவூர் அறிவழகன், பழைய கூடலூர் ராஜமாணிக்கம், பொறையாறு சம்பந்தம், தஞ்சை இளங்கோவன், புலிவலம் ஜான், நாகை எஸ். பி. தங்கையன், எம். மீனாட்சிசுந்தரம், சீர்காழி குமாரசாமி, தஞ்சை கன்னையன், தஞ்சை கோபாலகிருஷ்ணன், மதுக்கூர் ஏ. வி. சுப்பிரமணியம், பூம்புகார் மனோகரன், தென்னவமணி, இலக்குமணன்குடி தட்சிணாமூர்த்தி;

**திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்**

பரமத்தி சண்முகம், திருச்சி மலர்மன்னன், இரா. வெற்றி கொண்டான், கரூர் எஸ். பி. இராசகோபால், பெரம்பலூர் ஜெ. எஸ். ராஜூ, திருச்சி எஸ். ஏ. ஜி. இராபி, எம். எஸ். வெங்கடாசலம், நாக சுந்தரம், பராங்குசம், ஆர். கே. சின்ன துரை, குளித்தலை முத்துகிருஷ்ணன், ஜெயங்கொண்டம் ஏ. கே. மூர்த்தி, செட்டிக்குளம் அல்லாபிச்சை, குஞ்சிதபாதம், திருச்சி கரிகாலன், திருச்சி பி. சுப்பிரமணியம், ஏ. கோபாலகிருஷ்ணன், துவரங்குறிச்சி செங்குட்டுவன், திருச்சி இருதயராஜ், உறையூர் செவந்திலிங்கம், இடையாற்றுமங்கலம் சிவ. சண்முகம், திருச்சி டி. என். கோபாலகிருஷ்ணன், என். சுப்பிரமணியம், வி. கிருஷ்ண மூர்த்தி, சாக்ரடீஸ், ஏ. எம். சம்பந்தம்;

அ. பெரியண்ணன், காடுவெட்டி தியாகராஜன், சுப்பிர மணியபுரம் இரா. ராஜன், இராமையா, புதுக்கோட்டை அப்துல் மஜீத், ஆவுடையார்கோவில் துரை. மாணிக்கம், எஸ். இராம நாதன், சரவணமுத்து;

**சேலம் மாவட்டம்**

செ. கந்தப்பன், வீரபாண்டி எஸ். ஆறுமுகம், மு. பழனி வேலன், சேலம் அன்புக்கரசு, சேர்ந்தமங்கலம் பெரியசாமி, சேலம் மாரியப்பன், ஆத்தூர் மா முத்து, மாயவன், ஏ. ஆறுமுக சாமி, என். நடேசன, இரத்தினம், வக்கீல் அப்புசாமி, கு. சி. வெங்கடாசலம், கே. பி. கணேசன், ஏ. பி. அப்புசாமி ஆர். பெருமாள், எஸ். குப்புசாமி, என். நல்லப்பன், மின்னும் பள்ளி நடேசன்;

**தர்மபுரி மாவட்டம்**

எம். கமலநாதன், ஆர். சின்னசாமி.

**கோவை, நீலகிரி மாவட்டங்கள்**

மு. கண்ணப்பன், எஸ். ஏ. இராஜமாணிக்கம், வெள்ளக் கோவில் பெரியசாமி, கோவை மு. இராமநாதன், பி. ஏ. சாமி நாதன், உதகமண்டலம் ராஜூ, இரா. மோகன், வெள்ளக் கோவில் பழனிசாமி, இரா. மாணிக்கவாசகம், கோவை பி. எஸ் ஜானகிராமன், மேட்டுப்பாளையம் தூயமணி, கோவை கிருஷ்ணன், கோவை மணியன், உதகை நாகராஜன், ஈரோடு மா. சுப்பிர மணியம், திருப்பூர் முருகேசன், கொடுமுடி கிருஷ்ணன், சிவன்மலை முத்து, பொள்ளாச்சி இராமசாமி, பொள்ளாச்சி விஜயராகவன், குட்டப்பாளையம் சாமிநாதன், நீலகிரி என். மாணிக்கம், முருகன் மில்ஸ் இராமலிங்கம், குன்னூர் தங்கம், நீலகிரி குந்தா நஞ்சா கவுடர், உதகை கருப்பசாமி, கூடலூர் பகவத்சிங்;

**மதுரை மாவட்டம்**

பொன். முத்துராமலிங்கம், காவேரிமணியம், அக்கினிராஜ், துரை. எழில்விழியன், பழனி கிருஷ்ணமூர்த்தி, மதுரை ராமச் சந்திரன், வி. எஸ். லட்சுமணன், சங்கரன், மாரியப்பன், திண்டுக் கல் கே. ஜி. அந்தோணி, பாண்டி;

**ராமநாதபுரம் மாவட்டம்**

எஸ். எஸ். தென்னரசு, சித. சிதம்பரம், திருவில்லிப்புத்தூர் அமுதன், அருப்புக்கோட்டை கந்தசாமி, நயினார்கோவில் மணி, மானாமதுரை சாகுல் அமீது, சாத்தூர் வரதராஜன், திருவாடானை பெருமாள், சிவகங்கை நாராயணன், சிவகங்கை சேதுராமன் தேவகோட்டை காசிம், கட்டிக்குளம் முல்லைகிருஷ்ணன், புழுதிப் பட்டி இராசாங்கம், விருதுநகர் பாண்டியன், பரமக்குடி அரவரசன், மண்டபம் அப்துல்காதர், காரைக்குடி குறள்பித்தன், இராமநாதபுரம் சேக் சுல்தான், சிவகங்கை திருஞானம், அ[illegible] நடராஜன், சாத்தூர் பாலகிருஷ்ணன், திருச்சுழி பால்சாமி, ராஜபாளையம் ஆதிநாராயணன், திருமதி சக்தி, ராமேஸ்வரம் மாரிமுத்து, முறையூர் ராமநாதன், திருப்புவனம் சோலையா, உப்பூர் மூத்தமன்னன், வத்திராயிருப்பு கொக்கு அருப்புக்கோட்டை பால்சாமி, முதுகுளத்தூர் நடராஜன், பெர் அழகு, புதுவீடு ராமசந்திரன், அகமது தம்பி, அகமது;

**நெல்லை மாவட்டம்**

வை. கோபால்சாமி, நெல்லை புகாரி, நெல்லை நெடுமாறன் நல்லை மஸ்தான், டி. தம்பித்துரை, தூத்துக்குடி செ. ரத்தினசாமி,

நெல்லை இசக்கி, தூத்துக்குடி ராக்கட் ரத்தினசாமி, கேப்டன் நடராஜன், கிருஷ்ணன், கீழப்பாவூர் அரு. ராமநாதன், தூத்துக்குடி அய்யாசாமி, எஸ். சித்திரவேல், பாளையங்கோட்டை உசேன், டி. அய்யாத்துரை, திருநாவுக்கரசு, நெல்லை சூரிய நாராயணன், இ. நம்பி, சங்கரன்கோவில் பழனிச்சாமி, தென்காசி திரவியம், வழக்கறிஞர் சண்முகம்;

**குமரி மாவட்டம்**

நாகர்கோவில் இராசப்பா, தக்கலை டி.ஆர். சுந்தரம், குமரி பொன்னுரு, மைக்கேல்ராஜ், அ. திரவியம், சி. ரசல்ராஜ், மு. சூரியநாரயணன், டாக்டர் ஆல்பன், கேசரி செல்வராஜ்.

மற்றும் ஆர். சுப்பிரமணியம், சாத்தையா, டி.கே. ராஜ கோபால், கண்ணப்பன், ஏ. சண்முகம், பி. கண்ணன், எஸ். கிருஷ்ணன், குட்டை ரத்தினம், கே.எஸ். அற்புதம், டி. கன்னையன், கிருஷ்ணமூர்த்தி, சோமசுந்தரம், ஏ.வி. சுப்பிர மணியம், எஸ். வெங்கடாசலம், வெங்கடசாமி, பி நாகராஜன், பம்பாய் நாராயணன் முன்னாள் அமைச்சர் கவிஞர் கா. வேழவேந்தன், பண்ருட்டி ஏ. மணி, ஆர். எஸ். மணி, கே. தட்சிணாமூர்த்தி, திண்டுக்கல் க. வே. விக்கிரமாதித்த ராசன், கன்யாகுமரி ஜி. ஷா, எஸ். எஸ். மாரிசாமி, சைதை சம்பந்தம், டி. கே. கபாலி, அடியார், மு. வரதராசன், க. அறிவழகன், அ. அ. ஜின்னா, வி. எஸ். கோவிந்தராஜன், கோடம்பாக்கம் குமார், தொட்டியம் எஸ். கே. வடிவேலு, விருதாசலம் கிருஷ்ண மூர்த்தி, தூத்துக்குடி என். பெரியசாமி, சாத்தான்குளம் தேவதாஸ், சங்கனாங்குளம் இளங்கோவன், சங்கரன், அழகியநம்பி கோவில்பட்டி கலைமணி காசி, வே. தங்கபாண்டியன், சுப. தங்கவேலன், காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திருப்பத்தூர் சொக்கலிங்கம், மதுரை கு. திருப்பதி, நெல்லிப் பேட்டை சீனி, மேலூர் மலைச்சாமி, ஒக்கூர் மணிவாசகம், விடுதலை ரத்தினம், வையை நம்பி.

சென்னைச் சிறையில் மிசாக் கைதிகளாக இருந்தவர்களை— ஆம் — அரசியல்வாதிகளை — பெரும்பாலும் தி. மு. க., தி. க., மார்க்சிஸ்ட், பழைய காங்கிரஸ்காரர்களை அடித்து வதைத்துக் குற்றுயிரும் குலை உயிருமாக்கினர்.

தி. மு. கழகத்தினரைத் தங்கள் இஷ்டம்போல் இந்திரா அரசினர் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர், சென்னைச் சிறைச் சாலையில்!

ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாள் இருபத்து ஐயாயிரம் தி.மு. கழகத் தொண்டர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

# 73

## சட்டங்கள் பட்டபாடு!

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றிலேயே முதன்முறையாக கழக அமைச்சரவையைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை 1976-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதியன்று அமுல்படுத்தும் உத்தரவை மத்திய அரசு பிறப்பித்தது. 31-ஆம் தேதி மாலையில் மத்திய அமைச்சரவை கூடி அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின் கீழ், தமிழ்நாடு மந்திரிசபையை நீக்கிவிட்டு, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்வதாக குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது அவர்களுக்கு பரிந்துரை செய்து, அன்று இரவு குடியரசுத் தலைவர் அதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவுப்படி ஒரு மாநில அரசு தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மத்திய அரசு கருதினால், அந்த அமைச்சரவையை நீக்கி, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவர மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அப்போது தமிழக அரசை தொடர்ந்து நடத்த முடியாத நிலை இருந்ததா? அப்போது தமிழக சட்டப்பேரவையில் தி. மு. கழகத்திற்குப் பெரும்பான்மை இல்லாமல் இழுபறி நிலையிலே இருந்ததா என்றால்—அப்போது கழகத்திற்கு சட்டமன்றத்திலே இருந்த இடம் மொத்தம் 234 பேர்களில் தி.மு. கழகம் 167, அ.தி.மு.க. 17, ஸ்தாபன காங்கிரஸ் 13, இந்திரா காங்கிரஸ் 7, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 5, தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி 2, முஸ்லிம் லீக் 6, பார்வர்டுபிளாக் 7, சுதந்திரா 4, தமிழரசுக் கழகம் 1, சுயேச்சை 1, அவைத் தலைவர் 1, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் 2, காலியான இடம் 1. இந்த அளவிற்கு தி.மு. கழகம் பெரும்பான்மையாக இருந்த போதிலும் கழக அமைச்சரவை கலைக்கப்பட்டது.

அமைச்சரவையைக் கலைத்ததோடு தமிழ்நாடு சட்ட சபையையும் கலைத்துவிட்டதாக குடியரசுத் தலைவர் தனது உத்தரவில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனவரி 31-ஆம் தேதி காலையில் காந்தி விழாவில் உரையாற்றிய கவர்னர் அதுவரையில் தனது சிபாரிசை செய்யவில்லை. அவ்வாறு சிபாரிசு செய்திருந்தால் அந்த

விழாவில் அவர் தமிழக அரசைப் பாராட்டிப் பேசியிருக்க மாட்டார். மத்திய அரசின் விருப்பத்திற் கொப்ப, அங்கே தயாரிக்கப்பட்ட அறிக்கை இங்கே அனுப்பப்பட்டு கவர்னரிடம் அதற்குப்பிறகு கையெழுத்து பெறப்பட்டது.

அந்த அளவிற்கு ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டு, தமிழக ஆட்சி நிர்வாகத்தை நடத்துவதற்காக அன்றைக்கே அவசரம் அவசரமாக இரண்டு பேர்களை கவர்னரின் ஆலோசர்களாக மத்திய அரசு நியமித்தது. மத்திய அரசில் பெட்ரோலியம் இலாகா செயலாளராக இருந்த பி.கே. தவே அவர்களையும், மின்சார இலாகா செயலாளராக இருந்த ஆர். வி. சுப்பிரமணியம் அவர்களையும் கவர்னரின் ஆலோசகர்களாக மத்திய அரசு அறிவித்தது.

அமைச்சரவை கலைப்பு பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது நான் விடுத்த அறிக்கை வருமாறு:

"தமிழ்நாட்டு மக்கள் காந்திய வழியிலும், அண்ணா வழியிலும் நிரம்ப நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே அமைதி காப்பதிலும் வன்முறைகள் ஒருசிறிதும் தலைகாட்டாமல் பார்த்துக் கொள்வதிலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உணர்வுடன் தொடர்ந்து நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒன்பதாண்டு காலம் கழக ஆட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழக மக்களுக்கும். அரசு அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

குடியரசுத் தலைவர் உத்தரவைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்த பதினான்கு நாட்களுக்கு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கவர்னரின் ஆலோசனையின் பேரில் தடை உத்தரவு பிறப்பித்தார்.

ஆட்சிக் கலைப்பைத் தொடர்ந்து, குடிசை மாற்று வாரியத் தலைவராக இருந்த சகோதரர் அரங்கண்ணல் அவர்களும், மாநில திட்டக்குழு துணைத்தலைவராக இருந்த கே. ஏ. மதியழகன் அவர்களும், குடிநீர் வாரியத் தலைவராக இருந்த செ. கந்தப்பன் அவர்களும், சுற்றுலா வளர்ச்சி வாரியத் தலைவராக இருந்த ஆசைத்தம்பி அவர்களும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தார்கள்.

நானும் எனது உறவினர்களும் முப்பது கோடி ரூபாய் சொத்து சேர்த்து விட்டதாக ஒரு துண்டு நோட்டீசை அச்சடித்து

போலீஸ்வேன்களிலும், ஜீப்களிலும் எடுத்துக்கொண்டு போய் ஊர் ஊராக பிப்ரவரி முதல் நாளே வினியோகித்தனர். அதற்கு நான் உடனடியாக முரசொலியில் என்னுடைய சொத்துக்களையும், உறவினர் சொத்துக்களையும், அதற்கான கடன்களையும் ஏற்றுக்கொண்டு முப்பது கோடி ரூபாய் அல்ல, முப்பது லட்சம் ரூபாய்க்கு வாங்கிக்கொள்ளத் தயாரா என்றும், அந்தத் தொகையையும் கூட கழகத்திற்கு நான் அளித்திடத் தயார் என்றும் பதிலளித்தேன். அதற்கு யாரும் விளக்கம் அளிக்க முன்வரவில்லை.

கழக அரசு கலைக்கப்பட்டது பற்றி எம். ஜி. ராமசந்திரனிடம் கருத்து கேட்டபோது "தி.மு. கழக அரசு விலக்கப்பட்டது தைரியமான நடவடிக்கையாகும். இதை அ. தி. மு. க. வரவேற்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க பிரதமர் இந்திரா காந்திக்கு அ.தி.மு.க.வின் முழு ஆதரவு உண்டு" என்று கூறினார். 234 பேர் கொண்ட அவையில் 167 பேர்களை தன்னகத்தே கொண்டிருந்த கழக அமைச்சரவையைக் கலைத்தது ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் செயல் என்று அப்போது எம்.ஜி.ஆர். கூறினார்.

"கழக ஆட்சியை ஏன் கலைக்க சிபாரிசு செய்தேன்'' என்று கவர்னர் கொடுத்த அறிக்கையினை நாடாளுமன்றத்தில் பிப்ரவரி 2–ஆம் தேதியன்று வைத்தார்கள். ஆட்சியைக் கலைத்தற்கு நாடாளுமன்றத்தில் தி.மு. கழகத்தோடு சேர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ், சோஷலிஸ்ட், இந்திய மக்கள் கட்சி ஆகிய கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தன. ஜனவரி 31–ஆம் தேதி தமிழக அரசைக் கலைத்த மத்திய அரசு பிப்ரவரி 3–ஆம் தேதியன்று நாடாளுமன்றத்தில் பாராளுமன்றத்தின் ஆயுளை ஓராண்டு காலத்திற்கு நீடித்துக் கொள்வதற்கு வழிவகை செய்யும் சட்டத் திருத்தத்தைத் தாக்கல் செய்தது.

அதே பிப்ரவரி 3–ஆம் தேதி அன்று கழக அமைச்சரவை மீது விசாரணை நடத்துவதற்காக உச்ச நீதிமன்ற நீதிபதி சர்க்காரியா அவர்களைக் கொண்டு விசாரணைக் கமிஷன் ஒன்றை மத்திய அரசு நியமித்தது. அதுபற்றி நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ஓம் மேத்தா கூறும்போது, "1972–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அ.தி.மு.க. தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன், தி.மு.க. அமைச்சரவை மீதான புகார்கள் அடங்கிய பட்டியலை மத்திய அரசிடம் கொடுத்தார். மொத்தம்

54 புகார்கள் அடங்கியிருந்தன. அவற்றில் முதலமைச்சர் கருணாநிதிக்கு எதிரானவை 27, மற்ற அமைச்சர்கள் மீது கூறப்பட்டவை 13, மீதி 14 புகார்களும் அதிகாரத்தை தி.மு. கழகம் தவருகப் பயன்படுத்தியதாக பொதுப்படையான புகார்கள். இந்தப் புகார்கள் மீது நீதிபதி விசாரணை நடத்துவார்" என்று அறிவித்தார். அதாவது அதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 1972–ல் மத்திய அரசிடம் தரப்பட்ட புகார்களைத் தேடியெடுத்து அதன்மீது ஒரு விசாரணைக் கமிஷனை அரசியல் நோக்கத்துடன் மத்திய அரசு நியமித்தது.

விசாரணைக் கமிஷன் குறித்து என்னை அபிப்பிராயம் கேட்டபோது, "கடந்த நான்காண்டுகளுக்கு முன் எங்கள் மீது கூறப்பட்ட புகார்களே இப்போதும் கூறப்பட்டுள்ளன. அவற்றுக்கு அப்போதே பதிலளித்து அச்சிட்ட நூலாக சட்டசபையிலும் வைத்திருக்கிறோம். மேலும் விளக்கமான பதில்கள் சட்டசபையில் கூறப்பட்டுள்ளன. இப்போது விசாரணைக் கமிஷன் முன்பு விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பதை வரவேற்கிறேன்" என்று கூறினேன்.

கழகம் ஆட்சியில் இருந்தவரை அதன் சுகங்களை அனுபவித்துவிட்டு, ஆட்சி கலைக்கப்பட்டவுடன் இனி இங்கிருந்தால் பயனில்லை, துன்பம்தான் என எண்ணி ஒருசிலர் கட்சியை விட்டுச் சென்ருர்கள். அவர்களைப் பற்றி அப்போது முரசொலி ஏட்டில் பணியாற்றித் தன் இளம் வயதிலேயே மாண்டுவிட்ட தம்பி இளந்துறவி எழுதிய கவிதை இது:

**நேற்று ஒரு தலைவனின்**
**நேர்த்தியினைக் கூறியவன்**
**நிற்கின்ற இடம் இன்று வேறு —அவன்**
**நிலைகெட்ட நிலையினைப் பாரு —திசை**
**காற்றடிக்கும் நேரத்திலே**
**தூற்றிக் கொள்ளும் நோக்கமுள்ள**
**கயமையை விண்டு இங்கு கூறு —அந்த**
**கயவரை சாடிமனம் ஆறு!**
**எச்சில் இலை போல இங்கு**
**பிச்சையிடும் பதவிக்கு**
**ஏங்கியவர் ஆசைமனம் தூண்ட —ஒரு**
**இரவுக்குள் வேலியினைத் தாண்ட —மான**

அச்சமிலா மனிதரும்
அரசியல் அரங்கத்தில்
ஆடுகிற விந்தை என்ன விந்தை —அதை
ஆதரிப்பார் சிந்தை என்ன சிந்தை?
ஈரத்துணி உலருமுன்
இடம் விட்டு இடம் தாவும்
இலட்சியவாதிகளும் உண்டு —பணம்
எண்ணுவதே இவர் செய்யும் தொண்டு —அந்த
ஈரமிலா நெஞ்சுடையார்
மாறுகின்ற காலம் வரை
இங்கு இல்லை நல்லாட்சி என்று —திசை
எட்டினிற்கும் கூறு வலம் சென்று!

நெருக்கடி நிலைமையின்போது மாநில சட்டசபைத் தேர்தலை மத்திய அரசு நினைத்தால் தள்ளிவைக்க அரசியல் சட்டத்தின் 152-வது பிரிவு மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. தி.மு.கழக அமைச்சரவை நீடிப்பதற்கு காலம் இருந்தபோதிலும், ஆட்சியைக் கலைத்த மத்திய அரசு 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடைபெற்ற கேரள சட்ட சபை தேர்தல் 1975-ஆம் ஆண்டு அக்டோபர் 21-ஆம் தேதிக்குள் மீண்டும் நடத்தியிருக்க வேண்டும். மாறாக ஆறு மாத காலத்திற்கு கேரள சட்டசபையின் ஆயுட்காலத்தை நீடித்து பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி னார்கள். காரணம், கேரளத்தில் இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலான அச்சுதமேனன் அரசு நெருக்கடி நிலையை அப்போது ஆதரித்த அரசாக இருந்தது. எனவே கேரளத்திற்கு ஒரு விதி, தமிழகத்திற்கு ஒரு விதி, என்று ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டது.

பிரதமர் இந்திராகாந்தி குடும்பத்தினருடன் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதியன்று சென்னைக்கு வந்தார். கிண்டியில் கழக அரசு கட்டி முடித்த காமராஜர் நினைவு மண்டபத்தைத் திறந்து வைக்கவும், பிப்ரவரி 15-ஆம் தேதியன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இரண்டு காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளவும் வந்தார். 14-ஆம் தேதி மாலையில் நடைபெற்ற காமராஜர் மண்டபம் திறப்பு விழாவில் கலந்துகொண்டு அதனை இந்திராகாந்தி திறந்து வைத்தார்,

திறப்பு விழாவுக்கு முன்பு அவரது ஆணைப்படி காமராஜர் நினைவுமண்டப முகப்பில் இருந்த "இராட்டை" அகற்றப்பட்டு விட்டது. அது காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் தேர்தல் சின்னம் என்பதால் அப்படியொரு முடிவெடுத்து அதனை அகற்றினார்கள்.

காமராஜரின் இறுதிக் கால நினைவுகள். என்ன என்பதை சஞ்சீவரெட்டி அவர்கள் பேசியதை எடுத்துக்காட்டியதன் மூலம் தெரிவித்திருக்கிறேன் ஆனால் காமராஜர் நினைவு மண்டபத் திறப்பு விழாவில் பேசிய இந்திராகாந்தி அம்மையார் காமராஜர் எண்ணம் என்ன என்பது குறித்து பேசியது என்ன தெரியுமா?

உடல் நலம் தேறியதும் நாம் ஒன்றாகச் சேர்ந்து பாடுபட இறுதி முடிவெடுப்போம் என்று காமராஜர் என்னிடம் கூறினார். எங்களுடன் காமராஜர் இணைய விரும்பினார். அதே நேரத்தில் மற்ற மாநிலங்களில் உள்ள பழைய காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் ஆகியோருடன் வந்து இணைய விரும்பினார். எனவேதான் இரு காங்கிரஸ் இணைப்புக்கு கால தாமதம் ஆனது. மறைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, அவர் தனது மனதை மாற்றிக்கொண்டு, இனிமேல் தாமதித்துப் பயனில்லை. முதலில் தமிழ்நாட்டில் இரு காங்கிரசும் இணைவோம். வருபவர்கள் பின்னால் வந்து சேர்ந்துகொள்ளட்டும் என்று எனக்குச் செய்தி அனுப்பினார். நான் இதுகுறித்து பேச சென்னைக்கு வருகிறேன் என்று கூறினேன். அதற்கு காமராஜர், நீங்கள் சென்னைக்கு வந்தால் பல ஊகங்களுக்கு இடம் கொடுக்கும். ஆகவே முதலில் டெல்லியில் நாம் சந்தித்துப் பேசுவோம். அதன் பிறகு சென்னை வந்தால் போதும் என்று செய்தி அனுப்பினார்.

இந்திராகாந்தி அம்மையார் காமராஜரின் எண்ணம் என்ன என்பது பற்றிப் பேசிய இந்தக் கருத்துக்களையும், சஞ்சீவரெட்டி தெரிவித்த கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்த்து காமராஜரின் கடைசி கால எண்ணம் என்ன என்பதை மக்களே புரிந்து கொள்ளட்டும்!

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்ததையொட்டி இரண்டு வார காலத்திற்கு ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை பிப்ரவரி 15-ஆம் தேதி அன்று மேலும் இரண்டு வாரக் காலத்திற்கு நீடிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 1976 பிப்ரவரி மாதம் 15-ஆம்

நாள்தான் சென்னையில் இரண்டு காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பு மாநாடு பிரதமர் இந்திரா முன்னிலையில் நடைபெற்றது.

இணைந்த காங்கிரஸ் கட்சிக்கு கபிஸ்தலம் கருப்பையா மூப்பனார் அவர்களைத் தலைவராகவும், மகாதேவன் பிள்ளை, ஜே.எஸ். ராமசாமி ஆகியோரை துணைத் தலைவர்களாகவும் அன்று அறிவித்தார்கள்.

கடற்கரையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பேசும் போது இந்திராகாந்தி தெரிவித்த சில முக்கிய கருத்துக்கள்:

"சென்னை நகரில் இனிமேல் குடிதண்ணீர் பிரச்னையை சமாளிக்க ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மராட்டியம் ஆகிய மூன்று மாநிலங்களைச் சேர்ந்த முதல் அமைச்சர்கள் சென்னை நகருக்கு ஒவ்வொரு மாநிலத்தின் பங்காகவும் கிருஷ்ணா நதி மூலமாக ஐநூறு கோடி கன அடி தண்ணீர் - அதாவது மொத்தமாக 1,500 கோடி கன அடி தண்ணீர் தர ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே இனிமேல் சென்னையில் குடிதண்ணீர் பஞ்சமே ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்."

"தி. மு. கழகத்தைத் சேர்ந்தவர்கள் இலங்கைத் தமிழர் விவகாரம் பற்றி தவறான பிரச்சாரம் செய்கிறார்கள். இதுபோன்ற பிரச்சாரங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இதனால் இந்திய அரசு—இலங்கை அரசுக்கிடையே நட்புறவு கெடுவதற்கு கருணாநிதி காரணமாக இருக்கிறார்."

இது பிரதமர் இந்திரா அம்மையாரின் கடற்கரைப் பேச்சு!

இலங்கைத் தமிழர் பிரச்னையில் தி.மு.க. கொண்டிருந்த உறுதியும்கூட இந்திராகாந்தி அவர்களை அப்போதே உறுத்தியிருக்கிறது என்பதற்கு அவரது இந்தப் பேச்சு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தது.

# 74

## தடைபட்ட பயணம்!

தொடர்ந்து மிசா சட்டத்தின்படி கழகத்தினர் வேட்டையாடப்பட்டனர். என்னுடன் யாரும் இருக்கக் கூடாதென்றும், என்னைத் தனிமைப்படுத்த வேண்டுமென்றும் திட்டமிட்டு கவர்னர் ஆட்சியில் காரியங்கள் நடத்தப்பட்டன. எனது காரில் எனக்குப் பேச்சுத் துணைக்காக யாராவது சில நாட்கள் தொடர்ந்து வந்தால்கூட அவர்கள் மிசாக் கைதிகளாக ஆக்கப் பட்டார்கள் போடி. சுருளிவேல்-கழக வழக்கறிஞர், சட்டமன்ற உறுப்பினராக இருந்தவரும்கூட! அவர் சில நாட்கள் என் காரில் வந்தார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார் இன்றைய சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி டி. ஆர். பாலு—அவர் ஒருவார காலம் என்னுடன் காரில் வந்து கொண்டிருந்தார். அவரையும் மிசா கொத்திக்கொண்டு போய்விட்டது. ஆயிரம் விளக்கு உசேன்—கழக உழைப்பாளி; அவர் சில நாட்கள் எனக்குத் துணையாகக் காரில் வந்தார். விடுமா, மிசா? அவரும் சிறையில் பூட்டப்பட்டார்! தம்பி எல். கணேசன்; நான் தடுத்தும் கேளாமல் என்னுடன் காரில் வரத் தொடங்கினர். அவர் மட்டும் தப்புவாரா? ஒரு வாரத்திற்குள் மிசா; அவரையும் வளைத்துப் போட்டுக்கொண்டது!

சென்னை வீதிகளில் தன்னந் தனியனாகத்தான் காரில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு இரண்டு காரோட்டிகள் உண்டு! அவர்களிடம் மிகுந்த பாசம் வைத்திருந்தேன். அவர்களில் ஒருவர், உடல் நலமில்லை எனக் கூறிவிட்டு, வேறு ஒரு தொழிலதிபரிடம் வேலைக்குப் போய்விட்டார்! இன்னொருவர், அடுத்து இரண்டு நாட்களுக்கெல்லாம் என்னிடம் வந்து வேலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதாக அறிவித்து விட்டுச் சென்றுவிட்டார். காருக்கு டிரைவரும் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது. அப்பொழுதுதான் முன்னாள் அமைச்சர் நண்பர் கண்ணப்பன் எனக்குக் காரோட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அந்த மாபெரும் குற்றத்தைச் செய்தமைக்காக அவரையும் மிசா விழுங்கிச் சிறைக் கோட்டத்தில் போட்டுக் கொண்டது.

கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி, விடுதலை சம்பந்தம்,

நடிகவேள் எம். ஆர். இராதா, மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், பழைய காங்கிரஸ் கட்சியினர் மிசாக் கைதிகளா யினர்.

மாநில முழுவதுள்ள சிறைச்சாலைகளில் நூற்றுக்கணக் கானோர் மிசா சட்டப்படி அடைக்கப்பட்டிருந்தார்கள் என்றாலும்கூட-சென்னை சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டவர் களைத்தான் சிறை அதிகாரிகளும், கான்விக்ட் வார்டர்களும், சிறைச்சாலையின் பெரிய அதிகாரிகளின் முன்னிலையில் அடித்து நொறுக்கிச் சித்ரவதை செய்தனர்.

சென்னைச் சிறையில் நடைபெற்ற சித்ரவதைகள் குறித்து அந்தச் சிறைக் கொடுமையின் காரணமாக சிறையிலேயே பிணமான கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் சிட்டிபாபு எழுதிய "டைரி" அச்சாகி வெளிவந்துள்ளதைப் படித்தால் இப்போதும் நமது நெஞ்சு எரிமலையாகும்! அந்தக் கொடுமை குறித்து விசாரிக்க 1977-ஆம் ஆண்டில் மத்தியில் இருந்த ஜனதா ஆட்சியினால் நியமிக்கப்பட்டிருந்த கவர்னர் பிரபு தாஸ் பட்வாரி அவர்கள் நீதிபதி இஸ்மாயில் கமிஷனை அறிவித்தார் அந்தக் கமிஷன் அறிக்கையில் சிறையில் நடந்த கொடுமைகள் அனைத்தும் விளக்கப்பட்டன மிசாக் கைதிகளுக்கு சோறுடன் மண்ணையும் சிறுநீரையும் கலந்து வழங்கிய அக்கிரமங்கள் எல்லாம் விவரிக்கப்பட்டன. ஒவ்வொரு கூண்டுக்குள்ளும் நுழைந்து அரசியல் மிசா கைதிகளை இழுத்துப் போட்டு ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து உதைத்த அநியாயங்கள் எல்லாம் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டன. வித்யாசாகர் என்ற சிறை அதிகாரிதான் இத்தனைக்கும் காரணம் என இஸ்மாயில் கமிஷன் அறிக்கை சுட்டிக் காட்டியது. ஆனால் நண்பர் எம். ஜி. ராம சந்திரன் முதல்வரானவுடன் அந்த அதிகாரி வித்யாசாகருக்குப் பதவி உயர்வு கொடுத்து அவரைக் கௌரவித்தார். அரசாங்க சார்பில் அச்சியேற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ள நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை இப்போது படித்தாலும் சென்னைச் சிறையில் அதிகாரிகள் நடத்திய அந்த மிருக வெறி கொண்ட செயல்கள் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

மாநிலத்தில் மற்ற சிறைகளில் இருந்த மிசாக் கைதிகளைக் காண அவர்களது நெருங்கிய உறவினர்கள் அனுமதிக்கப் பட்டார்கள்; வாரம் ஒரு முறை!

ஆனால் சென்னைச் சிறையில் இருந்த மிசாக் கைதிகளைப் பார்க்க அவர்களது பெற்றோர்களோ, உறவினர்களோ கூட அனுமதிக்கப்படவில்லை. சிறையில் இருக்கும் அந்த உடன் பிறப்புக்களின் இல்லத்தினர் ஒவ்வொரு நாளும் என்னை வந்து சந்தித்து கண்ணீர் வடித்துக் கதறுவார்கள். இதற்கிடையே சிறையில் நடைபெற்ற சித்ரவதை நிகழ்ச்சிகளும் வெளியே பரவத் தொடங்கி விட்டது. ஏறத்தாழ முப்பது நாட்கள் வரையில் சென்னை சிறையில் இருந்தவர்களின் கதி என்ன என் பதே எங்களில் யாருக்கும் தெரியாது. கழகத்தினர் வீடுகளிலே இருந்து ஆண்களும் பெண்களும் அழுது புலம்பியவாறு என்னை முற்றுகையிட்டனர். ஓரிரு நாள் அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் பார்த்தேன். முடியவில்லை. ஒரு மாதம் ஓடிவிட்டது. ஒரு நாள் பிற்பகல் நானே மாநிலப் போலீஸ் தலைமை அதிகாரி அருள் அவர்களுக்கு 'போன்' செய்தேன். "நாளைக் காலைக்குள் சிறையில் இருக்கும் மிசாக் கைதிகளைக் காண்ப தற்கு அவர்களது உறவினர்களுக்கு அனுமதி அளிக்கா விட்டால் - சிறைச்சாலை வாசலில் நான் சாகும்வரையில் உண்ணா நோன்பு மேற்கொள்வேன்" என்று அவரிடம் அறிவித்தேன். அன்று மாலையே சென்னைச் சிறையில் உள்ள மிசாக் கைதி களைக் காண்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஒரு மாதத்திற்குப் பிறகு சிறையில் மாறனையும் ஸ்டாலினை யும் பார்க்கக் குடும்பத்தோடு சென்றேன். மற்ற உடன் பிறப்புக்களைப் பார்க்க அனுமதி இல்லை. அப்போதுதான் தெரிந்தது மாறனுக்கு உடல் நலிவு ஏற்பட்டு, 'ஜன்னி' கண்டு-பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள செய்தி !

அதனால் சிறையில் ஸ்டாலினை மட்டுமே பார்த்தோம். ஸ்டாலினைச் சுற்றி இரண்டு சிறை அதிகாரிகள் ! நான்கு சி. ஐ. டி. கள் ! முழுக்கைச் சட்டை போட்டுக் கையை மூடி யிருந்தான். காரணம்; அடிபட்ட காயங்கள் தெரியக் கூடாது என்பதற்காக சிறை அதிகாரிகள் உத்தரவு அப்படி !

"அடித்தார்களாமே ! உண்மையா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்பது போலத் தலையாட்டினான். ஆனால் கண்கள் மின்னின !

"அடித்தார்கள்" என்று சொல்லியிருந்தால், மீண்டும் சிறையில் உள்ள அனைவருக்கும் அன்றே அடி விழுந்திருக்கும்.

சிறையில் சிட்டிபாபு மரண அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார் என்றும், வீராசாமிக்கு காது கேட்கவில்லை என்றும், நீலநாராயணன் எழுந்து நடமாட முடியவில்லை என்றும் தகவல்கள் எங்களுக்கு வந்தன.

மறுநாள் மாறனைக் காண பொது மருத்துவமனைக்குட் போனோம்!

மருத்துவமனை அறையில் பத்துக் காவலர்கள் படுக்கையைச் சுற்றி நிற்க மாறன், ஜன்னி கண்டு படுத்திருந்த காட்சியைக் கண்டோம். ஒரு சில விநாடிகள் கூட எங்களை அனுமதிக்கவில்லை. போலீசார் எங்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியேற்றினார்கள்.

ஏனைய கழகக் கண்மணிகளையெல்லாம் காண முடியவில்லையே என்ற ஏக்கம் வாட்டியது. மிசா சட்டப்படி அவர்களைக் காண முடியாது என்று அதிகாரிகள் மறுத்து விட்டனர். அவர்களது உறவினர்கள் அவர்களைக் கண்டு கலங்கியவாறு திரும்பினர்.

வெளியூர்களில் இருந்த கழகச் செயல் வீரர்களை சந்திப்பதற்கும், சிறைகளில் உள்ளவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதற்கும், ஒரு சுற்றுப் பயணம் புறப்படத் திட்டமிட்டேன். அதுகுறித்து முரசொலியில் பின்வருமாறு பிப்ரவரி இறுதியில் ஒரு கடிதம் எழுதினேன்

"உடன்பிறப்பே,

உன்னைக் காண்பதற்கும், குடும்பத்தினரைச் சந்திப்பதற்கும் நாளை புறப்படுவதாக இருந்தேன். இயலவில்லை. வரும் 24-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அல்லது 25-ஆம் நாள் புதன்கிழமை புறப்படுவதாக இருக்கிறேன்.

மாலை, ஒலிபெருக்கி, மேடை, வரவேற்பு வளைவு-இவை போன்ற எதுவும் இருக்கக் கூடாது; ஒலி முழக்கமோ, ஆரவாரமோ அறவே இருந்திடலாகாது.

நான் வரப் போகிறேன் என்பதற்கான துண்டு அறிக்கை விளம்பரங்களோ சுவர் எழுத்து விளம்பரங்களோ, தட்டிகள் கட்டிடும் விளம்பரங்களோ - நிச்சயம் கூடாது! அவைகளையும் தவிர்க்க வேண்டும்.

நான், உன் ஊருக்கு வரும்போது பயணிகள் விடுதி கிடைத்தால் அங்கு தங்குவேன். அவைகள் கிடைப்பது கஷ்ட

மாக இருந்தால் ஏதாவது ஓட்டல் அறைகள். அதுவுமற்ற இடங்களில் இருக்கவே இருக்கிறது எப்போதும் போல் உன் இல்லம். உள்ளத்திலேயே இடம் கொடுத்திருக்கிற நீ, சற்று நேரம் தங்கிச் செல்வதற்கு இல்லத்திலா இடம் தராமல் போய் விடுவாய்?

சில இடங்களில் உன் அரிய முயற்சியினுல், அயரா உழைப்பினுல் கழகத்திற்கென கட்டி வைத்திருக்கிற அலுவலகக் கட்டிடங்களை இந்தச் சமயத்தில் நான் பயன் படுத்திக் கொள்ளும்போது, எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் தெரியுமா?

உன்னிடம் பேசவும், கழகத்துப் பணிகளை நீ எவ்வாறு அமைதியுடன் ஆற்றிட வேண்டும் என்று எடுத்துக் கூறிடவும் தான் உன்னைக் காண வருகிறேனே அல்லாமல், கூட்டம் பேசுவதற்கு அல்லவே அல்ல!

உன் திருமுகம் காணத்தான் வருகிறேனே அல்லாமல் திரளான மக்கள் சூழ் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அல்ல!

இதனை உணர்ந்து, நான் கேட்டுக்கொண்டுள்ளவாறு நடந்து கொள்வாய் என நம்புகிறேன்"'

என்று எழுதியிருந்தேன்.

இதற்கிடையே நான் இந்தச் சுற்றுப்பயணத்தை மேற் கொள்ளக் கூடாது என சில காங்கிரஸ்காரர்கள் மத்திய உள்துறை அமைச்சருக்கும், கவர்னருக்கும் தந்தி கொடுத் தனர்.

கழகத்திலே உள்ள மூத்த தலைவர்கள் சிலருமே நான் அந்தப் பயணத்தை மேற்கொள்ளக்கூடாது என தடுத்தனர், கழகத்தின் மேல்மட்டத்திலேயிருந்த ஒரு சிலர் நான் அந்தப் பயணத்தை மேற்கொள்வதால் தங்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்படுமோ எனக் கருதி என்னைப் போகக்கூடாது எனத் தடுத்தனர். மற்றும் ஒரு சிலர் நான் அந்தப் பயணம் மேற்கொள்வதால் எனக்கு மேலும் சிரமங்கள் நேரிடுமோ என எண்ணி பயணம் வேண்டா மெனத் தடுத்தனர். வேறு பலர் நான் அந்தப் பயணத்தை மேற் கொள்ளத்தான் வேண்டுமென்று வற்புறுத்தினர்.

ஒரு மாலை நேரம், முரசொலி அலுவலகத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். சட்டப்பேரவைத் தலைவராக இருந்த புலவர் கோவிந்தன் அவர்களும், மேலவைத் தலைவராக இருந்த சி. பி. சிற்றரசு அவர்களும் என்னிடம் தனிமையில் பேச வேண்டுமென்று வந்தார்கள். தலைமைக் கழக மேலிடத் தலைவர்கள் கூடிக் கலந்து பேசியதாகவும், இப்பொழுதுள்ள நிலையில் நான் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாதென்று அவர்கள் கருதுவதாகவும், அதனைச் சொல்லி எனது பயணத்தை நிறுத்துவதற்காகவே இருவரையும் அனுப்பியிருப்பதாகவும் சொன்னார்கள். "கழகத்தின் மூத்த தலைவர்களான நீங்கள் இருவரும் சொல்கிற காரணத்தால் உங்கள் பேச்சைத் தட்டக்கூடாது என்ற நிலையில் சுற்றுப் பயணத் திட்டத்தை சில நாட்களுக்கு ஒத்தி வைக்கிறேன். அறவே ரத்து செய்ய இயலாது" எனப் புலவர் அவர்களிடமும், சி. பி. சி. அவர்களிடமும் கூறினேன். அவர்களும் அந்த அளவிற்கு நான் ஒத்துக்கொண்டமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து விட்டுச் சென்றார்கள்.

இதற்கிடையில் இலட்சிய நடிகர் நண்பர் எஸ். எஸ். ஆர் அவர்களும், எனது அமைச்சரவையில் இருந்த பண்ருட்டி இராமச்சந்திரனும் மத்திய அரசின் அதிகாரிகள் வகுத்த வியூகத்திற்குள் சிக்கிக் கொண்டனர். கழகத்தில் உள்ளவர்களை; யார் யாரைக் கைது செய்ய வேண்டுமென்று ஆள் காட்டுகிற வேலையிலே பண்ருட்டி இராமச்சந்திரன் ஈடுபட்டார். அதுமட்டுமல்ல; கழகத்தில் உள்ள முக்கிய பிரமுகர்களைச் சந்தித்தும், தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டும் அவர்களை அச்சுறுத்தி, மத்திய அரசின் அடக்குமுறைகளிலிருந்து தப்பிட வேண்டுமானால் கழகத்திலிருந்து விலகிவிடுங்கள் என்றும் எச்சரிக்கிற பணியிலே ஈடுபட்டார்.

கழகத்தின் மேல்மட்டத் தலைவர்கள் சிலர் கழகத் தலைமைப் பொறுப்பிலே இருந்து நான் விலகிக் கொண்டால் – கட்சிக்கு மேலும் ஆபத்து வராது என்றும், கட்சியை மத்திய அரசு தடை செய்யாமல் விட்டு விடுமென்றும் அவர்களாகவே கூடிப் பேசி, ஒருநாள்; முன்னாள் சட்ட அமைச்சர் மாதவன் வீட்டில் அதுகுறித்துக் கலந்து பேசி முடிவெடுக்க என்னையும் அழைத்தனர். அப்போது அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த எஸ். எஸ். ஆர்., "கலைஞர் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவே

கூடாது!'' என்று ஆவேசமாகக் குரல் எழுப்பினர். ஆனால் அந்தச் செய்தி எப்படியோ மத்திய அரசின் ஒற்றர்களுக்கு எட்டி விட்டது! அன்றிரவே அவரைச் சூழ்ந்து வளைத்து, அவரது வீட்டையும் சோதனையிட்டு - அவர் கொண்டிருந்த கருத்தைக் கட்டாயப்படுத்தி மாற்றிவிட்டனர். மறுநாள் எஸ். எஸ். ஆர்., பத்திரிகைகளில் "கழகத் தலைவர் கருணாநிதி, உடனடியாகத் தலைமைப் பதவியிலிருந்து விலகிடவேண்டும்'' என்று அறிக்கை கொடுத்தார்! இல்லை; கொடுக்குமாறு அவரை அந்த அதிகாரிகள் செய்துவிட்டனர்.



# 75

## வேதனைக் காட்டில் சோதனைத் தீ!

திட்டமிட்டபடி சுற்றுப்பயணம் செல்வதை ஒத்திவைத்து விட்டேன் என்றாலும், தினந்தோறும் முரசொலி அலுவலகம் செல்வதை மீண்டும் ஒரு வழக்கமாகக் கொண்டு விட்டேன். தொடர்ந்து முரசொலியில் எழுதுகிறேன் என்றதும், எமர்ஜன்சி காலத் தணிக்கை அதிகாரி, ஒரு புதிய ஆணையை அனுப்பி, முரசொலியில் எந்தச் செய்தி அல்லது கட்டுரை வெளிவருவதாக இருந்தாலும் முதலில் அவற்றை தணிக்கை அதிகாரிக்கு அனுப்பி அனுமதி பெறவேண்டுமென்றும், எல்லாப் பக்கங்களும் அச்சாவதற்கு முன்பு (Page Proof) அந்தப் பக்கங்களையும் தணிக்கை அதிகாரியிடம் அனுப்பி அங்கீகாரம் பெறவேண்டு மென்றும் கடுமையாகச் சட்டம் இருப்பதாகத் தெரிவித்தார்.

அறிஞர் அண்ணா என்று அண்ணாவுக்கு அறிஞர் என அடைமொழி இட்டு எழுதுவதையோ, காமராஜரைப் பெருந்தலைவர் எனக்குறிப்பிடுவதையோகூட அந்தத் தணிக்கை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. ஒரு [illegible]கம் கட்டுரையோ செய்திகளோ அச்சுக்கோத்து அவை சென்சார் அலுவலகத்திற்குச் செல்லுமானால் திரும்பி வரும்போது அவற்றில் நாலைந்து வரிகளே மிஞ்சியிருக்கும். அந்த அளவுக்கு எழுத்துச் சுதந்திரம் எதிர்க்கட்சிகளுக்கு, அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பறிக்கப்பட்டது. அதே நேரத்தில் தி.மு. கழகத்திற்கு எதிரான ஏடுகளில்—மத்திய அரசின் வானொலியில்—டெலிவிஷனில்—தி.மு.க. பற்றியும், குறிப்பாக என்னைப்பற்றியும், கழக அமைச்சர்கள், கழகக் குடும்பத்தினர் பற்றியும் திட்டமிட்டு வேண்டுமென்றே அவதூறுச் செய்திகள் பரப்பப்பட்டன. 1976 தொடக்கத்தில் கழக ஆட்சியைக் கலைத்தது முதல் 1977 வரையில் இப்படிக் கழகத்திற்கும் எனக்கும் களங்கம் கற்பிக்கும் செய்திகளைப் பரப்புகிற பணியை அதிகாரபூர்வமாகச் செய்து வந்தனர். அந்தச் செய்திகளை மறுக்கவோ, விளக்கமெழுதவோ எனக்கும், கழகத்தினருக்கும், கழக ஏடுகளுக்கும் உரிமை கிடையாது. எதிரியைக் கை கால்களைக் கட்டிப் போட்டுவிட்டு அவன் நெஞ்சிலும், முதுகிலும் மாறி மாறிக் குத்துவது போல ஒரு அநியாயமான போராட்டத்தை அன்றைக்கு மத்திய அரசும், மாநில கவர்னர் அரசும், அவற்றுக்குப் பக்கபலமாக பிரச்சார பீரங்கிகளும் நடத்தின.

உதாரணத்திற்கு ஒரு செய்தி சொல்ல வேண்டுமேயானால் 9-3-76 அன்றைய மாலை ஏடு ஒன்றில் என்னுடைய மகள் கனிமொழி பெயரால் ராஜா அண்ணாமலைபுரம் இந்தியன் வங்கிக் கிளையிலே டிசம்பர் மாதம் எண்பதாயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டதாக ஒரு செய்தி வெளியிடப்பட்டது. அந்தச் செய்தியிலே சிறிதளவாவது உண்மை உண்டா என்றால் கிடையாது. 1973-ஆம் ஆண்டு முதல் சேவிங்ஸ் அக்கவுண்டில் என் மகள் கனிமொழி பெயரால் மாதந்தோறும் நூறு ரூபாய், இருநூறு ரூபாய் என்று டெபாசிட் செய்தவகையில் வெறும் நாலாயிரம் ரூபாய் அளவிற்கு தொகை சேமிப்பில் இருந்ததே தவிர வெளியிட்ட செய்தியைப் போல டிசம்பர் மாதம் எண்பதாயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்படவே இல்லை என்பதை வங்கி கணக்குக் குறிப்புகளே காட்டிய போதிலும், அந்த ஏடுகள், அப்போது அந்த அளவிற்கு செய்திகளை வெளியிட்டு தங்களுடைய அரிப்புகளைத் தீர்த்துக் கொண்டன. ஆனால் அந்த அவதூறுகளுக்கு மறுப்பு தெரிவிக்க எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. செய்தி சென்சார் கெடுபிடி அப்படி!

முரசொலியில் அரசியல் கலப்பற்ற இலக்கியக் கடிதங்கள் எழுதினேன். அந்த இலக்கியக் கடிதங்களின் வாயிலாக நான் காட்டிய குறிப்புக்களை கழக உடன்பிறப்புக்கள் வெளியில் இருந்தவர்களும், சிறையில் இருந்தவர்களும் புரிந்து கொண்டார்கள். இலக்கியக் கடிதங்கள் மூலம் அரசியலை நுழைக்கிறேன் என்று சென்சார் அதிகாரிகளுக்குக் கழகத்தின் எதிரிகள் தெரிவிக்கவே; "இனி கருணாநிதி என்ற பெயரால் கட்டுரைகளோ — கலைஞர் கடிதங்களோ முரசொலியில் வெளிவரக்கூடாது" எனத் தணிக்கை இலாக்கா தடை செய்து விட்டது. அதன்பிறகுதான் "கரிகாலன் பதில்கள்" என்ற ஒரு புதிய பகுதி, முரசொலியில் தொடங்கப்பட்டது. அதிலும்கூட இருபது கேள்விகளுக்கு பதில் எழுதியிருந்தால் ஐந்தாறு கேள்விகள்தான் தணிக்கை அதிகாரிகளால் அனுமதிக்கப்படும். தணிக்கை அதிகாரியால் அப்போது வெட்டப்பட்ட ஒரு கேள்வி பதிலைப் பற்றிய விவரம் இதோ:-

கேள்வி: இன்னமும் மக்களிடையே ஒரு சாரார் பேய், பூதம், பிசாசுகள் இருப்பதாக நம்புகிறார்களே, அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: பேய், பூதம், பிசாசு என்று கூறுவது கற்பனை! ஏற்றுக் கொள்வது மூடநம்பிக்கை! பேய், பிசாசுகள் இல்லை

என்பது பற்றி பகுத்தறிவுச் செம்மல் மா. சிங்காரவேலர் எழுதியுள்ள நூலை வாங்கிப் படிக்கவும்.

இந்த கேள்வி பதிலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஏன் அனுமதி மறுத்தீர்கள் எனக் கேட்டேன். ''நீங்கள் பேய், பிசாசு, பூதம் என்று எழுதும் போது அது மறைமுகமாக இந்திரா காந்தியைக் குறிக்கின்றது என்று நாங்கள் கருதுகிறோம்'' என்று கூறினார்கள். அதை நினைத்து எனக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரிய வில்லை. என் கலைத்துறை வாழ்வில் நான் திரைப்படங்களுக்கு எழுதி அதிலே சென்சார் குறுக்கிட்டதையும், 'மிசா' நேரத்தில் பத்திரிகையில் நான் எழுதியதில் சென்சார் தலையிட்டதையும் மட்டுமே அடிப்படையாக வைத்து ஒரு நல்ல புத்தகம் எழுதிட முடியும். அந்த அளவிற்கு அன்றுடம் சென்சாருடன் போராட்டம் அமைதியான முறையில் நடத்திட வேண்டி யிருந்தது.

கழகத்திற்கு வெளியே இந்த அளவிற்கு நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருந்த போது கழகத்திலே இருந்த மூத்த தலைவர்கள் சிலர் நான் கழகத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்று தனியாகப் பேசி முடிவெடுத்து, அதனை என்னிடம் நேரிலே சொல்வதற்கு முடியாமல், புலவர் கோவிந்தன் அவர்கள் மூலமாக ஒரு கடிதத்தை என் சகோதரிகளிடம் சேர்ப்பித்தார்கள்.

அந்தக் கடிதத்தின் பின்னல் எந்தெந்தத் தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அக்கடித வாயிலாக புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் நான் புலவர் அவர்களுக்கு ஒரு நீண்ட பதில் எழுதினேன், அந்தக் கடிதத்திலே நான் புலவர் அவர்களிடம், நீங்கள் இப்படி ஒரு கடிதம் எழுதுவதற்குப் பதிலாக எனக்கு ஒரு துளி விஷம் அளித்திருக்கலாம் என்றும், கழகம் நல்ல நிலைமையிலே இருந்தபோதெல்லாம் அதற்கு தலைவனாக இருந்து விட்டு, கழகத்திற்கு ஓர் ஆபத்து என்ற நேரத்தில் அதைவிட்டுப் போவது அழகாகுமா என்றும், என்னை முழுவதும் உணர்ந்த புலவரே அதனை எழுதலாமா என்றும் கேட்டிருந்தேன்.

நல்ல அரசியல்வாதி என்பவன் போர்க் கப்பலின் தளபதிக்கு ஒப்பானவன். அண்மையில் நடந்த ஒரு போரின்

போது அன்னிய விமானத்தின் தாக்குதலுக்கு உள்ளான ஓர் கப்பலின் தளபதி தனது உதவியாளர்களை எல்லாம் தப்பித்துக் கொள்ளச் செய்துவிட்டு மேல்தளம் சென்று தன் இணைபிரியா கப்பலுடன், கடலுக்குள் சங்கமமானுன் என்று படித்தேன். அந்த வரிகள் என் கண்களைக் குளமாக்கின. அந்தத் தியாகம் தான் அரசியல்வாதிக்கு வேண்டும். அது இல்லாதவன் அரசியல்வாதியல்ல; வெறும் வியாதியே; புற்றுநோயினும் கொடிய வியாதியே! என்ற கருத்துக்களை உள்ளடக்கி புலவர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன்.

—

மேலும் முரசொலியில் ,'கரிகாலரே, உமது கையில் ஒரு கோப்பை விஷத்தைக் கொடுத்து கழகத்திலிருந்து விலகுகிறீரா? அல்லது விஷத்தை அருந்துகிறீரா? என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்?" என்ற கேள்விக்கு "அப்படி கொடிய இதயம் படைத்த எதிரிகள் யாரும் இல்லை. நம்முடைய நண்பர்கள் சிலரைவிட, எதிரிகள் எவ்வளவோ நல்லவர்கள். நண்பர்கள் யாராவது விலகுகிறுயா? அல்லது விஷம் தேவையா? என்று கேட்டால் விஷத்தையே விரும்பி ஏற்பேன். சாக்ரடீஸ்; கொள்கைக்காக விஷக் கோப்பையை ஏந்தியதும், மகாத்மா காந்தி துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கியதும் கற்பனைக் கதைகள் அல்ல; சாகாத சரித்திரங்கள்" என்று பதில் எழுதியிருந்தேன்.

என்னுடைய கடிதத்தைக் கண்டதும் புலவர் அவர்கள் என் வீடு நோக்கி ஓடிவந்தார். என்னைப் பார்த்ததும் "நான் எழுதியிருந்தது உங்களுடை கஷ்டங்களைக் காண சகிக்காமல் தானே தவிர வேறல்ல! நீங்கள் தலைமையிலிருந்து விலகிக் கொண்டாலாவது உங்களுக்குத் தரும் தொல்லைகளைக் குறைத்துக் கொள்ள மாட்டார்களா என்ற எண்ணத்தில் தான்" என்று கூறி ஓவென கதறி அழுது விட்டார். பின்னர் நான் அவருக்கு சமாதானம் கூறினேன். கழகம் சோதனைத் தீயில் நின்று போராடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நான் அதனை விட்டுவிட்டு ஓடத் தயாராக இல்லை என்று கூறி, இதைவிட இன்னும் எவ்வளவு தொல்லைகள், துயரங்கள் தரப்பட்டாலும், அதனை அனைவரும் ஒன்ருக இருந்து சந்திப்போம் என்றும் அவரிடம் தெளிவுப்படுத்தினேன்.

கழகத்தின் சோதனைகளுக்கு அஞ்சி, அதுவரை நல்ல நல்ல பதவிகளிலே இருந்தவர்கள் கழகத்தை விட்டு விலகினர்கள். எந்தப் பதவியிலும் இல்லாத, எந்தப் பலனையும் அனுபவிக்காது கழகத்திலே இருந்தவர்கள் நாங்கள் என்றைக்கும் உன் பின்னல்

இருப்போம் என்று அன்றுடம் மடல்கள் மூலம் எனக்கு எழுதினார்கள். கழகத்தை விட்டுச் செல்பவர்களைப் பற்றி நான் கருத்து தெரிவிக்கும் போது கூட - "போகிறவர்கள் போகட்டும்; அதற்காக வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு கதறப் போவதில்லை. கடைசிவரையில் இருக்கப் போகிறவர்கள் யார்? இருந்தவர்கள் யார்? அந்தக் கணக்கு ஒரு காலத்தில் தெரியத் தான் போகிறது. கடலில் போய்க் கலக்கும் தண்ணீருடன் கங்கையோ காவிரியோ வற்றிப் போய்விட்டதாக யாராவது சொல்ல முடியுமா? கடலில் சென்று கலப்பது கலக்கட்டும், கழனிகளில் பாய்ந்து பயன் விளைப்பது விளைக்கட்டும். கடலில் ஒரு பகுதி நீர் கலந்து உபயோகமற்ற உப்பு நீராகி விடுவதாலேயே நதியே வறண்டு விடுமா என்ன? அந்த நம்பிக்கையோடு நமது கடமைகள் தொடரட்டும். இன்றைக்குக் கழகத்தைக் குறை கூறுவதன் மூலம், கழகத் தலைமையை வசைப்பாடுவதன் மூலம், தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடுகிற சிலர்; என்றைக்கோ ஒரு நாள் தங்கள் மனச்சாட்சிக்குப் பதில் சொல்லத்தான் வேண்டியிருக்கும். அந்த நாளை எதிர் பார்ப்போம்! அண்ணா வழியில் பணி புரிவோம். அமைதி! அமைதி! அமைதி! அதை எந்த நாளும் காப்போம்" என்று தெரிவித்தேன்.

இத்தகைய சூழலில் திராவிடர் இயக்கத்தின் பழம்பெரும் பணியாளரும், களம்பல கண்டவரும், மிசாவில் கைதாகி மதுரை சிறைச்சாலையிலே அடைபட்டுக் கிடந்தவருமான சாத்தூர் பாலகிருஷ்ணன் மதுரைச் சிறையில் ஏப்ரல் 1–ஆம் தேதியன்று திடீரென்று இயற்கை எய்தினார் என்ற செய்தி வந்தது. அவர் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்த நான் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த சென்னையிலிருந்து காரிலேயே புறப்பட்டேன். முன்னாள் அமைச்சர் நண்பர் கண்ணப்பன் காரை ஓட்டிக்கொண்டு வந்தார்.

மாலை 6 மணி அளவில் சென்னையை விட்டுப் புறப்பட்டு திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு அருகே நாங்கள் செல்லும் போது மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டது. நண்பர் பண்ணை முத்துகிருஷ்ணன் வீட்டுக்கு எதிரில் கொட்டுகின்ற மழையில் நூற்றுக்கணக்கான கழக உடன்பிறப்புக்கள் புடைசூழ நண்பர் அன்பில் கையில் ஒரு குடையுடன் என்னை வரவேற்க நின்று கொண்டிருந்தார்.

செய்தி பரவிடாமல் இருந்த போதிலும், திருச்சியின் பல்வேறு பகுதியிலிருந்தும், திருவரங்கம் பகுதியிலிருந்தும்

கழகத்தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். உணவு அங்கே அருந்திவிட்டு, இரவு ஒரு மணி அளவில் மழையினூடே மதுரை நோக்கிப் புறப்பட்டோம். விடியற்காலை 4 மணிக்குத் தான் மதுரையை அடைய முடிந்தது. ஒரு சில மணி நேரங்கள் தூக்கம் என்ற பெயரில் கழித்துவிட்டு காலை ஏழுமணிக்கு மதுரையிலிருந்து சாத்தூர் நோக்கிக் கிளம்பினோம்.

சரியாக பத்து மணிக்கெல்லாம் சாத்தூருக்குள் நுழைந்து விட்டோம். கண்களில் நீர் தாரைதாரையாக வழிந்தோட கழகக் கண்மணிகள் அந்த வீட்டு வாசலில் நின்று கொண் டிருந்தார்கள். என்னைக் கண்டவுடன் கோவெனக் கதறி அழுத குடும்பத்தாரைத் தேற்றிட முடியாமல் நான் தவித் தேன். எனக்கே ஆறுதல் சொல்ல அங்கே ஆட்கள் தேவைப் பட்டது. நான் இறுதி அஞ்சலி செலுத்தியவுடன் அந்தத் தியாகச் செம்மலின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. கொளுத்து கின்ற வெயிலில் பல்லாயிரவர் அந்த இறுதி ஊர்வலத்தில் மௌனமாக அணிவகுத்தனர். நானும் அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டு நடந்தே சென்றேன். எரியூட்டப் பெற்ற இடத்தில் அழகுத் தேவர் தலைமையில் இரங்கலுரையாற்றி இறுதி அஞ்சலி செலுத்தினேன்.

அன்று இரவு 12 மணி அளவில் சென்னை வந்து சேர்ந் தோம். வழி நெடுக எங்கள் காரை நிறுத்துமாறு அன்புக் கட்டளை பிறப்பித்த கழக உடன்பிறப்புக்கள், மாணவர்கள் விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியோரைச் சந்தித்து ஓரிரு நிமிடங்கள் உரையாற்றியதின் காரணமாக மனச்சோர்வும், சோகமும் சற்று குறைந்த நிலையில் திரும்பினேன்.



# 76

## கட்சிப் பெயரை மாற்றும் யோசனை ?

**1976**-ஆம் ஆண்டு முழுதும் நெருக்கடி நிலைக் கொடுமைகள் தொடர்ந்துகொண்டேயிருந்தன. அன்றாடம் என்னுடைய பொழுது; காலையில் எழுந்தவுடன் நாளேடுகள் படித்து முடிப்பதிலேயே ஆரம்பமாகும். பிறகு ஒன்பது அல்லது பத்து மணி வரையிலே தமிழகத்தின் பல்வேறு பகுதி களில் இருந்து பஸ்களிலும், வேன்களிலும் ஏறிக் கொண்டு கழக உடன்பிறப்புக்கள் நூற்றுக்கணக்கில் வருவார்கள். ஒவ்வொரு நாளும் தவறாமல் அவர்களைக் காண்பதில் எனது சோர்வெல்லாம் பறந்து போய்விடும். பஸ்களையும், வேன் களையும் வீட்டு வாசலில் நிறுத்தி அதிலே வந்தவர்கள் என் னுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வார்கள். மத்திய அரசால் பழிவாங்குவதற்கென்று போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் விசாரணையில் வழக்கறிஞர்களை வைத்து வாதாடுகிற செலவுக்காக அவர்கள் ஒரு ரூபாய் என்றும், ஐந்து ரூபாய் என்றும், வழக்கு நிதியை அள்ளி அள்ளி வழங்குவார்கள். அவ்வாறு நாள் தோறும் கழகத்தினர் சென்னைக்கு என் இல்லம் நோக்கி வருவதையும், வழக்கு நிதி தருவதையும் சகித்துக் கொள்ள முடியாத கவர்னர் ஆட்சி, அப்படி என்னைச் சந்திக்கப் புறப்படுகிற கழகத்தினரை அவர்களது ஊர்களிலேயே தடுத்து நிறுத்தும்படி காவல்துறையினருக்குக் கட்டளையிட்டது. அதன் காரணமாக பஸ்களையும், வேன்களையும் வாடகைக்குத் தருவ தற்கு அவற்றின் உரிமையாளர்கள் மறுத்து விட்டார்கள். அந்த நிலைமையை ஆங்காங்குள்ள கழகத்தினர் சமாளித்த விதமே அலாதியானது! அவர்களது ஆர்வத்தை வெளிப் படுத்தக் கூடியது.

திருப்பதிக்கு யாத்திரை போகிறோமென்றும், திருத்தணி கோயிலுக்குப் போகிறோம் என்றும் கூறி பஸ்களையும், வேன் களையும் வாடகைக்குப் பிடித்தனர். அவற்றில் குழந்தை குட்டி களுடன் குடும்பம் குடும்பமாக ஏறிக் கொண்டனர். திருப்பதி, திருத்தணிக்குச் சென்று பிரார்த்தனை செலுத்த வந்தவர்களைப் போல மொட்டையும் அடித்துக் கொண்டனர். சந்தனத்தை யும் தலை நிறையப் பூசிக்கொண்டனர். இல்லாவிட்டால் அவர்கள் திருப்பதி, திருத்தணியிலிருந்து சென்னை நகருக்குள் நுழைந்திட போலிசார் அனுமதிக்கமாட்டார்களே!

பழுத்த பக்த சிரோன்மணிகளைப்போல என் வீட்டுக்கு வந்து சேருவார்கள். எனக்குத் தைரியம் கூறுவார்கள். "கவலைப்படாதே! நாங்கள் இருக்கிறோம்" என்று கண்கலங்க என் கைகளைப் பிடித்துக்கொண்டு உறுதி முழக்கம் செய்வார்கள். வழக்கு நிதி தருவார்கள். கூட்டமாக என்னுடன் நின்று குடும்பம் குடும்பமாக புகைப்படம் எடுத்துக் கொள்வார்கள். கூட இருந்த மேலிடத்துத் தலைகள் சில கலங்கிப் போய் கை பிசைந்து செய்வதறியாது திகைத்துப் போய் என்னையும் செயலற்றவனாக ஆக்கிட முனைந்தபோது—அந்தக் கழகக் கண்மணிகள், மொட்டைத் தலையுடன் வந்து எனக்களித்த உற்சாகத்தையும் ஊக்கத்தையும் இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது! ஏ, அப்பா – அவர்கள் மட்டும் இல்லாவிட்டால் இன்றைக்கு இந்தக் கழகம் ஏது?

தினமும் அவர்களைச் சந்தித்து விட்டு முரசொலி அலுவலகம் செல்வேன். எழுதுவேன். தணிக்கைக்குத் தப்பிய எழுத்துக்களை முரசொலி வாயிலாக வெளியிடுவதற்கு உதவுவேன். அதன்பிறகு அன்பகம் செல்வேன். அமைச்சராக இருந்தோமே என்கிற அந்த நினைவையே மறந்து விட்டு நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் அன்பகத்தில் எல்லாக் கடமைகளையும் ஆற்றிடுவார். பேராசிரியர் வருவார். நாவலர் வருவார். மற்றும் அமைச்சர்களாக இருந்தவர்கள் சிலர் வருவார்கள். என்னையும் பேராசிரியரையும் தவிர மற்ற எல்லோருடைய முகத்திலும் எதையோ பறிகொடுத்துவிட்ட சோகம்தான் பரவிக் கிடக்கும். அதிக நேரம் அவர்களுடன் உட்கார்ந்திருந்தால் எனக்கே ஒரு கோழைத்தனம் வந்து விடுமோ என்ற அச்சம் பிறக்கும். ஒருநாள் அன்பகத்தில் அமர்ந்து நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது மாநிலக் கட்சிகளைத் தடை செய்ய இந்திரா அரசு உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி வந்தது. அதை அறிந்த எம். ஜி. ஆர். அவர்கள் தனது கட்சியின் பெயர் "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்று இருந்ததை "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றிக் கொண்ட நிகழ்ச்சி அனைவரும் அறிந்ததே!

தி. மு. க.வையும் பெயர் மாற்றிக் கொள்வதே பாதுகாப்பானது என்று மூத்த தலைவர்கள் அழுத்தமாகக் கருத்தறிவித்தனர். அமைச்சர்களாக இருந்த சிலரும் ஆமாம் போட்டனர். தி.மு.க.வை அரசியல் கட்சியல்ல என அறிவித்து; கலாச்சாரக்

கழகமாக ஆக்கிவிடலாம் என்றும் வற்புறுத்தினர். அவசரப் பட்டு அடிப்படையை இழந்துவிடக்கூடாது என்ற எனது கருத்துக்கு பேராசிரியர் மட்டுமே துணை நின்றார். இப்படி யொரு சிந்தனை கழகத்தின் மேல்மட்டத்தில் இருப்பது தெரிந் தால்கூட கழகத் தொண்டன் உயிரை மாய்த்துக் கொள்வான் என்று கூறினேன். அதற்குள் இந்தச் செய்தி சென்னை சிறைச் சாலைக்குள் பரவி, அங்கு மிசாவில் இருந்த கழக முன்னணி யினர் கையெழுத்திட்டு, "கழகத் தலைமையிலாகட்டும் அல்லது கழகப் பெயரிலாகட்டும் எந்த மாற்றமும் கூடாது!" என உறுதியாகத் தெரிவித்து எங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அந்தக் கடிதத்தை சலனமுற்றிருந்த நண்பர்களிடம் படித்துக் காட்டி "வாழ்ந்தாலும் கழகத்தோடு வாழ்வோம்! வீழ்ந்தாலும் கழகத்தோடு வீழ்வோம்" என்று உணர்ச்சி பொங்கிடக் கூறினேன்.

அதன்பிறகு சில நாட்கள், கழகத் தலைமை மாற்றம் — கழகப் பெயர் மாற்றம் இவை குறித்த விவாதங்கள் எழவில்லை. ஆனால் சில இடங்களில் குழுக்களாகக் கூடி முணு முணுத்துக் கொண்டிருந்தனர்.

'மிசா' சட்டத்தின்கீழ் சிறையிலே அடைக்கப்பட்ட கழகத் தோழர்கள் பலரின் குடும்பங்கள் மிகவும் ஏழ்மையான நிலைமையிலே இருந்த காரணத்தால் அத்தகைய குடும்பங் களுக்கு மாதந்தோறும் இருநூறு ரூபாய் வீதம் நிதியாகத் தர முடிவு செய்து கழகத்தின் சார்பில் அதனை வழங்குவதற்கு ஏற் பாடும் செய்யப்பட்டு தரப்பட்டது. குடும்பத் தலைவன் இல்லாத நிலையில் அந்தக் குடும்பத்தினரை அப்படியே விட்டுவிடாமல் கழகமே அத்தகைய குடும்பங்களைப் பாதுகாத்திட வழிவகை செய்தது.

அடுத்து, ஜூன் மாதம் 6-ஆம் தேதியன்று திருச்சி மாவட்டம் அம்பில் கிராமத்தில் மறைந்த கழகத் தோழர் இரா. கோபால் அவர்களின் இல்லத் திருமணத்திற்கும் பொன்மலை நகரச் செயலாளர் ராமானுஜம் இல்லத் திருமணத் திற்கும் நான் வரவேண்டுமென்று வற்புறுத்தி அழைத்திருந்தார் கள். நெருக்கடி நிலை காரணமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்குப் பிறகு சாத்தூர் பாலகிருஷ்ணன் மறைவிற்காக வெளியூர் சென்று வந்ததைத் தவிர வேறெங்கும் செல்லாததால், 5-ஆம் தேதி இரவு நான் திருச்சிக்கு ரயிலில் புறப்பட்டபோது புகைவண்டி நிலையத்திலேயே ஏராளமான பேர் வந்திருந்து வழியனுப்பி

வைத்தார்கள். நான் அந்த புகைவண்டியில் வருவதறிந்து ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் ஏராளமான கழகத் தோழர்கள் வந்திருந்து இரவு முழுவதும் என்னைத் தூங்கிவிடாமல் வரவேற்றனர். அதன் காரணமாக புகைவண்டி பல மணி நேரம் தாமதமாகச் சென்றது.

திருச்சியிலே வண்டியிலிருந்து என்னை இறக்கி காருக்கு அழைத்துச் செல்லவே முடியாத அளவிற்கு பல்லாயிரக்கணக்கானவர்களின் கூட்டம். எப்படியோ கூட்டத்தில் போட்டு நசுக்கி காரில் கொண்டுபோய் என்னைத் தள்ளினர்கள்.

திருச்சியிலிருந்து அம்பில் கிராமத்து திருமண வீட்டிற்கு சுமார் பதினைந்து மைல். காலை 9 மணிக்கு திருச்சியை விட்டுப் புறப்பட்டு 11 மணிக்குத்தான் அம்பில் சென்றடைந்தோம். 15 மைல்களைக் கடக்க இரண்டு மணி நேரமா என்றால், அந்த அளவிற்கு வழியெங்கும் எங்கள் கார் நிறுத்தப்பட்டு, உடன் பிறப்புக்களின் அன்பிற்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது. பின்னர் 12 மணி அளவில் அம்பிலை விட்டுப் புறப்பட்டு 1½ மணி அளவில் தான் பொன்மலை திருமண விழாவிற்கு வந்து சேர முடிந்தது. என்னுடைய காருக்கு நண்பர் காமாட்சி தான் சாரதி. அன்பில், அழகமுத்து, மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம், ஆலந்தூர் பாரதி, வி.எம்.ஆர். சபாதி ஆகியோர் உடன் வந்தனர். திருமணத்தை முடித்துவிட்டு தங்குமிடத்தில் மாலைவரை 'கியூ' விலே நின்று விசாரணைக் கமிஷன் நிதியினைப் பெற்றுக்கொண்டேன். நிதி ஐயாயிரத்தைக் கடந்து ஆறுயிரத்தை எட்டிப் பிடிக்கும் அளவிற்கு வசூலாயிற்று.

இரவு சென்னைக்குச் செல்ல ரயிலில் டிக்கெட் இல்லை என்று 6 மணி அளவில் செய்தி சொன்னர்கள். மறுநாள் காலையில் சென்னையிலே ஒரு திருமணத்திற்கு நான் தலைமை தாங்கியாக வேண்டும். எனவே வேறு வழியில்லாமல் 7 மணிக்கு நண்பர் காமாட்சியின் காரிலேயே சென்னைக்குப் புறப்பட்டோம்.

இரவு 12 மணிக்கெல்லாம் சென்னையில் சேர்த்து விடுவதாகத் தெர்வித்தார். ஆனல் உளுந்தூர் பேட்டைக்கு முன்பாகவே கார் சக்கரத்தில் ஒன்று பழுதாகி விட்டது. உளுந்தூர்பேட்டையில் அதனை சரிசெய்துகொண்டு விழுப்புரம் நோக்கி வந்து கொண்டிருந்தோம். மீண்டும் அதே சக்கரத்தில் காற்று இறங்கிவிட்டது. ஏதோ ஒரு தேய்ந்துபோன ஆணி குத்தி

ஓட்டை விழுந்துவிட்டது. விழுப்புரத்தில் மீண்டும் அதனை சரி செய்துகொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம். மதுராந்தகம் தாண்டியதும் மறுபடியும் கார். சக்கரத்தில் பழுது! நல்லவேளை யாக சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு வாடகைக் காரில் இருந்தவர்கள், தங்கள் காரில் உள்ள ஒரு உபரி சக்கரத்தை எங்கள் காருக்குத் தந்தார்கள். அதை மாட்டிக்கொண்டு இரவு 12 மணிக்கு சென்னை வந்து சேர நேரம் குறித்தவர்கள், விடிய விடியக் கண்விழித்து விடிந்தபிறகு சென்னை வந்து சேர்ந்தோம்.

வந்தவுடன் சிறிது நேரத்திற்கெல்லாம் அணையுடைத்த வெள்ளம்போல் மூன்று பேருந்துகளில் பண்ருட்டி, குளித்தலை, கோவையிலிருந்து உடன்பிறப்புக்களும், தாய்மார்களும் வந்து கூடிவிட்டார்கள். அவர்களையும், மற்ற பல பகுதிகளிலிருந்து வந்தவர்களையும் சந்தித்துவிட்டு அவர்கள் வழங்கிய தேர்தல் நிதியையும் பெற்றுகொண்டு சென்னையில் முருகேசன் இல்லத் திருமண விழாவிற்குப் புறப்பட்டுச் சென்றேன்.

7–ஆம் தேதி சென்னை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு மறுநாள் 8–ஆம் தேதியன்று கோவை மாவட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் சாமிநாதன் இல்லத்து மணவிழாவிலும், கலந்து கொள்வதற்காக நீலகிரி துரித ரயில் வண்டி மூலமாகப் புறப்பட்டேன். என்னுடன் வழக்கறிஞர்கள் கணபதி, என். வி. என். சோமு, ராதகிருஷ்ணன், நல்லியண்ணன் ஆகியோர் உடன் வந்தனர்.

விடியற்காலை 4½ மணிக்கு ஈரோட்டைச் சென்றடைந்தது நாங்கள் சென்ற புகைவண்டி. ஈரோடு ரயிலடியில் பத்தாயிரத் திற்கு மேற்பட்ட கொங்குமண்டல மக்கள் கூடியிருந்து அந்த விடியற்காலை நேரத்தில் எனக்கு வரவேற்பளித்தனர். புகைவண்டி நிலையத்தில் சாதிக், கண்ணப்பன், எஸ். ஏ. ராஜமாணிக்கம், ஜானகிராமன், சி. டி. தண்டபாணி, தேவசகாயம், ஈரோடு மு. சின்னசாமி, திருப்பூர் துரைசாமி, பொங்கலூர் பழனிசாமி, அந்தியூர் நடராஜன், கல்லார் ராமசாமி, ஈரோடு விசுவநாதன், நகரச்செயலாளர் மதார்சா, இரா. பெருமாள், அத்தாணிபாபு, கணேசமூர்த்தி, மு. தமீம், சென்னியப்பன், விஜயராகவன், கருப்புசாமி, அல்லாபிச்சை, கலைமான், கோபி. வெங்கிடு, ஏ. என். சாமி, பெருந்துறை கந்தசாமி, மற்றும் பல்லாயிரக்கணக்கான உடன் பிறப்புக்கள் என்னை அன்போடு வரவேற்றனர்.

வெள்ளாங்கோவிலில் கழக வழக்கறிஞர் சண்முகசுந்தரத்திற்கும் கனகாம்பரத்திற்கும் நடைபெற்ற மணவிழாவில் தலைமையேற்று மண விழாவினை நடத்தி வைத்தேன். மண விழாவிலே கூட நான் பேசக்கூடாது என்று காவல்துறையினர் ஒலிபெருக்கிக்கான லைசென்ஸ் வழங்கிடவில்லை. 'மெகபோன்' ஒன்று கொண்டு வரச் சொல்லி, அதை தோளிலே மாட்டிக்கொண்டு, அந்த மணவிழாவிலே மணமக்களை வாழ்த்தி உரையாற்றினேன்.

அடுத்து புஞ்சை புளியம்பட்டியில் நடைபெற்ற சாமிநாதன் இல்லத் திருமணத்திலும், ஈரோட்டில் நடைபெற்ற அர்ச்சுனன் இல்லத் திருமணத்திலும் கலந்து கொண்டேன். (சாமிநாதன் அப்பொழுது சிறையில் இருந்தார்.) அன்று ஒரு நாள் நிகழ்ச்சியில் மட்டும் கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதி மட்டும் இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் விசாரணைக் கமிஷன் செலவு நிதியை அளித்தது. ஈரோட்டிலிருந்து சென்னை திரும்பியதும், அதற்கு முன்பு ஈரோட்டிற்கு நான் பலமுறை சென்றபோது அளித்த வரவேற்பினையும், 1945-ஆம் ஆண்டு நான் முதன்முதலாக ஈரோடு சென்று பெரியாரிடம் பணியாற்றிய நிழ்ச்சிகளையும் ஞாபகடுத்தி "பள்ளிக்குச் சென்று வந்தேன்" என்ற தலைப்பில் முரசொலியில் கடிதம் எழுதினேன்.

# 77

## அண்ணு சாலையில் ஓர் அறப்போர்!

கோவையிலிருந்து திரும்பிய மறுநாளே கர்நாடகக் தலைநகரான பெங்களூரில் நடைபெறவிருந்த சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்னையிலிருந்து புகை வண்டி மூலமே சென்றேன். சிறப்புக் கூட்டத்திற்காக டிக்கெட் மூலம் 12 ஆயிரம் ரூபாய் வசூலாகியிருந்தது. அதிலே கூட்டச் செலவிற்கு இரண்டாயிரம் ரூபாய் போக மீதம் பத்தாயிரம் ரூபாயும், நான் தங்கியிருந்த விடுதியின் முன்னுல் மாலை 4 மணி முதல் 7 மணி வரை மக்கள் 'கியூ' வரிசையில் நின்று 1 ரூபாய், 2 ரூபாய் என்று அளித்த வகையில் மட்டும் 6 ஆயரம் ரூபாயும் வழக்கு நிதியாக வசூலாயிற்று. மூன்று மணி நேரம் நின்று கொண்டே அந்த நிதியினைப் பெற்ற காரணத்தால் நான் களைத்துப்போய் 'கியூ' வரிசையை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டதால்தான் அது நிறுத்தப்பட்டது. வாங்கிக்கொண்டே யிருந்தால், அது எத்தனை மணி நேரம் ஆகியிருக்குமோ?

நான் அங்கே கலந்துகொள்ள விருந்த சிறப்புக் கூட்டம் பெங்களூர் 'நகர் மண்டபத்தில்' ஏற்பாடு செய்யப்பட்டிருப்ப தாகவும், 'இலக்கியத்தில் நாம்' என்ற தலைப்பில் நான் பேச வேண்டுமென்றும் திராவிட மணி அன்று முதல் நாள் தொலைபேசி மூலமாகத் தெரிவித்திருந்தார். 12 ஆயிரம் ரூபாய் வரை நுழைவுக் கட்டண நன்கொடைச் சீட்டுகள் வாயிலாக வசூலாகியிருப்பதாகவும், அதற்கு மேல் மண்டபத்தில் இடம் இல்லாத காரணத்தால் நுழைவுச் சீட்டுகள் விற்பனை நிறுத்தப் பட்டு விட்டதென்றும் தெரிவித்திருந்தார். ஆனுல் நான் புகைவண்டி நிலையத்தில் கூடியிருந்த மக்கள் கடலிலே நீந்தி, காரிலே ஏறி அமர்ந்ததும், சிறப்புக் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டதென்றும், அதனுல் டிக்கெட் வாங்கியவர் களும், கழகத்தினரும், பொது மக்களும் நான் தங்கியிருந்த இடத்திலேயே வந்து என்னைக் கண்டு செல்வார்கள் என்றும் கூறினர்,

நான் தங்கியிருந்த இடம் பெங்களூர் மாதவ நகரிலே உள்ள 'ஓட்டல் ஹைலண்ட்ஸ்' ஆகும். நான் பெரும்பாலும் பெங்களூர் செல்லும் போதெல்லாம் அங்கு தான் தங்குவது வழக்கம். அங்கே தங்கி பல படங்களுக்கு நான் திரைக்கதை

எழுதியிருக்கிறேன். அந்த ஓட்டல் உரிமையாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், கர்நாடக மாநில பழைய காங்கிரஸ் கட்சிப் பொருளாளருமான திரு. ராமரெட்டி அவர்களாகும். மாலை 4 மணி முதல் அன்று என்னைக் காண வந்த கர்நாடக வாழ் தமிழ் மக்கள் ஆயிரமாயிரவர்களை அனுமதித்து, என்னைக் கண்டு செல்வதற்கு அந்த நெருக்கடி நேரத்திலும் உரிமை வழங்கினார். பொது மக்கள் வரிசையாக என்னைக் கண்டு செல்வதற்கு அந்த மாநில காவல் துறையினரும் அப்போது பெரிதும் ஒத்துழைத்தனர். அந்த அன்பான வரவேற்பில் இதயத்தைப் பறிகொடுத்து விட்டு, சிறப்புக் கூட்டத்திலே பங்கு பெருமலேயே சென்னைக்குத் திரும்பினேன்.

அடுத்து 17-6-76 அன்று சிதம்பரத்தில் நான் கலந்து கொண்ட திருமணத்தைப் பற்றி குறிப்பிடாமல் விட முடியாது. சிதம்பரம் வேணு அல்லது ஜெயங்கொண்டம் வேணு என்றால் கழகத்தில் அனைவரும் அறிவார்கள். ஒரு காலத்தில் ஜெயங்கொண்டத்தில் என்னை அழைத்து திராவிட மாணவர் கழகக் கூட்டத்தில் பேசிடச் செய்த அவர், உயிர் உடலை விட்டுச் செல்லும் வரையில் என்னுடனே இருந்தவர். அண்ணா காலத்தில் அவர் ஆணைக்கிணங்க அறப்போரில் குதித்துப் பல முறை என்னுடன் சிறை புகுந்தவர். அவருடைய மகன் திருமணத்திலே கலந்து கொள்ளத்தான் சிதம்பரம் சென்றேன்.

காலை 5 மணிக்கு சென்னையிலே புறப்பட்டு பத்து மணி அளவில் சிதம்பரத்தில் மணவிழா நடைபெறும் மண்டபத்திற்கு சென்றடைந்தோம். காரில் இருந்து நான் இறங்கியது தான் தெரியும். திருமணத்திற்கென அமைக்கப்பட்ட பந்தலை எப்படி நான் கடந்தேன்? மண்டபத்துப் படிக்கட்டுகளில் எவ்வாறு எவ்வாறு நான் ஏறினேன்? மணவிழா மேடையை அடைந்தது எப்படி? இதற்கெல்லாம் என்னால் விளக்கமளிக்க முடியாது. ஆலையிட்ட கரும்பானேன். என்று உவமை கூறலாம். அவ்வளவு நசுக்கப்பட்டேன். அப்படி நசுக்கியதற்காக கரும்பு கோபித்துக் கொண்டு கசப்புக் காட்டுவதில்லையே; என் நிலையும் அந்தக் கரும்பின் நிலை தான்.

என்னைப் பத்திரமாகவும் இடிபாடு இல்லாமலும் அழைத்துச் செல்ல தோள்தட்டி முன்வந்த தேவசகாயம், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி ஆகிறோர் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. விளநகர் கணேசன் அந்தக் கூட்டத்தில் சிக்குண்டு மயக்கமுற்றார் என்று பிறகு நான் கேள்விப்பட்டேன். மணவிழா முடிந்ததும், பயணிகள்

விடுதியில் ஐயாயிரம் ரூபாய் அளவிற்கு விசாரணைக் கமிஷன் நிதியை வரிசையாக வந்து தோழர்களும். பொதுமக்களும் அளித்தனர்.

இவ்வாறு மணவிழா நிகழ்ச்சிகளிலும், சிறப்புக் கூட்டங்களிலும், அவைற்றை அரசினர் தடுத்தாலும், பொது மக்களையும், கழகத்தினரையும் சந்திக்கின்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறேன் என்பது கண்டு எரிச்சல் கொண்ட சில மாற்றுக் கட்சி ஏடுகள், "கருணாநிதியின் ஆட்டம் நீண்ட நாள் நீடிக்காது; முரசொலி, விரைவிலேயே அடங்கும்; அல்லது அடக்கப்படும்" என்றெல்லாம் அச்சுறுத்தி எழுதின. "முரசொலி, நான் பெற்ற குழந்தை! அது என் கண்ணெதிரே வீர மரணம் அடையுமேயானால் நான் புறநானூற்றுத் தாய்போல மகிழ்ச்சி அடைவேனேயல்லாமல் அழுது புலம்பிட மாட்டேன். மாற்றார் ஏடுகள் எழுதியுள்ளது போல முரசொலி அடக்கப்படும் நாள் எனக்குத் திருநாள்; ஆம்—தியாகத் திருநாள்!" என்று முரசொலியிலேயே எழுதியிருந்தேன்.

தணிக்கையின் கெடுபிடியை எதிர்த்து நீதிமன்றத்திலே முரசொலியின் சார்பில் வழக்கு தொடரப்பட்டு, தணிக்கைக்கு ஓர் இடைக்காலத் தடை பெறப்பட்டது. அந்த இடைக்காலத் தடையிருந்த ஒரு மாத காலத்தில் முரசொலியில் சுதந்திரமாக எழுத முடிந்தது. பிறகு ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால் அந்தச் சுதந்திரம் மீண்டும் பறிக்கப்பட்டது.

இவற்றுக்கிடையே ஜூன் மூன்றாம் நாள் எனது பிறந்த நாளையொட்டிய நிகழ்ச்சியொன்றை நான் நினைவுபடுத்தியாக வேண்டும். பிறந்த நாள் செய்தி என்ற நிலையில் முரசொலியில் ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் தணிக்கைக்கு அனுப்பப்பட்டது. "என் அன்னையை விட அதிக அன்பை அண்ணா என்மீது பொழிந்தார்" என்று அந்தக் கட்டுரையில் இருந்த வாசகத்தை வெட்டிவிட வேண்டுமென தணிக்கை அதிகாரி உத்தரவு பிறப்பித்தார். அதிகாரியிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு காரணம் கேட்டேன். அவர் காரணம் கூற மறுத்துவிட்டார். கடிதம், தணிக்கைக்கு அனுப்பப்பட்டது; ஜூன் முதல் நாள் இரவு! அன்றிரவுதான் அதிகாரியிடம் பேசினேன். காட்டுதர்பார் நடப்பதை நிரூபிக்கிற வகையில் அவர் பதில் அளித்ததும் அதனை எதிர்த்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தேன்.

ஜூன் 2–ந் தேதி காலையில் சென்னை அண்ணா சாலையிலிருந்து கிளம்பி, தணிக்கை அதிகாரி அலுவலகம் சென்று அங்கே உண்ணா நோன்பு மேற்கொள்ளப்படுமென்றும்—எழுத்து சுதந்திரம் பெறநடைபெறும் ஜனநாயகப் போர் இது என்றும்—என் கைப்படவே எழுதினேன். அப்படி எழுதப்பட்டதை ரகசியமாக 'பிளாக்' செய்து கொண்டு வரச் சொன்னேன்.

அதனை முரசொலியில் அச்சியற்றினால் கூட மறு ர் போர்ராட்ட ரகசியப் வெளிப்பட்டுவிடக் கூடுமென்பதற்க .— இரவோடு இரவாக நானும் என்னுடைய மகன்கள் அழகிரி, தமிழரசன் ஆகியோரும் அந்த பிளாக்கை ஒவ்வொரு தாளாக ஒற்றி ஒற்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களாக ஆக்கினோம்.

ஜூன் 2–ம் நாள்! அதற்கு மறுநாள்தான் எனது பிறந்த நாள்! காலை 10 மணி அளவில் என் வீட்டிலிருந்து காரில் புறப்பட்டேன். அப்போது கழகத்தில் உறுதி மாறாத பற்றுக் கொண்ட இளமுருகு பொற்செல்வி அவர்கள் வந்தார். அவர் செய்தி அறிந்து கொண்டு, "உங்களைத் தனியாக அனுப்ப மாட்டேன்! எங்கு சென்றாலும் நானும் வருவேன்" என்றுரைத்து என்னுடன் காரில் ஏறிக்கொண்டார். எனது காரைத் தொடர்ந்து செல்வமும், அழகிரி, தமிழரசு ஆகியோரும் வேறொரு காரில் வந்தனர். எனது காரை அண்ணா சாலையின் பக்கம் போகச் சொன்னேன். ஆயிரம் விளக்குப் பகுதியைத் தாண்டியதும் காரிலிருந்து இறங்கிவிட்டோம். நானே என் கையில் அறப்போர் விளக்கத் துண்டுப் பிரசுரங்களை எடுத்துக் கொண்டு அதனை அண்ணா சாலையில் செல்வோர் அனைவரிடமும் விநியோகிக்கத் தொடங்கினேன். மக்கள் ஆவலுடன், வியப்புடன் என்னைப் பின்தொடர்ந்தனர். போக்குவரத்து ஸ்தம்பித்துப்போய் விட்டது. அப்படியே நடந்து கொண்டே, அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையின் அடி பீடத்துக்கு வந்து சேர்ந்தேன். கழகக் காளை ஜெகதீசன் உட்பட நூற்றுக்கணக்கான தொண்டர்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்துவிட்டனர்.

"சர்வாதிகாரம்" என்று முழங்கினேன்! இளமுருகு அவர்களும் மற்றவர்களும் "வீழ்க!" என்று விண்முட்ட முழங்கினார்கள்! "ஜனநாயகம்" என்று ஒலித்தேன்! "வாழ்க" என இடியொலி எழுப்பினார்கள்! ஜனநாயகக் காவலர் அண்ணாவின்

சிலை முன்னால் ஜனநாயகம் காத்திடும் போராட்டம்! என் கையில் கழகக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் போலீஸ் பட்டாளம் வந்தது. அதிகாரிகள் என்னை அங்கிருந்து அகன்றிடுமாறு வேண்டினர்! பிறகு கட்டளையிட்டனர்! "முடியாது! இங்கிருந்து ஊர்வலமாக தணிக்கை அதிகாரியின் அலுவலகம் சென்று உண்ணா நோன்பு மேற்கொள்ளப் போகிறேன்" என்று அறிவித்தேன். அதன் பிறகு நானும், இளமுருகு பொற்செல்வியும், கழகக் கண்மணிகள் பத்து பேரும் கைது செய்யப்பட்டு திருவல்லிக்கேணி காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டோம். சில நிமிடங்களில் செல்வம், அழகிரி, தமிழரசன் ஆகியோரையும் கைது செய்து கொண்டு வந்தனர். காவல் நிலையத்தைச் சுற்றி பெரும் கூட்டம் கூடி விடவே அந்தக் கூட்டத்தை போலீசார் துரத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பெரிய போலீஸ் அதிகாரியொருவர் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் என்னை வந்து சந்தித்தார். நீங்கள் விடுதலை செய்யப் படுகிறீர்கள் என்றார். ஆம், என்னை மட்டும் விடுதலை செய்வதாகச் சொன்னார். வேண்டுமானால் செல்வம், அழகிரி, தமிழரசன் ஆகியோரையும் விடுவிக்கிறோம் என்றார். எங்களை விடுவித்துவிட்டு இளமுருகு பொற்செல்வி மற்றும் கழகக் கண்மணிகளை சிறையிலே பூட்டுவார்களாம். அதற்கு நான் ஒப்புக்கொள்ள வேண்டுமாம். "முடியாது! என்னையும் என் மருமகன் செல்வம், மகன்களை மட்டும் விடுவித்தால் நாங்கள் அண்ணா சாலையில் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம்" என்று உறுதியுடன் தெரிவித்தேன். அந்தப் பெரிய அதிகாரி யாருடனோ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். பிறகு அவசரமாக புறப்பட்டுப் போனார். கவர்னரைச் சந்திக்கப் போனார். போயிருக்கிறார் என்று காவல்நிலையத்திலே இருந்த ஒரு காவலர் என்னிடம் சொன்னார்.

மறுநாள் ஜூன் மூன்றாம் நாள்! எனது பிறந்த நாள்—சிறையிலேயே கொண்டாடலாம் என்று மகிழ்ச்சியோடு இருந்தேன்.



# 78

## வழக்குகள் தொடங்கின!

எங்களைத் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வைத்து விட்டு கவர்னர் மாளிகைக்குச் சென்ற அதிகாரி பிற்பகல் இரண்டு மணி அளவில் திரும்பி வந்தார். சிறிது நேரத்திற் கெல்லாம் நாங்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருப்ப தாகக் கூறி எங்களைக் கார்களில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். சென்னைச் சிறையில் மிசா கைதிகளாக அடைபட்டிருந்த கழகக் கண்மணிகளுடன் இருந்து பிறந்த நாளைக் கொண்டாடலாம் எனக் கருதியிருந்த எனக்கு ஏமாற்றம் தான்!

மறுநாள் காலை ஜூன் மூன்றும் நாள்! வழக்கம் போல் அதிகாலையில் எழுந்து பெற்றோர் படங்களுக்கு மாலை அணிவித்து விட்டு, அண்ணா சதுக்கம், பெரியார் நினைவிடம் சென்று மலர் வளையம் வைத்து விட்டு வீடு திரும்பினேன். ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் திரள்வது போல உடன்பிறப்புக்கள் திரண்டு நின்றார்கள், வீட்டு வாசலில்! அவர்கள் அணிவித்த மாலைகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் போதே வேதனை தரும் செய்திகள் என் செவிகளில் விழுந்தன. வீட்டைச் சுற்றி நாலா திக்கிலும் போலீசார் நின்று கொண்டு, பிறந்த நாள் வாழ்த்துக் கூற வருகிறவர்களை தடியடிப் பிரயோகம் செய்து கலைக்கிறார்கள் என்பது தான் அந்தச் செய்தி!

ஒருவர் பின் ஒருவராகப் பத்துப் பதினைந்து பேர் தலையிலும் உடையிலும் ரத்தம் ஒழுகிட கையில் மாலைகளுடன் என் முன்னால் வந்து நின்று வாழ்த்து முழக்கங்களை ஆவேசமாக ஒலித்தனர். அவர்கள் எல்லாம் போலீசாரின் தடியடிப் பிரயோகத்திற்கு ஆட்பட்டுத் தப்பித்து எப்படியோ வீட்டுக்கு வந்து விட்டவர்கள். அந்தக் காட்சியைக் காணக் காண என் கண்கள் தணற்கட்டைகளாயின. இசைத்தட்டுகள் ஒலிபரப்பு வதற்காக இருந்த ‘மைக் செ’டை அருகே கொண்டு வரச்சொன்னேன். என்னைச் சுற்றியிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களிடையே பேசினேன்.

‘‘பிறந்த நாளையொட்டி என்னைப் பார்க்க வருகிறவர்களைக் கூடத் துடிக்கத் துடிக்க அடித்து விரட்டுகிறார்கள் போலீசார்!

இந்தக் கொடுமைக்கு மத்தியில் எனக்குப் பிறந்த நாள் ஒரு கேடா? தேவையில்லை! வேண்டாம்! இப்போதே இங்குள்ள ஆயிரம் பேருடன் ஊர்வலமாகக் கோட்டை நோக்கி அணி வகுக்கிறேன். ஆனது ஆகட்டும். ஊர்வலம் வரும் எங்களைச் சுட்டுக் கொல்ல, போலீஸ் தயாராகட்டும்!"

என்று உணர்சியுரை ஆற்றி விட்டுப் புறப்பட்டேன், சூழ்ந்திருந்தோரும் என்னைத் தொடர்ந்தனர். அதற்குள் ஒரு போலீஸ் அதிகாரி ஜீப் ஒன்றில் வேகமாக என்னை நோக்கி வந்தார். இறங்கியவர் என்னைப் பார்த்து "தயவு செய்து ஊர்வலத்தை நிறுத்துங்கள்! உங்கள் பிறந்த நாள் விழாவுக்கு வருகிற யாரையும் இனி போலீசார் தடுக்க மாட்டார்கள்" என்று உறுதி அளித்தார். அதற்குப் பிறகு எங்கள் போராட்டம் கைவிடப்பட்டது. மாலை வரையில் உடன்பிறப்புக்கள் தங்கு தடையின்றி வந்து பிறந்த நாள் வாழ்த்துக் கூறிவிட்டு, கழக நிதியும் அளித்துச் சென்றனர்.

பின்னர் ஜூலைத் திங்கள் 3-ஆம் நாளும் 4-ஆம் நாளும்-இரண்டு நாட்கள் சென்னை அன்பகத்தில் கழகத்தின் செயற் குழு கூட்டம் நடைபெற்றது. கழகத்தின் வரவு செலவு கணக்குகள், எதிர்கால ஆக்கப் பணிகள் குறித்து அந்தச் செயற்குழு விவாதிக்குமென உறுப்பினர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. தலைமைச் செயற்குழுவின் மொத்த உறுப்பினர் களில் சிறையிலிருந்தவர்களைத் தவிர மற்ற அனைவரும் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே சபாநாயகராக இருந்து கொண்டே கழக அரசுக்கு விரோதமாகச் செயல்பட்டு கழகத்திலிருந்து விலகி எம்.ஜி.ஆர். அவர்களின் கட்சியிலிருந்த நண்பர் மதி அவர்கள் மீண்டும் கழகத்தில் இணைந்து திட்டக்குழுத் துணைத் தலைவராக இருந்தார். ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு ஒதுங்கியே இருந்த அவர், அந்தச் செயற்குழு கூட்டத்திற்கு வந்திருந்தார். கூட்டத்தில் பொருளாளர் பேராசிரியர் அவர்கள் கட்சியின் கணக்கு விவரங்களைப் படித்தார், செயற்குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு நிகழ்ந்த சம்பவங்களை விளக்கிப் பேசினார். திடீரென மதியழகன் எழுந்து என்னையும், நாவலரை யும், பேராசிரியரையும் கட்சிப் பதவிகளில் இருந்து விலகிடு மாறு பேசினார். அவரை ஆதரித்துப் பேசினார் எஸ். எஸ். ஆர். மதியழகன் அமைதியாகப் பேசிவிட்டு அமர்ந்தார்!

ஆனால் எஸ். எஸ். ஆர். மிகக்கடுமையானதும் தரக்குறைவானதுமான மொழிகளை உதிர்த்தார். இதற்கெல்லாம் மூல காரணமாக அமைச்சராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் முதல் நாளே அவர்களையெல்லாம் ஒரு பத்திரிகை அலுவலகத்தில் கட்டிவைத்து முடுக்கி விட்டிருந்தார். பண்ருட்டி ராமச்சந்திரன் பெயரால் ஒரு துண்டு அறிக்கை செயற்குழு கூட்டம் நடைபெற்ற அன்பகத்திற்கு வெளியே விநியோகிக்கப் பட்டது. அதில் என்னைத் தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு கோரப்பட்டிருந்தது. மதியின் கருத்தையும், எஸ். எஸ்.ஆர். கருத்தையும் செயற்குழுவில் யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை. மதியழகன் வெளி நடப்புச் செய்து விட்டார். எஸ். எஸ். ஆர்., மேலும் மேலும் வரம்பு கடந்து பேசிக் கொண்டேயிருந்தார். அவரைச் செயற்குழு உறுப்பினர்கள் அமைதிப்படுத்த முயன்றனர். முடியவில்லை. எனது வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாக உடனிருப்பார் என நான் கருதியிருந்த நண்பர்களில் ஒருவரான எஸ். எஸ். ஆரின் அந்தத் திடீர்ப் போக்கிற்கு முக்கிய காரணம், மத்திய அரசின் அச்சுறுத்தல் தான் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. கட்டுப் படாமல் அவர் கூச்சல் போட்டுக் கொண்டேயிருந்த காரணத்தால் செயற்குழுவிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார். வெளியேற்றப்பட்ட அவர் அன்பகத்து வாசலில் கூடியிருந்த கழகச் செயல் வீரர்கள் மத்தியில் கழகத்தைப் பற்றியும் என்னைப் பற்றியும் தரமற்ற வார்த்தைகளைக் கூறிக் கூப்பாடு போட்ட காரணத்தால் அவருக்கும், கழகச் செயல்வீரர்களுக்கு மிடையே சிறு மோதல் ஏற்பட்டது அந்த நிகழ்ச்சி கூட அன்பகத்திற் குள்ளே செயற்குழு கூட்டத்திலிருந்த எங்களுக்கு முதலில் தெரியாது.

இந்த சம்பவம் நடைபெற்ற நீண்ட நேரத்திற்குப் பிறகு போலீஸ் அதிகாரி தேவாரம் தலைமையிலே போலீசார் அன்பக கட்டிடத்தை முற்றுகையிட்டார்கள். அங்கேயிருந்த கழகத் தோழர்கள் நாற்பதுக்கு மேற்பட்டவர்களை கைது செய்து கொண்டு போனார்கள். நெருக்கடி நிலை நேரத்தில் நடந்த இந்தச் சம்பவத்திற்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு ராஜேந்திரன் தாக்கப்பட்டார் என்ற வகையில் முதலில் போடப்பட்ட வழக்கு பின்னர் ராஜேந்திரனை கொலை செய்ய முயற்சி என்ற அளவிற்கு குற்றப் பிரிவுகள் எல்லாம் எம். ஜி. ஆர். ஆட்சியில் அதிகரிக்கப் பட்டு, அந்த கொலை முயற்சி வழக்கிலே என்னையும் சேர்த்து நானும் ராஜேந்திரனை கொலை செய்ய முயற்சித்தேன் என்ற அளவிற்கு வழக்குப் போடப்பட்டது! அந்த வழக்கு நீதி

மன்றத்தில் பல நாட்கள் நடைபெற்று, போடப்பட்ட வழக்கு வேண்டுமென்றே போடப்பட்டது என்றும், அதற்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது. தமிழகம் நன்றாக அறிந்த ஒன்றாகும்.

அவர்கள் இருதரும் வெளி நடப்பு செய்த பிறகு செயற்குழு தொடர்ந்து அன்றும், அதற்கு மறுநாளும் நடைபெற்று 22 தீர்மானங்களை நிறைவேற்றியது.

தமிழ்நாட்டில் மண்டபங்களில் பேசுவதற்குக் கூடி விதிக்கப்பட்டிருந்த தடை முதன்முதலாக 76ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி சென்னை யோகலட்சுமி திருமண மண்டபத்தில் என். வி. என். அவர்களின் படத்திறப்பு விழாவின் போதுதான் தளர்த்தப்பட்டது. ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு பொதுமேடையில் அங்குதான் நான் பேசினேன். கூட்டம், நடைபெறும் அன்று காலையிலே தான் ஒரு சிறிய சுவரொட்டி அந்த நிகழ்ச்சி குறித்து விளம்பரம் செய்யும் வகையில் சென்னையில் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால் அன்று மாலை அந்தப் பெரிய சாலை முழுவதும் கடற்கரையிலே நடைபெறும் கூட்டம் திற்கு செல்வதைப்போல இருபக்கங்களிலிருந்தும் சாரை சாரையாக மக்கள் வெள்ளம்! அந்த மண்டபம் நிரம்பி சாலையில் இரு பக்கத்திலும் மக்கள் அமர்ந்திருந்தனர். மழையையே காணாத மக்கள் பல நாட்களுக்குப் பிறகு பொழியும் மழையில் இறங்கி அங்கு மிங்கும் ஓடி நனைவதைப் போல, அன்றையதினம் அந்தக் கூட்டத்திற்கு மக்கள் வந்திருந்தனர். அந்தக் கூட்டத் திற்கு சென்னை மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த இரா. மு. மனோகரன் தலைமை தாங்கி, சாதிக்பாட்சா, ராஜாராம் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, ஆர்.ஆர். முனுசாமி, சற்குணம் திருப்பூர் துரைசாமி, இரா. சாம்பசிவம் ஆகியோர் உரையாற்றினர் இறுதியாக நான் பேச எழுந்து "அன்பார்ந்த" என்று ஆரம் பித்தது தான் தாமதம்: எழுந்த கையொலி அடங்க ஐந்து நிமிடத்திற்கு மேல் ஆயிற்று. அந்த அளவிற்கு சென்னையிலே இருந்த கழக உடன்பிறப்புக்கள் உணர்ச்சிப் பெருக்கோடு அங்குக் கூடியிருந்தனர்.

ஆகஸ்ட் திங்கள் 29-ஆம் நாள் தென்னாற்காடு, தஞ்சை மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையி லிருந்து காரிலே புறப்பட்ட எனக்கு புதுவை மாநில எல்லை யிலும், கோரிமேடு, கடலூர், பு. முட்லூர், பரங்கிப்பேட்டை, ஆதிராநல்லூர், தம்பிக்குநல்லான்பட்டிணம், புவனகிரி, வயலூர்,

சிதம்பரம், கீழ்மூங்கிலடி, கி. முட்லூர், கீழ் அனுவம்பட்டு, கிள்ளை, தில்லைவிடங்கள், கீழ்ச்சாவடி, கடவாச்சேரி, வேளக்குடி, புத்தூர், சேந்தங்குடி ஆகிய வழியிலே உள்ள ஊர்களில் எல்லாம் வரவேற்பளித்தார்கள்.

கிள்ளையிலே ஒன்பது இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து விட்டு, சீர்காழி சிறப்புக் கூட்டத்திற்கு 1½ மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். அந்தச் சிறப்புக் கூட்டத்தில், விளநகர் கணேசன், தம்பி தேவேந்திரன், சுப்ரவேலு ஆகியோர் பேசிய பிறகு நான் பேசினேன். சீர்காழியில் உள்ள நண்பர் குமாரசாமி வீட்டில் சாப்பிட்டேன். எனக்கு அன்று உணவு அளித்த குற்றத்திற்காக நான் சென்னை திரும்புவதற்குள் அவர் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ஆம், அன்றைய ஆட்சியில் எனக்கு உணவு அளிப்பது கூட குற்றமாகக் கருதப்பட்டது. மறுநாள் பூம்புகார், கும்பகோணம் திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களில் நடைபெற்ற சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டு விசாரணைக் கமிஷன் செலவு நிதியினைப் பெற்றேன்.



# 79

## இந்திரா காந்தி இறங்கி வந்தார்

கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல எனது சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் தமிழகமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. முரசொலியில் எனது எழுத்துக்களும் கழக உடன்பிறப்புக்களோடு தொடர்பு கொண்டு உலா வந்தன. சர்க்காரியா கமிஷன் விசாரணையும் சென்னையில் மிகுந்த விளம்பரத்தோடு நடத்தப்பட்டு, என்னைப் பற்றியும் கழக அமைச்சர்கள் பற்றியும் நாள்தோறும் அவதூறுகளைப் பரப்பிடும் பணியில் வானொலியும் ஏடுகளும் பயனபடுத்தப்பட்டன. என்னிடம் பணியாற்றிய ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், மற்றும் ஒருசில அரசாங்க அதிகாரிகள் மிகுந்த கெடுபிடிகளுக்கு ஆளாக்கப்பட்டு சர்க்காரியா கமிஷன் விசாரணையிலே எனக்கு எதிராகப் பொய் சாட்சியங்கள் கூறுகிற அளவுக்கு நிர்ப்பந் திக்கப்பட்டனர். அரசின் ஆணைக்கு அடங்கி எனக்கு எதிராகச் சாட்சியமளிக்கா விட்டால் என்ன நேருமோ என அஞ்சிய அவர்கள் மனச்சாட்சியை தொலைவில் துரத்திவிட்டுத் துணிந்து சர்க்காரியா கமிஷனில் பொய்யுரைகளைப் புகன்றனர்.

சர்க்காரியா கமிஷன் முன்னால் எனது சார்பிலும் மற்ற அமைச்சர்கள் சார்பிலும் வழக்கறிஞர்கள் சாந்திபூஷன், ஜி. ராமசாமி, கோவிந்தசாமிநாதன், கே. கே. வேணுகோபால், கே. ராமசாமி, ஏ.சி. முத்தண்ணா, தர்மராஜ் சந்தோஷம், பாலை சண்முகம், தஞ்சை கோபாலய்யர், என். கணபதி, மதுரை ராசன், யு.என்.ஆர். ராவ், குமார ராஜ ரத்தினம், பி.என். ஜார்ஜ், என்.வி.என். சோமு, ராதாகிருஷ்ணன், வெங்கடாசலம், வெங்கட்ராமன், நல்லியண்ணன், தேவதாஸ், வி.பி. சண்முக சுந்தரம், சிதம்பரநாதன், வி.டி. அரசன், என்.எஸ். சிவம், கோபாலகிருஷ்ண லட்சுமணராஜு, பிரேமராஜ், அன்புரோசு ஆகியோர் ஆஜராகினர்

அரசியலில் பழிவாங்கும் எண்ணத்துடன் போடப்பட்டதே சர்க்காரியா கமிஷன் என்று மொரார்ஜி தேசாய், பாபு ஜகஜீவன்ராம், அசோக்மேத்தா, சாந்திபூஷன் ஆகியோர் 1977-ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின்போது பொதுக் கூட்டங்களிலேயே பேசினர். அத்தகைய பழிவாங்கும் நினைவுடன் அமைக்கப்பட்ட அந்த சர்க்காரியா கமிஷனை

முறைப்படி சந்தித்து உண்மைகளை உலகுக்கு உணர்த்தவே தி.மு. கழகம் தயாராக இருந்தது. ஆனால் சர்க்காரியா கமிஷன், முறைப்படி தனது விசாரணையை நடத்திட முன்வரவில்லை.

செப்டம்பர் திங்கள் சென்னையில் அந்தக் கமிஷன் விசாரணை தொடங்கியபோது, எங்களின் சார்பில் வழக்கறிஞர் சாந்திபூஷன் அவர்கள் நீதிபதி சர்க்காரியாவிடம் மனு ஒன்றைக் கொடுத்தார். என்மீதும், நாவலர் நெடுஞ்செழியன், ப.உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், மாதவன், மற்றுமுள்ள அமைச்சர்கள், கழகத் தலைவர்கள் மீதும் குற்றச்சாட்டுப் புகார்களைக் கொடுத்துள்ள திரு. எம்.ஜி.ஆர். அவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும். அதேபோல கழகத்தினருக்கு எதிராக சர்க்காரியா கமிஷனில் சாட்சி கூறுகிற எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. அந்த மனுவுக்கு நீதிபதி சர்க்காரியா அவர்கள் மழுப்பலான ஒரு பதிலைத்தான் அளித்தார். (குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்ட வீராணம் திட்டம் குறித்த ஊழல் புகார்கள் கமிஷன் முன்னால் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு எழுதப்பட்டதை நினைவு படுத்த விரும்புகிறேன்.)

எல்லாப் புகார்களிலுமே சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டால் அந்தக் குற்றச்சாட்டுகள் பொடிப் பொடியாகி விடும் என்பது தெரிந்த காரணத்தாலோ என்னவோ அன்றைக்கு சர்க்காரியா கமிஷன் சாட்சிகள் அனைவரும் குறுக்கு விசாரணைக்கு உள்ளாக்கப்படுவர் என்ற உத்திரவாதத்தை வழங்கிட முன்வரவில்லை. அந்த மழுப்பலான பதிலை ஏற்றுக் கொள்ளாமல்—முறைப்படி சாட்சிகளை குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்காத காரணத்தால்—அந்தக் கமிஷன் விசாரணையிலிருந்து எங்களின் வழக்கறிஞர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்துவிட்டனர்.

ஒரு அதிகாரி—அவர் பெயர் வைத்திலிங்கம்—கழக ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்த மாதம் வேலை நீக்கம் செய்யப்பட்டு—மீண்டும் மூன்று மாதம் கழித்து வேலையில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர். எனது அந்தரங்கச் செயலாளராக இருந்தவர். வேலையை இழந்து மீண்டும் வேலையைப் பெற்ற அந்த இடை வேளையில் அவர் மிரட்டப்பட்டுஎனக்கு எதிராக சர்க்காரியா கமிஷன் முன்னால் ஆறரை மணி நேரம் சாட்சியமளித்தார் என்றால் இப்படி எதிரான சாட்சியங்களைத் திரட்ட நெருக்கடி

காலத்தில் அரசு யந்திரம் எப்படியெல்லாம் முடுக்கி விடப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒருநாள் கோபாலபுரத்து வீட்டிலிருந்து வெளியே கிளம்புகிறேன். வருமான வரித் துறையினர் கூட்டமாக வந்தனர். முதலமைச்சரான பிறகு வாங்கிய வீடுதானே இது—இதனை மதிப்பீடு செய்ய வேண்டுமென்றனர். 1956–ஆம் ஆண்டு வாங்கிய வீடய்யா இது; என்மீது புகார் கொடுத்த நண்பர் எம். ஜி. ஆருக்கு இதுகூடவா தெரியாது என்று கேலியாகக் கேட்டேன். "அது என்னவோ சார்! வீட்டை அளந்து மதிப்பீடு செய்ய வேண்டும்" என்றனர். தாராளமாகச் செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, உள்ளேயிருந்த என் மனைவி தயாளுவைக் கூப்பிட்டு— "இவர்கள் வீட்டை அளக்கப் போகிறார்களாம்—மதிப்பீடு செய்யப் போகிறார்களாம். நீயும் பிள்ளைகளும் உடனிருந்து பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கூறிவிட்டு முரசொலி அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன்.

முரசொலியில் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். பத்து மணியிருக்கும் காலையில்! "திமு திமு" எனப் பத்துப் பதினைந்து அதிகாரிகள் ஏதோ "அதிரடிப் படை"யினர் போல அலுவலகத்தில் நுழைந்தனர். என் அறைக்குள்ளும் நுழைந்து எனது மேசையைச் சுற்றி நின்று கொண்டனர். வருமானவரி அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் சோதனை போட வந்திருக்கிறார்கள் எனப் புரிந்துவிட்டது.

"சார்! இந்த ஆபீசை 'ரைடு' செய்யப்போகிறோம்' என்றனர்.

"நான் எழுதிக் கொண்டிருப்பதால் உங்களுக்கு ஒன்றும் தொந்திரவு இருக்காதே!" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டுவிட்டு, நான் முரசொலிக்கு எழுதுவதில் கவனம் செலுத்தினேன். எனக்கு எதிரிலேயே தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. என்னைச் சுற்றி நாற்காலிகளில் சிலர் உட்கார்ந்து கொண்டனர். சிலர் அறையிலிருந்த பொருள்களை உருட்டினர். சிலர், என் மேசையைத் திறந்து அதிலிருந்த தாள்களைப் புரட்டினர். மதியம் ஒரு மணி அளவில் எனது எழுத்து வேலைகளை முடித்து விட்டு, சோதனையிட்டுக் கொண்டிருந்த அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு நான் புறப்பட்டேன். அன்றிரவு இரண்டு மணி வரையில் முரசொலி அலுவலகம் சோதனையிடப்பட்டு—சின்னபின்னமாக்கப் பட்டது.

ஒருநாள் பிற்பகல் இரண்டு மணி அளவில் அண்ணாமலைபுரத்திலுள்ள என் வீட்டுக்கு வந்தேன். வீட்டுக்குள் நுழையும்போது அதிகாரிகள் பட்டாளம் வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. வருமானவரி அதிகாரிகள், அவர்களுடன் போலீஸ் பட்டாளம்! "ராஜி" என்று எனது மனைவியைக் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தேன். ராஜியைக் காணவில்லை. அந்த அதிகாரிகள் ஏற்கனவே எனக்குத் தெரிந்த அதிகாரிகள்தான். அவர்கள் என்னைப் பார்த்து "நீங்கள் யார் சார்? உங்கள் பெயர் என்ன சார்?" என்று கேட்டார்களே; அந்தக் கேள்வியை இன்றைக்கு நினைத்தாலும் நெஞ்சு பகீர் என்கிறது! என்செய்வது; இப்படியெல்லாம் என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று திட்டம்!

அந்த அதிகாரிகளுக்குப் பதில் கூறாமலே மாடிக்குப் போனேன். அங்கே ராஜியை சில பெண் அதிகாரிகள் சோதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆடைக்குள் ஏதாவது ஒளித்து வைத்திருக்கக் கூடுமென்று அப்படி சோதிக்கிறார்களாம். என்னைப் பார்த்ததும் ராஜியும், என் மகள் கனிமொழியும் கதறியழுதவாறு மயக்கமுற்றனர். அதன் பிறகும் இரவு எட்டு மணிவரையிலே 'ரைடு' முடியவில்லை.

சே! சில கொள்கைகளை அழுத்தமாகச் சொன்னதற்காக சர்வாதிகாரத்தை நேர் நின்று எதிர்த்தமைக்காக—எப்படிப்பட்ட பழிவாங்கும் குணத்தினர் ஒன்று கூடிக்கொண்டு என்னையும் என் குடும்பத்தையும் என் கட்சியின் முன்னணித் தோழர்களையும் எவ்வளவு கேவலப்படுத்தினர் என்பதை இப்போது நினைத்தாலும் இதயம் எரிமலையாகிறது! ஆனால் அந்தச் சோதனைகள், வேதனைகளிலும் மிரண்டு போகாமல் தலைநிமிர்ந்து நின்றோமே என்ற பெருமிதமும் ஏற்படத்தான் செய்கிறது.

1976-ஆம் ஆண்டு மையத்தில் நெருக்கடி நிலையின் கடுமை சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது என்றே கூறலாம். 1975-ஆம் ஆண்டு எமர்ஜன்சி பிரகடனத்தின் போது கைது செய்யப்பட்ட வடபுலத்துத் தலைவர்கள் ஒவ்வொருவராக விடுதலை செய்யப்பட்டனர். நாடு தழுவிய அளவில் அப்படி மொத்தமாக அனைவரும் விடுதலை செய்யப்படவில்லை. தமிழ் நாட்டில் மிசாவில் கைதான அரசியல்வாதிகள் யாரும் 1976-ஆம் ஆண்டு இறுதிவரையில் விடுவிக்கப்படவில்லை.

அனைத்து நாடுகளில் இந்தியாவின் நெருக்கடி காலச் சர்வாதிகாரம் பற்றி விமர்சிக்கப்படுகிற நிலைமை பரவலாகப் பெருகிற்று. அந்த நிலை, பிரதமர் இந்திரா காந்தியின் மீது உலக

மக்களின் வெறுப்பை அதிகரிப்பதாக இருந்தது. எனவே, மெல்ல மெல்ல "எமர்ஜன்சி"க் கொடுமையிலிருந்து நாட்டை விடுவிக்க இந்திரா காந்தி அவர்களே முன்வர வேண்டியதாயிற்று. மிசாக் கைதியாக அடைக்கப்பட்டிருந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய உடல்நிலையும் சிறைவாசத்தால் மிகவும் கெட்டுப் போய் விட்டதாகச் செய்திகள் வந்தன. சிறைச் சாலைகள், போலீஸ் லாக்கப்கள், இங்கெல்லாம் அரசியல் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட — சொல்லவே நாக்கூசுகின்ற துன்பங்களையும்' இழிவுகளையும் பத்திரிகைகளில் வெளியிட முடியாவிட்டாலும் துண்டு அறிக்கைகளாக அச்சியற்றிப் பல்வேறு மொழிகளில் நாடெங்கும்—ஏன்; உலகெங்கும் பரப்புகின்ற பணி தொடர்ந்து நடைபெற்றது! தமிழ்நாட்டில் அத்தகைய துண்டுப் பிரசுரங்களை அச்சியற்றித் தர அச்சகங்கள் தயங்கின! ஓடி ஒளிந்தன. ஆனால் அந்த நேரத்தில் கழகச் சார்பில் நெருக்கடி நிலைக்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்துக்களை அச்சியற்றித் தரும் பணியை அருமை நண்பரும் தமிழ்ச் சங்கக் காப்பாளருமான க. திருநாவுக்கரசு அவர்கள் ஏற்றுக் கொண்டதை என்னால் மறக்க முடியாது!

நிழல் போல இருந்தவர்கள் எல்லாம் தழல் போல என் உள்ளத்தை ஆக்கிவிட்டுப் பிரிந்தோடி விட்ட நேரத்தில் தொலைவில் இருந்தே என் மீது அன்பு காட்டிவரும் அந்த நண்பரின் தொண்டினை எவ்வாறு மறக்க இயலும்!

இவ்வாறு எதற்கும் துணிந்தவர்கள் — இலட்சியத்திற்காக எதையும் இழக்கத் தயாராக இருப்பவர்கள் — அவர்களின் எண்ணிக்கை கூடுகிறதேயன்றிக் குறையவில்லை என்பதை உணர்ந்து தான் பிரதமர் இந்திரா அவர்கள் 1976 நவம்பர் திங்கள் கௌகத்தில் நடந்த காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசிய போது எதிர் கட்சிகளுடன் ஓரளவு சமரசத்திற்கு வருவது போல ஜாடை காட்டிப் பேசினார்.

"எதிர்க் கட்சியினர் எங்களைக் குறைகூறக் கூடாது என நான் ஒருபோதும் கூறியதில்லை. அவர்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொண்டு வளமான இந்தியாவை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என அரசாங்கம் உணர்ந்தால் அவர்களுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராக இருக்கும்."

இதுதான் பிரதமர் இந்திரா காந்தியின் கௌகத்தி மாநாட்டுப் பேச்சு!

அம்மையார், கொஞ்சம் இறங்கி வருகிறார்கள் என்பதற்கான அறிகுறி!

# 80

## புதுடெல்லியில் ஒரு புதிய முயற்சி!

பிரதமரின் கௌகத்தி காங்கிரஸ் பேச்சினையொட்டி, பேச்சு வார்த்தைக்கான வாய்ப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகுமேயானால் அப்போது எதிர்க் கட்சிகளின் சார்பில் இரு சாராருக்கும் உடன்பாடான கருத்துக்களை விவாதிப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் கழகத்தின் சார்பில் அப்போது சிந்திக்கப்பட்டது. தனித்தனி அபிப்பிராயங்கள் எழுவதால் பேச்சு வார்த்தைகளின் மூலம் ஏற்படக்கூடிய நல்விளைவுகளுக்கு தடங்கல் ஏற்பட்டு விடக் கூடாது என்பது கழகத்தின் எண்ணமாக இருந்தது.

அந்த அடிப்படையில் எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் முதலில் ஓர் இடத்தில் கூடிக் கலந்து விவாதித்து பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்த எந்த அடிப்படையில் அணுகுவது என்பதில் ஒருமித்த கருத்துக்கு வருவதே சிறந்தது என்றும் கழகம் கருதியது.

இவைகளை மனதிற் கொண்டு, அனைத்திந்திய அளவில் உள்ள எதிர்க் கட்சிகளின் தலைவர்களை எல்லாம் கழகச் சார்பில் தொடர்பு கொண்டு நான் பேசியதில் அந்த முயற்சிக்கான ஊக்கமும் உற்சாகமும் கிடைத்தது. எனவே எல்லா தலைவர் களையும் கூட்டி கலந்து விவாதிக்க வேண்டுமென்று எண்ணிய நான் அதற்கான தொடர்புகளை மேற்கொண்டேன். சென்னையிலோ அல்லது வேறு பகுதியிலோ அந்தக் கூட்டத்தை வைத்துக் கொண்டால், பயண சிரமங்கள் இருக்குமென்பதால் டெல்லியிலேயே அந்த கலந்துரையாடல் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டு, 76-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் நாளன்று டெல்லியில் நண்பர் இரா. செழியன் (அப்போதைய நாடாளுமன்றக் கழகக்குழுத் தலைவர்)இல்லத்தில் அந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் எந்தவொரு எதிர்க் கட்சிகளின் தனிப்பட்ட சிக்கல்கள், பிரச்சினைகளை முன்வைத்து நடைபெறப் போகின்ற கூட்டமல்ல என்பதும் முன்னதாகவே தெளிவாக்கப்பட்டது.

இந்தியாவின் வலிவும் வளமும் ஓங்கிடவும் காப்பாற்றப் படவும் எதிர்க் கட்சிகள் எப்படி ஒத்துழைக்கப் போகின்றன?"

என்று பிரதமர் அவர்கள் எழுப்பியுள்ள கேள்வியின் அடிப்படையிலே — பிரதமர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எத்தகைய ஒருமுகமான போக்கை வடித்தெடுப்பது என்பதே அந்தக் கூட்டத்தின் தலையாய நோக்கமாகும் என்றும் நான் முதலிலேயே நன்ருகத் தெளிவுபடுத்தினேன்.

பழைய காங்கிரஸ் கட்சி, பாரதீய லோக்தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனசங்கம், சோஷலிஸ்ட் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி, அகாலிதளம் போன்ற கட்சிகளுக்கு நான் அழைப்பு அனுப்பியிருந்தேன்.

“மக்களைப் பாதிக்கும் எந்தப் பிரச்சினை மீதும் எந்தக் கட்சியோடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது” என்று அப்போது பி. ராமமூர்த்தி அவர்கள் கூறியதின் அடிப்படையில் தான் அந்தக் கட்சிக்கும் அழைப்பு அனுப்பியிருந்தேன். அழைப்பு அனுப்பியிருந்தேனே தவிர அந்தக் கட்சி கலந்து கொள்கிறது என்று நான் யாரிடமும் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் தமிழ்நாட்டில் இருந்த ஒரு மாலைப் பத்திரிகை அந்தக் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கலந்து சொல்வார்கள் என்று கருணாநிதி கூறியிருப்பதை நம்பூதிரி பாத்தும், பி. ராமமூர்த்தியும் மறுத்துள்ளனர் என்று செய்தி வெளியிட்டது.

பழைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அசோக்மேத்தா அவர்கள் மிகவும் மகிழ்ச்சி தெரிவித்து கடிதம் எழுதியிருந்ததோடு அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்தார். அவரைப் போலவே பி. எல். டி. கட்சியின் தலைவரான சரண்சிங் அவர்களும் கலந்துகொள்ள சம்மதம் தெரிவித்தார். சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர் கோரே பம்பாயிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கூட்டத்தில் கலந்து கொள்வதாகத் தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய முடிவை மறு பரிசீலனை செய்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று செய்தியாளர்கள் மூலமாகவும், முரசொலியில் எழுதிய கடிதத்தின் மூலமாகவும் வேண்டுகோள் விடுத்தேன். இருந்தாலும் அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

டிசம்பர் 15-ஆம் தேதி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நானும் நண்பர்கள் ராஜாராமும், ஜி. லெட்சுமணனும்

ரெயில் மூலமாகப் புறப்பட்டோம். சென்னை புகைவண்டி நிலையத்திற்கு ஏராளமானவர்கள் வந்திருந்து என்னை வழியனுப்பி வைத்தனர்.

14-ஆம் தேதியன்று காலையில் புதுடெல்லி போய்ச் சேர்ந்தேன். அன்று காலையில் டெல்லிக்கு அருகில் உள்ள சத்திரப்பூருக்குச் சென்று அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அசோக் மேத்தா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். நண்பர் இரா. செழியனும் வந்திருந்தார்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் அவருடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, பின்னர் அன்றைக்கு முதல்நாள்தான் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்த வாஜ்பாய் அவர்களை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தேன். அவர் 15 - ஆம் தேசிய கூட்டத்தில் கலந்து கொள்வதாகத் தெரிவித்தார்.

டிசம்பர் 15- ஆம் தேதியன்று காலை 10மணிக்கு டெல்லியில் கழக நாடாளுமன்றக் கட்சித் தலைவர் இரா. செழியன் அவர்கள் இல்லத்தில் இந்தியாவில் உள்ள முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களின் கலந்துரையாடல் கூட்டம் தொடங்கியது

இந்தக்கூட்டத்தில் அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அசோக்மேத்தா, திருமதி மொகிந்தர் கவுர் (அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சியின் செயலாளர்), திக்விஜய் நாராயணன்சிங் எம். பி. (பழைய காங்கிரஸ்), பிலுமோடி எம். பி (தலைவர், பாரதீய லோக்தளம்), எச். எம். படேல் எம்.பி. (பாரதீய லோக் தளம்), பிஜு பட்நாய்க் (துணைத் தலைவர், சோஷலிஸ்ட் கட்சி), சமர்குகா எம். பி. (சோஷலிஸ்ட் கட்சி). சுரேந்திர மோகன் எம். பி. வாஜ்பாய் எம். பி. (தலைவர் ஜனசங்கம்), கிருஷ்ண காந்த் எம். பி., பேராசிரியர் ஷெர்சிங் எம். பி. (முன்னால் மத்திய அமைச்சர்), க. ராஜாராம் (தி. மு. க) ஆகியோர் கலந்து கொண்டனர். மாநில கட்சியின் சார்பில் நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று அகில இந்திய கட்சியின் தலைவர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களை எல்லாம் வரவேற்று நான் ஆற்றிய வரவேற்புரை இதோ :—

"கட்சித் தலைவர்களே, நண்பர்களே,

எனது அழைப்பினை ஏற்று வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நோக்கத்தை நான் தங்களுக்கு விடுத்த அழைப்பு மடலிலேயே

சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். கௌகத்தி மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையினிடையே எதிர்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு எப்போது அமையும் என்பது குறித்து அறிவித்துள்ள கருத்து அனைவரும் அறிந்ததேயாகும்.

அதுகுறித்து எதிர்க்கட்சிகளின் நிலை என்ன என்பதை நாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதும் இயல்பேயாகும் "நாடு எதிர்நோக்கும் இயல்பானதும், சுமுக மானதுமான சூழ்நிலை விரைவில் உருவாகாதா?" என்று நாட்டின் எதிர்கால நல்வாழ்விலே நாட்ட முள்ளவர்கள் கவனித்து வருகிறார்கள். எதிர்க்கட்சிகள் தங்களது போக்குகளை மாற்றிக்கொள்ள வேண்டு மென்றும், இந்திய நாட்டின் வலிவையும் வளத்தையும் வளர்த்துப் பாதுகாப்பதில் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க முன்வரவேண்டு மென்றும் அப்போதுதான் பேச்சுவார்த்தைக்குப் பொருள் இருக்க முடியுமென்றும் பிரதமர் கூறியுள்ளார்.

"பேச்சுவார்த்தை தொடங்குவதென்றால் நெருக்கடி நிலையைத் திரும்பப் பெறவேண்டும்."

சில எதிர்க் கட்சிகளின் தரப்பிலிருந்து இப்படி ஒரு கருத்தும் எடுத்து வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள், இருதரப்பிலிருந்தும் எழுப்பப்பட்டு அவை களை இரு தரப்பாரும் நிறைவேற்ற உடன் பட்ட பிறகே பேச்சு வார்த்தைக்கு இணங்க முடியுமென்று வாதிப்பது நடைமுறைக்கு ஒவ்வாததாகிவிடும் என்பது என் தாழ்மையான கருத்தாகும்.

சகிப்புத் தன்மையுடன் மனம் விட்டுப் பேசி மீண்டும் நாட்டில் இயல்பான சூழ்நிலை அமைந்திட முயற்சிகளை மேற் கொண்டு நமது பணிகளை வகுத்துக் கொள்வதே சிறப்புடைய தாகுமென, நான் சார்ந்துள்ள தி. மு. கழகம் எண்ணுகிறது.

பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திட வாய்ப்பு கிட்டுமே யானால் அதன் தொடர்பாக எதிர்க்கட்சிகள் தங்களுக்கென அமைந்த தனித் தன்மைகளையோ, கொள்கைகளையோ விட்டு விட்டு அரசாங்கக் கொள்கைகள், நடைமுறைத் திட்டங்கள் அனைத்துக்கும் 'ஆமாம்' போடுகிறவைகளாக ஆகவேண்டு மென்று நினைத்துப் பார்ப்பதற்குக்கூட இடமில்லை.

அதே நேரத்தில் இந்தியாவின் வலிவுக்கும், வளத்துக்கும் கேடு ஏற்பட வேண்டுமென்று எண்ணுகின்ற யாரும் இங்கில்லை.

ஒன்றரை ஆண்டு காலத்திற்குப் பிறகு நிலைமைகளை மறு பரிசீலனை செய்வதற்கான சிந்தனையும் ஆர்வமும் எழுந்திருப்பது இருதரப்பாரின் சார்பில் நாட்டின் நல்லதோர் எதிர்காலத்திற்கான உத்திரவாதத்தை அளிக்குமென்றே நம்பிக்கை ஒளியைத் தோற்றுவித்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

அந்தக் குறிக்கோளுடன் செயல் முறைகளை வகுப்பதற்கே இங்கே நாம் கூடியிருக்கிறோம். இதில் தனிப்பட்ட கட்சிகளின் சிக்கல்கள், பிரச்சினைகளுக்கு இடமில்லை. அனைவரும் ஏற்றிடத் தக்க ஒரு பொதுவான உடன்பாடு நமக்குள்ளே ஏற்படுவதற்கு இந்தக் கூட்டம் வகை செய்யும், துணை புரியும் என்று நான் நம்புகிறேன்.''

என்னுடைய வரவேற்புரைக்குப் பிறகு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களெல்லாம் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள், அந்தக் கூட்டம் மாலை 4 மணி வரை நடைபெற்றது. நிலைமையை இயல்பான நிலைக்குக் கொண்டுவரும் நோக்குடன் நடக்கக்கூடிய எத்தகைய பேச்சிலும் மகிழ்ச்சியுடன் பங்கேற்க தாங்கள் தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து மறு நாள் 16 - 12 - 76 அன்று மீண்டும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சந்தித்தனர். அந்தச் சந்திப்பு எச். எம். படேல் எம். பி. அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. அதற்குப் பிறகு அசோக்மேத்தா அவர்களும் பிலுமோடி அவர்களும் என்னை டெல்லியிலே சந்தித்து உரையாடினார்கள்.

1976 - ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் டெல்லியிலே கூட்டப்பட்ட அந்த அனைத்துக் கட்சி (எதிர்க் கட்சிகள்) கூட்டம் தான் ஜனதா கட்சி இந்திய அரசியலும் உருவாக முழுமுதல் காரணம் என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

டெல்லியிலே நடைபெற்ற அந்தக் கூட்டம் குறித்து 16 - ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழிலே குல்தீப் நய்யார்

அவர்கள் ஒரு கட்டுரை தீட்டியிருந்தார். அதிலே "எதிர்க் கட்சிகளும் ஆளும் காங்கிரசும் முன்னிருந்ததுபோல் இப்போதும் வடதுருவம், தென்துருவமாக இல்லை என்பது வெளிப்படை. சமாதானம் சாத்தியமே என்பதைக் காட்டும் வண்ணம் சிலபல நடந்துள்ளன. இல்லாவிடின், டெல்லியில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டிய திரு. கருணாநிதி கூறியுள்ளதுபோல், ஆளும் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடந்தால் அதில் தாம் என்னென்ன விவரங்களை விவாதிக்க வேண்டும் என்ற விவரங்களை முடிவு செய்ய டெல்லியில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடந்திராது" என்று குறிப்பிட்டிருந்தார்.


டெல்லி கூட்டத்தில் அரசுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக ஒரு மனதான முடிவெடுக்கப்பட்டு, முன் நிபந்தனைகள் எதுவுமில்லாத நிலையில் பேச்சு வார்த்தைக்கு உடன்படுவதே சுமுகமான சூழ்நிலைக்கு வழிகோலும் என்பது விளக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் தங்கள் நிலையை விளக்கி ஒரு கருத்துரையை வெளியிடவேண்டுமென்று முதல்நாள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அந்தக் கருத்துரை தயாரிக்கப்பட்டு 16 – 12 – 76 அன்று காலையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலருடைய பார்வைக்கு அனுப்பப்பட்டு, அன்று மாலை திரு. எச். எம். படேல் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அந்தக் கருத்துரையின் வரைவினை வைத்துக் கொண்டு கலந்துரையாடி பிறகு அதற்கு இறுதிவடிவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

அதில் "எதிர்க்கட்சிகள் ஜனநாயக செயல்முறைகளில் ஈடுபாடு உள்ளவை. தேசீய பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கத் துடன் பேசவும், குறிப்பாக நாட்டில் அரசியல் வாழ்வை சகஜப் படுத்துவது மிக அவசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்ற நிலையில் அரசுடன் பேச்சு நடத்த எதிர்க்கட்சிகள் தயாராக இருக்கின்றன" என்று குறிப்பிடப்பட்டு, அது பிரதமர் அவர் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கூட்டம் டெல்லியில் நடந்து கொண்டிருந்தபோதே, அந்த முயற்சி வெற்றி பெற வேண்டுமென்றும், கழகத்தின் முயற்சி கைகூட வேண்டுமென்றும், பிரதமரும், எதிர்க் கட்சித் தலைவர்களும் கலந்து பேசுகிற நாள் விரைவில் வர வேண்டுமென்றும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் பாட்னாவிலிருந்து எனக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதம் கூட்டத்தில் படிக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைத் தெரிவித்து பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். "சுயேச்சையான, வெளிப்படையான விவாதத்தின் மூலம் நாட்டில் எதிர்ப்பட்டுள்ள பிரச்சினைகளை நம்மால் தீர்க்க இயலும் என்று எதிர்க்கட்சிகள் நம்பிக்கை கொண்டுள்ளன" என்று அந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கடிதத்தினுடன் எதிர்க்கட்சிகள் வெளியிட்ட அறிக்கையையும் இணைத்து பிரதமருக்கு அனுப்பினேன்.

அதற்குப் பின்னர் டிசம்பர் மாதம் 23 - ஆம் தேதி புதுடெல்லியில் காங்கிரஸ் ஊழியர்களின் முகாமில் பேசிய பிரதமர் எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன்பாக, அந்தக் கட்சிகளின் போக்கு பற்றியும் ஆராய வேண்டியுள்ளது என்றார். அதாவது எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையும் - பேச்சுவார்த்தைகளின் வாயிலாகப் பிரச்சினை தீருவதையும் - தனக்கு ஏற்படும் கௌரவக்குறைவு என அவர் கருதினார் என்றே எண்ணிட வேண்டும். ஆனால் அந்த வீம்பு நீண்டநாள் இருக்கவில்லை. "எமர்ஜன்சி" எனும் சர்வாதிகாரக் கொடுமையாட்சியிலிருந்து பின் வாங்கவே அவர் முனைந்தார். அதற்குமேல் தமது எதேச்சாதிகாரப் பிடிவாதப் போக்கை நாடு தாங்காது எனப் புரிந்து கொண்டார்.



# 81

## இரண்டாம் பாகம் முற்றுப் பெறுகிறது!

நெருக்கடி நிலை கொடுமைகளில் ஒன்றாக கைது செய்யப்பட்ட தியாகமறவன், கொள்கைக் குன்று, என்னுடைய அன்பு உடன் பிறப்பு, கழக நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு சிறையிலே பயங்கரமாக அதிகாரிகளால் தாக்கப்பட்டபோது அவர்களில் ஒரு முரடன் கொடுத்த உதை காரணமாக வயிற்றிலே அடிபட்டு அதன் காரணமாக வயிற்றுக்குள் சில கோளாறுகள் ஏற்பட்டு நீண்ட நாட்களாக சிறையிலே அவதிப் பட்டுக் கொண்டிருந்தார். அந்த நோய் குணமாகாமலேயே டிசம்பர் மாதம் சென்னை பொது மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டார். அங்கே சிட்டிபாபுவின் வயிற்றிலே ஒரு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அதிலும் முற்றிலும் குணமாகாத நிலையிலே ஜனவரி மாதம் 3-ஆம் தேதி மீண்டும் ஓர் அறுவை சிகிச்சை அதே இடத்தில் நடந்தது. அதனைத் தொடர்ந்து ஜனவரி 5-ஆம் தேதி காலையிலே மருத்துவமனையிலே ஆபத்தான நிலையிலே சிட்டிபாபு இருப்பதாக தொலைபேசி மூலம் எனக்குத் தகவல் தெரிவித்தார்கள். உடனடியாக மருத்துவ மனைக்கு விரைந்தேன். அங்கே மிசா கைதியாக இருந்த நண்பர் கமலநாதனும், மருத்துவமனையில் பணியாற்றிக்கொண்டிருந்த டாக்டர் காஞ்சனா கமலநாதனும் சிட்டிபாபுவுக்கு அருகே நின்று கதறியழுது கொண்டிருந்தனர். சிட்டிபாபுவின் துணைவியாரும் துடித்துப் புலம்பினர்.

எனக்காகவே தன்னுடைய இறுதிமூச்சை நிறுத்தி வைத்திருந்ததைப் போல என்னைக் கண்டவுடன் அந்த ஆறுதலோடு கண்ணை மூடினார் 45 வயதே நிறைந்த அந்தக் கழகக் காளை. கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக அரும்பணியாற்றி கடமை உணர்வோடு பணியாற்றிய சிட்டிபாபு மறைந்தவுடன் எனக்கு ஆறுதல் கூற வந்தவர்களிடம் எல்லாம் "என்னை சிறிது நேரம் அழவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன்.

சிட்டிபாபு இறந்தது குறித்து உண்மையான விவரங்களை எல்லாகூட தெளிவாக பத்திரிகைகளில் தர முடியாத அளவிற்கு தணிக்கைக் கொடுமை! கழகத் தொண்டர்கள் உணர்ச்சி வயப்பட்டு ஏதாவது செய்து விடுவார்களோ என்று சிட்டிபாபு

மரணமடைந்த அன்று இரவு சென்னை நகரத்தில் கழகத்தோழர்கள் எல்லாம் போலீசாரால் வேட்டையாடப்பட்டனர்.

சிட்டிபாபுவின் மறைவையொட்டி நான் வெளியிட்ட இரங்கல் செய்தி இதோ :-

சிட்டி, நீ மறைந்துவிட்டாயா? அய்யோ!
என்னால் நம்ப முடியவில்லையே!
கொள்கை முரசே! தியாக மறவனே!
கழகத்தின் தூணே! எங்கள் துணையே!
நீ போய் விட்டாயா?
அய்யகோ! இன்று இந்தக் காட்சியையா
நான் காண வேண்டும்? அந்தோ! நான்
யாருக்கப்பா ஆறுதல் சொல்வேன்! என்னால்
தாங்க முடியவில்லையே! நான் என் செய்வேன்!

காலை 8.45 மணி அளவில் பொது மருத்துவமனையில் உயிர் துறந்த சிட்டிபாபுவின் உடலை எங்களிடம் 11.50 மணிக்குத்தான் தந்தனர். 12 மணிக்கு அவரது சடலத்தை அவர் வாழ்ந்த திருவல்லிக்கேணியில் உள்ள நாகப்பையர் தெருவில் உள்ள வீட்டிற்கு எடுத்து வந்தோம். சென்னை நகரமே அந்தத் தெருவில் திரண்டுவிட்டது. மறுநாள் காலையில் சிட்டிபாபுவின் இறுதி ஊர்வலம் புறப்பட்டு கிருஷ்ணாம் பேட்டையில் அவரது சடலம் எரியூட்டப்பட்டது.

அன்றைய முரசொலியில் "மறையாத மாணிக்கப் பரிதி" என்ற தலைப்பில் சிட்டியைப் பற்றி நான் கடிதம் எழுதியிருந்தேன்.

இவ்வாறு ஜனவரி 5-ஆம் தேதி இறந்த சிட்டிபாபு மரணம் குறித்து பெப்ரவரி 20-ஆம் தேதி அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில், சிட்டிபாபுவிற்கு நீரழிவு, மாரடைப்பு, குடலிறக்கம், மலஜலம் கழிப்பதில் தடை ஆகிய வியாதிகள் உண்டு என்றும், 5-1-77 அன்று மத்திய மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை வார்டில் மாரடைப்பு காரணமாக அவர் காலமானார் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

அரசின் அந்த அறிக்கையைக் குறிப்பிட்டு முரசொலி மாறன், அப்போது முரசொலி மூலம் எழுப்பிய கேள்விகள் வருமாறு :-

சிறைச்சாலையில் சிட்டிபாபு மிருகத்தனமாகத் தாக்கப் பட்டது உண்மையா? இல்லையா? முன்பே அவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர் என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது. அத்தகைய நோயாளி கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்படக் காரணம் என்ன? அத்தகைய நோயாளி மூர்க்கத் தனமாகத் தாக்கப்பட்டது ஏன்? பொது மருத்துவமனைக்கு வெளி நோயாளியாக சிகிச்சை பெற அனுப்பப்பட வேண்டுமென்று அவர் கேட்டதுண்டா? இல்லையா? எப்போது அவரை முதல் தடவையாக வெளி நோயாளியாகச் சிகிச்சை பெற பொது மருத்துவமனைக்கு அனுப்பினார்கள்? அதற்கு இடைப்பட்ட நாட்கள் எத்தனை? உடனடியாக அவர் பொது மருத்துவமனைக்கு அனுப்பப்படாமல் காலங்கடந்து அனுப்பியதன் காரணம் என்ன?

இதுபோன்ற முரசொலி மாறனின் கேள்விகளுக்கு எந்தப் பதிலும் அரசு தரப்பிலிருந்து தரப்படவில்லை.

சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் சிறையில் பிணமாக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மட்டுமா? இந்தியா முழுமையும் சிறைச்சாலைகளில் இந்திரா ஆட்சியின் எமர்ஜென்சிக் கொடுமை யால் எத்தனை சித்திரவதைகள்!

சில அரசியல் கைதிகளை சிறைக் கோட்டத்தில் நாள் முழுவதும் பனிக்கட்டியில் படுக்க வைத்தனர். சிநேகலதா என்ற பெண்மணிக்கு விளைவிக்கப்பட்ட கொடுமைகளைச் சொல்லவே குலைநடுங்குகிறது. அரியானா மாநிலத்தில் ஒரு போலீஸ் லாக்அப்பில் எமர்ஜன்சியை எதிர்த்த குற்றத்திற்காக ஒரு அண்ணனையும் அவன் தங்கையையும் நிர்வாணமாக்கி போலீசார் எதிரிலேயே அவர்களை உடலுறவு கொள்ளச் செய்யு மாறு வற்புறுத்திக் கட்டாயப்படுத்தி–அவர்களது மர்ம உறுப்புக் களில் மிளகாய்ப் பொடியையும் தூவினார்கள். இப்படி நாச நர்த்தனமாடிய நெருக்கடி நிலையின் வெறிப்பற்களின் தினவு சற்று அடங்கியதற்கு அடையாளமாகத்தான் 1977 ஜனவரி 18–ஆம் நாள் வானொலியில் உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி, "நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டு மார்ச் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும்" என்று அறிவித்தார்.

பிரதமரின் அறிவிப்பினைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சகத்திலிருந்து மாநில அரசுகளுக்கு கீழ்க்கண்டவாறு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டது.

1. உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை விரைவுபடுத்தவேண்டும். அத்துடன் இந்திய பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின்கீழ் போடப்பட்டுள்ள வழக்குகளை மறு ஆய்வு செய்யவேண்டும்.

2. சகஜமான அரசியல் நடவடிக்கைகளுக்காகவும் தேர்தல் காரியங்களுக்காகவும் பொதுக்கூட்டங்களை தாராளமாக அனுமதிக்க வேண்டும்.

3. நபர்கள், வாகனங்கள் நடமாட்டம் மீதான கட்டுப்பாடு, பாதகமான செயல்களுக்கு தண்டனை விதிப்பது, பொதுக் கூட்டங்கள் மீதான கட்டுப்பாடு ஆகிய விஷயங்களின்கீழ் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை வாபஸ் பெறுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதைத்தவிர மத்திய தகவல் ஒலிபரப்பு மந்திரியாக இருந்த வி.சி. சுக்லா விடுத்த அறிவிப்பில் "அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மக்களிடம் தமது கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்குத் தேவையான எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் அனுமதிப்பதே அரசின் நோக்கம் என்று பிரதமர் தனது வானொலி உரையில் அறிவித்தார். பத்திரிகைகள் அதற்கான சாதனங்களில் ஒன்று. பிரதமர் கூறிய அந்த உறுதி மொழிக்கு இணங்க செய்தித் தணிக்கை உத்தரவை அமல்படுத்துவதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது" என்று தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத நான்கு பெரிய எதிர்க்கட்சிகளான பழைய காங்கிரஸ், பாரதீய லோக்தளம், ஜனசங்கம், சோஷலிஸ்ட் கட்சி ஆகிய நான்கு கட்சிகளும் ஜனதா கட்சி என்ற பொதுப்பெயரில் போட்டியிடுவதாக முடிவு செய்திருப்பதாக மொரார்ஜி தேசாய் அறிவித்தார்.

மத்திய அரசின் இத்தகைய அறிவிப்புகளுக்குப்பிறகும் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவில்லை. எனவே நானும் ராஜாராமும் கவர்னர் சுகாதியா அவர்களைச் சந்தித்து மத்திய அரசு உத்தரவிற்குப் பிறகும் தமிழகத்தில் இன்னும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்படவில்லை என்பதை அறிவித்தோம்.

அதன்பிறகு ஜனவரி 23-ஆம் நாள் தொடங்கி, படிப்படியாக பிப்ரவரி 2-ஆம் நாள் முடிய கழகத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட கழகக் கண்மணிகள் அனைவரும் சென்னைக்கு வந்து அண்ணாவின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தி விட்டு என்னையும் நேரில் கண்டனர்.

அவர்கள் விடுதலை குறித்து "இருப்புக்கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா!" என்ற தலைப்பில் நான் எழுதிய உடன் பிறப்பு மடல் இதோ:

"பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டது!
சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!"

எனப் பாவேந்தரின் கவிதைகளாலேயே, கழகத்தின் கண்மணியே! உன்னை நான் இருகையேந்தி அழைத்து மகிழ்கிறேன்.

ஓராண்டு காலம் உன்னையும் என்னையும் மறைத்து நின்ற வானுயர்ந்த சுவர்களை விட்டு வெளியில் வந்துவிட்டாய்!

உன்னுடன் உள்ளே அடைபட்டவர்களில் இருவர் உறங்கிடும் கண்களுடன் வெளியே வந்தனர். ஆம். என்றுமே விழித்துப் பார்க்க இயலாத விழிகளுடன், காற்றை உள்ளே இழுத்து வெளியே விட முடியாத சுவாச கோசங்களுடன் வெளியே வந்து, குளிர்ந்துபோன தங்கள் உடல்களுக்குத் தணலாடையைப் போர்த்திக்கொண்டு மண்ணோடு மண்ணாக மாறினர். இல்லை, இல்லை, எங்கள் கண்ணோடு ஒளியாகக் கலந்தனர். மூச்சோடு காற்றாக ஒன்றினர். இதய அசைவுகளின் துடிப்பாக இணைந்தனர்.

அந்தக் குமுறலை அடக்கிக் கொண்டு தமிழகத்தின் பல்வேறு சிறைக் கொட்டடிகளில் பூட்டப்பட்டுக் கிடந்த உனக்கு விடுதலையே கிடைக்காது என்றுதான் நினைத்து நினைத்து என் உள்ளம் களைத்துப் போயிற்று. உடலும் இளைத்துப் போயிற்று. எத்தனை ஆண்டுகளாயினும் கழகத்தின் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகத்தான் இருப்பேன் என்று சூளுரைத்து ஓராண்டு காலம் வரலாறு காணாத அடக்குமுறையைச் சிறைக்கோட்டத்தில் தாங்கிக் கொண்ட என் சிங்கம் நிகர் உடன் பிறப்பே, உன் தியாகத் திருவடிகட்கு என் சிரம் தாழ்த்துகிறேன்.

நீ, மல்லிகை, முல்லை, ரோஜா மலர்மாலைகளைக் கொண்டு வந்து என் கழுத்திலே சூட்டுகிறாய்!

உனக்கு மாலை சூட்டிய மங்கை நல்லாள் ஓராண்டு காலம் உன்னைப் பிரிந்து அனுபவித்த வேதனையும், அந்த மயிலைப் பிரிந்து நீ அனுபவித்த கொடுமையும் எண்ணிப் பார்த்திடவே நெஞ்சுக்கு பூகம்ப அதிர்ச்சியைத் தரும் நிகழ்ச்சியாக அன்றோ இருந்தது! இருக்கிறது!

உன்னைப் பிரிந்து உன் அன்னை வடித்த கண்ணீர்—உன் தந்தையின் இதயஓலம்—உன் அருமை மழலைகளின் வாடி வதங்கிய முகங்கள் — உன்னை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றவளின் உள்ளத்து உலைக்களம்.

உடன்பிறப்பே, இந்த ஓராண்டு காலம் அவைகளுக்கு ஆறுதல் கூறமுடியாமல் வெளியில் இருந்து நாங்கள் பட்ட அவதி, இவற்றையெல்லாம் மாற்றிட, இருள் நீங்க எழுந்த கதிர் போல் உன் விடுதலைச் செய்தி கிட்டியது.

இருப்புக்கூட்டின் கதவு திறந்ததும் இல்லம் நோக்கி விரைந்திடவில்லை உன் கால்கள். சென்னை நோக்கிப் பறந்திட பாச இறக்கைகள் உனக்குத் திடீரென முளைத்துவிட்டன.

அடடா! நீ வந்த நேரம்—செயற்குழு என்றும்—ஆய் குழு என்றும் ஆயிரம் வேலைகள்—ஆரத்தழுவிட வேண்டும் — ஆண்டொன்றாயிற்றே இடைவெளி [illegible]பட்டு; அந்தக் காலத்து கதைகளை எல்லாம் பேசிட [illegible]ண்டுமென்று துடிக்கிறேன் என்றாலும் வேலைகள் குறுக்கிடுகி[illegible]றன. ஓடிவந்த உன்னிடம் ஒரு வருடச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடியவில்லையென்றாலும் ஒருவரையொருவர் இமைகொட்[illegible]ாமல் பார்த்துக் கொள்கிறோமே அதிலே எத்தனை நிகழ்ச்சிகளை[illegible] காட்சியாக்கி விடுகிறோம் — எத்தனை சரித்திரங்களைப் படித்து [illegible]டுகிறோம்—பார்த்தாயா?

சிலர் உன்னை அணுகி, "சாகிற வரையில் சிறை தான்' என்றனர். "என் சாம்பல் தமிழ் மணந்து வேகும்" என்றாய். "கட்சியைத் துறத்திடு; கதவு திறந்திடும்" என்றனர். "கடையைக் கட்டிடு; நடையைத் தொடங்கிடு" என்று நறுக்கென பதில் அளித்தாய். "தலைமையைத் தூக்கி ஒரு அறிக்கை அளித்திடு; தளைகள் அறுபடும் தப்பிடலாம்" என்றனர். "அதற்கு எம்முடன் சில எட்டப்பர்கள் வந்துள்ளனர். அவர்களை அணுகிடுக. தலையே அறுபடினும் துரோகம் செய்யும் ரத்தம் இந்த ரத்தமல்ல என்று நிமிர்ந்து நின்று விடையளித்தாய்.

*வீரத்தின் திருவுருவே! மான மரபின் குலவிளக்கே! மாணிக்கத் தமிழே! மரகதச் சுடரே! முன்னூறு நாட்களுக்கு மேலாக நீ ஓய்வெடுத்துக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்ததும் வராததுமாக நீ ஆற்றிட வேண்டிய பணி உன் எதிரே மலை போல் உயர்ந்து நிற்கிறது......*

*நிறைய இருக்கிறது பணி! நேரம் குறைவு!*

*நகர்ந்து செல்லும் ஒவ்வொரு மணித்துளியும் மிக முக்கியமானது!*

*காலம் பொன் போன்றது—கடமை கண் போன்றது.*

*புதிதாகப் புரிந்துகொள்ள வேண்டியவைகளா; இவைகள்? அல்லவே, அதனல் புறப்படு!*

**"பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டது!**
**சிறுத்தையே வெளியில் வா!**
**வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!**
**கையிருப்பைக் காட்ட எழுந்திரு!**
**குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?**
**மாறினுகே கடல்போல் மாப்பகை மேல் விடு!**
**மக்களை ஒன்று சேர்; வாழ்வை உயர்த்துக!**
**கைக்குள திறமை காட்ட எழுந்திரு!"**

இந்தக் கடித வாயிலாகக் காராக்கிரகமிருந்து வெளிவந்த கழக அடலேறுகளை வரவேற்றேன். அந்த ஓராண்டு உச்சக் கட்டச் சோதனைகளுக்குப் பிறகும் கழகத்திற்கு வந்துற்ற சோதனைகள் ஓய்ந்திடவில்லை. 1977-க்குப் பிறகும் அவை தொடர்ந்தன. அவற்றைத் தனியொருவனுக நின்றல்ல தன்னலம் கருதாத தியாகத் திருவிளக்குகளாம் தி. மு. கழகத்தின் உடன்பிறப்புக்களின் உறுதி கொண்ட நெஞ்சத்தின் துணையினல் எதிர்கொண்டேன், அந்த வரலாற்றை "நெஞ்சுக்கு நீதி" மூன்றும் பாகமாகத் தொடர விரும்புகிறேன், இப்போது இரண்டாம் பாகம் முற்றுப் பெறுகிறது.

—முற்றும்—

